இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு

முதற்பகுதி (1603 வரை)

ஆசிரியர்:
ஜார்ஜ் பர்ட்டன் ஆடம்ஸ்
வரலாற்றுப் பேராசிரியர், ஏல் பல்கலைக் கழகம்

தமிழாக்கம்:
பா. சூரியநாராயணன், எம். ஏ. (வரலாறு) எம். ஏ., (அரசியல்)
அரசியற் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

பழனியப்பா பிரதர்ஸ்
சேப்பாக்கம் சென்னை - 5 :: தெப்பக்குளம் திருச்சி - 2
1961

First Edition : March '61.

விலை ரூ 6—00

Printed by : Muthukumaran Press, Madras-1.

அணிந்துரை

இந்த ஆண்டில் தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக அமைக்கும் புது முயற்சி எழுந்தோங்கியுள்ளது. பி. ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்கின்ற காட்சியைக் காணலாம். இடர்ப்பாடுகள் பல இருந்தாலும் இப்பெரு முயற்சியில் நாம் வெற்றி பெறுவது திண்ணம். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், "தமிழிலேயே கற்பிப்போம்" என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பலப்பல கலைகளிலும் பொதுத்துறைகளிலும் பல்வேறு நிலையங்களிலும் தொண்டு செய்வோர் கலைச்சொல்லாக்கத்தில் உழைத்த பெருஞ்சிறப்பு, இவற்றிற்கும் மேலாக மிகமிகக் குறைந்த காலத்தில் தங்கள் தங்கள் சிறப்புத் துறையில் நூல்களை எழுதித் தர முன் வந்த நூலாசிரியப் பெருந்தகைகளின் உறுதியுள்ளம், தொண்டுணர்ச்சி - இவற்றைக் கண்டபின் இத்திட்டத்தின் வெற்றியில் யாரே ஐயம் கொள்வர்?

சிறப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மற்றைய நூலாசிரியர்களும், எத்தனையோ நெருக்கடிகளிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் நூல்களை எழுதித் தந்துள்ளனர். பதிப்பு நிலையங்களும் முழுமனத்தோடு ஒத்துழைத்ததன் பயனாக வெகு விரைவில் இந்நூல்கள் வெளி வந்துள்ளன. அந்நூல்களில் ஒன்றான ஜார்ஜ் பர்ட்டன் ஆடம்ஸ் அவர்களின் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமாக வரும் "இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு" (முதற்பகுதி) என்ற இந்நூலை மாணவர்களும், ஆசிரியர்களும், தமிழ் மக்களும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

பல பெரியோர்களும், நிலையங்களும் முன்னரே புதுக் கலைகளைப்பற்றிய நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டு வழிகாட்டியுள்ளார்கள். ஆயினும், கல்லூரியில் தமிழ், கல்வி மொழியாகச் சிறந்து விளங்கவேண்டுமானால், இன்னும் எத்தனையோ நூல்கள் வெளிவரவேண்டும். எல்லோருடைய ஒத்துழைப்பாலும், விரைவில் மேலும் மேலும் பல நூல்கள் வெளிவரும் என்று உறுதியாக நம்புகிறோம்.

இந்த முயற்சியில் எத்தனையோ சிக்கல்கள் எழுந்தன அவைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைக்க முயற்சி செய்துள்ளோம். கலைச்சொற்களை அமைப்பதிலும், சிறந்தவர்களைக்

கொண்டு பாட நூல்களைத் தமிழ் மரபோ, கலை மரபோ, பொருள் தெளிவோ சிறிதும் பிறழாதபடி எழுதுவதிலும், மாணவர்களின் ஆங்கிலத் தரம் குன்றாமல் காப்பதிலும், அவர்கள் மேலும் தாம் கற்கும் பொருள்களைப் பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் கற்கத் தூண்டுவதிலும் உள்ள இடர்ப்பாடுகள் பல உள்ளன. எனவே, பல பெரியார்கள் இம்முயற்சியைப் பற்றி ஐயம் கொண்டது வியப்பன்று. இத்தனை சிக்கல்களையும் ஒருவாறு தீர்த்துள்ளோம் என்றால், குடியரசு வாழ்வில் எழுந்த தமிழ் மக்கள் ஆர்வமும் எதற்கும் அஞ்சாத உறுதியும், முன்னேற்ற உழைப்புமே காரணமாகும்.

எத்தனையோ தடைகளை யெல்லாம் வெற்றியுடன் கடந்த நம் தமிழ் அன்னை, கல்லூரிக் கலையாசனத்தில் அமர்கின்ற நிலையில் அவ்வன்னையை வாழ்த்துவோமாக; அவள் திருமுன்பு "மனமார உழைத்து வெற்றி காண்போம்" என்று உறுதி கொள்வோமாக. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழ் அன்னையின் அருள் நோக்கம் ஆகும். கல்லூரித் தமிழ்க்குழு இத்துறையில் செய்து வரும் தொண்டினை இங்கே குறிப்பிடல் வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தினைச் சார்ந்த கல்லூரி ஒன்றிலேதான் இந்த முயற்சி இன்று எழுகிறது. அப்பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும், ஒத்துழைப்பிற்கும் நம் மனங்கலந்த நன்றி உரித்தாகுக.

சென்னை,
17-5-1960.

சி. சுப்பிரமணியம்
சென்னை நிதி-கல்வி அமைச்சர்

பொருளடக்கம்

மொழிபெயர்ப்பு ஆசிரியரின் முன்னுரை

கல்லூரிகளில் கலைகளைத் தமிழில் கற்பிப்பதற்காகச் சென்னை அரசாங்கத்தார் செய்யும் முயற்சிகள் வரவேற்கத் தக்கவையாகும். இம்முயற்சியின் விளைவாக, மாணவர் உலகுக்குத் தாய் மொழியிலேயே எளிதில் கலையறிவு பெறக்கூடிய ஒரு வாய்ப்பு இருப்பதோடு கூட, நம் தாய் மொழியினுடைய சொல் வளத்தை ஆராயவும், அதனை மேலும் பெருக்கவும் வாய்ப்புத் தோன்றுகிறது. 'முயற்சி திருவினை ஆக்கும்'.

'இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றைக் (Constitutional History of England) காலத்தின் அடிப்படையில் தொகுத்துக் கூறும் இந்நூலின் ஆசிரியர், ஜார்ஜ் பர்ட்டன் ஆடம்ஸ் என்பவர், ஓர் அமெரிக்கர் ஆவர்; எனவே அவருடைய நூலின் மொழிபெயர்ப்பாகிய இந்நூலில், 'நாம்', 'நான்' 'எனது' என்ற சொற்களோடு பொருத்திக் கூறப்படுகின்ற கருத்துக்களெல்லாம், அவ்வாசிரியருடைய அமெரிக்கக் கண்ணோட்டத்தினின்றும் எழும் கருத்துக்களாகும்.

இந்நூல் 'சொல்லுக்குச் சொல்' என்ற விதிப்படி அமைந்த ஒரு மொழி பெயர்ப்பு அன்று; நூலாசிரியருடைய கருத்துக்களைப் பிறழாமல் கூறும் வகையில் அமைந்த ஒரு தாராள மொழி பெயர்ப்பே இந்நூல் ஆகும். மேலும், இந்நூலிற் கூறப்படுகின்ற ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சியை அறிவதற்கு முன்னர், மாணவர், 1603-ம் ஆண்டு வரையுள்ள 'அரசியல் வரலா'ற்றையும் (Political History) கற்றுக் கொள்ளுதல் சாலச்சிறந்தது. பேராசிரியர் ஆடம்ஸின் கருத்துக்களை மேலும் செவ்வையாக மாணவர்கள் புரிந்து கொள்ளுவதற்கு உதவியாக, அவ்வாசிரியரால் குறிக்கப்படும் மேற்கோள் நூல்களின் பட்டியலும் (Reference Books) இந்நூலின் கடைசியில், ஒவ்வொரு இயலுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது; எனவே மேற்கோள் நூல்கள் தரும் உதவியையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

நூலின் கடைசியில், கலைச் சொற்கள் (ஒன்று ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், மற்றொன்று தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும்), மிகச் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன; நூலிலேயே புதிய கலைச் சொற்கள் வரும் இடங்களிலெல்லாம், அடைப்புக் குறிகளுக்குள்ளே, தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கலைச் சொற்

களுக்குரிய ஆங்கிலச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கல்லூரித் தமிழ்க்குழுவினரால் கொடுக்கப்படும் கலைச் சொற்கள் சிலவற்றுக்குப் பதிலாக, நான் சில சொற்களைக் கொடுத்துள்ளேன்.

நூல் மிக விரைவாக அச்சாகி வந்ததாகையால், அதிற் காணப்படும் பிழைகளை வாசகர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்.

தமிழில் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பைக் கொண்டுவரும் இச்சீரிய பெருமுயற்சியில் பங்கு பெறும்படி எனக்கு வாய்ப்பளித்த சென்னை அரசாங்கத்தாருக்கும், அவரால் நிறுவப் பெற்ற கல்லூரித் தமிழ்க் குழுவினருக்கும், இந்நூலை அழகாக அச்சிட்டுப் பதிப்பித்து உதவிய பழனியப்பா சகோதரர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

9—3—1961,
அழகப்பா கல்லூரி,
காரைக்குடி-3.

பா. சூரியநாராயணன்.

முன்னுரை

நார்மானியரது தலைவராகிய [1] வில்லியம், [2] சாக்சனியரை மீண்டும் தலையெடுக்காதபடி [3] ஹேஸ்டிங்ஸ் போர்க்களத்தில் வென்று, தமது கூடாரத்தை அங்கு நிறுவிய காலம் முதலாக வரலாற்றிலேயே பெரும் மாற்றங்களில் ஒன்று ஏற்படலாயிற்று. [4] நியூயார்க் மாகாணத்தைப் போல அளவுள்ளதும், அப்போதைய நாகரிக வளர்ச்சியில் உலகத்தின் தரத்திற்குக் கீழ்ப்பட்டதுமாகிய சிறிய தீவு நாடான இங்கிலாந்துக்கு எவர் அரசராவது என்ற கேள்வி அன்றைய ஒரு நாட்போரில் தீர்மானிக்கப்பட்டது என்பது அவ்வளவு முக்கியமல்ல; பழம்பெரும் நாடுகளின் தொடர்பு அற்று, தனது [5] ஸ்காண்டினேவிய அண்டை நாடுகளைப் போல உலக விவகாரங்களினின்றும் விடுபட்டுத் தனித்து, வரலாற்றில் இங்கிலாந்து இயங்கவேண்டுமா என்பது அப்போரில் தீர்மானிக்கப் பட்டதும் அவ்வளவு முக்கியமல்ல; தாம் தனித்து நின்று உருவாக்க முடியாததும் ஒரு புதிய அரசியலமைப்பு வாழ்க்கையைத் தோற்றுவிக்கக் கூடியதுமாகிய ஒருவகை மக்கள் இணைப்பை, இரண்டு மக்கட் கூட்டத்தாரிடையே இப்போரின் மூலமே ஏற்படுத்த முடிந்தது என்பதே அதன் சிறப்பாகும். இந்த இரண்டு வகை மக்களும் இணைந்து வளர்ந்ததன் அறிகுறிகள் ஒரு தலை முறையிலேயே காணப்படுகின்றன. அவ்விணைப்பினடிப்படையி லேயே வரம்பில்லா அரசியலமைப்பு (அப்சல்யூடிசம்-Absolutism) தோன்றுவதையும், அக்கால முதல் இக்காலம் வரை, இவ்வாட்சியில் மக்களது வளர்ச்சி இடையறாமல், நல்ல பெரிய விளைவுகளோடு, உலகநாடுகளிடத்தெல்லாம் செல்வாக்கு அடையத்தக்க முறையில் நடைபெற்று வருவதையும் காண்கிறோம். பதினேழாம் நூற்றாண்டில் இவ்வளர்ச்சியின் போக்கில் இரு பிரிவுகள் தோன்றின; ஒவ்வொரு பிரிவும் ஒரு தனித்த ஆட்சிமுறையைக் கொண்டது; ஆயினும் ஒவ்வொன்றும் தனது சிறப்பான தன்மைகளையும், வாழ்வையும், வளரும் வலியையும் ஒரே மூலாதாரத்தி னின்றே அடைந்துள்ளது.

இவற்றுள் ஒரு பிரிவு அரசரது பதவியை நீடித்து வைத்துக் கொண்டது; மற்றொரு பிரிவு குடியேற்ற நாட்டுக்கொத்த எளிய முறையில் ஒரு குடியரசு ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டது. இதுவே இவ்விரு பிரிவுகளுக்கு மிடையேயுள்ள பெரும் வேறுபாடு.

---

1. William, Duke of the Normans. 2. The Saxons. 3. Battle of Hastings (1066). 4. State of New York. 5. States of Scandinavia.

ஆயின் இவ்விரு பிரிவுகளின் அரசியலமைப்புக்களை நுட்பமாக ஒப்பிட்டால், இப்பொழுது நடைமுறையில் இவ்விரு பிரிவுக் குடியாட்சி அரசியல்களுக்குமுள்ள மற்ற வேறுபாடுகளையும் நாம் காணலாம். சுருங்கச் சொல்லின் நமக்குப் பழக்கமில்லாத பிரிவாகிய ஆங்கில ஆட்சிமுறையில் செயல்குழு (நிறைவேற்றத் துறை, நிருவாகம், எக்சிகியூடிவ்-Executive) மக்களால் தேர்ந் தெடுக்கப்படுவதன்று; அது பெயரளவில் அரசரால் நியமனம் செய்யப்படுவது; ஆனால் நடைமுறையில் செயல்குழுவானது நாட்டின் சட்டமன்றத்துக் கீழ் அவையில் பெரும்பான்மையாக இருக்கும் அரசியற்கட்சித் தலைவராலேயே, அவர் மூலமாகவே நியமிக்கப்படுகிறது. செயற்குழுத்தலைவர் குறிப்பிட்ட காலத்துக்கு நியமிக்கப்படுவதுமில்லை; சட்டமன்றத்தில் அவரது கட்சி பெரும் பான்மையாக இருக்கும்வரை அவர் அதிகாரத்தைச் செலுத்த லாம். இதன் விளைவாக ஆட்சியில் நிருவாகத்துறைக்கும், சட்டத் துறைக்கும், மிக நெருங்கிய தொர்டர்பு ஏற்படுகிறது. இதனால் இப்பொழுது கூறப்படுவது போல் முதலமைச்சரும், அவரது அமைச்சரவையும் மூன்றுவது சட்டமன்றமாக இருக்கின்றனர்.

இங்கிலாந்தில் மக்கள் தங்களால் சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவே அமெரிக்கக் கூட்டரசு மக்களைவிட மிகுதியாக ஆட்சியில் பங்கெடுத் துக் கொள்ளுகின்றனர்; மேலும் அந்நாட்டில் மக்கள் மன்றத்தில் (ஹௌஸ் ஆப் காமன்ஸ், காமன்ஸ்சபை, House of Commons) கூடியுள்ள மக்களின் பிரதிநிதிகளே நாட்டின் தலையாய அதிகாரி களாவர். மேற்சபையினராகிய பெருமக்கள் மன்றத்தாருக்கு ஹௌஸ் ஆப் லார்ட்ஸ்) மிகச்சுருங்கிய அதிகாரமே உண்டு; மக்கள் மன்றத்தார் நிறைவேற்ற விரும்பும் ஒவ்வொரு ஆணைக் கும் (மெஷர், Measure) முடிவில் பெருமக்கள் மன்றத்தார் இணங்கியே ஆகவேண்டும். இதே நிலைமைதான் அரசருக்கும் பொருந்துவதாகும். ஆட்சியிலிருக்கிற அமைச்சவையினரது கருத்தையல்லாமல், எந்த அரசியற் கேள்வியிலும் அரசருக்குத் தமக்கென யாதொரு கருத்தும் கிடையாது; தமது அமைச்சர்கள் வழியாக அல்லாமல் அரசர் எக்கருத்தையும் தெரிவிப்பதுமில்லை. தான் நாட்டின் தலையாய அதிகாரியென்ற நிலைமையில் மக்கள் மன்றமே நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை ஆக்கும் மன்ற மாகவும் இருக்கிறது. பாராளுமன்றச் சட்டம் நாட்டின் ஆட்சி அமைப்பில் அதிகாரங்களையும் (Powers, பவர்ஸ்) செயல்களையும் (பங்க்ஷன்ஸ், Functions) அடிப்படையில் மாற்றியமைப்பினும் எல்லா அதிகாரியும் அச்சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டியவரே. மக்களால் நேரடியாக ஒப்புக்கொள்ளப்பட்ட எழுதப்பட்ட அரசிய

லமைப்புச் சட்டம் (Written constitution) என்பதாக யாதொன்றும் ஆங்கில நாட்டில் இல்லை; ஆட்சியின் பல்வேறு துறைகளையும் நிறுவி, அவ்வவற்றின் செயல்களையும், அதிகாரங்களையும். வரம்புகளையும் வரையறை செய்யும் ஆவணம், (தஸ்தாவேஜு, (பிடிபாடு,) டாகுமென்ட்-document) எதுவும் இங்கிலாந்தில் இல்லை. அந்நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் என்பதெல்லாம் சட்டமாக வரையப்படாத பல வழக்காறுகளையும் (custom), மேற்கோள்களையும் (ப்ரீசிடென்ட்-precedent) உடையதாகும்; அது எவரும் முன்பே எண்ணிச்செய்யாமல் தானுகவே நடைமுறையில் வளர்ந்து வந்துள்ளதாகும்; ஆயினும் தன்மையில் அரசியலமைப்பை ஒட்டிய ஒருசில சட்டங்களும் இருக்கவே செய்கின்றன; நடைமுறையில் சில சமயங்களில் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையாகத் தோன்றிய வரம்புகளை யெல்லாம், அவை சட்டமாக உறுதிசெய்து ஆதரவு (sanction) அளிக்கின்றன.

மேற்கூறியவற்றிலிருந்து அமெரிக்க அரசியலில், யாதொரு பகுதிக்கும் இருப்பதைவிட, ஆங்கில அரசியலில், மக்கள் மன்றத்துக்கு மிகுதியான அதிகாரங்களிருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிந்தாலும், அமெரிக்காவில் எந்தச் சட்டமன்றத்தையும்விட ஆங்கில மக்கள் மன்றம் எக்காலத்தும் நேரடியாக நாட்டு மக்களது கட்டுப்பாட்டுக்குள் தான் நடைமுறையில் இயங்குகிறது என்பதே உண்மை. மக்கள் மன்றத்தில் பெரும்பான்மையோரையே அமைச்சரவை சார்ந்திருப்பதனுல், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தேர்தலுக்குத் தாம் நிறுத்தும் ஆட்களைவிட, தாம் விடுக்கும் கட்சிக்கொள்கை அல்லது திட்டங்களே முக்கியமாகக் குடி ஒப்பத்துக்கு (ரெபரண்டம், Referendum) விடப்படுபவையாகின்றன. தேர்தலையடுத்து உடனடியாகப் பாராளுமன்றமும் கூடுகிறதென்பதனுல், தேர்தலில் வெளியான பொது மக்கள் தீர்ப்பு உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டியதென்பதாகும். கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஆங்கிலக் குடியாட்சி, பொது மக்களின் கருத்துக்களை மக்கள் மன்ற உறுப்பினரிடையே படிய வைப்பதில் திறம்மிக்க முறைகளை வகுத்து வளர்ந்திருக்கிறது; இம்முறைகள் திறம் மிக்கவையாகையினுல், மன்ற உறுப்பினர் பிரதிநிதியாக இருப்பதினின்றும் மாறித் தத்தம் தொகுதியினர் கருத்தை மட்டும் எடுத்துக்கூறும் வெறும் பேராட்களாக (டெலிகேட்டுகள், delegates) ஆகிவிடுவரோ என எண்ணவும் இடம் உண்டு.

எனவே நாம் ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றின் சிறப்பான நோக்கத்தை வெகு சுருக்கமாகச் சொல்லலாம். எல்லா

அதிகாரங்களும் மன்னரிடமே குவிக்கப்பட்டு, அவருடைய கருத்திற்கேயன்றி வேறெவரது கருத்துக்கும் இடமில்லையெனப் பதினேராம் நூற்றுண்டில் அமைந்திருந்த மன்னரது தனியரசானது, எவ்வாறு படிப்படியாக மன்னருக்கு எனத் தனியாக யாதொரு கருத்துக்குமிடமில்லாமல், தேர்தலில் வெளியிடப்பட்ட பொது மக்கள் கருத்தே யாவரையும் கட்டுப்படுத்துமென்ற இப்பொழுதைய குடியாட்சி முறைக்கு மாற்றப்பட்டதென்பதையே இவ்வரசியல் வரலாறு கூறுவதாகும். மக்களால், மக்களுக்கு அமைந்த குடியரசு அமைப்பானது வளரும் வகையில் எவ்வாறு இருநூறு ஆண்டுக் காலமாக வழி வகுக்கப்பட்டதென்பதையும், மேலெழுந்தவாரியாக ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாயினும், அடிப்படை நோக்கத்தில் ஒரே தன்மையாகவுள்ள இருகிளைகளாக அல்லது பிரிவுகளாக அந்நாட்டின் அரசியல் அமைப்பின் வளர்ச்சி எவ்வாறு அமைந்துள்ள தென்பதையும் அது கூறுகிறது. மிக மெதுவாகத் தோன்றி, மெதுவாக வலிமை பெற்று, முடிவில் எவராலும் தவிர்க்கமுடியாதபடி வளர்ந்துள்ள ஓர் இயக்கத்தைக் கூறும் வரலாறு அது. ஆட்சி முழுவதும் அடங்கிய பல்வேறு அரசியல் நிறுவனங்கள் (பொலிடிகல் இன்ஸ்டிடியூஷன்ஸ், Political Institutions) தோன்றி வளர்ந்த அடுத்தடுத்த நிலைகளைப் பற்றியும் அது கூறும்.

இயல் ஒன்று

ஆங்கிலோ-சாக்சன் காலம்[1]

ஆங்கில அரசியலமைப்பானது ஆங்கிலநாட்டு இனத்தவரைப் போலவும், ஆங்கில மொழியினைப் போலவும் பல்வேறு மூலாதாரங்களினின்றும் தோன்றியதாகும். இங்கிலாந்து நாடாக அமைந்த நிலப்பரப்பில், அதன் வரலாறு தோன்றிய முதல் ஆயிரம் ஆண்டுக் காலத்தில், பல்வேறு இனமக்கள் அடுத்தடுத்துப் பல பகுதிகளில் வாழ்ந்து ஆட்சிசெய்தனர். எனவே அவர்கள் பிற்காலத்தவருக்கு ஒரு நிலையான சட்டமும் அரசியல் நிறுவனமும் விட்டுச் சென்றிருத்தல் கூடுமென எண்ண இடம் இருக்கிறது; இருப்பினும் உண்மையில் அப்பொழுதிருந்த எல்லா இனத்தவரும் அவ்வாறு செய்யவில்லை. முதன் முதலில் அதனை ஆண்ட கெல்ட்டிக் இனமக்கள் கூட எதிர்காலத்திய ஆங்கில இனமக்கள் பெரும்பாலும் தம்மிடத்திருந்தே தோன்றக் காரணமாயிருந்தனரேயன்றிச் சட்டமும் அரசியல் நிறுவனங்களும் தோன்றுவதற்கு யாதொன்றும் செய்யவில்லை.

பிரிட்டனைத் தமது மாகாணமாக ஆக்கி ஆண்ட ரோமானியருக்கும் மேற்கூறிய நிலை பொருந்துவதாகும்; ஆங்கில அரசியலமைப்பு வரலாறு ஒரோர் சமயங்களில் ரோமானியரது ஆதிக்கத்தால் ஆக்கப்பட்டிருக்கிறது; எனினும் இவ்வாதிக்கம் ஒரே சமயத்திலோ, அல்லது ஒரே அடிப்படையினின்றோ தோன்றவில்லை; ரோமானிய ஆட்சி முடிவுற்ற பல ஆண்டுகளுக்குப் பின்னரே இவற்றின் வலிமை தெரியலாயிற்று. தொடக்கத்திலேயே அரசியல் சட்டம் பற்றிய நிறுவனங்களை ஆக்கிய வகையில் அவர்கள் ஆதிக்கம் ஏற்படவில்லை. பண்டை ஆங்கிலச் சட்ட வரலாற்று அறிஞர் ஒருவர், "நமது பண்டைய அரசர்களது எழுதப்பட்ட ஆணைகள் மிகச் சிதைந்த வடிவிலிருக்கும் ரோமானியச் சட்டத்தின் பகுதிகளையும் கண்டுபிடிக்கும் திறனுடையவர்களால் ஆராயப்பட்டன; எனினும், எடுத்துச் சொல்லத்தக்க அளவுக்கு அவற்றில் அப்பகுதிகள் எதனையும் அவர் கண்டிலர். இந்த ஆணைகளெல்லாம் பழைய தூய ஜெர்மன் சட்டத்தின் பகுதிகளாகவே உள்ளன என்பது எல்லா அறிஞர்களுடைய கருத்துமாகும்," என்று கூறியுள்ளார். ரோமானியரை அடுத்து இங்கிலாந்தில் தோன்றிய டியூடானியர் (Teutons), தாம் குடியேறிய முறையினின்றோ, சமய நிலையத்தினின்றோ (சர்ச் - Church) ஆணையையும்

1. The Anglo-Saxon Age.

நீதி மன்ற முடிவுகளையும் தெரிவிப்பதற்காக, எழுதப்பட்ட பிடிபாடும் (Document), பட்டய உறுதிப் பத்திர முறையையும் (உயில், வில்-Will) கற்றறிந்தனர். எனினும் பிடிபாட்டு முறையோடு கூடிய சட்டம் ஏதும் அவர் அறிந்திலர். எழுதப்பட்ட உறுதிப் பத்திர முறைகளை அவர் கையாண்டனரெனினும், ரோமானியரது உறுதிப் பத்திரம் பற்றிய சட்டம் அவர்களுக்குத் தெரியாது. பிற்காலத்தில் இதுபற்றிப் பல செய்திகள் அறியப்பட்ட போது ரோமானியச் சட்டங்களுக்கு நாம் பெரிதும் கட்டுப்பாடு உடையோம் என்பது தெரியலாயிற்று. நார்மானியர் வெற்றியினால், ரோமானிய நிறுவனங்களின் ஆதிக்கமும் ஓர் இனம் தெரியாத சட்டத்தின் ஆதிக்கமும் இங்கிலாந்தில் ஏற்படலாயின. இதற்குப் பின்னால் 12-ஆம் நூற்றாண்டில் சட்டக்கலை நுட்பமாக ஆராயப்பட்டபோது, மிக வலுவான மற்றொரு ஆதிக்கம் காணப்பட்டது. நுட்பமான சட்டக் கருத்துக்களில் பயிற்சி பெற்ற சட்ட நூலாசிரியரும் நீதிபதிகளும் தம்மை அறியாமலே நாட்டுக்கே உரிய ஒரு சட்டத்தை வகுத்தும் தொகுத்தும் பயன்பெற்றனர். இதனால் மணமுறை (Marriage), தாயம் (வழி உரிமை, இன்ஹெரிட்டென்ஸ்-Inheritance), தரும நியாயம் (இக்விட்டி-Equity), கடற்படைச் சட்டம் (அட்மிரல்டி Admiralty), அனைத்து நாட்டுச் சட்டம் (International Law) முதலியவற்றில் எல்லாம் நமது சட்டங்களில் முன்னைவிட ரோமானியக் கருத்துக்கள் மிகுதியாகச் சேர்ந்தன. நமது மொழியில் லத்தின் தொடர்புகள் காணப்படுவதைப் போலல்லாமல், நமது இக்காலத்திய சட்ட முறையில் ரோமானியக் கூறுகள் மிகுதியாகக் காணப்படுவது, ரோமானியர் பிரிட்டனைக் கைப்பற்றி ஆட்சி செய்ததனால் அல்ல; அவை வேறொரு ஆதிக்கத்தின் மூலம் தோன்றின என்பதே ஆகும்.

இங்கிலாந்தைக் கைப்பற்றி அதில் குடியேறிய மூன்றுவது இன மக்களினின்றே சட்டமும் நிலையங்களும் (நிறுவனங்கள், Institutions) தோன்றின. இதிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் அவற்றின் தொடக்கம் முழுவதும் ஏற்பட்டது என்பதில்லை. அடுத்தடுத்து வந்த மூன்று டியூட்டானியப் பிரிவினராய படையெடுப்பாளர்தாம் இந்நிலையங்களை ஏற்படுத்தினர். இவருள் முதல்வராகிய ஆங்கிலரையும் சாக்ஸனியரையும் ஒரே பிரிவினராகக் குறிப்பிடலாம். இரண்டாமவர் நாட்டில் வடகிழக்குப் பகுதியைப் பாதிக்குமேல் கைப்பற்றியாண்ட ஸ்காண்டினேவியர் அல்லது டேனியர் ஆவர். இவர் முதலில் கூறப்பட்டவரைப் போல நமது மொழியைப் பொறுத்த அளவில்தான் மிகுதியாகத் தமது ஆதிக்கத்தை விட்டுச் சென்றனராகையால், நிலையங்களின்

வளர்ச்சியைப் பற்றிய வரலாற்றில், இவரைக் கூருமலே விட்டு விடலாம். பதினேராம் நூற்ருண்டில் ஏற்பட்ட நார்மானியரது வெற்றி மூன்ருவது நிலையாகும்; மற்ற மூலாதாரத்தினின்றும் மாறுபட்டதும், ரோமானிய மாகாணமாயிருந்த கால் நாட்டைக் (Gaul) கைப்பற்றி, பிராங்கிய ரோமானியப் பேரரசை (Frankish Roman Empire) நிறுவிய பிராங்கியரிடமிருந்து ஒரு புதிய ஆற்றல் மிக்கதும் ஆகிய டியூட்டானிய ஆதிக்கத்தை இவ்வெற்றி இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தது. இதன் விளைவாக இப்புதிய ஆதிக்கம் தொடக்கத்தில் டியூட்டானியரதாக இருப்பினும், பிராங்கிய நாட்டுடன் ஐந்து நூற்ருண்டளவாக இணைந்து இருந்ததால். ரோமானிய அரசியல் நாகரிகத்தினுல் மிகுதியாக மாற்றமும் வளர்ச்சியும் அடைந்ததொன்ருகும். பண்டைய டியூட்டானிய முறையில் ஏற்பட்ட மாற்றம், நார்மானிய வெற்றி ஏற்பட்ட காலத்து அளவில் மிகப்பெரியதாயிற்று; எனவே பழைய டியூட்டானிய முறைக்கும், மாறுதலுக்கு உட்பட்ட புதிய டியூட்டானிய முறைக்கும் உள்ள வேறுபாடுகளே, பெரும்பாலும் ஒற்றுமைகளைவிட, நமக்குத் தெளிவாகத் தெரிகின்றன. ஸாக்ஸனியரும் நார்மானியரும் பிரிக்க முடியாத ஓர் இனமாக இணைந்தது ஒரு நூறு ஆண்டு அளவில் தொடங்கி இன்னெரு நூறு ஆண்டுகளில் முடிவடைந்தது.

1066–ஆம் ஆண்டைய நார்மானிய வெற்றியானது ஆங்கில வரலாற்றில் ஒரு காலத்தை முடிவடையச் செய்து, வேருெரு காலத்தைத் தொடங்கி வைத்தது என நாம் கருதுமளவுக்கு மேலே குறிப்பிட்ட வேறுபாடுகள் தெரிகின்றன. வரலாற்று ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியைப் பற்றி ஒருமித்த விளக்கம் தருவதில்லை; இந்நிகழ்ச்சி ஏற்படுத்திய மாற்றத்தின் பல்வேறு அம்சங்களை தாம் நோக்குகிற கோணத்திற்கு ஒத்தவாறு வலியுறுத்திப் பேசுகின்றனர். உள்நாட்டு ஆட்சியமைப்பைப் பற்றி யல்லாமல், நாட்டின் பொதுவான அரசியலமைப்பின் வளர்ச்சியைக் கூறும் வரலாற்றிலே, இம்மாற்றம் தவிர்க்க முடியாத ஒரு முடிவை ஏற்படுத்திற்று. நாட்டு அரசியலின் சில சிறப்பான தன்மைகளெல்லாம் ஸாக்ஸன் நிறுவனங்களில் அல்லாமல், பிராங்கியர் நிறுவனங்களில்தான் காணக் கிடைக்கின்றன என்று கருதுமளவுக்கு அடிப்படையிலேயே இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது என்ருல் அது மிகையாகாது. உள்நாட்டு ஆட்சி இயலைப் பொறுத்தவரையில் இம்மாற்றம் பெரிதாக இல்லை; சில விவகாரங்களில் சிறிய அளவிலும் இல்லை. இம்மாற்றத்தினுல், அரசரும் நிலப் பெருமக்களும் சேர்ந்து, நாட்டுக்கு ஒரு புதிய

அரசாங்க முறையை ஏற்படுத்தவும், ஒரு புதிய சட்டம் தோன்றி மக்களின் தொடர்புகளை யெல்லாம் கட்டுப்படுத்தவும், நாட்டின் உட்பிரிவுகளிலோவெனில், சிறிய நீதிமன்றங்களில் யாதொரு மாற்றமும் இன்றிப் பழைய சட்டங்களே நெடுங்காலத்துக்குத் தொடர்ந்து இருந்து வந்தன.

பண்டைய சாக்சனிய நிறுவனங்களைப் பற்றியும், இங்கிலாந்தில் சாக்சன் அரசர்களது ஆட்சியில் அவை வளர்ச்சியடைந்த வரலாற்றைப் பற்றியும் அறிஞர் பலர் ஆராய்ந்திருக்கின்றனர்; ஆயினும் நமக்குச் செய்திகளைத் தரும் மூலாதாரங்கள் மிக மிகக் குறைவாகையாலும், அவைகளின் மூலம் உண்மையான விளக்கம் கிடைப்பது கடினமாகையாலும், பல முக்கியமான செய்திகளைப் பற்றி நாம் அறியோம் என்றே ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஓர் அறிஞர் தமக்குச் சரியெனத் தோன்றியதைக் கூறுவதோ, அல்லது அவர் அம்முடிவுக்கு ஏற்பக்காட்டும் ஆதாரங்களோ, அல்லது அவர் அதை எடுத்துக் கூறும் முறையோ மற்றையோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சில சட்டத் தொகுதிகள் நமக்குக் கிடைக்கின்றன; ஆயினும் சில மாற்றங்களையும் குறிப்புக்களையும் மறந்துவிடாமல் இருப்பதற்காக எல்லாச் சட்டங்களையும் எழுதிவைக்க வேண்டுமென்ற நோக்கம் இச்சட்டத்தைத் தொகுத்தவர்களுக்கு இல்லை. இத் தொகுப்பை நாம் ஊன்றிப் படிக்கையில் பலவற்றை ஊகத்தினாலேயே நாம் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது. பண்டையக் குடிமக்களைப் போலவே சாக்சனியரும் எதிர்கால மாணவர்க்குப் பயன்படும் பொருட்டு நூல்களிலோ ஆவணங்களிலோ தமது தேவைகளையும் விருப்பங்களையும் எழுதிவைக்கவில்லை.

நார்மானியரது வெற்றிக் காலத்தை நாம் அணுக அணுக, செய்திகளின் மூலாதாரம் பெரிய அளவில் கிடைக்கிறது. அவ்வெற்றியை அடுத்துள்ள முந்திய காலத்திய ஆங்கிலோ-சாக்சன் அரசியல் நிறுவனங்களைப் பற்றியும் நமக்கு நம்பத்தக்க செய்திகள் கிடைக்கின்றன, இவற்றை நாம் ஆராயும்போது, அவ்வாட்சியமைப்பைப் பற்றித் தெளிவில்லாமல் யாதொன்றும் சொல்வதைவிட, அப்பொழுதைய ஆட்சி எவ்வாறிருந்ததெனவும், அவற்றில் இப்பொழுது காணப்படும் தன்மைகள் எவ்வாறு தோன்றின எனவும் கூறுவது சிறந்தது.

ஆங்கிலோ-சாக்சன் நிறுவனங்களைப்பற்றி நாம் ஆராயப் புகுமுன், பண்டைய நாகரிகங்களைக் கற்கும் ஒவ்வொரு மாணவரும் மனத்துள் கொள்ளவேண்டிய எச்சரிக்கையை இங்கும் எடுத்துக்

கூற வேண்டியிருக்கிறது; அற்றை நாளிலிருந்து இதுவரை வரலாற்றின் போக்கிலும் நடைமுறையிலும் தோன்றிய கருத்துக்களையெல்லாம் பண்டைக்கால மக்களுக்கு ஏற்றிச் சொல்லுதல் கூடாது என்பதே அவ் வெச்சரிக்கை. நம்மைப் போலவே பலவற்றைக் குறிக்கும் சொற்களை அவர்களும் கையாண்டனர் என நாம் எளிதில் முடிவு கட்டிக்கொண்டு, இப்பொழுதைய நடைமுறைகளையும் வழக்கங்களையும் குறிப்பதற்காக நாம் ஆளும் கலைச் சொற்களை அவற்றுக்கு நாம் இப்பொழுது கொடுக்கும் பொருளிலேயே அவர்களும் வழங்கினரென நாம் கருதுதல் கூடாது. நமது பண்டைய அரசியலமைப்பை ஆராய்கையில் நமக்கு ஒரு சோதனையான சொல்லாக வருவது "அரசியல் சட்டம்" என்பதே. இதற்குப் பிறிதொரு பொருளைக் கொள்ளாமல் பண்டைக் காலத்துப்படி, "செய்யும் முறை" என்று மட்டும் பொருள் கொண்டால், அச் சொல்லை நாம் சரியான பொருளில் வழங்கியவராவோம்; ஏனெனில் இப்பொழுது நம்முடைய வழக்கங்களைப்போல அக் காலத்தில் வழக்கங்கள் அமையா விட்டாலும், அரசியலில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பல செயல்முறைகள் இருந்தன. ஆயினும் இப்பொருளில் மட்டும் மேற்கூறிய சொல்லைக்கையாளுவதென்பதும் இயலாது. இக்காலத்தில் இச்சொல், யாவருக்கும் தெரிந்த நிலையாக ஒப்புக்கொள்ளப்பட்ட முறை அல்லது வகையென்பதையும், இவ்வகையினின்றும் எவரும் சட்டப்படியோ வழக்கத்திலேலோ விலகிச்செல்ல இயலாதென்பதையும், அவ்வாறு மீறுவது அரசியலமைப்பை விழிப்புடன் காத்து நிற்கும் அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டுத் தவிர்க்கப்படும் என்பதையும் உணர்த்துகிறது. ஆங்கிலோ-சாக்சனியர் நாட்டில் பல நிலையான அமைப்புகளும், உரிமைகளும், ஆளும் வழிகளும், கடமையைச் செய்யத் தூண்டும் வழிகளும் இப்போது நம் கருத்துப்படி அரசியலமைப்பு என்னும் பிரிவில் இல்லாமல் தனித்துத்தான் இருந்தன என்பதைப் பார்க்கிறோம்; எனவே சட்ட முறைப்படி இவை அனைத்தும் அரசியல் துறைப்பட்டவை அல்ல. ஆட்சி பற்றியவற்றைக் குறிப்பிட மட்டுமே "அரசியலமைப்பு" என்னும் சொல்லை நாம் வழங்கவேண்டும். எனவே இம்முறையில் அச்சொல்லை வழங்கும் போது அதற்குரிய இப்பொருளில் தான் கவனத்தோடு கையாள வேண்டும்; இல்லாவிடில் அப்பொழுது உண்மையிலேயே ஆட்சி ஒழுங்கு, அரசியல் முறை ஆகியவற்றைப் பற்றித் திட்டமாக அவர்களுக்கு ஒரு கருத்து இருந்ததாக நாம் தவறுக எண்ணிக் கொள்வோம். அப்பொழுதும் மக்கள் பல செயல்களைச் செய்தனர்; எனினும் அவர்கள் தமது செயல்களின்

1. 'Constitutional law'

காரணங்களை ஆராயவில்லை; ஆட்சியின் ஒரு பணிக்கும் மற்றப் பணிக்கும் இடையே உள்ள வரம்போ, ஒரே பணியை இருமுறைகளில் செய்தலில் உள்ள வேறுபாடோ அவர்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை; இவற்றை நாம் ஏற்றுக் கொள்ளாவிடில் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டவராவோம்.

நார்மானிய வெற்றிக்குமுன் இங்கிலாந்து ஒரே அரசாக (State, ஸ்டேட்) இருந்தது. பற்பல தனித்தகுடியேற்றநாடுகளையும், அரசுகளையும், மெள்ள மெள்ள நெடுங்காலமாக இணைத்ததன் மூலமே அதன் அரசியல் இணைப்பு தோன்றியது. இந்த இணைப்பின் சுவடுகள் (Traces) இங்கிலாந்தின் நில அமைப்பிலும், அரசியல் அமைப்பிலும் காணக்கிடக்கின்றன. நாட்டின் பல பிரிவுகளான கோட்டங்கள் (ஷயர், Shires)-எடுத்துக்காட்டாக சர்ரே, சசக்ஸ், எசக்ஸ், கென்ட், நார்பக், சபக் (Suffolk) முதலியவை முற்காலத்திய குடியேற்ற நாடுகளையோ, உறவுடைய குடும்பத்தாரது தனியரசுகளையோ (ட்ரைபல் கிங்டம்ஸ், Tribal Kingdoms) காட்டுபவையாகும். இதனால் உள்நாட்டுச் சட்டம் பல தன்மைகளில் இடத்துக்கு இடம் மாறுபட்டே இருந்தது. அரசியல் இணைப்பு ஏற்பட்ட பின்னரும், மேற்கு வடக்குப் பகுதிகள் தமது பண்டைய தனித்த நிலையை ஓரளவு நிலையாக வைத்துக் கொண்டன; எனவே உள்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நடு அரசாங்கத்தில் (சென்ட்ரல் கவர்ன்மென்ட், Central government) பிரதிநிதித்துவத்துக்கு ஏற்பாடு செய்யும் போது, அவற்றின் தனிநிலை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று.

ஐந்தாம் நூற்றாண்டில் ரோமானியப் படைகள் பிரிட்டனிலிருந்து திரும்பப் பெறப்பட்டதும், பிரிட்டனைக் கைப்பற்றிய டியூட்டானியக் குடியினர் வடஜெர்மன் தாழ்ந்த நிலப் பகுதிகளிலிருந்தும் வடகடலையடுத்த (North Sea) கரையாகிய டேனிய தீபகற்பத்தினின்றும் வந்தவராவர். தங்களுடைய பூர்விக நாட்டில் அரசியல் வளர்ச்சியில், அவர்கள் ஜெர்மன் குடும்பங்களைவிடப் பின் தங்கியவர் எனத் தெரிகிறது. அவரது குடும்பங்கள் இணைந்திருக்கவில்லை; அவர்களுக்கு அரசரோ, ஒரு பொதுவான அரசியலோ கிடையாது; ஆனால் அவர்கள் ஒன்றுக்கொன்று உறவுடைய சிறு கூட்டங்களாகப் பிரிந்திருந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் அவர்களைச் சார்லமே (Charlemagne) பேரரசர் வென்ற போதும், அவர்கள் இதே தன்மையான அரசியல் நிலையில்தான் இருந்தனர். அவர்கள் அரச பதவியையோ, அல்லது தம் கூட்டத்தார் யாவருக்கும் பொதுவான ஓர் ஆட்சியையோ தோற்றுவிக்கவில்லை. பிரிட்டனில் சாக்சனியர் பிற்காலத்தில் தமது படை வெற்றிகள் மூலம் பல நாடுகளை ஒன்றாக இணைத்தபோதிலும்,

தொடக்கத்தில் பிரிட்டனில் டியூட்டானியர் ஏற்படுத்திய தனிக்குடியேற்ற நாடுகள் அவர்களது பண்டைய அரசியல் நிலைமை களையே எதிரொலித்துக் காட்டின. பொதுவான ஆட்சிமுறை எதுவும் பிரிட்டனிலும் முதலில் அவர்களால் ஏற்படுத்தப் படவில்லை. உறவால் இணைந்த குடும்பக் கூட்டங்கள் (tribal groups) ஒவ்வொன்றும் தனித் தனியான குடியேற்ற நாடு அமைத்துக் கொண்டது; அவற்றை ஓரரசுக் குட்பட்ட நாடாக இணைப்பதற்கு யாதொரு முயற்சியும் செய்யப்படவில்லை. அவ்வாறு செய்தலே விரும்பத்தக்கதென்ற கருத்தும் அவர் களிடையே இருந்ததாகவும் தெரியவில்லை. ஆயினும் தொடக்கத் திலிருந்தே அவர்கள் தம்முள் போரிட்டு ஒருவரை ஒருவர் வென்று இணையத் தொடங்கினர்; முதன் முதலில் தோன்றிய இடங்களை ஒவ்வொன்ருக வென்று இணைத்துக் கொண்டதன் விளைவாக ஏழரசு (Heptarchy) என வரலாற்றிற் கூறப்படும் ஏழு தனியரசு கள் தோன்றின; கடைசியில் இங்கிலாந்து எனப்படும் நாடே மேற்கு சாக்சனிய அரசர்களது ஆட்சியில்தான் உருவாயிற்று.

இவர்களது வெற்றியினுல் ஏற்பட்ட உடனடி விளைவுகளை நாம் உணர்ந்து கொள்ளலாம். டாசிட்டஸ் (Tacitus)என்னும் ஆசிரியர் கூறுவதுபோல, வெளிப்படுத்தப்பட்ட திறமையினுலும், உயர் குடிப் பிறப்பினுலும் போர்க்காலத்துத் தலைவராக முதலில் தேர்ந் தெடுக்கப்பட்டவரே பின்னர் அரசராக ஆயினர், பகைமையும் பூசலுமுடைய கூட்டத்தாரிடையே வென்று கொள்ளப்பட்ட புதிய நிலத்தில் டியூட்டானியர் குடியேறியதும் இவ்வரச அதிகாரப் பதவி நிலைபெற்றிருத்தல் வேண்டும். முதன்முதலில் அப்பதவி ஒரு நிலைபேருன போர்க்காலத் தலைமை என்பதாகத் தானிருந்தது. படிப்படியாகத்தான் அது அரசநிலையின் தன்மைகளையும். செயல் களையும், நிலைத்த சூழ்நிலையிலுள்ள மக்களுடைய பொது நலன் களை ஒழுங்காகக் கண்காணிக்கும் வேலையையும் ஏற்றுக் கொண்டது. இந்த சாக்சன் நாடுகளில் திட்டவட்டமான ஆட்சி யும், அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியும் (Constitutional Government-கான்ஸ்டிடியூஷனல் கவர்ன்மென்ட்) தோன்றிய வகை இதுவாயினும் சரி, அல்லவாயினும் சரி, இப்புதிய நாட்டை சாக்சனியர் வென்றதும் உண்மையான ஆட்சியமைப்பு ஒன்று அவருடைய குடியேற்ற நாடுகளில் உருவாகத் தொடங்கியது. டாசிட்டஸ் காலத்திலேயே ரோமானியரோடு தொடர்பு கொண்ட ஜெர்மனியரது அரசியல் நிலையங்களை சாக்சனிய அரசியல் நிலையங்கள் சிலவற்றில் ஒத்திருக்கின்றன.

முன்பு சொல்லப்பட்ட அரசபதவியின் தோற்றம் ஊகத்தின் பாற்பட்டதாயினும், நாட்டை ஓரரசாக இணைப்பதில் ஆங்கிலோ-

சாக்சன் வரலாறு முழுவதிலும், அவர்களுக்குள் நிகழ்ந்த தொடர்ச்சியான சண்டைகளும், பின்னல் குடியேறிய புதிய டியூட்டானியரான டேனியருக்கும் சாக்சனியருக்கும் நிகழ்ந்த கடுஞ் சண்டைகளும், புதிதாகத் தோன்றிய அரசபதவி உறுதியாக நிலைபெற்று வளர உதவின என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாடு அளவில் பெரியதாக வளர, அதன் அமைப்பும் திட்டமாக இருந்தது. அதன் விவகாரங்கள் பெருகின; அதன் ஆட்சிப்பொறி, அல்லது இயந்திரமும் சீராக ஆயிற்று. அதன் சட்டத்தொகுப்பும் பெரியதாகவும் நுட்பமாகவும் ஆயிற்று. அரசபதவியே வரலாறு தோன்றிய காலத்தில் முதன் முதலில் இயல்பாக ஏற்பட்ட அரசியலமைப்பு எனத் தெரிகிறது; அதுவே ஆட்சி இயந்திரத்தின் நடுவாக அமைந்து, எல்லாச் செயல் முறைகளும் நடைபெறுவதற்குப் பொறுப்பாக இயக்கும் தலைமையாகவும் இருந்தது; நாடு அளவில் வளரவும், இப்பதவியின் அதிகாரமும் வளர்ந்தது.

அரச பதவியே நாளாவட்டத்தில் வலுவாக அமைந்தது. ஏதேனும் ஓர் அரசர் வலிமிக்கவரா அல்லரா என்பது, அவரையும் அவரது திறமைகளையும் மன உறுதியையும் மட்டுமே பொறுத்திருந்தது. நார்மானிய வெற்றிக்கு முந்திய நூற்றாண்டில், வலிமிக்கவரும் வலியற்றவருமாக மாறி மாறிப் பலர் அரசராக வந்தனர்; எனினும் அவரது பண்புகளில்தான் மாறுதல் இருந்ததே அன்றி, அரசபதவியின் அதிகாரத்தில் மாறுதல் எதுவும் இல்லை. ஆங்கிலோ-சாக்சன் அரசபதவி ஒருபொழுதும் தனித்த ஆட்சியாக மாறியதில்லை. கரோலிஞ்சிய பிராங்கிய மன்னருக்கு இருந்த அதிகாரமும் அதற்கு இல்லை; அவரைப்போல அதிகாரக் குவிப்பு மிக்க நாடும் அவர்களுக்கு இல்லை. முதலில் சிறியதாக இருந்து, திடீரெனப் பெரியதாக மாறிய தமது நாட்டின் கேள்விகளைத் தீர்ப்பதற்காக, வேற்று நாட்டு அரசியலமைப்பை ஒட்டி ஒன்று அமைக்கவேண்டும் என்றோ, ரோமானியப் பேரரசின் அரசியலமைப்பைப் பின்பற்ற வேண்டுமென்றோ, ரோமானிய அரசை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டுமென்றோ சாக்சனியர் எண்ணவில்லை. எனவே அவரது அரசு, பிராங்கிய அரசைப் போலவே வளர்ந்ததெனினும் அதனைப்போல விரைவில் அதிகாரப் பெருக்கு உடையதாக இல்லை. இரு அரச பதவிகளின் வரலாற்றிலும் ஒற்றுமைகளைக் காட்டமுடியும். பதினோராம் நூற்றாண்டில் சாக்சனிய அரசபதவி முடிவடைந்த போதும், ஒன்பதாம் நூற்றாண்டைய பிராங்கிய அரச பதவியின் வளர்ச்சியை விடப் பலதலைமுறைகளுக்குப் பிந்தியே இருந்தது. சாக்சனிய அரச அதிகாரங்களுக்கு இருந்த வரம்புகள் பின்னர் விவரித்துக் கூறப்படும்; எனினும் சில வழக்கங்கள் அதன்

அதிகாரத்துக்கு வரம்பாக இருந்தன என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. " மக்களுடைய வழக்கங்களுக்கு உட்பட்டே அரசரது அதிகாரம் இருந்தது ; தனி மனிதரது பரம்பரை உடைமைகளைச் சட்டப்படியாக அல்லாமல் அரசர் யாதொன்றும் செய்ய முடியாது ; ஒவ்வொரு தனிமனிதனும் தனது வழக்கைத் தன்னை ஒத்த மற்றவர் முன்னிலையில் கூறித் தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமையைச் சட்டம் ஒப்புக்கொண்டது ; தமது குடிமக்களது உடன்பாடு இல்லாமல் அரசர் யாதொரு சட்டமும் செய்ய முடியாது ; தமது தனி அறிவுரைக் குழு (பிரிவி கௌன்சில் Privy Council) விலுள்ள மூதறிஞரும், அறிவுரையாளரும் கூறிய வண்ணமே அரசர் ஆளுவது வழக்கம் என்று கூறப்படும் கருத்தும் இங்குக்கவனிக்கத்தக்கது. அரசஅதிகாரத்துக்கு உள்ள இந்தவரம்பு சட்டத்தினால் ஏற்பட்டதன்று ; பழக்கத்தினாலும், பொதுவான ஏற்பாட்டினாலும், அரசருக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிய விளக்கங்களினாலும் அமைந்தது இத் தடை. வலிமிக்க அரசர் இவ்வரம்புகளை மீறி ஒரு கேடான நிலைக்கு அருகிலும் வரலாம் ; வலியற்றவரோ இதில் யாதொரு தன்முயற்சியும் அற்று இருக்கலாம்.

ஒருவகையில் பார்க்கப்போனால் சாக்சன் அரசபதவி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆயினும் இக்காலத்தவருக்குப் பழக்கமான தேர்தல்முறை அக்காலத்து இல்லை. பூர்விக ஜெர்மனிய அரசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதை, மேற்கு ரோமனியப் பேரரசு மறைந்ததும் தோன்றிய டியூட்டானிய நாடுகள் எல்லாம் தமது அமைப்புக்கள் மூலமாகக் காட்டுகின்றன. இவ்வறிகுறிகள் பிரெஞ்சு ஆங்கில நாடுகளில் வெகுகாலம்வரை இருந்தன. ஜெர்மன் அரசில் இம்முறை இருந்தது என்பது இன்னும் தெளிவாகத் தெரிகிறது. ஆயினும், இவற்றுள் ஒன்றிலேனும், " தேர்ந்தெடுக்கப்பட்ட அரசரது ஆட்சி " என்பதாக ஒன்று இக்கால வழக்கறிஞர்கள் ஒப்புக்கொள்ளும் பொருளிலோ, 18-ஆம் நூற்றாண்டைய போலந்தில் காணப்பட்டது போலவோ, இருந்ததில்லை. சாக்சனிய நாடான இங்கிலாந்தில் அரசபதவி ஒரே குடும்பத்தினருள் பரம்பரை உரிமையாக இருந்தது. போரில் வெற்றி, வெளியார் படையெடுப்பு அச்சம் ஆகியவற்றால்தான் இம்முறை மாற்றப்பட்டது. அப்போது பரம்பரை உரிமை ஒழுங்கினின்றும் விலகி, அரசகுடும்பத்துள்ளேயே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தேர்வு முறையும் நெடுங்காலமாகப் பழக்கத்திலிருந்து வந்த உரிமையல்ல. எவராலும் தடுக்கமுடியாத அதிகாரமும், சமுதாயத்தைக் கட்டுப்படுத்தவல்ல செல்வாக்கும் உடைய சிலரைக்கொண்ட ஒரு குழு தாமாகவே கூடித் தகுதியினப்படையில்

மட்டுமன்றி ஒருவரைத் தேர்ந்தெடுப்பது என்பது, பரம்பரை உரிமையினின்று மிகவும் விலகி அரசகுடும்பத்திலேயே ஒரு புதியவரை அரசராக ஒப்புக்கொள்ளும் போதுதான் நடைபெற்றது. எதிர்பாராத சூழ்நிலையில் நடைபெறும் இம்முறைகள் எந்த நாட்டிலும் எந்த அரசியலமைப்பிலும் காணப்படும். இதில் நாம் காணவேண்டியது தேர்ந்தெடுத்தல் என்பதல்ல; அதில் பங்கு கொண்டவர் அதற்குத் தமக்கு உரிமை உண்டு எனக் கருதியமையே யாகும். இதே நிலைமைதான் ஆங்கிலோ சாக்சன் வரலாற்றில் ஆங்காங்கே நிகழ்ந்த ஆட்சி நீக்கத்திலும் (டிபோசிசன், Deposition) காணப்படும். ஆட்சி நீக்கமென்பது யாவரும் எண்ணிச் செய்ய வேண்டிய தீவிரமான செயலெனக் கருதப்பட்டது.

ஆங்கிலோ-சாக்சன் சமய நிலையமானது (திருச்சபை, சர்ச், Church) தொடக்கத்தில், அரசருடைய ஆட்சியின் வளர்ச்சியில் ஈடுபாடுடையதாயிருந்தது. டியூட்டானியர் நாட்டைக் கைப்பற்றி அதில் நிலையாகக் குடியேறத் தொடங்கிய ஒரு நூற்றாண்டளவில் ரோமானியக் கிறித்தவ சமயம் அவரிடையே பரவியது. அது இங்கிலாந்தில் பரவியது அரசரது ஆதரவினாலேயே; அதற்கு மாறாக, சமயநிலையமானது பல ஐரோப்பிய நாடுகளின் தோற்றத்தில் நடந்ததைப் போல, இங்கிலாந்திலும் அரசரது உறுதியான நடு அரசாங்கமும், நாடு இணைப்பும் ஏற்படுவதை இயன்றவரை ஆதரித்தது. ஆங்கிலோ-சாக்சனியர் தமது அமைப்பைப் பொறுத்தவரையில், பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்தபோதிலும் அவர்களையெல்லாம் ஒரே மக்களாகவே சமயநிலையம் கருதிற்று. அரசரது முடிசூட்டு விழாவில், கிறித்தவப் பழைய ஏற்பாட்டு விதிகளின்படி, அரசருக்குப் புனித எண்ணெயிட்டும், அவரை முடிசூட்டுவிழா உறுதிமொழி (Coronation Oath) எடுக்கச் செய்தும் சமயநிலையம் பங்கெடுத்துக்கொண்டது. பத்தாம் நூற்றாண்டிறுதியில் முடிசூட்டுவிழா உறுதிமொழி பின்வருமாறு அமைந்திருந்தது: மூவிறையின் மீதாக (Holy Trinity-ஹோலி டிரினிட்டி) கிறித்தவ மக்களாகிய எனது குடிமக்களுக்கு நான் மூன்று வாக்குறுதிகளை அளிக்கிறேன். முதலாவதாகக் கடவுளது திருக்கோயிலும் எனது நாட்டிலுள்ள எல்லாக் கிறித்தவ மக்களும் அமைதியாக எனது ஆட்சியில் இணைந்திருப்பார்கள். இரண்டாவதாக எல்லா நிலையிலுள்ள மக்களையும் கொள்ளை, மறநெறி இவற்றினின்றும் காப்பாற்றுகிறேன்; நடுநிலைமையும் இரக்கமும் உள்ள கடவுள் நம்மையெல்லாம் பொறுத்தருளும் வகையில், அறநெறியும், இரக்கமும் பொருந்த நான் முறை செய்கிறேன்," என்பதாகும். ஆங்கில அரசர்கள் எடுத்துக்கொண்ட முடிசூட்டு

விழா உறுதிமொழி; நார்மானிய வெற்றிக்குப் பிறகும் இருநூறு ஆண்டுகளுக்கு இதே முறையில் இருந்தது.

நாட்டின் பொது ஆட்சியில் அரசரோடு நெருங்கிய தொடர்புடையது, பெயர்பெற்ற இலெளகிகரும் (Lay-லே) சமயகுரவரும் (கிளெரிக்கல்-Clerical) அடங்கிய ஒரு அவையாகும். இதை ஆங்கிலோ-சாக்சனியர் மூதறிஞர் அவை (விட்டனேஜ்மோட்-Witanagemot) அல்லது அறிஞர் அவை என்று அழைத்தனர். இந்தப் பெயரே அதன் அமைப்பின் விதியை ஐயமற விளக்குகிறது. அதன் உறுப்பினர் பதவி ஓர் அலுவலன்று; அது அரசியலமைப்பின் பாற்பட்டதாகவும் சொல்ல இயலாது; ஏனெனில் அதில் கலந்து கொள்ள எல்லா அதிகாரிகளுக்கும், தனி மனிதருக்கும் உரிமை கிடையாது. அது வகையாட்களடங்கிய (Representative) அவை அல்ல; அதன் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் அல்லர். அதன் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் யாவர் வரவேண்டுமென்பதை அரசர் தீர்மானித்தாரென்றே நாம் சொல்லலாம். ஆயினும் அவரும் யாதொரு வரம்புமில்லாமல் தீர்மானிக்கவும் இல்லை. அதாவது அதில் கலந்துகொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத சில அலுவலாளரும், அதிமேற்றிராணியர்களும் (Archbishops), எர்ல் கோமகன்களும் (Earls), ஆட்சியோடு நெருங்கிய தொடர்புடையவரும், அரசரது மனைஅலுவலாளரும் இருந்தனர். இவர்களைத் தவிர நாட்டில் பெருமை வாய்ந்தவரும், அரசருக்கு இன்றியமையாத உதவியை அளிக்க வல்லவரும், பகைமையெனில் அஞ்சத்தக்கவரும், இலெளகிகருள்ளும், சமயகுரவருள்ளும் ஒருசிலர் இக்கூட்டத்தில் இருந்தனர். கூட்ட நடவடிக்கைக்கும், கூடுமிடத்திற்கும் ஏற்ப வரத்தக்கவர் இவர் என அரசரால் தீர்மானிக்கப்பட்டவரும் இருந்தனர். எனவே இவ்வறிஞர் அவையானது தான் செய்த எந்த நடவடிக்கையிலும் நாட்டவரின் எண்ணத்தையேஎதிரொலித்தது என்று நாம் கூற இயலாது. அதில் கலந்து கொண்டவரது கருத்தையன்றி நாட்டில் வேறெவரது கருத்துக்கும் அதில் இடமில்லை; அவர்களுடைய கருத்தைத்தான் அது தெரிவித்தது. இப்பொருளில்தான் அதன் கருத்து நாட்டின் கருத்தாக அமைந்திருந்தது.

இக்காலத்து, ஆட்சியின் பணிகள் அனைத்தும் பிரிந்து, வரையறுக்கப்பட்டுத் தனித்தனியான நிலையங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும் என நாம் எண்ணுவதைப் போலல்லாமல், பண்டைய பல அரசியல் நிறுவனங்களைப்போல, இவ்வறிஞர் அவையும் தான் செய்யும் அளவிலும் செயலிலும் பாகுபாடு இல்லாமல், பல்வேறு வகையான எல்லாப் பணிகளையும் தானே செய்யும் பழக்கமுடையதாயிருந்தது. ஒரு சமயத்தில் இந்த அவையே உயர்தரச் சட்ட

மன்றமாகவும், உயர்தர நீதி மன்றமாகவும் நாட்டில் அமைந்தது. இவ்வாறு நாம் கூறுகையில், ஆங்கிலோ-சாக்சனியர், இந்தச் சொற்களை நாம் இப்போது வழங்கும் பொருள்களில் வழங்கினரென எண்ணுதல் கூடாது. சட்டமன்றம், நீதிமன்றம் என்ற சொற்களுக்குப் பொருளில் பாகுபாடு அக்காலத்தில் இல்லாதிருந்தமையால், ஒரே அவையே இவ்விரண்டாகவும் இருந்தது. நீதி ஆட்சியே, சட்டமியற்றுதலைவிடத் தெளிவாக வரையறுக்கப்பட்டது. நடைமுறையில் வழக்கத்தை ஒட்டியே எல்லாச் சட்டமும் இருந்தது. ஒரோர் சமயங்களில் புதியதாகச் சட்டம் செய்யப்பட்டபோதிலும், சட்டமியற்றல் என்பது முற்றிலும் புதியதான சட்டத்தைச் செய்தல் என்பதன்று; ஏற்கெனவே வழக்கத்திலுள்ள சட்டத்தை மாற்றுவதையோ, விளக்குவதையோதான் அச்சொல் குறித்தது. இச்சொல்லுக்கு இதுவே பொருளாயின், வழக்கத்திலுள்ள ஒரு சட்டத்தைக் குறிப்பிட்ட ஒரு நிலைமைக்குப் பொருந்துமாறு விளக்கம் செய்து நீதிமுறை செய்யும் நீதி மன்றமே நாட்டின் சட்டமன்றமாகவும் இருக்க வேண்டியதாயிற்று. அரசர் இல்லாதபோதும், வலியற்ற அரசர் இருக்கும் போதும், தனித்துத் தாமே தீர்மானம் செய்யும் உரிமையுடைய இக்கால அமைச்சரவையைப் போல இது அல்லவாயினும், இந்த அறிஞர் அவை அரசருக்கு ஆட்சிக்கொள்கை, செயல்முறைகளைப் பற்றி அறிவுரை சொல்லும் அவையாகவும் இருந்தது. அரசர் நிலம் வழங்கினாலும், வேறொரு அரசரோடு உடன்படிக்கை செய்தாலும், புதிய சட்டத்தை வெளியிட்டாலும், இவற்றுக்கெல்லாம் நாட்டை ஆளுபவரைப்போல இந்த அறிஞர் அவையும் தனது உடன்பாட்டையும் இசைவையும் கொடுத்து, அரசரது செயலைச் சட்டமாக்கியது. சமயத் தொடர்பான வேலைகளும், அரசியல் வேலைகளைப் போலவே இவ்வவையின் உடன்பாட்டுக்குட்பட்டிருந்தன. ஏனெனில் சாக்சனியர் காலத்தில் திருச்சபைக்குச் சட்டம், நெறிமுறை ஆகியவற்றில் தனித்த உரிமை இல்லை.

டாசிட்டஸ் (Tacitus) பண்டைய ஜெர்மனியரது கூட்ட அவைகளைப்பற்றிக் குறிப்பிடுகையில் அவற்றுள் ஒருவகையான அவைகள் இருந்தனவென்று கூறுகிறார்; குடும்பத் தலைவர்களடங்கிய ஒரு சிறிய குழு அலுவல்களைத் தாமாகவே தீர்மானித்தது; பெரிய அலுவல்களையெல்லாம் ஆயத்தமாக, எல்லாக்குடிமக்களுமடங்கிய பெரிய அவையின் தீர்மானத்துக்காக இச்சிறிய அவை வகுத்துக் கொடுத்தது. குடும்பத்தலைவர்கள், அலுவல்களைப் பெரிய அவையிடம் கொடுத்து யாவரும் பின்பற்ற வேண்டிய முறைகளையும் அதனிடம் எடுத்துக் கூறியிருப்பார்கள்

---

1. பேரவை.

போலும். அவ்வாசிரியர் கூறுவதிலிருந்து, சிறிய அவையினர் தாம் முன்பு செய்த முடிவையே பேரவையினரிடம் காட்டினரெனவும், பேரவையினருக்கு அதை ஒப்பவோ, மறுக்கவோ மட்டுமே உரிமை இருந்ததெனவும் தெரிகிறது. பிற்காலத்திய டியூட்டானிய நாடுகளில் சிதைந்த சட்டமெனத்தக்க சுவடுகளிருப்பின், அவற்றுக்கு இந்த ஒன்றுதான் வேலையாக இருந்தது. பேரவையானது, பெரியவரடங்கிய அறிவுரைக் குழுவின் முடிவுகளை ஒப்புக் கொண்டது, மறுத்ததில்லை. இத்தகைய மன்றங்களின் மிக மெல்லிய சுவடுகள் பழைய சாக்சன், பிராங்கிய நாடுகளில் காணப்படுகின்றன. இந்நாடுகளில், பொதுமக்கள் கூட்டம் படைகளைத் திரட்டுகையிலும், முடிசூட்டுவிழா நடைபெறுகையிலும் கூடிற்று; ஆனால் இதற்குத் தனித்து யாதொரு முடிவும் செய்வதற்கும் சட்டம் இயற்றுதற்கும் தக்க அளவில் நாட்டில் செல்வாக்கு இருந்ததெனக் கூறுவதற்கு நமக்கு யாதொரு சான்றும் கிடைக்கவில்லை.

பிராங்கியர் நாட்டில் நடு ஆட்சியில், எல்லாத் தலைவருமடங்கிய பேரவையை ஒட்டி ஒரு சிறிய அறிவுரை முறை மன்றம் (கௌன்சில் கோர்ட்டு, Council Court) தோன்றியது ; பேரவை கூடாத இடைவெளிக் காலத்தில் இது அப்பேரவையின் வேலைகளைச் செய்தது. இவ்வறிவுரை மன்றத்தில் அரசரது அரண்மனை அலுவலரும், அவர்கள் தலைவரும், சிற்சில வேலைகளில் அரசரது உடனிருப்பவரும் இருந்தனர். கரோலிஞ்சியரது ஆட்சிக் காலத்தில் அரசரது அவைக்களம் செய்யவேண்டிய முறைத் தீர்ப்புக்களையெல்லாம் இவ்வறிவுரை முறைமன்றமே செய்தது. நார்மானியரது படையெடுப்புக்கு முன் இங்கிலாந்தில் இத்தகைய மன்றம் இருந்ததென்பதற்குத் தெளிவான முறையில் ஆதாரம் (சுவடு) எதுவும் இல்லை. உள்நாட்டில் சாதாரண முறை மன்றங்களைப் போன்று, அரசரது ஆணையால் தோற்றுவிக்கப்பட்ட தனி முறை மன்றங்களும் இல்லை. மூதறிஞர் அவையினது அதிகாரத்துக்கும், கோட்ட முறை மன்றத்தின் அதிகாரத்துக்கும் எல்லை வகுக்கப்படவில்லை. மூதறிஞர் அவையில் ஒரு சமயம் தீர்க்கப்பட்ட வழக்குகளைப் பெரிதும் ஒத்திருக்கிற வழக்குகளும் கோட்ட முறை மன்றத்தில் தீர்க்கப்பட்டன.

நார்மானியரது படையெடுப்புக்குமுன், இங்கிலாந்தில் நடு அரசுக்கும், உள்நாட்டு ஆட்சிகளுக்கும் தொடர்பை ஏற்படுத்தி வைத்தது செரீப் (கொத்தவால்-Sheriff) என்ற அலுவல் நிலையமாகும். இந்நிலையம் பிற்காலத்தில் மிகவும் சிறப்புடையதாக இருந்தது. இது இன்னவகையில்தான் தோன்றியது எனத் திட்ட

மாக வரையறை செய்து கூற இயலாது. அது தொடக்க நிலையில் அரசரது பண வரும்படிகளையும், அரசரது நிலங்களினின்றும், உள்நாட்டுப் பகுதிகளிலிருந்தும் வரவேண்டிய வரும்படிகளையும் கண்காணிக்கும் அலுவலாளர் என்ற நிலையில் இருந்திருக்கலாம். சாக்சனிய வரலாற்றின் கடைசி நூற்றாண்டில் அதைப்பற்றிய செய்திகளை நாம் அறிகிறபோது நாட்டின் அரசாட்சியில் அது ஒரு முக்கியமல்லாத அலுவலாக இருந்தது என்பதும், ஆனால் பிறகு சிறிது சிறிதாக முக்கியமடைந்து வந்தது என்பதும் தெரிய வருகின்றன. பிற்காலத்தில் அரசரது அதிகாரத்தில் வளர்ச்சியும், அவரது ஆட்சியின் அமைப்பில் வளர்ச்சியும் ஏற்பட்டதனாலும், கோட்டத்தலைவர் (ஆல்டர்மன் - Alderman) என்ற ஒரு வகை ஆங்கிலோ-சாக்சன் அலுவலரது அலுவல்கள் சில கொத்த வாலுக்கு மாற்றப்பட்டதனாலும், கொத்தவாலின் அதிகாரத் திலும் வளர்ச்சி ஏற்பட்டது. நாடு அளவிலும், மக்கள் எண்ணிக்கையிலும், தொழிலிலும் வளர்ச்சியடைய, அரசர் தாமே காக்கவேண்டிய நலன்களும், பொறுப்புக்களும் மிகுதி யாகிச் சிக்கல் நிறைந்து வந்தன. இதனால் சிறிய நிலப்பிரிவில் அரசரது நலன்களைக் கண்காணித்து அரசரின் வகையர்ளாக இருந்த அலுவலருக்குப் பெரிய நிலப்பிரிவில் அதை நலன்களைக் காக்கும் பெரிய பொறுப்புக்கள் வந்தன. ஆட்சிக்குட்பட்ட நாடு விரிவடைந்ததனாலேயே, கொத்தவால் கோட்டத்தில் அரசரது கண்காணிப்பாளர் என்ற நிலையை அடைந்தார்.

இவ்வரசரத அலுவலர் தோன்றிய வரலாற்றினின்றே; நார் மானியர் வெற்றிக் காலத்துக்கு முன்னிருந்த அவரது வேலைகளின் தன்மை நமக்குத் தெரிய வருகிறது. இந்தக் காலத்தில் தமது கோட்டத்தில் அரசருக்கு வரவேண்டிய வரிகளைப் பிற்காலத்தில் செய்தது போல, வாங்க வேண்டியது அவரது பெரும் பொறுப்பு என்பது தெளிவாகத் தெரிகிறது. அரசருக்குரிய நிலங்களை நல்ல குத்தகைக்கு விட்டு, பயிரிடும் கருவிகளை சேர்த்து வைத்து பயிரிடச் செய்து, உரிய காலத்தே அவற்றினின்று வரும்படிகளை வாங்கி வைப்பது அவரது வேலையின் பெரும்பகுதியாகும். உள்நாட்டுப் பகுதிகளில் நடைபெறும் நீதிஆட்சியில் அரசருக்குச் சேரவேண்டிய தண்டப் பணங்களையும் (Fines), முறைமன்றக் கட்டணங்களை யும் (Judicial fees) அவர் வாங்கி அரசருக்குக் கொடுத்தார். இவ் விரண்டு மூலங்களினின்றும் கிடைக்கும் வரும்படிகளும், நார் மானியர் வருகைக்குப் பின்னும் வாங்கப்பட்டுத் தமது கோட்ட ஆண்டுக் குத்தகைப் பணம் (county ferm or annual rent) என்பதாகக் கொத்தவாலினால் அரசருக்குக் கொடுக்கப்பட்டன. சாக்சனியர் ஆட்சியில் கொத்தவால் அரசருக்கு இவ்விரண்டு

மூலங்களினின்றும் கொடுக்கவேண்டிய பணம் இவ்வளவென முன் பாகவே உறுதி செய்யப்பட்டதென்பதற்குச் சில சான்றுகள் கிடைக்கின்றன. ஆயினும் இம்முறை நெடுங்காலம் இருந்தது எனக் கூறமுடியாது. கொத்தவால் தனது பெரும் அலுவல்களி லெல்லாம், கோட்டத்தலைவரின் (ஆல்டர்மன்) வகையாளாக இருந்தாரேயன்றி அரசரின் வகையாளாக இல்லையென்பது உண்மை; எனினும், உள்நாட்டு ஆட்சியின் அதிகாரங்களும் பொறுப்புக்களும், கோட்டத் தலைவரிடமிருந்து அரசருடைய நேரான கட்டுப்பாட்டில் உள்ள கொத்தவாலுக்கு மாறின என்பது உண்மை. இவ்வாறு மேற்றிராணியார் தலைமை முறை வராக இல்லாமல், கொத்தவால் தலைமை தாங்கும் அலுவலராகக் கோட்ட மன்றத்தில் பணியாற்றினர். தனக்குக் கீழ்ப்பட்ட சிறிய முறை மன்றங்களில்கூடக் குற்றவாளிகளைச் சிறைப்பிடித்தல், அவர் களைத் தண்டித்தல், கோட்டம் முழுவதிலும் அரசரது ஆணைகளை வெளிப்படுத்திச் செயலாற்றுதல் ஆகியவற்றில் எல்லாம் அவ ருக்குப் பொறுப்பு உண்டாயிற்று. இம் மாதிரியே கோட்டத் தலைவர் செய்துவந்த படைத்துறை அலுவல்களாகிய உள்ளூர்ப் படைகளைத் திரட்டுதல், அவற்றை நடத்துதல் முதலியவற்றையும் கொத்தவால் ஏற்றுக் கொண்டார்.

கொத்தவாலின் அலுவல் நிலையம் முழுவளர்ச்சியின்றி உருவாகிக் கொண்டிருந்தாலும். நார்மானிய அரசர்களால் அது மாற்றப்படுமுன் ஆட்சியமைப்பில் அது இருந்த நிலைமை தெளி வாக அறியக்கூடியதாக இருக்கிறது. கொத்தவால் அரசரால் அமர்த்தப்பட்டு அவரது கட்டுப்பாட்டுக் கடங்கி இருந்தவர். உள்நாட்டு ஆட்சி அலுவலாக இருக்கும் அந்த நிலையை உள்நாட் டில் அதிகாரம் நிறைந்த தனி நிலையமாக ஆக்கவேண்டுமென்று இடைக்காலத்தில் பலரும் எண்ணியது போல இவரும் எண்ண வில்லை. இவ்வலுவலிலிருந்து ஒரே தன்மையான பல அலுவல்கள் பிற்காலத்தில் கிளைத்தெழுந்தன. இவ்வலுவலில் நிதி, ஆட்சிமுறை, முறைமை செய்தல், படை முதலிய துறைகள் பற்றிய வேலைகளெல் லாம் அடங்கும். எளியமுறையில் பாகுபாடு பெறாத அரசாங்கம் இருந்த அந்நாளில் கொத்தவாலின் அலுவல் நிலை அதிகாரத்தைக் குவிப்பதற்கு ஒரு சிறந்த கருவியாய் இருந்தது. கொத்தவால் உள்ளூரில் தலையாய ஆள்; உள்ளூரிலுள்ள மக்களையும், செயல்களை யும் நன்கு அறிந்தவர், ஒவ்வொரு நாள் வாழ்க்கையிலும் நடை பெறுவனவற்றைக் கண்காணித்து, நடு அரசாங்கத்தின் நலன்களைப் பொறுப்புடன் காத்து, அதன் ஆணைக்கு ஒப்ப நடந்து வந்தார். நாட்டின் உட்பிரிவு ஒவ்வொன்றையும் அரசரோடு இணைப்பது இவ்வலுவலரே. இவ்வகையில் பார்க்கையில் பிற்கால நார்மானிய

நடு அரசாங்கத்திற்கு சாக்சனியர் விட்டுச் சென்ற சிறப்பான அமைப்பு கொத்தவாலென்னும் இவ்வலுவலமைப்பே.

மேற் கூறியவைகளேயன்றி சாக்சனியரது நடு அரசைப் பற்றி வேருென்றும் சொல்ல இயலவில்லே. இக்காலப் பொருளில் வழங்கப் படும் வரிமுறை என்பதாக ஒன்றும் அக்காலத்தில் இல்லே. பதிஞேராம் நூற்ருண்டின் தொடக்கத்தில் டேனியருக்குக் கொடுத்து அமைதியாக்குவதற்காகப் பொதுப் பணம் திரட்டப்பட்டது. இது காலவெளி விட்டு வாங்கப்பட்டது; இதற்கு டேன்கெல்டு எனப் பெயர். இது நாட்டின் வரிமுறையாக ஆவதற்கு ஒரு வாய்ப்பு இருந்தாலும், 1066–ஆம் ஆண்டில் அது அவ்வாறு ஆகவில்லே. உள் நாட்டு ஆட்சித் தலேவர் தமது இல்லத்தவரைத் தாங்கியது போல அரசாங்கத்தின் செலவுகளும், அரசரது நிலவரும்படிகளினின்றும் முறைமன்ற உரிமைக் கட்டணங்களினின்றும் சரிக்கட்டப்பட்டது. நாடு முழுவதுக்குமாக வரிசைப்படி அமைக்கப்பட்ட முறைமன்றங் களுள் எல்லாவற்றிற்கும் மேலாகக் கிழ்மன்றங்களின் தவருன திர்ப்புக்களேத் திருத்தக்கூடிய ஓர் உயர் முறைமன்றம் அப்போது இல்லே. எவருடைய வழக்கையேனும் உள்நாட்டு முறைமன்றங்கள் ஆய்வு செய்யத் தவறிஞல், மூதறிஞர் மன்றம் (Witanagemot) அவ்வழக்கு ஆயப்படுமாறு பார்த்துக் கொள்ளலாம்; ஆனல் ஒரு முறை திர்க்கப்பட்ட வழக்கை மறுபடியும் ஆய்வு செய்வதோ, அல்லது நாம் இப்பொழுது செய்வது போல ஒரு மன்றத்திலிருந்து இன்னெரு மன்றத்திற்கு ஒரு வழக்கில் முறை செய்யவோ இயலாது. சாக்சனியர் ஆட்சி முறையில் வரிசைப்படியான முறை மன்ற அமைப்பு என்பதே கிடையாது. நமக்கு வியப்பைத் தரு கின்ற வண்ணம்; ஆய்வுத்திறனில் ஒன்றை ஒன்று ஒத்து இருப்ப தாகவும், ஒன்றின் ஆய்வுத்திறன் மற்ருென்றினதில் அடங்கும்படி யாகவும், பல முறை மன்றங்கள் இருந்தன. நாட்டின் சட்ட அமைப்பு இவ்வாறேதான் இருந்தது. அப்பொழுது நாட்டுக்குப் பொதுவான சட்டம் என்பதாக ஒன்றும் இல்லே; அது அப்பொழுது உருவாகும் தொடக்க நிலேயில் இருந்தது. டியூட்டானிய மக்கள் கூட்டத்தாரின் அரசு முதலில் நாட்டின் பல பகுதிகளுக்கும் தனித் தனியாக இருந்ததைப் போல அவர்களது சட்டமுறைகளும் நாட் டின் பல்வேறு பகுதிகளுக்கும் வெவ்வேருக இருந்தன; சாக்சனிய ரது சட்டம் தெற்குப்பகுதியிலும், மெர்சியரது சட்டம் நாட்டின் நடுமேற்குப் பகுதியிலும், டேனியரது சட்டம் வடகிழக்குப் பகுதி யிலுமாக இருந்தன. இவ்வாறு தோன்றிய உள்நாட்டு வழக்கங் களுக்கும் மேலாக, அரசர்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் நாட் டின் போதுச் சட்டமாக அமைவதற்கு நெடுங்காலம் ஆயிற்று.

எனவே உள்நாட்டு ஆட்சிமுறையில்தான், அளவில் பெரிய நிலையானதாகிய ஓர் அமைப்பைத் தங்கள் இனத்தவரின் எதிர் கால அரசியலமைப்பின் வளர்ச்சிக்காக ஆங்கிலோ-சாக்சனியர் ஏற்படுத்தினர். ஆங்கிலோ-சாக்சன் உள்நாட்டு ஆட்சியானது நாட்டின் உட்பிரிவுகளையும் நிலப்பிரிவுகளையும் ஒட்டியே அமைந் திருந்தது. இப்பிரிவு முறைகள் நமக்கு வியப்பூட்டுவன; ஏனெனில் இக்காலம் வரையில் அப்பிரிவு முறைகள் சிறு மாற்றமுமின்றி வழக்கத்தில் இருக்கின்றன; இம்முறைகள் பல அமெரிக்க மாகா ணங்களிலும் பழைய நிலையினின்றும் மாறாமல் கையாளப்படு கின்றன. சில நுண்ணிய பாகுபாடுகளையும், விலக்குகளையும் விடுத்து ஒரே தொடரில் அவர்கள் ஏற்படுத்திய ஆட்சிப் பிரிவைப் பின்வரு மாறு கூறலாம்: நாடு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; கோட்டங்களுக்கு நார்மானியர் காலத்தில் கவுண்ட்டிகள் எனப் பெயர் மாறியது; கோட்டங்கள் ஒவ்வொன்றும் நூறுகளாகப் பிரிக்கப்பட்டன; இந்த நூறு என்ற பெயர் பழங்காலத்தில் ஒரு எண்ணிக்கையை வைத்துக் கொடுக்கப்பட்டதாக இருக்கலாம்; நூறு என்பதற்கு மாறாக வடக்கிலும், வடகிழக்கிலும் டேனியர் வேப்பன்டேக் (Wapentake) என வழங்கியதைப்போல நாட்டின் பல்வேறிடங்களில் பல பெயர்கள் வழங்கின; நூறுகள் ஒவ்வொன் றும் பல பட்டணங்களாகப் பிரிக்கப்பட்டன. இந்த உட்பிரிவு களின் பழைய வரலாறுகள் நமக்குத் தெளிவாக இல்லை; அவற்றை இங்குக் கூறாமல் விட்டுவிடலாம். பதினோராம் நூற்றாண்டின் நடுவில் அவற்றின் அமைப்பும், நாட்டின் ஆட்சியில் அவற்றின் நிலையுமே இங்கு ஆய்தற்குரியவை.

அக்காலத்தில் அரசரது ஆட்சிக்குட்பட்ட இங்கிலாந்து முழுவதும் பல கோட்டங்களாகப் (ஷயர்-Shires) பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றுக்கெல்லாம் பொதுவான வரலாறு ஒன்றும் இல்லையெனத் தோன்றுகிறது. வடக்கிலுள்ளவை பெரியன வாகவும், அவ்வளவு நிலையாக அமைக்கப்படாதனவாகவும் இருந்தன ; அவைகளுக்கு இப்பொழுதுள்ள அளவு 1066-க்குப் பிறகு உள்ள காலம் வரையிலும் ஏற்படவில்லை. வெசக்சிலுள்ள கோட்டங்கள்தாம் நிலைத்தஅளவுடையன. அவைதாம் பண்டைக் குடிமக்கள் ஏற்படுத்திய பல நிலப்பிரிவுகளாகும். தென் கிழக்கில் கென்ட், சசக்சு, எசக்சு முதலியவை தொடக்கத்தில் பல பிரிவின ரால் ஏற்படுத்தப்பட்ட தனி நாடுகளாகும். சாக்சனிய வரலாற்றின் கடைசி நூற்றாண்டில் இவ்வுள் நாட்டுப் பிரிவுகள் விரைவாக மறைந்தன. நார்மானியர் ஏற்படுத்திய ஓரரசு முறையை மாற்றும் வகையில் இப்பிரிவுகள் நிலைக்கவில்லை.

சாக்சனியரது வரலாற்றுச் சான்றுகளையும், மேலே கூறியபடி சட்டமியற்றுதல், முறை செய்தல் ஆகிய வேலைகளுக்கு அக்காலத்திலுள்ள தொடர்பையும், நாம் பார்க்கும் பொழுது, உள் நாட்டில், கோட்டத்தின் ஆட்சியின் சிறப்பான வேலையாவது முறைசெய்தலே அல்லது வழக்குத் தீர்த்தலே என்பது தெரிகிறது. மூதறிஞர் அவைக்கு அடுத்தபடியாகக் கீழான முறை மன்றமாகவும், கோட்டத்திலுள்ள வழக்குகளைத் தீர்க்கும் மன்றமாகவும் இருப்பது கோட்ட முறைமன்றமே. (Shire court-ஷயர் கோர்ட்). இக்கோட்ட முறை மன்றமானது ஒரு பேரவை முறை மன்றமாக (an assembly court) அமைந்திருந்தது. இதனால் இம்மன்றம் அமைப்பில் பேரவையை ஒத்திருந்தது என்று பொருளில்லை; அது செயலாற்றிய முறை பேரவை முறையை ஒட்டியதாகும் என்பதே பொருள். முறைமன்றம் எவ்வாறு பேரவை முறையோடு இணைந்ததென்பதை அறியச் சான்று இல்லை. இம்முறை நார்மானியர் காலத்தும் இருந்ததாக நாம் ஊகிக்க முடிகிறது; எனவே, அக்காலத்திய இம்முறை மன்றத்தையே நாம் விரித்துக் கூறுதலே தகுதியாகும். வரலாற்றில் இம்முறையிலமைந்த மன்றமே சிறப்பாகக் கூறப்படுகிறது. மக்கள் கூடிய மன்றங்களினமைப்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மக்கள் பேரவையாக இம்முறைமன்றம் அமைந்திருந்தது. இவ்வவையில் கூடியவரில் மிகவும் தலையாயவர் அப் பங்கின் மேற்றிராணியார், ஆல்டர்மன் எனப்படும் மன்றத்தலைவர், கொத்தவால் ஆகியோர். சாக்சன் நாட்டில் அப்பொழுது சமய நிலையத்தவருக்கெனத் தனியான முறைமன்றங்கள் இல்லை; எனவே உள்நாட்டு முறைமன்றங்களே நாட்டின் சட்டங்களை விளக்கியதைப் போலச் சமயநிலையச் சட்டங்களையும் விளக்கின; எனவேதான் சமயநிலைய வழக்குகள் கோட்ட முறை மன்றத்தில் ஆயப்படுகையில் அங்குத் தலைமை அலுவலராக மேற்றிராணியாரும் இருந்தார். கோட்டமன்றத்தின் முறையான தலைவர் (ஆல்டர்மன் எனப்படுவர்) ஒருவர் உண்டு; அவர் கூட்டத்திற்கு வராவிடில், அவரது இடத்தைக் கொத்தவால் ஏற்றுக் கொண்டார். சாக்சன் ஆட்சியின் கடைசிக்காலத்தில் கோட்ட மன்றத் தலைவரின் பல சிறப்பான பணிகள் கொத்தவாலுக்கு மாறின. சில வரலாற்றாசிரியர்கள் கருதுவது போல இம்மன்றத்துக்கு இரண்டு அல்லது மூன்று தலைவர்கள் இருந்தனரெனக் கொள்ள இடமில்லை.

கோட்ட மன்றத்தலைவர் (ஆல்டர்மன்) என்ற அலுவல் எவ்வாறு தோன்றியதென்னும் வரலாறு தெளிவாக இல்லை. ஆனால் இது ஒரு அலுவல் என்ற நிலை நார்மானிய வெற்றிக்குப்பின்

மறைந்து விட்டது. எட்டாம் நூற்றுண்டிற்கும் பத்தாம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வலுவல் நிலையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தொடக்கத்தில் அது உள் நாட்டுப் பிரிவின் தலைமை என்ற நிலையில் இருந்தது; நடு அரசாங் கத்திற்கு எதிராக இல்லாமல், ஆயினும் நடு அரசை விட உள் நாட்டுப் பிரிவில் செல்வாக்கு மிக்கதாக இருந்தது. நடு அரசுக்கு அது ஏதேனும் மாறுபாடு காட்டினுல், அம்மாறுபாடு காலப் போக்கில் மறைந்து விட்டது. அரசரது அதிகாரம் பெருகவும், இவ்வலுவலும் அரசரது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. நடைமுறையில் இவ்வலுவலைப் பரம்பரை உரிமையில் கேட்ட வர்களை அரசர் அவ்வப்போது ஒப்புக்கொண்டாலும், அவர்களை ஒரோர் சமயங்களில்தான் அவரால் நீக்க முடியுமென்றுலும், அவ்வலுவலரை அரசரே அமர்த்தினுர். அமர்த்துதலிலும், நீக்கு தலிலும் அரசர் கொத்தவாலைக் கலக்காமல் செய்தாராகையால் இவ்வலுவல் தனித்துத் தோன்றிய ஒன்றுகும். கோட்ட மன்றத் தலைவர்தான் (ஆல்டர்மன்) இயல்பாகவே கோட்டத்து மக்களின் தலைவராகவும், அதனுடைய பேரவைத் தலைவராகவும், அவர்கள் திரட்டிய படைகளுக்குத் தலைவராகவும் முதலில் இருந்தார். பொதுவாக அரசரது ஆட்சிக்குட்படாத உள்ளூர் வேலைகள் யாவற்றையும் கோட்டமன்றத் தலைவர் செய்து வந்தார். மற்ற வேலைகள் எல்லாம் கொத்தவாலுக்களிக்கப் பட்டன. உள்ளூர் நீதி ஆட்சி முறையில் அவர் தலைமை அலுவலர் ஆகையால், முறை மன்றம் வாங்கும் தண்டப் பணத்திலும் கட்டணத்திலும் மூன்றில் ஒரு பங்கை அவர் அடைந்து வந்தார் ; இவ்வருவாயும், ஏதேனும் ஒரு ஊரின் பெயரை ஒட்டி அவரது அலுவலுக்கு இடப்பட்ட பெயரும் நார்மானியர் வெற்றிக்குப் பிறகும் நெடுங்காலம் தொடர்ந்து அவருக்கு இருந்தன ; எனவே 'எர்ல்' (Earl) எனப் பிற்காலத்தில் வழங்கப்பட்ட பெருமகன், ஆங்கிலோ-சாக்சன் காலத்திய கோட்ட மன்றத் தலைவர் அல்லது ஆல்டர்மன் என்ற ஓர் அலுவலரே யாவர். சாக்சனியர் ஆட்சியின் கடைசி நூற்றுண் டில் ஒரு பெரும் மாறுதல் இவ்வலுவலரது நிலையில் ஏற்பட்டது ; இதுவரையிருந்த பழைய நிலைமாறிப் புதிய நிலையை இவ்வலுவலர் அடைந்தார். அவரது அலுவலில் ஏற்பட்ட மாற்றம் பெயரிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திற்று ; கோட்ட மன்றத் தலைவர் அல்லது ஆல்டர்மன் என்பவர் 'எர்ல்' (பெருமகன்) என்றழைக் கப்பட்டார் ; இப்பெயர் மாற்றம், அப்பொழுது இங்கிலாந்தில் குடியேறிய டேனியரால் உண்டாக்கப்பட்டது ; இறைப்பற்று மிக்க எட்வர்டு அரசர்[1] காலத்தில், ஒரு கோட்டத்தையோ,

. Edward the confessor.

இரண்டு கோட்டங்களையோ, அதற்கு மேற்பட்டவற்றையோ ஆளும் அலுவலர் அல்லது தலைவர் உள்ளூரின் வகையாளாகக் கருதப்படுமளவுக்கு இப்பெருமகன் (எர்ல்) கருதப்படவில்லை. அவருடைய அலுவல்களும் தெள்ளிதாக வரையறுக்கப்படவில்லை; அவரது நிலையில் அவருக்கு மிக்க அதிகாரம் உண்டாயிற்று. இம் மாற்றம் சாக்சனியக் காலத்திய கோட்டமன்றத் தலைவர் (ஆல்டர்மன்), நார்மானியர் காலத்திய பெருமகனாக,(எர்ல்-earl) மாறியதைக் காட்டுகிறது. எனவே இப்புதிய நிலையில் அவருடைய அதிகாரம் அலுவலினால் ஏற்படாமல், தனது நிலைமை, மதிப்பு, செல்வம் ஆகியவற்றால் ஏற்பட்டது. இம்மாற்றம் தொடர்ந்து நடைபெற, கோட்டமன்றத் தலைவரின் பலவேலைகள் கொத்த வாலுக்கு மாற்றப்பட்டன; கொத்தவாலே கோட்டமன்றத் தலைவருக்கு மாறாக உள்ளூர்ப் படைகளை நடத்தியும், கோட்ட மன்றத்தில் தலைமை ஏற்றும் வேலை செய்தார்.

கோட்ட முறை மன்றத்தின் தலைவர் ஒரு முறைவர் அல்லர். அவர் மன்றத் தலைவர் என்ற ஒரே நிலையாளரே யாவர். தீர்ப்புக் கூறுதலைப் பேரவையே செய்தது; அல்லது இப்பொழுது நாம் குழு (Committee) என அழைக்கும் பேரவையின் ஒரு பகுதி அவ்வேலையைச் செய்தது. இவ்வழியில் அது முடிவுகளைச் செய்ததனால் கோட்ட மன்றத்தைப் பேரவை முறை மன்றம் (Assembly court) என நாம் அழைக்கலாம். இவ்வவையின் தீர்ப்பே முடிவானது என்பதில்லை. முற்காலத்தில் டியூட்டானியர் ஏற்படுத்திய முறை மன்றங்களின் செயல்களில் எல்லாம் தலைவருக்கு முடிவான தள்ளுரிமை (Veto) உண்டு. ஒரு வழக்கில் முறை மன்றத்தின் தீர்ப்பு என்பதாக அத்தலைவர் ஒப்புக்கொண்டு சொன்னாலல்லாமல் அது சட்டப்படி எவரையும் கட்டுப்படுத்தாது. சில சமயங்களில் இவ்வாறு வெளியிடப்பட்ட தீர்ப்புக்கள் சில ஆவணங்களிலும், வரலாற்றுக் குறிப்புக்களிலும், அவை முறை மன்றத் தலைவரின் தனிப்பட்ட தீர்ப்பைப் போலத் தோன்றும்படி எழுதப்பட்டுள்ளன. அவை அத்தலைவரின் கருத்தைத் தெரிவிப்பனவேயன்றி, மன்றத்தின் கருத்தைக் காட்டுவனவல்ல. இது இவ்வாறு இருக்காதென நாம் உறுதியாகச் சொல்லவும் முடியாது. சில சமயங்களில் விவரமாகக் காணப்படும் குறிப்புக்களிலிருந்து அவை தலைவரின் தனிக் கருத்தாகும் எனக் கூற முடியாத நிலையிலும் இருக்கிறோம். பேரவை தீர்மானம் செய்த விதத்தைப் பற்றியும் நாம் அறியக் கூடவில்லை. ஏதேனும் ஒரு வழியில் அது பெரும்பான்மையோரது கருத்தை அறிந்திருக்கலாம்; நமக்குக் கிடைக்கிற ஒரு சில முறை மன்றங்களைப் பற்றிய குறிப்புக்களிலிருந்து அது

தடையில்லாமல் எதனையும் ஆய்வு செய்ததெனவும் தீர்மானம் செய்யப்படு முன்னே அதனைத் தலைவரும் வேறு தலையாய சில உறுப்பினரும் தத்தம் செல்வாக்குக்கு ஏற்ப மாற்றினரெனவும் தெரிய வருகின்றன. ஒரு குழுவின் மூலம் தீர்ப்பளித்தல் என்பது அப்பொழுது அலுவல் துறையில் ஒரு முறையாகக் கொள்ளப் படாவிடினும், அது பழக்கத்தி லிருந்துவந்த ஒரு முறையாகும். ஒரு தடவை அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கெதிராக மேல் மன்றங் களுக்கு முறையிடுதல் இயலாது. தீர்ப்பை அளித்தவர்கள் மீது நட்டம் அல்லது இழப்புக்காக ஈடு கேட்டும்; அவர்கள் உறுதி மொழி செய்து தீர்ப்புக் கூறியிருப்பின் அவர்கள் பொய்யான உறுதிமொழி கூறினரெனவும் வழக்குத் தொடுக்கலாம்.

நூறு (Hundred) என்ற பிரிவின் முறை மன்றமும் கோட்ட முறை மன்றத்தையே அமைப்பில் பெரிதும் ஒத்திருந்தது. கோட்டத்தின் ஒரு பிரிவாகிய நூறு என்பதற்கு அது ஒரு முறை மன்றம் என்ற ஒரே வேறுபாட்டைத் தவிர வேறொரு வேறுபாடும் இல்லை. அதுவும் கோட்ட மன்றத்தைப் போலவே அமைக்கப் பட்டிருந்தது; அதுவும் தொடக்கத்தில் மக்களின் கூட்டத்தி லிருந்து (Folkmote) தோன்றியதாக இருக்கலாம்; அது சில அலுவல்களைச் செய்யும்போது அதற்குத் தலைவராக நூற்றின் தலைவரோ, நூற்றின் மன்றத் தலைவரோ (Hundred alderman) அல்லது கோட்டத்தின் தலைவரோ இருந்தார். அது கோட்ட மன்றத்தின் செயல் முறைகளையே பின்பற்றியது. அது வழக்கில் தீர்ப்பளிப்பதில் கோட்ட மன்றத்துடன் ஒத்த உரிமை கொண் டிருந்ததென்பதும், கோட்ட மன்றம் செயல்படுத்தி விளக்கம் தருகிற சட்டங்களையே அதுவும் கையாண்டதென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் ஒரு மன்றத்தில் கொண்டுவரப் படும் வழக்கையே இன்னொரு மன்றத்திலும் கொண்டு வரமுடியு மெனத் தெரிகிறது. எந்த முறை மன்றத்துக்கு வழக்குக் கொண்டு போகப்பட வேண்டுமென்பது, கட்சியாளரின், சிறப்பாக வழக்குத் தொடுப்பவரின் விருப்பத்தையும், வழக்கின் சிறப்பையும் பொறுத்தது. சிறு மதிப்புடையவரைப் பற்றிய வழக்கையோ அல்லது ஒரு சிறு வழக்கையோ கோட்ட முறை மன்றத்திற்குக் கட்சியாளர் எடுத்துவரமாட்டார்கள். இவ் விருவகை முறை மன்றங்களினும், நூற்றின் முறை மன்றமே வழக்காடுதற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. காவல், வாணிகம் பற்றிய வழக்குகளுக்கெல்லாம் அதுவே எளிதில் பழக்கத்திலுள்ள முறை மன்றமாகும்.

கோட்ட மன்றமானது சிற்சில வேளைகளில் நடு அரசினால் ஆட்சி பற்றிய அலுவல்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

அரசர்கள் கோட்ட அலுவலர் மூலம் கோட்ட மன்றத்துக்கு விடுத்த கடிதங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. சாக்சனியர் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றிருக்குமாயின், கோட்டப் பேரவையை அரசர் மேலும் இவ்வகையில் பயன்படுத்தியிருப்பார். உள் நாட்டுப் பிரிவில் அமைதியை நிலைநிறுத்துதல், குற்றவாளிகளைத் தண்டித்தல், தனியாட்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றைத் தவிர மற்றவற்றிற்கெல்லாம் நூற்றின் முறைமன்றமே பெரிதும் பயன்பட்டது. அதுதான் உண்மையில் பண்டைய இங்கிலாந்தின் காவலர் முறை மன்றம் (Police court) ஆக இருந்தது; ஏனெனில் ஆட்சியின் பொதுவான செயல் அப்போது காப்பு ஏற்படுத்துவது தான். பத்தாம் நூற்றுண்டின் கடைசியில் எட்கார் அரசரது ஆட்சியில் செய்யப்பட்ட ஒரு சட்டத்தின்படி, பிராங்கியர் நாட்டில் செய்யப்பட்டதைப் போல, திருடர்களைக் கண்டு பிடித்துச் சிறைப்படுத்துவதற்கு நூற்றின் முறை மன்றம் பொறுப்பாக்கப்பட்டது. அவ்வரசரது சட்டத்தின்படி ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தில் ஒரு பிணையாக வேறொரு ஆள் இருக்கவேண்டுமெனவும், அவர் மீது குற்றம் சாட்டப்பட்டால் அவரை முறை மன்றத்திற்குப் பிடித்துக் கொண்டு வரவும், அவரைத் தண்டனைக்குட்படுத்தவும், அவரது பிணையாள் பொறுப்பு ஏற்க வேண்டுமெனவும், ஒருவேளை அவர் தப்பியோடி விட்டால் அவருக்குரிய தண்டனையை அவரது பிணையாள் ஏற்க வேண்டுமெனவும் விதிகள் தோன்றின. இதே காலத்தில் பத்துப் பேர் பிணை (டைதிங்-Tithing) என்றொரு புதிய முறையும் தோன்றியது; இது நூற்றுப்பகுதியைவிடப் பட்டணப் பகுதியில் தான் தொடங்கிற்று. இம்முறைப்படி பத்து அல்லது பன்னிரண்டு ஆட்கள் ஒரு தலைவரின் கீழ்க் கூட்டமாக இருந்து குற்றவாளிகளைப் பிடிப்பதற்குக் கூட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். எனவே மேலே குறிப்பிட்ட தனியாள் பிணை (System of borh) முறையும், பிற்கூறப்பட்ட கூட்டுப் பொறுப்பாகிய பத்துப்பேர் பிணை முறையும் (Tithing system) சேர்ந்து பிற்காலத்தில் நார்மானியர் ஏற்படுத்திய நேரடி உறுதிமொழி முறைக்கு (Frank pledge) அடிப்படையாக அமைந்தன.

முற்காலத்திய செர்மனிய நாடுகளின் அரசியலமைப்பைப் பற்றி நமக்குக் கிடைக்கிற வரலாற்றில் காணப்படுகிற ஒரு முக்கிய மான நிலையத்தை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். ஏனெனில் அது ஆங்கிலோ-சாக்சன் குற்றச் சட்டம் வளர்ந்த அமைப்புக்கும். அரசரால் ஏற்படுத்தப்பட்ட அமைதி (King's peace) என்று பிற்காலத்தில் வழங்கப்பட்ட சட்டத்தின் வளர்ச்சிக்கும் அடிப் படையானதாகும். ஒரு குற்றம் அமைதியை அழிக்கும் செயலாகும்;

ஒரு சிறு குற்றம் நாட்டின் அமைதியை அல்லது கோட்டத்தின் அமைதியைக் குலைப்பதாகும்; அல்லது அது கோட்டத் தலைவருக்கு (Sheriff) எதிராகச் செய்யப்பட்ட குற்றமாகும்; ஆனால் அரசருக் கெதிராகவோ, அவரது உடைமையிலோ அவரது சுற்றுவட்டத் திலோ இழைக்கப்படும் குற்றம் கடுமையாக மிகுதியான முறையில் தண்டிக்கப் படுவதாகும். இத்தகைய அரசர் அமைதியைக் காக்கும் பொறுப்பை அரசர் கொத்தவாலின் மூலமாக நூற்றுக்கு அல்லது கோட்டத்திற்கு விரிவாக வெளியிட்டு அளித்ததுண்டு. இப் பொறுப்பை ஏற்றதனால் நாட்டின் பொது அமைதியைக் கடும் தண்டனைகளின் மூலம் மேற்கூறிய அலுவலர் காத்தனர். இவ் வாறு தனிப்பட்ட காப்பு முறையை அரசர் வாய்ச் சொல்லினாலோ எழுத்து மூலமாகவோ குறிப்பிட்ட ஆட்களுக்கும், பொதுவழி களுக்கும், விழாபோன்ற சிறப்பான நாட்களுக்கும் அளிப்பது வழக்கம். அரசரது அமைதியை அழிக்கும் குற்றவாளிகளைத் தண் டிப்பது அரசர் ஒருவருக்கே உரியது. அவை கொத்தவாலின் ஆட்சிக்குட்பட்ட சாதாரண முறை மன்றங்களில் தீர்க்கப் படா மல், அரசரது சில தனிப்பட்ட தண்டனைகளுக்குட்பட்ட குற்றங் களாகும்.

உள்நாட்டு ஆட்சிப் பிரிவாகப் பட்டணம்[1] என்பது நூறு, கோட்டம் ஆகியவற்றைவிடப் பழமையானதெனத் தெரிய வரு கிறது. நூற்றில் ஒரு பகுதியே அது எனினும், எல்லாப் பட்டணங் களும் அவ்வாறில்லை. சில பட்டணங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட நூறுகளின் பகுதிகளாக இருந்தன; சில பட்டணங்கள் ஒரு நூறி லும் சேராமல் தனித்து இருந்தன. ஆயினும் உள்நாட்டு ஆட்சி, முறைமை செலுத்தும் முறை ஆகியவற்றின் அமைப்பு வரிசையில் பட்டணம் நூறில் ஒரு பகுதி என்று கொள்ளுதல் சரியே. நூறை விடப் பட்டணத்தின் சமுதாயம் சிறியது; எனவே அதன் முறை யும், காவல் துறையில் அதற்குரிய பொறுப்பும் அளவில் சுருங்கிய வையே. பல பட்டணங்கள் பெயரளவிலும், நடை முறையிலும் நூறின் பகுதிகளாக இருந்தன; நார்மானிய சாக்சன் காலங்களில் அவை ஒவ்வொன்றும் நூறு ஆட்சி அமைப்பின் ஓர் உறுப்பாக இருந்தது. முதலில் குடியேறிய சாக்சனியரிடையே தனித்த சிற்றூர்ச் சமுதாயம் இருந்தது; பிற்காலத்தில் அதனின்றே பட் டணம் தோன்றிற்று. இங்கிலாந்தில் டார்ப்[2] எனப்படும் சிற்றூர் வகைகள் நூறோடு தொடர்புடைய பட்டணங்களாக இருப்பதைப் போல மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் காணப்படுகின்றன. பட்டணத்திற்கு ஒரு சிறிய முறைமன்றம் இருந்ததாக ஆசிரியர் கள் ஒருமித்து எண்ணவில்லை; ஆயினும் சமுதாயத்தினரின்

1. Towns 2. Dorf.

தொடர்புகளை ஒழுங்குபடுத்த வேண்டியிருந்த தென்பதையும் அங்குப் பண்ணை முறைமன்றம் பிற்காலத்தில் செய்த வேலைகளின் தன்மையையும், நாம் நோக்குகையில், அங்கு ஒரு முறைமன்றம் செயலாற்றியே இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. நார்மானிய வெற்றிக்குப் பிந்திய நாளில் பண்ணையாட்சி அமைப்பில் பட்டணம் கலந்து விட்டது. அப்பொழுது பண்ணை முறைமன்றமே பட்டண முறைமன்றத்தின் வேலைகளைத் தொடர்ந்து செய்தது. அது ஆய்ந்த வழக்குகள் நாடு முழுவதையும் பற்றுமளவுக்குச் சிறந்தவை அல்ல; பயிர்த் தொழிலை ஒழுங்குபடுத்தல், கால்நடைகளைக் கண்காணித்தால், பட்டண எல்லைகளுக்குட்பட்ட நில எல்லைகளையும் உரிமைகளையும் பற்றிய வழக்குக்களைத் தீர்த்தல், சிறு குற்றங்களையும், காவல்துறைக் குற்றங்களையும் தீர்த்தல் ஆகியவற்றிலேயே அம்மன்றம் ஈடுபட்டிருந்தது. பெரிய வழக்கு நூறின் முறைமன்றத்திற்கே யன்றிப் பட்டணத்தின் முறைமன்றத்துக்கு வராது.

காவல் துறையின் ஆட்சி எல்லையை வகுப்பதற்காகவும், பொது அலுவலாளரின் மேற்பார்வைக்காகவும் நாட்டைப் பல ஆட்சிப் பிரிவுகளாக வகுத்துச் செய்திருந்த அமைப்பானது, நார்மானியரது வெற்றிக் காலத்தில் வளர்ந்த பல தனித்த நிலையங்களினால் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டன. பிந்திய சாக்சனியர் காலத்தில் தனித்த பல நிலப் பெருமக்கள் தோன்றினர்; எளியோர் தாங்கள் வலிமை மிக்கோரைச் சார்ந்து நின்று அதற்கு மாறாக அவரது காவல் துணையைப் பெறுதற்காகத் தங்களை வலிமிக்கோரிடம் நிலங்களுடன் ஒப்படைத்தல் (Commendation–கம்மென்டேஷன்) செய்து கொண்டனர்; இவ்வாறு சார்பிலிருந்த பண்ணை முறைகள் தோன்றிய வகை நமக்குத் தெளிவாகத் தோன்றுவிடினும், அப்போது அவை எண்ணிக்கையில் பெருகி வந்தன. நிலப் பெருமகன் என்ற இந்நிலை, ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பட்டணங்கள், அல்லது நூறு என்னும் பிரிவுகளின் ஆட்சி எல்லையைத் தன்னகத்துக் கொண்டிருந்தது. எனவே இந்நிலையோடு உட்பிரிவின் ஆட்சி உரிமைகளும், உள்ளூர்க் காவலர் ஆட்சியின் பொறுப்பும் இணைந்து விட்டன. இவ்வாறு நிலப் பெருமகன் என்ற நிலையோடு இவ்வலுவல்களும் பொறுப்புக்களும் இணைவது எளிதாக இருந்தது. பல பண்ணையாட்களின் பெருமகன், நடு அரசின் தலையிடும் உரிமையினையும் கருதாது, தானே அப் பண்ணையாட்களிடையே அவர்களுடைய உரிமைகளைப் பற்றி எழும் வழக்குகளைத் தீர்க்கவும், அவருள் ஒருவருக்கெதிராகக் குற்றம் செய்த மற்றவரையும், பொது அமைதிக்கெதிராகக் குற்றம் செய்தோரையும் ஆய்வு செய்து தண்டிக்க வேண்டிய கடமைகளை

ஏற்றுன். நிலப் பெருமகனது ஆட்சி எல்லை ஒரு பட்டணத்தின் எல்லையை இணைக்கும் அளவுக்கு விரிவடையும் போது, அப் பட்டணத்தில் முன்பு இருந்த முறைமன்றம், நிலப் பெருமகனது முறை மன்றத்தோடு இணைந்து ஒன்ருகச் சேரவேண்டியிருந்தது. ஒரே சமுதாயத்தினருக்கு ஒரே வகையான வேலையாகிற தீர்ப்பு வழங்குதலைச் செய்வதற்கு இருமுறை மன்றங்கள் வேண்டு மென்பது பொருத்த மன்றெனத் தோன்றியிருக்க வேண்டும் நிலப் பெருமகனது ஆட்சி எல்லைக்குள் நூறு என்னும் பகுதி அடங்குமளவுக்கு விரிந்ததும், அரசரது இசைவு இல்லாமலே, இவ்விணைப்பு நடைபெற்றிருத்தல் வேண்டும்; ஆயினும் இதில் அரசரின் நலன் முழுவதும் புறக்கணிக்கப் படவில்லை; அரசரது உயர்ந்த நிலைமை இதில் ஒப்புக்கொள்ளப் பட்டது. தனியார் வசத்தில் அரசர் பல தடவைகளில் தமக்கு உரியமுறைப்படி, நூறு அல்லது நூற்றின் பகுதி இவற்றை ஆளும் உரிமையை அளித்தார். இதனுல் சட்டத்திற்கு அப்பால் நடைபெற்ற மாறுதல்களுக்குச் சட்டத்தின் ஒப்புதலை அவர் அளித்தார். இதன் விளைவாகப் பல தனியான நிலப் பெருமக்களது ஆட்சி நிலைகள், சாதாரண உள் நாட்டு ஆட்சி அமைப்பைப் பெரிதும் மாற்றின; இவையே பண்ணை முறைதோன்றுதற்கும், நார்மானியர் வெற்றிக்குப்பிறகு அரசர்கள் “ உரிமை ” களை வழங்குவதற்கும் அடிப்படையை அமைத்தன.

இவ்வகையான பொதுமன்றங்களிலும், தனியார் முறை மன்றங்களிலும் வழக்கை ஆய்வு செய்யும் நடவடிக்கை முறைகள் ஒரேமாதிரியாகத் தானிருந்தன. அவை இக்காலத்தவராகிய நமக்கு மிகப் பழமையானதாகவும், செப்பஞ் செய்யப்படாதன வாகவும் காணப்படும்; எனினும் சமுதாயத்தினரது பொதுவாகச் சீர்தூக்கும் பார்வையில் அவை ஒரு முரடான முறைமையை நிலை நிறுத்தின. இம் முறைகள் நார்மானிய வெற்றிக்குப் பிறகும் உள் நாட்டு முறைமன்றங்களில் இரண்டு நூற்றுண்டுகளுக்குத் தொடர்ந்து வழக்கத்தில் இருந்தன; அதற்குப் பிற்பட்டும் அவை வழக்கத்தில் இருந்திருத்தல் கூடும். தனியாள் தனது உறவினரோடு சேர்ந்து தன்னிடத்துக் குற்றம் செய்தவனிடம் நேரில் பழி தீர்த்துக் கொள்ளுவது என்பது மிகப் பழைய காலமுறையாகும். இக்காலத்திலோ வெனில், தனியார் நடவடிக்கைக்கே இடமில்லாமல் அரசாங்கமே வழக்கைத் தீர்க்கும் வேலை முழுவதையும் ஏற்றுக் கொண்டுள்ளது; இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நடவடிக்கை முறையையே ஆங்கிலோ-சாக்சன் முறைமன்றங்கள் மேற்கொண்டன. இக்காலத்துத் தனியார் செய்வதற்கு அரசாங்கம் இசைவு கொடுக்காத பலவற்றை அக்காலத்தில் தனியார் செய்தனர்; ஒருவர் தனது எதிரியை முறைமன்றத்துக்கு வர

வழைத்து, வழக்கு ஆய்வு செய்யப்படும் நாளைக் குறிப்பிடலாம்; சில சமயங்களில் மன்றத்தின் தீர்ப்பில் அவர் தமக்குரிய பங்கைத் தாமே நிறைவேற்றலாம். ஆயினும் அரசாங்கமே இந்நடவடிக்கையின் பெரும் பகுதியை ஏற்றுக்கொண்டது; தனியாள் செய்யக் கூடிய பங்கை அவர் நிறைவேற்றும்போது அவரை அரசர் கண்காணித்தும், செயல்படுத்த வேண்டிய விதிகளைக் கையாண்டும் அரசாங்கம் தனியாளின் நடவடிக்கைக்கு உடன்பட்டிருந்தது.

முற்காலத்தில் வழக்கு ஆய்வுகளில் உறுதிமொழி எடுத்தல் என்பது பெரும் அளவில் கையாளப்பட்டது. முறைமை செய்வதற்கு இவ்வழியைப்பற்றி நாம் சீர்தூக்கிப் பார்க்கையில் இரு கருத்துக்கள் தெளிவாகின்றன. முதலாவது, இம் முறைமன்றங்கள் சிறிய மக்கள் சமுதாயத்தினருக்கே வேலை செய்தன. முறை மன்றங்களை அமைத்தவர்கள் ஒருவருக்கொருவர் அண்டை விட்டவர்தாம்; ஒவ்வொருவரது பண்பாடும் மற்றவருக்கு நன்ருகத் தெரியும்; ஒவ்வொருவரது தொழில் முறையும் மிகச் சிறியது; அது மற்றவருக்கும் தெரியும். இரண்டாவதாக அக்காலத்தில் திருவருட்செயல் வெளிப் பாட்டில் மக்களுக்கு உண்மையான நம்பிக்கை இருந்தது. உறுதிமொழி எடுத்தலென்பது திருவருளிடத்தில் முறையிடுதல் என்பதாகும்; பொய்யாக முறையிட்டால் அதற்கு அப்பொழுதோ, சில நாள் கழித்தோ கடுந்தண்டனை திருவருளால் ஏற்படும். தீவினையாளரை இறையருள் கடுமையாகப் பழிவாங்கித் தண்டித்ததாகப் பல கதைகள் பொதுவாகப் பரப்பப்பட்டும் நம்பப்பட்டும் வந்தன. தனக்குப் பொய் என்று தெரிந்த உறுதிமொழியை, அதனுல் விளையும் கேட்டை எண்ணித் துளக்கமும் ஐயமும் வெளிப்படுத்துதலில்லாமல், தன்னை நன்ருக அறிந்தோர் முன்னிலையில் ஒருவர் எடுப்பாராகில், அவர் ஒரு மிகக் கடுமையான நெறிகெட்டவராகத்தான் இருக்க முடியும். அவர் இவ்வறிகுறிகள் ஏதேனும் வெளிப்படுத்திஞலோ, அல்லது உறுதிமொழியின் முறையமைப்பைத்தவறுதலாகச் சொன்ஞலோ, அவர் தம் வழக்கை இழந்தவராவார்.

இரு கட்சியாரும் முறை மன்றத்தின் முன்பு தத்தம் வழக்குகளுடன் வந்ததும், முதலில் வழக்காடி (Plaintiff) ஓர் உறுதிமொழி எடுத்துத் தமது வழக்கைக் கூறுவார்; இதில் சில சமயம் அவரது வழக்கை ஆதரிப்பவரும் அவருடன் வழக்கைக் கூறுவர்; இவரே வழக்காடியின் கூட்டத்தார் (Suit or Secta) எனப்படுவர். பிறகு எதிர்வழக்காடி, வழக்காடியின் வழக்கில் கூறப்பட்டவைகளைப் பொய்யென மறுத்து உரைத்து ஓர் உறுதிமொழி எடுத்தார். இதற்குப் பிறகு முறைமன்றம் எக்கட்சியினர் தம் வழக்கிற்

குச் சார்பான உறுதிமொழி தரவேண்டுமெனத் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பு இரு கட்சியாளரிடையே எங்கு முறைமை உள்ளது என்பதைப்பற்றி முதற்கருத்தாக முறைமன்றம் கொண்டுள்ள கருத்தைத் தெரிவிப்பதாகும். எதிர் வழக்காடியானவர் தனது மறுப்பு உறுதிமொழியினை வெற்றியாக எடுத்தாராகில், அவரது கட்சியை மெய்ப்பிக்கும் உரிமை அவருக்களிக்கப் பட்டது; ஏனெனில் அத்தகையவரது கட்சியில் முறைமை உள்ளதென்ப தாக இயல்பாக எண்ண இடமுண்டு. ஆனல் சில தனிப்பட்ட எப்பொழுதும் சாதாரணமாக ஏற்படாத வழக்குகளில், முறை மன்றமானது வேறு வகையாகத் தீர்ப்பளித்து, மெய்ப்பிக்கும் வேலையை வழக்காடிக்குக் கொடுக்கும். முறைமன்றத்தின் அடுத்த அமர்வுக் காலத்தில் (Session) வழக்கை மெய்ப்பித்தல் நடை பெறும். இம் மெய்ப்பிக்கும் வேலையில் சில சமயம் தாங்களே வழக்கை நேரில் கண்டு கேட்டு அறிந்தவரென உறுதிமொழி கூறி அவ்வழக்கு உண்மையெனக் காட்டக் கூடிய சான்றுரையாளர்கள் கொண்டு வரப்படுவர். வழக்கை மெய்ப்பிக்கும்படி ஏவப் பட்டவரே இன்னெரு உறுதிமொழி எடுப்பது வழக்கம்; ஆயினும் உறுதிமொழி உதவியாளர் (Oath-Helpers or Compurgators) எனப்படுவோர், வழக்காடியின் வழக்கு முறை யாகுமென உறுதி மொழி எடுக்காமல், தாம் வழக்காடியின் உறுதிமொழி உண்மை என நம்புவதாக உறுதிமொழி எடுத்தனர். பொதுவாக ஒரு கட்சி யாளர் கொண்டு வரவேண்டிய உறுதிமொழி உதவியாளரது எண்ணிக்கை பழக்கத்திஞல் வரையறுக்கப்பட்டது; கட்சி யாளரது தரத்திற்கு ஏற்பவும் அது திட்டம் செய்யப்பட்டது; முறைமன்றமும் ஒரு குறிப்பிட்ட வழக்கில் தேவையான உறுதி மொழி உதவியாளரது எண்ணிக்கையைக் குறிப்பிடலாம்; அல்லது அது, தானே குறிப்பிட்ட ஒரு சிலரடங்கிய பட்டியலி லிருந்தே, சமுதாயத்தினின்று அல்லாமல், உறுதிமொழி உதவி யாளரைக் கொண்டுவர வேண்டுமென முடிவு சொல்லலாம். குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள உறுதிமொழி உதவியாளர் கிடைப்பின் வழக்கு வெற்றியடையும். இவ்வகையான நடவடிக்கை முறையின் அடிப்படைக் காரணங்களை நாம் எளிதில் காண இயலும். மெய்ப்பிக்கும்படி முறைமன்றம் கூறும் தீர்ப்பிலேயே இவ்வழக்கைப்பற்றிப் பொதுமக்கள் கொண்டுள்ள கருத்து வெளிப்படுகிறது. உறுதிமொழி உதவியாளரைக் கண்டு பிடித்தலில், இத்தீர்ப்பு இன்னும் ஒரு குறிப்பிட்ட முறையில் சோதனைக்குட்படுத்தப் படுகிறது. கொள்கை யளவில் பார்க்கும் போது, வழக்கைப்பற்றிய கருத்துக்குப் பெரும் பொறுப்பு உறுதி மொழி உதவியாளரையே சார்ந்ததாகும். ஒருவர் எதிர் வழக்

காடிக்குச் சார்பான தீர்ப்புச் செய்யப்படுவதை விரும்பினாலும், உறுதிமொழி உதவியாளராக அவர் வந்து ஒரு குறிப்பிட்ட உறுதிமொழி எடுப்பதை விரும்பாமலிருக்கலாம்; (எனவேதான் உறுதிமொழி உதவியாளர் மூலமாகவே தீர்ப்புக்கூறும் முறை இருந்தது.) எனினும் வழக்கை உறுதிமொழி எடுத்து மெய்ப்பிக்கும் படியாகத் தீர்ப்புக் கூறப்பட்ட கட்சி குறிப்பிட்ட எண்ணுள்ள உறுதிமொழியாளரைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தது. மக்கள் தொகை பெருக, நிகழ்ச்சிகள் சிக்கலாக, இம் மக்கள் முறைமன்றத்துக்கு வழக்கைப்பற்றிய முழுச்செய்தியும் அறிய முடியவில்லை; பொய்யான உறுதிமொழிகளையும் தடுக்க முடியவில்லை. எனவே தீர்ப்பு அளிக்கும் இம்முறை வழக்கத்திலிருந்த கடைசிக் காலத்தில் பெருந் தவறுகளுக்கு உள்ளாயிருந்தது.

குற்ற வழக்கு ஆய்வும் (criminal trial), உரிமை வழக்கு ஆய்வை (civil trial) முறையில் ஒத்திருந்தது; அது குற்றத்தால் துன்பமுற்ற கட்சிக்கும், குற்றம் சாட்டப்பட்ட கட்சிக்குமுள்ள வழக்கை ஆயும் முறையை ஒத்திருந்தது. எனினும் குற்ற வழக்கை ஆயும்போது கடுந்தேர்வு முறை (Ordeal)யினால் வழக்கின் உண்மை காணும் பழக்கம் ஏற்பட்டது; இம்முறை உரிமை வழக்குகளிலும் கையாளப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராகத் தீர்ப்புக் கூறமுடியாதபடி ஒரே ஒரு சிறு ஐயப்பாடு வழக்கில் காணப்படும் போதும், வழக்கின் உண்மை கண்டு முறை மன்றம் தீர்ப்புக்கூற முடியாத போதும், இறைவன் திருவருளின் தீர்ப்புக்கு முறையிடுவதே இக்கடுந் தேர்வு முறை என்பது கொள்கையாகும். சாதாரணமாக இவ்விரு வகை வழக்குகளிலும் கட்சியாளர், உறுதிமொழி உதவியாளரைக் கொண்டு ஆய்வு செய்யாமல் நேராகவே கடுந்தேர்வு முறையைக் கையாண்டனர்; ஏனெனில் உறுதிமொழி உதவியாளர் முறை இத்தகைய வழக்குகளை ஆய்வதற்குச் சிறிதும் பயனற்றதாகும். ஆனால் பிராங்கியர் ஆட்சிமுறையிலும், சாக்சனியர் ஆட்சிமுறையிலும், ஒருவருக்குத் தேவையான அளவு உறுதிமொழி உதவியாளர் கிடைக்காவிட்டால் இக் கடுந்தேர்வு முறையின்படி அவர் தமது வழக்கை மெய்ப்பிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. சில வகைப்பட்ட குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் தமது வழக்கை உறுதிமொழி உதவியாளர் ஆய்வு முறையின்படி எடுத்துக்காட்ட முடியாது; அவர் நேராகக் கடுந்தேர்வு முறைக்கே உடன்படவேண்டும். இவ்வாறு தீர்மானித்தல் பொது மக்கள் கருத்தை ஒட்டியதே; இத்தகைய தீர்மானமே பின்னர் கடுமையாகத் தண்டிக்கும் சட்டம் (லிஞ்ச் லா-Lynch law)

என்னப்பட்டது; இதன்படி 'மிகக் கொடிய குற்றம் சாட்டப் பட்டவர் குற்றவாளியாகவே இருத்தல்கூடும்; எனவே அவரது வழக்கை ஆய்வதற்கு உறுதிமொழி உதவியாளர் முறை சிறிதும் பயனற்றது' என்பது பொருளாகும். சாக்சனியர் பழக்கத்தில் இருவகையான கடுந்தேர்வு முறைகளைக் கையாண்டனர்; இவ் விரண்டு முறைகளைத் தொடங்குவதற்கு முன்னர் முறையாக அமைந்த சமயச் சடங்கு ஒன்று நடைபெறும்: ஒரு கடுந்தேர்வு முறையின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் கைகால்கள் கட்டப் பட்டுத் தண்ணீருள்ள குளத்தில் எறியப்படுவார்; அவரை எவரும் காணாதபடி மூழ்கி மறைந்திருந்தால் அவர் குற்றமற்றவரென ஒப்புக்கொள்ளப்பட்டார். பழுக்கக் காய்ந்த இரும்புத் துண்டை ஏந்துவது இன்னொரு கடுந்தேர்வு முறையாகும்; இம்முறையின்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் பழுக்கக் காய்ந்த இரும்புத்துண்டை ஏந்தி ஒரு குறிப்பிட்ட தொலைவு நடத்தல் வேண்டும்; அவர் குற்றவாளியா அல்லரா என்பது குறிப்பிட்ட சில நாட்களில் அவரது கையிலுள்ள புண்ணின் நிலையைக் கொண்டு தீர்மானிக்கப் படும். கடுந்தேர்வு முறை பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக் கத்தில் மறைந்துவிட்டது; ஆனால் மற்ற பழைய ஆய்வுமுறைகள் உரிமை வழக்குகளைவிடக் குற்ற வழக்குகளில் நெடுங்காலம் கையாளப்பட்டன; பின்னர் தான் இம்முறைகளும் புதிய ஆய்வு முறைகளுக்கு இடங்கொடுத்து மறைந்தன.

பிந்திய ஆங்கிலோ-சாக்சனியர் காலத்தில் ஒரு சில வழக்கு களில் தான் சாவுத் தண்டனை (Death Penalty) கொடுக்கப் பட்டது; சிறைப்படுத்தல் என்பதும் மிக அருமையாகக் கொடுக்கப் பட்ட தண்டனையே; ஆயினும் எல்லாக் குற்றங்களுக்கும், குற்றத் தினால் துன்புற்றவனது குடும்பத்தாருக்குப் பணம் கொடுத்தால், கழுவாய் அல்லது ஈடு உண்டு; இதைக் கொடுப்பதோடு, பொது அமைதியைக் கெடுத்த குற்றத்திற்காக அரசாங்கத்திற்கும் தண்டப் பணம் செலுத்தவேண்டும்; அரசாங்கத்திற்குரிய கழுவாய்ப் பணம் 'பாட்' (Bot) எனவும், தண்டப் பணம், 'வைட்' எனவும் குறிப்பிடப்பட்டன. ஒவ்வொரு தனியாளுக்கும் 'வெர்கெல்டு' எனப்படும் மதிப்புப் பணம் குறிக்கப்பட் டிருந்தது; நாட்டில் அவரது மதிப்புக்குத் தக்கவாறு ஒரு தொகையை யாவரும் வைத்திருக்க வேண்டும்; அவரை எவராயினும் கொன்றுவிட்டால், அவருக்கு விதித்த மதிப்புப் பணத்தை அவரைக் கொன்றவர் செலுத்தவேண்டும்; அல்லது அவரே ஒரு குற்றம் செய்துவிட்டால் அதற்குரிய தண்டப் பணத் தைத் தீர்மானிப்பதற்கும், அவரது மதிப்புத்தொகை உதவியா யிருந்தது. வேறு பல குற்றங்களுக்குரிய தண்டப் பணங்களும்

தீர்மானிக்கப்பட்டிருந்தன; அவை குற்றத்தின் தன்மைக்குத் தக்கவாறும், குற்றம் செய்தோரது மதிப்புக்குத் தக்கவாறும், குற்றம் செய்யப்பட்டோரது மதிப்புக்குத் தக்கவாறும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்குத் தக்கவாறும் தீர்மானிக்கப்பட்டிருந்தன. சில வழக்குகளில் குற்றவாளி தன்மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு விடை சொல்ல மறுத்தாராகில், அவர் நாடு கடத்தப்படுவார்; அவரை அப்பொழுது எவர் கண்டாலும் கொல்லலாம்; அல்லது நேருக்கு நேர் பழிவாங்கலாம். இவ்வகைப் பட்ட குற்றத் தண்டனைகளெல்லாம், உறுதிமொழி உதவியாளர் ஆய்வு முறையைப் போல, நாடு பழங்குடிகளின் கூட்டம் நிறைந்த நாடாக இல்லாமல், அளவில் பெரியதாக வளர்ந்தபின், பயனற்றுப் போயின; நார்மானிய வெற்றிக்குப் பிறகு இவை முற்றும் மறைந்துபோயின.

நிலப் பெருமக்களுக்குட்பட்ட தனியான ஆட்சிப் பிரிவுகளைத் தவிர வேறொரு உட்பிரிவும் சாக்சனியரது ஆட்சிப் பிரிவுகளில் தோன்றிற்று; அதுவே வாணிக முறையில் தோன்றிய பட்டணம் அல்லது பேரூர் (பரோ-Borough) எனப்படும். ஆங்கில வாணிகப் பட்டணங்கள் தனியான ஆட்சிப் பிரிவுகளாகவும், மக்கட் பெருக்கம் நிறைந்தவையாகவும் தோன்றிய முறையைப்பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. இதைப் பற்றி ஒரு முடிவான கருத்துக்கு எவரும் இன்னும் வரவில்லை. மக்கள் நெருக்கமாகக் குடியேறிப் பட்டணங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் இருந்தன; மக்களுக்குக் காப்பளிக்க வல்ல கோட்டை அமைப்பு, வாணிகப் பெருவழிகள் கூடுமிடம், பெரும் கோயிலுக்குப் புண்ணியப் பயணம் செய்வோருக்குத் தேவையான பொருளை வழங்குமிடம் ஆகியவற்றில் மக்கள் நெருக்கமாகக் குடியேறினர். எப்படியும் அதன் ஆட்சி அமைப்பு ஒன்றாகவே இருந்தது. அதன் தோற்றம் எவ்வாறாயினும் அதன் சிறப்பு ஆட்சி முறையில் காணப்படுகிறது; சாக்சனிய உள்நாட்டு ஆட்சி முறையில் இப்பட்டணங்கள் தன்னாட்சி முறையுள்ள கூறுகளாக (Units) எளிதில் வளருவதற்கும், நாட்டின் பொதுவான உள்நாட்டு ஆட்சித் திட்டத்துக்கு அடங்கி இருப்பதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. நார்மானியரது வெற்றிக்கு முந்திய காலத்திலேயே இந்நிலை ஆங்கிலப் பட்டணங்கள் நாட்டினது அரசாங்கத்தோடு பொருந்தியிருக்க வேண்டிய தொடர்பை உருவாக்கிற்று. அது தொடக்கத்தில் ஒரு பேரூர் அல்லது ஒரு பேரூரின் பகுதி என்ற நிலையில் இருந்திருக்கலாம்; ஒரு பேரூர் என்ற நிலையை அடைந்த வாணிகப்பட்டணம் தனியாட்சி முறையை அடைந்தது. சில பேரூர்கள் அளவிலும், சிறப்பிலும்

அல்லது பக்கத்துப் பிரிவுகளோடு உள்ள நெருங்கிய தொடர்பிலும் அல்லது இலண்டனைப் போல இவ்விரண்டிலும் வளர்ச்சியுற்று, ஆட்சியமைப்பில் ஒரு பட்டண அமைப்பைவிட நூற்றின் அமைப்பையே பெரிதும் ஒத்திருந்தன. நடைமுறையில் இதன் வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு தன்னாட்சி முறையே. ஆயினும் இத் தன்னாட்சி முறையினால் பேரூர்கள் தனித்து நிற்காமல் நூறு அல்லது கோட்டம் ஆகிய பெரிய ஆட்சிமுறைக் கூறுகளோடு இணைந்துவரலாயின. பெரிய பட்டணங்களின் ஒவ்வொரு தொகுதியும் அல்லது குடும்பும் ஓரளவு தன்னாட்சி பெற்றிருந்தது; ஒவ்வொரு குடும்பும் பேரூர் முழுவதோடும் பட்டணம் நூறோடு இணைந்திருப்பதைப் போல இணைந்திருந்தது. பேரூரில் தனியார் முறை செய்தல், பக்கத்திலுள்ள நிலப் பெருமக்கள் நடத்திய தனிமுறை மன்றங்கள் (Sokens) வாயிலாகத்தான் நடைபெற்றது. பேரூரின் பகுதிகள் பக்கத்து நிலப்பெரு மக்களுக்கு உரியனவாயின், அவர்களைச் சார்ந்தோர் அவற்றில் குடியேற, அவர்கள் மீதும், தங்களுடைய நிலத்து மக்கள் மீது செய்ததைப் போல முறைசெய்யும் உரிமையை (Sake and soke) அந்நிலப் பெருமக்கள் செலுத்தினர். சாக்சன் வரலாற்றின் கடைசி நாட்களில் பட்டண வாழ்க்கை வளர்ந்து வந்தபோதிலும், பேரூர்கள் ஆங்கிலோ-நார்மானியர் காலத்தில் இருந்ததைப் போன்று நாட்டின் வாழ்க்கையில் ஒரு சிறப்பை அடையவில்லை. ரிச்சர்டு, ஜான் ஆகிய அரசர்களுடைய காலத்தில், அப்பேரூர்கள் தாம் அவர்களிடமிருந்து பெற்ற பல தனிப்பட்டயங்கள் மூலம் தாம் வெளிப்படுத்திய சிறப்பின் அளவுக்கு ஒப்ப அவற்றுக்கு முந்திய சாக்சன் காலத்தில் அவைகளின் சிறப்பு இல்லை.

இங்கிலாந்தின் மக்கள் தாங்கள் குடியேறியிருந்த நிலத்தைப் பாகுபாடு செய்திருந்தது போலத் தம்முள்ளும் பாகுபாடுகள் வைத்திருந்தனர். நாட்டின் பிரிவுகளிலிருந்ததைவிட ஒரே அரசின் பல பகுதிகளில் இப்பாகுபாடு அவ்வளவு ஒழுங்காக இல்லையெனத் தெரிகிறது. பொதுவான சில தன்மைகளையொட்டிப் பார்க்கையில் மக்கள் நால்வகை வகுப்பினராக சாக்சனிய நாட்டில் பிரிந்திருந்தனரெனக் கொள்ளலாம்; அவர்கள், பெருமக்கள், பொதுமக்கள், ஓரளவு உரிமையுள்ள மக்கள் (Partially free men), அடிமைகள் எனப்படுவர்.சில தன்மைகளால் இவை நான்கும் ஒன்றுக்கொன்று வேறுபாடு உடையனவாயினும், இவற்றின் தனியாட்களின் நிலைமையைப் பார்க்கும்பொழுது, இவை வரிசைப்படுத்தப்பட்ட உரிமைகளும், தனிச் சலுகைகளும், நிலைமைகளும் பொருந்திய ஓர் இணைப்பில் சேர்ந்தவையே. இவ்வுரிமைகளும், பிறவும், சாக்சனிய சமுதாயம் அப்பொழுது நிலையான உருவில்லாம

லிருந்ததெனவும், சமுதாய வகுப்புக்களிடையே சாதிக் கட்டுப்பாடு ஒன்றும் கிடையாதெனவும், தனிக் குடும்பங்கள் எவ்வகுப்புக்கும் அடிக்கடி எளிதில் நிலைமாறலாமெனவும் எடுத்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு பண்ணையிலும் நிலங்களைக் குத்தகைக்கு விடப்பட முறைகளும், அவற்றிற்கொத்த அலுவல் முறைகளும் குடும்ப அமைப்பானது திட்டவட்டமாக இல்லையென்பதைக் காட்டுகின்றன.

ஒவ்வொரு ஆங்கிலோ-சாக்சன் நாட்டிலும் ஒரு தனித்த பெருமக்கள் வகுப்பு இருந்தது. பிறப்பினாலும், அரசருக்குச் செய்யும் தொண்டினாலும் இவ்வகுப்பினர் தோன்றினரென சாக்சன் வரலாற்றிலிருந்து அறிகிறோம். கென்ட்டு (Kent) மாகாணத்தில் இம்முறையில் பெருமக்கள் வகுப்பு தோன்றியதற்குச் சான்று இருக்கிறது; மற்றைய டியூட்டானிய நாடுகளில் இங்கிலாந்தில் தோன்றிய காலத்திலேயே பண்டைய உறவுக்குழுவின் (Tribe) முறைப்படி பிறப்பை ஒட்டிப் பெருமக்கள் வகுப்பு தோன்றிற்று. முன்பு மன்னரது ஆட்சி இல்லாதிருந்தும், புதிய சூழ்நிலையில் மன்னராட்சி தோன்றி, அது நாடு முழுவதையும், அதன் பொது வாழ்க்கையையும் கட்டுப்படுத்திற்று; இந்நிலையில் அரசரோடு நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ளும் தனியாளுக்குத் தனி மதிப்பும், சிறப்புத் தரமும் (Distinction and rank), வந்தடைந்தன; இவற்றைப் பெற்றவருக்குப் பொதுமக்களுக்கு உள்ளதைவிட மிகக் கூடுதலான மதிப்புப் பணம் (வெர்கெல்டு-Wergeld), விதிக்கப்பட்டதாகச் சட்டத் தொகுப்புக்கள் காட்டுகின்றன. எனவே ஒவ்வொரு வகுப்பாரது மதிப்பும் தரமும் சட்டத்தில் காணப்பட்டன. அரசரோடு நெருங்கித் தொண்டு செய்தவர் முதலில் வேறு சிலரோடும், பழைய பெருமக்கள் கூட்டத்தோடும் சேர்ந்து வேறுபாடின்றி ஒரே வகுப்பாக அமைந்தனர். இதற்கு விதிவிலக்காக ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளில் பெருமக்கள் நிலைக்கு உயர்ந்த குடும்பங்களும் உண்டு. நார்மானியரது வெற்றிக்கு முந்திய காலத்தில் பெருமக்கள் வகுப்பு அமைந்திருந்த வகை இதுவேயாகும்.

தொண்டினால்பெருமக்கள் ஆகியவர்களை ஆங்கிலோ-சாக்சனியர் ஜெசித்து (gesith), தென் (thegn) ஆகிய இரு சொற்களால் குறிப்பிட்டனர். ஜெசித்து என்பது படைத்துறையைச் சேர்ந்தவர் வகுப்பைக் குறித்தது; இவ் வகுப்பார் கோட்ட ஆட்சியின் (comitatus) மூலம் அரசருடன் நேரான தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வகைக் கோட்டத் தொடர்பு முறையை டாசிட்டஸ் தாம் எழுதிய ஜெர்மானியா என்னும் நூலில் 13, 14-ஆம் இயல்

களில் குறிப்பிடுகின்றார். இங்கிலாந்தில் குடியேறியதும் இப்படை வகுப்பாருக்கு அரசர் மிகுதியும் நிலக்கொடைகள் அளித்தாரென வும், எனவே இவர்கள் நிலையாக நிலத்தில் தங்கிய நிலப் பெரு மக்கள் ஆயினரெனவும் தெரிய வருகிறது. எனவே அரசருக்கு அறிவுரை வழங்குபவராகவும், அரசரது அவைக்களத்திலுள்ள சில வேலைகளைச் செய்பவராகவும் இருந்த ஜெசித்துக்களின் நிலை யினைத் தென்கள் மேற்கொண்டனர். ஜெசித்துக்களைப் போலவே தென்களும் தங்களுடைய நிலையில் சிறிது சிறிதாக மாற்றமும் வளர்ச்சியும் அடைந்தவர்களே. எனவே நார்மானிய வெற்றிக்குப் பிறகும் தென் என்ற சொல் வழக்கிலிருந்தது, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இச்சொல் பல்வேறு பொருளில் வழங்கப்பட்டது.

தன்னுரிமையான பொதுமக்களிடமிருந்து (commonfree men) பெருமக்களைப் பிரித்துக் காட்டுவனவாக ஒரு சில சட்ட உரிமைகள் பெருமக்களுக்கு இருந்தன. ஒரு பெருமகனது மதிப்புத் தொகை (wergeld), தனியாளினதைப் போல் ஆறு மடங்காகும்; ஒரு முறைமன்றத்தில் ஒரு பெருமகன் எடுக்கும் உறுதிமொழி ஆறு தனியாட்களினுடையதற்கு ஒப்பாகும்; பத்துப்பேர் பிணை முறைக்கு எப்பெருமகனையும் உட்படுத்த முடியாது; தன்னைச் சார்ந்தவர் யாவராயினும் அவருடைய நன்னடத்தைக்கோ, முறை மன்றத்தில் அவர் தோன்றுவதற்கோ, பெருமகன் தான் பொறுப்பு ஏற்கலாம். தனது ஆட்சிக்குட்பட்ட சில நிலங்களிலிருக் கும் தன்னுரிமையான பொதுமக்களின் மீதும் தனது தனியாட் சியைப் பெருமகன் செலுத்தலாம். சமய நிலையத்திலும், ஆட்சித் துறையிலும் உள்ள அலுவல்கள் பெருமக்களுக்கே அளிக்கப்பட் டன; இவ்வாறு செய்வதற்குச் சட்டத்தில் தெளிவாக இடமில்லா விட்டாலும், உயர்குடிப்பிறப்புக்கு மற்றத் துறைகளிலுள்ளதை ஒத்த மதிப்பு அலுவல் துறைகளிலும் இருந்தது. மூதறிஞர் அவையில் (Witanagemot) உறுப்பினராகும் உரிமை பெருமக் களுக்கு இல்லையெனினும், பெருமக்கள் வகுப்பிலிருந்தே, அலுவல ரோடு ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு வந்திருந்த பெருமக்களை, அரசர் அழைத்தார். பொதுவாகக் கூறினால், பெருமக்கள் வரையறை செய்யப்பட்ட ஒரு சமுதாய வகுப்பினராக அமைந்திருந்தனர்; அரசாங்கத்திற்கு எதிராகத் தனித்த நிலையில் அவர்கள் இல்லை; கீழ் நிலையிலிருந்து பெருமக்கள் நிலைக்கு உயரும் குடும்பங்களை அவர்கள் ஒதுக்கி விட்டுத் தாம் தனித்த ஒரு சாதியாக (Caste) மாறியதில்லை.

ஆங்கிலோ-சாக்சனிய சமுதாயத்தைப் பற்றிய வரலாற்றி லிருந்து சமுதாயத்தில் சாதாரணமான நிலையிலுள்ளவர் பொதுத் தனி ஆள் (Common free man) ஆவர் எனத்

தெரிகிறது. படை மானிய முறைக்காலத்தில் மிகப்பெரிய தனியுரிமையாளராக (Liber homo) இருந்த பெருமக்களி னின்றும் இவர்களை வேறுபடுத்துதற்காக இவர்களைப் பொதுத் தனியாட்கள் என நாம் குறிப்பிடுகிறோம். இவ்வகுப்பாளர் மேலே பெருமக்களுக்கும், கீழே முழுவதும் அல்லது ஓரளவு உரிமையற்ற மக்களது வகுப்புக்கும் இடைப்பட்ட நிலையினராவர். பெருமக்களது வகுப்பைப் போல இவ் வகுப்புக்கும் சியோர்ல், சோக்மன், வில்லனுசு (ceorl, Sokeman, Villanus) எனப் பல பெயர்கள் உண்டு. இப் பெயர்களுக்கெல்லாம், நாட்டின் பல பகுதி களிலும், பல காலங்களில் பல திறப்பட்ட பொருள்கள் உண்டு. இவ் வகுப்பின் வரலாற்றிலிருந்து இது முதலில் எண்ணிக்கையில் பெரியதெனவும், பல வேலைகளுக்கு அரசாங்கம் இதனையே சார்ந்தி ருந்த தெனவும், எல்லா வகுப்பாருக்கு முரிய மதிப்புத் தொகை உறுதிமொழி உதவியாளர் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக் கிட்டு அவரவரது நிலையையும் சட்ட மதிப்பையும் உறுதி செய்வ தற்கு இவ்வகுப்பினரே ஒரு முன் மாதிரியான வகுப்பாக இருந்தன ரெனவும் தெரிய வருகின்றன. இவர்கள் சிற்றூர்களில் வாழ்ந்தவ ரெனவும், இவர் தமக்குரிய பக்கத்தூரிலுள்ள நிலங்களில் சென்று வேலை செய்தனரெனவும் சில குறிப்புக்கள் காட்டுகின்றன. இவரது சிற்றூர்கள் பல 1066-ஆம் ஆண்டு வரையிலும் கூட தனி உரிமை யூர்களாக இருந்தன; அவை தமது பொது வேலைகளைத் தமது சிற்றூரவைகளின் (Tun-Motes-டன மோட்ஸ்) மூலமாகச் செய்து வந்தன. ஆனால் பெரும்பான்மையான பல சிற்றூர்கள் ஏதேனு மொரு பெருமகனது ஆட்சிக்குள் வந்து அவரைச் சார்ந்திருப்பவை ஆயின. பெருமகனல்லாத, முழுவதும் உரிமையுள்ள ஒரு தனி ஆளுக்குச் சராசரியாக 120 ஏக்கர் நிலமே உடைமையாகும். இந்நிலவுடைமையோடு இயல்பாக அதற்குரிய கால்நடை, பயிரிடும் கருவிகள் முதலியனவும் அடங்கும். ஆயினும் இந்நில உடைமைகள் பெரிதும் அளவில் மாறுபாடடைவதுண்டு; பொது வான ஒரு தனி ஆள் தனக்குச் சாதாரணமாக உடைமையாக உள்ளதை ஐந்து மடங்காகப் பெருக்கிக் கொண்டு பெருமக்களது வகுப்பிற்கு உயரலாம். சட்டப்படி இத்தனியாட்களே பத்துப்பேர் பிணைக்குழுக்களில் சேர்க்கப்படுதற் குரியர்; கோட்டத்திலும், நூறிலும் முறைமன்றங்களின் ஆட்சி நடைபெறுதற்கும், நாட்டின் படையைத் திரட்டுதற்கும் அவர்களின் வேலையையே நடு அரசாங் கம் சட்டப்படி சார்ந்திருந்ததாகும். சாக்சன் காலத்தில் தோன்றிய பண்ணைமுறை வேளாண்மையில் இவ்வகுப்பினர் பெருவாரியாகச் சேர்ந்திருந்தன ரெனினும், பொருளியலடிப்படையில் தான் அவர் கள் இம்முறையில் சேர்ந்திருந்தனர்; சட்டப்படி அவர்கள் நிலை

யில் மாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆயினும் சாக்சனியர் வரலாறு முழுமையும் எடுத்துக் கொண்டால், இவ்வகுப்பினர் பொருளியல், சமுதாயம், அரசியல் ஆகிய துறைகளில் சிறப்பிழந்து கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. நார்மானியரது வெற்றி ஏற்பட்ட காலத்தில், அது முந்திய காலத்திலிருந்ததை விடச் சிறப்புக் குன்றியிருந்தது. எனினும், நிலவுடைமைக் கணிப்பேடு (Domesday Book) எடுக்கப்பட்ட காலத்தில் அது முற்றும் மறைந்து விடவில்லை. ஓரளவு எண்ணிக்கையுள்ள இவ்வகுப்பினர், ஏதேனும் பெருமக்களைச் சார்ந்திராத நிலங்களை உடைமையாகப் பெற்றிருந்தனர்.

முழுவதும் உரிமை பெறுதவர்களைப் பற்றிநாம் கவனிக்கையில், உரிமை, நிலைமை இவற்றைப் பற்றிய பாகுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'அடிமை என்பவர், யாதொரு உரிமையுமற்றவர், அவர் ஒரு தட்டுமுட்டுச் சாமானைப் போன்றவர், கால்நடைகளைப் போல அவரை அவருடைய மேலாள் சந்தையில் விற்க முடியும்' என்ற பொருளில் கொண்டால், இத்தகைய ஒரு வகுப்பார் சாக்சனியர் காலத்தில் இருந்தனர் என்றே கூறமுடியும். அடிமை வாணிகமும், அடிமை ஏற்றுமதி செய்தலும் நார்மானிய வெற்றிக்குப் பின் பலகாலம் வரையிலும் நிறுத்தப்படவில்லை. உள்நாட்டிலேயே அடிமைகளைக் கொடுப்பது நிறுத்தப்படவில்லை. சாக்சனியருக்குள் நிகழ்ந்த போர்களில் சிறைபிடிப்புக்கள், பொருளியலில் வறுமை முதலிய காரணங்கள் இவ்வகுப்பை நிலைநிறுத்திற்று மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்ததை விட இங்கிலாந்தில் சூழ்நிலைகள் அடிமைநிலை நீங்குதற்கு மிக மெதுவாக வேலை செய்தன. அடிமைகளை விடுவித்தல் ஒரு நல்வினையெனவும், அடிமைதானே தேடிய பொருளுக்கு அவரே உரிமையாளரெனவும், சட்டப்படி தனக்கு ஒரு குடும்பம் அமைத்துக்கொள்ள அவருக்கு உரிமையுண்டு எனவும் சமயநிலையம் வற்புறுத்திற்று. மற்ற நாடுகளில் நடந்ததைப் போல இங்கிலாந்திலும் பொருளியல் காரணங்களே அடிமை நிலைக்கெதிராக இருந்தன. மேலாள் (Master), தன்னிடத்துள்ள அடிமைக்கு உரியதாக ஒரு குடிசையும், தனது நிலத்தில் வேலை செய்த நேரந்தவிர மிச்சமுள்ள நேரத்தில் பயிரிட்டு வாழ்வதற்காகச் சிறிதளவு நிலமும் கொடுப்பதே சிறந்த முறையில் அடிமையைப் பயன்படுத்துவதாகு மென்பதை உணர்ந்திருந்தார். ஆனால் நடைமுறையில், இடைக்காலத்தின் இறுதிவரை, அடிமை தேடிய வீடு, நிலம், தட்டுமுட்டுச் சாமான் இவை எல்லாம் அவருடைய உடைமையல்ல; அவை அவருடைய மேலாளுக்கே உரியன. எனினும் அடிமை என்ற நிலையிலிருந்து நில ஊழியன் (Serf) என்ற நிலைக்கு மாற்றப்பட்டபோதும், அவர்

நிலையாக ஒரு வீட்டில் குடியிருக்கவும், ஒரு துண்டு நிலத்தைப் பயிரிடவும் இணக்கம் தரப்பட்ட போதும், அடிமை என்ற நிலை நீங்குதலில் முதல் படி ஏற்பட்டது. அவரும், மற்றையோரும் அவருக்கு அளிக்கப்பட்ட வீட்டையும், நிலத்தையும் அவ்வூழியரின் தனியுடைமையாகவே கருதினர். இவை பிற்காலத்தே அவ்வூழியரின் மகனைச் சார்ந்தன. பண்ணைமுறை தோன்றியதும், எந்த ஊழியங்களுக்கு எதிரிடையாக இந்நிலமும் வீடும் அளிக்கப்பட்டனவோ, அவ்வூழியங்களெல்லாம் ஒழுங்காகப் பெருமகனுக்குச் செய்யப்படுகின்றவரை, பண்ணையாட்சி வழக்கத்தின்படி, இவற்றை அவரிடமிருந்து எடுக்க முடியாது என்பதாக ஒப்புக்கொள்ளப் பட்டது. பண்ணையிலுள்ள முறை மன்றமானது, இவ்வூழியரது நிலங்களைப்பற்றி மரபுரிமையாளரிடையே எழுகின்ற உரிமை வழக்குகளைத் தீர்க்கத் தொடங்கியது. இவ்வேலையில் பண்ணைமுறை மன்றமானது, நூறு, கோட்டம் ஆகியவற்றிலுள்ள முறைமன்றங்கள் தனி நில உடைமைகளைப் பற்றி மரபுரிமையாளரிடை எழும் வழக்குகளைத் தீர்த்ததை ஒத்திருந்தது. மேலும் இப்பண்ணை முறைமன்றம் தன்னிடத்திலுள்ள பதிவேட்டிலுள்ள குறிப்புக்களைச் சான்றாகக் கொண்டு நிலஉரிமையை மாற்றவும், விற்கவும் உடன்பாடு கொடுத்தது. வழக்கமே அது செயல்படும் சுற்றளவுக்குச் சட்டமாக இருந்தது; வழக்கமே பண்ணைமுறைச் சட்டமாக அமைந்தது. இவ் வழக்கத்தின்படி நாளாவட்டத்தில் அடிமையானவர் தம்மால் காத்துக் கொள்ளக்கூடிய உரிமைகளை அடைந்தார்; இவ்வாறு அடிமை அடைந்த மாற்றமே ஊழியர் (Serf) என்ற நிலையாகும்.

அடிமைக்கும் ஊழியருக்கும் தொழில் துறையில் வேறுபாடு உண்டு. ஊழியரெனப் படுவோர் முழு உரிமையுமுடைய தனி ஆளுக்குரிய உரிமைகளில் முழுவதையுமன்றி ஒரு சிலவற்றை அடைந்தவர். இடைக்காலத்திய இவ்வூழிய நிலையே, பண்டைக் காலத்திய அடிமைத் தொழிலாளி, இக்காலத்திய உரிமையுடைய தனித் தொழிலாளியாக மாறுதற்கு அமைந்த ஒரு இடைப்பட்ட நிலையாகும். வேறு வகையாகச் சொல்லப்போனால் அது ஒரு தற்காலிக நிலையாகும். அது இருந்த காலத்தில் அடிமைக்கும், முழு உரிமைபெற்ற தனியாளுக்கும் இடைப்பட்டதாகிய இந்நிலைக்குப் பல்வேறு காலங்களில், பல்வேறு இடங்களில் சார்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன; நடைமுறையிலே ஒரே காலத்தில் ஒரே பண்ணையில் பல தரப்பட்ட உரிமை நிலைகளும், அவற்றிற்கொத்த பொருளியல் நற்பயன்களும் இருந்தன. இச் செய்திகளைத் தவிர, நார்மானியரது காலத்தில் மிகத் தெளிவாக உள்ள சான்றுகள் நமக்குக் கிடைக்கிறவரை, இங்கிலாந்தில் சிறிதளவு உரிமையோடு

இருந்த இந்த வகுப்பினரைப்பற்றி வேருென்றுஞ் சொல்வதற்கில்லே. ஓரளவுக்குப் பொதுச் சட்டமானது இவ்வூழியரது நிலேயை மக்கள் என்ற நிலேயாக ஒப்புக்கொண்டது. இவ்வூழியருக்கு மிகச் சிறியதான அளவில் மதிப்புத் தொகையானது விதிக்கப்பட்டது; அவரை அவரது மேலாள் வலிய முறையில் நடத்தவோ, கொடுமை செய்யவோ முடியாது; அவரது மண உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது; நாட்டின் குற்றச் சட்டத்திற்கும் அவர் பொறுப்பானவரென்பது அவரால் நேராகவோ, அவரது மேலாள் மூலமாகவோ ஏற்றுக்கொள்ளப்பட்டது. சாக்சனியர் ஆட்சிக்கால முழுவதிலும், முதலில் முழு உரிமையாளராக இருந்த மக்கள் சிறிது சிறிதாகப் பொருளியலில் முழுவதும் பெரிய நில உடைமையாளரைச் சார்ந்து வரவும், இவ்வூழியர் வகுப்பு எண்ணிக்கையில் கூடுதலாயிற்று. இவ்வாறு புதிதாக இவ்வகுப்பில் சேர்ந்தவர் தங்களது பழைய உரிமைகளேயும் வைத்திருந்தனர். எனினும் இவ்வாறு இவர்கள் புதிதாக இந் நிலேயில் சேர்ந்தமையால், உரிமைகளோடு இந்நிலேக்கு வந்தவர்களுக்கும், அடிமை நிலேயிலிருந்து ஊழியர் நிலேக்கு உயர்ந்தவர்களுக்கும் வேறுபாடு மிகவும் சுருங்கி நீங்கியது.

மக்களிடையே உள்ள வகுப்புப் பாகுபாடுகளே விட, நிலம் வைத்திருப்பதில் மிகக் குறைவான பாகுபாடுகள் இருந்தன; எனினும் நில உடைமைப் பாகுபாடுகள் ஓரளவு மக்களது தரத்துக்கு ஒப்பவே இருந்தன. நிலவார முறை (Land tenure) இருவகையாக இருந்தது; ஒன்று தனியாள் வாரமுறை; மற்ருென்று அடிமையின் நிலவார முறையாகும். ஆனல் இம் முறைகளும், ஆட்களின் மதிப்பின் தரங்களும் காலப்போக்கில் மாறுதலடைந்தன. ஜெர்மனியரது உறவுக் குழுவினரான பிராங்கியர், சாக்சனியர் ஆகியோரின் பொருளியல், சட்ட நிலேயங்களினின்றும், அவர்கள் ரோமானிய மாகாணங்களில் குடியேறிப் பல தலேமுறைகளாகியும் ஒரு நிலேயான வேளாண்மை செய்யும் குடியினராக மாறவில்லே யென்பது தெரிகிறது. அப்பொழுது முழு உரிமை என்ற முறையோடும், கூட்டு வேளாண்மை என்ற முறையோடும் உள்ள தனி உரிமைச் சிற்றூரும், ஏதேனும் ஒரு பெருமகனுடைய நிலத்தின் பகுதியாகி அவரைச் சார்ந்துள்ள சிற்றூர்களும் அருகருகில் இருந்து வந்தன. இங்கிலாந்தில் இத் தனிச் சமுதாயச் சிற்றூர்கள் நார்மானியர் வெற்றிக்குப் பிந்திய காலத்திலும் நீடித்து இருந்தன. இவ்வூர்களில் எழுந்த வேளாண்மை முறையே பிற்காலத்தில் படைமானியப் பண்ணே முறையை (Feudal, manorial organization) அமைப்பதற்கு ஏற்ற இயல்பான அடிப்படையாக அமைந்தது. சிற்றூரிலுள்ள பயிரிடப்படும் நிலமானது

இரண்டு அல்லது மூன்று பெரிய வயல்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வயலும் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரே முறையில் பயிர் செய்யப்பட்டது. இவ்வயல்கள் தனியாட்களால் பயிரிடப்படுவதற்காகச் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பல துண்டுகள் சேர்ந்த ஒவ்வொரு தொகுதியையும் ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் வைத்திருந்தது. எனவே ஒரு குடும்பத்தின் சொத்து பல பல வயல்களில் சிறு சிறு துண்டுகளாகப் பிரிந்திருந்தது. அவை இருந்த பெரிய வயல்களுக்குத் திட்டமிடப்பட்ட பயிர் முறையே சிறு துண்டுகளுக்கும் பொருந்துவதாகும்; அவற்றை மரபுரிமையாக அடைவதோ, மாற்றுவதோ அவ்வூரின் வழக்கத்தை ஒட்டி நடைபெற்றது. பயிரிடப்படும் நிலங்களைத் தவிர ஊருக்குப் பொதுவான பரந்த மேய்ச்சல் நிலங்கள் (Pasturelands) உண்டு. இது அக்காலத்திய சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாதது. ஊருக்குப் பொதுவான விறகுக் காடும் இருந்தது; இவற்றைப் பயன்படுத்துதற்கு ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை, அவரவருக்குரிய நிலத்தின் அளவைப் பொறுத்திருந்தது.

இவ்வாறு அமைந்த அக்காலத்திய சமுதாயமானது எவ்வாறு கொந்தளிப்பான காலங்களில் ஏதேனும் வலிமிக்க ஒரு பெருமகனது காவலுக்குள் வந்தது என்பதை யாவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். பெருமகன் தங்களுக்கு அளிக்கும் காப்புக்கு ஈடாகத் தாங்கள் அவருக்கு அளித்த பணமோ, கடமைகளோ பிற்காலத்தில் அவர்களுடைய நிலத்தையும், நிலவாரமுறையையும் பொறுத்து அமைவதாக இருந்தது. எனவே முதலில் தனி உரிமையாளரது உடைமையாக இருந்த நிலம் பிற்காலத்தில் பெருமகனைச் சார்ந்துள்ள பண்ணை நிலமாக மாறிற்று. இங்கிலாந்தின் மேற்குப் பகுதிகளிலும், வேறு பல இடங்களிலும் பெருமகனைச் சார்ந்துள்ளதும், தன்னுரிமையற்ற நிலக்குத்தகையாளரே (Tenants) மிகுந்ததுமான பல சமுதாயங்கள் தோன்றின. இவ் வகையில் தான் சமுதாயம் நிலையாக வளரும் தன்மையிலிருந்தது; இதற்குத் தடையாக வடக்கிலும், வடகிழக்கிலும் இருந்தவை புதிய டியூட்டானியராகிய டேனியருடைய குடியேற்ற நாடுகளே; இப்படையெடுப்பிலும் கூட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இவ்வளர்ச்சி தடைப்பட்டு, பழையமுறை சிறிது காலத்துக்கு நடைமுறையிலிருந்தது. இவற்றின் பயனாக, நார்மானியர் ஆட்சியாளராக வந்த காலத்துப், பெருமகன் ஆட்சி உரிமையே எங்கும் ஏற்பட்ட விதியாகி விட்டது; தனி உரிமை பெற்ற சிற்றூர் என்பது ஒரு விதிவிலக்காகவே அமைந்திருந்தது; பண்ணை முறை என்பது பெருமகனது மேலாட்சிக்குட்பட்ட

தாயினும், சட்டபடி யமைந்த சமுதாயமாயினும், அல்லது வேளாண்மைக்காக அமைந்த அமைப்பாயினும், எவ்வாறுயினும் அது வளர்ந்து முற்றிய நிலேயில் நார்மானியர் காலத்துக்கு முன்னுல் இல்லே; நார்மானிய வெற்றிக்குப் பின்னர் அது நாடு முழுவதும் பரவியிருந்ததைப் போலவும் அது முதலில் இல்லே.

மேலிருந்து அடிவரை சமுதாய நில உரிமை வழக்குகளேப் பார்த்தால், அரசாங்கம் அக்காலத்தில் குடியாளேப் பொதுச் சட்டத்தின் ஒரு பொருளாகக் கருதியது போல, இங்கிலாந்தி லுள்ள எல்லா நிலங்களேயும் ஒன்று அல்லது இரண்டு உரிமைப் பத்திரங்களே அடிப்படையாகக் கொண்டு மக்கள் கைவசத்தில் வைத்திருந்தனர். அது மக்கள் நிலமாகவோ (Folkland) அல்லது பட்டய நிலமாகவோ (Bookland) இருந்தது. மக்கள் நிலமென்பது எழுதப்பட்ட உரிமைப் பத்திரத்தையோ, எழுதப்பட்ட உறுதி யையோ கொண்டு அல்லாமல், மக்கள் சட்டம் அல்லது மக்கள் உரிமை எனப்படும் சமுதாயத்தினுடைய வழக்கமென்னும் சட்டத் தையே அடிப்படையாகக் கொண்டது. அது இன்னொருடைய உடைமை என்பதற்குச் சான்று, அது அவருடையதே, என்பதாகச் சமுதாயத்திற்கு உள்ள நினைவுதான். அதன் உரிமைபற்றிய வழக்கு கள் சமுதாயத்தினருக்குரிய கோட்டம் அல்லது நூறு என்ற முறை மன்றங்களில் தான் தீர்க்கப்பட்டன: அது ஒரு இல்வாழ்வாருக்கு உரிய நிலேபேறுன சொத்து எனக் கருதப்பட்டபோதும், மக்கள் நிலம் என்பது முதலில் சமுதாயத்திற்குப் பொதுவாக உரிய சொத் தைப் போன்றிருந்தது. அதை இறுதிப்பத்திர முறையினுல்[1] தன் வழிவருவோருக்கு எவரும் விட்டுச் செல்ல முடியாது. அதை வழக்க முறையை ஒட்டியே மரபு உரிமையாகப் பெற முடியும். அதைத் தனியாள் தனது வாழ்நாளில் தேடியோ, அல்லது அதன் ஒரு பகுதியை அவர் மரபுரிமையாகப் பெற்றுே இருந்தாலல்லாமல், அந்த மக்கள் நிலத்தை அதில் தொடர்புடையவர்களது உடன் பாடு இல்லாமல் மாற்ற முடியாது. தாளுகத் தேடிய பகுதியை மட்டும், அதைத் தேடியவர் தான் விரும்பியவாறு விற்றுவிடலாம்.

இதற்கு மாருகப் பட்டய நிலமென்பது எழுதப்பட்ட ஒரு உரிமை (Title), அல்லது நிலப்பதிவேடு, அல்லது நிலப்பட்டயம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு வைக்கப்பட்டிருந்ததாகும். இதை வைத்திருப்பவர் இதனேத் தாம் விரும்பியவாறு விற்கவோ, தம் வழியினருக்கு ஓர் இறுதி விருப்பப் பத்திரத்தின் மூலம் விட்டுச் செல்லவோ முடியும். இந்நிலம் அரசரால் கொடுக்கப்பட்ட கொடை நிலமாகும். இக்கொடை பட்டயத்தில் எழுதப்பட்டது;

1. Will

மூதறிஞர் அவையின் இசைவைப் பெற்று அளிக்கப்பட்டது; இவ்வவையின் உடன்பாடானது, மக்கள் நிலத்தை விற்பதற்கு உள்ளூர்ச் சமுதாயத்தினர் கொடுக்க வேண்டிய உடன்பாட்டை ஒத்திருந்தது. இக் கொடைகளாக அளிக்கப்பட்டவை மிகப்பெரிய நிலங்களாகும்; இவை பொதுவாகச் சமய நிலையங்களுக்கும், துறவி மடங்களுக்கும், சில சமயங்களில் பெருமக்களுக்கும் அளிக்கப்பட்டன. இந்நிலங்களை வழங்கும் போது இவற்றோடு உரிய ஆட்சி வேலைகளும் சேர்த்து வழங்கப்படவில்லை; ஆயினும் மூன்று வித நிலைகளில் அவர்கள் செய்ய வேண்டிய பணிகளும் உள்ளூரில் பேராட்சியால் முறைமை செய்தலும் அவர்கள் செய்தேயாக வேண்டும். சில சமயங்களில் ஏற்கெனவே மக்கள் நிலமாயிருந்ததையே அரசர்கள் பட்டய நிலமாகக் கொடுத்து, அதனைப் பெறுபவர் தமது விருப்பம் போல் விற்கவோ, மற்றவருக்கு விட்டுச் செல்லவோ செய்வதற்கெளிதாக ஆக்கினர். நிலத்தைப் பெறுபவருக்குப் பின் வழியினரில்லா விட்டால், அவரது நிலம் அரசரிடத்துத் திரும்பப் போய்ச்சேரும். பட்டய நிலமென்பது மக்கள் நிலத்தைவிடப் பிந்திய காலத்தில் தோன்றிய நிலம் பெறும் வகையாகும். சாக்சனியர் முதலில் குடியேறியதும் அவர்கள் பட்டய முறையை எழுதப்பட்ட ஆவண முறையாகக் கற்றறிந்ததைப் போல, பட்டய நில முறையையும் அறிந்தனர்.

இந்த இருவகைப்பட்ட நிலங்களும் அவற்றை வைத்திருப்பவரால் மற்றொருவருக்கு ஓர் எழுதப்பட்ட பிடிபாட்டின் (Document) மூலம் கொடுக்கப்படலாம்; இப் பிடிபாட்டில் நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிட வேண்டிய நிலைகளும், அது திரும்பவும் கொடுத்தவரைச் சேரும் காலமும் குறிக்கப்பட்டிருக்கும். குத்தகைக் காலமானது மூன்று வாழ்க்கைகளாகும். அதாவது மூன்று உடனடுத்து வந்த தலைமுறை வழியினரது காலமாகும். இவ்வாறு கொடுக்கப்படும் நிலத்திற்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட நிலம் என்று பெயர். அரசாங்கத்தையோ பொது மக்களையோ பொறுத்த வரையில் இக் கடனாகக் கொடுக்கப்பட்ட நிலம் உடைமை நிலையில் யாதொரு மாற்றமும் உண்டாக்கவில்லை; ஏனெனில் நிலத்தைக் கொடுத்தவரே அதன் உரிமையாளராகக் கருதப்பட்டார். இதனால் நிலத்தைப் புதியதாகப் பெற்றவர், கொடுத்தவருக்கு ஆங்கிலோ - சாக்சன் முறைப்படி உள்ள சில கடமைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புடையவர் ஆயினர்; ஏனெனில் இப்பொறுப்பை அவர் அரசாங்கத்துக்கு நேராகச் செலுத்த முடியாது. அரசாங்கம் நிலத்தைக் கொடுத்தவரையே பொறுப்பும் உடைய உரிமையாளரென ஒப்புக்கொண்டது. நிலத்தைப் பெற்றவர் செலுத்த வேண்டிய கடமை

களில் ஒன்று படைத்தொண்டும் ஆகும்; இப் புதிய ஏற்பாடு படைமானிய நிலமுறைக்கு ஒத்த தொடர்பை ஏற்படுத்திற்று. எனினும் இவ்வாறு கூறுவது ஓர் ஒற்றுமையை மிகைப்படுத்திக் கூறுவதாகும்; ஏனெனில் சாக்சனிய காலத்தில் குத்தகையாளர் எவ்விதமான கடமைகளையும் செய்ய வேண்டியவரல்லர். அவர் அப்பொழுது நிலத்தை யொட்டி வந்து கொண்டிருந்த ஒரே ஒரு கடமையை மட்டும் நிறைவேற்ற வேண்டியவர் ஆவர். இப்புதிய தொடர்பானது அவருடைய நிலத்திற்கும் நாட்டிலுள்ள மற்ற எந்த நிலத்திற்கும், அது மக்கள் நிலமாயினும் அல்லது பட்டய நிலமாயினும், யாதொரு வேறுபாடு மில்லாமல் செய்தது. இதைப் போல ஒரு தொடர்பு, படைமானிய காலத்தில் தோன்றிய கூலிக் குப் பயிரிடும் பண்ணை முறையை ஒத்திருந்தது; இம்முறைச் சட்டப் படி குத்தகையாளர் ஒரு சில வேலைகளைச் செய்தார்; அதாவது தனக்கு அடுத்தாற்போல் உள்ள பெருமகனுக்குச் செய்வதைவிட அரசருக்குச் சில தொண்டுகள் செய்தார். ஆயினும் இதனால் அவர் படைமானியக் குத்தகையாளராக ஆகிவிடவில்லை.

நார்மானிய வெற்றிக்கு முந்திய இங்கிலாந்தில் படைமானிய முறை இருந்த தென்ற கேள்வியை நாம் நோக்கும் போது, படை மானிய முறை யென்ற சொல்லுக்கு என்ன-பொருள் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது. சாதாரண வழக்கில் அச்சொல் எல்லா வகைப்பட்ட சார்பான தொடர்புகளையும்— அரசியல் தொடர்பாயினும் சரி, பொருளியல் தொடர்பாயினும் சரி—அவற்றை எவ்வித நிலையங்களோடும் தொடர்பு படுத்தாமல் நோக்குவதைக் குறிப்பிடுவதாகும். இப் பொருளில் இச்சொல்லை நாம் பயன்படுத்தினால், மேலே குறிப்பிட்ட ஒரு சில செயல்கள் படைமானிய முறையைச் சேர்ந்தவை என்று நாம் கொள்ளுதல் தகும். ஆயினும் அரசியல், பொருளியல் நிலையங்களைப்பற்றி ஆராய்கிற எவரும் தெளிவிலாத பொதுப்படையான பொருள் களில் சொற்களைக் கையாளுதல் கூடாது. அவர் அச்சொல்லுக்கு உள்ள பல்வேறு பொருள்களின் பாகுபாட்டையும் நுட்பமாக அறிந்து நிலையங்களின் உண்மையான தன்மைகளையும் ஆராய்தல் வேண்டும்; இல்லாவிடில் அவரது அறிவால் யாதொரு பயனும் இராது. மேலும் பலவற்றைப்பற்றிய தவறான கருத்துக்களும் இருக்கும். முதலில் முறை அல்லது ஒழுங்கு என்ற சொல்லைப் பற்றி நாம் குறிப்பிடுதல் வேண்டும். இச்சொல்லுக்கு முறையாய் அமைந்த அல்லது ஒழுங்காய் அமைந்த என்ற பொருள் கொண் டால், இச்சொல்லை இந்நிலையில் ஆளுவது தவறாகும்; ஏனெனில் படைமானிய முறையானது பல்வேறு தன்மைகளில் நாட்டுக்கு நாடு அல்லது ஒரே நாட்டின் பகுதிக்குப் பகுதி வேறுபட்டதாக

இருந்தது. எனினும் படைமானிய முறை என்பதாக ஒன்று சமுதாயத்தின் உச்சி முதல் அடிவரை பரவியதாகத் தோன்றுகிற வரையில் மக்களுக்குள் ஒருவரை யொருவர் சார்ந்துள்ள தொடர்பு நிலைகள் உண்டாயின.

பதினொன்றும், பன்னிரண்டாம் நூற்றுண்டுகளில் மேற்கு ஐரோப்பியப் படைமானிய முறையில் இரண்டு வேறுபட்ட தொடர்புகளும், நலன்களும் பொருந்தியிருந்தன. ஒருபக்கம் பெருமக்களும், வீரர்களும், குடியானவர்களும், அவர்களுடைய முறைமன்றங்களும், கோட்டைகளும், போட்டிச் சண்டைகளும் ஆகிய இத்தன்மைகளெல்லாம் நிறைந்த ஒருவகையான படை மானிய அமைப்பை நாம் காண்கிறோம். ஆயினும் இத்தகைய படைமானிய முறையின் நோக்கம் எளியோரைக் காக்கும் அருட்பண்பு (Chivalry) என்பதல்ல; இப்பண்பு வளர்ந்த காலத்து மேற் கூறிய படைமானிய முறை மறைந்து விட்டது. எனவே பொதுநலக் கருத்துக்களும், போக்குவரவு வசதிகளும், செம்மையாக அமைக்கப்பட்ட நடு அரசாங்கமும் நாட்டில் இல்லாதிருந்த அந்தக் காலத்தில், சமுதாயத்திற்கு ஓரளவு பயனுள்ள ஒரு வகைப்பட்ட அரசியலமைப்பைத் தருவதே இப் படைமானிய முறையின் நோக்கமாகும். இவ்வகையில் பார்க்கும் பொழுது அப்படை மானிய முறை அரசியல் தன்மையுள்ள படைமானிய முறையாகும். இம்முறையில் பண்ணையாள் தனது பெருமகனிடமிருந்து வாங்கிய நிலத்திற்கெதிராகத் தான் அவருக்குக் கொடுக்கும் தொண்டுகள் அரசியல் தொண்டுகளாகும். இத் தொண்டுகளின் பயனுகத்தான் படை அமைக்கப்பட்டது; முறை மன்றமும், அறிவுரை மன்றமும், சட்டமன்றமும் அமைக்கப் பட்டன. அக்காலத்தில் நாட்டைக் காப்பது என்பது மிகத் தேவையான ஒரு பொறுப்பாக இருந்தமையால், இத்தகைய படைமானிய முறையானது படை அமைப்பைப் பெரும்பாலும் ஒட்டியதாயிருந்தது; ஆயினும் நாடு காவல் என்பது ஒன்று மட்டுமே அதன் வேலையன்று. அதில் அமைந்த பெருமகன் ஆட்சியின் அலுவல்களை யெல்லாம் குறைவற நடத்தி வைக்க வேண்டிய பொறுப்புள்ள ஒருவராக இம் முறையில் இருந்தார். அவருடைய வகுப்பிலிருந்தே ஆட்சி அலுவலாளர்களும், முறை மன்ற நடுவர்களும், அரசருடைய உயர்தர அலுவலாளர்களும், ஒரு நடு அரசாங்கம் அமைக்கப்பட்டபொழுது, அமர்த்தப் பட்டனர். பெயரளவில் மட்டுமே ஒரு நடு அரசாங்கம் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் தான், படைமானிய முறையின் ஒரு பெரிய தொண்டு நிறைவேற்றப் பட்டது; அப்பொழுது அமைதியும் சட்டமும் நிலைநாட்டப்பட்டன என்றுல், அது உள்ளூரிலுள்ள

பெருமகன் தனக்கு மேலாக அடுத்தடுத்து அரசர் வரை உள்ள பெருமக்களிடம் நம்பிக்கை வைத்து இம் முறை பற்றிய கருத்து செயல்படும் வண்ணம் நடந்து கொண்டதேயாகும். இதனல் நாடு எதிர்காலத்தில் நல்ல அமைப்புக்கு உள்ளாகும்படியாக நடைமுறையில் இருந்து வரலாயிற்று. இத்தகைய படைமானிய முறை ரோமானியப் பேரரசானது மறைந்து கொண்டிருந்த காலத்தில், ரோமானிய அரசியல் நிலையைப் பழக்கங்களிலிருந்து தோன்றிய முறையாகும். இப்பழக்கங்கள் மிக மெதுவாக வளர்ந்தன; எனவே ஒன்பதாம் நூற்ருண்டின் கடைசியில் தான் ஓர் அரசியல் முறைக்கு ஒத்த நிலையில் படைமானிய முறையானது தோன்றிற்று என்பதாக நாம் சொல்லலாம். அது கடைசியாகப் பத்தாம் நூற்ருண்டில் முழு வளர்ச்சி பெற்றது; மேற்கு ஐரோப்பாவில் பெரிய படை மானிய முறைக் காலங்களாகக் கருதப்படுபவை பதினென்று பன்னிரண்டாம் நூற்ருண்டுகளாகும். அது பதின்மூன்ரும் நூற்ருண்டில் விரைவாகத் தேய்ந்து வந்து பதினன்காம் நூற்ருண்டில் மறைந்து விட்டது. அவ்வாறு அது மறையும்போது எதிர்காலச் சமுதாய அமைப்பில் பெருமக்கள் நிலை என்பதாக ஒரு வகுப்பை ஏற்படுத்தி விட்டுச் சென்றது.

இந்த அரசியலமைப்பானது, சமுதாயத்தில் பரவும்போது, ஏறக்குறைய அதே காலத்தில் ஒரு வேளாண்மை அமைப்பு இருந்தது; இவ்வமைப்பும் மேலே குறிப்பிட்ட அரசியலமைப்பு தோன்றிய அதே காலத்தில் அதே காரணத்துக்காகத் தோன்றிஞலும், அது முன்பே இருந்த இயற்கைச் சூழலினின்றும் நிறுவனங்களினின்றும் தோன்றியதாகும்; ஆஞல் இப்புதிய அரசியலமைப்பு இவ்வேளாண்மை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும். இதுவே முன்னே குறிப்பிடப்பட்ட பண்ணை அமைப்பு முறை (Manorial organization) ஆகும். இம்முறை சிற்றூர்ச் சமுதாயத்தையும், அதற்குரிய நிலங்களையும் அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டதாகும்; இதைப்பற்றிய நுட்பமான குறிப்புக்கள் மேலே கொடுக்கப்படும். இப்பண்ணை அமைப்பு முறையின் பல தன்மைகள், அரசியல், படைமானிய முறையின் (Political feudalism) தன்மைகளை ஒத்திருக்கின்றன. இம்முறை ஏற் கனவே பழக்கத்திலிருந்த சார்பான நில உரிமைக்கட்டுப்பாடுகளையும், பெருமக்களைச் சார்ந்துள்ள மக்கள் தொடர்புகளையும் பழக்கத்தில் வைத்துக்கொண்டது; இம்முறை பெருமகனின் தனிப்பட்ட ஆட்சிமுறையை, அவரது உரிமையற்ற குத்தகையாளர் மீதும், உரிமையுள்ள தனியாட்கள் மீதும் விதித்தது. ஆயினும் இதில் ஏற்படுத்தப்பட்ட நிலையங்களின் தன்மைகளும், நோக்கங்களும் முற்றிலும் வேருனவை. அந்நாளில் முதல் போடு

வதற்குரிய தொழில் வேளாண்மையே ஆகும்; நெடுங்காலமாக நீடித்து வந்திருப்பது இத்தொழில் ஒன்றே. வேளாண்மை செய்பவரே படைமானிய முறைக் காலத்தில் சமுதாயத்தைத் தாங்கியவர். தான் அடைந்த மானியத்துக்கு எதிராக அரசாங்கத்திற்குச் சில அரசியல் அலுவல்களைச் செய்த பெருமகன், அவ்வலுவல்களைச் செய்தற்கும், தனது தரத்தை வைத்துக் கொள்ளுதற்கும் வேண்டிய பொருள் வரும்படியை அம்மானியப் பண்ணைகளிலிருந்து பெற்றார். இதே மாதிரியாக அரசரும் தனக்கு வேண்டிய வரும்படியைத் தனது பண்ணைகளிலிருந்து பெற்றார்.

பொருளியல் அல்லது பண்ணை அமைப்பை ஒட்டிய படைமானிய முறை, அரசியல் படை மானிய முறை என்ற இரண்டு வகைகளும் பின்னால் எழுந்த பேரரசின் வேறுபட்ட நிலையங்களில் தோன்றின; நிலையங்களிலும், சட்டத்திலும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. படைமானிய முறைக் காலத்தில் இரண்டும் கலந்ததில்லை. படைத்துறை நில உரிமைக் கட்டுப்பாட்டுக்கும்[1] பொருளியல் அல்லது பண்ணை முறை நில உரிமைக் கட்டுப்பாட்டுக்கும்[2] வேறுபாடு இருந்தது; பெருமக்கள் நில உரிமைக் கட்டுப்பாட்டுக்கும், அடிமைகளது நில உரிமைக் கட்டுப்பாட்டுக்கும் வேறுபாடு இருந்தது. ஒரே நிலத்தை ஒரே காலத்தில் இருவர், இவ்விரு வகைப்பட்ட நில உரிமைக் கட்டுப்பாடுகளில் வைத்திருக்க இயலும். பெருமக்கள் ஒவ்வொருவரும் அரசரிடமிருந்து பண்ணை நிலத்தைப் பெற்று அதற்கு எதிராகக் குறிப்பிட்ட வீரர் பணியைத் தம் செலவில் கொடுக்க வேண்டியவரானார். அவ்வாறு பெறப்பட்ட அதே பண்ணை நிலத்தில் பெரும்பகுதியை உரிமையுள்ள குத்தகையாளரும் (Free tenants), அடிமையான குத்தகையாளரும் (Servile tenants) வைத்திருந்தனர். இவரது நில உரிமைக் காலங்களில் தான் பண்ணையைப் பயிரிட்டு வரும்படி பெறுதற்கு வேண்டிய தொழிலாளிகள் அதில் வேலை செய்தற்குக் கிடைத்தனர். ஆனால் ஒவ்வொரு நில உரிமைக் கட்டுப்பாடும் மற்றதனின்றும் நுட்பமாகப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தது; ஒவ்வொன்றும் அததற்குரிய சட்டவிதிகளுக்குட்பட்டது; அவைகள் அததற்குரிய முறை மன்றங்களில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. இவ்விருவகையான படைமானிய முறைகளும் தோற்றத்தில் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை யாகையால், அவைகளின் வரலாற்றுக் காலம் முழுவதும் அவை வேறுபட்டே தனித்து நின்றன; அதேபோல அவைகள் மறைந்தபோதும், ஒன்றைப்போலொன்று மறையவில்லை. பதின்மூன்றும் நூற்றாண்டில் அரசாங்கம் தனது அலுவல்களை நிறைவேற்றுவதற்குச் சிறந்த வழிகளைக் கண்டு

1. Military tenure. 2. Economic tenure.

பிடித்துக் கையாளத் தொடங்கியமையால், அரசியல் படைமானிய முறை அந்நூற்றுண்டின் இடையே மறையத் தொடங்கிற்று; பதினுன்காம் நூற்றுண்டுக்குப் பிறகு அது நீடித்தே இருக்கவில்லை. ஆனல் வேளாண்மைக்குகந்த சிறந்த முறைகள் மிக மெள்ள மெள்ளத்தான் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே பண்ணை வேளாண்மை முறையும், அதன் சட்டங்களும், முறைமன்றங்களும் மேலும் இருநூறு ஆண்டுகளுக்கு வழக்கத்தில் இருந்துவந்தன. இப்பண்ணை முறை பதினேழாம் நூற்றுண்டில்கூடச் சில அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் புகுத்தப்பட்டது; இக்குடியேற்ற நாட்டுப் பண்ணை முறை மன்றங்களின் அச்சிடப்பட்ட பிடிபாடுகள் நமக்கு இப்போது கிடைக்கின்றன.

ஆங்கிலோ - சாக்சனியரது இங்கிலாந்தில் மேலே குறிப்பிட்டவாறு நிலத்தைப் பயிரிடுதற்கும், அடிமைகள் நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிடுதற்குமாகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள், பொருளியல் படைமானிய முறையை ஒட்டி இருந்தமையால், இங்கிலாந்தில் நார்மானியரது வருகைக்கு முன் இருந்தது பொருளியல் படைமானிய முறை என்று நாம் சொல்லலாம். இத்தகைய படை மானிய முறை ரோமானியப் பேரரசு முழுவதிலும் தோன்றுதற்குத் தக்க சூழ்நிலைகளிருந்ததைப் போல, பிரிட்டனிலும் இம் முறையும், அது தோன்றுதற்குரிய நிலையங்களும், சூழ்நிலைகளும் இருந்தன. சாக்சனியரது இங்கிலாந்தில் பண்ணை முறை என்பது எல்லா அமைப்புக்களோடும் பொருந்தி வழக்கத்தில் இல்லை என்பது உண்மையே; பண்ணை முறை என்ற பெயரும் நடை முறையில் கிடையாது. ஆயினும் அங்கு அப்பொழுது இருந்த முறையைப் பண்ணை முறையினின்றும் வேறுபடுத்திக் காட்ட இயலாது; நாட்டை முற்றிலும் பண்ணை வேளாண்மை முறைக்கு மாற்றுவதும் எளிதாக இருந்தது. இதற்காக நிலையங்களை மாற்றவோ, உண்டாக்கவோ வேண்டுமென்பதும் இல்லை. பண்ணையில் தனித்த முறை மன்றங்கள் முழுதும் வளர்ச்சியுற்ற நிலையிலிருந்தன. உள் நாட்டிலுள்ள அரசாங்க முறை மன்றங்களின் ஆட்சி வரம்பு பெரும்பாலும் பண்ணை முறை மன்றங்களுள் அடங்கி விட்டது, அல்லது சேர்க்கப்பட்டது; எனவே நார்மானியர் இம் முறை மன்றங்களின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டுமென முயன்றுலன்றி, வேறு வகையாக மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்பது இல்லை.

எனவே, இக்காலத்தில், இங்கிலாந்தில், குடிமக்கள் ஒவ்வொருவரும் அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டிய பணிகளையும், படைத்துறை அலுவல்களையும், முறை மன்றத்திலும், சட்ட மன்றத்திலும் செய்ய வேண்டிய அலுவல்களையும் அரசாங்கத்துக்

குக்கொடுக்காமல், தனியார் ஒருவருக்கு, அவரிடமிருந்து பெற்ற நிலத்திற்கு ஈடான ஒரு குத்தகையாக, நான் அவரோடு தொடர்பு வைத்துக் கொண்டு, கொடுப்பது என்ற அரசியல் படைமானிய முறைக்கு மாற்றம் எதுவும் நடைபெறவில்லை. பல்வேறு பழைய தனித்த சூழ்நிலைகளிலிருந்து காலப்போக்கில் அது தோன்றக் கூடிய நிலையிலிருந்ததை நாம் காண்கிறோம். சாக்சனிய நாட்டில் கோட்ட அரசியல் மூலமாக அரசர் குடிமக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுவதென்பது நெடுங்காலத்துக்கு இருந்தது. அவ்வரசியலிலுள்ள உறுப்பினர் அரசருக்குப் பற்றுறுதியும் (Loyalty), அலுவல்களும் செய்து, அதற்கு ஈடாக அளிக்கப்பட்ட நிலத்தில் இருந்தனர். காப்புக்காக வலியவரிடம் ஆளையே ஒப்படைத்துக் கொடுத்தலும் (Commendation), பெருமளவில் நடைபெற்றன; ஆட்களுக்குச் சார்பான தொடர்புகளும், நிலங்களுக்குச் சார்பான தொடர்புகளும் ஏற்பட்டன. சில நிலைமைகளில், தன்னைக் காப்புக்காக வலியவரிடம் ஒப்படைத்துக் கொடுத்தவர், அவ்வலிய பெருமகனுக்குப் பற்றுறுதி யுடையராக இருப்பதாக உறுதி மொழி கூறினர். இவ்வுறுதி மொழி ஒரு கிழாள் (வேசல் - Vassal) தனது பெருமகன் முன்பாக எடுக்கும் உறுதிமொழியை ஒத்திருந்தது. எனவே இத்தொடர்பும் கிழாள் தன்மை (Vassalage) என்பதாகவே கருதப்பட்டது. இவ்வாறு அதைக் குறிப்பிடுவதும் தவறாகாது. ஏனெனில் அதே காலத்திய பிராங்கியர் நாட்டிலும் இதே மாதிரியான ஒப்படைத்துக் கொடுத்தலினால் ஏற்பட்ட தொடர்புகளைக் குறிப்பிடுதற்கு இச்சொல் வழங்கப்பட்டது. ஆயினும் இச்சொல்லினால் அப்போது கிழாள் என்ற வகுப்பு மக்கள் அங்கு இருந்தனர் என்பது பெறப்படவில்லை. கிழாள் தன்மையோடு நிலமும் பெற்று, அவற்றுக் கெதிராக அரசாங்க அலுவல்களைச் செய்வது என்ற நிலைமைகளெல்லாம் தோன்றிப் பொருந்தியபோதுதான் அரசியல் படைமானிய முறை தோன்றலாயிற்று. கிழாள் என்ற நிலையிலிருப்பதனால் ஒருவருக்கு மானியம் கொடுக்கப்பட்டபோதும், அவருக்கு மானியம் கொடுக்கப்பட்டதனால் ஒரு சில படைத்துறை அரசியல் அலுவல்களுக்கு அவர் பொறுப்பாக ஆக்கப்பட்ட போதும், மேற்கு ஐரோப்பாவில் அரசியற் படைமானிய முறை தோன்றிற்று. இவ்விரண்டு முறைகளும் கலந்தே ஆங்கிலோ - சாக்சனியரது இங்கிலாந்தில் இருந்தன எனக் கூறினாலும், அவை அக்காலத்தே அவ்வாறு தான் இருந்தன என்பதற்கு யாதொரு சான்றும் இல்லை. கிழாள் தனது பற்றுறுதியைக் காட்டுமளவும், அலுவல்களைச் செய்யுமளவும், அவருக்கு நில உரிமைக்காலம் உண்டு என்ற நிலைமையும், மானியம் அளிக்கப்படு மென்ற

நிலைமையும் நார்மானியர் வெற்றிக்குப் பிறகே இங்கிலாந்தில் புகுத்தப்பட்டன.

சாக்சனிய அரசாங்கம் தனது பொதுவான அரசியல் அலுவல்களுக்கு ஏற்பாடு செய்த விதத்தை நாம் பார்க்கும்போது, அது முதலில் அம்மக்கள் இங்கிலாந்தில் குடியேறியபோது அமைக்கப்பட்ட பழைய உறவுக்குழு ஆட்சி முறையினின்றும் சிறிதும் வளர்ச்சியுறவில்லை என்பது தெரிகிறது. கொள்கையளவில் ஒவ்வொரு தனி ஆளும் தனது செலவிலேயே அரசாங்கத்துக்குப் படைத்துறையில் வேலை செய்தல் வேண்டும்; இவ்வாறு செய்யத் தவறியவர் மீது கடுந்தண்டப்பணம் ஒன்று (பயர்வைட் - Fyrewite) விதிக்கப்பட்டது. நடைமுறையில் தனியாட்களுக்கு நிலங்களைக் கொடுப்பதும், அந்நிலத்தினளவைப் பெருக்குவதென்பதும் பல இடைஞ்சல்களை உண்டாக்கின. இவ்விடைஞ்சல்கள் பிராங்கியப் பேரரசையாண்ட கரேர்லிஞ்சிய வழியினராய அரசர்களுக்குப் பெருந்தடையாக இருந்தன; எனவே இவற்றை நீக்குவதற்கு முயற்சிகளும் செய்யப்பட்டன. அவ்வப்பண்ணை நிலங்களில் பெருமக்கள் பலர் தோன்ற, தனியாட்கள் பலர் அவர்களுடன் சார்பான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள, வேளாண்மை செய்பவராக மாறிய குடிமக்களுக்குக் கோடை காலத்தில் படைத்துறைஅலுவல்கள் செய்வது மிகவும் தடையாக இருக்க, இந்நிலைமைகளில் தனியாட்களைக் கொண்டு பொதுப் படை திரட்டுவது அவ்வளவு உறுதியாகவும், கட்டுப்பாட்டுக் கடங்கியதாகவும் இருக்கவில்லை. எனவே பிந்திய சாக்சனியர் வரலாற்றில் பொதுவான அரசியல் அலுவல்களைச் செய்யும் கடமையை நிலத்தோடு பிணைத்து, நிலத்தை மானியமாகப் பெறுபவர் அதற்குத் தக்க அலுவல்களுக்கும் பொறுப்பாளியாவர் என்பதாக ஒரு முறையும், அவ்வாறு செய்யாமல் ஒரு சமுதாயத்தையே அவ்வலுவல்களுக்கீடாக ஒரு குறிப்பிட்ட தொகைக்குப் பொறுப்பாக ஆக்கி, படைவீரர்களுக்குரிய பொதுச் செலவைச் சமுதாயத்தினர் யாவரும் பகிர்ந்துகொள்ளுவது என்பதாக மற்றொரு முறையும் தோன்றத்தக்க ஒரு சூழ்நிலை ஏற்பட்டது, படைமானிய முறைக் காலத்துக்கு முந்திய பிராங்கியர் நாட்டில் இத்தகைய சமயத்துக்கேற்ற முறைகளெல்லாம் நெடுங்காலமாகக் கையாளப்படவில்லை; எவ்வழியில் போதிய அளவுள்ள படைத்துறை அலுவலைத் தேடுவது என்பது, நார்மானியர் வெற்றிக்காலம் வரும் வரையில் தீர்க்கப்படாத கேள்வியாயிருந்தது.

அரசாங்கத்துக்குப் பொதுவரி வருமானம் (Public revenue) என்பது அக்காலத்தில் மிகவும் வளர்ச்சியுறாதிருந்த நிலையில் உள்ள

ஒரு முறையாகும். வரி விதிப்பு முறை என்பதாக இக்காலத்திய பொருளில் அப்போது யாதொன்றும் இல்லை. எறக்குறைய வரி விதிப்பு முறையை ஒத்திருக்கின்ற 'டேனிகெல்டு' (Danegeld) எனப்படும் திறைப்பொருள் பத்தாம் நூற்றாண்டினிறுதியில் முதன் முதலாக வாங்கப்பட்டது. பத்திமானான எட்வர்டு என்னும் அரசரது (Edward the Confessor) ஆட்சிக்காலம் நீங்கலாக பதினோராம் நூற்றாண்டில் இது அவ்வப்போது அரசாங்கத்தால் மக்களிடமிருந்து வாங்கப்பட்டது; 120 ஏக்கர் நிலத்துக்கு (இந்த அளவுக்கு ஒரு ஹைடு - Hide என்பது பெயர்) இரண்டு சில்லிங்கு என்ற விகிதத்தில் அவ்வரி இருந்தது; ஆயினும் நார்மானியரது வெற்றிக்காலம் வரையில், ஆண்டு தோறும் ஒழுங்காக வாங்கப்பட்ட ஒரு வரி முறையாக அது அமைந்திருக்கவில்லை. அரசருக்கு வரவேண்டிய வருமானத்தில் பெரும்பகுதி அரசாங்க வருமானத்தினின்றும், தனியாகப் பிரிக்கப்படாமல், இரண்டு மூலாதாரங்களினின்றும் கிடைத்தது; அரசருக்குரிய நிலங்களிலிருந்து வரும் வருமானமும், கோட்டம், நூறு, பேரூர் ஆகிய உள்நாட்டு முறை மன்றங்களில் வாங்கப்படும் தண்டப்பணம், பறிமுதல் இவற்றிலுள்ள அரசருக்குரிய பங்குமே அவ்விரண்டு மூலாதாரங்களாவன. இவ்விரண்டையும் வாங்கிக் கொடுப்பதே 1066-ம் ஆண்டு வரை கொத்தவால் செய்து வந்த வேலை யாகும். இவ்வாறு நாம் துணிந்து கூற இயலாவிடினும், இம்மாதிரியான வழியில் வருமானம் திரட்டுவதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டதென்னலாம். உள் நாட்டு மாவட்டங்களில் இவ்விரண்டு வழிகளிலும் வருமானம் திரட்டப்பட்டது; கோட்டங்களின் கொத்தவால்கள் திரட்டிக் கொடுக்க வேண்டிய தொகையும் வரையறுக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கொத்தவால் வாங்க வேண்டிய தொகையில் குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தையன்றி, அரசராலேயே தீர்க்கப்பட்டு, அவ்வழியில் அவருக்காக ஒதுக்கப்பட்ட தண்டப்பணமும் வேறு இருந்தது. பிற்கூறப்பட்ட குற்ற வழக்குகளினின்றும் வாங்கக்கூடிய தண்டப்பணத்துக்குக் கொத்தவால் தனியாகக் கணக்கு வைத்திருந்து காட்டவேண்டும். அரசரால் தீர்க்கப்படும் முறையீடுகளில் (Pleas of the Crown) மூன்று வகைகள் சாக்சனியர் காலத்தில் தோன்றின; அவை, அரசருக்கெதிராக அமைதியைக் கலைக்கும் குற்றம், வீட்டில் வலுக்கட்டாயமாகப் புகும் குற்றம், ஒழுங்கை மீறும் குற்றம், அதாவது நாடு கடத்தப்பட்டவருக்குப் புகலிடம் அளித்தல் என்பனவாம். இவற்றோடு நாட்டின் பல பகுதிகளிலும் வேறு பல குற்றங்களும் இந்தப்

பட்டியலில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம். குற்றங்களுக்காக விதிக்கப்படும் தண்டப்பணம் முழுவதும் அரசரையே சேர்ந்தது: கடுந்தண்டப்பணம், சொத்தைப் பறிமுதல் செய்தல் ஆகிய இரண்டும் சேர்ந்ததே அரசரைச் சேரும் தண்டப் பணமாகும்.

இவற்றைத் தவிர ஆங்கிலோ—சாக்சனிய அரசர்களுக்கு உரியனவாக வேறு வருமான ஆதாரங்கள் கிடையாது; அவ்வாறு இருந்த ஒரு சில வருமானங்களும் சமய நிலையங்களுக்கோ அல்லது தனக்கு வேண்டிய தனிப்பட்ட ஆட்களுக்கோ அரசரால் அளிக்கப்பட்டன; அவ்வாறு இருந்த சில வருமானங்கள், பேரூர்களில் சந்தைகளிலும், துறைமுகங்களிலும், பெருவழிகளிலும் வாங்கப்பட்ட சுங்கங்கள், காசுகள் அச்சடிப்பதில் கிடைக்கும் சிறிதளவு ஊதியம், உடைந்து தகர்ந்த கப்பல்களைப் பிடித்துக் கொள்ளும் இடைக்காலத்திய உரிமை, தனியாக ஒருவருக்கு அரசரால் அளிக்கப்படும் காவல், உரிமை, சலுகை ஆகியவற்றிற்கு வாங்கப்படும் கட்டணங்கள் முதலியவைகளே. அரசாங்கம் ஏற்கவேண்டிய ஒரு சில செலவுகளை அலுவல் வடிவாகவும், வேலை வடிவாகவும் மக்களிடமிருந்து அது பெற்றது; இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அப்போது வழக்கத்திலிருந்த 'மூன்று தேவைகள்' (Trinoda Necessitas) என்பதனைக் குறிப்பிடலாம். இதன்படி நாட்டு மக்கள் அனைவருமே பாலங்களைப் பழுது நீக்கிச் சரியாக வைத்துக் கொள்ளுதல், கோட்டைகளைக் கட்டி அவற்றைக் காத்தல், போரில் வீரராகத் தொண்டு செய்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டியவராவர். கொத்தவால் கொடுக்கவேண்டிய பணங்களை வாங்கிக் கணக்குச் சரிபார்த்து ஏற்கும் கருவூல முறை (Exchequer System) என்பது இன்னும் வழக்கத்தில் வரவில்லை. பிற்காலத்தில் நிதியறையில் கணக்கெடுப்பதென்ற முறை தோன்றிற்று. ஆயினும் கொடுக்கப்பட்ட உலோக நாணயங்களின் கனி மதிப்பைத் தீர்மானிக்கும் சில சோதனை முறைகள் கருவூல முறைகளாகக் கையாளப்பட்டன.

சாக்சனியரது ஆட்சி நார்மானியரால் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, நாட்டின் அரசியலின் எதிர்கால வளர்ச்சியைப்பற்றி யாதொன்றும் சொல்ல முடியாத நிலை இருந்தது. உட்பிரிவில் 'எர்ல்' எனப்படும் கோமகனிடத்து அரசருடைய அதிகாரங்கள் பலவும் வந்து பெருகின. பல கோமகன்களுடைய பெருநிலங்களெல்லாம் காட்வின், லியோபிரிக், (Godvine, Leofric) முதலிய போட்டிமிக்க இரு எதிரெதிரான குடும்பத்தாரிடத்துக் குவிந்தன; பத்திமானான எட்வர்டு அரசருடைய இருபத்தைந்து ஆண்டு ஆட்சிக்காலத்தில் நாடு

அரசரை வலியற்றவரென உணர்ந்து கொண்டது. உட்பிரிவு களுக் கிடையிலும், குடும்பங்களுக் கிடையிலும் வலுத்த போட்டிகள் தோன்றின; எனவே இந்நிலையில் வெற்றி வீரரான நார்மானிய வில்லியம் நிறுவிய வலுவான அரசாங்கமே நாட்டிற்கு ஒரு விரைவான, காப்பான அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு ஐயத்துக்கிடமில்லாமல் வழிவகுத்தது.

இயல் இரண்டு

நார்மானியர் வெற்றி[1]

கி. பி. 1066-ம் ஆண்டில் முதலாம் வில்லியம் அடைந்த போர் வெற்றியினுல், இங்கிலாந்து முழுவதும் அவரது ஆட்சிக்குள் வந்தது. இதனையே நார்மானிய வெற்றி என நாம் குறிப்பிடு கிறோம். நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற் காகப் பெரிய அளவில் அவர் தனது ஆட்களை இப்புதிய நாட்டில் குடியேறச் செய்யவில்லை; தொடக்கத்தில் பிரெஞ்சு மொழி யாளர் ஓரளவு முதலில் குடிபுகுந்தனர்; எனினும், குடியேற்றமும் பெரிய அளவில் நிகழவில்லை. ஹேஸ்டிங்ஸ் (Hastings) சண்டை முற்றுப்பெற்ற சில நாட்களுக்கெல்லாம், இலண்டன் நகரத்தவரும், நாட்டிலுள்ள தலைவர்களும் அவரைத் தமது அரசரென ஒத்துக் கொண்டனர்; பொதுவாக அவருக்கு எதிர்ப்பு ஒன்றுமில்லை: ஓரிரு இடங்களில் மட்டும் சிறு எதிர்ப்புக்கள் இருந்தன; அவர் கருதி யிருந்தால், நாட்டின் அரசியலமைப்பை மாற்றி யிருக்க முடியும். யாதொரு மாற்றமும் செய்வதற்கு அவர் எண்ணவில்லை போலும்; அல்லது அவ்வாறு செய்யின் ஒரு சில வற்றை மட்டுமே அவர் செய்ய எண்ணினுர். எனினும் அவர் பெரும் அளவில் செய்த மாற்றங்களெல்லாம் அவரால் சில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்படவில்லை: அவரால் தவிர்க்க முடியாமையினுலே, அவை உண்டாக்கப் பட்டன; அவருக்கு நடைமுறையில் பழக்கமான அரசிய லமைப்பை அவர் அமைக்க வேண்டுமாயின், இம்மாற்றங்களும் செய்யப்படவேண்டுவன ஆயின. இம்மாற்றங்கள் அவருக்குத் தோன்றியதைவிட நமக்கே மிகுதியும் வலியனவாயும், நெடுங் காலத்துக்கு இருப்பனவாயும் தோன்றுகின்றன என்பதும் ஓரளவு உண்மையே. இங்கிலாந்திலும், நார்மண்டியிலுமுள்ள பல நிறுவன நடைமுறைகள் ஒத்திருந்தமையால், அவ்வகையில் யாதொரு மாற்றமும் தேவையில்லை. விளைவை நெடுங்காலத்

1. The Norman Conquest

துக்கு உண்டாக்கக்கூடிய மாற்றங்களை அவர் வேறு பல ஏற்பாடு களில் செய்யவேண்டி யிருந்தது. எனினும், இவ்வகையாக மாறுதலுக்கு உட்பட வேண்டியவைகளி லெல்லாம், பல தக்க சூழ்நிலைகள் நெடுங்காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன; இவை நார்மண்டியில் வெகு காலத்துக்கு முன்பே ஏற்படுத்திய நிறுவன விளைவுகளை சாக்சனிய நாட்டில் சிறிது சிறிதாக ஏற்படுத் திக் கொண்டிருந்தன. எனவே நார்மானிய வெற்றியானது, இங்கிலாந்தில் நாளாவட்டத்தில் இயல்பிலேயே நேர்ந்திருக்கக் கூடிய விளைவுகளையே, திடீரென ஏற்படும்படி செய்தது. நில உரிமை பற்றிய முறை ஒன்றில் தவிர, வேறொன்றிலும் இவ் வெற்றியினால் மாற்றம் நிகழவில்லை; எனவே தான் அக்காலத் திய வரலாற்றாசிரியர் இவ்வெற்றி தந்த மாற்றத்தை முழுதும் உணராமல், குறித்து வைக்கவில்லை.

இவ்வாறு முதலாம் வில்லியத்தின் அரசியலமைப்புவரலாறு இயற்கையாகவே இருகூறாக அமைகிறது; அவரது வெற்றியால் ஏற்பட்ட மாற்றங்கள், அவரது வெற்றியால் மாறுதலடையாத நிறுவனங்கள் என்பவையே அவை. நுட்பமாகப் பாகுபாடு செய்யாமல் நாம் பொதுவாக இவ்வாறு மாற்றங்களைச் சுட்டிக் காட்டலாம். நாட்டிற்குப் பொதுவாக நடு அரசாங்கமே மாறுதலுக்குள்ளாயிற்று; உள்நாட்டு அரசியல் நிறுவனங்கள் மிகச் சிறிய மாறுதல்களையே அடைந்தன. இவ்விரு பாகுபாடு களுக்கு மிடையே இவ்வரலாற்றில் திட்டவட்டமாக எல்லைக் கோடு வரைதல் இயலாது. ஏனெனில் நடு அரசிலும் பல அமைப்புக்கள் மாறுதலடையாம லிருந்தன; உள்நாட்டு அரசிய லமைப்பில் சில சிறப்பான மாறுதல்கள் செய்யப்பட்டன. பொதுவாகக் கூறுமிடத்து, இத்தகைய முறையில் பாகுபாடு செய்தலே சிறந்தது; இதுவே நமது குறிப்புக்களை ஒழுங்கு செய்ய உதவும். நாட்டினது நடு அரசு நார்மானியரதாகவும், நெடுங் காலத்துக்கு உள்நாட்டு அரசியல் சாக்சனியரதாகவும் இருந்தன.

நாட்டிற்குப் பொதுவாகிய அரசிலும் ஏற்பட்ட மாறுதல் களில் இரண்டு மற்றவற்றைவிட முக்கியமானவை; அவை யாவன: வலுவற்ற சாக்சனிய அரசுரிமைக்கு மாறாக வலுமிக்க அரசுரிமையை ஏற்படுத்தியது, அரசியல் படை மானிய முறை யைப் புகுத்தியது. இவை இரண்டும் சிறிய மாற்றங்களல்ல; அவைகளைக் குறிக்கும் சொற்களுக்கு உரிய பொருளில் தான் அம்மாற்றங்கள் ஏற்படவில்லை. இம் மாற்றங்கள் அவைகளுக்குத் தொடர்பான வேறு பல விளைவுகளை உண்டாக்கின. நடைமுறை நிலைமையில் இந்த இரண்டு மாற்றங்களும் ஒன்றிலிருந்து மற் றொன்றைப் பிரிக்க முடியாதபடி அவை இணைந்திருந்தன. நமது

வசதிக்காக நாம் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து ஆய்கிருேம்.

இப்பகுதியிலும், வேறு பகுதியிலும், ஒன்ருெடொன்று ஒத்த தன்மையான நிறுவனங்களைப் பற்றி நாம் ஆராய்கையில் ஏற்படக்கூடிய ஒரு தவருன கருத்தைப் பற்றி நாம் விழிப்புடனிருக்க வேண்டும். அக்காலத்தவர் கொடுத்த பொருளிலேயே சொற்களைப் பயன்படுத்தாமல், கொள்கையிலும் நடைமுறையிலும், தோன்றிய நிலையங்களும், நிலைய மாறுதல்களும் எவை என்பதை நாம் தெளிவாக விளக்க இயலாது. அவ்வாறு செய்தல் கூடுமென எண்ணுதல் தவறு. நார்மானிய முடியரசின் வரலாற்றை நாம் அறிந்தவரையில் அது கொள்கையிலும், பயிற்சியிலும் எவ்வாறிருந்ததென்பதை, அதிலடங்கி வாழ்ந்தவர் அறியாவிடினும், நாம் அறிதல் கூடும். இதைப்பற்றிய கொள்கையை நாம்தான் கூறுகிருேமேயன்றி அவர் கூறவில்லை. இங்கிலாந்தில் ஆட்சியை செயலாற்றிக் கொண்டிருந்த மக்கள் பதின்மூன்ரும் நூற்ருண்டின் நடுப்பகுதி வரை, தங்களுடைய ஆட்சியின் தன்மையைப்பற்றி விதிமுறையாக யாதொன்றும் வகுத்துச் சொல்லவில்லை. ஒரு அரசியல் நிறுவனத்தைப்பற்றியோ, வரலாற்றில் நிகழ்ந்த மாற்றத்தைப் பற்றியோ, அதன் தன்மையை விளங்கும் மொழியில் கூறுவது வரலாற்று முறையில் பொதுப்படையான செய்தியாகும்; எனினும் இவ்வாறு கூறுதல், அக்கால வரலாற்றுக்குக் காரணமாயிருந்தவர்களுக்கு இயலாததாகவும் விளங்காததாகவும் இருக்கலாம்.

ஆங்கிலோ – சாக்சனிய அரசுரிமை இயல்பிலேயே ஆற்றலுடையது; கன்யூட் அரசரின் காலத்தில் அது அவ்வாறுதான் இயங்கிற்று; ஆயினும் நார்மானிய வெற்றிக்கு முந்திய நீண்ட தலைமுறையில் அது வலியற்றவரது கையிலிருந்தது; பிந்திய சாக்சனிய காலத்திய கோமகன்களுடைய உரிமைகளால் அது மிகவும் வலி குன்றியிருந்தது. செயல் வகையிலும், நிறுவன முறையிலும் பார்க்கப்போனல் இரண்டு உண்மை நிலைமைகள் நமக்குக் கிடைக்கின்றன. நார்மானியப் பெருமக்கள் அமைத்திருந்ததைப் போன்று நெடுங்காலமாக அமைக்கப்பட்ட உறுதியான நடு அரசு என்ற மரபு இங்கிலாந்தில் இல்லை; அங்கு உறுதியான அரசைச் செலுத்தக்கூடிய திட்டவட்டமான நிறுவன அமைப்பும் கிடையாது; இவையே அங்குள்ள நிலைமைகள். இவ்விரு வகையிலும் 1210-ம் ஆண்டைய ஜான் அரசரது (King John) அரசைவிட 1060-ம் ஆண்டைய நார்மன் அரசு வலி குன்றியதே; எனினும் நார்மானிய அரசு அதற்கு முந்தியிருந்த பத்திமானுன எட்வர்டு அரசரின் ஆட்சியைவிட மிக முன்னேற்றமடைந்த

ஒன்றுகும். காலப்போக்கில், சாக்சனிய நாட்டில், எதிர்கால உணர்ச்சியும், திறமையுமுடைய அரசர்கள் வரவினுல், ஒரு வலிய முடியரசு சாக்சனிய ஆட்சியிலேயே தோன்றி யிருத்தல் கூடும். எனவே உண்மையில் 1066-ல் நடைபெற்றதென்ன வென்ருல், நார்மானிய முடியரசமைப்பானது அதனுடைய மரபுகளுடனும், செயல் முறைகளுடனும் அப்படியே ஒரேயடியாக சாக்சனிய அரச அமைப்பில் வைக்கப்பட்டது. சாக்சனிய முடியரசு முறை முழுவதும் மறைந்து விட்டது; அதனுடைய இடத்தில் நார்மானிய முடியரசு நார்மண்டியிலிருந்தது போல, இங்கிலாந்திலும் தனியாட்சியாக ஏற்பட்டு விட்டது.

இந்த நார்மானிய முடியரசானது ஆட்சியில் தனக்குள்ள இடத்தையும், தனது வலிமையையும், அக்காலத்தவர் அரசும், நாடும், அரசியலமைப்பும் இன்னவாறுதான் இருக்கவேண்டு மென்பதாக வகுத்த கொள்கைகளினின்றும் பெறவில்லை. வேறு சில நூற்ருண்டுகளில் முடியரசு இன்னவாறுதான் அடைய வேண்டுமென்பதான குறிக்கோள் நெறி ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் காணப்படுகிறது; ஆனுல் நார்மானிய வெற்றியினுல் நடு அரசில் உண்டாகிய மாற்றத்தை இத்தகைய குறிக்கோள் நெறி எதுவும் தூண்டவில்லை. நார்மண்டியின் பெருமகனுகிய வில்லியம் தனது ஆட்சியைத் தான் இன்றியமையாதன என்று எண்ணிய கருத்துக்களோடும், நிறுவனங்களோடும் இங்கிலாந்துக்கு மாற்றினுர். அவர் நார்மண்டியில் மிகவும் வலியுடையவராயிருந்தவ ராதலின் இங்கிலாந்திலும் வலியுடையராயினுர். உண்மையில், இதனைப்பற்றி அவராயினும், வேறு எவராயினும் ஆழமாக எண்ணிப் பார்க்கவில்லை. இயற்கைச் சூழ்நிலையில் அவர் அதைத்தான் செய்தல் கூடும்; புரட்சியான விளைவுகளைத் தரவல்ல ஒரு பெரும் மாற்றத்தை யாவரும் நன்குணர்ந்து கருத்துரை கூருத வகையில் அவர் செய்தார்.

மன்னரது தனியாட்சிக்கு உகந்தவையாகக் கருவிகள் அளவையாலும், அரசியலமைப்பின் அளவையாலும் அமைந்த சில நல்ல சூழ்நிலைகளைப்பற்றிப் பின்பு கூறப்படும்; ஆயினும் அங்கு அமைக்கப்பட்ட முடியரசு ஒரு தனியாட்சி (Absolutism) என்பதை வலியுறுத்த வேண்டும். அரசரது கருத்துக்கு எதிராக யாதொரு கருத்தும் செயல்படுதற்கோ, அல்லது வெளிப்படுத்துதற்கோ, எந்தவிதமான அரசியல் முறையும் இல்லாதபடி, நார்மானிய அரசியல் அமைப்பானது நிறுவப்பட்டது. படைமானியச் சட்டத்தில் இதற்கு இடமிருந்ததென்பது பின்பு கூறப்படும்; எனினும் அரசியலமைப்பு முறையில் இதற்கு ஒரு வகையும்

இல்லை. அச்சட்டம் புரட்சி, உள்நாட்டுப் போர் இவற்றின் மூலமே இயங்கும்; நார்மானிய வெற்றியை அடுத்த நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் மாபெரும் பட்டயத்தில் இக்காலத்துக்கொத்த அரசியலமைப்புக் கடங்கிய ஆட்சியைத் தோற்றுவிக்க முயற்சி செய்யப்பட்டபோது, உள்நாட்டுப் போரல்லாத வழியில் அரசருக்கெதிரான கருத்தைத் தெரிவிக்கும் முறையைக் கண்டுபிடிக்க முயன்றனர். அதுவரையில் பதினுன்காம் லூயி காலத்திய பிரான்சைப்போல, இங்கும் நாடுதான் அரசர் என்ற நிலை இருந்தது. அதன்படி முறை நடத்துபவர் (justices), கருவூலத்தார், கொத்தவால் முதலிய அரசாங்க அலுவலரெல்லாம் அரசருடைய பணியாட்களே. அரசு என்னும் இயந்திர முறை, உள்நாட்டுப் பிரிவுகளைத் தவிர, அரசருடையதாயிருந்தது. இதை இயக்கியது அரசரது வலிமையே. அரசர் வலிமையோடும் திறமாகவும் ஆண்டால், நாடும் ஒழுங்கான நிலையில் இருந்தது. அரசர் வலிவற்றும் நிலைமாறுபவராயு மிருந்ததால், நாடும் பிளவுபட்டிருந்தது. ஒரு பெருமகனது ஆளுகைக்குட்பட்ட பண்ணை நிலத்தைப் போல, நாடு முழுவதும் அரசரது ஆட்சிக்கும் தனி உரிமைக்கும் உட்பட்டிருந்தது; அதனின்று கிடைக்கும் வரிகள் தனி வருமானமாகும். முறைமை செய்தலும் அவரது செயலே; அதனை யாவர் மீதும் செலுத்துதற்கு அவருக்கு உரிமையுண்டு, சட்டத்திற் கெதிராகச் செய்யப்பட்ட குற்றம் அரசருக் கெதிராகச் செய்யப்பட்ட குற்றமாகும். முறை மன்றங்கள் யாவும் அவரது கருவிகள். நாட்டின் பெரிய அறிவுரை மன்றமும் அவரிட்ட வேலைகளைச் செய்தற்கே யன்றி, நாட்டிற்கு வேண்டும் அலுவல்களைச் செய்தற்கு இருக்கவில்லை. அது அரசருக்கு விண்ணப்பம் செய்து கொண்டாலன்றித் தானுகக் கூடி எதுவும் செய்ய முடியாது. அது வெளியிடும் முடிவுகளெல்லாம் அவரது முடிவுகளே. அவர் ஒப்புக் கொள்ளாவிடில் அதனுடைய முடிவுகள் செல்லுபடியாகா; இந்நிலையே இக்காலத்திய அரசியலில் தலைமையதிகாரிக்கு உள்ள முழுத் தள்ளுரிமையைக் (Absolute veto) குறிக்கும். சுருங்கச் சொல்லில், நாடும், அதிலுள்ள யாவும், அதில் நடைபெறும் செயல்களும் தன்னுடையனவே என்பதாக அரசர் கருதினுர்; இந்நிலை மேற்கு ஐரோப்பா எங்கிலும் காணப்பட்டது போலவே இங்கிலாந்திலும் காணப்பட்டது.

அரசர் தனது உரிமையை வற்புறுத்தலினுல் மட்டுமே தன்னை மேலான ஆற்றலுடைய நிலையில் வைத்துக் கொள்ளவில்லை. அவர் அடைந்து வந்த சில உதவிகளே அவரது நிலைமைக்கு வலிமையளித்தன. முதலாவதாக, மற்றெல்லாவற்றையும்

விடச் சிறந்த உதவியாக, தமக்கெதிராகத் திரண்டு எவரும் தாக்க முடியாதபடி தடுக்க, அரசருக்குத் தலையாய படைவலி இருந்தது. இப்படைவலி இரு வழிகளால் பெறப்பட்டதாகும்; ஒன்று படைமானியத்திலுள்ள வள ஆதாரங்கள்; மற்றொன்று நாட்டின் பொதுப்படை (பயர்டு எனப்படும் படை). அரசருக்குப் படைமானியத்திலுள்ள வள ஆதாரங்கள் இருவகைப்படும். முதலாவதாக அரசர் தனிப் பெருமகன் ஒவ்வொருவருக்கும் தான் கொடுத்த பண்ணை நிலங்களைப் போல இருமடங்கு நிலத்தைத் தன்னிடம் வைத்துக்கொண்டார்; அவரது இரு உடன் பிறந்தாரைத் தவிர, நாட்டின் பயிர் நிலங்களில் பெரும் பகுதியைத் தன்னிடம் வைத்திருந்தவர் அரசர் ஒருவரே. இந் நிலங்களெல்லாம் குத்தகைக்கு விடப்பட்ட பண்ணை நிலங்களே (Domain manors); இவை மறைமுகவாகவே அரசரது படை வலிக்கு உதவியாக இருந்தன. இவை பொருள் தரும் நிலங்களே யன்றி, அரசருக்கு அரசியல் வலிதரும் நிலங்கள் அல்ல; இங்கி லாந்தில் இத்தகைய அரசியல் வலி தரும் நிலங்களை அரசர் கொடுக்கவேண்டியதில்லை; ஏனெனில் இங்கிலாந்திலும் அரசர் பிரஞ்சு அரசரைப்போல நாடு முழுவதையும் தனது நிலமாகவே கருதி வைத்திருந்தார். இப் பண்ணை நிலங்கள் அசரருக்குச் செல்வம் தரும் ஆதாரங்கள்; மற்றெந்தப் பெருமகனது செல்வத் தையும் விட இவருக்கு உரிய செல்வமே அளவிற் பெரியது; ஆனால் இச்செல்வமெல்லாம், நாட்டின் அரசுக்கு வரும் வரி என் பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே அரசரது தனி உடைமையினின்றும் கிடைக்கும் செல்வமானது, அரசை நடத்தும் செலவையும் தாங்க வேண்டியதாயிற்று; எனினும் ஓரளவுக்கு இச்செல்வமானது அவரது படைவலியை வளர்த்தது; ஏனெனில் பெருமக்களைப் போலவே அரசர் சம்பளத்திற்குப் படைவீரர்களை அமர்த்திக் கொள்ளுதல் என்ற முறை வழக் கத்தில் இருந்தது. அரசருக்குரிய படைமானிய வள ஆதாரங் களில் இரண்டாவது, படைத்துறை அலுவல் செய்தலுக்கு ஈடாக அளிக்கப்படும் நிலங்கள் அல்லது பண்ணைகள். இவற்றில் பல அளவில் சிறியவையே; ஒரு பண்ணையைப் பெறுபவர் ஒரு படை வீரருக்குரிய செலவையோ, அதற்குச் சற்றுக் குறைவானதையோ ஏற்கவேண்டும்; முதலாம் வில்லியத்தின் காலத்திற்குப் பின்னும் சில நாள் வரை இவ்வகையான படைமானியப் பண்ணைகளாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் இருந்தன; அவை பொருள் தரும் நிலங்கள் அல்ல. இவை தவிர ஒன்றுமுதல் ஐந்து வீரருக்குரிய கட்டணத் தொகையை ஏற்கும் நிலங்களைப் பெற்றவரும் இருந்தனர்; இவர் சிறிய பெரு மக்கள் (Minor barons) எனப்படுவர். இவரெல்லாம் அரசருக்-

செதிராகத் திரண்டெழுவது மிகவும் அருமை. இவருக்கெல்லாம் மேலாக வில்லியத்தின் உடன் பிறந்தவராகிய ராபர்ட் ஆப் மார்ட்டெயின் என்ற பெரிய பெருமகனுக்கு 793 பண்ணைகளும் பேயோவின் சமய வட்டத் தலைவர் ஒடோ என்பவருக்கு (Odo, Bishop of Bayeux) 493 பண்ணைகளும், இவரைப்போல வேறு சிலருக்கும் இருந்தன. இப்பெரிய பெருமக்களும் கூட அரசருக்கெதிராகத் திரளுதல் அரிது; 1173-ல் நடைபெற்ற கிளர்ச்சியில் கூடப் பெருமக்கள் கூடி அரசரை எதிர்க்க முடிய வில்லை. தனது படைவலிமையை யெல்லாம் ஒன்று திரட்டுதல் அரசருக்கு எளிது; பெருமக்களுக்குத் தமது வீரரை யெல் லாம் திரட்டுதல் மிகவும் கடினம். சாக்சனியரால் பயர்டு என் றழைக்கப்பட்ட பொதுத் தனியாட்கள் படை இப்பொழுது அரசருக்கு மிகவும் உதவியாக இருந்தது; மற்ற ஐரோப்பியப் படைமானிய நாடுகளிலுள்ள பொதுத் தனியாட்கள் படையை விட, இது மிகவும் திறனுடையதாய் இருந்தது. மிகவும் கடுமையான பொது மக்கள் கலகங்கள் முதலாம் ஹென்றியின் ஆட்சித் தொடக்கத்திலும், 1152லும் நடைபெற்றபோது, இப் படை அரசருக்கு மிகவும் சிறந்த பணியைச் செய்தது.

அரசருக்கு இருந்த பெரிய செல்வ வளமும், பெரிய படை வலிமையுமே அவருக்கு ஆற்றலை அளித்த மூலாதாரங்கள் என்பதில் ஐயமில்லையாயினும், வேறு சில நிகழ்ச்சிகளும் அவ ருடைய ஆற்றலைப் பெருக்கின. அதில் ஒன்று, நார்மண்டியில் படைமானிய முறையை மக்கள் அறிந்துகொண்ட முறையின் படியும், இங்கிலாந்தில் அது புகுந்த முறையின்மையும், ஒரு பெரு மகன் தனது பண்ணையை, அளவில் பெரியதாயினும், ஒரு தனி யரசாக மாற்ற முடியாத வகையில், படைமானிய முறை அமைந்திருந்ததேயாம். அவ்வாறு ஐரோப்பாவில் எங்கேனும் ஒரு பண்ணை தனியரசாகத் தோன்றினால், அப்பண்ணையின் பெருமகன் தனது மாவட்டத்தின் அரசாட்சியின் அலுவல்களை யெல்லாம் தன்கையில் எடுத்துக்கொண்டு, தனது பண்ணை முறை மன்றங்களை அரசாங்க முறை மன்றங்களின் சார்பி னின்றும் அகற்றி விடுவதற்குத் தக்க சூழ்நிலைகள் இருந்தன. கொள்கையளவில் வேறு சார்புகளிருப்பினும், ஆட்சி முறை யிலும், முறைசெய்வதிலும் அரசரிடமிருந்து தனியாக விடு பட்டுவிட்டால், அது உண்மையாக விடுதலையே யாகும். இத்தகைய விடுதலை இங்கிலாந்தில் எப்பெருமகனும் அடைய இயலாது. அரசர் எப்பொழுதும் உள்நாட்டுப் பிரிவின் அலுவலரான கொத்தவாலைத் தம் கைப்பிடியில் வைத்திருந் தார்; சமயத் துறவிகளின் மடங்களுக்கும், தனியாகப் பெரு

மக்களுக்கும், முறைமை செய்யவும், குற்றவாளிகளைத் தூக்கி லிடவும் கூட உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், இவ்வுரிமைகளெல்லாம் உண்மையில் உள்நாட்டுமுறை மன்றங் களைத் தான் தடைசெய்தனவேயன்றி, நாட்டின் பொதுவான முறைமை செய்தலைத் தடை செய்யவில்லை. நார்மானியர் காலத்தில் இவை தடையாகவே தோன்றவில்லை. முன்னைவிட இப்பொழுது மிக நெருக்கமாக உள்நாட்டில் முறைமை ஆட்சி செய்யப்படுவதை அரசர் தனது அரசர் அறிவுரைக் குழு (Curia Regis கியூரியா ரெஜிஸ்)வின் மூலமாகக் கண்காணித்து வந்தார். இவ்வாறு உள்நாட்டு ஆட்சிப் பிரிவுகளுக்கு முறைமை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டதால் அரசருக்கு ஏற்பட்ட இழப்பும்; பெருமகனுக்குக் கிடைத்த வரவும் பணத்தைப் பொறுத்ததே. வழக்குகளில் கிடைக்கும் வரும்படி முறை மன்றங்களினின்று தனி யாளுக்கு மாற்றப்பட்டது. எவ்வளவு வலியவராயினும் ஒரு பெருமகன் அரசரது முறைமைக்குத் தான் பொறுப்பாவதி னின்றும் தப்பமுடியாது; அவரது பண்ணையில் வேலைசெய்யும் குத்தகையாளரும் பண்ணை முறைமன்றத்தில் ஏற்படும் தவறு களுக் கெதிராகக் கோட்டை வைத்துக்கொள்ள உரிமை கிடை யாது. கோட்டை அரசருடையது; பெருமகன் அரசருக்காகக் கோட்டையை ஆளுபவர். கிளர்ச்சி நடந்த காலத்தில் மட்டுமே பெருமக்கள் அரசருக்கெதிராகக் கோட்டையைக் காத்தனர்.

அரசரது வலிமையை மிகுதியாக்கிய சில ஒழுக்கம் சார்ந்த சூழ்நிலைகளும் இருந்தன. முடிசூட்டு விழாவில் புனித எண் ணெய் தேய்க்கப்பட்டதால் அரசர் திருவருளால் ஆக்கப்பட் டவர் ஆயினர். எனவே இறைவனுல் நிறுவப்பட்ட அரசரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தல் தெய்வத்தைப் பழித்த செயலெனக் கருதப்பட்டது. மேலும் முந்தைய பிராங்கியர் ஆட்சியில் இருந் ததை நார்மானியரும் கடைப்பிடித்தனர்; அதன்படி ஒவ்வொரு சிறிய கீழாளும் தனக்கு மேலாக உள்ள பெருமகனுக்குத் தலைவர்ப் பற்றுடையவராக இருப்பதாக உறுதிமொழி கூறினும், அரசரிடத்துத் தலைவர்ப் பற்று உடையவராகவும் இருந்தார். சிற் சில சமயம் அரசர் தன்னிடமிருந்து நிலம் பெற்றவரெல் லாம் தன்னிடத்துப் பற்றுறுதியுடையவராயிருத்தல் வேண்டு மென அவரிடம் நேராக உறுதிமொழி வாங்கினர். கலகம் விளைந்தபோது, இவ்வுறுதிமொழி சிறிய கீழாட்கள் கூட்ட மாக அரசருக்கெதிராக எழுவதைத் தடுக்கவில்லை; எனினும் திட்டமிடப்பட்ட புரட்சியைத் தடுக்கவும், தனியாட்கள் அதில் சேராதபடி தடுக்கவும் ஓரளவு இவ்வுறுதிமொழி உதவிற்று.

மொத்தத்தில் இங்கிலாந்தின் நார்மானிய அரசர் நாட்டில் எவரினும் மிக்க வலி உடையவர்; அந்நாளில் ஐரோப்பாவில் மிக்க வலிமையுடைய அரசரும் அவரே. தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமக்களது ஆட்சிக்குட்பட்ட கோமான் ஆட்சிப் பகுதியில் அரசரது ஆணைகள் செலுத்தப்படாவிடினும், அவை ஆட்சியிலும் முறை செய்தலிலும் தனித்து நின்ருலும் அவை நன்ருக அமைக்கப்பட்ட பெரிய பகுதிகளாயிருப்பினும், அவைகூட அரசியலில் விடுதலையாக ஆகமுடியாத அளவுக்கு அரசருடைய வலிமை எல்லாவற்றையும்விட மிக்கிருந்தது.

சாக்சனியர் காலத்தில் இரண்டு அலுவலர்கள் நடு ஆட்சியின் சார்பாளிகளாவும், அரசமைப்பின் சார்பாளிகளாகவும் கோட்டங்களில் இருந்துகொண்டு உள்நாட்டு ஆட்சியையும், நடு ஆட்சியையும் இணைத்தனரெனவும், அவர்களே எர்ல் எனப்படும் கோமகன் எனவும் கொத்தவால் எனவும் அழைக்கப்பட்டனரெனவும் நாம் முன்பே பார்த்திருக்கிருேம். நார்மானியர் தமது நாட்டில் இந்த இருவகை அலுவல்களையும் நன்கு அறிந்திருந்தன ராகையால், இங்கிலாந்திலும் அவற்றைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளவே விழைந்தனர். நார்மானியப் பெருமகனுக்கு உட்பட்ட கிழாள் பெருமகன் (Vassal count), பழைய சாக்சனியர் காலத்திய கோமகனினின்றும் வேறுபட்டவராவர். நார்மானியக் கிழாட்கள் படைமானியத் துறையாளரேயன்றி, அலுவலாளரல்லர். டேனியர் படையெடுப்புகளின் விளைவால் பிந்திய சாக்சனியர் காலத்தில் கோமகன் நார்மானியரது கிழாளைப் பெரும்பாலும் ஒத்திருந்தார்; எனினும் வேறுபாடு இருவருக்கும் சிறிது இருந்தது, நார்மானிய வெற்றி மேலும் பல மாற்றங்களை உண்டாக்கிற்று. 'கோமகன்' (எர்ல்) என்ற பழைய சாக்சனியப் பெயர் நிலைத்தது; ஆனுல் அதற்குப் பழைய உரிமை யாதொன்றும் இல்லாமற் போயிற்று. 1066-க்குப் பிறகு கோமகன் என்ற சொல் அலுவலாளர் பதவியைக் காட்டவில்லை. எனினும் அவரது பட்டம் ஒரு கோட்டத்தின் பெயரை ஒட்டியே இருந்தது. கோட்டம் (Shire) என்பதற்கு நார்மானியர் "கௌண்ட்டி" (County) எனப் புதுப்பெயர் கொடுத்தனர்; எனினும் கோமகன் இப்பிரிவின் முறை மன்றத்தில் வாங்கப்படும் முறைமை வரிகளில் ஒரு பங்கை (அது மூன்ருவது பென்னிக்காசு-Third penny எனப்படும்)யும் அடைந்துவந்தார்; ஆனுல் கோட்டத்தின் ஆட்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமக்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் தவிர, அவர் தலையிட்டு ஒரு வேலையும் செய்யவில்லை. எனவே கோமகன் என்ற இப்பெயர் பெரு

மக்கள் வரிசையில் ஒரு தரத்தைச் சுட்டும் ஒரு பட்டப் பெயராகத்தான் இருந்தது; இதைத் தவிர ஒரு குறிப்பிட்ட நிலையில் அதற்கு வேறு ஏதேனும் அதிகாரம் இருக்குமாயின், அது தனியாக அரசரால் கொடுக்கப்பட்ட ஒன்ருகத்தானிருக்க வேண்டும். இவ்வாறு முறைமை செய்யவும், ஆளவும் உரிமைகளை அரசர் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமக்கள் ஆட்சிக் குட்டபட்ட, வேல்சின் எல்லையிலுள்ள செஸ்டர், ஸ்காட்லாந்தின் எல்லையிலுள்ள டர்காம் முதலியவற்றுக்கு வழங்கினர். வழக்க மான முறையினின்றும் இவ்வாறு இங்கிலாந்தில் மாருகச் செய் வதற்குப் படைத்துறைக்குரிய காரணங்கள் பொருத்தமான வையே; எல்லைப்புறங்களிலுள்ள சில தொல்லைகளே இதற்குக் காரணங்கள். பொதுவாகக் கோமகன் ஆட்சிநிலை என்பது நார் மானிய வெற்றிக்குப் பிறகு அலுவலகம் என்ற நிலையினின்றும் மாறியது.

கோமகனது நிலையைப்போலவே சாக்சனியரது அலுவலாள ராகிய கொத்தவாலைப்பற்றியும் நார்மானியர் தெளிவாக உணர்ந் திருந்தனர். மேற்கு பிராங்கியப் பேரரசின் ஆட்சி அமைப்பி லிருந்து அவர்கள், பெருமகனின்வகையாள் (Representative of the count) அல்லது (vicecomes) என்ற அலுவலகத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தனர்; இவ்வலுவலாளர் பெருமகனது ஆட்சி நிலத்தின் முழுவதற்கும், அல்லது அதன் ஒரு பகுதிக்கு அவ ருடைய ஆட்பேராக (deputy) இருந்தார். நார்மண்டியின் பெருமகனது ஆட்சிக்குட்பட்ட நிலமானது அளவில் மிகப்பெரிய தாகையால் அவர் அதைப் பல மாவட்டங்களாகப் பிரித்து ஒவ் வொன்றுக்கும் ஒருவரைத் தனது வகையாளாக (vicecomes) அமர்த்தியிருந்தார்; இவ்வலுவலாளர் தனக்குரிய பகுதியில் பெரு மகனுக்குரிய நலன்களையும், பணத்தொடர்பான வேலைகளையும், சாக்சனியக் கொத்தவால் செய்தது போலச் செய்து வந்தார். ஆங்கிலரது கொத்தவாலென்ற அலுவல் நார்மானிய வகை யாளலுவலை விடச் சிறப்பாக நார்மானிய வெற்றிக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது; நார்மானிய அலுவலைவிட சாக்சனிய அலுவல் வரையறுக்கப்பட்ட தன்மை உடையதாயிருந்தது. எனவே இவ்வலுவலின் வரலாறு சாக்சனிய காலத்திலிருந்ததன் தொடர்ச்சியாகவே நார்மானியர் காலத்திலும் இரண்டு நாடு களிலும் செம்மையாக வகுக்கப்பட்ட ஒரு முக்கியமான அலுவ லாயிற்று.

கொத்தவால் அரசரது மிகுதியான அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டார்; ஏனெனில் அவர் கோட்டத்தில் அரசரது வகை யாளாக இருந்து, அரசரது உரிமைகளைச் சரிவரச் செயல்

படுத்தி, அவாது நலன்களையும் காத்து வந்தார். கொத்த வாலுக்கு உள்நாட்டுப் பிரிவில் இருந்த ஆளும் உரிமையினால், நடு அரசுக்கு உறுதி ஏற்பட்டது; எவ்வாறெனில் சாக்சனியர் காலத்திலிருந்ததைப் போல நார்மானியர் காலத்திலும் கொத்த வாவின் மூலமே அரசின் அதிகாரப் குவிப்பை ஏற்படுத்த முடியு மென்ற நிலை இருந்தது. ஒரு கோட்டத்திலுள்ள ஒரு பெரிய பெருமகனையே அதற்குக் கொத்தவாலாக ஆக்குவது வழக்கம்; சில சமயம் பல கோட்டங்களுக்கும் அவரை அவ்வாறு அமர்த்துத லுண்டு. மரபுரிமையான வழியில் எவரையும் கொத்தவா லாக்குதல் மிகவும் அருமையே; ஆயினும் கரோலிஞ்சியரது ஆட்சியில் கொத்தவாலென்னும் இவ்வலுவல் சில பெருமக்களது கையில் ஒரு குடும்பச் சொத்தாக மாறிக் கோட்டத்தை ஒரு தனி நாடாகவே மாற்றிய பேரிடரானது இங்கிலாந்தில் தவிர்க்கப் பட்டது. நார்மானியரது முடியரசானது நாட்டிலெதனையும் விட மிகவும் கூடுதலான வலிமை யுடையதாய் இருந்தது. அம்முடி யரசு கொத்தவாலை அரசின் ஒரு அலுவலாளர் என்ற நிலையில் வைத்திருந்தது. அவரைத் தனக்கு மிகவும் பொறுப்புள்ள வராக ஆக்கிக் கொண்டது. கோட்டத்திலுள்ள எளியவரிடத் துக் கொத்தவால் பணம் பறிப்பதற்கு வாய்ப்புக்களிருந்தும், அவரை அவ்வாறு செய்வதனின்றும் அம்முடியரசு தடுத்தது. முதலாம் வில்லியத்தின் காலத்தில் இல்லாவிடினும், அவருடைய ஆட்சிக்கு அடுத்த காலத்தில், நடு அரசுக்குக் கோட்டத்தி னின்றும் கொடுக்கப்பட வேண்டிய ஆண்டுத்தொகை இவ்வள வென்று வரையறுக்கப்பட்டு, அப்பெருந்தொகையைக் கொத்த வால் அரசரது கருவூலத்தில் (treasury) கொடுத்து வந்தார். இதுவே கொத்தவாலின் தொகை (Sheriff's ferm) எனப்படும்; இது அரசருக்குக் கோட்டத்திலுள்ள நிலங்களினின்றும் பெறப் படும் வரும்படி எனவும், உள்நாட்டு முறை மன்றங்களினின்றும் கிடைக்கும் ஆதாயங்களெனவும் இரு பகுதிகளாக அமைந்த ஒரு குத்தகைப் பணமேயாகும். அரசருக்குரிய குத்தகைப் பணத் தைக் கொடுத்தபின் எஞ்சிய வருமான மெல்லாம் ஒரு ஈட்டுத் தொகையாகக் கொத்தவாலைச் சேரும்; எனினும் கூடுதலாக இத்தொகையை வாங்கும் நோக்கத்துடன் இவ்வலுவல் எவருக் கும் கொடுக்கப்படவில்லை.

சாக்சனியர் காலத்திலிருந்ததைப் போலவே, கொத்தவால் உள்நாட்டில் கோட்டத்திலும், நூற்றிலுமுள்ள முறைமை செய் தலைக் கண்காணித்ததோடு, நார்மானியரால் புதிதாக உள் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட முறை மன்றங்களுடன் நெருங்கிய தொடர்புடையவரானார். உள்ளூரில் முதலாம் வில்லியத்தின்

காலமுதலாக ஏற்படுத்தப்பட்ட அரசரது முறை மன்றத்தில், அரசரது அறிவுரைக் குழு (curia regis) வந்து கோட்டத்தில் முறைமை செய்யத் தொடங்கிற்று; அவ்வாறு செய்தற்கு இடப் பட்ட ஆணையில் அதில் தலைமையாக இருக்க வேண்டிய முறை வரது பெயர்களும் குறிக்கப்பட்டிருந்தன; அதில் பல தடவை களில் கொத்தவாலே ஒரே முறைவராகவும், அல்லது பலருள் ஒருவராகவும் அமர்த்தப்பட்டார். தாம் அரசருக்குக் கொடுக்க வேண்டிய குத்தகையோடு, இம்முறை மன்றங்களில் வாங்கப்படும் தண்டப்பணத்தையும் சேர்த்துக் கொண்டார். அரசருடைய சட்டங்கள் மூலம் நிலை நிறுத்தப்படும் அமைதியைக் காக்கும் பொறுப்பையும், அரசரது முறைவர்கள் நிலைநிறுத்தும் அமைதி யைக் காக்கும் பொறுப்பையும் இவர் பகிர்ந்து கொண்டார். இதுபற்றிப் பின்னர் விரிவாகக் கூறப்படும். அரசருடைய முறைமை செய்யும் இப்புதிய அலுவலானது, முதலில் கொத்தவாலினுடைய வலிமையை மிகுதியாக்கினாலும் கடைசியில் அது அவரது வலிமை யைக் குறைத்தது. எனவே நார்மானிய வெற்றிக் காலமுதல், பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலுமுள்ள காலத்தையே, நடு அரசாங்கத்தின் செயலாளாகக் கொத்த வால் இருந்த பெரிய காலமென்னலாம். இக்காலத்தில்தான் நாட்டின் உட்பிரிவுகளில் நடு அரசாங்கத்தினுடைய வேலை செய்தற்குரிய கருவியாகக் கொத்தவால் இருந்து, ஆட்சியின் அதிகாரக் குவிப்பு ஏற்படச் செய்தார். நடு அரசுக்கு உள் நாட்டிலுள்ள பண வரும்படியைக் காத்தல், அமைதியை நிலை நிறுத்துதல், முறைமை செய்தல், அரசுக்குரிய படைத்துறைப் பணிகளுக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றுக்கு அவர் நடு அரசுக்குப் பொறுப்பாக இருந்தார். நடு அரசினுடைய இத்தகைய நலன்களைக் கண்காணிப்பதற்குப் பதின்மூன்றும் நூற்றாண்டில் வேறு பல நல்ல முறைகள் கண்டுபிடிக்கப் பட்டதும்தான், கொத்தவாலின் வலியும், பெருமையும் வெகுவாகக் குறையலாயின; அவர் கடைசியாக முறைமன்றங் களில் செயலாற்றும் ஓர் அலுவலர் ஆயினர்.

சமய நிலையத்தில் இவ்வலிய புதிய முடியரசு ஏற்படுத்திய மாறுதல்களைப் போல, இங்கிலாந்தின் வேறு எந்த அரசியல் துறை யிலும் உண்டாக்க வில்லை; புதிய முடியரசு சமயநிலையத்தில் ஒன்றுக்கொன்று முரணான மாறுதல்களை உண்டாக்கிற்று. இதனால் சமயநிலையம் ஒருவகையில் தன்னுரிமை மிகுந்தும், மற்றொரு வகையில் தன்னுரிமை குறைந்தும் இருந்தது. சாக்சனிய நடு அரசு சமயநிலையத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததை விட, இங்கிலாந்தை வெல்லுவதற்கு முன், வில்லியம் தமது

நாட்டில் நார்மனியச் சமயநிலையத்தைத் தமது உறுதியான கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைத்திருந்தார். பிறகு ஆங்கிலச் சமயநிலையத்தின் மீதும் இவ்வலிமையை அவர் மாற்றிக் கொண்டார்; இக்கட்டுப்பாடு பிற்காலத்தில் குறைவுற்றதெனினும், முழுவதும் மறைந்து விடவில்லை. வில்லியம் காலமான இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்றை எழுதிய எட்மர் (Eadmer) என்பவர், "நார்மண்டியில் தாமும் தமது முன்னோரும் சமயநிலையத்தின் மீது செலுத்திய வலிமையையே இங்கிலாந்திலுள்ள சமயநிலையத்தின் மீதும் செலுத்த வேண்டு"மென்பதுதான் வில்லியத்தின் நோக்கமென்று கூறினர்; மேலும் அவர் வில்லியத்தின் காலத்தில் அரசுக்கும், சமயநிலையத்துக்குமுள்ள தொடர்பை வரையறை செய்த மூன்று விதிகளையும் குறிப்பிட்டு, இவ்விதிகள் அரசியல் சட்டத்தில் நெடுங்காலமாக அடிப்படையாகக் கையாளப்பட்டனவெனவும் கூறுகிறார். இவ்விதிகளின்படி அரசரது உடன்பாடு இல்லாமல், எந்தப் போப்பும் (Pope) இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது; அரசருக்கு முன்னதாகவே காட்டப்படாத போப்பின் கடிதங்களும் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது; அரசரது இசைவைப் பெறாத எந்த ஆங்கில சமய அவைகளின் சட்டங்களும் சட்டமாகச் செல்லுபடியாகமாட்டா; அரசரது உடன்பாடில்லாமல், அவரது பெருமக்களையும், அலுவலாளரையும் சமயநிலைய முறை மன்றங்களில் ஆய்வு செய்வதோ, சமயத்தை விட்டு வெளியேற்றுவதோ, அல்லது வேறு கடுமையான சமயத் தண்டனைகளுக்கு உட்படுத்துவதோ கூடாது. எனவே சமய நிலையமானது முன்னிருந்ததை விடப் பொது அரசினல் மிகுந்த கட்டுப்பாட்டிற்குள் ஆக்கப்பட்டது; ஆயினும் அதே சமயத்தில் அதனுடைய முழு அமைப்பும் செம்மையாக்கப்பட்டது; சமயக் குருக்களின் ஒழுக்க நிலையும், கல்வி நிலையும் மேம்பாடுற்றன; இதுவரை ஆங்கில நாட்டில் பரவாதிருந்த நல்ல குளூனியாக் சீர்திருத்த இயக்கமானது (Cluniac Reformation) இப்பொழுது பரவுவதற்கு வழி உண்டாயிற்று. இதனல் அப்பொழுது திரண்ட வலியையும், பேரரசு நிலையையும் அடைந்து கொண்டிருந்த போப்பின் நிலையோடு ஆங்கிலச் சமய நிலையம் நெருங்கிய தொடர்புடையதாக ஆக்கப்பட்டது. இத்தகைய மாறுதல்களெல்லாம் பிற்காலத்தில் இங்கிலாந்தில் அரசுக்கும், சமயநிலையத்துக்கும் கடுமையான பூசலை உண்டாக்கின; எனினும் தொடக்கத்தில் இம்மாறுதல்கள் மொத்தத்தில் நலமானவையாகவே இருந்தன.

நிலைய அமைப்பின் வகையில் எடுக்கப்பட்ட இன்னொரு நடவடிக்கை சமயநிலையத்துக்கு மேலும் கூடுதலான உரிமையை

அளித்தது. தமது ஆட்சியின் தொடக்கத்தில் தாம் விடுத்த ஒரு சுற்றறிக்கையில், வில்லியம் சமயச் சார்பான முறைமன்றங்களை அரசின் முறைமன்றங்களினின்றும் தனியாகப் பிரிக்கும் ஒரு சட்டத்தைத் தாமும் தமது பேரவையும் (Great Council) செய்திருப்பதாக வெளிப்படுத்தினர். எனவே இனிமேல் எந்தச் சமயவட்டத் தலைவரும் நூற்றின் முறைமன்றத்தில் சமய வழக்குகளை ஆய்தல் கூடாது; அவர் வேறு இடத்தில் தனியாகச் சமயச் சட்டத்தின்படியே அவற்றை ஆய்தல் வேண்டும். சமய நிலையச் சார்பற்றவர்கள் எவரும், சமயம்பற்றிய தீர்ப்புக்களைச் செய்தலில் யாதொரு பங்கும் இனிப் பெறுதல் கூடாது. எனினும் இத்தகைய தீர்ப்புக்களைச் செயலாக்குவதில் அரசியல் அலுவலர் உதவி செய்தல் வேண்டும். இந்த நடவடிக்கையினல் ஆங்கில சமய முறைமன்றங்களுக்குத் தனியான முறைமை வரம்பு அளிக்கப்பட்டதோடு, அப்பொழுது ஒரு பெரிய முறையான தொகுப்பாக வள்ர்ந்து கொண்டிருந்த சமயச் சட்டத்தின் செல்வாக்கினுள் நாடு வரத் தொடங்கியது. அதே சமயத்தில் அரசியல் தலையீட்டிற்குட்படாத சட்டம் செய்யும் உரிமைகள் பல நாட்டின் சமயப் பேரவைக்குக் கொடுக்கப்பட்டன; எனினும் இவை அரசரின் தள்ளுரிமைக்கு உட்பட்டவையே.

படைமானிய முறையைப் புகுத்தியதனுல், அரசியலமைப்பின் விளக்கத்திலும் தன்மையிலும் ஏற்பட்ட மாறுதல் மிகச் சுருக்கமாக முதலாம் இயலில் கூறப்பட்டது. இக்காலத்தவருக்குப் படைமானிய முறையும், அது இயங்கிய வகையும் எளிதில் விளங்குதல் இல்லையாதலினுலும், அது ஏற்படுத்திய விளைவுகள் பெரியவையாகையாலும், அதனைப்பற்றித் திரும்பவும் கூறுதல் விரும்பத்தக்கதே. அம்முறை இயங்கிய வகையை அறிவதற்கு முன்னல் அரசியல் படைமானியத்துக்கும் பொருளியல் படைமானியத்துக்குமுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளுதல் நலம். இவ் வேறுபாட்டை உணர்தல் எளிதன்று. அரசியற்படை மானியமே இங்கிலாந்துக்குப் புதியதாகும்; அதன் அரசியலமைப்பு வரலாற்றிலே நார்மானியரது படைமானியம் ஒரு சமுதாய அமைப்பு முறையோ, அல்லது நாட்டின் பெருமக்களுக்கு நிலமும், தரமும் வழங்கிய முறையோ மட்டுமன்று, அது ஆட்சியை நடத்துவதற்கேற்ற ஒரு முறையுமாகுமென்பதை நாம் உணர்தல் வேண்டும். முன்பே இங்கிலாந்தில் தோன்றியிருந்த பொருளியல் படைமானியம் மேலும் வளர்ச்சி யடைந்தது; ஆயினும் நார்மானிய வெற்றியின் விளைவாக அது நாட்டின் நில முழுவதும் பரவித் திருத்தம் அடைந்தது.

நாம் இப்புதுக் கொள்கையினின்று தொடங்குவோம்: படைமானியக் காலத்தில் ஒரே நிலத்தை, இரு ஆட்கள், இரு வகைப்பட்ட நில உரிமைகளில் இரு வேறுபட்ட சட்ட அமைப்புக்களில் பெற்றிருந்தனர். படைமானியத்தின் இவ்விரு வகையிலும் அடிப்படையாக இருந்த கூறு ஒரே துண்டு நிலமே. பொருளியல் வகையில் இந்நிலம் பண்ணை (Manor) எனவும், அரசியல் வகையில் அது வீரர்க்குரிய கூலி அல்லது கட்டணம் (Knight's Fee) எனவும் படும். பண்ணை என்ற அமைப்பில் அது நாட்டின் வேளாண்மையில் ஒரு கூறு (Unit) ஆகும்; அதன் நோக்கம் பொருளியல் பற்றியதாகும்; அது வரும்படியைத் தரக்கூடிய ஒரு ஆதாரம் ஆகும். விளைச்சலுக்குட்பட்ட அதன் பரப்பானது பெருமகனது நிலமெனவும், பண்ணையில் வாழும் தனியாட்கள், அடிமைகள் ஆகியோரின் உரிமைக்குட்பட்ட நிலங்களெனவும் பிரிக்கப்பட்டிருந்தது. பண்ணையிலுள்ள குத்தகையாளர்கள் தாங்கள் பெருமகனுக்குச் செலுத்தவேண்டிய பல பண உதவிகள், பணிகள் ஆகியவற்றின் மூலமாகத்தான் அவ்வுரிமை நிலங்களை வைத்திருந்தனர். பதினோராம் நூற்றாண்டில் பணத்தால் கொடுக்கப்படும் உதவிகளுக்கு அவ்வளவு சிறப்பில்லை; பொருள்களின் வாயிலாகப் பெருமகனுக்குக் கொடுக்கப்படும் உதவிகளே சிறப்பானவை; அவருக்குரியதான தொழிற் பணிகள் வருமானத்தைத் தரக்கூடிய அவரது நிலத்தைப் பயிரிடுவதற்குப் பயன் பட்டன.

தனி உரிமைக் குத்தகையாளர் செய்யவேண்டிய பணிகள், பெருமகன் தனது விருப்பம்போல் மாற்றமுடியாதபடி ஒரு பணத் தொகையாக உறுதி செய்யப்பட்டன: எனவே ஊழியக் குத்தகையாளரது பணியினின்றும் அவை வேறுபட்டவை. இவ்விருவகைக் குத்தகையாளரும் பண்ணையின் முறை மன்றத்திற்கு வரவும், உறுப்பினராய் வேலைசெய்யவும் வேண்டும். பட்டணத்திலுள்ள முறைமன்றம் செய்ததுபோல காவல் முறைமை செய்தலைத் தவிர, வேறு ஆட்சி அலுவல் ஏதும் இம்முறை மன்றத்துக்குக் கிடையாது. பண்ணை அமைக்கப்பட்ட முறையிலும், பெருமகனுக்குப் பணிகள் செலுத்தப்பட்ட முறையிலும் நோக்கமெல்லாம் பொருளியலைப்பற்றியதே. பெருமகன் அக்காலத்திய சமுதாயத்தில் தனக்குரிய தரத்தைக் காத்தற்கும், தனது பெருமகனுக்குத் தான் செலுத்த வேண்டிய படைமானியக் கடமைகளைச் செய்தற்கும் வேண்டிய வருமானத்தைத் தேடிக் கொடுப்பதே மேற்கூறிய அமைப்பின் நோக்கமாகும். இவ்வாறு பெருமகனது கைவசமுள்ள பண்ணைக்கு "ஆட்சிப் பண்ணை" (Domain manor) என்று பெயர்; இங்கு ஆளப்படும் 'ஆட்சி' என்ற சொல், பண்ணைக்

குள்ளே ஒரு பகுதியான 'ஆட்சி நிலம்' என்பதிலுள்ள 'ஆட்சி' என்பதினின்றும் பொருளில் சிறிது வேறுபட்டது. பொருளியல் பற்றிய தன்மையைக் காட்டவே அச்சொல் அவ்வாறு ஆளப் படுகிறது; வருமானத்துக்காக உள்ள பண்ணைகளை, படைமானியப் பணிகளுக்கு ஈடாகப் பெருமகன் தனது கீழாட்களுக்குக் கொடுக் கும் பண்ணைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டவே 'ஆட்சி' என்ற அச்சொல் இங்கு ஆளப்படுகிறது. படைமானிய வரிசை முறையில் எல்லாத் தரத்தினரும் கீழே சாதாரண வீரரிலிருந்து, பல தரப்பட்ட பெருமக்கள் வழியாக, உயரே அரசர் வரை ஆட்சிப் பண்ணைகளை வைத்திருக்க வேண்டியவரே; இவருள் சாதாரண வீரருக்கு உரியது ஒரே ஆட்சிப் பண்ணையே; பலதரப் பட்ட பெருமக்களுக்குத் தமது தரங்களைக் காத்தற்குக் கைவசம் நிலம் வேண்டும்; தமது அரசின் செலவுகளை ஏற்பதற்கும், மிக்க செல்வமுடைய பெருமகனது ஆட்சிப் பண்ணைகளை விடக் கூடுத லான எண்ணிக்கையில் வைத்திருப்பதற்கும், அரசருக்கு ஆட்சிப் பண்ணைகள் வேண்டியிருந்தன.

இத்தகைய ஆட்சிப் பண்ணைகளின் தொகுப்பும், பண்ணைகளி லுள்ள நிலங்களைப் பொருளுதவிக்காக வைத்திருந்த முறையும், இந்நிலங்களின் உரிமையைப் பண்ணை முறைமன்றங்களின் மூல மாக ஒழுங்குபடுத்திய வழக்கமென்னும் சட்டமும் சேர்ந்துதான் பொருளியல் பற்றிய படைமானிய முறை[1] என ஆயிற்று. அரசியற் படைமானிய முறை என்பது அதே பண்ணைகளை, வேறு வகையான சட்டங்களால் ஒழுங்குபடுத்தி, வேறுவகையான பணி களினுல் வைத்திருக்கிற ஓர் இணைப்பான, சூழ்நிலையில் உண்டாக் கப்பட்ட ஒரு திட்டமாகும். இவ்வமைப்பின் வரிசையிலும் அரசரே தலையாயவர். எனவே நாட்டிலுள்ள எல்லா நிலங்க ளுக்கும் அவரே உடைமையாளர்; அல்லது, படைமானியச் சட்ட அறிஞர்கள் கூறுவதுபோல, அரசர் தமது நாட்டைக் கடவுளிட மிருந்து அடைந்தவர். நிலம் வைத்திருந்த மற்றெல்லாரும் குத்தகையாளரே; அவர்கள் அரசருடைய குத்தகையாளராகவோ அல்லது தமக்கும் அரசருக்கும் இடைப்பட்ட பெருமகனது குத்தகையாளராகவோ இருந்தனர். நாட்டின் நிலங்கள் பல பண்ணைகளிலடங்கி யிருந்தன; அவற்றுள் சிலவற்றைத் தமது ஆட்சிப் பண்ணைகளாக அரசர் கைவசம் வைத்திருந்தார். எஞ்சியவற்றை அவர் தமது மேல் குத்தகையாளருக்கும் (Tenants in chief), பெரிய பெருமக்களுக்கும், சிறிய பெரு மக்களுக்கும் அவரவர் தரத்துக்கு ஏற்பப் பிரித்துக் கொடுத்தார்.

---

1 Economic feudalism

இவற்றுக்கு எதிராக அவர்களிடமிருந்து அரசர் அடைந்த உதவிகள் அல்லது பணிகள் அரசியல் தன்மை உடையன; இப்பணிகள் வழியாகவே அரசாங்கம் தனது வேலைகளில் பெரும்பாலானவற்றைச் செய்துமுடித்துக்கொண்டது. மிகவும் பொதுவான அரசியற் பணியாவது படைத் துறை பற்றியவேலையே; அரசு தனது படை வலிமைக்குப் படைமானிய முறையைத்தான் சார்ந்திருந்தது. இதே மாதிரியாக இன்னொரு படைமானிய அலுவலுக்குரிய பணியாக, அரசானது தனக்கு ஒரேசமயத்தில் நாட்டின் அறிவுரை மன்றமாகவும், சட்ட மன்றமாகவும், முறைமன்றமாகவும் இருந்த பேரவையை (Curia Regis) அமைத்துக் கொண்டது. நடு அரசவையானது சிறிது சிறிதாகப் பாகுபாடுகளைப் பேரவையில் உண்டாக்கி, அதனின்றும் திட்டவட்டமான தன்மையும், நிலையான தன்மையும், தொழில் நுட்பமும் உடைய முறைமை செய்யும் நிறுவனங்களைப் பிரித்துவிட்ட பின்னரும்கூட, முறைவர்கள் (Justices) பெருமக்களே, பெருமக்களின் பல பிரிவுகளைச் சேர்ந்தவர்களே என்னும் கருத்து தொடர்ந்து இருந்துவந்தது. நடுஅரசின் பல்வேறு பிரிவுகளையும் அரசரது கிழாட்களே இருந்து இயக்கி வந்தனர்; அதற்காக அவர்களுக்குச் சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை; இவ்வலுவல்களைச் செய்வதற்காகவே அவர்களுக்குப் பண்ணைகள் கொடுக்கப்பட்டன. அக்கால வழக்கப்படி இத்தகைய அலுவல்களுக்காக அளிக்கப்பட்ட பண்ணைகளுக்கும், படைத்துறை அலுவல்களுக்காக அளிக்கப்பட்ட பண்ணைகளுக்கும் வேறுபாடு இருந்தது. இவற்றுள் முற்கூறப்பட்ட மானியங்களுக்குப் படைப் பண்ணைகள் (Serjeanties) என்று பெயர். அளிக்கப்படும் உதவிகள் பெருமை தரத்தக்கனவாயின் அவற்றுக்குரியவை பெரும்படைப் பண்ணைகள் எனவும். (Great Serjeanties) உதவிகள் சிறப்பில்லாமல் பணியாளருக்குரியவையாயின் அவற்றிற்குரியவை சிறுபடைப் பண்ணைகள் (Petty Serjeanties) எனவும் அழைக்கப்பட்டன. எனினும் படைப் பண்ணைகள் படைமானிய நிலங்களையே அன்றிப் படை அலுவல்களுக்காகத் தரும் நிலங்களைக் குறிப்பன அல்ல. அவை படைமானியக் காலத்திய சிவில் அலுவலகத்துறையை (Civil Service) ஏற்படுத்தின.

மேல் குத்தகையாளர் அரசரிடமிருந்து மானியத்தைப் பெற்றதும், அரசர் செய்ததையே தாமும் செய்தார். எடுத்துக்காட்டாக அரசர் சர்ரே கோமகனுக்கு (Earl of Surrey) 80 பண்ணைகளை 40 போர் வீரரது அலுவலுக்காகக் கொடுக்கப்படுகின்றன என நாம் கொள்ளுவோம். இதில் அக்கோமகன் 30 ஐத் தமது ஆட்சிப் பண்ணைகளாக வைத்துக்கொண்டு, மிஞ்சிய 50-ஐ 45

வீரரது அலுவலுக்காகக் கீழாட்களுக்கு மானியமாகப் பிரித்து வழங்குவார். ஏனெனில் அரசருக்குத் தாம் கொடுக்க வேண்டிய வீரரது எண்ணிக்கையைவிடக் கூடுதலாகவே தனக்கு வீரரை மானியத்தின் மூலம் பெருமகன் பெறுவர் என்பது அப்போதிருந்த பொது விதியாகும்; அதனால் அவரது தரம் சமுதாயத்திலும் அரசியலிலும் உயர்வடைந்தது. இவ்வாறு இன்னும் பல கிளைக் கீழாட்களுக்கு மானியம் கொடுப்பதற்குஉட்பிரிவுப்படை மானியம் (Sub-infeudation) என்று பெயர். கோமகனது கீழாட்களும் அவரைப் போலவே, கடைசியில் சமுதாயத்தின் அடித்தளத்தில் ஒரு கூறு. ஒருமானியமாகும் வரை பிரித்துக்கொடுக்கவே, நாம் முன்பே கண்டபடி, ஒரு எளிய போர்வீரருக்கு ஒரு பண்ணை என்ற அளவிற்கு வந்தது. இதிலுள்ள ஒவ்வொரு கீழாளும் கீழிருந்து மேல் வரை படைத்துறை அலுவல் செய்யவேண்டிய கடமையோடு, முறைமன்ற அலுவலுள்ளிட்ட மற்ற வழக்கமான படைமானியப் பணிகளையும் செய்து வந்தனர்; ஒவ்வொரு பெருமகனும் (தம்மிடத்து நிறையப் படைமானியக் குத்தகையாளர் இருந்தால்), ஒவ்வொரு முறைமன்றம் வைத்திருந்தார். இதில் குத்தகையாளருடைய நிலங்களைப் பற்றியும், அவர்களுக்குள் ஏற்படும் தொடர்புகளைப்பற்றியும், அவர்களுக்கும் பெருமகனுக்குமுள்ள தொடர்புகளைப்பற்றியும் தோன்றும் வழக்குகள் படைமானியச் சட்டத்துக்கு ஏற்பத் தீர்க்கப்பட்டன.

கீழாளிடமிருந்து, பெருமகனுக்குக் கிடைக்க வேண்டியவை படைமானிய அலுவல்களைத் தவிர, வேறு பணத்தொகைகளும் இருந்தன. இவற்றை நாம் பொருளியல் படையானியத்தில் கொடுக்கப்படும் பணத்தினின்றும் பிரித்துணர்தல் வேண்டும். கீழாள் மரபுரிமையாளராக (Heir) மானியத்தை அடையும் போது அவர் ‘விடுதலைப்பணம் (Relief, a Relevium) என்பதாக ஒன்றைப் பெருமகனுக்குச் செலுத்தினர்; இதனால் கீழாள் ஒருவர் மானியத்தை வைத்திருப்பதற்கும், அவரது மரபுரிமையாளர் அதனைப் பெறுவதற்கும் இடையில் பெருமகனது உரிமை குறுக்கிட்டது என்பதாகக் கொள்ளப்பட்டது. மேற் குத்தகையாளரது நிலைமையில் அரசரது உரிமை குறுக்கிட்டது; அதனால் அதன் முதல் வரும்படியை (First possession) அரசரது அலுவலாளர்கள் எடுத்துக் கொண்டனர். விடுதலைப் பணத்தைக் கொடுத்த பிறகே, மரபுரிமையாளர், அத்தகையராக ஒப்புதல் பெறவும், கீழடக்கம் (Homage) காட்டவும், பற்றுறுதிமொழி எடுக்கவும் (Fealty), தமக்குச் சட்டப்படி மானியத்தைத் தருகிற பதவி ஏற்புமுறைக்கு உட்படவும் உரிமைகளை அடைந்தார். இவ் விடுதலைப் பணம் என்ற தொகையானது ஒவ்வொரு தலைமுறையிலும்

நிலத்தை வைத்திருப்பவர் குத்தகையாளரே யன்றி, அதன் உடைமையாளரல்லர் என்பதைக் காட்டுதற்கே இருந்தது.

விடுதலைப் பணத்தைத் தவிர, உதவித் தொகைகளும் (Aids) எவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட படைமானியக் கடமைகளாக இருந்தன. இவை, பெருமகன் வேறு தனிப்பட்ட செலவுகளை ஏற்கவேண்டிய போது அவருக்குக் கிழாள் சில நிகழ்ச்சிகளையொட்டிக் கொடுக்கும்தொகைகளாவன. இங்கிலாந்தில் இவ்வாறு தொகைகள் கொடுக்கப்படவேண்டிய நிகழ்ச்சிகளாவன: பெருமகனுடைய மூத்த மகன் வீரப்பட்டம் ஏற்ற சமயம்; அவருடைய மூத்தமகள் முதல் திருமணம் செய்யும் சமயம்: அவர் போரில் சிறைபிடிக்கப்பட்டு மீட்சிப் பணம் கொடுக்கவேண்டிய சமயம்.. சில காலங்களில், யூதர்களிடம் கடுமையான ஒற்றிக்காக விடப்பட்ட தமது நிலங்களை மீட்பதற்காகப் பெருமகன் கூடுதலாக உதவிப்பணம் கேட்டார்; அதற்குக் கிழாள் உடன்படுதல் வேண்டுமென்பதாக எதிர்பார்க்கப்பட்டது; ஆயினும் இந்தத் தனிப்பட்ட உதவித் தொகைகள் கிழாட்கள் தம்மியல்பாகவே கொடுக்கும் உதவிகளாகக் கருதப்பட்டன. இவைகளைக் கொடுப்பவரது முன்உடன்பாடு இல்லாமல் இவற்றை வாங்குதல் கூடாது. பெருமகனுக்கும் கிழாளுக்குமுள்ள படைமானியத் தொடர்புக்கு ஏற்ப இத் தொகைகள் தீர்மானிக்கப்பட்டன. இவை பண வரும்படியாகவோ, வரிமுறையாகவோ கருதப்படவில்லை.

இதேபோன்ற கொள்கைகளை ஒட்டியே பெருமகனது மற்ற உரிமைகளும் இருந்தன; இவ்வுரிமைகள் அவரை அடையும் போது அவருக்குப் பணவழியில் வரும்படி இருந்தது. அவருக்குரிய பொறுப்புரிமையானது (Right of wardship) மானியத்தை, மரபுரிமையாளர் வயது வராதவராக இருந்தால் பெருமகனது ஆளுகைக்கு உட்படுத்திற்று. வயதுவராத மரபுரிமையாளர், அவருக்குரிய பணிகளைச் செய்ய இயலாது என்பதே இதனடிப்படையான கொள்கையாகும். பெருமகன் அத்தகையோரை அவரது நிலைக்குத் தக ஆதரிக்கவும், தமது கிழாளின் குழந்தைகளுக்குக்கல்வி புகட்டவும் சட்டம் வழிசெய்தது; கிழாளின் கைம்பெண்ணின் செலவுப்பண உரிமையை நீக்குகிற வகையில் பெருமகனுக்கு யாதொரு உரிமையும் கிடையாது ஆயினும் மரபுரிமையாளருக்கு வயது வராதவரையிலும், வேறு யாருக்கும் பொறுப்பில்லாமல் மானியத்தின் வரும்படியைப் பெருமகன் அடைந்து வந்தார். மானியம் பெண் மரபுரிமையாளருக்கு (heiress) உரியதாயின், படைமானியச் சட்டத்தின்படி, அவரை மணஞ்செய்து கொடுப்பதற்குப் பெருமகனுக்கு உரிமையுண்டு; அதாவது

தனக்குரிய கடமைகளைச் செய்வதற்குத் திறமும், இசைவும் உடைய ஒருவரை இவளது கணவராகப் பெருமகன் தேர்ந் தெடுத்தல் வேண்டும். உண்மையில் இவ்வுரிமை பண வரும்படிக்கு வழிசெய்த ஒன்றேயாகும்; கணவரைத் தேர்ந்தெடுப்ப தென்பது அதில் ஈடுபாடு உடையவருக்கோ, மரபுரிமையுள்ள அப் பெண்ணிற்கோ, அல்லது அவளது குடும்பத்தாருக்கோ, பணத்திற் காகக் கொடுக்கப்பட்டது. கீழாளின் கொடிவழி நின்று போனல், மானியமானது, "பறிமுதல்" உரிமையின்படி பெருமகனையே திரும்பச் சேரும். கீழாள் கொடுங்குற்றம் இழைத்தாலும் இதே முறையின்படி மானியம் பெருமகனை அடையும்; இதில் குற்றவாளி பின்னணியிலுள்ள கீழாளாயிருந்தால் பெருமகனுக்கு முன்னதாக அரசரே ஓராண்டும் ஒரு நாளும் அம்மானியத்தை அடைந் திருப்பதற்கு உரிமையுண்டு,

நார்மானிய வெற்றிக்குப் பிறகு ஏற்பட்ட மாறுதல்களில், இத்தகைய அரசியல் படைமானியமுறை ஏற்படுத்திய மாறுதலையே இங்கிலாந்தின் மக்கள் மிகுதியும் உணர்ந்தார்கள்; ஏனெனில் இம் மாறுதலினுல் சாக்சனியரிடமிருந்து நார்மானியருக்கு நிலங்கள் மாற்றப்பட்டன. இம்மாற்றம் ஏதேனும் ஒரு சட்டத்தினுலோ, ஒரு பொது விளம்பரத்தினுலோ, திடீரெனவோ உண்டாக்கப் படவில்லை. வில்லியம் பறிமுதல் செய்த நிலங்களைத் தமக்கு வேண்டியவருக்கும், ஒரு சிலவற்றை திரும்ப அவற்றின் உரிமையாளருக்கும் அளிக்க, இம்மாறுதல் படிப்படியாகத் தோன்றிற்று. ஒருவேளை அவர் ஏதேனும் ஒரு நோக்கங் கருதியோ, துணிவாக எண்ணியோ இம்மாறுதலைச் செய்ததாக இல்லாமலும் இருத்தல் கூடும். அரசரிடமிருந்து பெறப்பட்ட குத்தகை நிலங்களே படை மானியமுறை நிலங்களாகவும், அவையே அரசின் அமைப்புக்கு அடிப்படையாகவும் இருந்தன; இதுவே அப்போது செய்தற்கு, இயல்பாக இருந்த ஒன்ருகும்; இந்த ஏற்பாடு ஒன்றைத்தான் நார்மானியர் அறிந்திருந்தனர்.

எனவேதான் இம்முறையை எல்லாவற்றிற்கும் பொருந்துவ தாகப் பின்பற்றினர். சமயநிலையத்தின் நிலங்களுக்கும் இம்முறை பொருந்துவதாகும். சாக்சனியர் காலத்தில் தமக்குக் கொடுக்கப் பட்ட நிலங்களைச் சமய நிலையங்களும், துறவி மடங்களும் தொடர்ந்து வைத்திருந்தன; ஆனுல் அவை படைமானியங்களாக் கப்பட்டன. சமயவட்டத் தலைவரும், மடத்துத் தலைவரும் அரசரது கீழாட்களாயினர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களின் பகுதிகள் பெருமக்கள் நிலமாகவே அமைய, சமயச் சார்பற்ற பெருமக்களைப் போலவே, அவர்களும் பல்வேறு பணிகளுக்கீடாக அவற்றை வைத்திருந்தனர். அவர்களது நிலங்களில் சமயநிலையத்

தின் எல்லா நிலங்களும் அடங்கியிருக்கவில்லை. அதில் ஒரு பகுதி சமயநிலையத்தையும், துறவிகளையும் காத்தற்குப் பயன்படுத்தப் பட்டது. இத்தகைய நிலங்களை இலவசமான அறநிலங்கள் (Frank almoign-பிராங்க் அல்மாயின்) எனப்படும் குடிவாரத்தில் வைத்திருந்தனர்; அதாவது இந்நிலங்களை வைத்திருப்பவர் அவற்றுக்கு ஈடாகப் பணிசெய்தல் வேண்டுவதில்லை; சமயவழி பாடுகளோ அல்லது இறந்தவரது உயிர் அமைதியடையும் பொருட்டுத் தொழுகைகளோ செய்தால்போதும். ஒவ்வொரு கோயிலுக்கும் சமயச் சார்பற்ற நிலமெனப்பட்ட நிலம் வேறு இருந்தது; இந்நிலத்தைக் கொடுத்தவருக்குக் கோயில், சமயச் சார்பற்றவர் செய்வதைப்போல, வழக்கமான சில அலுவல்களைச் செய்தல் வேண்டும்.

வில்லியம், அரசரின் வலிமையை மிகுதியாக்குதற்காகத்தான் இவ்வாறெல்லாம் தாம் இங்கிலாந்தில் புகுத்திய படைமானிய முறையில் சிறப்பான மாற்றங்களைச் செய்தாரென்பதாக அடிக்கடி சொல்லப்படுகிறது. இந்த நோக்கம் அவருக்கு இருந்ததென் பதற்குச் சான்று ஏதும் கிடையாது. இத்தகைய நோக்கம் அவரிடம் நாம் எதிர்பார்த்தற்கும் காரணம் இல்லை. பெரிய பெருமக்களின் நிலங்களெல்லாம் பல்வேறு கோட்டங்களில் சிதறுண்டு கிடந்தன; இது அவர் நாட்டைப் படிப்படியாகக் கைப்பற்றியதனாலும், சில நார்மானியருக்குக் கொடுக்கப்பட்ட சாக்சனியரது நிலங்களும் இதேபோலச் சிதறுண்டு கிடந்தமையினாலும் ஏற்பட்ட இயல்பான விளைவே. ஐரோப்பாவின் மற்ற நாடுகளிலும் இதே நிலையில்தான் படைமானிய நிலங்கள் இருந்தன; ஓரிரு இடங்களில் மாவட்டத்தின் ஆட்சியாளராகப் பிராங்கியப் பெருமகனது வழியினரின் வகையாட்கள் இருந்தபோதுதான் நிலைமை வேறாக இருந்தது. ஒரு சிறிய நாட்டைப்போல ஒரு ஆளின் வசமே நிலங்களெல்லாம், செஷயர் (Cheshire), கார்ன்வால் (Cornwall), ஷ்ராப்ஷயர் (Shropshire), கென்ட்டு (Kent) முதலிய இடங்களிலுள்ளது போலச் சேர்ந்திருந்தாலும், தமக்கு அச்சமில்லை என்பதாக வில்லியம் காட்டிக் கொண்டார். நிலம் வைத்திருப்பவர் எல்லோரையும், அவர் தம்மிடமிருந்து நிலம் பெற்ற குத்தகையாளராயினும், அல்லராயினும், தமக்குப் பற்றுறுதிமொழி கொடுக்குமாறு வில்லியம் வற்புறுத்தினார்; எனினும் இவ்வழக்கம் நார்மானியப் படைமானியத்தில் புதியதான வழக்கம் அன்று; இது பிராங்கிய முடியரசின் வழிவந்த பழக்கமாகும்; இதனாலும் அரசருக்கு நடைமுறையில் யாதொரு பயனும் இல்லை.

எனவே அரசியலமைப்பு வகையில் படைமானிய முறையானது மூன்று கொள்கைகளைக் கொண்டது; இவை நாட்டின் எதிர்கால அரசியலமைப்பு வளர்ச்சியை உருவாக்கின; ஒரு குடியுரிமையாளர் அரசுக்குச் செய்யவேண்டிய அரசியற் கடமைகளெல்லாம் அரசுக்குச் செலுத்தப்படாமல், தான் வேறொருவரிடம் வாங்கிய நிலத்துக்கு ஈடாக அன்னாருக்குத் தனிமனிதருக்குச் செலுத்தப்படும் கடமைகளாயின என்பதே முதலாவது கொள்கையாகும். இதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு, படைமானியப் படைத்துறை அலுவலாகும்; ஆயினும் இக்கொள்கை நாட்டின் பேரவைக்கும் பொருந்துவதை நாம் விரைவில் காணுவோம். இம் முதல் கொள்கையினின்றும் இரண்டாவது கொள்கை தோன்றுகிறது. அரசியலின் பல்வேறு சிறப்புக் கூறுகளிலும், அரசருக்கும், அவரது குடிமக்களுக்கும் உள்ள தொடர்புகள், அவ்விரு திறத்தாரில் எவரும் மற்றவரது உடன்பாடில்லாமல் மாற்றமுடியாத ஒரு ஒப்பந்தத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதே இரண்டாவதாகும். அரசர் பெருமகனுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும், பெருமகன் அரசருக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றியும் கூறும் படைமானிய வழக்கங்களை அவருள் எவரும் தம் விருப்பம் போல் மாற்றமுடியாது. இந்த இரண்டு கொள்கைகளும் அரசியலமைப்பின் வளர்ச்சி ஏற்படுவதற்கு ஒரு தீர்மானமான இயக்க ஆற்றலைக் கொடுத்தன. நிலத்தை உண்மையில் கைக்கொண்டவர் ஒரு குத்தகையாளரே தவிர அதன் உரிமையாளரல்லரென்பது மூன்றாவது கொள்கையாகும். எமது நாட்டவரது இக்காலத்திய நிலம், சொத்து பற்றிய சட்டங்கள் வளருவதற்கு இக்கொள்கை ஓர் இயக்க ஆற்றலைக் கொடுத்தது; இதனுடைய விளைவுகள், நாம் பின்னர் கூறுவதுபோல, இக்காலத்தும் காணக் கிடக்கின்றன.

ஆங்கிலோ - நார்மானியரது நடுப்பேரவையும் (Curia-Regis), கொத்தவாலின் அலுவலினின்றும் வேறுபட்ட ஒரு நிறுவனமாகும்; ஆயினும் அதுவும் அரசினுடைய பாகுபாடற்ற தன்மையை மற்றெதனையும் விட மிகத் தெளிவாகக் காட்டுகிறது. கொத்தவாலைப் போலவே இந்நிறுவனமும் தனக்கு முன்னிருந்த சாக்சனிய நாட்டுப் பேரவையை, உருவிலும், தோற்றத்திலும், செயலிலும் ஒத்திருந்தது. அதனைப்போலவே நார்மானியரது பேரவையும், அரசிலும் சமய நிலையத்திலும் உள்ள பெரியவர்களையும், அரசரது அரண்மனையிலுள்ள பெரிய அலுவலாளர்களையும், சில சமயங்களில் அரசரால் விரும்பி அழைக்கப்படுபவரையும் உடையதாயிருந்தது. ஆனால் உண்மையில் நார்மானிய வெற்றியினால் அதனுடைய அமைப்பில் ஒரு கட்டுப்பாட்டை-

உண்டாக்கும் கொள்கை கொண்டுவரப் பட்டது; எனவே நிறுவன முறையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று; எனவே இதனுடைய முன் மாதிரியை சாக்சனிய நாட்டில் அல்லாமல் பிராங்கியர் நாட்டில் காண வேண்டியதா யிருக்கிறது. அமைப்பில் மாறுதலைச் செய்த இக்கொள்கை படைமானியக் கொள்கை யாகும். வேலையிலல்லாமல், அமைப்பில், இப்பெருங் கழகம் படைமானிய முறைக்கொப்ப மாற்றப்பட்டது. அதன் கூட்டங் களில் பங்கு பெற்ற, சமயநிலைய, அரசியல் துறைகளிலுள்ள பெரியோர்கள் நாட்டிற்காக யாதொரு அலுவலும் செய்ய வில்லை; அவர்கள் அரசருக்கு அவர் தலைவரென்ற முறையில் யாதொன்றும் செய்யவில்லை; கிழார்கள் பெருமக்கள் அமைத்த கழகக் கூட்டங்களுக்கு வருதல் போல, கிழார்களுக்கெல்லாம் பெருமகனாக அரசர் இருக்கிறாரென்ற நிலைமையினால் அவருடைய கூட்டத்திற்கு இவர்கள் வரவேண்டியவராயினர். எந்தப்பேரவையி லாயினும் யாவரும் உறுப்பினராயிருத்தல் வேண்டுமென்ற படை மானியக் கொள்கையினின்றும் எங்கேனும் தனிப்பட்டவருக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தால், அது அப்பேரவை முன்னரே பெற்றிருந்த ஒரு தன்மையினாலல்ல; அது அரசர் நாட்டினரசில் முன்னரே பெற்றிருந்த தனிச் சிறப்புரிமையைக் காட்டும் ஒரு வேலையாகும். நாட்டின் பிரிவுகளுக்குத் தக்க மாறுபாடுக ளுடனும், சில இன்றியமையாத, தனிப்பட்ட தன்மைகளுடனும் கூடிய இப் பேரவையானது பிராங்கியப் பேரரசின் பல்வேறு படைமானிய நாடுகளிலும் தோன்றிற்று. சாக்சனியப் பேரவை யோடு தோற்றத்திலும் வேலையிலும் மேலெழுந்தவாரியாக ஆங்கிலோ - நார்மானியப் பேரவை ஒத்திருந்ததென்ற ஒரே காரணத்திற்காக, அது படைமானியப் பண்புடையதல்ல என்று நாம் கருதுவோமாயின், ஐரோப்பாவிலும், அதன் கிழக்குப் பகுதியிலும் பரவியிருந்த ஒவ்வொரு நிறுவனத்தின் படை மானியப் பண்பையும் நாம் ஒப்புக்கொள்ள மறுத்தவராவோம்.

நாட்டின் ஆட்சியில் இந்நிறுவனத்தின் பங்கைப் பற்றி நாம் அறியு முன்னர், அதில் செயலாற்றியவருக்கு, அதனுடைய இரு உருவங்களான பெரிய அவை, சிறிய அவை என்ற இரண்டும் அளவில் தவிர, வேறுபாடில்லாதனவாகவே இருந்தன என்ற கடின மான உண்மையை உணர்தல் வேண்டும். பெரிய அவையின் கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கூடிய சிறிய அவையே செயலாற்றும் கழகமாக இருந்தது. ஆயினும் அது பெரிய அவை யினால் சில கடமைகள் கொடுக்கப்பட்டு, அதற்குப் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டிய ஒரு குழு அல்ல. அதை ஒரு சிறு குழுவாக நாம் இக்காலத்தில் கருதுவோமாயினும், அக்காலத்தில்

எவரும் அதை அவ்வாறு கருதவில்லே. அரசரோடு நெருங்கிய தொடர்பும், சார்பும் உடையவர்களால் ஆக்கப்பட்ட பெரிய அவையின் சிறிய உருவமே அது ஆகும். அதனுடைய உருவத்துக்கும் வேலேக்கும் யாதொரு தொடர்பும் இல்லே; அரசியல் வேலேயைப் பொறுத்த மட்டில் பெரிய அவை செய்யக்கூடியவற்றை யெல்லாம் சிறிய அவையும் செய்யும். ஆங்கிலோ - நார்மானிய அரசினுடைய வேலேகளே ஒவ்வொரு நாளும் செய்து, மேற்பார்த்து வந்தது நிலேயாய இந்தச் சிறிய அவையே. இக்காலத்தில் பகுத்துணர்வு மிக்க நமக்கு, இவ்விரண்டு உருவங்களிலும் ஒற்றுமை மிக்கிருந்த இந்நிறுவனத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் கடினமே; எனினும் இவ்வுண்மை மிகவும் இன்றியமையாதது, ஏனெனில் அக் காலத்திய பழமையான அரசின் கடமைகளெல்லாம் ஒருங்கே உடையதும், பாகுபாடு அல்லது பிரிவுகள் இல்லாததுமான இந்நிறுவனமே, காலப்போக்கில், இப்பொழுது காணப்படுகின்ற எண்ணற்ற நிறுவனங்களே யெல்லாம் தோற்றுவித்த தாயாக இருந்தது. ‘இந்நடுப்பேரவையின் செயல்களும், திறன்களும், இது செயலாற்றிய பல்வேறு உருவங்களில் காணப்பட்டன’ என்பது பிற்கால வரலாற்றில், இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல குறுக்கும் நெடுக்குமான நிறுவனங்கள் தோன்றியதிலிருந்து தெரிகிறது; இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக உள்ள மேலே குறிப்பிட்ட ஒற்றுமையை அறிந்துகொண்டாலன்றி, இவை மிக்க தெளிவில்லாத ஒரு குழம்பிய நிலேமையைக் காட்டுவனவாகும்.

அரசின் ஒரு சிறப்பான கருவி என்ற முறையிலும், அரசியலமைப்பின் ஒரு பகுதி என்ற முறையிலும், இப்பேரவையைப் பற்றிய உண்மை என்னவெனில், அது நிறுவன முறையில் பாகுபாடின்றி, அரசரது எல்லா வேலேகளேயும் செய்தும், செய்யப்பட்டவற்றை மேற்பார்த்தும் வந்தது. சமுதாயத்தின் தேவைக்காகப் புதிய சட்டமியற்றவோ, வழக்கத்திலிருப்பதைத் திருத்தவோ, வேண்டி வரும்போதெல்லாம் இப்பேரவையே உயர் தனிச் சட்டமன்றமாக இருந்தது. பெரிய வழக்குகளேயோ, பெரியவர்களேப் பற்றிய வழக்குகளேயோ, ஒரே கூட்டத்திலோ, ஒரே அவையிலோ ஆய்வு செய்து தீர்ப்பளிக்கும் உயர்தர முறைமன்றமாகவும் அது இருந்தது. இவ்வாறு அது செய்வதற்கு முன்னதாகச் சட்டமன்றம் என்ற முறையில், அது நாட்டின் சட்டத்தை மாற்றியு மிருக்கலாம். அரசின் செயலாற்றும் பணிகளேயும், சிறிய, பெரிய தரங்களிலுள்ள ஆட்சிப்பணிகளேயும் அது ஒன்றுதான் கண்காணித்துக் கட்டுப்படுத்தி வந்தது. எல்லாச் செயலலுவலரும், ஆட்சி அலுவலரும் அதற்குப் பொறுப்பாக இருந்

தனர். பழைய காலத்தில் இவ்வவையின் சட்டமியற்றும் நடவடிக்கைகளை நாம் பார்த்தால், அவற்றுள் பெரும் பாலானவை அமைப்பில் ஆட்சித்துறை பற்றிய ஆணைகளாகவும், ஆட்சிச் செயல்முறைகளில் செய்யப்பட்ட மாறுதல்களாகவுமே காணப்படுகின்றன.

உள்நாட்டு நிறுவனங்களிலும், உள்நாட்டுச் சட்டங்களிலும் நார்மானிய வெற்றியினால் யாதொரு மாற்றமும் ஏற்படவில்லை. நில எல்லையைப் பொறுத்தமட்டில், கோட்டமும் நூறும் முன் னிருந்தவாறே இருந்தன; செயலிலும், தகுதியிலும், செயல் முறையிலும் கோட்டத்தின் முறை மன்றமும், நூற்றின் முறை மன்றமும், சமயநிலை பற்றிய வழக்குகளை ஆய்தல் கூடாதென்ற ஒரு மாறுதலைத் தவிர வேறு யாதொரு மாறுதலும் அடைய வில்லை. சாக்சனிய உள்நாட்டு முறை மன்றங்களில் இருந்ததைப் போன்று நார்மண்டியின் உள்நாட்டு முறை மன்றங்களிலும் செயல் முறைகளிருந்தமையால், அவற்றை நார்மானியர் மாற்ற விரும்ப வில்லை. எனினும், அவர்கள், நில உரிமை பற்றிய வழக்குகளிலும், கொடுங்குற்ற வழக்குகளிலும், தீர்வு காணும் முறையாக சாக்சனியர் பின்பற்றாத, போரிடும் சான்று அல்லது முறைமையான இருவர் போரிடல் (combat) என்பதை வழக்கத் தில் கையாண்டனர். இதை அவர்கள் இங்கிலாந்திலும் கை யாண்டனரெனினும், ஆங்கிலேயர்கள் தங்களுக்குள்ளாகவோ, தங்களுக்குள்ள வழக்குகளிலோ நார்மானியரிடத்து இம்முறை யைக் கையாளுதல் வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஒரு வழக்கை ஆய்வு செய்வதில் இருவர் போரிடல் (duel) என்பது ஒரு கடுந்தேர்வு முறையாகக் கருதப்பட்டது; ஆயின் முறைப் படி பார்க்கப்போனால் அது கடுந்தேர்வு முறை ஆகாது. நடுப் பேரவையின் ஒரு கூட்டமாகக் கோட்ட முறை மன்றம் கூடி வேலை செய்ய முடியுமென்ற ஒரு புதிய முறை இப்பொழுது தோன்றியது; அதைப்பற்றி அடுத்த இயலில் கூறப்படும்.

நார்மானியரது காலத்தின் தொடக்கத்தில், முதலாம் வில்லி யத்தின் ஆட்சிக் காலத்தில், ஆங்கிலோ – சாக்சனியரது முறை யாகிய பத்துப்பேர் பிணை என்பது, ஆட்கள் பொறுப்பேற்கும் ஓர் அமைப்பினால் மேலும் வளர்ச்சியுற்றது. இதுவே ஆங்கில உள்நாட்டு ஆட்சிமுறையில் 300 ஆண்டுகளுக்கு மேலாக நேர் வாக்குறுதி முறை (Frank pledge system) என்பதாக நடை முறையில் இருந்து வந்தது. இம்முறையின்படி இங்கிலாந்தில் நிலமுள்ள பொறுப்பானவர்களோடு தொடர்புடையவர்களும் நேர் வாக்குறுதி முறையில் ஒப்புக்கொண்டு, ஒரு தலைவரின் கீழ் பத்துப் பத்து பேராக அமைந்திருக்க வேண்டும்; இவர்களுடைய

நிலமே அவர்களுக்குப் பொறுப்பாக அமைவதாகும்; நிலமில்லாதவரும் நிலம் உடையவரது வீட்டு அலுவல்களில் தொடர்புடையவராய் இருத்தல் வேண்டும். பட்டணத்திலுள்ள அரசு அங்கு 12 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களும் பத்துப்பேர் பிணை என்ற அமைப்பில் இருக்குமாறு செய்யவேண்டும். முறை மன்றத்தின் முன் குற்றஞ்சாட்டப் பட்டவர் பத்துப்பேர் பிணை முறையில் இல்லாதவராக இருந்தால் அதற்காகப் பட்டண அரசு தண்டிக்கப்படும். குற்றம் சாட்டப்பட்டவர் பத்துப்பேர் பிணையிலிருந்தாலும், சிறை பிடிக்கப்பட்டு மற்றவர்களால் முறை மன்றத்தின் முன் கொண்டுவரப் படாவிட்டால், அதற்காக அவர் இருக்கும் பத்துப்பேர் பிணையும் தண்டிக்கப்படும். எனவே குற்றவாளிகள் எனக் கருதப்படுபவர்களைச் சிறை பிடித்தல் என்னும் அக்காலத்திய கடினமான வேலையைச் செய்தற்கு இப் பத்துப்பேர் பிணை என்பது ஒரு கூட்டுப் பொறுப்பை உண்டாக்கிற்று. பழைமையான முறைமன்றப் பிடிபாடுகளைப் பார்க்கும்போது பத்துப்பேர் பிணையும் பட்டண அரசும் குற்றவாளிகளைச் சிறைப்பிடிக்க முடியாத காரணத்தால் தண்டனைக்கு உட்பட்டமை தெரிகிறது. அக்காலத்தில் இக்கடினமான வேலையைச் செய்வதற்கு உரிய வழியாக இப்பத்துப்பேர் பிணை அமைப்புதான் உறுதியாகக் கையாளப்பட்டது.

கோட்டத்திலுள்ள மக்கள் பதிவு செய்யப்பட்டுப் பத்துப்பேர் பிணை முறைகள் ஒழுங்காக வேலை செய்து வருவதைக் கண்காணிக்கக் கொத்தவாலுக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டது, இவ் வழக்கம் கொத்தவாலின் முறை எனப்படும்; இதன்படி ஆண்டுக்கு இருமுறை அவர் நூற்றின் முறை மன்றத்தை முழுமையாகக் கூட்டி, நேர்வாக்குறுதி முறையை நிறைவேற்றினர். அரசைத் தனியாளின் பொறுப்பாக ஆக்கிய படைமானிய காலத்தில் உள்நாட்டுக் காவலையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்காகச் செய்யப்பட்ட இம்மாற்றம்கூட நிலையாய் இருக்கவில்லை; ஏனெனில் கொத்தவாலுக்கு யாதொரு விதமான தொடர்புமில்லாத நூற்றின் முறை மன்றம் பெருமகனுடைய பொறுப்பிலேயே விட்டு வைக்கப்பட்டது.

நார்மானிய வெற்றிக் காலத்துக்கு முன்பே, பொருள் வரும்படியையும், உள்நாட்டுக் காவலையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தனியாருடைய முறைமை வரம்பானது, நார்மானியரால் தடை செய்யப்படவில்லை; உள்நாட்டுக் காவல் படையை நேர்வாக்குறுதி முறையினால் அரசு மேற்பார்வை செய்து வந்தது என்ற ஒன்றே தான் தடையாக இருந்தது. இதனோடு ஒரு புதிய குற்றவழக்கு ஆய்வு முறையும் தோன்றிற்று. இதே போன்ற

தனியார் முறை மன்றங்களைத் தங்களுடைய நாட்டிலும் நார் மானியர் அறிந்திருத்தனராகையால், இங்கிலாந்தில் அவர் அவற்றை நிக்கவில்லை, சாக்சனியர் காலத்துத் தனியாகப் பெரு மக்களது மேற்பார்வைக்கு விடப்பட்ட நூற்றின் முறை மன்றங்களை நார்மானியர் உறுதி செய்தனர். அவர்கள் வெகு விரைவில் தாம் வழங்கிய உரிமைகளுள் நேர்வாக்குறுதி முறையினையும் சேர்த்து அளித்தனர். நார்மானிய அரசானது செவ்வனே அதிகாரக் குவிப்பு உடையதாயிருந்தமையால், இவ்வாறு சில உரிமைகளைக் கொடுப்பதானது, அவற்றைக் கொடுத்தவருக்கும், அடைந்தவருக்கும், யாதொரு தனி உரிமையையும் வழங்கிவிட வில்லை; கட்டணங்களையும், தண்டப்பணங்களையுமே இவ்வுரிமைகள் கொடுத்தன. அரசியல் தனியுரிமை யொன்றும் இவ்வுரிமைகள் வழங்கவில்லை; நார்மானியர் வந்திறங்கிய இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நடு அரசு உள்நாட்டு முறை மன்றங்களைத் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தது.

அரசியற் படைமானிய முறையைப் புகுத்தியதும், நார் மானியர் ஒரு புதிய வகையான தனியார் முறை மன்றத்தையும் ஏற்படுத்தினர்; இதுவே படைமானிய முறை மன்றம் அல்லது பெருமகனது முறை மன்றம் எனப்பகுத்துக் கூறப்படும்; பெரு மகனது கிழாட்கள், தனியுரிமை பெற்ற குத்தகையாளர் ஆகியோரைப் பற்றியும், அவரது நிலங்களைப் பற்றியும், அவர் தம்முள் கொண்ட தொடர்புகளைப் பற்றியும், அவர் பெருமகனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றியும் எழுகின்ற வழக்குகளைத் தீர்ப்பது இம்மன்றமே யாகும். அமைப்பிலும், செயல் முறையிலும் இது அக்காலத்திய மற்ற முறை மன்றங்களை ஒத்திருந்தது; நூற்றின் முறை மன்றத்தைப் போல, இதுவும் ஆய்தல், சான்று முறைகளைப் பின்பற்றும் ஒரு பேரவை முறை மன்றமாக இருந்தது. இதற்கு முறைவராக அல்லாமல் அமைதி நிறுவுபவராகப் பெருமகனே அவரது வகையாளரோ தலைமை தாங்கினர். இம்முறை மன்றத்தில் கையாளப்படும் சட்டம், தனியாரது நூற்றின் முறை மன்றத்தின் கையாளப்படும் தனிச் சட்டமல்ல; பண்ணை முறை மன்றத்திலுள்ள வழக்கமென்னும் சட்டமுமல்ல; அது பெருமகனும், கிழாட்களும் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்புகளைப் பற்றிய வழக்குகளைத் தீர்க்கின்ற படைமானியச் சட்டமாகும்.

எனவே, நார்மானிய இங்கிலாந்தில், நாம் நடைமுறையிலிருப்பதைக் கொண்டு பாகுபாடு செய்யத்தக்க வகையில் மூன்று வகையான தனியார் முறை மன்றங்கள் இருந்தன; முதலாவது பெருமக்களுக்கும், அவரது தனியுரிமைபெற்ற குத்தகையாளருக்கு.

முள்ள தொடர்பை ஒழுங்குபடுத்தும் அரசியல் படைமானியத்திலுள்ள பெருமக்கள் முறை மன்றங்கள்; இரண்டாவது, தனியார் கையிலுள்ள நூற்றின் முறை மன்றம்; மூன்றுவது பண்ணைமுறை மன்றங்கள். இவற்றில் தனியாரது நூற்றின் முறை மன்றம் தனியுரிமை பெற்ற முறைமன்றம் எனவும் படும்; ஏனெனில் இவை உள்நாட்டு அரசியலலுவலாளரோ, நிறுவனங்களோ தலையிட முடியாதபடி தனிமுறை மன்றங்களாக அரசரது ஆணையினுல் நிறுவப்பட்டவை. பண்ணை முறை மன்றங்களோ பண்ணை, அதிலுள்ள குத்தகையாளருக்கிடையே உள்ள தொடர்பு அவர்களுக்கும், பெருமகனுக்குமுள்ள தொடர்பு இவற்றை ஒழுங்கு செய்யும் பொருளியல் படைமானியத்திலுள்ளவையாகும். நடை முறையில், சிக்கனத்திற்காகவும், வசதிக்காகவும், இம்முறை மன்றங்களெல்லாம், முக்கியமாகப் பிற் கூறப்பட்ட இரண்டும், ஒன்று மற்றதின் வேலையைச் செய்தது; ஆயினும் இதனுல் அவற்றின் முறைமை வரம்பு மாறவோ, அவற்றின் வேறுபாடுகள் நீங்கவோ, அவைகள் எடுத்தாண்ட சட்டங்களின் வேறுபாடு நீங்கவோ இல்லை. பெருமகனது நிலம் அவருக்கு ஒரு மதிப்பைத் தருவதாகையால் அதன் முறை மன்றம் மதிப்பு முறை மன்றம் எனப்பட்டது; இது தனக்குரிய வழக்குகளை வெகு அரியதாகவேதீர்த்து வைத்தது; அப்பெருமகனது ஆட்சிக்குட்பட்ட பண்ணைமுறை மன்றங்களிலிருந்து முறை செய்து கொள்ளப்படும் வழக்குகளை இம்முறை மன்றம் ஆய்ந்து தீர்ப்புச் செய்தது.

சாக்சனியர் காலத்தில் இருந்ததைப் போலவே இப்பொழுதும், இங்கிலாந்தின் மக்கள் பல வகுப்பினராகவும், மதிப்பினராகவும் இருந்தார்கள். புதியதாகத் தோன்றிய பெருமக்கள் குடி, முந்தியதை விட மிக்க வலிமையுள்ளதாயும், குறிப்பாக வரையறுக்கப்பட்டும், அக்குடியில் பிறக்காதவர் அதில் சேருவது கடினமானதாகவும் ஆயிற்று. அரசியல் படைமானிய மென்னும் படைமானிய நிலவாரமானது, பெருமக்களது நிலவார உரிமை[1] யாகவே கருதப்பட்டது. கோமகன் என்ற நிலையைத் தவிர, படைமானியக் குத்தகையாளர் எவருள்ளும் தரத்தில் அமைப்பைப் பொறுத்தவரை வேறுபாடு கிடையாது. சாக்சனியர் காலத்திலிருந்ததைப் போலவே இப்பொழுதும் பொதுத்தனியாள்[2] படைமானிய முறையிலல்லாமல் இன்னெருவருக்குத் தொழில் செய்வதற்கு ஆளாகயில்லாமல் தனது நிலங்களை வைத்திருந்தார். இம் முறையில் நிலத்தை உடையவர், பெருமகனுக்கும், அடிமை

1 Noble tenure
2 Common freeman - பொதுக்குடி

ஊழியருக்கும் இடைப்பட்ட தரத்தினராவர்; இவ்வரிசையில் உரிமையே யில்லாத அடிமைகளே கடைசித் தரத்தினர் ஆவர். இம் முறையில் சமுதாயமானது நார்மானியரது வெற்றியினால் பெரும் மாறுதலுக்கு உட்பட்டிருந்தால் தனியாட்களுக்குப் பெரும் துன்பங்கள் நேரிட்டிருக்க வேண்டும்; சான்றுகளில் காணப்படுவதைக் காட்டிலும் உண்மையில் சாக்சனியருக்குப் பெரும் இழப்புக்கள் நேரிட்டிருத்தல் கூடும். சாக்சனியப் பெருமக்கள் எவரும் நார்மானியர் காலத்தில் பெருமக்களாக ஆக்கப்பட வில்லை; பொதுக் குடிகளுக்கு உள்நாட்டு அரசிய லில் உள்ள செல்வாக்கும் குறைந்து போயிற்று; தமது முந்தியிருந்த உரிமையுள்ள நிலையை அவர் வெகு காலத்துக்குப் பின்பே அடைந்தனர்; அவ் வகுப்பைச் சேர்ந்த பலர் அதற்கும் கீழான நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். அடிமை ஊழியருக்கு இம் மாற்றத்தினால் யாதொரு இழப்பும் ஏற்படாவிடினும், அவருக்கு வேறு பெரிய நலன் எதுவும் ஏற்படவில்லை. அவரது நிலைமை சீர்ப்படுதல் என்பது பொதுவாகப் பொருளியல் நிலைமை சீராகும் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று. 12-ம் நூற்றாண் டில் முறை மன்ற அமைப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப் பட்டதும், மற்ற வகுப்பினரை விட முந்தியே இப் பொதுத் தனி யாட்கள் தங்களுடைய பழைய நிலையை அடையத் தொடங்கினர்.

அரசரும், பெருமக்களுமே, நார்மானிய வெற்றிக்குப் பிறகு மற்றெல்லாரையும் விட வலியவராக அருகருகில் இருந்தனர். சமய நிலையத்தைச் சேர்ந்தவரையும் அமைப்பு முறையின்படி நாம் பெருமக்களுடன் சேர்த்துப் பார்த்தால் இவ்விருவருமே அரசியலிலும், ஆட்சியிலும் செல்வாக்கு மிக்கவராக இருந்தனர். அரசியல் அலுவல்களில் செல்வாக்கை அளிக்கக்கூடிய நிலையோ, அல்லது தங்களது கருத்தை வெளிப்படுத்தக் கூடிய ஒரு நிறுவனக் கருவியோ நடு, கீழ்த்தர வகுப்பினருக்குக் கிடையாது. இந்த இருவரினும் அரசரே வலிமை யுடையவர்; எனினும் அரசரது உரிமைகளுக்கு வரம்பு செய்வதற்கும், பிற்காலத்தில் வரையறைக் குட்பட்ட முடியரசு அமைப்பதற்கும் அடிப்படையான படை மானிய ஒப்பந்தக் கொள்கையைப் பெருமக்களே அடைந்திருந் தனர். அரசரது வரம்பற்ற வலிமையே அதனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயு மிருந்தது.

அரசரும், பெருமக்களும் எதிர்காலத்தைப் பற்றியோ, அரசுதலைமைப் பின் வளர்ச்சியைப் பற்றியோ, தனிப்பட்ட உரிமை களைப் பற்றியோ யாதொரு கருத்துமின்றி இருந்தனர். எதிர் காலத்தில் தனது வலிமையான நிலையை உறுதியாக்குதல் வேண்டு

மென்பதைவிட, தனது காலத்தில் மிக்க ஆற்றல்களைக் கையாள வேண்டு மென்பதிலேயே அரசர் கருத்தா யிருந்தார். தனிப் பட்ட பெருமகனும் பொது அரசியல் வேலைகளில் தனக்குள்ள பங்கை ஒரு உரிமையாகவோ, அரசை நடத்துவதில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்குத் தக்க ஒரு வாய்ப்பாகவோ கருதாமல், அதை ஒரு சுமையாகவே கருதியதனுல், இத்தகைய சமுதாயத்தில் பொதுப்பணி பற்றிய கருத்துக்கள் ஒன்றும் சிறப் பாகக் கொள்ளப்படவில்லை; தனியாள் தனக்குப் பொது அரசியல் வேலைகளில் எவ்வளவு குறைந்த பங்கு உண்டோ, அவ்வளவுடன் தப்பிப்போகும் இயல்புடையவராகவே இருந்தார். எல்லாமே அரசருடைய தீர்மானத்துக்கு விடப்பட்டன; எவரும் மனமார ஒரு நோக்கத்தைக் கருதியோ, ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கோ, இதை இவ்வாறு செய்யவில்லை.

இயல் மூன்று

நார்மானியர் காலம் [1]

புதிய நிறுவனங்கள் எவற்றையேனும் தோற்றுவிக்கக் கூடிய மாறுதலை உண்டாக்கியதனுல் நார்மானிய வெற்றிக்குச் சிறப்பு இல்லை; பழைய நிறுவனங்களுக்கு ஒரு புதிய அழுத்தமும், ஒரு விளக்கமும் கொடுக்கக்கூடிய மாறுதலை உண்டாக்கினமை யாலேயே நார்மானிய வெற்றிக்குச் சிறப்பு ஏற்பட்டது. நிறு வனங்களைப் பொறுத்த வரையில் ஏற்பட்ட மாறுதல்களாவன: அரசியல் படைமானியத்தைப் புகுத்தியது, நடுப்பேரவையின் அமைப்பில் மாறுதலை உண்டாக்கியது, புதிய நிலச்சட்டத்தைச் செய்தது, படைமானிய நிலவாரச் சட்டத்தைச் செய்தது என்பவையே. ஆயினும் அரசியலமைப்பில் அரசரது நிலையைப் பொறுத்த மட்டில், அதற்குக் கொடுக்கப்பட்ட விளக்கமும், அழுத்தமும் ஒரு தனியான உட்பொருளைக் கொடுத்தன. பதின் மூன்றும் நூற்ருண்டில் பாராளுமன்றம் தோன்றுகிற வரையில் அரசியலமைப்பில் நமது கருத்தைக் கவருவது என்னவெனில் அது அரசருடைய வலிமையும், அதற்கு எதிர்காலத்தில் உள்ள நிலைமையுமே. பன்னிரண்டாம் நூற்ருண்டில் செய்யப்பட்ட முறை மன்றச் சீர்திருத்தங்கள் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய சிறப்பை உடையனவே; எனினும் அவை யெல்லாம் அரசின் செயல் நுட்பங்களைப் பொறுத்தவை. அவை அதற்குரிய நிறுவனங்களை மட்டும் தோற்றியவையே தவிர, நாட்டின் முழு

1 The Norman Period

அரசியலமைப்பின் தன்மையை மாற்றுவன அல்ல. எனினும் முதலில் அவற்றின் விளைவு நிறுவனங்களைக் காட்டிலும், அரசியலமைப்பையே பொறுத்ததாகவே இருந்தது. இத்தகைய விளைவு, நேராக அரசரது வலிமைகளோடு அச்சீர்திருத்தங்கள் தொடர்புடையனவாயிருந்தமையால் ஏற்பட்டது. நார்மானிய வெற்றியை அடுத்துள்ள இருநூறு ஆண்டுகால அரசியலமைப்பு வரலாற்றில், அரசரது வலிமையும், அதற்கு எதிர்காலத்திலுள்ள நிலைமையும் தான் அடிப்படையான உண்மையாக இருந்தவை. அக்காலத்தில் இருந்த ஒரு கேள்வியாக இதனைச் சொல்வோமானால், அக்கேள்வி இது தான்: "இப்பொழுது நடைமுறையில் கையாளப்படுவதும், விளக்கத்திலும், வற்புறுத்தலிலும் இருப்பதும், நிறுவன அடிப்படையிலோ அல்லது சட்டத்திலோ இல்லாததுமான அரசருடையவலிமையை அல்லது அதிகாரத்தை, அவர் சட்டத்தின் மூலமாகவும் நிறுவனங்களின் மூலமாகவும் ஓர் அரசியலமைப்புக்குட்பட்ட அதிகாரமாக மாற்றிக் கொள்வாரா? அல்லது ஆணவமான அதிகாரத்துக்கு அப்போது படைமானியச் சட்டத்தில் காணப்பட்ட வலுவற்ற வளர்ச்சியடையாத தடைகளையே எதிர்காலத்திய அரசியலமைப்பின் கொள்கைகளாக ஆக்கிக் கொள்ள முடியுமா?"

அரசரது வலிமையில் ஒரு பகுதியும், இக்காலம் வரையிலும் அரசியலமைப்பின் வரலாற்றில் சிறப்பான பகுதியும் ஆன அரசரது தனிச் சிறப்புரிமை (Prerogative) என்பது தன்மையில் ஓரளவு நிறுவன அடிப்படையில் அமைந்தது; அதாவது தங்களுக்கெதிரான வழக்குகளில் கூட அரசருக்குத் தனிப்பட்ட அதிகாரம் உண்டு என்பதாக, முறை மன்றங்களும், அரசரது தனிச் சிறப்புரிமைக்கு ஒப்புதல் கொடுத்திருந்தன.

"இத் தனிச்சிறப்புரிமையை நடத்துவது எப்படி?" என்பதற்காகக் கொள்கைகளை வகுக்கும்போது, அதை வகுக்க முயன்றவர்களால் தனிச் சிறப்புரிமையானது மிகவும் ஆராயப்பட்டது; அதன் பல்வேறு விவரங்களை காலத்துக்குக் காலம் வெவ்வேறாக ஒவ்வொருவரும் வற்புறுத்தினமையால், அது இத்தன்மைப் பட்டதென்பதாக இடைக்காலத்தில் எவராலும் தீர்மானமாக வரையறுக்கப்படவில்லை. அது அப்போது முடிவு செய்யப்படுதற்கரியதாயும் இருந்தது; ஏனெனில் இது பற்றிய கருத்தானது காலப் போக்கில் வளர்ந்த ஒன்றாகும். அப்படி இருந்தாலும், அரசியலமைப்பின் வரலாற்றை நாம் கற்கத் தொடங்கும்போது அத் தனிச் சிறப்புரிமையின் அடிப்படையான தன்மையை நாம் இயலுமானால் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது; எனினும் அக்

காலக் கருத்துக்களைத் தெரிவித்தற்கு நாம் இப்பொழுது கையாளுகிற சொற்களையே, அப்பொருளிலேயே அக்காலத்தவரும் வழங்கவில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் அரசரது தனிச் சிறப்புரிமை என்பதற்கு, வேறெவரும் செய்ய இயலாதவற்றை அரசர் செய்யக் கூடிய திறமென்றும், அவற்றை வேறெவரும் செய்ய இயலாத வழியில் அரசர் செய்யக்கூடிய திறமென்றும் பொருள் கூறலாம். எடுத்துக்காட்டாக, பக்கத்திலுள்ளவர்களை ஒரு வழக்கின் உண்மையைக் கண்டுபிடிப்பதற்காகத் தீர்ப்புச் சான்றுளர் குழுவாக அரசர் அமர்த்தலாம்: இதனை வேறெவரும் செய்தல் இயலாது. தீர்ப்புச் சான்றுளர் குழு அரசரது தனிச் சிறப்புரிமையின் செயல்முறையாகும். தனிச் சிறப்புரிமை யென்பதற்குச் சட்டத்தினாலும், சட்டத்தை ஒத்த வழக்கங்களினாலும், அரசரே செய்துகொண்ட ஒப்பந்தங்களினாலும், வெளிப்படையாகத் தடைசெய்யப் படாதனவற்றை யெல்லாம் செய்யும் ஆற்றல் என்பதாகப் பொதுவான பொருள் கொள்ளலாம். நடைமுறையில் பார்க்கப்போனால் அரசரை, அவர் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கும், ஒவ்வொரு செயலிலும் சட்டத்துக்கும் ஏற்ப நடக்கும்படி கட்டுப்பாடு செய்வது எளியதன்று. உண்மையில் பலவகைகளில் அரசர் சட்டத்துக்கும் மேற்பட்டவராக, அதனால் கட்டுப்படுத்தப்படாதவராகவே கருதப்பட்டார். அவர்மீது வழக்குப்போடுதல் இயலாது. பொதுச் சட்டத்தினால் காப்பாற்ற முடியாத மற்றவருடைய உரிமைகளை, அரசர் காக்கமுடியும்; இவ்வாறு அரசர் செய்யச் செய்யத்தான் நேர்மைச் சட்டமும் (இக்விட்டி லா-Equity law), முறை மன்றங்களும் தோன்றலாயின. செல்லுபடியாகும் எச்சட்டமும் அவருடைய இசைவு இருந்தாலல்லாமல் செய்யப்பட முடியாது. எந்த முறை மன்றத்தின் தீர்ப்பையும் தள்ளிவிட்டு, அரசர் எக்கட்சிக்கும் மன்னிப்பு அளிக்கமுடியும். பிற்பட்ட காலங்களில், அரசர்தான் முன்பு ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் கொடுத்திருந்தாலும், அச்சட்டத்தைக் குறிப்பிட்ட வழக்கில் கையாளாமலும், அதன் ஒரு பகுதியையோ, முழுவதையுமோ நிறுத்திவைக்கவும் அவரால் இயலும். தனது செயல்களுக்கெல்லாம் அவர் கடவுளுக்கே பொறுப்பாளியாவார். உலகை ஆட்சி செய்வதில் அவர் கடவுளின் வகையாளாவார்; அவ்வகையில் அவருக்குத் தனிப்பட்ட ஆற்றல்கள் உண்டு; அதைப் போல உரிமையையும், முறைமையையும் காப்பதற்கும் அவருக்குக் கடமை உண்டு. , ஆயினும் அவரும் மீறமுடியாத சில தெளிவான கடமைகளும், பொதுவான சட்டம் என்ற ஒரு சட்டமும் இருந்தன. எனவே அரசர் சட்டத்திற்கும் மேற்பட்டவர் என்ற

கருத்துக்கும், சட்டம் அரசருக்கும் மேற்பட்டது என்ற கருத்துக்கும் அல்லது வேறு வகையாகச் சொல்லப்போனல் பொதுவான சட்டத்திற்கும், அரசரது தனிச் சிறப்புரிமைக்குமுள்ள முரண்பாடுகளினுல் தோன்றிய பூசலும், பிறகு அவை இரண்டும் பொருந்திய வகையுமே ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் பெரும்பகுதியை ஆக்குகின்றன.

அரசியலமைப்பின் வளர்ச்சியில் தொடக்கத்தில் காணப்படும் இயல்புகள்தெளிவாக ஐயத்திற்கிடமின்றி இருக்கின்றன; முதலாம் வில்லியம் தனது உரிமைகளை உச்சநிலையளவிற்குக் கொண்டு போய்க் கையாளுவதற்காகத் தனது நிலைமையைப் பயன்படுத்தாமல், நடுத்தரமான நிலையிலேயே இருந்து ஆட்சிசெய்தார். ஆனல் அவரது மகன் இரண்டாம் வில்லியம் தனது நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, தனது உரிமைகளை அவற்றின் உச்ச நிலையளவிற் கையாண்டார் என்பதற்குத் தெளிவான சான்று இல்லாவிடினும், அவர் அவ்வாறு செய்தாரென நாம் உறுதியாகச் சொல்ல முடியும். நமக்குக் கிடைக்கிற ஒரு சில நிகழ்ச்சிகளும், அவரது தம்பி தனது முடிசூட்டு விழாப்பட்டத்தில் அளிக்கும்வாக்குறுதிகளின் மூலம் வெளிப்படுத்துகிற தவறுகளும், இரண்டாம் வில்லியத்தின்செயல்களைச் சட்டத்திற்கு மாறுனவை எனக் காட்டுகின்றன; எனினும் அவர், தான் ஒரு படைமானிய மேலரசுரிமையாளர் என்ற நிலைக்குத் தருக்க முறைப்படி உரிய உரிமைகளையே வழக்கத்திற்கு மாறுன உச்ச அளவில் கையாண்டனரென்பதையும் அவை காட்டுகின்றன. சில சமயங்களில் இவ்வுரிமைகளை வைத்துத் தனது புதிய தேவைகளைச் சரியெனக் காட்டினரென்பதையும் அவை காட்டுகின்றன. சமயநிலையத் தொடர்புள்ள பெருமக்களும், அத்தொடர்பில்லாத பெருமக்களும் அவரால் மிகவும் துன்பமடைந்தார்கள்; சமய நிலையத்துக்கு அளிக்கப்பட்ட மானியங்களிலிருந்தும் அவர் வலிந்து வாங்கிய வரும்படிகள் வழக்கத்துக்குப் புதியனவாகக் கருதப்பட்டன. ஒரு மானியத்துக்கு உரியவர் இல்லாமல் வெறுமை ஏற்படும் போது, மேலே குறிப்பிட்ட உரிமையைக் கையாண்ட முதலாம் வில்லியம், அம்மானியங்களைத் தன்வயம் எடுத்து, அதிலுள்ள பொருளுக்குப் பட்டியல் எடுத்து, அவை வீணுக்கப்படாமல் காத்து, அவற்றின் வரும்படியைச் சமயநிலையம் எடுத்துக் கொள்ளும்படியே செய்தார். ஆயினும் அவரது மகன் இவ்வுரிமையை அதன் தருக்க அளவிற்கு, மிகக் கடுமையாகக் கையாண்டார்; இத்தகைய மானியங்களிலிருந்து கிடைக்கும் வரும்படியை ஒரு சாதாரணப் பொறுப்புரிமையில் செய்வது போலத் தனக்கே பயன்படுத்திக்கொண்டார்; சில சமயம் இத்தகைய மானியங்களை

உரிமையாளரில்லாமல் பறிமுதல் செய்யப்பட்டனவாகவே அவர் கருதி, சமயநிலையத்தின் நலன்களைக் கருதாமல், அவற்றைப் பிரித்துக் கொடுத்தார். சமயச் சார்பற்ற பெருமக்கள் இதுவரை கொடுத்து வந்த விடுதலைப் பணம் போதாதென அவர் கூறினர். எனவே அவர் கிட்டத்தட்ட மானியத்தின் மதிப்பை யொத்த பணத்தைக் கேட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாயினர். மானியத்தின் பெண் மரபுரிமையாளரை மணஞ் செய்து கொடுக்கும் உரிமையையும் அவர் இவ்வாறே வழக்கத்துக்கு மாறான வரும்படியை வலிந்து வாங்கும்பொருட்டுக் கையாண்டனர்; இதே நோக்கத்தோடு அவர் இவ்வுரிமையை இறந்து போன பெருமகனின் பெண் மரபுரிமையாளரிடம் மட்டுமன்றி கைம்பெண்ணிடமும் கையாண்டனர்.

அவரது தனிப்பட்ட செயல்களைப் பொறுத்தமட்டில் போதிய சான்றுகிடைக்காவிடினும், இரண்டாவது வில்லியம் கிட்டத்தட்ட கொடுங்கோன்மையை ஒத்த வரம்பற்ற முறையில் ஒரு தனியாட்சியை இங்கிலாந்தில் நடத்தி வந்தாரென்பதில் ஐயமில்லை. அரசருக்கு இடராகக்கூடிய அளவுக்கு வலிமையைத் திரட்டி அவரது தனியாட்சியின் கொடுமையைச் சரிப்படுத்துவதற்காகப் பெருமக்கள் இருமுறை கலகம் செய்தனர்; ஆயினும் ஒரு பயனுமில்லை. வில்லியம் அவர்களைவிட வலியவராயிருந்தார். எனினும் இவ்விடரானது அரசரைத் தனது குற்றத்தை உணரும்படி செய்தது. தான் இனி நல்ல முறையில் ஆட்சி செய்வதாக எழுத்து மூலம் வாக்குறுதி கொடுத்து ஆங்கிலக் குடிமக்களிடம் அரசர் முறையிட்டார். அவரது எழுத்திலுள்ள வாக்குறுதிகள் நமக்குக் கிடைக்குமாயின் அவைகளிலிருந்து பல அரிய செய்திகளை நாம் அறிதல் கூடும். ஆயினும் அவருக்குற்ற இடர் நீங்கியதும், அவர் முன் போலவே முறைகேடாக ஆளத் தொடங்கினர் அவர் சிறப்பு ஒன்றுமில்லாத ரானுல்பு ப்ளாம்பர்டு (Ranulf Flanbard) என்பவரை, மிக்க செல்வமும், வலிமையுமுடைய டர்காமின் சமய வட்டத் தலைவர் நிலைமைக்கு உயர்த்தித் தனது அமைச்சராகவும் ஆக்கினர். இவர் திறமும் சுறுசுறுப்புமுடைய அமைச்சரெனக் கூறப்பட்டது; இவர் அரசரது நோக்கத்தை நிறைவேற்றி வைத்ததுமன்றி, இவ்வகையில் புதிய வழிகளையும் சுட்டிக்காட்டினர். நாம் சீர்தூக்கிப் பார்க்கிற அளவில், ஒரு மேலரசுரிமையாளருக்குத் (Suzerain) தருக்க அளவையால் எத்தகைய உரிமைகள் உண்டோ, அவைகளையே வில்லியம் கையாண்டாரெனத் தெரிகிறது; அவர் வலிந்து கேட்ட தொகைகளின் அளவுகள் மட்டுமே வழக்கத்திற்கு மாறானவை, ஒப்புதல் பெறாதவை. பணம் தேட அவர் கையாண்ட

புதிய முறைகள், அடுத்து வந்த நூற்றைம்பது ஆண்டுக் காலத்தில் ஆங்கில அரசருடைய, ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமைகளாகி இதே நோக்கத்துடன் இன்னும் மிகுதியாகக் கையாளப்பட்டன.

இரண்டாம் வில்லியம் திடீரென இறந்து போகவும், அவரது அண்ணன் ராபர்ட்டும் இல்லாமற்போகவும், பெருமக்களுக்கு இன்றொரு வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய தம்பி ஹென்றி தன்னை அரசராக்குமாறு பெருமக்களை வேண்டினர். ஆனால் அவ்வாறு ஆவதற்காகத்தான் தனது அண்ணனின் மனம் போன படியான செயல்களை விட்டுவிடுவதாகவும், தனது தகப்பனாரின் செயல்முறைகளைக் கையாளுவதாகவும், அவர்களுக்கு அவர் வாக்குறுதி கொடுக்க வேண்டியதாயிற்று. இந்த வாக்குறுதி களெல்லாம், ஒரு தனியாள் எழுதுகிற, சட்டப்படி செல்லக்கூடிய உடன்படிக்கைப் பத்திரத்தை அல்லது கொடுக்கப்பட்ட பொருளை யொப்ப, ஒரு பட்டயத்தின் அமைப்பில் முறைப்படுத்திக் கூறப் பட்டன. இதனையே நாம் முதலாம் ஹென்றியின் முடிசூட்டுவிழாப் பட்டயம் (Coronation charter of Henry-I) என அழைக்கிறோம். இரண்டாம் வில்லியத்தால் செய்யப்பட்டவை யெல்லாம் அவரால் செய்தற்குரியன அல்ல என்ற கொள்கையின் அடிப்படையிலும், எனவே அவர் செய்தன எல்லாம் முறையற்றவை, சட்டத்துக்குப் புறம்பானவை என்ற கொள்கையினடிப்படையிலுமே, இப்பட்டயத் தின் வாசகங்கள் அமைந்திருக்கின்றன. அதன் முதல்பகுதியில், தான் வாக்குறுதிகள் கொடுப்பதற்குக் காரணமாக, "நாடு முறைமையற்ற வன்மையான பணம் பறித்தல்களினால் கொடுமைக் குள்ளாயிற்று" என்பதாக ஹென்றி கூறுகிறார். அதன்பின் தான், இங்கிலாந்தைச்சட்டத்துக்குப்புறம்பான வழிகளில் கொண்டுவந்து கொடுமைப்படுத்திய எல்லாத் தீய வழக்கங்களையும் நீக்கிவிடுவதாக அவர் வாக்குறுதி கொடுக்கிறார். அதாவது, அரசர் குறிப்பிட்டுச் சொல்லுகிற சில செயல்களை, அவரும் சட்டப்படி செய்தல் இய லாது என்பதை அரசரே தெளிவாக ஒப்புக்கொள்ளுகிறார். பட்ட யத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பனவெல்லாம் அரசருக் கும் அவரது பெருமக்களுக்குமுள்ள படைமானிய முறைபற்றிய தொடர்புகளையே குறிப்பன. இப்பட்டயம், தான் எடுத்துக்கூறும் பொருள்களினளவிலே படைமானிய முறையின் அடிப்படையான ஒப்பந்தத்தொடர்புகளை எடுத்துக்காட்டி விளக்கம்செய்யும்பட்டய மாகும். ஒருவர் தான் வாங்கிய ஒரு குறிப்பிட்ட நிலத்துக்கு மாறாக அதைக் கொடுத்தவருக்கு வழக்கமாகச் செய்யும் அலுவல் கள் பொதுவான படைமானிய ஒப்பந்தத்தில் அடங்கி இருப்பதை இப்பட்டயம் காட்டுகிறது; அரசர் இவ் வாக்குறுதிகளைக் கொடுத்

நால் பெருமக்கள் அரசருக்கு உதவுவதாக இப்பட்டயத்தில் இருப்பதால், இது ஒரு தனிப்பட்ட ஒப்பந்தமாகும்.

இப்பொருளிலேயே இப்பட்டயம் அரசியலமைப்பு வரலாற்றில் சிறப்புடையதாய் இருக்கிறது. பட்டயத்திலுள்ள குறிப்பிட்ட சில வாக்குறுதிகளை ஹென்றியே நிறைவேற்றவில்லை; அவருக்குப் பின் வந்தவர்களும் அவ்வாறு செய்யவில்லை; ஆயினும், பட்டயத்தின் அடிப்படையான கருத்தை எவரும் மறந்துவிடவில்லை. அக்காலத்தில், 1100-ல், பெருமக்கள் மேலே குறிப்பிட்ட அடிப்படையான கருத்தைச் சொல்லவில்லை; எனினும் அதனை நாம் பின்வருமாறு விளக்கிக் கூறலாம். "அரசரால் சட்டப்படி செய்யப்படக்கூடாதனவும் சில இருக்கின்றன; அவருடைய அதிகாரத்துக்குச்சில வரம்புகள் உண்டு; அவற்றை அவர் ஏற்றுக்கொண்டு தான் நடக்க வேண்டும்; அவ்வரம்புகளை அவர் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர் அவற்றை ஏற்றுக்கொண்டு நடக்குமாறு பெருமக்கள் அவரை உரிமையுடன் வற்புறுத்துவார்கள்!" இதுவே அவ்வடிப்படைக் கருத்து. உறுதியான நார்மானிய, ஆஞ்செவின் குடியரசுகளின் காலத்தில் இக்கொள்கை செயல்படவில்லை. ஆனால் சட்டத்துக்குப் புறம்பாக நடந்து கொண்டிருந்த இன்னொரு கொடுங்கோன்மையான அரசருக்கு ஒரு குறைபாடு நேர்ந்தபோது, பொதுமக்கள் இக்கருத்தைக் கையாண்டனர்; அதனை அப்பொழுது அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டனர். எனவே இத்தகைய அடிப்படைக் கருத்தையுடைய முதலாம் ஹென்றியின் முடிசூட்டு விழாப் பட்டயத்தை முன்மாதிரியாக வைத்துத்தான், மாபெரும் பட்டயம் (மாக்ஞ கார்ட்டா–Magna carta) என்பது வரையப்பட்டது; எனவே இம் மாபெரும் பட்டயத்தின் மூலம் இக்கொள்கையானது வரையறைக்குட்பட்ட அல்லது சட்டத்துக்குட்பட்ட முடியரசு அல்லது கோனாட்சி என்ற அமைப்பு தோன்றுவதற்கு அடிப்படையாயிற்று.

இப்பட்டயம் எழுதப்பட்ட சில காலத்துக்குள்ளாகவே, ஹென்றி தனது அரியணையை, மிகவும் இடரை விளைவிக்கக்கூடிய ஆங்கிலப் பெருமக்களும் நார்மானியப் பெருமக்களும் சேர்ந்த ஒரு கூட்டமைப்புக்கு எதிராகக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. ஏனெனில் அவர்கள் அரசரது வலிமை அடக்க முடியாதபடி வளருமென அஞ்சினர். சிறிது காலஞ்சென்றதற்குப் பின் இப்பூசல் நார்மண்டியில் அரசரால் தனக்கு ஏற்றவாறு ஒரு முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது. இவ்வெற்றிக்குப்பின் ஏறக்குறைய முப்பது ஆண்டுகட்கு ஹென்றி ஆண்டார்; இந்த நீண்ட ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்தில் எவரும் அவரது அதிகாரத்தை எதிர்க்கவில்லை. உண்மை

யில் அது அரசருடைய வலிமை நிலையாக நல்லமுறையில் வளர்ச்சி பெற்ற ஒரு காலமாக இருந்தது; இவ்வளர்ச்சி நடைமுறையில் ஏற்படவில்லை; அவ்வாறு ஏற்படத் தேவையுமில்லை; இவ்வளர்ச்சி சட்டத்திலும் நிறுவனங்களிலும் ஏற்பட்டது. ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட மாறுதல்களைக் காட்டும் சான்றுகள் நமக்குக் கொஞ்சமாகவும் சிதறுண்டும் கிடைக்கின்றன; ஆயினும் அவரது பெயரரான இரண்டாம் ஹென்றியின் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி, முன்னேற்றங்களுக்கு இவர் காலத்திலேதான் அடிப்படைகள் அமைக்கப்பட்டன, என்பதை நாம் உறுதியாகக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் உண்டு. பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஆங்கில அரசரின் கட்டுப்பாடற்ற வலிமையை அரசியலமைப்பில் உறுதியாக ஏற்படுத்தின.

இந்த இரண்டு ஆட்சிக் காலங்களிலும் அரசியலமைப்பை ஒட்டியே அரசரது வலிமை பெருகியபோது காணப்பட்ட ஒருசிறப்பான தன்மை என்னவெனில், சட்டமும் முறைமை செய்யும் மன்றங்களும் வளர்ச்சியுற்றன என்பதேயாம். செயற்குழுவின் வலிமைக்கு எதிராக மக்களின் தன்னுரிமையைக் காக்கின்றவைகளோடு நாம் தொடர்பு படுத்திச் சொல்லும் தீர்ப்புச் சான்றுளர் குழு (Jury) போன்ற நிறுவனங்களெல்லாம், தொடக்கத்தில் அரசரது கையில் சேர்த்து ஒரு முகப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட அரசியல் இயந்திரப் பொறியின் பகுதிகளேயாகும் என்பது உண்மையே, முதலாம் ஹென்றியின் ஆட்சியில் உண்மையாக நடைபெற்றதென்ன என்பதை அறிவதற்கு அரைகுறையான சான்றுகளே கிடைக்கின்றன; சட்டவளர்ச்சியில் அப்போதுள்ள ஈடுபாட்டைக் காட்டும் சான்று தெளிவாக இருக்கிறது. உண்மையிலேயே சட்ட வரலாறு முழுவதிலும், இந்த ஆட்சியின் கடைசி இருபத்தைந்து ஆண்டுக்காலமானது, அக்காலத்திய மக்களுக்குச் சட்டத்தில் இருந்த ஈடுபாட்டையும், பயிற்சியையும் எடுத்துக் காட்டும் வகையில் தருகிற உறுதியான சான்றுகளைப் போல, இதை ஒத்த நீண்ட காலம் வேறு எதுவும் இவ்வளவு சான்றுகளைத் தரவில்லை. அப்போதிருந்த ஆங்கில சட்டங்கள் முழுவதையும் தருகிற ஏழு அல்லது எட்டுத் தொகுப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன. பழைமையென ஆகி விடாமலிருப்பதற்காகச் சிலரால் எழுதிவைக்கப்பட்ட சட்டங்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஒருவேளை அரசர் தான் விடுத்த முடி சூட்டு விழாப் பட்டயத்தில், பண்டைய காலத்து எட்வர்டு அரசரது சட்டங்களை, அவற்றுக்குத் தனது தகப்பனார் காலத்தில் செய்யப்பட்ட மாறுதல்களுடன், திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வந்து செயல் படுத்துவதாகக் கொடுத்த வாக்குறுதியினால்

தூண்டப்பட்டே, பலர் இப்பழைய சட்டத்தொகுப்புக்களை எழுதியிருத்தலும் கூடும். எனினும் அவர்கள் விரும்பிய தெல்லாம் பழைய எட்வர்ட் அரசரின் சட்டங்களையோ, அல்லது வேறெந்தச் சட்டத்தொகுப்பையோ அல்ல; பொதுவாகப் பழைய ஆங்கிலோ - சாக்சன் ஆட்சி முறையில் அவர் ஈடு பாடுடையவரா யிருந்தனர்; அதை ஒரு நிலையான கருத்தாகக் கொள்ளுமளவுக்கு அது பழைமையாகப் போய் விட்டது; இப் பட்டயத்தில் காணப்பட்டவாக்குறுதி இத்தகைய பழைமையில் ஒரு ஈடுபாட்டை மக்களிடையே உண்டாக்கியது என்பதைவிட, முன்பே அவர்களிடையே இந்த ஈடுபாடு தொடங்கி விட்டதைக் காட்டும் சான்ருக இருந்தது என்பதே பொருத்தமாகும். எவ்வாரு யினும் இவற்றை எழுதியவர்களுக்கு இரண்டு மூன்று நோக்கங் கள் உண்டென்பது தெளிவு; பழைய ஆங்கிலோ - சாக்சனியச் சட்டங்கள் என்ன என எடுத்துக் காட்டுதல், முதலாம் வில்லியம் செய்த சட்டங்களின் விளைவுகளைக் கூறுதல், அப்பொழுது முறை மன்றங்களில் வழக்கத்திலிருந்த சட்டங்கள் சாக்சனிய சட்டங் களும் நார்மானியச் சட்டங்களும் சேர்ந்த கலவையே என்பதைக் காட்டுதல், ஆகிய இவையே அவர்களது நோக்கங்கள்.

இவற்றுள் மிகவும் சிறப்பு மிக்கது ஹென்றியின் சட்டங்கள் (Leges Henrici) எனப்படும் சட்ட நூல் ஆகும்; அது அக் காலத்திய முறை மன்றங்கள் கையாண்ட சட்டங்களைக் கூறுவ தாகும். 1116-லோ, அல்லது அதை அடுத்தோஎழுதப்பட்டது அந் நூல்; அதை எழுதியவர் அரசரது முறைவர்களில் ஒருவராயிருப் பினும், அது அலுவல் துறையால் வெளியிடப்பட்டதாகாது. அக் காலத்திய வழக்குகளைப்பற்றி அது தெளிவாகக் கூறுகிறது; சிறப்பாக அது அப்போது முறை மன்றங்களில் தனித்தனியாக வழக்கத்தில் இருந்து வந்தவையும், ஒன்ருகக் கலந்து விடாம லிருந்தவையுமான சாக்சனியச் சட்ட அமைப்பையும், நார் மானியச் சட்ட அமைப்பையும் பற்றிக்கூறுகிறது. இவ் விரண்டு சட்டங்களும் கூடிய விரைவில் இணையலாயின; அந் நூற்ருண்டின் இறுதியில் கிளான்வில் (Glanvill) என்பவர் எழுதிய முதல் பொதுச்சட்ட நூலில் சொல்லப்பட்டபடி இவை இரண்டும் இணைந்தே நமது பொதுச் சட்டத்தைத் தோற்று வித்தன; எனினும் முதலில் அவை இரண்டும் ஒரே முறை மன்றத்தில் கையாளப்பட்டாலும், தனித் தனியாகத்தான் இருந்தன. இச்சட்ட நூலில் எழுதப்பட்டுள்ள பல சாக்சனியச் சட்டங்கள் பழைமையானவையல்ல என்று நாம் சொல்ல முடியாது; சில பழைமையாகாம லிருந்தன. முதலாம் ஹென்றி யின் பட்டயத்தில் எட்வர்டின் சட்டங்களை மேற்கோளாகக்

காட்டியது சட்டத்தின் அடிப்படையாக அமையா விட்டாலும், அது, சட்டத்தை ஒட்டிய அரசு என்ற கருத்து நிலைப்பதற்கும், பிற்காலத்தில் இக்கருத்து சட்டத்துக்கு உட்பட்ட மன்ன ராட்சியை ஏற்படுத்திய சில தெளிவான ஆற்றல்களை உறுதியாக்கு வதற்கும் உதவிற்று.

குற்றச் சட்டத்தைப் பொறுத்த வரையில் பழைய சாக்சனியச் சட்டங்கள் வழக்கொழிந்து, நார்மானியச் சட்டங்கள் வந்ததற்பின் முற்றிலும் மறைந்து போயினமையை நாம் தெளிவாகக் காணலாம்; இம்மாறுதலானது நார்மானிய வெற்றியினுல் அரசரது வலிமை கூடுதலாகி வரும்பொழுதே நடைபெற்றது. ஹென்றியின் சட்டங்களில் பழைய சாக்சனிய முறைகளான, குற்றம் இழைக்கப்பட்டவருக்குக் குற்றவாளி தண்டப் பணம் கொடுத்தலும், குற்றவாளி அரசுக்குத் தண்டப்பணம் கொடுத்தலும் காணப்படுகின்றன. உள்நாட்டு முறை மன்றங்களில் இவ்வகையான தண்டப்பண வகைகள் வலியுறுத்தப்பட்டு வந்திருத்தல் கூடும்; ஏனெனில் நார்மானியர்கள் ஏறக்குறைய இதே மாதிரியான முறையை தங்கள் நாட்டிலும் கையாண்டிருந்தனர். அதனுல் இங்கிலாந்தில் பழக்கத்திலிருந்து வந்த இதே முறைகளை அவர்கள் மாற்ற விரும்பவில்லை. நார்மானியரது புதிய முறை தொடக்கத்தில் பழைய குற்றச்சட்ட முறையை ஒட்டியே வழக்கத்தில் இருந்தது; ஆயினும் அந் நூற்றுண்டில் அதுவே பெரிய அளவில் கையாளப்பட்டுப் பழைய முறையை நீக்கி விட்டது. இப்புதிய குற்றச் சட்டத்தின் வளர்ச்சியில் முதல் நிலையாவது பண்டைய இரு கருத்துக்களைப் பெரிய அளவில் பயன்படுத்தியதேயாம்; அவற்றின் ஒரு கருத்து அரசராலும் அவரது முறை மன்றங்களாலும் தீர்க்கப்பட வேண்டியவை என்பதாக ஒதுக்கப்பட்ட வழக்குகள்; இந்த வழக்குகள் சாதாரணமாகக் கொத்தவாலின் முறைமை வரம்புக்கு உட்பட்டவை அல்ல; இரண்டாவத கருத்தாவது, அரசரது சட்டங்களையும் மீருமல் அமைதியைக் காப்பது. ஹென்றியின் சட்டங்களில் பெரிய அளவில் கையாளப்பட வேண்டியதாகச் சுட்டப்படுவது மேலே குறிப்பிட்டவற்றுள் முதல் கருத்தேயாகும். முதலில் சொல்லப்பட்டதும் சாக்சன் காலத்தில் அரசருக்கென ஒதுக்கி வைக்கப்பட்டதுமான வழக்குகளும் மிகவும் கொஞ்சமானவையே; ஆனல் இப்பொழுது அத்தகைய வழக்குகள் எண்ணிக்கையில் பெருகின; அளவில் பெரியதான இக்குற்ற வழக்குகளில் பட்டியல், எக்குற்றமும் அரசருக்கெதிராகச் செய்யப்பட்டதென்ற கருத்தானது வளர்ந்து வந்ததைக் காட்டுகிறது. பற்றுறுதி இல்லாமை, கொலை, கொள்ளை, அரச ஆணைகளைப்

புறக்கணித்தல், கள்ள நாணயம் வெளியிடல், வன்மையினுல் செய்யப்படும் குற்றங்கள் முதலியனவெல்லாம் அரசரால் தீர்க்கப் பட வேண்டிய வழக்குகளாகவே ஒதுக்கி வைக்கப்பட்டன. இப்பட்டியலில், அரசருக்கெதிராகக் குற்றம் செய்து அமைதி யைக் கலேத்தல் முதலாவது குற்றமாகக் காணப்படுகிறது; இக் கருத்து தொடக்கத்தில் ஒரு குற்றமாகவே திட்டவட்டமாக வரையறுக்கப்பட வில்லே; அது தண்டிக்கப்பட்ட விதத்திலிருந்து தான் அது ஒரு குற்றமெனக் கருதப்படலாயிற்று. அதாவது அந்நூற்ருண்டின் பிற்பகுதியில்தான் எக்குற்றத்தையும் அரசரது அமைதியைக் கலேக்கும் குற்றமாகக் கருதி, அதை அவர் ஆய்வு செய்து தீர்க்க வேண்டிய வழக்காக மாற்றும் வழக்கம் தோன் றிற்று. முதலாம் ஹென்றியின் காலத்தில் இக் கருத்து தெளி வாக ஆக்கப்பட்டது; அதன்படி ஒரு கொடுங்குற்றத்தைச் செய்தவர் அரசருடைய இரக்க உணர்ச்சியைத்தான் எதிர்நோக்கி நிற்கவேண்டியவராகிருர்; எனவே அரசருடைய முறை மன்றத் தில் அவரது உயிரும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட லாம்; அரசர் தான் விரும்பிய வண்ணம் அக்குற்றவாளியின் சொத்துக்கள் முழுவதையும் எடுத்துக் கொள்ளலாம்; அல்லது கடுந்தண்டப் பணம் கேட்கலாம். அரசரிடத்தில் மட்டுமே தீர்ப்பை எதிர்பார்த்து இருக்கக்கூடியவையாக ஹென்றியின் சட்டங்களில் சொல்லப்பட்ட வழக்குகள் பெரும்பாலும் அரச ரால் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளே. இத்தகைய மாற்ற மானது உள்நாட்டுப் பிரிவிலுள்ள முறை மன்றங்களுக்கும் அவை களுடைய தண்டப்பண முறைகளுக்கும் எதிராக அரசருடைய, நாடு முழுவதற்கும் செல்லுபடியாகத் தக்க, முறைமை அதிகாரத்தை விரிவுபடுத்தலே ஆகும்.

குற்றச் சட்டத்தின் இன்னெரு அமைப்பிலும், உள்நாட்டு சாக்சனிய ஆட்சியின் செல்வாக்கை விட, நடுவிலுள்ள நார் மானிய அரசின் செல்வாக்கே மிகுந்து காணப்படுகிறது. இவ் வமைப்பானது அக்காலத்தில் குற்றவாளிகளேச் சிறைப்பிடித் தலும், அதற்குக் கூட்டுப்பொறுப்பு ஏற்படுத்தும் திட்டமும் மிகவும் கடினமானவை என்பதைக் காட்டுகின்றன. எவராவது கொலே செய்யப்பட்டால், அவர் கொல்லப்பட்ட நூற்றிலுள்ள வர்கள் அக் கொலேயாளியைக் கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டுமென்பதும், கொல்லப்பட்டவர் ஒரு ஆங்கிலேயர் என்பதை, ஆங்கிலக் குடும்பத்தினருள் சிலரைக் கொண்ட நடு வாளர் குழுவினுல் உறுதிப்படுத்த வேண்டுமென்பதும் புதிய ஏற்பாடுகள். இவற்றுள் எதையேனும் செய்யா விட்டால், அந்

நூற்றினரசு ஒரு பெருந் தண்டப்பணத்தைக் கொலையுண்டதற்குப் பணமாகக் (murdrum) கொடுக்க வேண்டும்.

இவ்வாறு மாறுதலேற்பட்டாலும் கடைசியில் உரிமை வழக்கைத் தீர்ப்பதில் அரசருக்கு உள்ள அதிகாரத்தை விடக் குற்ற வழக்கைத் தீர்ப்பதில் அவருக்குள்ள அதிகாரம் குறைவாகவே இருந்தது. இத்தகைய வளர்ச்சி முதலாம் ஹென்றியின் காலத்தில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவரது ஆட்சியினைப் பற்றிக் கூறும் ஆதாரங்களிலிருந்து, இரண்டாம் ஹென்றியின் காலத்தில் தோன்றிய பெரிய கொள்கைகளும், நிறுவனங்களும், உரிமை வழக்குகளைத் தீர்க்கும் நிறுவனங்களும் உண்மையில் அவருடைய பாட்டனாரது ஆட்சிக்காலத்திலேயே ஓரளவு தோன்றியிருந்தன என்பது தெரிய வருகிறது. எனினும் இவற்றை யெல்லாம் பற்றி நாம் விளக்கமாக அடுத்துச் சொல்லப்படும் கால வரலாற்றில் தான் சொல்ல வேண்டும்; இப்பகுதியில், நார்மானியர்களால் இங்கிலாந்தில் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களின் வளர்ச்சியைப்பற்றிச் சுருக்கமாகவே கூறுதல் வேண்டும்.

இத்தகைய வளர்ச்சியை, மூன்று நிறுவனங்களின் தொடக்க நிலைகள் நமக்குக் காட்டுகின்றன இம்மூன்று நிறுவனங்களும் இங்கிலாந்துக்குப் புதியனவாய் இருத்தல் வேண்டும்; அல்லது அவை இங்கிலாந்தில் வளர்ச்சியடையாத கூறுகளில் காணப்பட்டு, சாக்சனியரால் அவை செம்மையாக்கப் படாமல் நார்மானியராலேயே செம்மையாக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆணை (writ) தீர்ப்புச் சான்றுளர் குழு (jury), நாடு சுற்றிவரும் முறைவர்கள் (itinerant justices) என்பவையே இந் நிறுவனங்களாகும். ஆணை முறை என்பது சாக்சனியர்களாலும் கையாளப்பட்டது; எனவே இதனை அவர் காலத்திலிருந்து தோன்றியதாகச் சிலர் கருதுவர்; எனினும் முறை மன்றங்களிலேயே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்ட ஆணை முறைகள் பிராங்கியரது ஆணை முறைகளையே ஒத்திருக்கின்றன; எனவே அத்தகைய ஆணை முறைகளுக்குச் சாக்சனிய ஆணைகளை மூல முன் மாதிரியாகக் கொள்ளுதல் கூடாது. சாக்சனிய, நார்மானிய முறைகள் இரண்டும் இணைந்தே செல்லுவதைக் காட்டுவதற்காக ஆணை முறையை எடுத்துக்காட்டாகக் கூறினாலும், இம்முறை வளருவதற்குரிய விசை அல்லது தூண்டுதல் நார்மானியரால் தான் அளிக்கப்பட்டது. இவ்வாணைமுறை என்பது முற்காலத்தில் கொத்தவாலையோ, அரசின் அலுவலரையோ, ஒரு தனி யாளையோ, ஏதேனுமொரு குறித்த வேலையைச் செய்யும்படியாகத் தூண்டி அரசர் விடுக்கின்ற ஒரு ஆணையாக இருந்தது.

எனவே இம்முறையையே அரசருடைய அரசானது, அக்காலத்தில் முறை மன்றங்களில் சில மாறுதல்களைச் செய்வதற்கு ஒரு தூண்டும் ஆற்றலாகப் பயன்படுத்திற்று. இம்முறையை வளர்ப்பதில் அரசாங்கம் தான் கருதிய செயலைத் தொடங்குவதற்கு ஏற்றவகையில், ஆணையின் அமைப்பை மாற்றியும், பல்வேறு வகைகளில் ஆணைமுறைகளை வகுத்தும் கையாண்டது.

முறைமன்ற வளர்ச்சியில் மற்றவற்றையெல்லாம் பொருத்தி நிற்கும் அச்சுப் போலிருப்பது தீர்ப்புச் சான்றாளர் குழு ஆகும் (jury). எவ்வாறெனில் பெருவாரியான வழக்குகளில் இம் முறையைக் கையாண்டதாலேயே, ஆணைமுறை விரிவாகக் கையாளப்படவும், நாடு சுற்றி முறைமை செய்தல் கையாளப்படவும் ஆயிற்று. தீர்ப்புச் சான்றாளர் குழு முறை என்பது சாக்சனியரது முறையன்று. ரோமானிய ஆட்சிக் காலங்களையும் தொடுகின்ற இம்முறையைப் பிராங்கியப் பேரரசினின்று நார்மானியர் கைக்கொண்டனர். எனினும் இம்முறையானது பிராங்கியர், நார்மானியர் ஆட்சியில் வளர்ச்சி ஏதும் அடையவில்லை. நார்மானியர் இங்கிலாந்தை வென்ற பின்னரே, இம்முறை இக்காலத்தில் கைளாளப்படத்தக்க விதத்தில் வளர்ச்சி அடைந்தது. 1066-ல் இது இங்கிலாந்தில் கொண்டுவரப்பட்டபோது, ஏதேனும் ஒரு வழக்கில், அல்லது வேண்டப்பட்ட உண்மையில், தமக்குத் தெரிந்த சான்றைக் காட்டுமாறு பணிக்கப்பட்ட சிலரைக் கொண்ட ஒரு கருவியாக இருந்தது. இதற்காகப் பொறுக்கப்பட்டவர் ஒரு அலுவலாளர் முன்பாக வரவழைக்கப்பட்டு உறுதிமொழி எடுக்கும்படி செய்யப்பட்டனர்; பிறகு அவ்வழக்கிலுள்ள கேள்வி அவர்களிடம் கேட்கப்பட்டு, அதிலுள்ள உண்மை இதுவா அல்லது வேறொன்றா என்பதைக் கூறுமாறு பணிக்கப்பட்டனர். தங்களுக்கு வழக்கின் உண்மை விளங்காவிட்டால் அதை அவர்கள் சொல்லிவிடலாம்; ஆயினும் அவர்களுக்கு உண்மை தெரியக் கூடுமென்பதனாலேதான் அவர்கள் தீர்ப்புச் சான்றாளர் குழுவினராகப் பொறுக்கப்பட்டுள்ளனர். இந் நிறுவனத்தின் இத்தகைய தொடக்க நிலையிலிருந்துதான் பிற்காலத்தில் தீர்ப்புச் சான்றாளர் குழுவில் பன்னிருவர் இருக்க வேண்டுமெனவும், அவர்கள் யாவரும் ஒருமித்த முடிவினராயிருத்தல் வேண்டுமெனவும், அவர்களிடம் சான்றுகள் காட்டப்படுதல் வேண்டுமெனவும், ஆயப்படும் வழக்கைப்பற்றி முன்பே யாதானுமொரு முடிவுக்கு இப்பன்னிரண்டு சான்றாளருள் ஒருவர் வந்திருந்தால்; அவர் அதனின்று ஒதுங்கிக்கொள்ளுதல் வேண்டுமெனவும், பல பழக்கங்கள் தோன்றலாயின. தொடக்கத்தில் இந்தத் தீர்ப்புச் சான்றாளர் குழுவானது அரசரது நிறுவனமாகவும், அவரது

தனிச் சிறப்புரிமையினாலாகிய நிறுவனமாகவும் அமைந்திருந்தது. இம் முறையானது அரசரால் மட்டுமே, அரசரது முறை மன்றத்தில், அரசரது முறைவர்கள் முன்னிலையில் கையாளப்பட்டது. ஒரு வழக்கிலுள்ள உண்மையை மெய்ப்பிக்கவோ அல்லது அதிலுள்ள உண்மையை உறுதிப்படுத்தவோ, அதனைப் பற்றி அறிந்திருக்கக் கூடியவர், அதனை மெய்ப்பிக்கக்கூடிய சான்று அகப்படக்கூடிய இடத்தில், தான் ஒரு உறுதிமொழியின் மூலம், செய்ய முடியும் என்பதே இம்முறையின் பயனாகும்.

தீர்ப்புச் சான்றாளர் குழுவைப் பயன்படுத்துதல் வேண்டுமென்ற விருப்பந்தான் அரசரது முறைவர்களைப் பயன்படுத்துவதற்கும், நாடு சுற்றிவரும் முறைவர்களையும், முறை மன்றங்களையும் ஒழுங்காகவும், நிலையாகவும், அமைப்பதற்கும் தூண்டுதலாயிருந்தது. பழைய, பிழைபட்ட முறைகளைவிடச் சிறந்த முறைகளைப் பின்பற்றித் தங்கள் வழக்குகளின் உண்மைகளை நிறுவுதல் வேண்டுமென விரும்பியவர்கள் மட்டும் அல்லாமல், தனது அலுவலர் வரிமுறையில் ஒழுங்காகச் செயலாற்றுவதற்காகவும், பொதுவாக அரசின் எல்லா நலன்களும் காக்கப்படுதற்காகவும் உதவியாக இருக்கும்பொருட்டுத் தீர்ப்புச் சான்றாளர் குழுவைப் பயன்படுத்துதற்கு அரசரும் விரும்பினார். இம்முறை தொடங்கிய நாளிலிருந்தே அரசர், எந்தத் தனியாளும், அரசரது தீர்ப்புச் சான்றாளர் குழுவுக்கு ஒரு கட்டணம் செலுத்திவிட்டு, அதனைக் கொண்டு தனது வழக்குகளை அரசரது உள்நாட்டு முறை மன்றங்களில் அவரது முறைவர் முன்னிலையில் ஆய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாமென இணக்கம் கொடுத்து வந்தார். இத்தகைய தனியாள் வழக்குகளையும், மற்றெல்லா வழக்குகளையும் முறைவர்கள் தன்பொருட்டு ஆய்வு செய்யும்படியாக அரசர் அவர்களுக்கு ஆணை கொடுத்தார்; அவ்வாணையே மேற்குறித்த வழக்கை ஆய்வதற்கு உதவியாக இருக்குமாறு தீர்ப்புச் சான்றாளர் குழுவுக்கும் கொடுக்கப்பட்ட ஆணையாகும்; ஆயினும் இருவருக்கும் ஆணை பொருந்துவதாகத் தெளிவாக முதலில் குறிப்பிடப்படவில்லை.

இத்தகைய வழக்குகளில் அரசரது முறைவராக அமர்த்தப்பட்டவர், அவ்வழக்கு தோன்றிய கோட்டத்தின் கொத்தவாலே. சில சமயங்களில் வேறு சிலரும் அவரோடு முறைவராக இருக்குமாறு பணிக்கப்பட்டனர்; சில சமயங்களில் கொத்தவாலே இல்லாமல், ஒருவரோ அல்லது பலரோ முறைவராக அமர்த்தப்பட்டனர். எப்பொழுதும் இல்லாவிட்டாலும், பொதுவாக, அரசரது முறைவர்கள் கட்சிகள் இருக்கின்ற ஊருக்கே சென்று,

அங்கு அகப்படும் சான்றுகளைக் கொண்டுதான் வழக்கை ஆய்தல் செய்வர்; இந்நிலையில் அவர் அரசரது முறைவராகக் (King's missi) கருதப்பட்டனர். அவர்களை ஏற்றுக்கொண்டு வழக்கை நடத்திய முறைமன்றம் அரசரது முறை மன்றமாகும்; அது உள்ளூரில் கோட்ட முறைமன்றமாகவாயினும், அல்லது நூற்றின் முறைமன்றமாகவாயினும், அல்லது பல நூறுகளும், கோட்டங் களும் சேர்ந்த முறைமன்றமாகவாயினும் இருந்தது. எவ்வாறு யினும் இதன் விளைவு என்னவாயினும், அரசரின் தூதுவரான இவர் உள்ளூரில் உள்ள பழைய முறை மன்றத்தையே வைத்துக் கொண்டு தாங்கள் அதில் இருந்து அரசரது முறை மன்றத்தை அல்லது அறிவுரைக் குழுவை நடத்தினர். இம் முறைமன்றத்தில் ஆயப்படும் வழக்கிலுள்ள உண்மையை நிறுவுவதற்குத் தீர்ப்புச் சான்றுளர் குழுவைப் பயன்படுத்தினரென்பதைத் தவிரப் பழைய செயல் முறையில் வேறொரு மாறுதலும் செய்யப்பட வில்லை. இம்மாதிரியான முறைமை செய்யும் அமைப்பில் முதலில் ஏற்பட்ட பெரும் வளர்ச்சி என்னவென்றால், அரசரது ஆணை யினால், அனுமதிபெற்ற முறைவர்கள் சென்று வழக்குகளை ஆய்வதற்கு வசதியாகப் பல கோட்டங்கள் முறைவரது சுற்று வட்டங்களாக (Circuits) இணைக்கப்பட்டதேயாகும்; இது இவ்வமைப்பை ஒழுங்காகவும் நிலையானதாகவும் ஆக்குவதற்குப் பெரிதும் உதவிற்று. இவ்வளர்ச்சியைக் காட்டக்கூடிய சான்று எதுவும் முதலாம் வில்லியத்தின் ஆட்சிக் காலத்தில் கிடைக்க வில்லை; இரண்டாம் வில்லியத்தின் ஆட்சிக் காலத்திற்கு இவ் வகையில் மிகச்சில சான்றுகளே கிடைக்கின்றன. ஆனால் இத்தகைய திட்டமானது முதலாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் வழக்கத்தில் இருந்ததைக் காட்டும் சான்றுகள் பலஉள; எனினும் ஒரு சில உட்பிரிவுகளில் மட்டுமே அம்முறை இருந்த தென்பதற்கு விளக்கமாக அச்சான்றுகள் இல்லை.

தனது முறைவர்களையே முதலாம் வில்லியமும் தனது கொள்ளுப் பேரரான இரண்டாம் ஹென்றியைப் போல சில உரிமைகளுடன் அமர்த்திப் பயன்படுத்தினர். இவர்களைக் கொண்ட சில உண்மையான புள்ளி விவரங்களைக் கணக்கெடுத்து, ஒரு தனித்தன்மை வாய்ந்த பதிவுச்சான்று அல்லது ஆவணத்தை உண்டாக்கினர்; இதுவே அதை எதிர்த்து ஒருவரும் முறையிட முடியாததும், நம் யாவராலும் நிலவுடைமைக் கணிப்பேடு அல்லது கடைசி நாள் தீர்ப்பேடு (டூம்ஸ் டே புக், Domesday Book) என்று அழைக்கப்படுவதுமாகும். நிலவுடைமைக் கணிப்பு என்பது டேனியர் வரியை வாங்கும்பொருட்டு நாடு முழுவதிலு முள்ள ஒவ்வொரு பண்ணையின் உடைமையாளரையும், அதன்

மதிப்பையும் 1086-ல் ஆய்ந்து, கணித்து உறுதி செய்ததாகும். இவற்றின் இவ்வுண்மைகளை அறிதற்பொருட்டு அரசரது முறைவர்களையே அரசரது ஆணையாளர்கள் ஒவ்வொரு கோட்டத்திற்கும் அல்லது முறைவரது ஒரு சுற்றுவட்டமாகப் பல கோட்டங்களை இணைத்த தொகுதிக்கும் அனுப்பப்பட்டனர். பிற்காலத்தில் முறைவரைச் சந்திப்பதற்காகக் கூடிய கோட்ட முறை மன்றம் இப்பொழுது இவர்களைச் சந்திக்கும்படியாக ஆணையிடப்பட்டது. கோட்ட மன்றம் முழுவதும் தனிச்சிறப்புடைய சில கேள்விகளைச் சில சமயம் தீர்மானித்தது; ஆயினும் நிலவுடைமைக் கணக்கெடுப்பது என்பது, பின்னால் முறை மன்றங்களில் நடந்ததுபோல இங்கும் தீர்ப்புச் சான்றுளர் குழு உறுதிமொழி எடுத்தும், நூற்றிலுள்ள தீர்ப்புச் சான்றுளர் குழு, முறைவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடையிறுத்தும் நடைபெற்றது. நிலவுடைமைக் கணிப்பு எடுக்கும்போது, எட்வர்டு அரசர் காலத்திலும் இருந்த ஒவ்வொரு பண்ணையின் பெயரையும், (அதனை வைத்திருப்பவர் பெயரையும்) அதிலுள்ள பயிர் செய்யப்பட்ட நிலங்களின் கூறுகளையும், பெருமகனது ஆட்சிக்குரிய நிலங்களிலுள்ள உழவு ஏர்களின் எண்ணிக்கையையும், குத்தகையாளர் நிலங்களின் உழவு ஏர்களின் எண்ணிக்கையையும் கூறும்படியாகத் தீர்ப்புச் சான்றுளர் குழு பணிக்கப்பட்டது. இது உண்மையில் வேளாண்மை செய்யப்பட்ட நிலத்தின் அளவைத் தீர்மானிப்பதாகும். இதன் பிறகு பண்ணையிலுள்ள மக்கள் தொகையைத் தனியாட்கள், குடியானவர்கள், குடிசை கட்டிக் கொண்டு குடிக்கூலியைப் பெருமகனுக்குக் கொடுத்து வாழ்பவர் (cotters), நில ஊழியர் என்ற வகுப்பின்படி பிரித்து அதனையும், பண்ணையிலுள்ள காடு, மேய்ச்சல் நிலம் முதலியவற்றின் அளவையும், மேய்ச்சல் நிலங்கள், மாவு ஆலைகள், மீன் பிடிக்கும் குட்டைகள் இவற்றின் எண்ணிக்கையையும், கணிப்பு எடுக்கப்படும் காலத்திலும், முதலாம் வில்லியம் அரசரால் கொடுக்கப்பட்ட காலத்திலும், எட்வர்டு அரசர் காலத்தில் இருந்த பண்ணையின் மதிப்புகளையும், இத்தீர்ப்புச் சான்றுளர் குழுவினர் எடுத்துரைத்தனர். இவ்வாறு சேர்க்கப்பட்ட உண்மையான செய்திகளெல்லாம் ஒரு நிலையான அமைப்பாக நிலவுடைமைக் கணிப்பேட்டில் (Domesday Book) எழுதப்பட்டன: இது பதினோராம் நூற்றாண்டைய இங்கிலாந்தின் பொருள் நிலையைப் பற்றிய செய்திகளைத் தரும் ஒரு செய்திக் களஞ்சியமாகும்; அதன் பின் ஒரு நூற்றாண்டளவில் ஒரு புதிய முழுமையான நீதி அலுவல் துறை தோன்றப் போவதை, இக்கணக்கெடுப்பை எடுத்த முறையே தெளிவாகக் காட்டுவதால், அரசியலமைப்பு வளர்ச்சி

யைக் காணும் நமக்கும் இந்நிலவுடைமைக் கணிப்பேடு ஒரு சிறந்த துணையான நூலாக அமைகிறது.

உள்நாட்டுப் பிரிவுகளில் அரசரது முறைவர்களைத் தலைமையாகக் கொண்டு பழைய கோட்ட முறை மன்றங்களே அரசரது உள்ளூர் முறை மன்றங்களாகச் செயலாற்றியதும், அதில் ஒழுங்காக நாடு சுற்றி வரும் அரசரது முறைவர்கள் பிற்காலத்து வந்ததும், அதில் ஆணைகளும், திர்ப்புச் சான்றுளர் குழுவும் புதிய முறைகளாகப் பயன்படுத்தப்பட்டதும், ஒரு பொதுச் சட்டமானது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கையாளப் பட்டதும், ஆகிய இவையெல்லாம் நிறுவனங்களின் வாயிலாக நாட்டை ஒன்றுபடுத்துவதில் முதல் படியாக அமைந்தன; இவை சாக்சனிய நார்மானிய நிறுவனங்களை ஒன்றாக இணைத்தன. இவ்வொன்றிய அமைப்பில் சாக்சனிய நிறுவனங்கள், நார்மானிய நிறுவனங்களைவிட மிகுதியும் காணப்படவில்லை; எனினும் இது சாக்சனிய நிறுவனங்கள் யாதொரு விளைவையும் ஏற்படுத்தவில்லை என்பதாகக் காட்டவில்லை, முன்பே குறிப்பிட்ட கோட்ட, நூறு முறை மன்றங்களைப் போலச் சாக்சனிய நிறுவனங்கள் புதிய அரசியலமைப்புக்கு அடித்தளமாக எங்கும் பரவியிருக்கின்றன. இவ்விரண்டு வகைப்பட்ட நிறுவனங்களையும் இணைத்தல் என்பது இரண்டு நிலைகளில் அல்லது படிகளில் நடைபெற்றது. இவற்றுள் ஒரு நிலையே மேலே குறிப்பிடப்பட்டது, அதைப் பற்றி விரிவாகப் பின்னர் நாம் கூறுவோம். நடு அரசில் உள்ள நார்மானிய நிறுவனங்கள் சிலவற்றைக் கோட்டங்களுக்குக் கொண்டு சென்று, அவற்றைப் புதிய வழிகளை உண்டாக்கும் பொருட்டு, உட்பகுதிகளிலுள்ள சாக்சனிய நிறுவனங்களோடு இணைப்பதுதான், இணைப்பு முறைகளில் முதலாவதாகும். இதனாலுண்டாகிய முறைகள் அல்லது வழிகள் புதியவையே; ஆணைகளும், முறைவர்கள், திர்ப்புச் சான்றுளர் குழுக்கள் ஆகியோரும் புதிய வழிகளில் கையாளப்பட்டனர். இணைப்பில் இந்த முதலாவது நிலை தான் இக்காலத்திய ஆங்கிலோ-சாக்சன் நீதித்துறை அமைப்பைத் தோற்றுவித்தது. இரண்டாவது நிலை பிற்காலத்தில், பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடையில் தோன்றுவதாகும்; அது முதலாவது நிலைக்கு நேர் மாறான நிலையாகும். முதலாவது நிலையின் விளைவாக உள்ளூர் ஆட்சியும், அதன் முறையும் சில தன்மைகளை அல்லது விளைவுகளைப் பெற்றன; இத்தன்மைகள் கோட்டங்களினின்றும் நடு அரசின் நிறுவனங்களோடு சேர்க்கப்படவும், வேறு புதிய விளைவுகள் தோன்றின. இந்த இரண்டாவது நிலையே ஆங்கிலோ-சாக்சனிய வகையாளாட்சி

முறைகளையும் (representative government), பாராளு மன்றத்தையும் தோற்றுவித்தது.

இவ்வியலில் கூறப்படும் நார்மானியர் காலத்தில், நாட்டின் நீதித்துறை மட்டுமன்றி, ஆட்சியமைப்பும் வளர்ச்சியடைந்தது; இவ்வாட்சித் துறையினை, அப்போது அரசு தலைசிறந்த ஈடுபாடு உடையதாக இருந்த நிதித்துறை ஆட்சி என்று மிகவும் வரையறை செய்து சொல்லலாம். பொது வரிப்பணம் என்ற துறையில், ஆங்கிலோ நார்மானிய அரசு, சாக்சனிய அரசைவிட எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை; ஒழுங்காக அரசுக்கு வரும்படி தரும் ஆதாரங்கள் முன்பிருந்தவாறே இருந்தன; அவ்வாதாரங் களினின்றும் வரி மிகுதியும் வர ஏற்பாடு செய்யப்பட்டதேயன்றி வரும்படிதரும் வழிகள் எண்ணிக்கையில் கூடுதலாக்கப்படவில்லை. ஒழுங்காகக் கிடைக்காத படைமானிய வரும்படி சில சமயங்களில் மிகுதியாகக் கிடைத்தாலும், அரசு எப்பொழுதும் சார்ந்திருக்கக் கூடிய ஒழுங்கான வரியாக அது இன்னும் ஆக்கப்படாமலிருந்தது. அரசின் வலிமையில் சிறிது பங்குகொண்ட கொத்தவால், அரசு சொத்துக்களுக்கும், வாணிகத்துக்கும் வேண்டிய பாதுகாப்புக் கொடுத்தமையால் இவ்வரி வருமானங்களை ஒழுங்காகவும், மிகுதி யாகவும் வாங்கினர்; கொத்தவால் முன்புபோல் அரசினுடைய கோட்ட நிதி நலன்களுக்குப் பொறுப்பாக இருந்தார்; நார்மானி யர் புதிதாக ஏற்படுத்திய விடுதலைப்பணம் போன்ற சில புதிய கட்டணங்களைக் கொத்தவால் தான் வாங்குதல் வேண்டும். முதலாம் ஹென்றியின் ஆட்சி முடிவுக்குள், கொத்தவால் கருவூலத்தில் கணக்கு ஒப்படைப்பது என்பது மிகவும் திருந்திய தாகவும், விரிவானதாகவும் ஆக்கப்பட்டது; இதுவே கருவூலத் திடம் கணக்குக் கொடுத்தல் என்பதாக நெடுங்காலம் இருந்து வந்தது.

கருவூலத்தோடு தொடர்பான இக்கணக்கு ஒப்படைக்கும் முறைஎப்பொழுது தோன்றிற்றெனவும், இதற்கென அமர்த்தப் பட்டசிறிய குழு, தனதுசாதாரணக் கூட்டங்களினின்றும் வேருன தாகக்கருவூல மென முறையாக அழைக்கப்பட்டது எப்பொழுது எனவும்உறுதியாகச்சொல்ல இயலாது. இதன் தோற்றத்தைநுட்ப மாக ஆராய்ந்தால், அதனை நார்மானியரைவிட ஆங்கிலர்தான் வெகுகாலத்துக்கு முன்பேபயன்படுத்தி வந்திருக்கின்றனரெனவும், அதன்தோற்றம் மிகவும் பழமையானது எனவும் நாம் சொல்லு தல்கூடும். பணத்தைக்கணக்குக் கொடுத்து ஒப்பிக்கும் முறையே கருவூலம் (எக்ஸ்செக்கர் Exchequer) என்ற பெயருக்குக் காரண மாயிற்று. இச்சிறிய குழுவில் அலுவலராயுள்ள உறுப்பினர்

களும், வேறு ஒரிருவரும், பதிவேடுகளை எழுதும் கணக்கரும், சதுரக் கட்டங்களிட்ட துணி விரிக்கப்பட்ட ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்தனர்; இத்துணியில் பவுன்களின் தொகுதி, பவுன், ஷில்லிங்குகள், பென்சு இவைகளுக்காகத் தனித்தனியாகக் கட்டங்கள் போடப்பட்டுப் பத்திகளாக வகுக்கப்பட்டிருக்கும். கணக்குச் சொல்லப்படும்பொழுது அதற்கேற்ப இக்கட்டங்களில் வில்லைகள் வைக்கப்பட்டு, அவை நகர்த்தப்படும். சட்டங்களில் மணிகளைக் கோத்து எண்ணும் வகையைப் போன்று இதுவும் இருக்கிறது. இந்தத் தீர்ப்பு உரிமை மன்றத்தின் முன்பு ஆண்டு தோறும் ஈஸ்டர் நாளில் முன்னேடியான கணக்குக் கொடுக்கவும், மைக்கேல் விழாநாளில் முடிவான கணக்குக் கொடுக்கவும் ஒவ்வொரு கொத்தவாலும் வந்தார். கணக்கு ஒப்படைப்பது வெகு நுட்பமாகச் செய்யப்பட்டது: அதில் ஒவ்வொரு இனமும் பதிவு செய்யப்பட்ட ஏடுகளோடு ஒத்துப் பார்க்கப்பட்டது. வரியை வாங்கும் கொத்தவாலுக்குச்சிறிது ஆதாயம் எழுதப்பட்ட ஆணையின்படி கொடுக்கப்பட்டது; அரசருக்கு உடைமையானதும் அவரால் கொடுக்கப்பட்டதுமான நிலங்களிலிருந்து வரவேண்டிய வரும்படிகளை வாங்குவதற்கும் கொத்தவாலுக்கு ஆதாயம் உண்டு. இந்நிலங்களிலிருந்து வரும் வரும்படியையும், முறைவரது பதிவேடுகளில் குறிக்கப்பட்டதும், அரசரது முறைமன்றங்களில் வாங்கப்பட்டதுமான தண்டப்பணங்களையும், அரசரது நில வரும்படியிலடங்காததும்; அரசருக்கே திரும்பி வந்ததுமான நிலங்களிலுள்ள வரும்படியையும், தனியார்களால் அரசருக்கு அவரிடமிருந்து பெற்ற உதவிகளுக்கு ஈடாகக் கொடுக்கப்பட்ட பணங்களையும், அரசருக்கு வரவேண்டிய கடன் தொகைகளையும் கொத்தவால் வாங்கி அரசரது கருவூலத்தில் கொடுக்கவேண்டும். அவ்வாண்டில் அரசருக்குப் பல நிலங்களினின்று கிடைக்கும் உரிமை விடுதலைப் பணத்துக்கும், தன் பொறுப்பில் உள்ள நிலங்களிலிருந்து வரவேண்டிய வரும்படிக்கும் கொத்தவால் கணக்குக் கொடுத்து, பணம் செலுத்த வேண்டும். இவ்வாறு ஓர் ஆண்டுக்குரிய எல்லாக் கணக்குகளும் ஒப்படைக்கப்பட்ட பின்னர்தான், அவ்வாண்டுக்குரிய கணக்குப் பதிவேடு ஒரு நிலையாக எழுதப்பட்டது; இவ்வாறு அமைந்த பல ஆண்டுக் கணக்குப் பதிவேடுகளின் வரிசைகளையே கருவூலக் கணக்குகள் (பைப்ரோல்ஸ்-Pipe Rolls) என நாம் குறிப்பிடுகிறோம். முதல் முதலாக நமக்குக் கிடைப்பது 1130-ம் ஆண்டைய கருவூலக் கணக்குதான்; ஆயினும் அதற்கு முன்பே சில காலமாகக் கருவூலக் கணக்குமுறை வழக்கில் இருந்து வந்தது. ஸ்டீபன் அரசரது காலத்திய கருவூலக்கணக்கு ஒன்றும் நமக்குக் கிடைக்க

வில்லை; இவ்வரிசையின் தொடர்ச்சி இரண்டாம் ஹென்றி ஆட்சி யேற்ற இரண்டாம் ஆண்டிலிருந்து கிடைக்கிறது.

எளிய, பல ஒரே தன்மைகளுள்ள அரசியலமைப்பையுடைய படைமாவிய நாட்டில், பல்வேறு வகையான அரசியல் நிறுவனங் கள் வளர்தலென்பது, பாகுபாடற்ற ஒரே நிறுவனமானது பாகு பாட்டுமுறையில் பிரிவதனால்தான் நடைபெறக்கூடிய செயலாகும். இப்பாகுபாட்டு அல்லது பிரிதல் முறையினால்தான், பலவகை அலு வல்களைச் செய்துவந்த பதினேராம் நூற்றாண்டைய அரசியல் நிறுவனங்கள், தாங்கள் செய்யும் அந்தந்த வேலைகளை ஒட்டிப் பல புதிய நிறுவனங்களாகப் பிரிதல் இயலும். இப் பாகுபாடு செய்யும் முறை அரசரது சிறிய குழுவையே வெகுவாகத் தாக்கிற்று; ஏனெனில் இச்சிறிய குழுவே இதுவரையிலும் அரசினுடைய எல்லா அலுவல்களையும் கட்டுப்படுத்தி நடு அரசின் நிலையான, மேற்பார்வை செய்யும் அரசின் உறுப்பாக இருந்தது. இவ்வாறு செயலில் தனிப்பயிற்சி யடைதலும், அதனால் பல நிலைகளில் நிறுவனங்களில் பாகுபாடு தோன்றுவதை யும். அரசியலமைப்பு வரலாற்றில் நாம் விரிவாகக் காணலாம். இக்குறிப்பிட்ட காலத்தில், இப் பாகுபாடுகளின் வரிசைகளில் முதலாவதாக இருப்பதையும், மற்றவற்றைப் போலுள்ளதையும் நாம் காண்போம். இப்பாகுபாடுகளின் வரிசைகளில் முதலாவ தாக இருப்பதையும், மற்றவற்றைப் போலுள்ளதையும், நாம் காண்போம். இப் பாகுபாட்டைச் செய்வதில் முதல்படியாக, இந்தச்சிறிய குழு செய்துவந்த நிதி அலுவல் மேற்பார்வை வேலை யானது, அக்குழுவின் தனித்த வேறொரு வகையான கூட்டத்தில் செய்யப்பட்டது; இவ்வேலைக்குப் பொறுப்பு, குழுவில் உறுப்பின ராயுள்ள அலுவலாளரையே சேரும். அவரே இத்தகைய வேலை யில் இக்குழுவைப் பொறுப்பாக நடத்தினர். இவ்வாறு நிதி பற்றிய அலுவலைச் செய்யும் சிறப்புக் கூட்டமாக இக்குழு தொடக்கத்தில் வேலை செய்துவந்தது; எனினும் அது அந்நிலை யிலும் ஒரே கூட்டத்தில் வேறு அலுவலையும் செய்யும் திறமும் பெற்றிருந்தது. கருவூலத்திற்கு இந்நிலைமை ஒருநூறு ஆண்டு அல் லது அதற்கு மேற்பட்ட கால அளவில் இருந்தது; அதற்குப் பின் னர், கருவூலமே, நிதி அலுவல் கருவூலமெனவும், நிதி வழக்குகளை ஆயும் கருவூல முறைமன்றம், அல்லது பொதுமுறை மன்றங்களில் ஒன்றான கருவூலமெனவும் பாகுபாடு தோன்ற இரண்டாகப் பிரிந்தது.

முதலாம் வில்லியத்தின் மறைவுக்கும், அவரது மகன் முதலாம் ஹென்றியின் மறைவுக்கும் இடைப்பட்ட ஐம்பதாண்டு

காலத்தில், அப்போதைய அரசர்களின் ஊக்கத்திஞல், அரசரது அதிகாரம் மேலும் வளர்ச்சியுற்றது ; இவ்வளர்ச்சிக்கு உள்ள சில காரணங்கள், பெருமக்களின் கிளர்ச்சிகள் தோல்வியுற்றமையும், சில வழக்கங்கள் சட்டங்களாகச் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டமையும், அரசியல் நிறுவனங்களான ஆட்சி, முறைமன்றங்கள் திருத்தியமைக்கப்பட்டமையும் ஆகும். ஆயினும் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் வளர்ந்து வந்த அரசரது தனியாட்சியானது, மேற்குறிப்பிட்ட கால முடிவில் கடுஞ் சோதனைக்கு உள்ளாயிற்று ; ஆயினும் அதில் அது தப்பிப் பிழைத்தது. முதலாம் ஹென்றியை அடுத்து அவரது மருமகன் ஸ்டீபன் அரசராஞர், ஹென்றியின் மகளும், ஆஞ்செள)Anjou)-வின் பெருமகனது மனைவியுமான மடில்டா (Matilda) நாட்டின் அரசுக்கு உரிமை வேண்டி நின்றதஞலும், இவ்வரசர் மற்றவரைக் கீழ்ப்படியச் செய்யும் திறமும், மன உறுதியும் இல்லாதவராதலிஞலும் அவரது நிலை வலியற்றதாயிருந்தது. எல்லாம் அரசரது திறமையைப் பொறுத்தே இருந்ததஞலும், அரசியலமைப்புச் சட்டம் வழக்கத்தில் அமையத்தக்க அளவுக்கு இன்னும் நிலை பெருததஞலும், ஸ்டீபனது ஆட்சியில் நாடு குழப்பத்திலாழ்ந்தது. எனவே, அப்பொழுது தான் தோன்றியிருந்த நிதி, முறைமை பற்றிய நிறுவனங்களெல்லாம் மிகவும் நிலைகுலைந்தன ; படைமானிய முறையில் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய நடு அரசின் கட்டுப்பாடு தளர்ந்துவிட்டால், அதஞல் சமுதாயத்திற்கு விளையக்கூடிய தீமைகளை இங்கிலாந்து இப்பொழுது உணர்ந்தது. எனினும் நிலையாக எதுவும் மறைந்துவிடவில்லை. சட்டத்தின் வளர்ச்சியில் ஒரு சிறிது முன்னேற்றம் இங்கிலாந்திலும், பெரிய அளவு நார்மண்டியிலும் காணப்பட்டது. 1154-ல் மடில்டாவின் மகன் இரண்டாம் ஹென்றி ஸ்டீபனுக்கு அடுத்தாற்போல் அரசராகியதும், அவர் தான் வந்த இரண்டாண்டுக் காலத்தில், தனது பாட்டஞர் முதலாம் ஹென்றியின் காலத்திலிருந்த உறுதியான முடியரசையும், நிதி, முறைமை நிறுவனங்களையும், சிறிது கடினமேற்பட்டபோதிலும், மீண்டும் நிறுவிஞர்.

ஒரு வகையில் ஸ்டீபனது வலியின்மையிஞல், அரசின் முறையிலிருந்ததைவிட, அரசியலமைப்பின் முறையில் நிலையான ஒரு பயன் உண்டாயிற்று. அரசியலமைப்பிலும், நாட்டிலும், ஒரு கூருக அமைந்திருந்த சமய நிலையத்தின் மீது, முதலாம் ஹென்றி தனது அண்ணனிடமிருந்து பெற்றிருந்த மிகுந்த அதிகாரத்தை இப்புதிய முடியரசானது பெறமுடியவில்லை. முதலாம் வில்லியம் இங்கிலாந்தை வென்று, முன்னிருந்ததை விட மிகையான அரசின் கட்டுப்பாட்டுக்குள் சாக்சனியச் சமய நிலையத்தைக் கொண்டு

வந்த காலத்தில், மேற்கத்திய கிறிஸ்தவ சமய நிலையத்தில் பொதுவாக ஒரு நல்ல சீர்திருத்த இயக்கம் பரவி உயர் நிலையை அடைந்து கொண்டிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் குளுனி (cluny) யில் உள்ள துறவிகள் மடத்திலிருந்து பரவிய இச்சீர் திருத்த இயக்கமானது, ரோமானிய கிறிஸ்தவ சமய நிலையத்தின் ஆட்சியைக் குவிக்கப்பட்ட, வரம்பற்ற, ஒரு முடியரசாகப் போப் பின் (Pope) கீழ் அமைத்தல் வேண்டுமென்றும் ஒரு அரசிய லமைப்பு நோக்கத்துடன் வேலை செய்தது. இவ்வியக்கம் தனது நோக்கத்தில் முழு வெற்றி யடைந்தது. எனவே பதினோராம் நூற்றாண்டின் இறுதியில், பல்வேறு நாடுகளின் சமய நிலையங்களை யெல்லாம் ஒன்றாகத் தனக்குக் கீழ்ப்படுத்திச் சாதாரண ஒரு நாட்டின் ஆட்சி இயந்திரங்களையும் ஏற்படுத்திக் கொண்ட, ஒரு வலிய பேரரசு ஆட்சி முறையை உடையதாகச் சமய நிலையமானது தோன்றியது; ஐரோப்பாவில் பல நாட்டு அரசுகளோடு, இத்தகைய அமைப்புடைய சமய நிலையமும் இருந்தது. எனவே இத்தகைய சூழ்நிலையில் சமய நிலையத்துக் கும் அரசுக்கும் போராட்டம் தோன்றுவது இயல்பே. இங்கி லாந்தின் சமயநிலைய அமைப்பானது, பல சிறப்பான வகைகளில் அரசு அமைப்பின் ஒரு பகுதியாகவே இருந்தது. சட்டத்தில் திருமணம், மணமுறிவு, சொத்துரிமை பற்றிய பல பகுதிகள் சமய நிலையத்தைச் சேர்ந்த முறை மன்றங்களின் ஆட்சிக்கு உட் பட்டவையே, அதற்கு அளிக்கப்பட்ட மானியங்களுக்கு ஈடாக, அது அரசின் படையிலும், சட்ட மன்றத்திலும், முறை மன்றங் களிலும் பல அலுவல்களைச் செய்யவேண்டியிருந்தது. சமய நிலையத்தைச் சாராத பெருமகனைவிட அதிலுள்ள மேற்றிராணி யாராகிய பெருமகன் மிக்க கல்வியறிவும், விரிந்த நோக்கும் உடையவராதலின் அவரது உதவி, படைமானிய முறையின்படி அமைந்த அரசு ஒழுங்காக இயங்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. முடியரசு அமைப்பை ஒட்டிய, எல்லா நாட்டுச் சமய நிலையங்களையும் உள்ளடக்கிய ஒரு சமய நிலையமும் வேண்டுவதே என்ற நிலையும் இருந்தது. ஒவ்வொரு நாட்டின் சமய நிலையமும், முடியரசு அமைப்பிலுள்ள இவ்வொரே சமய நிலையத்தின் பகுதியாக அமைந்து, அதற்கு அடங்கி, அதற்கு உதவியாகப் பல அலுவல்களைச் செய்து வந்தது. எனவே இரண் டுக்கும் (சமய நிலையத்துக்கும், நாட்டின் அரசுக்கும்) இடையே எழும்போராட்டம்தவிர்க்க முடியாதது.இரண்டுகட்சிகளின் வழக் கிலும் உண்மை அல்லது நேர்மை என்ற நிலைமை ஏற்படும்போது இருபக்கமும் விட்டுக் கொடுத்துப் போவதே அமைதியான நல்லுறவு தோன்றுவதற்குரிய வழியாக இருந்தது.

படைமானிய அரசில், மேற்றிராணியாரானவர் ஒரு அலுவலாளராகவும், அதே சமயத்தில் சமயத்துறை முடியரசில் ஒரு இன்றியமையாத அலுவலாளராகவும் இருந்ததால் இப்போராட்டத்தின் முற்பகுதி மிகவும் கடுமையாகத் தோன்றிற்று; "யார் மேற்றிராணியாரை அலுவலில் அமர்த்துவது, சமய நிலையமா? அரசா? இவருள் எவரிடமிருந்து மேற்றிராணியார் தனக்குரிய அதிகாரத்தைப் பெறுதல் வேண்டும்? யாருக்கு அவர் முதலில் பொறுப்பாக இருத்தல் வேண்டும்?" என்ற கேள்விகளைப்பற்றி எழுந்த பூசலானது முதலாம் ஹென்றியின் ஆட்சித் தொடக்கத்தில் அரசருக்கும் கான்டர்பரி அதிமேற்றிராணியார் ஆன்செலமுக்கும் தொடங்கி நடைபெற்றது; அப்பூசலை ஒரு முடிவுக்குக் கொணர்ந்த விட்டுக்கொடுப்பு ஒப்பந்தம், பின்னால் பேரரசருக்கும், போப்புக்கும் செய்யப்பட்ட ஒப்பந்தத்தைப் போலவே அமைந்திருந்தது. இதன்படி மேற்றிராணியாரைச் சமய நிலையமே தேர்ந்தெடுத்தல் வேண்டும். அதன் பிறகு அரசர் மேற்றிராணியாராக அமர்த்தப்பட்டவரிடமிருந்து தனக்குப் பற்றுறுதிமொழி வாங்கிக் கொண்ட பின் அவரது ஆட்சிக்குட்பட்ட இடத்திலுள்ள மானியங்களை அளித்தல் வேண்டும்; அதன் பின் அவர் பட்டமேற்கும் விழா நடைபெற்றது. இவ்வொப்பந்தத்தினால் அரசருக்கு நடைமுறையில் ஒரு தள்ளுரிமை (veto) கிடைத்தது; எவ்வாறெனில் மேற்றிராணியாருக்குரிய மானியங்களைக் கொடுக்க அரசர் மறுத்தால், சமய நிலையம் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் அவ்வலுவலில் அமர்த்தப்பட வேண்டுமென்பதாக வற்புறுத்த முடியாது. இவ்வொப்பந்தமானது மிகவும் நேர்மையானதே; ஆயினும் இதனால் சமய நிலையமே பயனடைந்தது; அரசருக்குப் பயனில்லை. இதன் பயன்களெல்லாம் மெல்ல வெளியாயின; எல்லாம் இவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் எழுந்தவைகளே; எனவே இதுவரையிருந்த வழக்கத்திற்கு மாறாகச் சமய நிலையமானது, அரசுக்குக் கீழ்ப்பட்ட வேலையாளாக இல்லை; அரசரது ஆட்சியை ஒட்டியே, தனியான, அதற்கு எதிரான ஒரு அரசாகவே சமய நிலையமானது வளர்ந்து வந்தது. நாட்டின் சமய நிலையமானது தனக்கு வேண்டிய சட்டத்தையும், முறைமைத் தீர்ப்புக்களையும், நாட்டுக்கு வெளியேயுள்ள ஒரு கோன்மை ஆட்சியாளரிடமிருந்தே பெற்றது; நாட்டில் அது சமயப் பற்றுடைய புதிய பல்வேறு சங்கத்தவரின் துணையினால் தன்னை உறுதியாக்கிக் கொண்டது.

இம்மாறுதலின் புதிய விளைவுகளை எல்லாம் முதலாம் ஹென்றி பட்டு உணரவில்லை. அவரது ஆட்சி மிகவும் வலியதாயிருந்ததால்,

அவர் சமய நிலையத்திற்குக் கொடுத்த சலுகைகளாலும் பயனில்லை. ஆனால் ஸ்டீபனின் நிலையோ வேறுவகையாய் இருந்தது. தொடக்கத்தில் அவர் நாட்டிலுள்ள பல்வேறு கூட்டத்தினருக்குத் தாராளமாக உரிமைகளை வாக்குறுதி செய்து கொடுத்துத் தனக்கு அவர்களது உதவியைத் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வாக்குறுதிகள் அவர் பேரம் செய்த ஒரு நிலைமையைக் காட்டின; முதலாம் ஹென்றியின் முடிசூட்டு விழாப் பட்டயத்தைப் போலவே இவைகளும் அரசருக்கும், பெருமக்களுக்குமுள்ள ஒப்பந்தத் தொடர்பையே பெரும்பாலும் காட்டுகின்றன. ஸ்டீபன் முதலில் அளித்த பட்டயமானது பொதுவான வாசகத்தில் அமைந்து முதலாம் ஹென்றியினுடையதை உறுதி செய்வதாக இருக்கிறது; அவருடைய இரண்டாவது பட்டயம் வரையறைகளுடன் இருக்கிறது; சமய நிலையத்திற்கு அவரால் அது அளிக்கப்பட்டது. சமய நிலையத்தின் முறை மன்றங்கள் சமய நிலையத்தைச் சார்ந்தவரையும், அவரது உடைமைகளையும் பற்றித் தீர்ப்புக் கூறுதற்கு முறைமை வரம்புகளை அவர் இப்பட்டயத்தில் அளித்ததே புதிய ஒரு உரிமையாகும். பட்டயத்தின் வாசகங்களுக்கு எவ்வகையிலேனும் விளக்கம் கூறலாம்; ஆயினும் அவை வரையப்பட்டபோது, சமய நிலையச் சார்புடையவரைப் பற்றிய உரிமையையும் குற்றங்களையும் பற்றியவழக்குகளெல்லாம் அரசின் முறை மன்றங்களிலிருந்து சமயநிலைய முறை மன்றங்களுக்குக் கொண்டுபோகப்பட வேண்டியவை என்ற பொருளையே கொண்டிருந்தன என்பதற்கு ஐயமில்லை. நாட்டிற்குள்ளேயே இவ்வாறு தன்னுடைய அரசை வளர்க்க வேண்டுமென்று வெகு காலமாகச்சமய நிலையம் முயன்று வந்தது; அது வேறெங்கும் பயனளிக்கவில்லை; இங்கிலாந்தில் இப்பட்டயத்தினால் அப்பயன் சமய நிலையத்துக்குக் கிட்டிற்று.

இரண்டாம் ஹென்றி ஆட்சிக்கு வந்ததும் நிலைமை இத்தன்மையதாக இருந்தது. நாட்டில் அமைதியையும், அமைதிக் காப்பையும் ஏற்படுத்துவதற்காக, அவர் பழைய நீதித்துறையமைப்பைத் திரும்பவும் கொண்டு வந்து அமைக்கத் தொடங்கியவுடனேயே, மக்களில் பெரும்பாலானவரும், முக்கியமானவரும் தனது அரச முறை மன்றங்களின் முறைமை வரம்பிற்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ளனரென்ற உண்மையைத் தெளிவாக நேருக்கு நேர் உணர்ந்தார். சமய சங்கத்தைச் சேர்ந்த துறவி யொருவர் குற்றம் செய்தால், அவரைச் சமய நிலைய முறை மன்றத்தில் தான் ஆய்வு செய்தல் கூடும்; சமய நிலைய முறை மன்றங்களில் குற்றங்களுக்கு மிகக் குறைவான தண்டனையே கொடுக்கப்பட்டது. இந்நிலையை உடனடியாக

ஒரு முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டுமென ஹென்றி செய்து கொண்ட தீர்மானந்தான், அவருக்கும் அவராலேயே கான்டர்பரியின் அதிமேற்றிராணியாராக அமர்த்தப்பட்ட தாமஸ் பெக்கெட் (Thomas Becket) என்பவருக்குமிடையே வரலாற்றில் இடம் பெற்ற ஒரு பெரும் போராட்டத்தை உண்டாக்கிற்று. அரசியலமைப்பைப் பொறுத்த மட்டிலே தான் இப்போராட்டத்தை நாம் ஆராய வேண்டும். பழைய அரசியல் ஏற்பாடுகளையும், வழக்கங்களையும் ஒப்புக்கொண்டு அவற்றைப் பின் பற்றுவதாக அதிமேற்றிராணியாரிடம் அரசர் ஒரு வாக்குறுதி வாங்கிக்கொண்டார். இவ்வாக்கை பெக்கெட் முழுவதும் நிறைவேற்றி யிருந்தாராஞல், அரசருடைய விருப்பத்திற்கிணங்க பூசல் முடிவு பெற்றிருக்கும்; ஏனெனில் அரசரது முறை மன்றங்களினுடைய முறைமை வரம்புகளைப்பற்றி அரசர் கூறிய கருத்துக்கள் வரலாற்றினடிப்படையில் பார்க்கப்போனுல் முற்றிலும் சரியே. ஆனுல் இவ்வாக்குறுதியை வாங்கியதோடு அரசர் நிற்கவில்லை. இவ்வழக்குக்கு அரசர் கடைசியாகக் கொடுத்த விளக்கத்தை அதிமேற்றிராணியர் ஏற்க மறுத்தார்; அவருடைய இத்தகைய செயலும் ஓரளவு சரியே. இவ்விரு வகைப்பட்ட முறை மன்றங்களுக்குமிடையேயுள்ள தொடர்பை வரையறுத்து ஒரு நிலையான பதிவாகச் செய்யும் பொருட்டு அரசர் தனது பெருங் குழுவை (Great Council), நாட்டின் பண்டைய அரசியல் வழக்கங்களை யெல்லாம் ஒப்புதல் செய்யுமாறு உரிமையுடன் கேட்டார். இவ்வாறு "ஒப்புதல் செய்வது" என்பது திர்ப்புச் சான்ருளர் குழுவானது ஒன்றை ஆய்தல் செய்து கூறும் மறுமொழியாகும்; இவ்வாறு திர்ப்புச் சான்ருளர் குழுவினராலேயே தான், ஹென்றியின் ஆட்சியில் தோன்றிய பல அரசியலமைப்பு ஆவணங்களிலும் முதலாவதாக இருக்கிற, 1164-ம் ஆண்டைய கிளாரண்டன் அரசியலமைப்புக்களும் (Constitutions of Clarendon) வரையப்பட்டிருத்தல் கூடும். ஆயினும் இதனை வரைந்த திர்ப்புச்சான்ருளர்குழு எவ்வாறு அமைக்கப்பட்டதென நமக்குத் தெரியவில்லை; மேலும் இவ்வரசியலமைப்பானது பெருங்குழுவினரால் செய்யப்படும் ஒரு சட்டத்தின் அமைப்பைக் கொண்டு விளங்கியது.

ஒரு சமயசங்கத்தைச் சேர்ந்தவர் குற்றம் செய்தவராகக் கருதப்பட்டால், அவரை அரசின் முறைமன்றமே ஆய்தல் வேண்டுமென்பதாகக் கிளாரண்டன் அரசியலமைப்புக்கள் கூறவில்லை; அவ்வாறு குற்றம் செய்தவரை அரசின் அலுவலர் சிறைப்பிடித்துப் பிறகு அவர்மீது குற்றம் சாட்டுவதற்காக அவரை அரசின் முறை மன்றத்தின் முன்பாகக் கொண்டு வருதல்

வேண்டுமெனவும், பிறகு அவர் சமயநிலைய முறை மன்றத்தில் ஆய்வு செய்யப்பட்டுக், குற்றவாளியே என முடிவு செய்யப் பட்டால், சங்கத்தினின்றும் அவரை நீக்குதல் வேண்டுமெனவும், இதன் பிறகு அவர்மீது தீர்ப்புக் கூறுவதற்கும், தண்டனை கொடுப்பதற்கும், அவர் அரசரது முறைமன்றத்துக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டுமெனவும், அவை கூறுகின்றன. ஆனால் இப்பூசலிலுள்ள கேள்வியையும் விட வேறு சிலவற்றையும் இவ்வரசியலமைப்புக்கள் வற்புறுத்தின ; சமய நிலையங்களுக்கு நிலம் அளிக்கும் உரிமை பற்றிய வழக்குகளை அரசின் முறை மன்றமே ஆய்தல் செய்ய வேண்டுமெனவும், சமய நிலையத்துக்கு உதவித் தொகைக்கு ஈடாக அல்லாமல் இலவசமாகக் கொடுக்கப் பட்ட நிலங்களைத் தவிர (Frank almoign) மற்றவற்றின் உரிமைப் பற்றிய வழக்குகளையும் அரசின் முறைமன்றமே ஆய்தல் செய்ய வேண்டுமென இவ்வமைப்புக்கள் கூறின ; மேலும் படை மானிய முறையில் மேற்றிராணியாரது நிலை அரசருக்கு ஒரு கிழாளினுடையநிலைதான் எனவும் அவை கூறின. மற்ற மேற் றிராணியார்கள் இத்தகைய அரசியலமைப்புக்களை ஒப்புக் கொண்ட போதிலும், பெக்கட் அவற்றை ஒப்புக்கொள்ள மறுத்தார் ; அரசருக்கும் அதிமேற்றிராணியாருக்குமுள்ள பூசல் எல்லைமீறிச் சென்று, கடைசியில் தாமஸ் கொலை செய்யப்படும் நிலையை அடைந்தது.

எனவே அரசருக்கு எதிராக எதிர்ப்பு உணர்ச்சி தோன்றியது இயல்பே ; சமயநிலையத்தோடு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டுத் தனது தீவிரமான உரிமைகளை அரசர் கைவிட வேண்டியதாயிற்று. எனினும் அவர் தனது பாட்டனாரைப் போலவே தான் இப்பொழுது கொடுத்த வாக்குறுதிகளைப் பின்னால் செயலில் நிறைவேற்றவில்லை. கடைசியில் இவ்வரசிய லமைப்புக்களிற் காணப்பட்டவற்றுள் ஒன்று நீங்கலாக மற்ற வற்றை யெல்லாம் அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது ; இவ்விலக்கின் படி, அரசுக்கு எதிரான குற்றமல்லாத கொடுங்குற்றங்களைச் செய்த சமயநிலையத் தொடர்பினரைமட்டும் அரச முறை மன்றங்கள் ஆய்தல் செய்ய முடியாது. அரசுக்கெதிரான குற்றத்துக்கும், அதையொத்த செயல்களுக்கும் தண்டனை கொடுப்பதை அரச முறைமன்றமே செய்யும். கொடுங் குற்றத் தைத் தண்டிப்பதற்காகச் சமயநிலைய முறை மன்றத்துக்குக் கொடுக்கப்பட்ட இவ்வுரிமையே ஆங்கிலச் சட்டத்தில் "சமய நிலையத்தாருக்கு அளிக்கப்பட்ட நலன் (Benefit of the Clergy) என்பதற்காகக் கூறப்பட்டது. இதன்படி கொடுங் குற்றம் செய்த சமயநிலையத்தவர் ஒருவர், தான் சமய நிலையத்

தைச் சேர்ந்தவரென்பதாகவும், எனவே தன்னை அரசமுறை மன்றத்தினர் ஆய்தல் செய்யவோ தண்டிக்க வோகூடாது என்ப தாகவும் முறையிட்டுக் கொள்ளலாம். நடை முறையிலுள்ள சட்டங்களின்படி அவர் குற்றவாளியென மெய்ப்பிக்கப்பட்டால், அவர் சமயநிலைய முறைமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டார்; இவ்வகையாக அவர் அரச முறைமன்றத்தவர் அளிக்கும் தண்டனை யிலிருந்து தப்பியவரானுர்.

இயல் நான்கு[1]

அதிகாரக் குவிப்பும் சட்டமும்

இரண்டாம் ஹென்றி தனது ஆட்சிக்காலத்தில் செய்த சீர்திருத்தங்களின் முடிவான விளைவுகளை அவர் முன்னதாகவே எண்ணிப் பார்த்திருக்க முடியாது; எனினும் அவை எதிர் காலத்திய சட்ட, அரசியல் வரலாறுகளில் பெரும்விளைவை உண்டாக்கின. அவர் காலத்தில் எவரும் அவ்விளைவுகளை எதிர்பார்த்திருக்க முடியாது; ஹென்றிக்குத் தனது அரசியல் நிலைமையைப் பற்றி எழுந்த சில எளிய கேள்விகளைக்கூட எதிர் பார்க்கும் திறமை கிடையாது. அவர் தனது நிலையை உறுதிப் படுத்துதல் வேண்டுமென்ற நோக்கத்துடனேதான் சீர்திருத்தங் களைச் செய்ய எண்ணினர் போலும். நடு அரசானது வலுவிழந்து விட்டது; அதனுடைய வலுவை மீட்டுக் கொடுத்தல் வேண்டும். நாட்டில் இதுவரை நிலவிவந்த குற்றங்களையும், குழப்பங்களையும் அடக்குதல் வேண்டும். அரசரது முதற்கடமையாக அப்போது கருதப்பட்டது யாதெனில், நாட்டில் முறைமை அல்லது நேர்மை நிலவும்படி செய்தல் வேண்டுமென்பதே. ஒரு நல்ல அரசர் எனப்படுபவர், மக்கள் அவருடைய பாட்டனுரை அழைத்தது போல், "நேர்மைக்குச் சிங்கம்" (Lion of Justice) என இருப் பவர்தான். எனவே இரண்டாம் ஹென்றியும் தான் தனது பாட்டனுரது அடிச்சுவடுகளைப் பின்பற்றப் பெரு விருப்ப முடையவராகயிருப்பதாகத் தெரிவித்தார். தான் தன்னுடைய இந்தக் கடமையை செய்தலினுலுண்டாகும் நிறைவைத் தவிர அதைச் செய்யவேண்டுமெனும் அவரது கொள்கையினுல் வேறொரு நலனும் இருந்தது. இந்நலனே அவரது செயலைத்தூண்டிய நோக்கம் என்பதில் ஐயமில்லை. ஆட்சித்துறையும், நிதித்துறையும் ஒன்ருகச் சேர்ந்தனவாய் இருந்தன; எனவே நிதித்துறையைச் செப்பம் செய்வது, அரசருக்குரிய வரி வருமானங்களை வாங்கும்

1 Centralization and Law

முறையைச்செப்பம் செய்தலுக்கும், அரசருக்குரிய வரி வரும்படியைப் பெருக்குதலுக்கும் ஆகும். முறை மன்றங்களைச் சீராக்குவது என்பதும் அரசின் வருமானத்தைப் பெருக்குதல் என்பதாகும்; எவ்வாறெனில் இந்தகைய சீர்திருத்தங்களினால் அரசருக்குரிய கட்டணங்களும், தண்டப் பணங்களும் கூடுதலாக்கப்பட்டன; இது சிறிய வருமானமன்று. இத்தகைய மாறுதல்களையெல்லாம் செய்தவர் அரசரோ, அன்றி மற்ற அவருடைய அமைச்சரோ, எவராயினும் சரி. அவருக்கு இவற்றைச் செய்தலில் வேறு சில நோக்கங்களும் இருந்திருத்தல் கூடும். இக்காலத்தில் தான் முறைமை செய்தலுக்குரிய முறைகளிலும், முறை மன்றங்களின் அமைப்பிலும், அவற்றின் நடவடிக்கை வகைகளிலும், முறைமை ஏற்படுத்துவதற்கியைந்த வழியில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இத்தகைய சீர்திருத்தங்களெல்லாம் ஏற்பட வேண்டுமென அரசே எதிர்பார்த்தும் விரும்பியும், பிறகு இவற்றால் தான் முறைமையை உறுதியாகவும் எளிய முறையிலும் கிடைக்கச் செய்ய முடியுமென எண்ணியும், அரசு செய்தது என்று நாம் கொள்ளுதற்கும் மறுப்பு இல்லை. பெரிய வழக்கறிஞரும் ஆட்சியாளரும் நடைமுறை அரசில் பெரும்பங்கு கொண்டிருந்த காலம் அதுவாகையினால், அது எண்ணிச் செய்யப்பட்டதாயுமிருக்கும்.

எனினும் நீதித்துறை அமைப்பிலும், சட்டம், வழிமுறை, ஆகியவற்றிலுமே, நிறுவன அடிப்படையில் இவரது ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட சீர்திருத்தம், வருங்காலத்திலெல்லாம் மாறுத அமைப்போடு பொருந்தியதாக இருந்தது. இவற்றைத் தவிர, அரசியலமைப்பிலும் இக்காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் எக்காலத்தும் நிலைபெறுதற்குரியனவாயும், ஆங்கில இனத்தவருக்கே உயிர் போல இன்றியமையாதனவாயுமிருந்தன; அப்பொழுது அவற்றைச் செய்த ஹென்றியின் அமைச்சர்கள் அவற்றை இப்போது இனங்கண்டுகொள்ள முடியாதவகையில் அவை வேறு வடிவில் இருக்கின்றன; எனினும் அத்திருத்தங்கள் இன்றும் நடைமுறையில மாறுமல் இருப்பதால், அவை வழக்கிலிருக்கிற ஆங்கிலோ - சாக்சனியரது நாட்டிலெல்லாம், எந்த முறைமன்றத்திலும், ஹென்றியின் மிகச் சிறந்த முறைவர்களான ரிச்சர்டு டலூசி (Richard de Luci)யும், ரானுல்பு கிளான்வில்லும் (Ranulf Glanvil) இப்பொழுது வந்தாலும் புரிந்து கொள்ளமுடியும். அவர்களுக்குப் புதியனவாகப் பல அவற்றுள் காணப்படலாம். அவர்களால் புரிந்துகொள்ள இயலாதபடி தனித்த பொருள்களைப் பற்றிய சட்டத்தில் (Substantive law) பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதைக் காண்பார்கள்; ஆயினும் ஆட்சி இயந்திரத்தையும், அது இயங்கும் வழி முறையையும்

அவர்கள் பார்த்த உடனேயே அவை தங்களால் ஏற்படுத்தப் பட்டனவாக இருப்பதையே கண்டுகொள்வார்கள்; தாங்கள் உண்டாக்கியவற்றிலிருந்தே பலவும் பிற்காலங்களில் கிளைத்து வந்திருப்பதையும் உணர்வார்கள்; இப்பொழுது ஆங்கிலோ - சாக்சனிய நாடுகளில் காணப்படுகிற பொதுச் சட்டமும், நேர்மைச் (இரக்கம்) சட்டமும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நீதித்துறை அமைப்பும் மேற்கூறிய அமைச்சர் களாலும், முறைவர்களாலும், நிறுவப்பட்டன. இவ்வாறு நிறுவன அமைப்பை ஒட்டிய நமது அரசியல் வாழ்க்கை இக் காலத்திய சீர்திருத்தங்களினால் தோன்றியதென்பதையே இவ் வியலில் நாம் சிறப்பாக விரித்துக் கூற விரும்புகிறோம்; ஆயினும் அதே சமயத்தில், அரசியலமைப்பில் ஏற்பட்ட விளைவுகளையும் நாம் கருத்தில் கொள்ளுதலும் வேண்டும்.

இச் சீர்திருத்தங்களினால் அரசியலமைப்பில் உண்டாய விளைவு என்னவென்றால், அதை "அதிகாரக்குவிப்பு" (Centralization) என ஒரே சொல்லில் சுட்டிக்காட்டலாம். நீதித்துறைக்கும், முறைமை நிறுவுவதற்கு வகுக்கப்பட்ட வழி முறைகளுக்கும் கொடுக்கப்பட்ட புதிய அமைப்பானது அதிகாரக் குவிப்பிற்குரிய அமைப்பாகும். இத்தகைய புதிய முறைகளின் வழியாகவே, நார்மானியரது நடு அரசானது, உள்நாட்டுப் பிரிவு ஒவ்வொன் றுடனும் தொடர்புகொண்டு, ஒவ்வொருவரையும் தனது ஆட்சியில் கொண்டு வந்தது. நார்மானிய நடு அரசு எப்பொழு தும் வரம்பில்லாத அதிகாரமுடையதாகவே இருந்தது; ஆயினும் அது நடைமுறைக்கு ஒத்ததாய், அரசியலமைப்பில் படியாததால், வரம்பிலா ஆட்சியாக இருந்தது. இவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதென்னவென்றால், இந்த வரம்பிலா நார்மானிய ஆட்சியானது, ஒரு அரசியலமைப்பாக ஆகி, பல சட்டங்களின் வடிவாகவும், நிறுவனங்களின் வடிவாகவும் வெளிப்பட்டது. சட்டத்தில் எழுதப்படாமல், வழக்கத்தில் மட்டுமே இருந்த இவ்வரம்பிலா ஆட்சியானது, நிலைமாறி, அரசு செயலாற்றுவதற் கியைந்த அமைப்பாகவும், இயந்திரமாகவும், விளக்கமுறுதல் வேண்டுமாயின், அவ்வரம்பிலா ஆட்சியானது எதிர்காலத்தில் அஞ்சத்தக்க சிறப்பைப் பெற்றால், அதற்கு ஒரு உறுதியும், நிலையான தன்மையும் உண்டாகிவிடும். இரண்டாம் ஹென்றியின் ஆட்சியைப் பொறுத்த வரையில், வரம்பிலா ஆட்சிக்கு ஒரு அரசியலமைப்பு உண்டாகிற வகையில் எல்லாம் அவர் செய்தார், அவர் எவ்வளவு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதோ, அதற்கும் கூடுதலாகவே செய்தார். அவரால் உண்டாக்கப்பட்ட ஆட்சி இயந்திரமானது, பன்னிரண்டாம் நூற்றாண்டினருக்கு

வியப்பை அளிக்கக்கூடிய ஒரு அதிகாரக் குவிப்பை ஏற்படுத்தியது. அவ்வரசியல் இயந்திரம் நிலையானதாயிருக்க வேண்டுமா என்பது எதிர்காலத்தில்தான் தீர்மானிக்கப் படவேண்டியதாயிருந்தது.

நார்மானிய வெற்றிக்குப் பின்னர் இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் மாறுதலை உண்டாக்கிய இப்பெருங் காலமானது, ஒரு சிறப்பான தன்மையைப் பொறுத்த அளவில், இதைப் போன்று மாறுதலை உண்டாக்கிய வேறு காலங்களை ஒத்து இருக்கிறது. இக்காலத்தில் புதிய நிறுவனங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை; பழைய நிறுவனங்களே பெரிய அளவில் பயன்படுத்தப் படவும், புதிய முறைகளுக்குப் பொருந்துமாறு ஆக்கப்படவுமாக இக்காலம் அமைந்தது. நார்மானியர் தம்முடன் இங்கிலாந்துக்குக் கொண்டு வந்த அரசரது முறைவர்கள், நாடு சுற்றிவரும் முறைமன்றங்கள், ஆணைகள், தீர்ப்புச் சான்றுளர் குழுக்கள் ஆகிய நிறுவனங்கள் தாம் மாறுதல்களை உண்டாக்கிய கருவிகளாய் அமைந்தன. நார்மண்டியில் ஹென்றியினது தந்தையின் ஆட்சிக்காலத்திலும், இங்கிலாந்தில் அவரது பாட்டனரது ஆட்சிக்காலத்திலும், தோன்றிய இம்மாறுதல்கள் பலவற்றின் சுவடுகளை நாம் காணலாம். ஆயினும் இவற்றை இனவகைப்படி, உறுப்பு அமைப்பில் ஒரு சேர இணைத்து, அவற்றை நடு அரசின் இயந்திரத்தில் பொருந்தி வைத்து, அரசரது இந்த ஆட்சி இயந்திரத்தைக் குறிப்பிட்ட சில விதிகளுக்குட்பட்டு எவரும் விரும்பினால் பயன் படுத்திக் கொள்ளுமாறு வைத்தது இரண்டாம் ஹென்றியின் வேலையே ஆகும். ஒரு சில மாறுதல்களில் மட்டுமே, புதியனவாகச் செய்யப்பட்டவற்றைப் பற்றியும். அவைகளின் வரிசை முறை, தோன்றிய காலம் முதலியவற்றைப் பற்றியும் நாம் திட்டமாகச் சொல்ல முடியும். இவற்றை வரிசையாக அடிப்படையானவற்றிலிருந்து நாம் கூறத்தொடங்கி, மற்ற மாறுதல்களெல்லாம் இதிலடங்கி யுள்ளதைக் காட்டுவதே சிறந்ததாகும்; இவ்வாறு நாம் கூறுகையில் பல்வேறு நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட வேறு சில மாறுதல்களையும் காண்போம்.

அவர் செய்தவற்றுள் செயல் வரிசையிலும், நடை முறையிலும் மிகவும் அடிப்படையாக உள்ள சீர்திருத்தம் எதுவென்றால் அது அரசரது உள்நாட்டு முறை மன்றங்களைப் பற்றியதாகும். அரச அறிவுரை மன்றம் (curia regis) உள்நாட்டுப் பிரிவில் கூடவும் கூடி, அப்பிரிவில் தோன்றும் வழக்குகளை ஆய்வு செய்யவும் வேண்டுமென்பது தான், அரசர், இவ்வாறு மாறுதல்களையெல்லாம் செய்து, அவற்றை ஒன்றோடொன்று இணைந்த அமைப்பில் ஆக்கியதின் பெரும் நோக்கமாகும். மற்ற வழக்குகளை

ஆய்வதற்கு அரசரது முறை மன்றங்களே தகுதியுடையன ஆயின. அரசரோ அல்லது நடு அரசோ, அரசரது இசைவினால், அரச அறிவுரை மன்றத்திலன்றி, வேறு எதிலும் அரச முறைவர் கள், ஆணைகள், தீர்ப்புச் சான்றாளர் குழுக்கள் ஆகியோரைப் பயன்படுத்தியதற்குச் சான்று இல்லை. ஒரு ஆணையின் மூலம் ஒரு வழக்கு அது தோன்றிய இடத்திலேயே ஆய்வு செய்யப் படுதல் வேண்டுமெனின், அது எப்பொழுதும் அரசரது முறை வர்கள் முன்பே, அரசரது முறை மன்றத்திலேயே செய்யப் பட்டது. தீர்ப்புச் சான்றாளர் குழுவைப்பயன் படுத்துவதற்குத் தனியாள் எவரேனும் இணக்கம் பெற்றுக்கொண்டால், அக்குழு எப்பொழுதும் அரசரது முறை மன்றத்தில், அரசரது முறைவர் கள் முன்பேதான் செயலாற்ற வேண்டும். இக் காலத்தில், இந்த அரசியல் இயந்திர மெல்லாம் அரசருக்கு உரியதானதே என்ற இம்மாறுதல்களினால் அரசரது உள்நாட்டு முறை மன்றங்கள் பழைய உள்நாட்டு முறை மன்றங்களான கோட்டம், நூறு ஆகியவற்றின் வேலையில் குறுக்கிட்டதாகக் கருத முடியாது. இந்நூற்றாண்டின் இறுதியில், ஒரு சில வழக்குகளைத் தவிர மற்ற வற்றை யெல்லாம் பழைய கோட்ட முறை மன்றங்களுக்கு மாறாகப் புதிய முறை மன்றங்களே ஆய்வு செய்யத் தொடங்கின. எனினும் தொடக்கத்தில் இவை இரண்டுக்கும் ஒன்றுக்கொன்று போட்டியான ஆட்சி வரம்பு இருந்த போதிலும் ஒன்று மற்றொன் றில் பெரும்பாலும் குறுக்கிட வில்லை. இப்பழைய முறை மன்றங் களெல்லாம் பன்னிரண்டாம் நூற்றாண்டினிறுதியில், முன்பு பதினோராம் நூற்றாண்டிலிருந்ததைப் போலவே அமைப்பிலும், செயல் முறைகளிலும், செயல்களிலும் இருந்து வந்தன; நூற்றின் முறை மன்றத்தில், பொதுவான முறை மன்றம் தனி யான பெருமக்களது ஆட்சியில் வந்தது. முதலாம் ஹென்றியின் சீர்திருத்தங்களுள் ஒன்று உள்நாட்டு முறை மன்றங்களைப் பற்றிய தாகும்; இதைப்பற்றி நமக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. அச்சீர்திருத்தத்தின் மூலம் அவைகள் கூடும் காலங்கள், இடங்கள் இவற்றைப்பற்றிய சட்டங்களை அவர் மீண்டும் நடை முறைக்குக் கொண்டு வந்தார்; அவற்றை அரசரது உள்நாட்டு அலுவலர் தமது நலனுக்காக, ஒழுங்கை மீறிப் பயன்படுத்துதலினின்றும் காத்தார்; தமது நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்து தலில் சில சட்டங்களையும் வகுத்தார். பழைய முறை மன்றங் களை அரசர் பயன்படுத்தியதன் மூலம், அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு சுற்றுவட்டத்திற்கும் நிறுவப்பட்ட முறைவர்கள் அவ்வச்சுற்று வட்டத்திற்குச் செல்லு முன்பாக, அதிலுள்ள

ஒவ்வொரு கோட்டத்தின் கொத்தவாலுக்கும், அதிலுள்ள முறைவர்களைக் கூட்டி வைக்கும்படி ஆணை விடுக்கப்பட்டது. இக் கூட்டமானது வழக்கமாகக் கோட்டத்திலுள்ள அலுவல்களைச் செய்வதற்காக அவ்வப்பொழுது கொத்தவால் கூட்டுகிற கோட்ட முறை மன்றக் கூட்டத்தைப் போன்றதன்று; கோட்டத்தில் அரசரது அறிவுரை மன்றத்தின் கூட்டத்தை நடத்த வேண்டிய சிறப்பான நோக்கத்திற்காக, உள்ளூரிலுள்ள அரசியல் இயந்திரத்தைக் கூட்டும் சிறப்புக் கூட்டமாகவே அவர் கோட்ட முறை மன்றத்தைக் கூட்டினர். இக்கூட்டங்களுக்கு வரவேண்டிய தில்லையென விலக்கு உரிமைகளைத் துறவி மடங்களுக்கும், வாணிகப் பட்டணங்களுக்கும், தனக்கு வேண்டிய ஆட்களுக்கும், சில குழுக்களுக்கும் அரசர் அளிப்பதற்கு முன்னிருந்த காலத்தில், எல்லா வகுப்பினரும் முறையாகக் கூடியுள்ள அமைப்பில் கோட்ட முறை மன்றத்தைக் கூட்டுவதற்கு, மேற் குறிப்பிட்ட ஆணையானது உதவிற்று என நாம் கூறலாம். இத்தகைய உரிமைகளும், விதி விலக்குகளும் இப்பொழுது நிறுத்தப்பட்டன. சமயச்சார்புடைய பெருமக்களும், அதனைச் சாராத பெருமக்களும், அரசருக்கு மட்டுமே நிலவரி கொடுக்கும் குடியானவரும், ஒவ்வொரு சிற்றூரிலுமுள்ள தலைவரும், சட்டமறிந்த நால்வரும், ஒவ்வொரு கோட்டத்தினின்றும் சட்டமறிந்த பன்னிருவரும் இந்தச் சுற்றிவரும் முறை மன்றத்திற்குக் கட்டாயமாக நேரில் வரவேண்டுமென இவ்வாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மிக உயரிய நிலையிலுள்ள பெருமக்களெல்லாம் கூட்டத்திற்குத் தங்கள் வகையாட்களை அனுப்பும் உரிமைகளைப் பெற்றனர்; எவ்வாறிருந்த போதிலும் இக்கூட்டத்தில் அவர்களுக்குப் பொறுப்பாக வேலை செய்வதற்கு ஓர் ஆள் உண்டு; எனவே முறைவர்கள் கொடுக்கும் வேலையைச் செய்தற்குக் கோட்டத்தினர் யாவரும் இதில் கூடியிருந்தனர்.

சுற்றிவரும் முறை மன்றத்தின் நடவடிக்கைகள் அரசரது ஆணை படிக்கப்பட்டமையி லிருந்து தொடங்கிற்று; இவ்வாணையில் அரசர், அம்முறை மன்றத்தைக் கூட்டுதற்கும், அதில் முறைமை செய்யவும், அதற்காக உள்ளூரில் அரசருடைய முறை மன்றத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் முறைவர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகக் கூறியிருந்தார். பிறகு, முறைவர்களில் ஒருவர், தாங்கள் அங்கு வந்திருப்பதின் நோக்கங்களையும், சுற்றிவரும் முறை மன்றத்தின் நன்மைகளையும் கூட்டத்திற்கு விளக்கிக் கூறினர். இதனை யடுத்துத் தீர்ப்புச் சான்றாளர் குழுக்கள் அமைக்கப்பட்டன. முதலில் கோட்டம் முழுவதற்காக நான்கு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பிறகு இவர்கள் ஒவ்வொரு நூற்றிலிருந்தும் இரண்டு

வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் உறுதிமொழி எடுத்தனர்; இவர்கள் எல்லோரும் சேர்ந்து வேறு பத்துப் பேர்களைத் தேர்ந்தெடுத்தனர்; இதற்குப் போதிய வீரர்கள் இல்லையெனின், தனியாட்களும், சட்டமறிந்தவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, யாவரும் சேர்ந்து நூற்றின் தீர்ப்புச் சான்றுளர் குழுவை அமைத்தனர். இதன் பின் முறைவர்கள் தாங்கள் உள்ளூரிலுள்ளவர்களிடம் சான்று வாங்கித் தீர்ப்புச் செய்ய வேண்டிய வழக்குகளின் பட்டியலைத் தீர்ப்புச் சான்றுளர் குழுக்களிடம் கொடுத்தனர்.

இவ்வாறு 1194-ல் சுற்றிவரும் முறை மன்றத்தின் தீர்ப்புச் சான்றுளர் குழுவினரிடத்துக் கொடுக்கப்பட்ட வழக்குப் பட்டியல் நமக்குக் கிடைக்கிறது; அக்காலத்தில் முறைவர்களால் செய்யப்பட்டு வந்த வேலையின் மாதிரியை இது காட்டுகிறது. இதன்படி முதல் முதலில் தீர்ப்புச் சான்றுளர் குழுவினர், மற்றைய பழைய முறை மன்றங்களால் முற்றிலும் தீர்க்கப்படாத வழக்குகளையும், அரசரால் தீர்க்கப்பட வேண்டிய பழைய புதிய வழக்குகளையும் எடுத்துச் சொன்னார்கள்; இதன் பிறகு அரசரது ஆணையின் மூலம் இசைவு பெற்று இந்தச் சுற்றிவரும் முறை மன்றத்தைக் கொண்டு தீர்த்துக்கொள்ள வேண்டிய தனியார் வழக்குகளையும் (private pleas), நடு முறை மன்றத்திலிருந்து கோட்ட முறை மன்றங்களுக்கு அனுப்பப்பட்ட வழக்குகளையும், வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள பொதுச்சட்ட முறை மன்றங்களிலிருந்து, சுற்றிவரும் முறை மன்றங்களுக்கு மாற்றப்பட்ட வழக்குகளையும் (நிசி பிரையஸ் வழக்குகள் — Nisi prius cases), தீர்ப்புச் சான்றுளர் குழுவினர் எடுத்துச் சொன்னார்கள். பின்னர் அரசரது நேராக நலத்துக்குகந்ததும், சாதாரணமாகக் கொத்தவாலினால் கவனிக்கப்பட்டதுமாகிய ஆட்சி அலுவலின் பட்டியலை அவர்கள் படித்தனர்; இது சுற்றிவரும் முறைவர்கள் எவ்வாறு கொத்தவாலின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினரென்பதையும், எவ்வாறு இம்முறை மன்றம் ஆட்சியிலும், அதிகாரக் குவிப்பை உண்டாக்குதலிலும் ஒரு வலிய கருவியாக அமைந்ததென்பதையும் காட்டுகிறது. இம்முறைவர்களிடத்திலேயே உரிமையாளில்லாமல் பறிமுதல் செய்யப்படவேண்டிய நிலங்களைப் பற்றியும், அரசரால் நன்கொடையாக ஏற்படுத்தப்பட்டுள்ள கோவில்களின் பதவிகளில் ஏற்படும் ஆளில்லாத வெறுமைகளையும், அரசரது பொறுப்பாட்சியிலுள்ள மானியக்காரரது உரிமைகளையும், அவ்வுரிமையாளர் பெண்ணாக இருந்தால் அவரது மண உரிமைகளையும், அரசருக்கு இன்னும் கொடுக்கப்பட வேண்டிய உதவிகளையும், பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களையும், தட்டு முட்டுச் சாமான்களையும், தமக்குத் தெரியப்படுத்தப்பட்ட குற்றங்

களையும், ஆகிய இவற்றை யெல்லாம் தீர்ப்புச் சான்ருளர் குழுவினர் எடுத்துச் சொன்ஞர்கள். அரசரது நிலங்களுக்கும், அதிலுள்ள பட்டணங்களுக்கும் உரிய வரியை (Tallage) விதிப்பதும்; அரசருக்குரிய பண்ணைகளில் வேண்டிய கால்நடைகளை வளர்ப்பதற்கும், பண்ணைகளை மேற்பார்வை யிடுவதற்கும், ஏற்பாடுகளைச் செய்வதும், யூதர்களின் உடைமைகளையும், அவர்களுக்கு வரவேண்டிய கடன்களையும் பதிவு செய்வதும், யூதர்களால் கடனுக்கு ஈடாகக் கொள்ளப்பட்டனவற்றைப் பற்றிய புதிய சட்ட முறைகளைச் செயல்படுத்துவதும், அண்மையில் அரச அலுவலரால் பறிமுதல் செய்யப்பட்ட உடைமை விவரங்களை அதற்குரிய காரணங்களோடு எடுத்துக் காட்டுவதும் ஆகிய இவை எல்லாம் இந்தச் சுற்றிவரும் முறைவர்கள் செய்த வேலைகளாவன. இப்பொழுது நமது நாட்டில் சுற்றிவரும் முறை மன்றங்களிலுள்ள முறைவர்களில் ஒருவர், தீர்ப்புச் சான்ருளர் குழுவினரைக் கோட்டத்திலுள்ள சிறைக்கூடத்தைப் பார்வையிட்டு, தாங்கள் முன்பு வந்ததற்கப்புறம் அது எவ்வாறு கொத்தவாலிஞல் கண்காணிக்கப்பட்ட தென்பதைப்பற்றி அறிக்கை கொடுக்குமாறு கேட்டாராஞல், அவர் ஆட்சி இயலிலுள்ள ஒரு வேலையைச் செய்தவரேயாவர். இவ்வேலையும் பன்னிரண்டாம் நூற்ருண்டிலிருந்த சுற்றிவரும் முறைவர்களிடமிருந்து நேரடியாக இக்காலத்திய முறைவருக்கு வந்ததொன்ருகும். தான் வேலை செய்து தனது அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்ட மாவட்டம் மிகச் சிறியதாயினும், தீர்ப்புச் சான்ருளர் குழுவினருடைய வேலை அக்காலத்தில் ஊதியம் மிகுந்த வேலையாக இல்லை; மேலும் அவர் செய்யும் வேலையில் ஏதேனும் பழுது இருக்குமாஞல், அதற்காக அவர் தண்டிக்கப்பட்டார்.

சுற்றிவரும் முறைமன்றத்தார் செய்துவந்த மேற்கூறிய ஆட்சி அலுவல்களிலிருந்தும், குற்ற வழக்குகளைத் தீர்த்தலிலிருந்தும், நிறைய வருமானம் கிடைத்ததோடு, மேலும் நல்ல அமைதியும், உறுதியான ஆட்சியும் ஏற்பட்டதஞல், இவ்வலுவல்களைச் செய்வதிலேயே பன்னிரண்டாம் நூற்ருண்டைய அரசர்கள் மிக்க ஈடுபாடு உடையவரர்யிருந்தார்கள். ஆயினும் அவரது முறைமன்றங்களில் வந்த உரிமை வழக்குகளைத் (Civil law suits) தீர்த்தலிலும் அவருக்கு ஈடுபாடு இருந்தது என்று எண்ணுவதற்கும் காரணம் இருந்தது. இத்தகைய வழக்குகள் முறைமன்ற அலுவல்களில் வரவரப் பெருகி வரத்தக்க அளவுக்கு முக்கியமடைந்து வந்தன. முறைவர்களால் இக்காலத்தில் மேற்பார்வை செய்யப்பட்ட ஆட்சி அலுவல்களை மேற்பார்வையிடுவதற்காக இதையடுத்த ஒன்றரை நூற்ருண்டுக் காலத்தில் படிப்படியாக,

அரசு வேறு சில வழிகளைக் கையாண்டது; ஆயினும் இதே காலத்திலேயே சுற்றிவரும் முறைமன்றங்களிலும், அதையொட்டி அரசரது மற்ற முறைமன்றங்களிலும், தீர்க்கப்படவேண்டிய உரிமை வழக்குகளும் அலுவல்களும் மிகவும் பெருகின. இவ்வாறு பழைய முறைமன்றங்களிலிருந்து புதிய முறைமன்றங்களுக்கு அலுவல் மாறியது, தொடக்கத்திலிருந்தே உறுதியாக நடைபெற்று வந்த ஒன்ருகும். இதற்குக் காரணம் நல்லாட்சியினுல் நாட்டிலேற்பட்ட செழிப்பு என்பது மட்டுமல்ல; இது ஓரளவே உண்மையுமாகும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட அரச முறைமன்றங்கள், தீர்ப்புச் சான்ருளர் குழுவினர் போன்ற மிக நல்ல முறைகளை வழக்காளிகளுக்கு அளித்து, வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்புச் செய்ததே, இவ்வாறு வழக்குகள் பழைய முறைமன்றங்களி னின்றும் புதியனவற்றுக்கு மாறுவதற்குப் பெருங் காரணமாகும்.

பழைய முறைமன்றங்கள் வழக்குகளை ஆய்வுசெய்த முறை முன்பே விரித்துக் கூறப்பட்டது; உறுதிமொழி உதவியாளர் முறையின் மூலமாக ஒரு வழக்கிலுள்ள உண்மையைப்பற்றிய சமுதாயத்தின் கருத்தை அறிந்து, அதன் அடிப்படையில் இடைக் காலத் தீர்ப்புக்களையும் முடிவான தீர்ப்புக்களையும் அவை வழங்கியபோதிலும், அம்முறை இருகட்சியினருடைய வழக்கிலு மிருக்கும் உண்மையை அறிவதற்கு அவ்வளவு சிறந்த முறை ஆகாது. அரச முறைமன்றங்கள் அளித்த ஒரு நல்ல பெரும்பயன் என்னவெனில், அது வழக்கின் உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு மிகவும் தெளிவான, நம்பகமான முறையே. பழைய ஆய்வு முறைப்படி தனது வழக்கில் இது உண்மையானதாக இருக்கலா மென்று வழக்காளி நம்பி ஏற்றுக்கொள்ளுவதைவிட, புதிய முறையின்படி, வழக்கின் உண்மைகளைப், பெரும்பாலும் அறிந்தவர் வாழுமிடத்திலிருந்து தேர்த்தெடுக்கப்பட்டவரும், உறுதிமொழியை எடுத்தவரும், கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தங்களுக்குத் தெரிந்த வரையில் விடை சொல்லும்படியாக முறைவர்களால் பணிக்கப்பட்டவருமாகிய தீர்ப்புச் சான்ருளர் குழுவை, அவர் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தீர்ப்புச் சான்ருளர் குழுவினர் கொடுக்கும் விடையை எம் முறைமன்றத்திலும் குற்றஞ்சாட்டவோ, குறை கூறவோ எவருக்கும் முடியாது. தனது பக்கம் முறைமை உளது என்று நம்பும் வழக்காளி, தான் வழக்கைப்பற்றிய முழுவிவரங்களையும் முறைமன்றத்தில் கொடுக்க முடியுமாயின், தீர்ப்புச் சான்ருளர் குழுவை வைத்தே ஆய்தல் செய்வதற்குப் பெருவிருப்பு உடையவராக இருந்தார். இவ்வாறு தீர்ப்புச் சான்ருளர் குழுவைப் பயன்படுத்தி, ஆட்சியிலுள்ள வழக்கிலும், சட்டத்தை

யொட்டிய வழக்கிலுமுள்ள உண்மையை அறியும் முறையே உயர் வழக்கு உசாவல் (Inquisition) அல்லது பொது ஆய்வு (Inquest) எனவும், திர்ப்புச்சான்றுளர் குழுவினர் முறையாகக் கொடுக்கும் விடையே ஒப்புதல் (Recognition) அல்லது திர்ப்பு (verdict, veredictum) எனவும்படும்.

ஆயினும் திர்ப்புச்சான்றுளர் குழு, ஒழுங்காக அமைந்த அரசு இயந்திரத்தின் ஒரு பாகம் அன்று; அது அரசருக்குப் பிராங்கிய அரசர்களால் கையாளப்பட்டு வந்து சேர்ந்த நேரான ஒரு செயல்முறையாகும். அம்முறையானது வரிகள், அரச அலுவலரது நடத்தை, அரசரது உடைமைகளை மீட்டல் முதலிய ஆட்சித்துறை பற்றிய சில வழக்குகளை ஆய்தல் செய்து உண்மைகளை அறிந்து திர்ப்புச் செய்தல் பொருட்டுக் கையாளப்பட்டது. தனியாள் ஒருவர் தமது வழக்கிலுள்ள உண்மைகளை முறைமன்றத்தில் திர்ப்புச்சான்றுளர்குழுவினரின் திர்ப்புப்படி அடைய விரும்பினுல், ஒரு திர்ப்புச்சான்றுளர் குழுவைப் பயன்படுத்திக்கொள்ளுதற்கு அரசரிடம் உடன்பாடு பெறவேண்டும். இவ்வாறல்லாமல் வேறு வழியில் அவர் இக்குழுவைப் பயன்படுத்த முடியாது. இவ்வுடன்பாடு ஓர் ஆணையின்மூலம் கொடுக்கப்பட்டது; இவ்வாணையிலேயே ஆய்வு செய்யப்பட வேண்டிய வழக்கும், அதை முறைவர்கள் ஆய்வதற்கு உரிய அதிகாரமும் குறிப்பிடப்பட்டன. இதனை அடிப்படையாக வைத்தே, ஒவ்வொரு வழக்கையும் ஒரு ஆணையின் மூலமே ஆய்வுசெய்யத் தொடங்குதல் வேண்டுமென வும், அதற்கு மூல ஆணை[1] எனப் பெயர் என்றும் பொதுச் சட்டத்தில் ஒரு கோள்கை தோன்றிற்று. இதனை அடிப்படையாக வைத்தே, ஆய்வு செய்யப்படவேண்டிய வழக்கைத் தெளிவாக ஆணையில் குறிப்பிடவேண்டும் எனவும், ஒரு குறிப்பிட்ட வழக்கில் அரச முறைவர்களையும், திர்ப்புச் சான்றுளர் குழுவினரையும் பயன்படுத்துவதற்காக வாங்கிய இணக்கமானது அவற்றை வேறொரு வழக்கில் பயன் படுத்துவதற்குரிய இணக்கமாகாது எனவும் கொள்கைகள் தோன்றின. எனவே தொடக்கத்திலேயே ஒரு தவறுதலான ஆணையை வாங்கியவர், மீண்டும் விண்ணப்பித்துக் கொண்டால், சரியான ஆணையைப் பெற்றுக்கொள்ளலாமென எடுத்துக்காட்டும் வேலையையும் முறைவர்கள் செய்தனர். இத்தகைய அலுவல் முறையிலிருந்தே, வழக்குகளை வகைப்படுத்தியும், அவைகளுக்குத் தக்க ஆணைகளைப் பெருக்கியும் வைக்கும் முறை பொதுச் சட்டத்தில் உண்டாயிற்று.

[1] Original writ

அரசரது ஆட்சி இயந்திரங்களான முறை வரையும், தீர்ப்புச் சான்றுளர் குழுவையும் தனியார் பயன்படுத்துவதற்கு அரசர் இணக்கம் கொடுக்கும் ஆணைகளை வழங்குவது என்ற முறை நார்மானிய வெற்றியை அடுத்த காலத்திலேயே ஏற்பட்டது. இதில் முதல் தலை முறையில், இவ்வழக்கம் மிகவும் மெதுவாகத்தான் கூடுதலாகிக் கொண்டே வந்தது என்று நமக்குத் தெரியவருகிறது. எனினும் முதலாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் இம்முறை மிகவும் அடிக்கடி பயன்படுத்தப் பட்டதெனவும், ஆணையின் அமைப்பு திருத்தமாக ஆக்கப்பட்ட தெனவும் தெரிகிறது. இங்கிலாந்தைப் பொறுத்த வரையில் இம்முறையின் வளர்ச்சியில் இரண்டாவது நிலை, இரண்டாம் ஹென்றியினுல் அவரது ஆட்சித் தொடக்கத்திலேயே தொடங்கப்பட்டது. இந்நிலை ஒரு சட்டத்தின் மூலமாகவே (அசைஸ்—assize) உண்டாக்கப்பட்டது; பல சட்டங்களும் இம்மாறுதல்களைச் செய்திருக்கலாம்; ஆயினும் இச்சட்டங்களின் வாசகத்தையோ அல்லது அவை செய்யப்பட்ட ஆண்டுகளையோ நாம் அறியக்கூடவில்லை. அடிக்கடி தோன்றுகின்ற சில குறிப்பிட்ட வழக்குகளைத் தனியார் எவரும் அரசரிடம் விண்ணப்பித்து, உரிய கட்டணமும் செலுத்தி, அரசரது முறை மன்றத்தில் தீர்ப்புச்சான்றுளர் குழுவைப் பயன்படுத்தி ஆய்வு செய்துகொள்ள முடியும் என்பதாக இச்சட்டங்கள் உறுதி அளித்தன. இவ்வழக்குகளில் இப்புதிய முறை வழக்கமாக இருந்த முறை மன்ற செயல் முறையில் ஒரு பகுதியாக வந்ததென்பதே மேற்கூறிய சட்டங்களின் பொருளாகும்; இவ் வழிமுறையானது நாட்டினர் யாவருக்கும் பயன்படும் வண்ணம் ஆக்கப்பட்டது. இச்சட்டங்கள், சுற்றிவரும் முறைமன்ற அமைப்புக்களை ஒழுங்காக ஆக்கியதோடு, அரசரது தனிச்சிறப்பான ஆட்சி இயந்திரமாகவும், அதிகாரக் குவிப்ப்ன் கருவியாகவும் இருந்த அம்முறை மன்றங்களை நாட்டின் அரசியலமைப்பிலேயே நிலை பெறும்படி ஆக்கின.

இவ்வாறு ஆய்வு செய்யப்பட வேண்டிய தனிப்பட்ட வழக்குகள் மன்ற வழக்குகள் என ஐந்தாகப் பிரித்துச் சொல்லப்பட்டன; அவற்றுள் மூன்று உடைமை உரிமை வழக்குகள் ஆகும்; அவைகள் நார்மன்—பிரஞ்சு மொழியில் Novel disseisin, Mort dancestor, Darein presentment, assize utrum, எனவும் Grand Assize (பெருவழக்கு) எனவும் அழைக்கப்படும். முதல் மூன்று உடைமை உரிமை வழக்குகளில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி "யார் உரிமையாளர்?" என்பது அன்று. இதற்கு மாருக "வழக்காளி (plaintiff) தவருக உரிமையினின்றும் நீக்கப்பட வில்லையா?" என்ற கேள்வியே தீர்ப்புச் சான்றுளர்

குழுவுக்கு விடப்பட்டது. நான்காவதாகிய assize utrum (ஊற்றம் வழக்கு) என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி "கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் இறைவழி பாட்டுக்கு மட்டுமே ஈடாக விடப்பட்ட நிலமா, (Frankalmoign) அல்லது சாதாரண படைமானிய முறைப்படி குத்தகை வாரமாக உள்ள நிலமா" என்பதாகும். பெருவழக்கு (grand assize) என்பதாவது, எதிர் வழக்காளி, சொத்துக்குத் தனது உரிமையும் பட்டமும் மற்றவரால் ஒப்புக்கொள்ளப் படாதபோது, கையாள வேண்டிய வழக்கு முறையாகும்; இதன்படி அவர் பழைய முறை யாகிய முறைமன்றத்தார் முன்பு போரிடல் என்பதை விட்டு, வழக்கைத் தீர்ப்புச் சான்றுளர் குழுவினரது ஆய்வுக்கு விட்டு தீர்ப்புப் பெற்றார். பன்னிரண்டாம் நூற்றாண்டில், வழக்காளிகள், அரசரது தனிச்சிறப்புரிமையினால் தோன்றிய இந்தத் தீர்ப்புச் சான்றுளர் குழுவைப் பயன்படுத்தி ஆய்வு செய்து கொண்ட வழக்குகளெல்லாம் படைமானிய முறைபற்றி எழுந்த வழக்கு களே யாகும். இவ்வழக்குகள் முதலில் பெருமக்களது முறை மன்றத்தில் தோன்றின. பொதுவாகக் குத்தகைக்கு எடுக்கப் பட்ட தனியார் நிலங்களைப் பற்றிய வழக்குகளையும் இம்முறையி லேயே தீர்த்துக் கொள்ளலாம். எனினும் தொடக்கத்தில் இத் தகைய வழக்குகள் மிகுதியாக இம்முறையில் ஆய்வு செய்யப்படு வதற்கு வரவில்லை. நில ஊழியரது நில உரிமைகளைப் பற்றிய வழக்குகள் இம்முறையினால் ஆய்வு செய்யப்படுவதற்கு உரியன அல்ல. அரசரது இயந்திரமாகிய தீர்ப்புச் சான்றுளர் குழுவைப் பயன்படுத்த ஒருவர் விண்ணப்பம் செய்வதனால், அவரது வழக்கு பெருமகனது முறைமன்றத்தினின்றும் அகற்றப்பட்டு, அரசரது முறை மன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு அகற்றப்பட்டதனால், தனது ஆட்களைப்பற்றிய வழக்குகளையும், தண்டப்பணங்கள், கட்டணங்கள் வாங்கக்கூடிய உடைமை வழக்குகளையும் ஆய்வு செய்யும் உரிமை, பெருமகனிட மிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. இவ்விளைவானது பெருமக னுக்கு நேரிட்ட ஒரு பறிமுதலுக்கு ஒப்பாகும்; எனவே கூடுமாயின், அவர் இவ்வாறு அரசர் நடவடிக்கை எடுப்பதை உரிமையுடன் எதிர்க்கவும் கூடும். இப்புதிய முறை, கோட்டம், நூறு ஆகியவற்றிலுள்ள மக்கள் முறைமன்றங்களில் வரும் வழக்கு களையும் ஓரளவு தாக்கிற்று; எனினும் அவற்றைப் பொறுத்த வரையில் இம்மாற்றம் இயல்பாகவும் எளிதாகவும் நடை பெற்றது.

இத்தகைய முறையில் அரசரது முறைமன்றத்தில் வழக்கு களைத் தீர்ப்பதற்காக வழங்கப்படும் ஆணைகளைத் தவிர (assize

writs), அரசரது தனிச் சிறப்புரிமையால் வேறு இருவகை ஆணைகள் தோன்றின. இவைகளும் பெருமகனுடைய முறைமன்றத்துக்கு வரவேண்டிய வழக்குகளை அரசரது முறைமன்றத்துக்கு மாற்றின. இத்தகைய ஆணைகளில் ஒன்று, உரிமை ஆணை (writ of Right) எனவும், மற்றொன்று பிரேசைப்பு ஆணை அல்லது கட்டளை ஆணை (praecipe) முறை எனவும் படும். ஓர் உடைமையைப் பற்றிய உரிமை, பட்டம் முதலியவைகளை ஆய்வு செய்தல் வேண்டு மெனக் கட்டளை இடுவது உரிமை ஆணை எனப் படும். இவ்வாணையைப் பெற்ற வழக்காளிக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கும்படி முறை மன்றத்தின் பெருமகனுக்கு விடுக்கப் பட்டதே இவ்வுரிமை ஆணையாகும். எனவே இவ்வாறு வழக்காளியின் சார்பாகத் தீர்ப்பு வழங்கப் பெருமகன் விரும்பவில்லை என்ற குறிப்பும் இவ்வுரிமை ஆணையில் அடங்கி யிருந்தமை பெறப்படும். பெருமகன் இவ்வாணையின்படி தீர்ப்பு வழங்க மனமிசையா விட்டால், கோட்டத்தின் கொத்தவாலாயினும், அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட வேறு எவராயினும் அவ்வழக்கை மேற்கூறிய வகையில் தீர்த்தல் வேண்டு மெனவும் அவ்வாணையின் முடிவில் கூறப்பட்டிருந்தது; எனவே இவ்வாணையின்படி பெருமகன் ஆய்தல் செய்யா விட்டால், அரசரது ஆணையாளராக ஒருவர் அமர்த்தப்பட்டு, அவ்வழக்கை ஆய்ந்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. எனவே ஆணை முறை என்பது "ஒவ்வொருவருக்கும் முறைமை கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுவது அரசரது கடமை" என்பதையே அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஒன்றாகும். எனினும் அது முதலில் வழக்கைப் பெருமகனது முறைமன்றத்தில் ஆய்வு செய்யப்படும் உரிமையை முழுவதும் ஒப்புக்கொண்டது. சட்டமுறைப்படி பார்த்தால், இவ்வுரிமை ஆணையானது அக்காலத்திய படைமானிய முறை நாடுகளில் எல்லாம் சாதாரணமாகக் காணப்பட்ட பிழைபட்ட தீர்ப்புக்களுக்கு எதிராக முறையிட்டுக் கொள்ளும் (appeal) வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டே எழுந்ததென்னலாம். இவ்வழக்கப்படி, கீழாள் ஒருவன் தனது வழக்கைத் தனது பெருமகன் ஆய்வு செய்து தீர்க்க மறுத்து விட்டால், மேலே உள்ள பெருமகனது மன்றத்துக்கு முறையிட்டுக் கொள்ளலாம். இத்தகைய முறை செய்து கொள்ளும் வழியையே அரசர் இவ்வாணை விடுப்பதன் மூலம் எளியதாக ஆக்கினர்; அதோடு பெருமக்களது முறைமன்றங்களில் ஒழுங்காகத் தீர்ப்பு வழங்கும் படியாகப் பார்த்துக் கொள்ளுவது தனது முறைமன்றங்களின் கடமையும் ஆகுமெனவும் அரசர் வற்புறுத்தி, இவ்வாணையின் மூலம் யாவரும் தெளிவாக உணரச் செய்தார். இவ்வாறு அவர்

செய்ததற்கெல்லாம் எதிராகப் பெருமக்கள் யாதொரு குறையும் கூற வில்லை. ஏனெனில் அரசரது இச்செயல்களெல்லாம் அவரது உரிமைகளில் அடங்கியவையே.

கட்டளை ஆணைமுறை எனப்படும் பிரேசைப் (praecipe) முறை, மேற் கூறிய உரிமை ஆணையினும் மிக்க தீவிரமானதாகும். அது பெருமகனது முறைமன்றத்தை முற்றிலும் புறக்கணித்தது. ஒரு வழக்காளி (plaintiff) யினால் பெறப்பட்ட இவ்வகை ஆணை, கொத்தவாலுக்கு விடப்பட்டு, வழக்கிலிருக்கும் நிலத்தை எதிர் வழக்காளியானவர் (defendant), வழக்காளிக்குத் திருப்பிக் கொடுக்கும்படியாகக் கட்டளை இடுமாறு கொத்தவாலைத் தூண் டிற்று; மேலும் இவ்வாறு எதிர்வழக்காளி செய்யத் தவறினால், அவர் அரசரது முறைமன்றத்தில் நேரில் வந்து, தான் அவ்வாறு செய்யாததற்கு, அதாவது தான் அரசரது கட்டளைக்குக் கீழ்ப்படி யாம லிருந்ததற்குத் தக்க காரணம் காட்டுமாறும் அவ்வாணையில் எதிர்வழக்காளிக்குக் கட்டளை இருந்தது. எனவே இதற்கு எதிர் வழக்காளி தரும் விடையே அவரது பக்கமுள்ள வழக்கை எடுத்துக் கூறுவதாகும்; அதுவே வழக்கின் ஒரு பகுதியை அரசரது முறை மன்றத்தில் ஆய்வு செய்வதாகும். இவ்வகையான ஆணை முறை, வழக்காளியின் வழக்கு சரியானதே என்ற மேற்கோளின் அடிப் படையிலும், யாவருக்கும் முறைமை கிடைக்கும்படிச் செய்வது அரசரது கடமை என்ற மேற்கோளின் அடிப்படையிலும் தோன்றிய ஒன்றாகும். அது படைமானியச் சட்டத்தையும், படைமானியப் பெருமகனது உரிமைகளையும் முற்றிலும் புறக் கணித்து, அரசர் உலகை ஆளும் கடவுளின் வகையாளானதனால், அவரையே தீர்ப்புக்குச் சார்ந்து நிற்க வேண்டுமென்ற இடைக் காலத்திய அரசர் அலுவலைப் பற்றிய கருத்தை யொட்டி அமைந்த தாகும். இவ்வழியில் அது அக்காலத்திய படைமானிய முறை அரசை நேரடியாக எதிர்த்த ஒன்றாகும்; மேலும் தனியார் கையில் சேர்ந்துவிட்ட முறைமை வழங்கும் அதிகாரங்களை மீண் டும் அரசரிடம் சேர்ப்பிப்பதில் வெகுவாக முன்னேற்றம் ஏற்படச் செய்த ஒன்றாகும். இத்தகைய ஆணை முறையினால் வெகுவாக மாறுதலுக்குட்பட்டவை ஒரு வகைப்பட்ட வழக்குகளே; எனினும், ஐரோப்பாவில் அக்காலத்தில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு உறுதியான ஒரு நடு அரசு இயந்திரத்தை ஏற்படுத்திய பல்வேறு மாற்றங்களில், இத்தகைய வழக்குகளைப் பற்றிய மாற்றமும் ஒரு பகுதியாகும்.

இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட தீர்ப்பு வழங்கும் முறை களும், அவற்றால் உண்டான மிகுதியான அலுவல்களும் சேர்ந்து ஒரு புதிய முறை மன்ற இயந்திரத்தை நிறுவியதோடு, சுற்றிவரும்

முறைமன்ற அமைப்பை அரசின் ஒரு நிலையான சிறப்புக் கூருகவும் ஆக்கிற்று. நடை முறையில் இந்தச் சுற்றிவரும் முறைமன்றங் கள் ஒரு நிலையான நடு முறைமன்றம் புதிதாகத் தோன்றுவதற்கு உதவியாக இருந்தன: இப்புதிய முறைமன்றத்தில் அரசரால் தனியாக அமர்த்தப்பட்ட முறைவர்கள் இருந்து, சுற்றிவரும் முறைமன்றங்கள் ஆய்வு செய்த வழக்குகளைப் போன்ற வழக்கு களை ஆய்வு செய்து, அதற்கும் அரசரது தனிச்சிறப்புரிமையால் வந்த முறையாகிய தீர்ப்புச் சான்முளர் குழுவைப் பயன்படுத் தினர்; எனவே இது எப்போதும் ஓரிடத்தில் வேலை செய்து வருகின்ற ஒரு சுற்றிவரும் முறைமன்றமேயாகும்; இதுவே பிற்காலத்தில் பொது வழக்கு நீதிமன்றம் (court of common-pleas) என அழைக்கப்பட்டது. பிற்காலத்தில் முறைமை செய்யும் அலுவலையுடைய அரசரது சிறிய அறிவுரைக் குழுவி னின்றும் தோன்றிய அரசரது முறைமன்றம் (King's Bench), கருவூலமன்றம் (Exchequer) முதலிய இரண்டு பொதுச்சட்ட முறைமன்றங்களைப் போல, இது அதினின்றும் தோன்ருமல் ஒரு சட்டத்தினுலேயே உண்டாக்கப் பட்டிருத்தல் வேண்டும்; அதாவது தீர்ப்புச் சான்முளர் குழு முறையைப் பயன்படுத்தி நன்மை யாவருக்கும் எந்நாளும் கிடைக்கும்படி செய்நதே ஒரு சட்டமாயிற்று. நெடுங் காலத்திற்கு இது ஒன்றே நடு அரசில் பொதுச்சட்ட முறை மன்றமாக இருந்தது. அரசரது அறிவுரைக் குழு, பெரிய குழுவாக இருந்தோ, சிறிய குழுவாக இருந்தோ, சட்ட முறைமன்றமாகப் பணியாற்றும் போது, தனது முறைமை செய்யும் வேலைக்காக இப்புதிய முறையாகிய தீர்ப்புச் சான்முளர் குழுவைப் பயன்படுத்தவில்லை; இக்குழுவினின்றும் தோன்றிய இரு பிரிவு களாகிய அரசரது முறை மன்றமும், கருவூல முறைமன்றமும் தமக்கு உரியனவல்லாத இப்புதிய தீர்ப்பு முறை யைக் கைப்பற்றி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நூற்முண்டு களில் பொதுச்சட்ட முறை மன்றங்களாயின (common law courts). இத்தகைய முறையில் பிற்காலத்தில் இவை வளரு வதற்குப் பொது வழக்கு நீதிமன்றத்தை உண்டாக்கிய சட்ட மானது ஒரு தூண்டுதலை அளித்தது. புதிய முறைமன்ற அலுவலில் ஏதேனும் கடினமான கேள்விகள் வந்தால் அவை அரசரது அறி வுரைக் குழுவுக்கு விடப்பட்டு அங்குத் தீர்க்கப்பட வேண்டுமென்ப தாக இச்சட்டம் கூறியது. இவ்வாறு தீர்மானத்துக்கு விடப் படும் கேள்விகள் பெருகின; இவையே அறிவுரைக் குழுவினுல் செய்யப்பட வேண்டிய அலுவலை "அரசர் முன்பாகச் செய்யப் படும் அலுவல்" (coram rege business) என்று தனிப்பட்ட தாக ஆயின. இத்தனிப்பட்ட அலுவலைச் செய்துவந்த அரசர்

குழுவின் ஒரு பகுதியே பின்னல் அலுவலுக்கேற்ப நிலையங்கள் பாகுபாடு செய்யப்பட்டபோது, அரசரது முறைவர்களடங்கிய முறைமன்றம் எனப் பிரிந்தது.

புதிய அமைப்பாகிய சுற்றிவரும் முறைமன்றம் மேலும் வளர்ச்சியுற்றபோது, அதை உண்டாக்கியவர்கள் கருதாத ஒரு நற்பயன் ஏற்பட்டது; இது ஆங்கிலோ - சாக்சன் வரலாற்றில், சிறப்பாகப் பொதுச்சட்ட வளர்ச்சியைப் பொறுத்த வரையில் மிகவும் முக்கியமானது. சாக்சனியர் காலங்களில் உள்நாட்டு முறைமன்றங்களில் தோன்றியுள்ள வழக்கம் என்னும் சட்டம் (customary law) கோட்டத்திற்குக் கோட்டம் மாறுபட்டு இருந்தது; உள் நாட்டில் நிலக்குத்தகை போன்ற முக்கியமான அலுவல்களை எங்கும் ஒரே மாதிரியாக ஒழுங்குபடுத்தக்கூடிய பொதுவான கூறுகளையுடைய படைமானியமுறைச் சட்டமானது இந்த வழக்கமென்னும் சட்டத்திற்கும் மேலானதாக விதிக்கப் பட்ட போது கூட, அதில் காணப்பட்ட மாறுபாடுகள் மறைய வில்லை. இத்தகைய மாறுபாடுகள் உள்ளன என்பதைப் பன்னி ரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்து, சட்டத்தை எழுதியவர்கள் குறிப்பிட்டார்கள்; எனினும் எதிர் காலத்தில் பொதுச்சட்ட மானது வளரக்கூடு மென்பதாக அவர்களுக்கு யாதொரு கருத்தும் இருந்திருக்க முடியாது. எனினும் சுற்றிவரும் முறைவர்கள் நடு அரசில் உள்ள ஒரே முறைமன்றத்தினின்றும் புறப்பட்டு, அம் முறைமன்றத்தையும், அதனுடைய சட்டங்களையும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் முறையே எடுத்துச் சென்றதன் வாயிலாக நாடு முழுவதற்குமே ஒரு பொதுச் சட்டத்தை உண்டாக்கின ரென்பதை அச்சட்டத்தை எழுதியவர்கள் உணர்ந்து கொண்டார் கள். உணர்ந்து, அதை நாம் இப்பொழுது குறிப்பிடுவது போலவே, "பொதுச்சட்டம்" (common law) என்பதாக அவர்கள் அழைத்தார்கள்; பொதுச்சட்டம் என்பதற்கு இப் பொழுது நாம் சில சமயங்களில் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளி லெல்லாம் பொதுவாகக் காணப்படும் சட்டங்களைக் குறிப்பிடுவது போல, மேற்கூறிய சட்ட ஆசிரியர்கள் 'பொதுச்சட்டம்' என்பதற்கு நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் ஒன்று போல் காணப் படுகிற வேறுபாடற்ற சட்டம் என்பதாகப் பொருள் கொண் டனர். குறுகிய கால அளவிலேயே, நாட்டின் சட்டமாகிய இச் சட்டம் பல உட்பிரிவுகளிலுள்ள சட்டங்களில் காணப்படும் மிகச் சிறந்த கூறுகளைத் தான் எடுத்துக் கொள்ளவும், அவ்வுள் நாட்டுப் பிரிவுகளின் சட்டங்கள் மெதுவாக மறையலாயின. இதன் விளை வாகத் தோன்றிய, நாடு முழுமைக்கும் ஒரே தன்மைத்தான சட்டம், அரசியலமைப்பில் எதிர்மறையான வகையில் முக்கிய

மானதாகும். இடைக்காலத்தின் இறுதியில் வாணிகம் வளர்ச்சி யடையவே, எவ்விடத்தும் ஒரே தன்மைத்தான ஒரு சட்டம் தேவைப்பட்டது; அப்போது இங்கிலாந்து, இதற்காகத் தனி யாட்சிப் போக்குள்ள பழைய ரோமானியச் சட்டத்தை நம்பி ஏற்றுக்கொள்ளாமல், தனது நாட்டிலெங்கும் பரவிய சட்டத்தை அளித்து இக்குறையை நீக்கிக் கொள்ள முடிந்தது. இதற்குப் பின்னுல் பதினேழாம் நூற்ருண்டில் அரசருக்கும் பாராளு மன்றத் துக்கும் இடையே போராட்டம் ஏற்பட்டபோது, நாட்டிலெங்கும் உறுதியாகப் பரவியிருந்த இப்பொதுச் சட்டமானது அரசருக் கெதிராக, பாராளுமன்றத்திற்குச் சார்பான ஓர் அரணுக அமைந்தது.

இப்பொதுச் சட்டம் தோன்றிய மூலாதாரங்களை நாம் ஆராய்வோமாயின், செயல் முறைச் சட்டம் (procedural law), பொருளாகிய சட்டம் (Substantive law)[1] என்ற இரண் டிற்குமுள்ள வேறுபாட்டைக் காணவேண்டியவர்களாகிறேம். பொதுச் சட்ட முறையை உண்டாக்கிய புதிய சில கூறுக ளெல்லாம் செயல்முறை பற்றியவையே; ஆயினும் எல்லாச் செயல் முறைகளும் புதியன அல்ல. இப்புதிய பொதுச் சட்டம் வளர்வதற்கு வேண்டிய தூண்டுதல் உண்டாகியது எவ்வாறெனில், அரசர், சமுதாயத்திற்குப் புதியவான சில முறை மன்றங்களையும், எதிர் வழக்காளியை முறைமன்றத்திற்கு அழைப் பதற்காக ஆணை என்ற புதிய முறையையும், வழக்கை மெய்ப்பிப் பதற்காகத் தீர்ப்புச்சான்ருளர் குழு என்ற புதிய முறையையும் அளித்து, இவ்வாருகச் செயல் முறையில் மாற்றங்களைச் செய்ததனு லேயே. இம்மாற்றத்தின் முறையில் உள்ள அடிப்படைகள் என்ன வெனில், அவை, சுற்றிவரும் முறைவர்கள் மன்றம், ஆணை, தீர்ப் புச்சான்ருளர் குழு என்பவையே. உண்மையில் செயல்முறைச் சட்ட அளவில் பொதுச் சட்டத்தை உண்டாக்கியது எதுவெனில், அது இந்தப் புதிய முறைமன்ற அமைப்பேதான். ஆயினும் பொதுச் சட்டத்தைத் தோற்றுவித்த பொருளாகிய சட்டம் எது வெனில், அது பெரும்பாலும் பழைய சாக்சனிய உள்நாட்டுச் சட்டமும், சாக்சனிய சட்டத்தை ஒட்டிய நார்மானிய உள் நாட்டுச் சட்டமும், படைமானிய முறைச்சட்டமுமே ஆகும். முதலாவது ஹென்றியின் ஆட்சிக் காலத்திய சட்ட நூல்கள், சாக்சனியச் சட்டமும், படைமானிய முறைச் சட்டமும் ஒன்ருே டொன்று கலந்து விடாமல், இரண்டுமே நடை முறையில் இருந்த தைக் காட்டுகின்றன; இரண்டாம் ஹென்றியின் காலத்தில் கிளான்வில் என்னும் ஆசிரியரால் எழுதப்பட்ட பெயர் பெற்ற சட்டநூல், இந்த இருவகையான சட்ட அமைப்புகளும், புதிய

[1] சப்ஸ்டான்டிவ் லா

முறைமன்றங்களில் இணைந்து ஒன்ருகி விட்டதைக் காட்டுகிறது. இந்தச் சட்ட நூலில் பழைய சட்டத்தைப் புதிய சட்டத்தினின்றும் பிரித்தறிய வேண்டுமெனில், அதற்குப் பெரு முயற்சியுடன் வரலாற்ருராய்ச்சி செய்தல் வேண்டும்; ஏனெனில் இவை இரண்டிற்கு முள்ள வேறுபாடு மேலெழுந்தவாரியாக இந்நூலில் காணப் படுதல் அரிது. இந்நூலும் பொதுச் சட்டத்தையன்றி வேறெதனையும் காட்டவுமில்லை. இவ்வாறு இரு பழைய சட்ட முறைகளையும் இணைத்து அதனடிப்படையில் அமைக்கப்பட்டதே இக்காலத்திய பொதுச் சட்டமாகும். இது வளர்ந்ததை அடுத்து முதன் முதலில் தோன்றியது யாதெனில, புதிய முறையில் ஆணைகள் பெருகியதும், அதனுல் வழக்குகளும் வகைப்படுத்தப்பட்டது மாகும். சட்டம் வளருவதற்கும், முறைமன்றங்களின் தீர்ப்புக்கள் உதவின என்பதும் இங்கு பெரும் ஈடுபாட்டுடன் குறிப்பிட வேண்டிய ஒரு செய்தியாகும். கிளான்வில்லுக்குப் பிந்திய இரண்டு தலை முறைகளுக்குப் பின் வந்த மற்ெருரு பொதுச் சட்ட நூலாசிரியராகிய பிராக்ட்டன் (Brackton) என்பவர், அப்போதைய சட்டம் எவ்வாறு இருந்த தென்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்காக, ஐந்நூறு வழக்குகளில் கூறப்பட்ட தீர்ப்புக்களை மேற்கோளாகக் கூறுகிருர்.

பொதுச்சட்டம் ஒன்றுதான் ஆங்கிலோ - சாக்சனியரது சட்டத்தில் ஒரு சிறந்த கூறு என்பதில்லை. நாம் இப்பொழுது "நேர்மை" அல்லது "இக்விட்டி" (equity) என அழைக்கும் சட்டமுறையும். பொதுச் சட்டத்தோடேயே தோன்றியதாகும்; இது தனியாக ஒரு முறையாகத் தோன்றவில்லை; அதனுடைய அடிப்படைக் கொள்கைகள் கையாளப்பட்டு வலியுறுத்தப்பட்டவுடனேயே இம்முறையும் தோன்றிற்று. இதனுடைய அடிப்படைக் கொள்கைகள் இரண்டாம் ஹென்றியின் சீர்திருத்தங்களில் சொல்லப்பட்டிருந்தன; எனினும் பொதுச்சட்டத்தை விட, இந்த நேர்மை என்ற முறையே இடைக்கால இறுதியில் அக் கொள்கைகளை வெளிப்படுத்தி அவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது. வரலாற்றுப் போக்கில் பன்னிரண்டாம் நூற்ருண்டைய அடிப்படைக் கொள்கைகளினின்றும், பொதுச்சட்டமானது மாறுபட்டுச் செல்லவும், நேர்மை முறை ஒன்றுதான் அவற்றை ஒட்டியே அமைந்தது. ஹென்றியின் ஆட்சியில் புதியனவாகச் செய்யப்பட்ட சீர்திருத்தங்களும், இந்த நேர்மை முறையின் தன்மையை உருவாக்கின; அச்சீர்திருத்தங்கள் அரசரது தனிச் சிறப்புரிமையான நிறுவனங்களாகுக; அவை நாட்டிற்கோ சமுதாயத்திற்கோ அல்லாமல், அரசருக்கே உரியவை; பொது மக்கள் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமாயின் அதனை

அரசர் முறைமை செய்வதற்கு மிகவும் உகந்த செம்மையான வழியாக எண்ணி, அன்பு கூர்ந்து ஒரு சலுகையாக அளித்தால் தான் அது இயலும். ஆயினும் அவை யெல்லாம் யாவருக்கும் உரிய பொது உரிமையாக ஆக்கப்படவில்லை. ஒவ்வொரு வழக்கிலும் அவை வேண்டுமெனக் கேட்கப்படுதல் வேண்டும்; அவைகளைப் பயன்படுத்துதற்கு இணக்கம் வாங்கப்பட்டது என்பதற்குச் சான்று முறைவர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். இவைகளைப்பயன்படுத்துதற்குக் கொடுக்கப்படும் விண்ணப்பமானது எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இம்மாறுதல்களுக்கெல்லாம் அடிப்படையாகிய அரசரது தனிச்சிறப்புரிமையின் கொள்கைகளுக்கு மிகவும் விரிவான பொருள் உண்டு; நேர்மை முறையானது இதிலுள்ள வேறொரு பொருளை வற்புறுத்தியது; இப்பொருளும் அரசிய லமைப்பு வரலாற்றில் மிகவும் முக்கியமானது. யாவருக்கும் முறைமை செய்வது அரசரது கடமை என்ற கருத்தும், உலகை ஆளும் இறைவனது வகையாளே அரசர் என்ற கருத்துமே நாம் முன்பு பார்த்தபடி, ஆணை முறை தோன்றுதற்குத் தூண்டுதலாயிருந்தன. எவரிடமிருந்தும் எதிர்ப்பு இன்றி, வலிமையே முறைமை (might was right) என ஏற்றுக் கொள்ளக்கூடிய அந்தக் காலத்தில், மக்கள் அரசரது இந்தத் தனிச்சிறப்புரிமையை மிகவும் உச்சநிலையில் பயன்படுத்தி, அது சமுதாயத்தின் தன்னுரிமைக்குக் காப்பாக உள்ளதேயன்றி, அதனை அழிப்பதாக இல்லையென அதைக் கருதியதில் வியப்பு ஒன்றுமில்லை. அதோடு அமையாமல் அவர்கள் மேலும் கூறியது கவனிக்கத்தக்கது. "சட்டத்தை விளக்கி முறைமை செய்பவர்களுக்குச் சட்டத்திற்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விரிந்த பொருளை உணரும் ஆற்றல் இல்லாவிட்டால், அப்பொழுது அச்சட்டத்தினால், தவறான முறைமை வழங்கப்பட்டாலும், இழைக்கப்பட்ட தவறுகளைத் திருத்தி நேர்மை வழங்கச் சட்டம் தவறினாலும், காப்பாற்றப்பட வேண்டிய உரிமைகளை அது தாக்கத் தவறினாலும், அரசரானவர் உடனே தலையிட்டு இதற்கு முரண்பாடான சட்டம் இருந்தாலும், நேர்மை வழங்கி, உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய கடமையைச் செய்யவேண்டும்"—என இவ்வாறும் மக்கள் கருதலாயினர். எனவே இதனின்றும் பெறப்படுவது யாதெனில், 'அரசர் சட்டத்தின் மேம்பட்டவரே, முறைமை யாவருக்கும் கிடைக்கும்படி செய்வதற்காக, அவர் சட்டத்தைப் புறக்கணித்து அதைத் தனது மேலுரிமையால் தள்ளுபடி செய்யலாம்' என்பதே. அரசரது இவ்வகையான முதல் நிலையிலிருந்த தனிச்சிறப்புரிமையானது, அக்காலத்திலிருந்தே கையாளப்பட்டு, இப்பொழுதும் செயல்

துறையாளர், (executive) தண்டனை விதிக்கப்பட்ட கொடுங் குற்றவாளிக்கு மன்னிப்பு விடுதலையளிக்கும் செயல் துறை உரிமை யாக வழக்கத்திலிருந்து வருகிறது. எனவே இத்தனிச் சிறப்புரி மைக்கொள்கையினுல் நன்மையே விளையும் என்பதாகப் பன்னிரண் டாம் நூற்றுண்டினர் எண்ணினர். தங்களுடைய தனியாட்சியை வரம்பு செய்யும் அரசியலமைப்போடு மாறுகொண்டு போராட்டம் செய்த பிற்காலத்தரசர்கள், இத்தனிச் சிறப்புரிமையை எத்தகைய முறையில் பயன்படுத்துவரென அவர்கள் எதிர்கால உணர்ச்சி யோடு இதனை எண்ணிப் பார்க்கவில்லை.

பதின்மூன்றும் நூற்றுண்டினிறுதியில் பொதுச்சட்டமானது செயல்படுவதற்குத் திட்டவட்டமான செயல் முறைகள் வகுக்கப் பட்டு வற்புறுத்தப்பட்டன; மக்களுடைய உரிமைகளும் எழுதப் பட்ட ஓர் ஒப்பந்த முறையை ஒட்டியே வரையறை செய்யப் பட்டனவாக அப் பொதுச் சட்டத்தில் கருதப்பட்டது; எனவே தான், இந்நிலையில் 'பொதுச்சட்டத்தை மிகவும் கடுமையாகப் பின்பற்றுவதனுல் விளையும் தவறுகளை நீக்கிச் சரிசெய்து, முறைமை வழங்கும் தனது கடமையையும், தனது தனிச் சிறப்புரிமையையும் செய்வதற்காக அரசர் தலையிட முடியும்' என்புதாக மக்கள் கூற லாயினர். இவ்வாறுன ஒரு வளர்ச்சி முதலாம் எட்வர்டின் ஆட்சி யிலேயே தொடங்கியதாகத் தெரிகிறது. ஏனெனில் எழுதப்பட்ட பதிவேடுகள் மிகுதியான அளவிலும், ஒழுங்கான முறை வைப் பிலும் காணப்படுகின்றன; இதனுல் நெடுங்காலமாக நடை பெற்ற சில செய்திகள், அப்பொழுது தான் முதன் முதலாக நடை பெற்றவை போலக் காணப்படுகின்றன. அக்குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட புதிய நிகழ்ச்சி யாதெனில், இப்பொதுச் சட்டமானது, தன்னுல் கூட மாற்ற முடியாத அளவுக்குத் திட்ட வட்டமான வடிவங்களில் தன்னை அமைத்துக் கொண்டதே யாகும், பழையனவாகவே நீடித்து இருந்தவை அரசரது அதி காரமும், அவ்வதிகாரத்தைச் செலுத்துகின்ற அறிவுரைக் குழுவுமேயாகும்; இவற்றின் மூலமாக அரசர் பொதுச்சட்டம் செயல்படுதலில் தலையிட்டு, அது அளிக்காத முறைமையை அவரால் அளிக்க இயலும். பன்னிரண்டாம் நூற்றுண்டில் சமுதா யத்தினருக்கு மிக எளிய, உறுதியான வகையில் முறைமை கிடைப் பதற்காக, வழக்கமாக நாட்டில் உள்ள சட்டத்தால் ஏற்படுத் தப் படாதனவும், புதியனவுமான முறை மன்றங்களையும், செயல் முறைகளையும் அவர் ஏற்படுத்திஞர். பன்னிரண்டாம் நூற்றுண் டில் அவர் இவ்வாறு இப்படித் தனக்குச் சிறப்புரிமை உண்டென்ற கொள்கையின் அடிப்படையில் புதியவற்றை உண்டாக்கிஞரோ,

அதே முறைப்படியான கொள்கையளவில்தான், பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதியிலும் அரசர் செயலாற்றியவராயினர்.

தரும நியாய முறை (equity) என்பது பிற்காலத்தில்தான் ஒரு பெரிய சட்ட அமைப்பாக வளர்ச்சி அடைந்தது; ஆயினும் அதனுடைய பழைய நிலைகளில், அது எதிர்காலத்தில் வளர்ச்சி யடைதல் கூடுமென்பது தெரியலாயிற்று; இப்பொழுது அதில் காணப்படும் சில தன்மைகளும் தோன்றின. பொதுச் சட்டத்தில் எழும் ஒரு வழக்கு ஆய்தல் செய்யப்படுவதற்கு ஆணை எவ்வாறு தேவைப்பட்டதோ, அதே மாதிரியாக நேர்மை முறையில் எழும் வழக்கும் ஆய்தல் செய்யப்படுதற்கு ஒரு விண்ணப்பம் தேவைப்பட்டது. தீர்ப்பு வேறு எவ்வழியிலும் கிடைக்காதாகை யால், இதற்காகத் தலையிடும்படி அரசரிடம் செய்து கொள்ளும் விண்ணப்பமாகும் இது. இந்த விண்ணப்பம் அரசருக்கும் அவரது அறிவுரைக் குழுவுக்கும் அனுப்பப்பட்டது. ஏனெனில் அறிவுரைக் குழுவே அரசர் தனது தனிச் சிறப்புரிமையின் மூலம் செயல்படுதற் குரிய கருவியாகும். நேர்மைச் சட்ட முறையும், அதையொட்டி நேர்மையான முறைமன்றங்களும் (equity or chancery courts) வளர்ந்தன. இவை, பொதுச்சட்ட முறை மன்றங்களினின்றும் வேருக, அறிவுரைக் குழுவிலிருந்து தனியாகப் பிரிந்து, அலுவல் பாகுபாட்டினுல் தோன்றியவையாகும். நேர்மை முறைக்கும், பொதுச்சட்டத்திற்கும் செயல் முறையிலும், முறை மன்றங்களி லும் உள்ள வேறுபாடு, சட்ட வரலாற்றில் அவ்வளவு முக்கியமான தல்ல; அவைகளால் காப்பாற்றப்படும் உரிமைகளிலும், அவை கள் அளிக்கும் தீர்ப்புக்களிலும் இரண்டுக்கும் வேறுபாடு இருந்தது.

நீதித்துறை அமைப்பில் இவ்வாறு தோன்றிய மாற்றங்களை யொட்டி, நாட்டின் இரு பெரிய அலுவல்களில் மாற்றம் ஏற்பட்டது. நார்மானியர் வந்த முதல் நூற்றுண்டில் முறை நடத்துபவர் என்ற அலுவலாளர் (Justician) அரசரது தனிப் பட்ட முறைவராக இருந்தார். முதல் முறைமை செய்யும் அலு வலர் அரசருடைய தனிப்பட்ட வகையாளாகவும், சில சமயங் களில் ஒரு தலைமை அமைச்சர் போலவும், அரசர் நாட்டை விட்டு வெளியே சென்றிருந்தால் அவருடைய வகையாளாக (Regent) இருப்பவரைப் போலவும் இருந்தார். ஆனுல் எப்பொழுதும் கூடி அலுவல் செய்யும் அரசரது முறைமன்றங்கள் இக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டபடியாலும், நிலையாக அலுவலிலிருக்கக்கூடிய அரசரால் அமர்த்தப்பட்ட முறைவர்கள் இப்பொழுது இருந்தபடி யாலும், இந்த அலுவலில் சேர்ந்துள்ள அமைச்சியல் அலுவல் களைச் செய்வதற்கு வேறு பல அலுவலர் ஏற்படுத்தப்பட்டு விட்ட

படியாலும், இந்த அலுவலானது முக்கியமானதாக இல்லாமற் போயிற்று. பதின்மூன்றும் நூற்றாண்டின் இடைக்காலத்திற்கப் புறம் இவ்வலுவல் முற்றிலும் மறைந்துவிட்டது. புதிதாகத் தோன்றிய நீதித்தலைவர் அலுவலரின் வரலாறு, மேற்கூறிய முறை நடத்துபவர் வரலாற்றிலின்றும் மாறுபட்டதாகும். நீதித் தலைவர் (chancellor-சான்சலர்) என்ற பொருளில் பின்னால் அழைக்கப்பட்ட சான்சலர் என்பவர், அரசரது வீட்டுக் கோயிலில் குரு (chaplain) ஆவார்; அவருக்கு முறைமை அலுவல்களில் யாதொரு பந்தம் கிடையாது. எனினும் அரசருடைய கோயிற் குருக்கள் அதே சமயம் அரசரது தனிப்பட்ட செயலாளர் களாகவும் (private secretaries) இருந்தார்கள். இவர்கள் அரசருடைய கடிதங்களை உரிய வடிவில் அமைத்து, அரசருக்கு வரும் விண்ணப்பங்களை ஏற்றனர். அரசருடைய கடிதமாகிய ஆணைமுறை மிகுதியாகக் கையாளப்படவே, அதனுடைய அமைப்புக்கள் வற்புறுத்தப்பட்டு, நீதித்தலைவரின் அலுவலக மாகிய சான்சரி என்ற நீதிமன்றம் (chancery court), புதிய நீதித்துறை அமைப்போடு பொருந்த இணைக்கப்பட்டு, அதுவும் முக்கியமாக ஆயிற்று. இந்தப் புதிய முறைமன்றத்தில் தான் அரசரது ஆணைகள் எழுதப்பட்டன. பிற்காலத்தில் நேர்மைச் சட்டத்தின் முறைமை பெருகி, அதனால், அதற்குரிய விண்ணப்பங் களும் பெருக, இந்த நேர்மை முறைமன்றம் மேலும் முக்கியமாக ஆயிற்று. இவ்வாறு நாளாவட்டத்தில் அமைக்கப்பட்ட அடிப் படையில் தான் நீதித்தலைவர் என்ற பெருமகனின் அதிகாரமும், உயர்ந்த தரமும் அமையலாயின.

நாம் இதுவரை கவனித்து வந்ததெல்லாம் உரிமைபற்றிய பொதுவான சட்டங்களையே (civil law). இதே காலத்திலேயே, குற்றச் சட்டத்திலும், குற்றவழக்கு ஆய்வு முறைகளிலும் அவற் றுக்கு ஒரு நிலையான தன்மையும், முக்கியமும் ஏற்படக்கூடிய வகையில் மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. குற்றத்தை அடக்குவதில் ஏற்படுகிற ஒரு தனிப்பட்ட இக்கட்டு என்னவெனில், எவர் அக்குற்றத்தைச் செய்தவரெனக் கண்டு பிடித்து அவரைச் சிறைப்படுத்தி முறைமன்றத்தில் ஆய்வு செய்யப் படுவதற்காகக் கொண்டு வருவதே. எனவே இப் பொழுது புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய செயல்முறை யின் நோக்கம், இந்த இக்கட்டைத் தீர்த்து வைத்து, குற்றஞ் சாட்டப்பட்டவரை ஆய்வு செய்வதற்குச் சிறந்த நம்பிக்கைக் குகந்த முறையை ஏற்படுத்துவதே யாகும். ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டதன் மூலமாகவே இவ்விரு நோக்கங்களும் நிறை வேறின; அவற்றை நிறைவேற்றியவை இப்பொழுது கண்டு

பிடிக்கப்பட்ட பெருந்தீர்ப்புச் சான்ருளர் குழு (grand jury) என்ற முறையே. இப்புதிய நிறுவனம், இப்பொழுது உள்ள பெருந்தீர்ப்புச் சான்ருளர் குழுவை ஒத்ததன்று. இது அப்பொழுது அளவில் பெரிய ஒன்ருக இல்லை; ஏனெனில் அளவில் சிறிய தீர்ப்புச் சான்ருளர் குழு (petty jury) ஒன்று இப்பொழுது இருப்பது போல் அப்போது இல்லை. அக்காலத்தில் குற்றம் சாட்டும் தீர்ப்புச் சான்ருளர் குழு (accusing jury) என்பதாகக் கோட்டத்திலிருந்து அமைக்கப்பட்ட சிறிய குழு ஒன்றும் இல்லை; அது கோட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தனியாக அமைக்கப்பட்டிருந்தது; அதுவும் பொது அலுவலரால் கொண்டு வரப்படும் சான்றுகளை வைத்து ஆராயாமல், வழக்கைப்பற்றித் தனக்குத் தெரிந்தவற்றை வைத்தே ஆராய்ந்தது; குற்ற வழக்கு ஆய்வு செய்யப்படுவதன் முன்னர் செய்யப்பட வேண்டுவதாகிய குற்றம் சாட்டப்படுதல் என்ற வேலையை அது செய்ததோடு, வழக்கை ஆய்தல் என்பதில் ஒரு பகுதி வேலையையும் அது செய்தது.

நடை முறையில் இந்தப் புதியதான குற்ற ஆய்வுச் செயல் முறையானது, சுற்றிவரும் முறைமன்ற அமைப்புடனேயே சேர்ந்து இயங்கிற்று. சுற்றிவரும் முறை மன்றத்தை ஒழுங்கான அமைப்பாக ஆக்கியதன் நோக்கம் யாதெனில், குற்றம் செய்யப்பட்ட பிரிவிலுள்ளவர்கள்; தமக்கு அக்குற்றத்தைப்பற்றித் தெரிந்த செய்திகளை இம்முறை மன்றத்தினருக்குக் கிடைக்கச் செய்து, அதன் மூலம் குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கச் செய்யவேண்டு மென்பதே. சுற்றிவரும் முறைவர்கள் கோட்டத்திற்கு வந்ததும், உள்ளூரில் தீர்ப்புச் சான்ருளர் குழுக்கள் அமர்த்தப்பட்டு, அவர்களும் உறுதிமொழி எடுத்து, அம்முறைவர்களால் தீர்க்கப்பட வேண்டிய குற்ற வழக்குகளை எடுத்துரைத்தனர்; இந்த ஏற்பாட்டினுலேயே மேற்கூறிய நோக்கம் நிறைவேறியதாயிற்று. இத்தகைய புதுமாதிரியான குற்றவழக்கு ஆய்வைப் பற்றிக் கூறும் ஒரு பிடிபாட்டில் (document) காணப்படும் செய்தியாவது:—''அரசரும் அவரது பெரிய அறிவுரைக் குழுவும் செய்த சட்டத்தின்படி, உறுதிமொழி எடுத்த தீர்ப்புச் சான்ருளர் குழு, தாம் வாழும் நூறு அல்லது சிற்றூரில் உள்ள ஒருவர் கொள்ளையடிப்பவராகவோ, கொலை செய்பவராகவோ, திருடராகவோ, அல்லது கொள்ளையடிப்பவர், கொலை செய்பவர், திருடர் ஆகியோருக்குப் புகலிடம் கொடுப்பவராகவோ பலரால் சந்தேகிக்கப்பட்டும், அல்லது குற்றம் சாட்டப்பட்டும் இருக்கிருரா என்பதை ஆய்வு செய்து, அரசர் பெருமகனுரின் பொருட்டு உண்மையாக உரைத்தல் வேண்டும்'' என்பதே. குற்றம் செய்தவ

ராகச் சந்தேகிக்கப் படுபவரைத் தீர்ப்புச் சான்ருளர் குழுவினர் குற்றம் சாட்டத் தவறிஞல், அக்குழுவினர் கடுமையான தண்டப் பணம் செலுத்த வேண்டியவராவர். தாக்குதல் போன்ற குற்றங் கள் அடிக்கடி செய்யப்பட்டு, அவற்றைச் செய்தவர்மீதுள்ள அச் சத்தாலோ அல்லது அன்பிஞலோ, அவர் தண்டிக்கப்படாம லிருக் கும்போது, அமைநிலை நிலைநாட்டுவதற்கும், நடு அரசினது ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கும் மிகவும் ஏற்றதான ஒரு அமைப்பாக இத்தீர்ப்புச் சான்ருளர் குழுமுறை இருந்தது. இம்முறை இயங்குவதில், இக்காலத்தில் மக்கட் பெருக்கத்திஞலும், வாழ்க்கையில் சிக்கல் பெருகியதஞலும் சிற்சில மாறுதல்கள் செய்யப்பட்டாலும், இத்தகைய தீர்ப்புச் சான்ருளர் குழு முறைக்கு மேலானதாக வேறென்றும் கண்டுபிடிக்கப்படவில்லை.

குற்ற வழக்கை ஆய்வு செய்தற்கு இப்புதிய முறை தோன்ற வும், பழைய முறைகளும், அவற்றை யொட்டிய கடும் சோதனை யும் நீங்கின. முறையீடுதலும், முன்னுறுதி எடுத்தலும், உறுதி மொழியாளர் உதவியும் வழக்கத்திலிருந்து மறைந்தன. எவர் குற்றவாளி என்பதை அறிதற்குச் செப்பமில்லாத பழைய ஆய்வு முறையை விடச், சமுதாயத்தினரின் பொதுவான கருத்தை அறிவிக்கக்கூடிய, உறுதிமொழி எடுத்த, தீர்ப்புச் சான்ருளர் குழு மிகச் சிறந்தது. சமுதாயத்தின் கருத்தை அறிவிப்பவராக உள்ள தீர்ப்புச் சான்ருளர் குழுவினரின் தீர்ப்பு, உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்கவும், அக்குற்றவாளியைக் கடுஞ் சோதனை ஒன்றிஞல் அன்றி வேறெவ்வழியிலும் அவர் தப்பிப் போக முடியாத நிலையில் வைக்கவும் உதவிற்று. குற்றஞ்சாட்டப் பட்டவர் தான் குற்றவாளியல்லரென மெய்ப்பிப்பதற்காகவுள்ள இந்தக் கடைசி வாய்ப்பாகிய கடுந்தேர்வு முறையானது, அவருக்கு 1216-ல் சமய நிலையம் அதைத் தடை செய்யும்வரை, அளிக்கப்பட்டுவந்தது. இதன் பிறகு குற்றஞ்சாட்டப்பட்டவருக் குத், தான் அத்தகையரல்ல ரென்பதை எடுத்துக் கூற ஒரு கடைசி வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் பல சோதனை முறை கள் கையாளப்பட்டன; கடைசியில் இவ்வாய்ப்பை அளிக்கும் வழியாக இரண்டாவது தீர்ப்புச் சான்ருளர் குழு, அல்லது சிறிய தீர்ப்புச் சான்ருளர் குழு ஒன்று அமர்த்தப்பட்டு, அது முதலாவது தீர்ப்புச் சான்ருளர் குழுவின் தீர்ப்பை ஆய்ந்து அதன் மேல் தீர்ப் பைச் செய்வது என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. சிறிய தீர்ப்புச சான்ருளர் குழுவும், பெரிய தீர்ப்புச் சான்ருளர் குழுவும் சேர்ந்து, கோட்டம் முழுவதிலிருந்தும் அமைக்கப்பட்ட குற்றஞ்சாட்டும் தீர்ப்புச் சான்ருளர் குழுவாக அமைந்து, ஒரு புதிய முறையாகப்

பதினான்காம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து வழக்கத்திற்கு வந்தது.

நாம் இதுகாறும் ஆராய்ந்த மாறுதல்களுள், பொதுச்சட்டத்தின் அமைப்பு போன்ற சில மாறுதல்கள் இயல்பாகவே தோன்றிய விளைவுகளாகும்; வேறு சில மாறுதல்கள் ஆழ்ந்து, ஆராய்ந்து செய்த சட்டத்தின் மூலமாக ஏற்பட்டவைகளாகும். தீர்ப்புச் சான்றாளர் குழுவினால் ஆய்வு செய்தல் என இப்பொழுது பொருள் படும் "அசைஸ்" (assize) என்ற சொல்லுக்கு, அக்காலத்தில் 'சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம்' என்பதே பல பொருள்களில் ஒன்றாக இருந்தது. எனவே, மேலே குறிப்பிடப் பட்ட ஐந்து வகையான வழக்குகளும் சட்டங்களின் மூலமாகவே பாகுபாடு செய்யப்பட்டன என நாம் கருதலாம்; எனினும் பெரு வழக்கை வகைப்படுத்திய சட்டத்திற்கு மட்டும் 1179 என ஆண்டை நாம் குறிப்பிட்டுக் கூறமுடியுமே யன்றி, மற்றவற்றுக்கு ஆண்டு குறிப்பிடக் கூடவில்லை. சில சட்டங்கள் ஹென்றியின் ஆட்சியிலும், சில அவரது தகப்பனாரின் ஆட்சிக் காலத்திலும், சில ஸ்டீபனின் காலத்திலும் செய்யப்பட்டன. ஊற்றம் வழக்குச் சட்டம் (Assize utrum) 1164லும், நாவல் டீசீசின் (Novel disseisin) என்ற சட்டம் 1166-லும் செய்யப்பட்டன. இவை உடைமை உரிமைபற்றிய வழக்குகளைப் பாகுபடுத்துச் சட்டங்களாகும்.

இந்தச் சட்டங்களைத் தவிர, இவ்வரசரது ஆட்சியில் உள்ள வேறு குறிப்பிடத்தக்க பிடிபாடுகள் சில வரிசையாகக் கிடைக்கின்றன. அவற்றுள் சில, அவை முதன் முதலில் செய்யப்பட்ட போது உள்ள சட்ட வடிவத்திலேயே காணப்படுகின்றன. சட்டமெனப் பொருள் படத்தக்க வாக்கு மூலங்களடங்கிய 1164-ம் ஆண்டைய கிளாரண்டன் அரசியலமைப்புக்களைப்பற்றி முன்பே நாம் குறிப்பிட்டோம். மேலே குறிப்பிட்ட குற்ற வழக்குகளை ஆய்வு செய்யும் புதிய செயல் முறையையும், சுற்றிவரும் முறை மன்றங்களையும் பற்றிக் கூறுவது 1166-ம் ஆண்டைய கிளாரண்டன் சட்டம் (Assize of Clarendon) என்ற சட்டமாகும். 1170-ல் செய்யப்பட்ட, கொத்தவால்கள் ஆய்வுச் சட்டம் (Inquest of Sheriffs) என்ற சட்டமானது, உள்நாட்டுப் பிரிவுகளில் கொத்தவால்களும், வாணிகப் பெருமக்களும் தங்கள் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனரா என ஆய்வு செய்யும்படியாகச் சுற்றிவரும் முறைவர்களுக்குக் கொடுக்கப் படும் ஓர் ஆணை வடிவத்தில் அமைந்ததாகும். இது புதிய முறை மன்றங்கள் எவ்வாறு அரச அலுவலரை ஓர் உறுதியான கட்டுப்

பாட்டுக்குள் வைத்திருந்தன என்பதையும், அதிகாரக் குவிப்பை ஏற்படுத்துவதற்காக அவை எத்தகைய உறுதியான கருவிகளாயிருந்தன என்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. 1176-ம் ஆண்டில் செய்யப்பட்ட நார்த்தாம்ப்டன் சட்டம் (Assize of Northampton) என்பது, கிளாரண்டன் சட்டத்தையே திருத்தி அமைத்து, குற்ற வழக்குத் தீர்ப்பின் செயல் முறையையும், சுற்றி வரும் நீதிமன்ற அமைப்பையும் விரிவாக அமைக்கிற சட்டமாகும். அக்காலத்திய நிறுவனங்களைப்பற்றி அறிந்த அக்காலத்திய வரலாற்று ஆசிரியர், 1178-லும், 1179-லும், சுற்றிவரும் முறைவர்களைப் பற்றியும், மன்றங்களைப் பற்றியும் மேலும் பல ஒழுங்குகள் செய்யப்பட்டதாகக் கூறுகிறார்; ஆயினும் இவ்வாண்டுகளில் என்ன செய்யப்பட்ட தென்பதற்குச் சான்றாக யாதொரு பிடிபாடும் நமக்குக் கிடைக்க வில்லை. 1181-ம் ஆண்டைய படைச் சட்டம் (Assize of Arms) என்பது, போரில் படைமானிய வீரர்களும், தனியாட்களும் வைத்திருக்க வேண்டிய படைக்கலங்களையும், நாட்டின் படை அளவையும் பற்றிக் கூறும் சட்டமாகும். போர் ஏற்படுகையில், அதில் பணிசெய்ய ஒவ்வொரு தனியாளும் அழைக்கப்படுவாரென்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது இச்சட்டம்; படைபற்றிப் பிற்காலங்களில் செய்யப்பட்ட சட்டங்களுக்கு இது ஓர் எடுத்துக் காட்டாக இருந்தது.

மேற்கூறிய சட்டங்களைத் தவிர, வியப்பைத் தரும் இருநூல்களும் நமக்குக் கிடைக்கின்றன; இவை இரண்டும் ஹென்றியின் வாழ்நாளின் கடைசிப் பத்தாண்டுக் காலத்தில் எழுதப்பட்டிருத்தல் கூடும்; இரண்டும் அக்காலத்திய நிறுவனங்களைப் பற்றியே கூறுகின்றன. அவற்றின் ஆசிரியர்களும், தாங்கள் விரித்துரைக்கும் நிறுவனங்களை நேரில் பார்த்து அறிந்தவர்களே. அவற்றுள் ஒன்றாகிய 'கருவூல உரையாடல்' (The dialogue of the Exchequer) என்பதை எழுதிய ஆசிரியர் ரிச்சர்டு என்பவர், இங்கிலாந்தின் கருவூல அலுவலரான நிஜல் (Nigel) என்பவரின் மகன் ஆவர்; இக்குடும்பம் நெடுங்காலமாகக் கருவூலத்தோடு அலுவல் முறையில் தொடர்புடையதாகும். இந்நூல், அக்காலத்திய அரசின் பொருள் துறை அமைப்பைப் பற்றியும், கருவூல முறையின் மூலமாக நிலத்தீர்வைகளை வாங்குவதைப்பற்றியும், அம்முறையில் கணக்கு வைப்பதைப் பற்றியும், ஒரு ஆசிரியருக்கும் மாணவருக்கும் நடக்கும் ஓர் உரையாடல் வடிவத்தில் விரித்துக் கூறுகிறது. இன்னொரு நூலை எழுதியவர் கிளான்வில் என்பவர்; இது முன்பே குறிப்பிடப் பட்டது. இவர் புதிதாகத் தோன்றிய முறை மன்றங்களின் தலைசிறந்த முறைவர்களுள் ஒருவராவர்; ஆங்கிலச் சட்டத்துக்குப் பெரும் விளக்கங்கள் கொடுத்து,

பிராக்டன் (Bracton), லிட்டில்டன் (Littleton), பார்ட்டெஸ்க்யு (Fortescue), கோக் (coke), பிளாக்ஸ்டன் (Blackston) முதலிய பேராசிரியர்கள் எழுதிய பெரும் நூல்களின் வரிசையில் முதலில் இருக்கும் சிறப்புடையது இந்நூல் என்பதைவிட நாம் வேறுவகையில் இதனைக் கூற இயலாது. அதற்கு "ஆங்கில அரசியல் வழக்கத்திலுள்ள சட்டத்தைப்பற்றிய கட்டுரைகள்" (Tractatus de Legibus et consuetudinibus regnie Anglie) என்பது தலைப்பு; இது புதிய முறை மன்றங்களால் ஏற்படுத்தப்பட்ட புதிய சட்ட அமைப்பை, அதாவது எதிர் காலத்தில் பொதுச் சட்டமென அழைக்கப்பட்டதை, முழுவதும் விவரித்துக் கூறுகிறது. மற்றும் 'கருவூல உரையாடல்' கூறுவதுபோல் இதுவும் மற்ற நிறுவனங்களைப் பற்றியும் கூறுகிறது.

சட்டத்திலும், முறைமன்ற நிலையங்களிலும் பெரும் அளவில், நிலையான விளைவுகளை ஏற்படுத்தியனவும், 'ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் எதிர்காலத்தில் இவை முக்கியத்துவம் வாய்ந்த விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை' எனத் தொடக்கத்திலேயே மதிக்கப்பட்டனவுமான, மேற்குறிப்பிட்ட மாறுதல்களையெல்லாம், அரசரே தம் முயற்சியால் செய்தனர் என நாம் கூற இயலாது. அரசியல் நிகழ்ச்சிகளையெல்லாம் தமது நோக்கத்திற்கேற்ப ஆண்டு, பரந்து கிடந்த தமது நாடுகளையெல்லாம் தமது ஆட்சிக்குட்பட்ட ஒரே நாடாக இணைக்கும் வேலையில், இரண்டாம் ஹென்றியானவர், அவரது எதிரியான பிரஞ்சு அரசர் பிலிப்பு அகஸ்டசை விடக் குறைவான திறமையுடையவரே. ஆயினும் இங்கிலாந்தில் அவரது அரசாட்சியைப் பொறுத்த அளவில் தோன்றிய அமைதியையும், ஓர் உறுதியான அரசை நிறுவுதல் வேண்டுமென்ற பெருந் தேவையையும், தொடக்கத்திலேயே நன்றாகப் புரிந்துகொண்டு, இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்குரிய சிறந்த வழியையும் தமது இயல்பான நுண்ணுணர்ச்சியினால் தெரிந்து கொண்டார். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்புக்கள் எல்லாம் வேண்டுமென்பதாக முதலில் எவர் எடுத்துக் கூறியிருப்பினும், இவையெல்லாம் அரசருடைய ஆதரவு இல்லாமல் கொண்டு வரப்பட்டிருக்க முடியாது; அவை நிலை பெற்றிருக்கவும் முடியாது. இவ் வேற்பாடுகள் தோன்றுதற்கும் நிலைபெறுதற்கும் உதவியாக அரசரது ஆதரவு, அவர் ஆட்சிக்கு வந்த நாள்முதல், அவரது ஆட்சியின் கடைசிநாள்வரை கிடைத்து வந்தது. அரசரது ஆற்றல் மிக்க மேற்பார்வையினாலன்றி, தானாகவே அமைதியைக் காக்கும் முறையில் இயங்க முடியாது என்ற நிலைமையிலுள்ள ஓர் அரசு இயந்திரத்தையும், பொதுவாக அமைதியின்மையையும் உடைய நாடாக இங்கிலாந்து முதலில்

இருந்தது; இவ்வரசரது சீர்திருத்தங்களினால், அவரது வாழ் நாளிறுதியில், உயிருக்கும் உடைமைக்கும் வழக்கத்தையும் மிஞ்சிய காப்பு உறுதியையும், அரசர் இல்லாமல் தாங்களாகவே வேலை செய்வதற்குரிய அளவு பயிற்சிபெற்ற அலுவலாளர் கூட்டத்தையும், அரசர் இல்லாமல் தானாகவே இயங்கக்கூடிய அளவில் உறுதியாக அமைக்கப்பட்ட அரசு இயந்திரத்தையும், உடைய நாடாக இங்கிலாந்து மாறியது.

இத்தகைய விளைவை, அக்காலத்தில், ஓரளவு புரட்சியான முறைகளாலன்றி அடைதல் இயலாது. எனவே, இவ்விளைவை உண்டாக்கிய செயல்களில் ஒரு புரட்சிக்கு இடமிருந்தது. இரண்டாம் ஹென்றி மிகவும் உறுதியான ஓர் அரசை நிறுவினார். தமது நாளில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு அதிகாரக் குவிப்பை உடைய அரசு இயந்திரத்தை அவர் உண்டாக்கினார். அவரது காலம்வரை வாடிக்கையாகவும், வழக்கமாகவும் இருந்து வந்த வரம்பற்ற ஆட்சி முறையை, நாட்டின் அரசியலமைப்பிலேயே மிகவும் உறுதியாகப் பொருந்திய ஒன்றாக அமைப்பதில் அவர் மிகவும் வெற்றி யடைந்தார். தாம் செய்த ஏற்பாடு நிலையாக இருக்கு மெனவும், தமது புதிய அரசியலமைப்பானது வழக்க மாகவும் வாடிக்கையாகவும் நாளடைவில் மாறுதலடையுமெனவும், தமது அரசியலமைப்பினால், கடந்த காலத்தைவிட எதிர் காலத்திலே அரசரது கருத்துக்கு எதிராக நாட்டில் வேறொரு கருத்துத் தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லாமற் போகுமெனவும் அவர் எண்ணி யிருக்கலாம். ஆயினும் அவர் இவ்வேற்பாடுகளைச் செய்யும்போது, சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டதும், படைமானியப் பெருமக்களுக்கு உரியதுமான உரிமைகளை எல்லாம் அளவுக்கு மீறிப் புறக்கணித்து விட்டார். இத்தகைய உறுதி வாய்ந்த அதிகாரக் குவிப்பானது கட்டுப்பாட்டுக்கு அடங்கும் இயல்பினரல்லாத பெருமக்களுக்கு எப்போதும் அச்சத்தை உண்டாக்கியது என்பது மட்டுமல்ல; இவ்வாறு அரசரிடத்துக் குவிக்கப்பட்ட அதிகாரங்களெல்லாம், ஹென்றியைவிடக் கொள்கைகளில் உறுதி குறைந்த அரசர் எவரும், பெருமக்களுடன் மாறுகொண்டோ, அல்லது அவர்களுடைய செயல்களுக்கு அஞ்சியோ, மனம்போன செயல்களைச் செய்ய அவாவும் தூண்டுதலும் தருவனவாக இருந்தன என்பது மட்டுமல்ல. பெருமக்களுக்குரிய உடைமை உரிமைகளையே மீறுத வகையில் இயங்கக் கூடியதாக, ஹென்றி தமது அரசு இயந்திரத்தை உண்டாக்கவில்லை. அவர் நிறுவிய அரசு இயந்திரம் நிலையாக ஆகவேண்டுமானால், வரும்படியும் சலுகையும் உடையதும், தனது கீழாட்களின்மேல் செலுத்தப்படுவதுமான பெருமகனது முறைமை

செய்யும் அதிகாரங்களெல்லாம் நிலைக்காமல், முடிவடைந்துவிடுதல் வேண்டும்; உண்மையில், இதற்கடுத்த ஒரு நூற்றாண்டளவில் இவ்வாறுதான் நடைபெற்றது; ஹென்றியின் காலத்தியப் பெருமக்கள் வகுப்பார் அவருடைய புதிய ஏற்பாடுகளையும், அவற்றின் முடிவான விளைவுகளையும் புரிந்துகொண்டு, அவற்றை எதிர்த்திருப்பார்களென நாம் எண்ண இடமுண்டு; எனினும் அவர்கள் அவ்வாறு செய்தார்களா என நாம் அறியக்கூட வில்லை. 1173-4ல் நடைபெற்ற பெரிய படைமானியக் கலகத்திற்குப் பொதுவில் ஏதேனும் அடிப்படையான ஒரு காரணம் இருத்தல் வேண்டும்; ஆயினும் அது என்ன காரணமென்பது நமக்குத் தெரியவில்லை. ஹென்றி செய்த அரசியலமைப்பின் தன்மைகளும், இயல்புகளும் அவருக்கு அடுத்த தலைமுறையில்தான் தெளிவாக உணரப்பட்டன என்பதையும், அதன் பின்னரே, அரசரது அதிகாரம் செயல்படுதலுக்கு வரம்புகள் அமைக்கப்பட்டன என்பதையும் மட்டுமே நாம் கூறமுடியும்.

இயல் ஐந்து

மாபெரும் பட்டயம்[1]

இரண்டாம் ஹென்றி ஏற்படுத்திய அரசிய லமைப்பினுடைய நிலைபெறும் ஆற்றலை,—ஆதவரவளிக்கக் கூடிய அரசர் இல்லாமல் தன்னைத் தானே இயக்கி நிலைபெறச் செய்துகொள்ளும் ஆற்றலை— ஒரு கடுந்தேர்வுக்கு உட்படுத்தும் காலம் மிக அண்மையிலேயே வந்தது. 1189-ல் தமது தந்தையின் இறப்புக்குப் பிறகு அரியணை ஏறிய முதலாம் ரிச்சர்டு, அரசின் கேள்விகளில் ஊக்க முடையவரல்லர்; இங்கிலாந்து நாட்டிலும் அவருக்கு ஈடுபாடு கிடையாது. அவருடைய தமையன் உயிரோடிருக்கும் போது, அவர் அக்விடெய்னின் பெருமகனாக வருவதற்கே அமைந்தவரா யிருந்தார்; அவர் தமது இளமைக் காலம் முழுவதையும், அமைதியற்ற அந்த மாநிலத்திலேயே கழித்தார். அங்கு அவரது செயலுணர்வுகளும், அவர்அடைந்த பயிற்சியும் சேர்ந்து அப் படைமானிய முறைக் காலத்தில் உச்ச நிலையில் ஒவ்வொருநாளும் நடைபெற்ற சண்டையிலும், அக்காலத்திய படை வாழ்க்கையிலும் அவருக்கு இயற்கையிலேயே இருந்த மன ஈடுபாட்டை உறுதியாக்கின. அவர் அரசரான பின் இங்கிலாந்துக்கு வந்த இரண்டே தடவைகளில் ஒவ்வொரு தடவையும் கொஞ்ச காலமே தங்கியிருந்தார். அவ்வாறு வந்த நாளிலும் அவர் சிலுவைப் போருக்கு வேண்டிய ஆயத்தம் செய்வதிலோ, ஐரோப்பாவில் பிரெஞ்சு அரசருக்குப் போட்டியாகத்

1. The Great Charter.

தனக்கு முதலிடம் கிடைப்பதற்கு வேண்டிய ஆயத்தம் செய்வதிலோ காலத்தைக் கழித்தார். இங்கிலாந்திலுள்ள ஆட்சி நிறுவனங்களெல்லாம் தாமாகவேயோ, இரண்டாம் ஹென்றியின் ஏற்பாட்டில் நன்கு பயிற்சி பெற்ற அலுவலரின் மேற்பார்வையிலோ இயங்கும்படி விடப்பட்டன; இவ்வலுவலர்கள் ஹென்றியின் ஆட்சிக் காலத்திய மன நிலையை ஒட்டி இவற்றை இயக்கினர். புதிய நீதித்துறை அமைப்பானது உறுதியாக நிறுவப்பட்டிருந்தமையின், அது வேலை செய்தற்குச் சிறப்பான மேற்பார்வை தேவையில்லை; மாபெரும் பட்டயம் வழங்கப்பட்ட ஆண்டு வரையிலும், இயல்பாக அது வளர்ந்து வந்த வகையிலேயே தொடர்ந்து இயங்கி வந்தது.

இக் காலத்தில் ஏற்பட்ட புதிய வளர்ச்சியாவது, நாட்டுக்கு ஒரு வரி முறையை ஏற்படுத்தக் கூடிய வகையில் நிதித்துறை பற்றி ஏற்பட்டதாகும். பொதுவாகப் பார்க்கும்போது பன்னிரண்டாம் நூற்றுண்டின் கடைசிப் பத்தாண்டுக் காலத்தில் நாட்டுக்கு வருமானம் தந்த மூலாதாரங்கள் அதற்கு முன் நூறு ஆண்டுகளாக இருந்ததைப் போலவே இருந்தன. உலோக நாணயங்கள் மிகுதியும் வழக்கத்திற்கு வரலாயின; பொருள் வடிவில் செலுத்தப்பட்டவைக ளெல்லாம், பல சமயங்களில் பண வடிவில் செலுத்தப்படலாயின. இதற்கு முந்திய நூற்றுண்டில், கடமை மாற்றுப் பணம் (ஸ்க்யூட்டேஜ்-Scutage) என்று பணிக்கு மாற்றுகச் செலுத்தப்படும் பணத்திஞல் அரசினர் வருமானம் மிகுதியாயிற்று. கடமை மாற்றுப்பணம் என்பது, படைமானியக் குத்தகையாளர் தாம் செய்ய வேண்டிய படைத்துறை அலுவலுக்கு ஈடாகக் கொடுக்கும் தொகையாகும். அடிக்கடி பிரான்சில் நேரிட்ட போர்களில் ஏற்பட்ட செலவுகளும், பணத் தேவைகளும், இங்கிலாந்தில் மிகக் குறைந்த கால அளவிலேயே சம்பளத்திற்குப் படை வீரரை அமர்த்திக்கொள்ளும் முறையினையும், படைமானிய வீரர்கள் தமது படை அலுவலுக்கு ஈடாகப் பணம் கொடுக்கும் முறையினையும் தோன்றச் செய்தன. பன்னிரண்டாம் நூற்றுண்டின் நடுவில், அரசு நாட்டுக்கு வேண்டிய படைக்காகப் படைமானிய முறையையே நம்பியிருந்த நிலைமையிலும், கடமை மாற்றுப்பணம் என்பது அரசுக்குத் தொடர்ந்து செலுத்தப்பட்டு வந்தது. எனினும் இத்தகைய வருமானங்களெல்லாம் நாட்டுக்கு ஒரு பொதுவரியாக அமையவில்லை.

நிலத்தின்மீது விதிக்கப்பட்ட ஒரு பொதுத் தீர்வையைப் போன்று ஒரு வரியாக டேனியர் பணம் (Danegeld) என்பதனை வாங்கும் உரிமையைச் சாக்சனியரிடமிருந்து நார்மானியர்

அடைந்தனரென்று நாம் முன்பே பார்த்தோம். இப்பணமானது ஒவ்வோர் ஆண்டிலும் வாங்கப்படும் ஒரு பொதுவரியைப் போலவே ஒழுங்காக முதலாம் வில்லியம், இரண்டாம் வில்லியம், முதலாம் ஹென்றி ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் வாங்கப் பட்டது. ஸ்டீபன் காலத்தில் அது வழக்கொழிந்தது; ஆயினும் சிற்சில சமயங்களில் பயன்கருதி, இரண்டாம் ஹென்றியினுல் அது மீண்டும் கொண்டு வரப்பட்டது. நமக்குக் கிடைக்கிற சான்று களை வைத்து இவ்வளவே சொல்ல முடியும்; ஆயினும் இச் சான்றுகளின் தன்மையைப் பார்க்கும் பொழுது, இவ்வரியானது அவ்வாட்சி முழுவதும் ஒழுங்காக வாங்கப்பட்டதாகவே தெரிய வருகிறது. எவ்வாருயினும் இத்தகைய நிலவரியே, ஒரு சில மாற்றங்களுடன், பதின்மூன்ரும் நூற்ருண்டில் நாட்டுக்கு உள்ள ஒரு வரி முறையைத் தோற்றுவித்த மூலாதாரங்களில் ஒன்ருக ஆயிற்று என நாம் உறுதியாகக் கூறலாம்.

ரிச்சர்டுக்கு அடுத்த முந்திய தலை முறையில் ஏற்பட்ட புதிய வருமான ஆதாரம், சிலுவைப் போருக்காக வாங்கப்பட்ட பொது வரியேயாகும். சமய நிலையத்துக்கு எல்லாவிடத்தும் கொடுக்கப் பட்டு வந்த டைத் (tithe) என்னும் வருமானத்தில் பத்திலொரு பங்கு வரி முறையை ஒட்டியே இவ்வரி வாங்கப்பட்டது; ஏனெனில் சிலுவைப்போர் என்பது சமய நிலையம் எடுத்துக் கொண்ட முயற்சி; மேலும் இறைவனுடைய சிலுவைப்போரில் பணி செய்யும் கிழாட்களும் அதில் முயற்சி உடையவரே. இவ் வரியானது பிரான்சில் மிகவும் பழக்கமான ஒன்று; 1146-ல் இவ்வரி அந்நாட்டில் முதலில் வாங்கப்பட்டது. 1166-ல் இரண்டாம் ஹென்றி பிரான்சைப் பின்பற்றி நாடு முழுவதிலும் இது போன்ற ஒரு வரியை வாங்கினுர்; இதே போல 1184-லும், 1185-லும் அவர் செய்தார். நிலத்தீர்வையினின்றும் மாறு பட்டு, ஆளின் உடைமையையும், வருமானத்தையும் அடிப்படை யாகக் கொண்டு இக்கால அரசினர் வாங்கும் நேர்வரிகளைத் தோற்றுவித்ததாக, அப்பொழுது 1188-ல் வாங்கப்பட்ட "சாலடின் வரி" (Saladin tithe) என்பதனைச் சுட்டிக் காட்ட லாம். இந்த வரிகளே எல்லா வகுப்பினராலும் கொடுக்கப்பட வேண்டியனவாகப் பேரவைக் குழுவினுல் விதிக்கப்பட்ட பொது வரிகளில் முதன்மையானவை. சாலடின் வரி, சமய நிலைச் சார் புடையவராலும், அது இல்லாதவராலும் அமைக்கப்பட்ட ஓர் ஆணைக் குழுவினரால் ஒவ்வொரு வட்டாரத்திலும் வாங்கப் பட்டது; எவரும் செலுத்தவேண்டிய வரித்தொகையைப்பற்றி மாறுபட்ட கருத்து ஏதேனும் உண்டானுல், அது உள்ளூரிலுள்ள ஒரு தீர்ப்புச் சான்ருளர் குழுவினுல் தீர்மானிக்கப் பட்டது;

இவ்வாறு செய்யும்வழக்கம் அடுத்த நூற்றாண்டுகளில் அரசு வரி விதிப்பதில் கையாளப்பட்டது.

1193-4-ல், அக்காலத்தில் வரிகொடுக்கும் தகுதிக்கும் மிஞ்சிய அளவினதாகக் கருதப்பட்ட தொகையான 100,000 பவுனைப், பேரரசரிடம், ரிச்சர்டுக்கு மீட்சிப்பணமாகக் கொடுப்பதற்காகத் திரட்டவேண்டியிருந்தது. எனவே பிற்காலத்தில் இம்மாதிரியான வழியில் தனது செலவுகளுக்கும் வரியைத் திரட்ட அரசு முனைந்தது. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மெயிட்லண்டு என்னும் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இம் மீட்சிப் பணத்தைத் திரட்டுவதற்காக விதிக்கப்பட்ட வரிகளின் தன்மையையும், அளவையும் வரலாற்றாசிரியர்களால் இன்னும் தீர்மானிக்கக் கூடவில்லை." இவர் குறிப்பிடுவது போலவே தான் நாமும் குறிப்பிட வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு சிலவற்றையே உறுதியுடன் குறிப்பிட முடியும். முதலில் வாங்கப்பட்டது போதாமலிருந்தபடியால் மூன்று வெவ்வேறு காலங்களில் வரிகள் விதிக்கப்பட்டன; மூன்று வெவ்வேறு வகையான வரிகளும் இருந்தன. கடமை மாற்றுப்பணம் என்பதாக ஒரு வரி வாங்கப்பட்டது; வெளிநாடுகளில் அரசருடன் சென்று போர் செய்வதினின்றும் விலக்கு உரிமை பெற்றவர்கள் "உதவிப்பணம்"[1] என்ற ஒரு தொகை கொடுத்தார்கள். இரண்டாவதாக படைமானியக் குத்தகையாக அல்லாமல், ஓர் ஏர் வைத்து உழக்கூடிய நிலத்துக்கு மட்டும் தனியாக ஒரு வரி (hidage or carucage) இருந்தது; மூன்றாவதாக 'சாலடின் வரி'யைப்போல ஆளின் உடைமையையும், சொத்தையும் வைத்து வாங்கப்பட்ட ஒரு வரி இருந்தது. இதனோடு தொடர்புபடுத்தி, தீர்வைதரும் ஒரு முக்கிய மூலாதாரமாகப் பல தலைமுறைகளுக்கு இருந்த வேறொன்றும் கூறப்படுகிறது; சிஸ்டர்சியன் சமயத்துறவிகள் சங்கத்திற்கு (cistercian order) வருமானமாகக் கிடைத்த ஆட்டுமயிரில் ஓராண்டுக்குரியது அரசினரால் வரியாக வாங்கப்பட்டது. வரிமுறையை ஏற்படுத்துவதில் கவனிக்கப்படவேண்டியசெய்தி என்னவெனில், முதலில், சிலுவைப் போர்களுக்காக ஆள் உடைமை, வருமானம், இவற்றின் மீது வாங்கப்பட்ட வரியானது, பின்னால் அரசினரின் செலவுகளுக்காகவும் வாங்கப்பட்டது என்பதே. இவ்வரிகள் மிகவும் பளுவானவை என்பதாக அக்கால வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டு முறையிடுகின்றனர்; எனினும் மிக்க செல்வவளம் உடைய நாடாக இங்கிலாந்து இருந்ததென்பதில் ஐயமில்லை. கண்டிப்பு மிக்க ஆங்கிலோ-நார்மானிய அரசர்களது

1. aid.

அரசாட்சியில் உள்நாட்டுச் சண்டையும், அமைதியின்மையும் ஒடுக்கப்பட்டுவிட்டன; உள்நாட்டில் பாதுகாப்பு இல்லாவிட்டால் நடைபெற முடியாத ஆடு வளர்த்தல்போன்ற தொழில்களும், செல்வப் பெருக்கமும் அப்போது ஏற்பட்டன. பொருள்களைச் செய்தலினாலல்லாமல், மூலப்பொருள்களை விளைவித்தலின் மூலமே இங்கிலாந்து நெடுங்காலம் செல்வம் பெருக்கி வரி திரட்டுவதற்குரிய மூலாதாரங்களைப் பெற்றிருந்தது.

1198-ல் வரிவிதிப்பதில் வேறொரு முறை வகுக்கப்பட்டது: உறுதிமொழி எடுத்த உள்ளூர் மக்களின் வகையாட்களைக் கொண்டு ஒரு வரியின் தொகையை மதிப்பிட்டுச் சொல்லுவது என்பது, ஓர் ஆளினுடைய உடைமையைப் பொறுத்த வரியாக அல்லாமல், நிலத்தீர்வையாக மட்டும் அமைந்தது. ஓர் ஏர் வைத்து உழப்படும் நிலத்தின் தீர்வை ஐந்து ஷில்லிங்காக விதிக்கப்பட்டது; இதனடிப்படையில் வரியைத் தீர்மானிப்பதற்காக அமர்த்தப்பட்ட ஆணையாளர்கள்[1] நூறு ஏக்கர் கொண்ட இத்தகைய நிலத்தையே இம்மாதிரியான நிலத்தீர்வைக்கு ஒரு அளவாக எடுத்துக் கொண்டனர். நில உடைமைப் பதிவேட்டில்[2] பதிவு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதைப்போல, கோட்ட முறைமன்றமே இந்த ஆணையாளர்களை வைத்து நிலத்தீர்வைக் கணக்கெடுத்தது; எனினும் இவ்வரியை ஒவ்வொரு சிற்றூரிலும் விதித்தது அதனுடைய ஊர்த்தலைவரும்,[3] நான்கு பேரும், நூறுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு படைமானிய முறை வீரருமாவர். இவ்வரியை இவ்வகையில் உறுதி செய்ததனால், இதனை விதித்து, அடுத்த நூறு ஆண்டுகளுக்கு ஒரு சில மாறுதல்களுடன் மட்டுமே வாங்குதற்கு ஏற்றதாக ஓர் இயந்திரம் அமைக்கப்பட்டது. இவ்வியந்திரத்தில் உள்ளூரிலுள்ள வகையாட்கள் நாட்டின் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டனரென்பது கவனிக்கத்தக்கது; அவர்கள் செய்த அலுவலும் தீர்ப்புச்சான்றாளர் குழுவினர் செய்ததைப் போன்றதேயாகும். இம்முறையானது பிற்காலத்தில் அரசரது பெருங்குழுவில் உள்ளூர் வகையாட்களைச் சேர்ப்பதற்கு, அதாவது பாராளுமன்றத்தைத் தோற்றுவிப்பதற்கு உதவிற்று என்பதை நாம் பின்னால் கூறுவோம்.

இவ்வாறு அக்காலத்தவருடைய ஆற்றலுக்கு மிஞ்சிய வகையிலேயே வரியானது விதிக்கப்பட்ட போதிலும், ரிச்சர்டுக்கு எப்பொழுதும் பணம் தேவையாக இருந்தது. அலுவல்களையும், விலக்கு உரிமைகளையும், சலுகைகளையும் பெருவாரியாக விற்று

1. Commissioners. 2. Domesday survey. 3. reeve.

அதன் மூலம் அவர் பொருள் திரட்டினர். 1197ல் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது; இது சில சமயங்களில் முக்கியமானதாக மிகைப் படுத்திக் கூறப்படுகிறது. அது என்னவெனில், வழக்கமாகத் தமக்குக் கிடைத்த படைமானியப் படையினருக்கு மாருக, ரிச்சர்டு முந்நூறு படைமானிய வீரர்களைத் தம்முடன் ஓர் ஆண்டு பிரான்சில் வேலை செய்வதற்குக் கொடுக்கும்படியாகப் பெருமக்களைக் கேட்டார், என்பதே. அரசரது இந்த வேண்டுகோளை ஆராய்ந்த பெருங்குழுவில் உள்ள சாலிஸ்பரி, லிங்கன் ஆகியவற்றின் மேற்றிராணியார்கள், தங்களுடைய மானியங்களுக்கு ஈடான உதவியைத் தாங்கள் இங்கிலாந்துக்கு வெளியே கொடுப்பதற்குக் கடமைப்பட்டவர் அல்லர் என்பதாகக் கூறி உதவி செய்ய மறுத்தனர்; அவர்கள் சொன்னது தவருயினும், அரசரது திட்டம் வெற்றியடையவில்லை. இந்நிகழ்ச்சியைப்பற்றிய நுட்பமான செய்திகளை நாம் அறியக்கூடவில்லை; எனினும் இந் நிகழ்ச்சியானது, அரசரது நடத்தையை உன்னிப்பாகக் கவனித்து, அது சட்டத்திற்கு ஒத்தே இருக்க வேண்டுமென்பதாகப் பெருமக்கள் வற்புறுத்தும் ஒரு போக்கைக் காட்டுகிறது. இந்நிகழ்ச்சியையே, வருங்காலத்தில் மாபெரும் பட்டயத்தை ஏற்படுத்திய புரட்சிக்கு ஒரு முன் அடையாளமாகவும் நாம் கருதலாம்; ஆயினும் வரி விதிப்பதற்கு மக்கள் உடன்பாட்டை ஏற்படுத்துகிற ஒரு நிகழ்ச்சியாக நாம் இதனைக் கருதமுடியாது.

இரண்டாம் ஹென்றியினுடைய அதிகாரக் குவிப்பை ஏற்படுத்தும் சட்டங்களினுல் உறுதியாக்கப்பட்ட ஆங்கிலோ-நார்மானியத் தனியாட்சியானது, ஜான் அரசர் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. அவர் காலத்தில் இங்கிலாந்தில் இருந்த நிலையான வரம்பற்ற அரச அதிகாரத்தைப் போல, மேற்கு ஐரோப்பியக் கிறிஸ்தவ நாடுகள் எதிலும் பேரரசர் சார்லமேக்குப்[1] பிந்திய அறுநூறு ஆண்டுக்காலத்தில் அரச அதிகாரத்தைக் காணமுடியாது. ஒரு சில ஆண்டுகளுக்கு அவர், தமது அதிகாரத்தில் யாதொரு குறைவும் இல்லாமல், இடைக் காலப் போப்புகளுக்குள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவரான மூன்றும் இன்னலெண்ட்[2] என்பவரும், மிகவும் செம்மையாக அமைக்கப்பட்ட சமயநிலையமும் சேர்ந்து தம்மீது நடத்திய தாக்குதலை எதிர்த்தார். ஆங்கிலப் பெருமக்களுடைய எதிர்ப்பும் வளர்ந்துகொண்டே வந்து சமயநிலையத்தின் எதிர்ப்பை வலுப் படுத்திற்று; எனினும் போப்பினுடைய உடன்பாட்டின்பேரில், ஒரு பெரும் பிரெஞ்சுப் படை இங்கிலாந்திற்குள் படையெடுக்கப் புறப்படும் வரையில், ஜான் பெருமக்களுக்கோ, சமய

1. Emperor Charlemagne. 2. Pope Innocent III

நிலையத்துக்கோ ஒரு சிறிதும் இணங்கி விட்டுக்கொடுக்கவில்லை. இந்த நிலை ஒன்றில் தான் ஜான் உடனடியாக இணங்கினர்; ஆங்கிலப் பெருமக்களுக்கு எதிராகவும், பிரெஞ்சு அரசருக் கெதிராகவும் போப்பானவர் தமக்குக் காவலராகக் கட்டாய மாக இருக்கும்வகையில் போப்பைத் தம் பக்கத்தில் திறமையாகச் சேர்த்துக்கொண்டு, இணங்கினர். அவர் போப்பினுடைய கிழாளாக ஆயினர்; இங்கிலாந்தையும் அவர் போப்பினுடைய மானியமாக ஆக்கி அவருக்குத் தமது படைமானியப் பணிகளை ஆண்டு ஒன்றுக்கு 1000 மார்க்குகள் என்ற குத்தகைப் பணமாகக் கொடுக்க இணங்கினர்.

இந்த ஏற்பாட்டினுல் அரசர் தமது அதிகாரத்தை இழக்காமல், நெருக்கடியான ஒரு நிலையிலின்று மீண்டனர் போலத் தோன்றியது; ஆயினும் அவருக்குள்ள வெளிப்படை யான எதிர்ப்பைக் காட்டும் அறிகுறிகள் நாளுக்குநாள் பெருகின. இங்கிலாந்தைக் காப்பதற்காக அவர் திரட்டி வைத்திருந்த படையைக் கொண்டு பிரெஞ்சு அரசரை பிரான்சில் தாக்குவதற்காக அவர் போட்ட திட்டம் நிறைவேறவில்லை; ஏனெ னில் படைமானியப் பெருமக்கள் நாட்டுக்கு வெளியில் செல்ல மறுத்துவிட்டனர்; சில பெருமக்கள் படைமானிய முறையின்படி தாங்கள் அரசருக்கு இங்கிலாந்தை விட்டு வெளியில் போய் உதவி கொடுக்கக் கடமைப்பட்டவரல்லர் எனச் சொன்னர்கள். இவ்வாறு எழுந்த நிலைமையினுல் பெருஞ்சினமுற்ற அரசர், தமக்குக் கீழ்ப் படியாத குற்றத்துக்காகப் பெருமக்களைத் தண்டிக்க முயன்றர்; ஆயினும் அவர் காண்டர்பரி அதிமேற்றிராணியான ஸ்டீபன் லாங்டனினுல்[1] தடுக்கப்பட்டார்; ஸ்டீபன் லாங்டன், அண்மையில் அரசர், தாம் நல்ல சட்டமுறைகளைச் செயல்படுத்துவதாகக் கூறி எடுத்த உறுதிமொழியையும், அவரது முறை மன்றங்களின் தீர்ப் பினுலல்லாமல் எப் பெருமகனையும் அவர் தண்டிக்க முடியாது என்பதனையும் அரசருக்கு எடுத்துச் சொல்லி நினைவூட்டினர். அரசர் போப்பினுல் சமயத்துக்குப் புறம்பாக்கப்பட்டு, மன்னிக்கப் பட்டு மீண்டும் கிறிஸ்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அவர் எடுத்த உறுதிமொழியில், தான் பக்திமானுன எட்வர்டு அர சரது நல்ல சட்டங்களை யெல்லாம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவந்து செயல்படுத்துவதாக வாக்குறுதி கொடுத்திருந் தார். எட்வர்டு அரசரின் சட்டம் யாதென ஒருவேளை எவரும் அவ் வேளையில் அறிந்திலர் போலும்; இவ்வாசகமானது முதலாம் ஹென்றியின் முடிசூட்டுவிழாப் பட்டயத்தினின்றும் எடுக்கப்பட்ட தாக இருக்கலாம். எவ்வாருயினும், 'எட்வர்டு அரசரின் சட்டம்,

---

2. Stephen Langton, archbishop of Canterbury.

என்ற இக்குறிப்பு, இதனைக் கேட்டவருக்கெல்லாம், "ஜானின் தகப்பனர் செய்த புதிய ஏற்பாடுகளை முறையற்ற செயல்களுக்குப் பொருந்தச் செய்வதினின்றும் தடுத்து, கொடுமையற்ற பழைய சட்ட முறைகளையே மீண்டும் ஏற்றுக்கொள்ளுதல்" என்ற பொருளையே உணர்த்திற்று.

அரசரை எதிர்த்த கட்சியின் தலைவர்கள், அரசருடைய கட்டுப்பாடில்லாத போக்கைச் சட்டப்படி கட்டுப்படுத்தப் பழைய காலத்திய ஆதாரம் ஏதேனும் கிடைக்குமா எனக் கண்டுபிடிக்க முயன்றனர். அவர்களுள் ஒரு சிலர் அரசரது பெருங்குழு அல்லது பேரவையை இதற்காகப் பயன்படுத்தலாமென எண்ணினர்; சிலர் அரசர் முடிசூட்டு விழாவில் எடுக்கும் உறுதிமொழியின் மூலம், அல்லது முதலாம் ஹென்றி வழங்கிய முடிசூட்டு விழாப் பட்டயத்தை மீண்டும் ஒரு சட்டமாகச் செய்தலின் மூலம் அரசரது மனம்போன ஆட்சியைத் தடைசெய்ய முயன்றனர். இங்குக் கடைசியிற் கூறப்பட்ட வழியே, அவர்களுக்கு, அடிப்படையாக உள்ள படைமானிய ஒப்பந்தம் என்ற கொள்கையை நினைவூட்டியது; எனவே இக்கொள்கையை ஒட்டி அவர்கள் நடந்தனர். படைமானிய முறையிலுள்ள எல்லாச்செயல்களுக்கும், சட்டங்களுக்கும், நிறுவனங்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ள உண்மை என்னவெனில், அது பெருமக்களையும், கிழாரையும் ஒத்தவகையில் பிணைக்கும் ஓர் ஒப்பந்தமேயாகும். நடைபெற்ற அரசின் அலுவல்களில், சட்டத்தினாலும், வழக்கத்தினாலும் குறிப்பிடப்படாத பணஉதவியையோ, படை உதவிகளையோ தனது கிழாரின் உடன்பாடு இல்லாமல் அவரிடம் கேட்டுப் பெறுதல் கூடாது. தமது கிழாரின் உடன்பாடு இல்லாமல் அரசர் தமக்கு விருப்பமான இடத்திலும், காலத்திலும் இவ்வுதவிகளைப் பெறுதல் கூடாது; கிழாரின் உடன்பாடு இல்லாமல் அவருக்கு உரிமையான முறைமை செய்யும் தனி உரிமைகளையும் அரசர் மீற முடியாது; தமது கிழாரின் உடன்பாடு இல்லாமல் அரசர் அவரைப் படைமானிய முறை அல்லாத வேறு முறையில் குற்ற ஆய்வு செய்தலோ, அவர் எக்குற்றஞ் செய்திருந்தாலும், அவரை ஆய்வு செய்யாமல் தண்டிக்கவோ முடியாது. ஜான் இத்தகைய படைமானிய ஒப்பந்தங்களையெல்லாம் மீறிய குற்றத்தைச் செய்தவர் என்பதை நாம் தெளிவாகக் காண்பிக்க முடியாவிட்டாலும், அவர் இக் குற்றத்தைச் செய்தவர் எனப் பெருமக்கள் நம்பி உறுதி சொன்னார்களென்பது உண்மை. தனியாட்களைத் தம் மனம் போனபடி தண்டித்தும், வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவர்களிடமிருந்து மிகவும் கடுமையாகப் பணம் பறித்தும் அவர் கொடுமைகள் செய்தார் என்பதைப் பற்றி நமக்கு ஐயமில்லை. கடமைமாற்றுப் பணம்

என்பதனை அவர் ஆண்டுதோறும் வாங்கவே அது ஒரு வரியாக ஆயிற்று; இது பல சூழ்நிலைகளில் படைமானிய உரிமைகளை மீறியதாகவும், தொகையில் மிகவும் கூடுதலாகவும் இருந்தது; நாம் தெளிவாகக் காணுகிறபடி, இரண்டாம் ஹென்றி செய்த சீர்திருத்தங்கள் பொதுவாக நாட்டுக்கு மிக்க நலன் தருவனவாயும், எதிர்கால முன்னேற்றத்துக்கு அடிப்படையாகவும் அமைந்தபோதிலும் அவை பெருமக்களுடைய உடைமைகளையும், உரிமைகளையும் தகர்த்தெறிவனவாகவே அவர்களுக்குப் பட்டன. இவ்வாறு அவர்கள் கருதுவதற்குப் படைமானியச் சட்டத்தில் சில காரணங்கள் இருந்தன.

1214, ஜூன் *27*-ல் பொவைன்சில் நடந்த பெரும்போரில் அரசருக்கும், பிரெஞ்சு அரசர் பிலிப்புக்கு எதிராகத் திரட்டிய அவரது கூட்டாளிகளுக்கும் நேர்ந்த தோல்வி, பெருமக்களுக்கு அரசரை அடக்க ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. செப்டம்பரில் பிரான்சோடு ஜான் உடன்பாடு செய்துகொள்ள வேண்டியிருந்தது. அக்டோபரில் அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து தமது அதிகாரம் முழுவதையும் செலுத்தவேண்டுமென்ற உறுதியுடன் இருந்தார். தாம் அப்பொழுதுதான் நிறைவேற்றிய போரை மீண்டும் தொடங்குவதற்காக மீண்டும் கடமை மாற்றுப் பணம் கொடுக்கும்படி ஆணையிட்டார். பெருமக்களும் அவரை எதிர்க்க உறுதி கொண்டனர்; அவர்கள் எல்லோரும் ஒரு கூட்டு அமைத்துக் கொண்டனரெனத் தெரிகிறது; முதலாம் ஹென்றியினுடைய பட்டயத்தினடிப் படையில் அவர்கள் தங்கள் உரிமைகளை அமைத்து, கிறிஸ்துமசுக்குப் பிறகு அவர்கள் ஒன்றுகூடி, அரசரிடம் தங்கள் கேள்விகளைக் கொடுப்பதென்றும், அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தால், அதற்கு மாறுக உள்நாட்டுப்போர் செய்வதென்றும் தீர்மானித்து அவர்கள் ஓர் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். அவர்களது கூட்டம் ஜனவரியில் இலண்டனில் நடைபெற்றது. ஏப்ரல் வரை ஜான் பொறுக்குமாறு பெருமக்களை வேண்டினுர்; அதற்கு அவர்கள் இணங்கினுர்கள்; எனினும் இக்காலவரையறைக்குள் அரசர் தங்களுக்கெதிராகப் படைதிரட்டிப் போருக்கு ஆயத்தம் செய்வதைக் கண்டு அஞ்சிய பெருமக்கள் தாங்களும் போருக்கு ஆயத்தமாயினர். அதனைத் தொடர்ந்து இரண்டுமாதகாலங்கள் பெருமக்கள் பேச்சுவார்த்தை நடத்தியும், போர் நடவடிக்கைகளை மேற்கொண்டும் கழித்தனர்; இக்காலத்தில் படைமானியச் சட்டப்படி கிழாட்களான பெருமக்கள் தங்கள் பெருமகனுகிய அரசரோடு தங்களுடைய உரிமைகளைக் காக்கும் பொருட்டு சண்டை தொடங்கப் போவதற்கு அறிகுறியாக, முதலில் அவரிடம் நம்பிக்கை இல்லையென்பதைத் தெரிவித்து, இலண்டனை, மே,

17-ல் கைப்பற்றினர். கடைசியாக அவர்கள் தங்களுடைய உரிமைகளை ஒப்புக்கொள்ளுவதாக அமைந்த வாசகங்களை உருவாக்கினர். இவ்வுரிமைகளை முறைப்படுத்திக் கூறும் பட்டயமாகிய மாபெரும் பட்டயம் (Magna Carta, the Great Charter) என்ற பிடிபாடு வரையப்பட்டு, இலண்டனுக்கும் விண்ட்ஸருக்குமிடையே உள்ள ஸ்டெய்ன்ஸ் என்னும் ஊருக்கருகிலுள்ள ரன்னிமீட் (Runnymede) என்ற இடத்தில் ஜூன் 15-ல் அரசரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாபெரும் பட்டயத்தின் சிறப்பை மிகைப்படுத்திக் கூற இயலாது என்று கூறப்படுகிறது. இக்கூற்றின் உண்மை மாபெரும் பட்டயத்தை நோக்கும் வகையைப் பொறுத்திருக்கிறது. அதை எழுதியவர்களால் அது கருதப்படுவதுபோல, அதை அக்காலத்திய சட்டத்தைப்பற்றிக் கூறும் ஒரு பட்டயமாகவோ, அல்லது அக்காலத்திய அரசியல், அரசியலமைப்பு பற்றிய கருத்துக்களையன்றி வேறெதையும் கூறாத ஒரு பட்டயமாகவோ கருதினாலும், அதன் சிறப்பை மிகைப்படுத்திக் கூறுவதாக முடியும்; இவ்வழியில்தான் அது மிகைப்படுத்தியும் கூறப்பட்டு வந்தது. அதில் எடுத்துச் சொல்லப்பட்ட ஒவ்வொரு உரிமையும் அக்காலத்திய பிரெஞ்சு சட்டத்திலும், மற்ற பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் சட்டங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் இவ்வுரிமைகள் மட்டுமின்றி, அரசியலமைப்பில் ஒரு சில விளைவுகளையும் இதன் மூலமாக அடைந்தது, இங்கிலாந்து நாடு ஒன்றுதான். அக்கால முதல் இக்காலம் வரை இடையறாமல் தொடர்ச்சியாக உள்ள அரசியலமைப்பின் வளர்ச்சியில் ஒரு முதற்பருவமாகவும், ஒரு புதிய ஆட்சி இயல்பைத் தோற்றுவித்ததாகவும் அதனைக் கருதுவோமானால், அதனுடைய சிறப்பை மிகைப்படுத்திக் கூறியதாக ஆகாது. மக்களது வரலாற்றிலெல்லாம் மிகவும் சிறப்பு வாய்ந்த அரசியலமைப்புப் பத்திரமாக அது கருதப்படுகிறதென நாம் கூறினாலும் அது மிகையாகாது. இப்பத்திரத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், அது செய்த செயலை நாம் அறிந்து கொள்ளவும் வேண்டுமாயின், நாம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கோணங்களாகிய இவ்விரு கோணங்களினின்றும் அதனை ஆராய்தல் வேண்டும்.

பட்டயத்தை வரைந்த பெருமக்களுக்கு, அதன்மூலம் புதியதோர் சட்டத்தை உண்டாக்க வேண்டுமென்பது நோக்கமல்ல. அரசருக்கெதிராகத் தோன்றிய கிளர்ச்சியெல்லாம், அவர் தாம் பெருமக்களோடு கொண்ட தொடர்புகளிலெல்லாம் அவர்களுடைய உரிமைகளை மீறினர் என்ற குறையினடிப்படையிலும், இனிமேல் அவர் அவ்வாறு செய்யமாட்டாரென அவரிடம் வாக்குறுதி பெறுதல் வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலும் தோன்

றியதாகும். பெருமக்கள் தாங்கள் அவரை நம்பமுடியாதென்பதை நன்ருக உணர்ந்து கொண்டார்களாதலின், அவர்கள் கொண்டிருந்த சிறப்பான கருத்துக்களெல்லாம் எழுத்தில் வரையப்பட்டன; அவர்கள் அக்காலத்தில் பயன்படுத்தி வந்த, கட்டுப்பாட்டு முறையாகக் கருதப்பட்ட, 'சட்டப்படி வழங்குதல்' என்ற முறையினுல் அவர்களுடைய உரிமைகளை அரசர் காக்க வேண்டியவராயினர். ஒரு சில புதிய கருத்துக்களையும்,—அவற்றுள் சில தவருகவும் இருந்தும்—அவர்கள் பத்திரத்தில் சேர்ந்தனர். ஆயினும் அவர்களுடைய எல்லா உரிமைகளையும். ஒரு சட்ட வகையாக நாம் கருதுவோமாளுல், அவர்கள் கேட்ட உரிமைகளெல்லாம் அவர்களுக்கு உண்மையில் சேரவேண்டியவையாகவே நாம் கருதமுடியும். எனவே அவர்கள் பழைய சட்டத்தையே எடுத்து உரைத்தார்களே யன்றிப் புதியனவற்றைச் செய்யவில்லை. இக்கோணத்திலிருந்து அதை நோக்கினுல், மாபெரும் பட்டயமானது பழங் காலத்தைப் பற்றிய பத்திரமேயன்றி எதிர்காலத்தைப் பற்றியதாகாது; அதுவும் விரைவில் மறைந்து கொண்டிருந்த பழங் காலத்தைப் பற்றிக் கூறுவதாக ஆகும். கூடிய விரைவில் ஆங்கில அரசியலமைப்பையே மாற்றியமைக்க வல்ல நிறுவன அமைப்புக்களை உடைய ஆங்கில தன்னுரிமையைப்பற்றி இம்மாபெரும் பட்டயத்தில் காணமுடியாது. வரிவிதிப்புக்கு மக்களது உடன்பாடு பெறுதல், வகையாள் முறைப்படி அமைந்த பாராளுமன்றம், தனியாள் உரிமை, தீர்ப்புச் சான்ருளர் குழுவின் மூலம் வழக்கை ஆய்தல் ஆகிய இவையெல்லாம் இவற்றின் வரலாற்றுப் பொருளோடு 1215-ல் எவருக்கும் தெரியாத செயல்களேயாம். இதற்கு மாருக, இப்பட்டயம் குறிப்பிடுகிற படைமானிய முறைச்சட்டமும் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள பெருமகனுக்கும், கீழாளுக்குமுள்ள படைமானியத் தொடர்பும், பொதுவாகச் சமுதாயத்தில் அவ்வளவு சிறப்பாகக் கருதப்படாமல் போய்க்கொண்டிருந்தன; எனவே, இது எழுதப்பட்ட ஐம்பது ஆண்டுக்காலத்தில் பெருமக்களே தாங்கள் ஜானுக்கெதிராக வற்புறுத்திய உரிமைகளில் சிலவற்றைப் பற்றிக் கருத்தில்லாமலிருந்து விட்டனர். இப்பட்டயத்தைப்பற்றி மட்டும் நாம் ஆராய்ந்து, அதனுல் ஏற்பட்ட விளைவுகளை ஆராயாது விட்டுவிட்டால், அதனுடைய மதிப்பு ஒரு பதிவேட்டுக்கு உள்ள மதிப்பாகத் தான் இருக்கும்; அக்காலத்திய சட்டத்தைப் பற்றிய சில குறிப்புக்களையும், ஜானினுடைய ஒழுக்கத்தைப் பற்றிப் பெருமக்கள் கொண்ட கருத்தையும், அவருக்கெதிராக அவர்களுக்கு உள்ள உரிமைகளைப்பற்றி அவர்கள் கொண்ட கருத்தையும் கூறும் ஒரு பதிவேடாகத்தான் இப்பட்டயம் காணப்படும்.

வரலாற்றில் மாபெரும் பட்டயத்திற்கு உரிய சிறப்பானது, அதனுடைய வாசகங்களில் காணப்படாமல், அதற்கு அடிப்படையாக அமைந்திருக்கிற கொள்கையிலேயே காணப்படுவதாகும். 1215-ல் இக்கொள்கையாவது, படைமானியப் பெருமக்களுக்கும், அவர்களுடைய கிழாட்களுக்குமிடையே உள்ள அடிப்படையான ஒப்பந்தத் தொடர்பை அக்காலத்திய ஆய்வினு (Problem)வுக்குப் பொருந்தக் கையாளுவது என்பதே யாகும். 'அரசர், இவ்வொப்பந்தத்தில் தாம் நிறைவேற்ற வேண்டியவைகளை, எதிர்காலத்தில் அவர் நிறைவேற்றும்படியாக எவ்வாறு உறுதிப்படுத்திக்கொள்ளுவது?' என்பதே அப்போதைய ஆய்வினுவாகும். நல்லகாலமாக இவ்வடிப்படைக் கொள்கையானது வெளிப்படையாகப் பட்டயத்தில் கூறப்படவில்லை. இக்கொள்கை எவருக்கும் தெரிந்த ஒன்றாகக் கருதப்பட்டது; எனவே அது இப்பட்டயத்திலிருந்து எளிதில் உய்த்துணரும் வண்ணமாக இருந்தது. நாட்டு அரசியலமைப்பில் ஏற்படும் மாறுதல்களுக்கெல்லாம் பொருந்தக் கூடிய ஒரு பொதுவான கொள்கையாக எளிதில் விரிக்கப்படும் வடிவத்தில் அக்கொள்கை பட்டயத்தில் பொதிந்து காணப்பட்டது. அது, காணப்பட்ட வகையாவது பின்வருமாறு :- "நாட்டில் குடிகளுக்கு அல்லது சமுதாயத்திற்கு உரிய உரிமைகளைப்பற்றிய சட்டத்தொகுப்பு ஒன்று உண்டு; அதை அரசர் போற்றிவரக் கடமைப்பட்டவர்." இதே கொள்கையை ஒட்டியே, வேறொரு கொள்கை இதே படைமானியச் சட்டத்தினின்றும் தோன்றியது; இக்கொள்கையே பட்டயத்தின் 61-வது கூற்றில் ஒரு வடிவம் கொடுக்கப்பட்டு விளங்குகிறது; இக்கொள்கையும் 1215-ல் காணப்பட்ட தனியான சூழ்நிலைக்கு ஏற்பவே முதலில் தோன்றியது; "அரசர் குடிகளுடைய இத்தகைய உரிமைகளைப் போற்றி மதிக்கவில்லையாயின், அவருக்கெதிராகக் கலகம் செய்யப்பட்டு வலுக்கட்டாயத்தின் பேரில் அவர் அவ்வாறு நடக்கும்படி செய்யப்படுவார்" என்பதுதான் இந்த இரண்டாவது கொள்கையாகும். உறுதியாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பு முறையோடு இந்த இரண்டு கொள்கைகளும் வெவ்வேறு தொடர்புகளில் பொருந்தியிருந்தாலும், இவை இரண்டையும் ஒட்டியே அரசியலமைப்பின் வளர்ச்சி ஏற்பட்டது. இந்த இரண்டு கொள்கைகளின் மூலமாகவே தான், மாபெரும் பட்டயமானது உலகெங்கிலும் தன்னாட்சிமுறை ஏற்படுவதற்குரிய ஒரு பெரும் பணியைச் செய்துள்ளது. எதிர்காலத்திற்கு இன்றியமையாதனவும், தன்மையில் தெளிவாகக் காணப்படுகிற பட்டயத்தின் கூறுகளை மட்டுமே நாம் ஈண்டு ஆராய்வதற்குத் துணிகிறோம்.

இப்பட்டயம் எழுதப்படுதற்கு முந்திய நிகழ்ச்சிகளையும், இதனை வழங்குமாறு அரசருக்கு அறிவுரை சொன்னவர்களின்

பெயர்ப் பட்டியலைக் கூறியும் விரித்துச் சொல்லும் ஒரு பிரிவு அல்லது கூற்றுடன் பட்டயமானது தொடங்குகிறது; ஆயினும் இப் பட்டியலில் பெருமக்களது கட்சித் தலைவர்களுடைய பெயர்கள் சேர்க்கப்படவில்லை. இதையடுத்து, இதற்கு முன்பே பொதுவான முறையில் சமயநிலையத்துக்கு அரசரால் ஒரு பட்டயத்தின் மூலம் அளிக்கப்பட்டிருந்த உரிமைகளையும், சலுகைகளையும் மிகத் தெளிவாகத் திட்டவட்டமாகத் திரும்பவும் சமய நிலையத்துக்கு, இடைக்கால நடைமுறையை ஒட்டி, வழங்கும் கூறு (chapter) இருக்கிறது. இக்காலத்தில் சமய நிலையம் எதனைப்பற்றி மிக்க ஆவல் கொண்டிருந்தது எனில், மேற்றிராணியார்களையும், மடங்களின் தலைவர்களையும் அது தேர்ந்தெடுக்கும் உரிமையில் வேறெவரும் தலையிடக்கூடாது என்பதிலேயே. இப்பட்டயமானது பிற்காலத்திய அரசர்களால் உறுதிசெய்யப்பட்டு வெளியிடப்பட்ட போது, மேற்கூறிய இக்கூறுனது, மிகவும் பொதுவான முறையில் மாற்றியமைக்கப்பட்டது; எனவே இதில் கூறப்பட்ட இக்கூறுனது தம்மைக் கட்டுப்படுத்தாது என ஜானுக்குப் பின் வந்தவரான மூன்றும் ஹென்றி கருதினர்.

முதலாவது பட்டயத்தின் பிரிவானது பட்டயத்தை அரசர் வழங்குதலைக் கூறி முடிவடைகிறது. அக்காலத்தில் நிலஉரிமை மாற்றுதலிலும், அதனை மாற்றும் பிடிபாடுகளை எழுதுவதிலும் உள்ள முறையை முழுவதும் இம் முதல்கூறு பின்பற்றுகிறது. இம்முறையைப் பெருமக்கள் முதலாவது பிரிவில் சேர்த்ததன் நோக்கம் என்னவெனில், இப்பட்டயமானது ஒரு சட்டமாக அரசரையும் அவருக்குப் பின் வருபவர்களையும், அவர்கள் அதனை மீருதவண்ணம் கட்டுப்படுத்தும்படியாக அமைந்திருக்க வேண்டும் என்பதுதான்; மேற்கூறிய சொல் அமைப்பில் ஒரு தனி ஆள் மற்றவருக்குத் தனது நில உரிமையை மாற்றுவாராஞல், நிலத்தை வாங்கியவருக்கும், அவரது வழியினருக்கும் இத் தகைய உரிமைப் பத்திரத்தின் மூலமாக நிலத்தின் மீது, நிலத்தைக் கொடுத்தவருக்கும், அவரது வழியினருக்கும் எதிராக உரிமைப் பட்டம் வந்துசேரும்; ஆயினும், "இதே வாசக அமைப்பில் வழங்கப்பட்ட மாபெரும் பட்டயத்தைத் தனக்குப் பின்வரும் அரசர்கள் திட்டமாக உறுதிசெய்யாவிடினும் (confirmation), அவர்களை ஜான் அரசர் கட்டுப்படுத்த முடியுமா?" என்பது சட்டத்தில் தெளிவாகக் காணக்கூடவில்லை. ஆயினும் நடைமுறையில் அடுத்த இருநூறு ஆண்டுகளில் பல அரசர்களிடமிருந்தும், ஒரு சில அரசர்களிடம் பல காரணங்களுக்காகப் பல தடவைகளிலும், இப்பட்டயத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளுமாறு உறுதிமொழி வாங்கப்பட்டது.

இரண்டு முதல் ஆறு வரையிலுள்ள கூறுகள் அல்லது பிரிவுகள், அரசருக்கும் பெருமக்களுக்கும் மாறுபட்ட நோக்கங்களுக்குக் காரணமான விடுதலைத்தொகைகள், பொறுப்பு உரிமை, மண உரிமைமுதலிய படைமானியசெயல்களைப்பற்றிக் கூறுகின்றன. இப் பிரிவுகள், பெருமக்களுக்கு மிக முக்கியமாகக் காணப்பட்ட படைமானிய நலன்களையும், அவைகள் பொதுவாகச் சரியானவையே என்பதையும் காட்டுகின்றன. இவற்றிலெல்லாம் அரசருக்குச் சட்டப்படியாக உள்ள உரிமைகள் மிகவும் தெளிவாகப் பெருமக்களால் ஒப்புக்கொள்ளப் படுகின்றன; ஆயினும் அவ்வுரிமைகளைத் தவருக, அல்லது பாழ்படுப்படி அரசர் கையாளாமல், தங்களை அவர் காத்தல் வேண்டும் என்பதும் இவற்றில் அவர்களால் வற்புறுத்தப்படுகின்றன. இப்பட்டயத்தில் அரசர் கையெழுத்திடுவதற்கு முன் எக்காலத்திலாயினும், அரசருக்கு அவருடைய படைமானியக் குத்தகையாளர் அல்லது பெருமக்கள் கொடுக்க வேண்டிய விடுதலைத்தொகையானது சட்டப்படி திட்டமாக வரையறுக்கப்படவில்லை; எனினும் அவ்வாறு அத்தொகை வரையறை செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதே சரியாகும். இவ்வாறு செய்யப்படாமல் இருந்ததால்தான் ஜான் தமக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, விடுதலைத்தொகையையும், உடைமையை மரபுரிமைப்படி ஏற்கும்போது கொடுக்கப்படவேண்டிய தண்டபணத்தையும் முறையற்ற வகையில் கொடுமைசெய்து வாங்கினர். குத்தகையாளருக்குப் பின் அவரது மரபுரிமையாளர் உடைமையை ஏற்கும்வரை அவர் வயது வராதவராயிருப்பின், அவருடைய நிலம் அரசரது பொறுப்பில் இருந்தது; அப்பொறுப்பை அரசர் சரிவர நடத்தினரா என்பதை ஆராய்வது கடினமாக இருந்தது; ஏனெனில் பெயரளவில் அரசர் பொறுப்பாளியாக இருக்க, நடைமுறையில் அந்நிலங்களை மேற்பார்வை செய்தவர், அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதிலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு வருமானத்தைப் பெற முயன்றனர். எனவேதான் அரசரது பொறுப்பிலுள்ள மானியத்தை இரண்டு பேரிடம் விடுவதென்று ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டது; ஆயினும் இது நடைமுறையில் செய்யப்படவில்லை.; முறைமன்றத்தில் உள்ள பதிவுச்சான்றுகள் (records), அரசர் தனதுபொறுப்பு மானியங்களில் விளைகப்பொருள் இழப்பு ஏற்படாமலிருக்கக் கவனமெடுத்துக் கொள்ளப்பட்டதென்பதைக் காட்டுகின்றன.

கூறுகள் 12-ம், 14-ம், வரிவிதிப்புக்குப் பாராளுமன்றம் தனது உடன்பாட்டைத் தரும் உரிமையைப்பற்றிக் கூறுவனவாகவும், எனவே அவை ஒரு சில அரசியலமைப்புச் சிறப்பை உடையனவற்றைச் சேர்ந்தவை எனவும் கூறப்படும். இப்பொழுது ஆங்

கிலச் சட்டத்தில் ஒரு பகுதியாக இருக்கும் மாபெரும் பட்டயம் 1225-ல் கடைசி முறையாக வெளியிடப்பட்டபோது, அதில் இக் கூறுகள் சேர்க்கப்படவில்லை எனினும் இத்தகைய பாராளுமன்ற உரிமையை நிறுவும் அளவுக்கு அவை செல்வாக்கு உடையன என்பதில் ஐயமில்லை என்றே நான் எண்ணுகிறேன். இவை மேற்கூறிய ஆண்டில் விடப்பட்டாலும், அதையடுத்த நூற்றாண்டு முடியு முன்னரே, அவை, மாபெரும் பட்டயம் வரையப்பட்ட அடிப் படையான மரபுக்கொத்த முறையில், விரிந்த வடிவத்தில் அதனுள் சேர்க்கப்பட்டன. ஆயினும் வரலாற்று மாணவர், ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் தோன்றுகிற முக்கியமான கேள்வி இதுவே: ''இவ்விரண்டு கூறுகளுக்கும் 1215-ல் அரசரும் பெருமக்களும் கொடுத்த பொருள் என்ன?'' என்பதேயாகும். இதற்கு நாம் விடை கண்டுபிடிக்க முயலுகையில், இக்காலத்தில் நாம் கொள்ளுகிற பொருளில் 'வரி விதிப்பு' என்பதை அவர்கள் இக் கூறுகளில் சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் உடனே கண்டு கொள்ளுகிறோம். பின் என்னவெனில், இக்கூறுகள் படைமானிய உதவிகளையும், படைமானியப் பணமாகிய கடமைமாற்றுப் பணத்தையும் மட்டுமே குறிப்பிடுகின்றன. உதவிகள் என்பன படைமானிய நாடுகளிலெல்லாம் பல நூற்றாண்டுகளாகவும், கடமை மாற்றுப்பணம் ஒரு நூற்றாண்டாகவும் அரசருக்கு வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த பணங்களாகும். இவ்வுதவிப் பணத் தொகைகள் வழக்கத்தினால் வரையறுக்கப்பட்ட படியாலும், கடமைமாற்றுப்பணம் என்பது சட்டப்படி செய்யவேண்டிய அலுவலுக்கு வழக்கத்தில் உண்டாகிய ஈடான பணமாகையாலும், இவற்றை உண்மையில் வரையறை செய்வது அரசரது பேரவையின் வேலை அன்று. ஆயினும் அது இவ்வாறு உதவித்தொகையைப் பொறுத்தவரை செய்வதும், ஒரு தடவை கடமைமாற்றுப் பணத்தை வரையறுப்பதும் வழக்கமாயிற்று. எனினும் இப்பட்டயத்தில், சட்டப்படி கடமைமாற்றுப் பணம் வாங்கப்படவேண்டுமாயின் அது பேரவையின் உடன்பாட்டைப் பெறுதல் வேண்டும்' எனவும், 'அப்பொழுது வராதவர்களும் அதனுடைய தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கடவர்' எனவும் கூறப்பட்டதானது சட்டத்திற்கியைந்ததா என்பது ஐயத்திற்குரியதே; இவ்வாறு கூறப்பட்ட இந்தக் கூறுகள், குத்தகையாளர் தாம் விரும்பினால், கடமைமாற்றுப் பணம் கொடுப்பதற்குப் பதிலாகக் கடமையையே செய்வதற்கு உரிய உரிமையைத் தடைசெய்வனவாகும்; இவ்வாறு நடைபெற வேண்டுமென்பதாகப் பெருமக்கள் இவற்றின் மூலம் விரும்பினரென நாம் எண்ணமுடியாது. ஒழுங்கான படைமானிய முறையினால் அளிக்கப்படாததும் அல்லது அரசருக்கும்

அவரது பெருமக்களுக்கும் ஏற்பட்டுள்ள படைமானிய ஒப்பந்தத்திற்கு உட்படாததுமான ஏதேனும் ஒரு தனிப்பட்ட உதவித் தொகையானது, அரசரால் வாங்கப்படவேண்டுமாயின், அது பேரவையின் அறிவுரையின் பேரிலும், அதைக் கொடுப்பவர்கள் இணக்கத்தின் பேரிலும் வாங்கப்படவேண்டுமென்பதே இப்பிரிவில் சிறப்பாக நாம் காணவேண்டிய பகுதியாகும். பெருமக்களுடைய இவ்வாறான உரிமைக் கோரிக்கையில் அவர்கள் தங்களுக்குச் சட்டம் முன்பே கொடுத்திருந்ததைத் தான் கேட்டார்கள். எனவே, அவர்களுடைய நோக்கம், தங்களுக்கு ஒரு புதிய உரிமையை ஏற்படுத்திக் கொள்ளுவது என்பதன்று; தங்களுக்கு முன்பே அளிக்கப்பட்ட பழைய உரிமைக்கு அரசரைக் கட்டுப்படச் செய்வதென்பதேயாகும். இவ்வுரிமைக்கு அவர்கள் கொடுத்திருந்த அழுத்தம் அல்லது மதிப்பு பின்னல் படைமானிய முறைமறையவும், அதனைப் படைமானிய முறைக்குரிய திட்டத்திலிருந்து, மிகப் பரந்த இக்கால அரசியல் முறையினுடைய ஒரு திட்டத்திற்கு மாற்றிக்கொடுக்க உதவியது. இக்கடைசிப் பிரிவின் மூலமாகப் பெருமக்கள் இலண்டன் நகரத்துக்குப் பிரெஞ்சு ஆட்சிப்பிரிவைப் பால ஒரு சமூக ஆட்சி ஏற்படவேண்டுமெனவும், தங்களுக்கும் அரசருக்கும் உள்ள தொடர்பைப் போலவே உள்ள தொடர்பில் அந்நகரத்தை ஒரு நகராண்மைக்கழக ஆட்சியில் அமைக்க வேண்டுமெனவும் விரும்பியதாகக் கொள்ளலாம்.

பதினன்காவது பிரிவில் வரும் 'கன்ஸிலியம்' (consilium) என்ற சொல்லுக்குப் பொருள் காணுவதைப்பற்றி நாம் ஆராய வேண்டியிருக்கிறது. 'கன்ஸிலியம்' "கன்சிலியம்" (concilium) என்ற இருவகைச் சொற்களுக்கும் ஒரே பொருள்தான் எனவும், 12-வது. 13-வது நூற்றுண்டைய ஆவணங்களில் அவற்றுள் ஒன்றுக்குள்ள பொருளை மற்றதற்குக் கூறலாமெனப் பல ஆசிரியர்கள் கருதுகிறுர்கள். முறைப்படி பார்த்தால் 'கன்ஸிலியம்' என்பது ஒரு சிறிய அவையையே (a small council) குறிப்பதாகும் என்பதில் ஐயமில்லை. அது பேரவையைக் (great council) குறிக்கவில்லை என்பதும் உறுதியே; பேரவையைக் குறிப்பதற்குக் 'கன்சிலியம்' (concilium) என்ற சொல் கையாளப்படுகிறது. எனினும் 'கன்ஸிலியம்' (consilium) என்பது பேரவையின் செயலையும் சுட்டிக் காட்டுகிறது. இவ்வவையின் அறிவுரையின் பேரிலேயே சட்டமானது செய்யப்பட்டுத் தீர்மானங்கள் செய்யப்படுகின்றன. எனவே இப்பிரிவில் நாட்டின் பொதுப் பேரவையைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதும், நாட்டின் பொது அறிவுரையைப் பெறும் வழி அல்லது முறையைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் தெளிவாக இருக்கின்றன. இவ்வறி

வுரையைப் பெறுவதென்பது பேரவையைக் கூட்டுதலினாலேயே முடியும். 14-வது பிரிவில் திட்டவட்டமாக இக்கூட்டத்திற்கு அழைக்கப்படவேண்டியவராக ஒரு சிலரைச் சுட்டிக் காட்டியிருப்பது மேற்கூறிய உண்மையை மேலும் தெளிவாக்குகிறது. இவ்வவையில் அரசரிடமிருந்து நிலம் பெற்ற குத்தகையாளரே உறுப்பினராக உள்ளனர். பெரிய பெருமக்கள் தனித்தனியாக இக் கூட்டத்திற்கு அழைக்கப்படுவர்; சிறிய பெருமக்கள் பொதுவாகக் கோட்டத்திலுள்ள கொத்தவாலின் மூலம் அழைக்கப்படுவர்; இம்முறையிலே தான் பெருமக்கள் படைஅலுவல் செய்வதற்கும் அழைக்கப்பட்டனர். பட்டயத்தின் இப்பிரிவில் அடங்கியுள்ள கொள்கையாவது, 'தனிப்பட்ட பண உதவி ஏதேனும் வாங்கப்பட்டால் அதனைக் கொடுப்பவரது உடன்பாடு அதற்கு இருக்கவேண்டும்', என்பதாக விளக்கமாகக் கூறலாம்.

பதினான்காவது பிரிவைப்பற்றிக் கவனிக்கவேண்டிய செய்திகள் இன்னும் இரண்டு உண்டு. இதில் குறிப்பிடப்படும் படைமானியப் பேரவை, அரசு மிகப் பழைய காலத்திலேயே செய்ததும், இக்காலத்திய சட்டமன்றம் மிகப் பழைய காலத்திலிருந்தே செய்ததுமாகிய, அரசுக்கு வருமானம் தேடிக்கொடுப்பது என்பதையே செய்ததாகும். 'பெருமக்கள் கூடிய மன்றமே படைமானிய நாட்டிற்கு நடுவாயுள்ள ஆட்சி இயந்திரம்' என்ற உண்மையை விளக்குதற்கு இதைவிட வேறு எதுவும் இருக்க முடியாது. இரண்டாவதாகக் காணப்படவேண்டியது, இவ்வவையானது வகையாள் முறைக் கொள்கையிலமைந்தது அல்ல என்பதேயாகும். இப்பிரிவின் கடைசி வாசகத்தில் காணப்படுகிற 'பேரவைக் கூட்டத்திற்கு வராதவர்கள், வந்திருந்தவர்கள் எடுக்கும் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டும்' என்ற கொள்கை, வகையாள்முறைக் கொள்கையை ஒத்ததன்று; அது வரிவிதிப்புக்கு இன்றியமையாத ஒன்றாகும். இக் கொள்கையானது சாலடின் வரியையும், ரிச்சர்டு அரசர் காலத்திய வரிகளையும் வாங்குவதற்குக் கையாளப்பட்டதாகும். இக் கொள்கை கடமைமாற்றுப் பணம் வாங்குதலில் கையாளப்படுதல் இல்லை; இப் பணம் ஒவ்வொரு பெருமகனும் படை உதவி செய்ய உடன்படுகின்றனரா அல்லது அதற்கு ஈடாகப் பணம் கொடுக்க உடன்படுகின்றனரா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையைப் பொறுத்த ஒன்றாகும். இத்தகைய எளிய குறிப்பிட்ட வாசகங்களை விடுத்து, அவற்றுக்கும் மேலாகப் போய், எதிர்காலத்தில் உண்டாகக்கூடிய இடர்களுக்கு எதிராகக் காப்பாக இருக்கும்பொருட்டுப் பொதுவான அரசியலமைப்புபற்றிய கொள்கைகளை அப்பெருமக்கள், (1215-ல்) வகுத்திருக்க வேண்டுமென இக்காலத்தில் நடுநிலை ஆய்வுரையாளர்

சிலர் கருதுகின்றனர்; இவ்வாறு கருதுவது அக்காலத்திய பெரு மக்களால் செய்ய இயலாத ஒன்றை அவர்கள் செய்திருக்க வேண்டுமெனக் கருதுவதாகும்.

17-லிருந்து 22 வரையுள்ள பிரிவுகள் இரண்டாம் ஹென்றியினுல் ஏற்படுத்தப்பட்ட புதிய நீதித்துறை அமைப்பைப் பற்றியவையாகும். அவ்வமைப்பின் ஒரு சில கூறுகளையே பெருமக்கள் எதிர்த்தார்களேயன்றி, அவ்வமைப்பு முழுவதையும் எதிர்க்கும் நோக்கம் அவர்களுக்குக் கிடையாது என்பதை இப் பிரிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இப்பிரிவுகளுக்குட்பட்ட வரையில், எளிமையும், வசதியும் உள்ள இப்புதிய நீதித்துறை முறைகள், எதிர்ப்பை வென்று ஒரு நிலைத்த தன்மையை உடையனவாக ஆகிவிட்டன என்பது தெளிவு. சுற்றிவரும் முறை மன்றத்தையொட்டி இரண்டாம் ஹென்றி அமைத்த பொது வழக்குகள் முறை மன்றத்தைப்பற்றி 17-வது பிரிவு கூறுகிறது; இதுவரை வழக்கமாக, இந்த நடு முறைமன்றமானது, அரசர் எங்கிருப்பினும், வெஸ்ட்மின்ஸ்டரிலேயே இருந்தது; அது அவ்வாறே இருக்கவேண்டுமென்பதாக இப்பிரிவு சட்டமாகச் செய்கிறது. அரசர் முன்பே தீர்க்கப்படவேண்டிய வழக்குகள் என்பவை (coram rege cases), அரசர் போகுமிடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லப்பட்டுத் தீர்க்கப்பட்டன; எனினும் அடுத்த இரண்டு மூன்று தலைமுறைகளில் இவை அரசரால் தீர்க்கப் படவேண்டிய வழக்குகளெனப் பாகுபாடு செய்யப்பட்டு (King's Bench cases) அவற்றைத் தீர்ப்பதற்கு அரசரது முறைவர்களடங்கிய முறைமன்றமும் தோன்றியது. இவ்விருவகைப்பட்ட வழக்குகளுக்குமுள்ள பாகுபாடு தெளிவாக வரையறுக்கப்படாவிடினும், இப்பிரிவானது, பொது வழக்கு மன்றங்களைப் பாகுபடுத்தித் தனியாக ஆக்குவதனுல், அது மிகவும் முக்கியமான ஒரு நிலையைச் சட்டத்தின் மூலம் குறிப்பதாகும்.

18வது, 19வது பிரிவுகள் புதிய நீதித்துறை அமைப்பின் முக்கிய கூறுகளாகிய மூன்றுவித உடைமை வழக்குகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. எனவே இவ்வுடைமை வழக்குகளைப் பற்றிய சட்டங்களைச் சட்டத்தின் பகுதிகளாக ஒப்புக் கொள்ளுவதாகப் பெருமக்களது கட்சி இணக்கம் தெரிவிப்பதை இப்பிரிவுகள் காட்டுகின்றன. இவ்வழக்குகளைப் பற்றிய சட்டங்களைச் செயல் படுத்துவது பற்றிய விவரங்கள் 18-வது பிரிவில் சேர்க்கப்பட்டன; எனினும் இவை அவ்வளவு நிறைவைத் தருவனவாக இல்லையாகையால் பின்னுல் தள்ளுபடி செய்யப்பட்டன. நீதித்துறை அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுகிற இப்பிரிவுகளெல்லாம், எல்லா

வகுப்பினரையும் இக்காலச் சட்டத்தில் குறிப்பிடுகிறபடி, கடுந் தண்டப் பணத்திலிருந்து காத்தல் வேண்டுமெனக் கூறுகிற 20 முதல் 22 வரையுள்ள பிரிவுகளுடன் நெருங்கிய தொடர்புடையவை. 18 வது, 19 வது பிரிவுகளைவிட, 20-வது 22-வது பிரிவுகள் பொருள் நிறைவில் மிகவும் பரந்தவை ; ஏனெனில் குற்ற வழக்குகளிலும், உரிமை வழக்குகளிலும், வழங்கப்படும் தண்டப் பண வகைகளைப்பற்றி யெல்லாம் அவை குறிப்பிடுகின்றன. இப்பிரிவுகளின் நோக்கமாவது, வற்புறுத்திப் பணம் வாங்குவதற்கு முறைமன்றங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதே ; எனவே அவை மற்ற எல்லாப் பிரிவுகளையும் போல, ஜான் அரசரின் ஆட்சி முறையின் போக்கையும், தன்மையையும் தெளிவாகக் காட்டுவனவே யாகும். வாணிகருக்குச் சில பயன் உண்டாகும்பொருட்டு, அவர்களுடைய பொருள்களுக்குச் சில பொதுவான கொள்கைகளை ஒட்டி விலக்கு உரிமைகள் அளிக்கப்பட்டது போல, தனியாட்களது நிலங்களுக்கும், அவற்றைப் பயிரிடுவதற்காக மாடுகள், கருவிகளுக்கும் (wainage) விலக்கு உரிமைகள் அளிக்கப்பட்டன ; இவ்வுரிமைகள் நிலத்தைப் பெற்றவருக்கு மட்டுமன்றிப், பண்ணையினுடைய பெருமகனுக்கும் நலம் பயப்பனவாகவே இருந்தன, 18-வது பிரிவில் தீர்ப்புச் சான்றுளர் குழு ஆய்வு முறையைப் பெருமக்கள் ஒப்புக்கொள்ளுவதாக மறைமுகமாகக் கூறியிருப்பினும், 20-வது பிரிவின் கடைசிப்பகுதியில்தான் இது தெளிவாகக் காணப்படுகிறது. பொதுத் தனியாட்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தீர்ப்புச் சான்றுளர் குழுவினரால் பெருமக்கள் தண்டப் பணம் கொடுக்குமாறு தண்டிக்கப்படுவதினின்றும் தடுத்துக் கொள்ளுவதற்காக அவர்கள் பிறகு எண்ணிச் சேர்த்த ஒரு பிரிவாக 21-வது பிரிவு காணப்படுகிறது. 24-வது பிரிவும் நீதித்துறை அமைப்பைப்பற்றியதே யாகையால், அது முறைப்படி 22-வது பிரிவுக்குப் பின் வரவேண்டிய ஒன்றாகும். எல்லாக் குற்ற வழக்குகளையும் ஆய்வு செய்தலை அரசருக்கே மாற்றி, அவ்வழக்குகளை யெல்லாம் அரசரது முறை மன்றத்தில் ஆய்வு செய்யப்படும்படியாக அமைத்து, சிறிய காவல்துறை பற்றிய குற்றங்களை உள்ளூர் முறை மன்றங்கள் ஆயும்படியாக விட்டு விடுவதற்கு இப்பிரிவு வழி செய்கிறது.

28, 30, 31வது பிரிவுகளைப்போல வரிசையாகச் சில பிரிவுகள் நம் கவனத்திற்குரியனவாக இருக்கின்றன ; ஏனெனில் அவையே இக்காலத்திய அரசியலமைப்பின் சட்டத்தில் காணப்படுவதாகிய, “தனியார் சொத்து, ஈடு செய்தல் எதுவும் இல்லாமல் நாட்டின் பொதுப்பயன் கருதி அரசினரால் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது,” என்ற வாசகத்தின் கொள்கையைத் திட்டமாக வரை

யறுத்துக் கூறுகின்றன. தனியார் முறைமன்றத்திலிருந்து அரசரது முறைமன்றத்துக்கு வழக்கை மாற்றுகிற கட்டளை ஆணையை (praecipe) அரசர் விடுப்பதைத் தடுக்கிற 34-வது பிரிவு, மிகவும் முக்கியமானது; ஏனெனில் அரசரது புதிய முறைமன்ற அமைப்பின் ஒரு பகுதியைப் பற்றிப் பெருமக்கள் கொண்ட கருத்தை அது காட்டுகிறது. நில உரிமை பற்றிய வழக்குகளைத் தீர்ப்பதில் அரசரது முறைமன்றங்களே, பெருமக்களது முறைமை அதிகாரத்தை விட மிஞ்சிநின்றன. எனவே இப்பிரிவானது பெயரளவில் தான் செயல்படுத்தப்பட்ட போதிலும் கூட, தனியார் முறைமன்றங்களிலிருந்து வழக்குகள் வெகு விரைவாக அரசரது முறைமன்றங்களுக்கு மாற்றியதானது தடை செய்யப்படவில்லை. எனவே அடுத்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் இப்பிரிவினால் ஏற்படக்கூடிய விளைவைப் பற்றிப் பெருமக்கள் கவலைப்படவில்லை. 35-வது, 41-வது பிரிவுகள் வாணிக நலன்களைப் பற்றிக் கூறுவன; எனினும் அவை, பட்டயமானது நோக்கத்தில் மிகவும் பொதுத் தன்மையா யிருப்பதைக் காட்டுவதால் அவற்றைப் புறக்கணிக்கலாகாது; அதே சமயம் அவை, அடுத்த நூற்றாண்டில் அரசியலமைப்பை உருவாக்கிய, வெளி நாட்டு வாணிகர்களின் செயல்களில் பெருமக்கள், ஈடுபாடு உடையரா யிருந்ததையும் காட்டுகின்றன.

ஆட்சிக்கு எதிராகத் தனியாளின் உரிமையைக் காப்பதற்காகப் பட்டயத்திலுள்ள சில பிரிவுகளை இக்காலத்திய அரசியலமைப்பிற்கு ஒத்த பொதுவான மொழியில் நாம் கூறலாம். 36-வது பிரிவானது ஆள் உரிமைக் காப்பு ஆணை (writ of Habeas corpus)யை மக்களுக்கு அளிப்பதாகக் கருதப்படுகிறது; ஆயினும் இப்பிரிவில் சுட்டப்படும் ஆணையானது, இக்காலத்திய ஆணையின் நேர் மூதாதையாகாது; ஆயினும் அது இதே பயனை ஓரளவு ஒரு சில குறிப்பிட்ட எல்லைக்குள் எய்த உதவியது. 38-வது பிரிவு அதனுடைய பொருளில் 1215-லிருந்து நடைமுறையில் விரிவடைந்து கொண்டே வந்துள்ளது; ஆயினும் அது, "ஒருபெருந் தீர்ப்புச் சான்றாளர் குழுவினரால் குற்றஞ் சாட்டப்பட்டாலல்லாமல் எவரும், கொலைக் குற்றத்திற்காயினும் இகழ்ச்சியான குற்றத்திற்காயினும் பொறுப்பாக்கப்படுதல் கூடாது" எனவும், "உறுதி மொழியினால் ஒப்புக்கொள்ளப்பட்டதும், உண்மையாக இருக்கக் கூடியதுமான காரணத்திற்காக அல்லாமல் ஆளைப் பிடிக்கும் ஆணைகள் விடுக்கப்படக் கூடாது" எனவும் கூறும் எமது சட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. எமது அரசியல் சட்டங்களிலுள்ள உரிமைச் சட்ட மசோதா (Bill of Rights) என்பதனுடைய அடிப்படைக் கொள்கையோடு பொருந்

தியதாக, 40-வது பிரிவில் காணப்படுகிற, "முறைமை யாவருக்கும் எளிதிலும், நடுநிலைமையை ஒட்டியதாகவும் செய்யப்படும்" என்ற வாக்குறுதி அமைந்திருக்கிறது. 39-வது பிரிவு பல கருத்து மாறுபாட்டுக்கு இடந்தருவதாக இருப்பினும், அதில் சட்டமாகச் சொல்லப்படுகிற கொள்கையைப் பற்றிக் கருத்து மாறுபாடு இல்லை; அக்கொள்கையாவது, "சட்டத்திற்கொத்த முறையினுலல்லாமல் எவருடைய உயிரும், உரிமையும், உடைமையும் அரசினரால் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது" என்பதே. இதில் "தனியாள்" எனக் குறிப்பிட்டிருப்பது எவ்வகுப்பினரை என்ற கேள்வியானது, பெருமக்களுடைய நோக்கங்களைப் பொறுத்தவரை முக்கியமாக இருந்தது; எனினும் மற்றப்படி, இக் கேள்வி ஒரு கொள்கையளவில் தான் முக்கியமானதா யிருந்தது. ஏனெனில், இதிலுள்ள "தனியாள்" என்ற சொல்லுக்குப் பட்டயத்தை அரசர் கையெழுத்திட்டு வழங்கியவுடனேயே, பெருமக்கள் வகுப்பைச் சேர்ந்தவர் மட்டுமன்றி, சட்டப்படி தன் உரிமைபெற்ற எல்லோரும் என்பதாகவே விளக்கம் கூறப்பட்டது. இப்பிரிவில் காணப்பட்ட "அரசரது பெருமக்களுடைய தீர்ப்பு" என்பதற்குப் பிற்காலத்தில் "தீர்ப்புச் சான்றுளர் குழுவினரால் ஆய்வு செய்தல்" என்ற பொருள் கொடுக்கப்பட்டது; ஆயினும் 1215-ல் இத் தொடருக்கு இப்பொருள் இல்லை. அப்பொழுது அதற்குரிய உண்மையான பொருள், இப்பொழுது, "பெருமக்கள் மன்ற (House of Lords) உறுப்பினர் அந்த அவையினரால் மட்டுமே ஆய்வு செய்யப்படுதற்குரியர்" என்ற அவருடைய உரிமையில் காணப்படுகிறது.

இவ்வாறெல்லாம் பெருமக்கள் செயல் செய்வதற்கும், அவர்களுடைய நோக்கங்களுக்கும் அடிப்படையான சட்டமாகவும், உரிமையாகவும் காணப்படுகிற 61-வது பிரிவு, மாபெரும் பட்டயத்தின் சிறப்பான பிரிவுகளில் ஒன்முக இருக்கிறது. இப் பிரிவை நாம் நாட்டின் அரசியலமைப்பில் ஒரு பகுதியாகக் கருதினுலும், அவ்வகையில் அது மிகவும் தனித்ததொன்முகவே இருக்கிறது; ஏனெனில் நிலையான அரசுக்கு எதிரிடையாக இரண்டு செயல்களை அது செய்கிறது; முதலில் அது, அரசிடமிருந்து அதற்குரிய சிறப்பான அலுவல்களில் ஒன்ருகிய முறைமைசெய்யும் அலுவலை ஒருசில வழக்குகளைப் பொறுத்தவரையில் எடுத்துத் தங்களைத் தாங்களே ஒரு குழுவாக அமைத்துக் கொண்டுள்ளவர்களிடம் ஒப்படைக்கிறது; இரண்டாவது அது அரசருக்கெதிராகக் கலகமும், போரும் செய்யும் உரிமையைச் சட்டமாக்குகிறது. நாட்டின் அரசியல் என்பதாகவோ, இக்காலத்தில் நமது கருத்துப்படி அரசியலமைப்புச் சட்டமென்பதாகவோ, யாதொரு கருத்தும், 1215-ல் பெரு

மக்களுக்கு இருக்கவில்லை. பட்டயத்தை நாம், படைமானிய முறையின் சட்டமாகக் கருதினுல், பெருமக்களுடைய நோக்கத்தையும், அவர்களுடைய கோரிக்கைகளையும் அது உருவாக்கிற்று, என்பது தெளிவாக விளங்குகிறது. மேற்கு ஐரோப்பியப் படைமானிய முறைச் சட்டமானது, தன்னை முறையற்ற செயலினின்றும் காத்துக் கொள்ளுவதற்காக, ஒரு கிழாள், தனது பெருமகனிடம் உள்ள தலைவர்ப்பற்றைக் கைவிட்டு, அவருக்கெதிராகக் கலகஞ் செய்யலாமென்ற உரிமையை ஒப்புக்கொள்ளுகிறது. இவ்வாறு அவர் நடப்பதனுல், அவர் மீது துரோகக் குற்றம் சாட்டப்பட மாட்டாது. எனவே பட்டயம் வரைந்து வழங்கப்பட்ட சூழ்நிலையில், பெருமக்கள் இவ்வுரிமையைப் பின் பற்றியேதான் நடந்தவராயினர். தாம் அரசரைத் தமது தலைவராக ஏற்கவில்லை என்பதாகக் கூறி அவருக்கு முன்னறிவிப்பைக் கொடுத்தனர். ஜானினுடைய ஒழுக்கத்தை நன்கறிந்த பெருமக்கள், அவர் எவ்வளவுதான் பட்டயத்தில் வாக்குறுதி அளித்தாலும், மீண்டும் தாங்கள் அவரை அரசராக ஒப்புக்கொள்ளாத நிலைமை தோன்றக் கூடும், என்பதை நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். எனினும் இவ்வாருன நிலைமையைக் கூடுமாயின் தவிர்க்கவே அவர்கள் விரும்பினர்; வலுக்கட்டாயத்தைக் குறைந்த அளவிலும், தடவையிலும் பயன்படுத்தவே அவர்கள் எண்ணினர். எனவேதான் அவர்கள், அரசர் தான் கொடுத்த வாக்குறுதிகளை மீறத்தொடங்கினுல், அவரை அவ்வாறு செய்யாவண்ணம் தடுக்க ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். வலுக்கட்டாய முறை எதையும் கையாளுமுன் இவ்வழியைச் சோதித்துப்பார்க்க வேண்டியிருந்தது. இவ்வழி பயனற்றதாயின், தாம் இம்முறையைக் கையாளும்வரை நிறுத்தி வைத்திருந்த கலகஞ் செய்யும் உரிமையை, அவர்கள் கையாளலாம்; எழுதப்பட்ட இவ்வாசகத்தில் அவர்களுக்கு அரசரை ஆட்சியினின்றும் நீக்குதற்கு உரிமை உண்டென்பதாகக் கூறப்படவில்லை; எனினும் இவ்வுரிமை அவ்வாசகத்தினின்றும் பெறப்படுவதாயிருந்தது.

'உரிமையை மதிக்காத அரசருக்கெதிராகக் கலகஞ் செய்யப் பெருமக்களுக்கு உரிமை', என்ற இவ்வழியானது மிகவும் கரடுமுரடான, கடுமையான ஒரு வழியாகும்; ஆயினும் அரசு நாட்டின் அடிப்படையான சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டுமென்ற கொள்கையை அரசியலமைப்பில் ஆக்குவதற்கு வரலாற்றில் செய்யப்பட்ட முதல் முயற்சி, இதுவே என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்; ஏனெனில் இதுதான் அவர்களது முயற்சியின் நோக்கம் என்பதாக நாம் தெளிவாக உணர்வதைப்போல, அவர்கள் உணராவிடினும்,

உண்மையில் அவர்களது செயல்களின் நோக்கம் இதுவேதான். இவ்வழியைத் தவிர 1215-ல் வாழ்ந்த மக்களுக்குச் சோதித்துப் பார்க்கக்கூடியதாக, வேறு வழி ஒன்றும் இல்லை. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அரசியல் நூல்களில், வரையறுக்கப்பட்ட கோனாட்சியை நிறுவன வடிவங்களில் அமைப்பது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. இம்முறை கரடுமுரடான ஒன்றாக இருந்தாலும், இம்முதல் முயற்சியில் ஆங்கில அரசியல்மைப்பு வரலாற்றின் அடிப்படைக் கருத்தைவிளக்குவதாக இருப்பதை அப்பிரிவு காட்டு கிறது; அதுவே பிற்காலத்தில் ஏற்படப்போகும் புகழ்மிக்க ஒரு வெற்றியை முன்காட்டுவதாகவும் இருக்கிறது; உள்நாட்டுப் பூசலையும், புரட்சியையும் கடைசியாகக் கையாளப்பட வேண்டிய வைகளாக வைத்துக்கொண்டு, அவையல்லாத முறையிலேயே அரசரை நாட்டின் அடிப்படையான சட்டத்துக்குக் கட்டுப் படுத்தும் முயற்சியே இவ்வழியாகும். மிகச் சுருங்கிய வடிவத்தில் ஆங்கிலோ-சாக்சன் அரசியல் அமைப்பைப்பற்றிச் சொல்லக்கூடிய வாசகமாவது இதுவே: "ஆங்கிலோ-சாக்சனிய அரசியலென்பது, உள்நாட்டுப் போர் என்று எப்போதும் ஒரு இடர் இல்லாத வகையில், அரசை, நாட்டினரின் தீர்மானத்துக்குப் பொறுப்புடை யதாக ஆக்குகின்ற மிகச் சிறந்த வழியே".

இக்காலத்தில் ஆங்கில அரசியலமைப்புக்கும், அதனின்றும் தோன்றிய அரசியலமைப்புக்களுக்கும் அடிப்படையாக அமைந் துள்ள இரு கொள்கைகளைப் பட்டயமானது தெளிவாகக் கூறு கிறது. முதல் கொள்கையாவது, 'நாட்டின் அரசுக்கு அடிப் படையாகச் சில சட்டங்கள் இருக்கின்றன; அவற்றை அரசர், அல்லது இக்காலத்தில் சொல்லவேண்டுமானால் அரசினர் (அல்லது அரசியலார்) ஒப்புக்கொண்டு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதே. இரண்டாவது, இவ்வடிப்படைச் சட்டங்களை அரசினர் ஒப்புக்கொள்ள மறுத்தால், நாட்டினருக்கு, அவ் வரசினரை நீக்கிவிட்டு வேறொரு அரசினரை நிறுவி, புதிய அரசு அச்சட்டங்களை ஒப்புக்கொள்ளும்படி செய்தற்கு உரிமையுண்டு. இந்த இரண்டாவது கொள்கை பதின்மூன்றும் நூற்றாண்டிற்கப் புறம் சட்ட வடிவமாக உறுதி செய்யப்படவில்லை என்பதனால், இக் கொள்கை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரவில்லை என்பதாகாது. பதின்மூன்றும் நூற்றாண்டிலும் கூட இக் கொள்கையானது, சட்டத்திற்கொப்ப நடக்கும்படி அரசரைத் தூண்டுவதற்காக, அவருக்கெதிராகக் கலகஞ் செய்தற்கு மக் களுக்கு உரிமை உண்டெனக் கூறிற்றே யொழிய, அரசரைப் பட்டத்தினின்று நீக்க மக்களுக்கு உரிமை உண்டெனக்

கூறவில்லை. எனினும் கடந்த காலத்தில் அரசியலமைப்பு கடுமையான இடுக்கு உட்பட்ட நெருக்கடிகளிலெல்லாம், 'சட்டமே தலையான தன்மையுடையது' (Supremacy of the law) என்ற கருத்தில் அடங்கியுள்ள இந்த இறுதியான உரிமையை நாட்டினர் பயன்படுத்தத் தயங்கியதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாகப் பல தடவைகளில் திரும்பத் திரும்ப வெளியிடப்பட்ட அறிக்கையான அமெரிக்கத் தன்னாட்சி அறிவிப்பைக் (Declaration of Independence) கூறலாம்; இதில், 'இங்கிலாந்தின் அரசர் செய்த செயல்களெல்லாம் குடியேற்ற நாடுகளில் குடியேறியுள்ள ஆங்கில மக்களின் சட்ட உரிமைகளை மீறியவையேயாகும்' என்ற பகுதியானது, சடைசியில், "இங்கிலாந்தின் அரசர் தன்னுரிமைபெற்ற மக்களின் ஆட்சியாளராக இருக்கத் தக்கவரல்லர்" என்ற நிலைமை ஏற்படுகிற வரையில் திரும்பத்திரும்ப அறிவிக்கப்பட்டது. அமெரிக்கத் தன்னாட்சி அறிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ள கொள்கையானது, மாபெரும் பட்டயத்தின் அடிப்படைக் கொள்கையை ஒத்ததேயாகும்; இதனையே, இக்காலத்தில் குடியேற்ற நாட்டு மக்கள், அதாவது, தாய்நாட்டின் போக்கை மாற்றமுடியாத, அதன் ஒரு பகுதியினர் வேறு வகையில் கூறுகின்றனர். ஆங்கில வரலாற்றில் இக்கேள்வி எழுந்த காலத்திலெல்லாம், ஆங்கிலரின் தன்னுரிமை என்ற கருத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட நெருக்கடியான காலத்திலெல்லாம், இந்த இரட்டைக் கொள்கைகளையே எமது முன்னோர் கையாண்டு, இவற்றினடிப்படையிலே தான் இப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டு வாழுகிற தன்னுரிமை அரசின் உறுப்புக்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கொஞ்சம் கொஞ்சமாக அமைத்துக் கட்டினர். மாபெரும் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனியான சில சட்ட வாசகங்கள் அதனையடுத்து வந்த தலைமுறைகளிலுள்ள சமுதாய நிலைமாற்றங்களினால் மறைந்து போயிருக்கலாம், ஆயினும் அதனையடுத்த அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக மாபெரும் பட்டயத்தில் நம்பிக்கையுடன் இருப்பதாக வாக்குறுதி எடுக்கும்படி வற்புறுத்த நாட்டினருக்கு அறிவுணர்வு இருந்தது; அரசர்கள் இத்தகைய தமது உறுதிமொழிகளின் மூலமாக, மாபெரும் பட்டயத்தில் மக்களுக்கு அளிக்கப்படும் உரிமைகளை, உறுதி செய்தல் வேண்டுமென மக்கள் வற்புறுத்தினர். இவ்வாறு மக்கள் வற்புறுத்தும்போது, அரசர்கள் காலத்துக்கு மிகவும் ஒவ்வாத பழைய சட்டங்களையும் ஒப்புக்கொள்ள வேண்டுமெனக் கூறவில்லை; தனிச் சிறப்புரிமையான சட்டங்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்துள்ள மேற்கூறிய கருத்தையே அவர்கள்

வற்புறுத்தினர்; இவ்வடிப்படைக் கருத்தே ஆங்கிலோ-சாக்சனியரது நாடுகளிலெல்லாம், அரசினருக்கும், குடிகளுக்குமிடையே உள்ள தொடர்பை உணர்த்துகிற ஒரு பழஞ்சொல்லாகவே, பழமொழியாகவே மாறிவிட்டது; இவ்வடிப்படைக் கருத்தை இக்காலத்திலுள்ளது போன்ற தெளிவான சொற்களில் பதின்மூன்றும் நூற்ருண்டினர் கூருவிடினும், இது அவர்களது பட்டயத்திலிருந்து உய்த்துணரக்கூடியதாகவே இருந்தது. பட்டயத்தை ஒப்புக்கொள்ளுவதாக அரசர்கள் வாக்குறுதிகளும், உறுதிமொழிகளும் எடுத்தல் என்பது, இடைக்காலத்தின் இறுதியில், பாராளுமன்றத்தின் தலேயாய அதிகாரத்தைத் (Supremacy of Parliament) தெளிவாக மக்கள் புரிந்துகொள்ளும் வரையிலும், இக்காலத்திலுள்ள அரசியலமைப்பின் சிறப்பான வழிகள் வகுக்கப்படும் வரையிலும், தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. பதினைந்தாம் நூற்ருண்டில், வரையறுக்கப்பட்ட கோனுட்சி என்ற கருத்தானது (Idea of a constitutional monarchy) ஆங்கிலேயருக்குப் பழக்கமான ஒரு கருத்தாக அமையவும், மாபெரும் பட்டயத்தை அரசர்கள் உறுதிசெய்வதென்பது நின்றுவிட்டது.

பட்டயத்தை ஒப்புக்கொண்டதை அடுத்த சில வாரங்களில், அரசர் ஜான் அதனைத்தான் நிறைவேற்றுவதாகக் காட்டிக் கொண்டாலும், உண்மையில் அதன் வாசகங்களை நிறைவேற்றும் நோக்கம் அவருக்கு இல்லையென்று தெரிகிறது. அவ்வாண்டின் கோடைக் காலத்திறுதியில் அவர் பெரும்படை ஒன்றைத் திரட்டினுர்; போப்பின் ஆணை (papal bull) ஒன்றின்படி அவர் மாபெரும் பட்டயத்துக்குக் கீழ்ப்படிதலினின்றும் விடுவிக்கப் பட்டார். பெருமக்கள் தங்களுடைய உரிமைகளை அரசருக் கெதிராகக் காக்கவேண்டுமாயின், இறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது தெளிவாயிற்று. இதனுல், பெருமக்கள், ஜானிடம் தங்களுக்குள்ள தலைவர்ப் பற்றைத் துறந்து, அவரை ஆட்சியினின்றும் விலக்கி, அவருடைய இடத்தில் அவருடைய மருமகளது கணவரும், பிரஞ்சு ஆட்சிக்கு உரியவருமான லூயி என்பவரை அரசராக ஒப்புக்கொண்டனர். உள்நாட்டுப் போர் தொடங்கிற்று; ஆனுல் முன்னைவிட ஜான் மிகவும் வலியவராயிருந்தார்; லூயி பெருமக்களுக்கு உதவி செய்த போதிலும், அவர்கள் எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை. இதன் விளைவு என்னவாகும் என்பது தெரியாமலிருந்தது; ஆயினும், 1216 அக்டோபரில் ஜான் இறந்து போகவும், நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. அவருக்குப்பின் அரசராக வந்த மூன்றும் ஹென்றி ஒன்பது மாதக் குழந்தையாக இருந்தார்;

அவருக்கெதிராக யாதொரு குறைகளும் கூறப்படவில்லை; இப் புதிய ஆட்சியின் தலைவராக இருந்த பெம்புரோக் கோமகன், வில்லியம் மார்ஷல் (William Marshal-Earl of Pembroke) என்பவர் பெருமக்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கியவரே. எனவே பெருமக்கள் விரைவாக ஊரியையக் கைவிட்டுப் புதிய ஆட்சியுடன் அமைதியாக உடன்பாடு செய்துகொண்டனர்; இத் தகைய நிகழ்ச்சியை அடுத்து, விரைவாக 1216 நவம்பரில் மாபெரும் பட்டயமானது அரசினுல் மறுபடியும் வெளியிடப் பட்டது. 1217 நவம்பரில், கலகஞ்செய்த பெருமக்களும், பிரஞ்சுக்காரரும் தோற்கடிக்கப்பட்டு, ஊரியும் விலகிக் கொண்டதும், பட்டயமானது திரும்பவும் வெளியிடப்பட்டது; இப்பதிப்பின் வடிவத்திலேயே, யாதொரு மாறுதலில்லாமல், பட்டயமானது 1225 பிப்ரவரியில் திரும்பவும் வெளியிடப் பட்டது; இதுவே ஆங்கிலச் சட்டத்திலுள்ள உறுதிசெய்யப்பட்ட மாபெரும் பட்டயமாயிற்று.

பட்டயம் வெளியிடப்பட்ட முதலிரண்டு தடவைகளிலும், முதலில் 1215-ல் பட்டயத்திலிருந்த சில பகுதிகள் நீக்கப்பட்டன; மற்ற வெளியீடுகளில் சிறப்பான மாறுதல்கள் சில செய்யப் பட்டன. நீக்கப்பட்ட பகுதிகளே வெளியீடுகளின் தன்மையைக் காட்டுவனவாக மிகவும் வற்புறுத்தப்படுகின்றன. இத்தகைய பிரிவுகளில் 12-ம், 61-ம் மிகவும் பொருள் பொதிந்தனவாகக் கருதப்படுகின்றன. ஆயினும் 61-வது பிரிவைப் பட்டயத்தில் நிலையாக வைத்திருக்க இயலாது. பட்டயம் இப்பொழுது திரும்பவும் வழங்கப்பட்டதாயினும், அது புரட்சியினுல் நடை பெறுமல், அதை எல்லோரையும் கட்டுப்படுத்தும் சட்டமாக ஒப்புக்கொண்டு, அதன்படி நிற்க உறுதிமொழி எடுத்துக்கொண்ட அரசினராலேயே வழங்கப்பட்டதாயிற்று. இவ்வரசினரே உறுதி யாகக் கூறியபடி, அரசரை நம்பக்கூடுமாயின், அவரைக் கட்டுப் படுத்தக் கூடியதாகிய தனியான சட்டப்பகுதி தேவை இல்லை. படைமானியச் சட்டத்தின் பொதுக் கொள்கையின் சுருக்கமே மாபெரும் பட்டயம் ஆகும்; எனவே இக்கொள்கை பட்டயத்தில் தெளிவாகக் கூறப்பட்டாலும், கூறப்படாவிட்டாலும், அது எவ்வித மாறுதலுக்கும் உட்படாமல், அதனிடத்து எவரும் தங்கட்கு உள்ள குறையைத் தீர்ப்பதற்காக முறையிட்டுக் கொள்ளத் தக்கதாக இருந்தது. 61-வது பிரிவைப் போலவே தான் 12-வது பிரிவும் இருந்தது. 1216-ல் வெளியிடப்பட்ட பட்டயப் பதிப்பில், முதல் பதிப்பிலுள்ள சில பகுதிகள் ஐயத்திற் குரியனவாகக் கட்டப்படுகின்றன; அவற்றுள் 12-ம் பிரிவில் பெரு மக்கள் சொல்லக் கருதியதான கடமை மாற்றுப் பணத்தைப்

பற்றிய பிரிவும் ஒன்றாகும். கடமைமாற்றுப் பணத்தை விதிப்பதற்கு அரசரது பேரவையின் ஒப்புதல் வேண்டுமெனப் பெருமக்கள் வகை செய்யும்போது, அவர்கள் தமது நோக்கத்தையும், விருப்பத்தையும் மீறியே நடந்தவராயினர். 1217-ல் வெளியிடப்பட்ட பட்டயத்தின் 44-வது பிரிவில், இரண்டாம் ஹென்றியின் காலத்தில் கடமைமாற்றுப் பணங்கள் வாங்கப்பட்ட முறைப்படியே தான் இனியும் கடமைமாற்றுப் பணம் வாங்கப் படுதல் வேண்டுமென்று காணப்படுகிறது. இதனையே அவர்கள் 1215-லும் வலியுறுத்த விரும்பினரெனத் தெரிகிறது. சட்டப்படியாக இது ஒன்றைத்தான் அவர்கள் கேட்பதற்கு உரிமையுண்டு.

இம்மாறுதல் ஒன்றே ஜான் காலத்திய பட்டயத்தில் செய்யப்பட்ட மற்ற மாறுதல்களுக்கு ஒரு விளக்கமாக இருக்கிறது. இவையே சட்டத்தைத் தவறான முறையில் அல்லாமல், தெளிவாக அறிவிப்பனவாக இருக்கின்றன. முறை மன்றங்களில் ஆளப்படுவதான ஒரு சட்ட திட்டமாகப் பட்டயத்தை யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்ட முயற்சிகளிலிருந்து பார்த்தால், பட்டயத்தில் செய்யப்பட்ட இம்மாறுதல்கள் எல்லாம், செயல் முறையில் அவசியமானவையே எனத் தெரிகிறது. அரசரால் வாங்கப்பட்ட முறையற்ற பண உதவிகளைப் பட்டயத்தில் செய்யப்பட்டுள்ள சில மாறுதல்கள் காட்டுகின்றன; பட்டயத்தில் சேர்க்கப்பட்ட மாறுதல்கள், அதை ஒரு பிழையில்லாத சட்ட வடிவில் ஆக்கும்பொருட்டே செய்யப்பட்டன. 1217-ல் வெளியிடப்பட்ட பட்டயத்திலுள்ள புதிய மாறுதல்கள், பெரும்பாலும் புதியனவாகச் சேர்க்கப்பட்டவையே; அவற்றுள் வேறொரு நோக்கமும் இருப்பது காணப்படுகிறது. இவ்வெளியீடு அரசையும், ஆட்சியையும் பற்றிய செய்திகளைப்பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது; சிறிய படைமானிய நிலக் குத்தகையாளருக்கு எதிராகப் பெரிய படைமானியப் பெருமக்களின் நலன்களைக் காக்கவேண்டுமென்ற நோக்கத்தை அது காட்டுகிறது. 'அரசருக்குச் சமுதாயத்தோடு உள்ள தொடர்புகளிலெல்லாம், அவர் கடைப்பிடிக்க வேண்டியதும், யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதுமான அடிப்படையான சட்டம் ஒன்று உண்டு' என்ற கருத்தில் இவ்வாறு மாறுதல்கள் செய்யப்பட்ட பட்டய வரிசைகள் யாதொரு மாற்றமும் செய்யவில்லை.

இவ்வாறு 1225-ல் வெளியிடப்பட்ட மாபெரும் பட்டயமானது இடைக்கால இறுதிவரையில் பல தடவைகளில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டதுண்டு; இதைவிடக் குறைந்த தடவைகளில் பதினைந்தாம் நூற்றாண்டில் அது மேற்கோளாகக் காட்டப்பட்டது. இம் மேற்கோளிலும் இருவகையுண்டு; ஒரு

வகை, வரலாற்றுக் குறிப்புக்களில் காணப்படுவது; இன்னொன்று அலுவல் பத்திரங்களிலும், ஆவணங்களிலும், பெயர்ப்பட்டிகளி லும் காணப்படுவது. வரலாற்றுக் குறிப்புக்களிலுள்ள மேற் கோள்கள், வழக்கமாக, அரசும், அதன் அலுவலர்களும், சமய நிலையத்தின் உரிமைகளை மீறியபோது குற்றம் கூறப்படுதற்குச் சான்றாக இருந்தன. அலுவலர்கள் காட்டிய மேற்கோள்கள் பல்வேறு வகைப்பட்டன; அவை பட்டயத்தின் பகுதிகளைச் சட்டமாக விளக்கம் செய்வதற்காகவும், அவற்றைச் செயல் படுத்துவதற்காகவும், காட்டப்பட்டன; மேலும் அவை பட்டயத் தைச் செயல்படுத்தும் ஆணைகளாகவும், முறைமன்றங்களில் வழக்குகளை ஆய்வு செய்யும்போது, பட்டயத்தை ஒரு சட்ட மாகவே கருதிப் பின்பற்ற வேண்டுமென்று கூறுவனவாகவும் இருக்கின்றன. நீக்கப்பட்ட பிரிவுகளை மறந்துவிடாமல், பட்டயத் தின் பகுதிகளாக அவற்றைக் கருதினரென்பதற்கும் சான்று இருக் கிறது. பட்டயமானது பாராளுமன்றத்தையும் கட்டுப்படுத்த வல்ல ஒரு சட்டமாகும் என அவர்கள் எண்ணினரென்பதற்கும் சான்று இருக்கிறது. முறைப்படி பட்டயமானது உறுதி செய்யப் படுதல் வேண்டுமென்பதாக மக்கள் விரும்பினர்; மூன்றாம் ஹென்றியின் காலத்திலிருந்து, நான்காம் ஹென்றியின் காலம் வரையுள்ள எல்லா அரசர்களாலும் பட்டயமானது பல தடவை களிலும், ஐந்தாம் ஹென்றியின் ஆட்சியிலும், ஆறாம் ஹென்றி யின் ஆட்சியிலும் ஒவ்வொரு தடவையுமாக உறுதி செய்யப் பட்டது. மூன்றாம் எட்வர்டின் ஆட்சித் தொடக்கத்திலிருந்து, நான்காம் ஹென்றியின் ஆட்சி இறுதிவரை, பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அமர்வுக் காலத்திலும் (Session) உள்ள சட்டப் பட்டியலின் தொடக்கத்தில் மாபெரும் பட்டயத்தை உறுதிப் படுத்தி இருப்பது காணப்பட்டது. இவ்வகை உறுதிப்படுத்தல் களினால், பட்டயத்தின் எல்லாப் பகுதிகளும் சட்டமாகத் தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டுமென்பது கருத் தன்று; அதனுடைய பல பகுதிகளும் வழக்கற்றுப் போய்விட்டன. சில செயல் வகைகளில், அரசருடைய நடத்தையானது சட்டத் திற்குக் கட்டுப்பட்டே இருக்கிறது என்ற அடிப்படையான கொள்கையை அவர் ஏற்கும்படி செய்வதே, இத்தகைய உறுதிப் படுத்தல்களின் நோக்கமாகும்.

இயல் ஆறு

அரசியல் அமைப்பு, சட்டம் ஆகியவற்றின் வளர்ச்சி[1]

ஆங்கில அரசியலமைப்பின் வரலாற்றிலே, மாபெரும் பட்டய மானது ஒரு கட்டத்தை முற்றுப் பெறச்செய்து இன்னொன்றைத் தொடங்கி வைக்கிறது. பழங்காலத்திலிருந்து வந்த வரம்பற்ற பொறுப்பில்லாத அரசரது ஆட்சி, இப்புதிய காலத்தில் முடிவுக்கு வருகிறது; வரையறுக்கப்பட்ட முடியாட்சி மெல்ல உருவாகத் தொடங்குகிறது. இத்தகைய மாறுதல் வெகு காலத்துக்கு மிகவும் நுட்பமாகவேதான் நடைபெற்றது; அதனுடைய வளர்ச்சியும் மிகவும் மெதுவாகவே இருந்தது; ஆயினும் வரை யறுக்கப்பட்ட முடியாட்சிக்கு அடிப்படையாகப் பிற்காலத்தில் அமையக்கூடிய ஒரு கொள்கை இப்புதிய காலத்திலேதான் ஏற் படுத்தப்பட்டது; அது எதிர் காலத்தில் எவராலும் மறக்கப் படவுமில்லை; அது தனது அடிப்படையான சிறப்பை இழக்கவு மில்லை.

மாபெரும் பட்டயமானது தானகவே யாதொன்றையும் நிறைவேற்றவில்லை. அதைப் படைமானியச் சட்டத்தின் ஒரு தொகுப்பாக நாம் கருதினல், மற்றெந்தச் சட்டத்தையும் விட, அதற்கு வளர்ச்சி பெறும் ஆற்றல் மிகுதியும் இல்லை என்று தெரி கிறது. அதனல் வெளியிடப்பட்ட கொள்கைகளை, அதையடுத்த எதிர்காலத்தில் ஓர் அரசியலமைப்பை ஆக்கும் கொள்கைகளாக வளர்க்க வேண்டுமா, அல்லது அவற்றைப் புறக்கணித்து மறந்து விடவேண்டுமா, என்பதைப் பொறுத்தே பட்டயத்தின் மதிப்பு அமைந்திருந்தது. ஜானுக்குப் பிறகு அவரையோ அவரது பேரர் முதலாம் எட்வர்டையோ போன்ற வலிமை யுடைய அரசராவது, அல்லது மாபெரும் பட்டயத்தினல் உண்டாகும் விளைவுகளை எண்ணிப் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடிய அரசராவது ஆட்சிக்கு வந்திருந்தால், பட்டயத்தைப் புறக் கணித்து ஒதுக்கி விடுதல் கடினமானதொரு செயலன்று; அப்படி ஏற்பட்டிருந்தால், செயல்முறையில் அதனை மேற்கோள் காட்டி அதற்கு எவரும் முறையிடுதல் செய்வதும் தடுக்கப்பட்டிருக்கும். ஆயினும் மாபெரும் பட்டயம் வழங்கப்பட்டதற்கு அண்மையான காலத்திலேயே ஒரு வலியற்ற அரசருடைய நீண்ட ஆட்சியானது தொடர்ந்தது என்பது, மன்னரது வழிமுறை உரிமையிலேயே தற்செயலாக நடைபெற்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். மூன்றும் ஹென்றி 1216-ல் ஆட்சிக்கு வந்தார்; 1272 வரை ஆட்சி செய் தார். இந்த நீண்ட ஆட்சிக்காலத்தில், 1215-ல் எவரும் தெளிந்து

[1] Growth of the Constitution and Common Law.

கொள்ளாமல் தற்செயலாக உண்டாக்கப்பட்ட அரசியல் அமைப் பின்உரிமை என்பதன் முளை அல்லது தொடக்கத்திற்கு எதிர்காலத் தில் உள்ள முடிவு என்ன என்பது, அரசருடைய குண இயல்பிலு லேயேதான் தீர்மானிக்கப்பட்டது. ஹென்றியின் தகப்பனர் கெட்ட அரசர் என்ற பொருளில் ஹென்றி ஒரு கெட்ட அரசர் அல்லர். அவர் மக்களுரிமையை மதிக்காத கொடுங்கோலர் அல்லர். அவர் ஒரு நல்ல அரசராக இருக்கவே விரும்பினர். தாம் ஒரு நல்ல அரசர் எனவே நம்பினர். அவர் வீண்பெருமை கொண்டவ ராகவும், தமது திறமைகளிலும், அறிவிலும் மிக்க நம்பிக்கை உடையவராகவும் இருந்தார். ஆயினும் அவர் அறிவிலும், மன உறுதியிலும் வலியற்றவராகவே இருந்தார். தம்மைவிட மன வலிமிக்க யாராயினும் ஒருவரது பிடிப்பில்தான் அவர் இருந்தார்; அதை அவர் அறிந்துகொள்ளவும் இல்லை; தாம் நன்ருகப் பொது மக்களின் உணர்ச்சி ஓட்டத்தைச் சரிவரப் புரிந்துகொண்டு, அதற்கு இணங்கிப்போகவேண்டியிருக்க, அவர் அதை ஒருபோதும் சரியாகச் சீர்தூக்கிப் பார்க்கவில்லை.

அரசருக்கு வேண்டிய நண்பர்களும் உறவினரும் வெளி நாட்டிலிருந்து கூட்டங் கூட்டமாக வந்து இங்கிலாந்தைத் தங்க ளுடைய நன்மைக்காக நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளவே, அரசரது குண இயல்புக்கும் அரசியலமைப்பின் வளர்ச்சிக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டது. இவர்களில் சிலர், அரசருடைய தகப்ப ஞருக்கு உதவியாளராக வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில் எஞ்சி நின்றவர் ஆவர். அவர்களில் வின்செஸ்டரின் மேற்றிராணி யாராகிய பீட்டர் டெரோஷஸ், சவாயிலிருந்து (Savoy) வந்த அரசரது மனைவியின் உறவினர்கள், அவரது தாயின் இரண்டாவது திருமணத்தின் மூலம் பாய்ட்டோவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்த அவரது உறவினர்கள் ஆகியோர் சிலராவர். இவர்கள் ஆங்கிலப் பெருமக்களுக்குச் சினமூட்டத்தக்க அளவில் அரசரிடமிருந்து பெரும் பரிசுகளையும், செல்வந் தரத்தக்க மண உறவுகளையும், படைமானியப் பொறுப்பு உரிமைகளையும் பெற்றுர்கள்; ஆங்கிலப் பெருமக்கள், தாம் ஆங்கிலர் என்ற முறையில் இத்தகைய நல்ல வாய்ப்புகளுக்கெல்லாம் இயல்பிலேயே உரியவரென நம்பினர். அரசருக்கு வேண்டிய வெளிநாட்டினர் ஆங்கில அரசியலில் சிறப் பான அலுவல்களும் பெற்றனர்; அவர்களுக்கு அரசில் செல்வாக் கும் ஏற்பட, அரசின் செயல்களிலும், கொள்கையிலும் ஏற்பட்ட தவறுகளுக்கு அவர்களே பொறுப்பானவரெனவும் ஆங்கிலேயர் எண்ணி, அரசருக்கு இயல்பிலேயே குடிமக்களாக அமைந்த தங்கட்கும், அவருடைய வெளிநாட்டு நண்பர்களுக்கும் மிகவும் தெளிவாக வேறுபாடு உண்டு எனக் கூறினர்.

இவ்வாட்சியில் ஏற்பட்ட சில இக்கட்டுக்களின் விளைவாகவும் மேற்கூறியவாறு பயன் ஏற்பட்டது; எனவே இப்பயன் தவிர்க்க முடியாததாயிற்று. பொருள்களின் விலை ஏற்றத்தினுல், அவரது தகப்பனுருடைய காலத்தில் தோன்றிய கேள்விகள் மிகவும் சிக்கலடைந்து மூன்ரும் ஹென்றியின் ஆட்சியில் ஏறக்குறைய முழுவதிலும் இருந்தன. அரசைச் செலுத்துவதற்கு ஆகும் செலவு மிகுந்து விட்டது: ஆயினும் அதற்கு ஒத்தபடி அரசரது வருமானங்கள் பெருக்கமாக இல்லை. இம்மாதிரியான தொல்லைகளினுல் அரசினருக்கு ஏற்பட்ட நிலைமையைப் பதின்மூன்ரும் நூற்ருண்டையப் பெருமக்களுக்கு உணர்ந்து கொள்ளவும் இயலவில்லை; எனவே அடிக்கடி அரசர் பணம் வேண்டுமெனக் கேட்பதெல்லாம், அவர் கணக்கு வழக்கின்றி ஊதாரித்தனமாகத் தமக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் வாரி வழங்குவதற்கே என்பதாகப் பெருமக்கள் கருதியது இயல்பே. இவ்வாறு அரசரைப் பற்றிச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அரசரும் வேண்டிய அளவு காரணமாக இருந்தார்; ஏனெனில் சிக்கனமென்பதையே அவர் கற்கவில்லை; பணத்தின் மதிப்பையும் அவர் அறியவில்லை; தமது நிலைமாறும் விருப்பங்களுக்கும், நாட்டிலுள்ள அரசின் தேவைகளுக்கும் வேறுபாடு உண்டு என்பதையும் அவர் அறியவில்லை. அரசைப் பற்றிய பழைய கருத்தானது இன்னும் நீடித்தே இருந்தது; எனினும் இவ்வகையான செயல் அறிவுகள் அக்கருத்தை வெகு விரைவில் மாற்றவே, நாட்டை அரசர் தமக்குரிய ஒரு ஆட்சிப் பொருளாகவும், தமது பண்ணையாகவும், அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைத்தம் விருப்பம்போல் செலவு செய்யக்கூடிய தமது தனி உடைமையாகவும் கருதினுர். இதற்கு மாருகப் பெருமக்கள் எப்போதும் கேட்டது யாவை எனில், "அரசர் தமக்குரிய வருமானத்தில் மட்டுமே காலந் தள்ளிக்கொள்ள வேண்டும்; அவர் தமது செலவுகளையும், அரசின் செலவுகளையும் ஒரு பண்ணையின் பெருமகன் செய்வதுபோலத், தமக்கு இயல்பாகவே கிடைக்கும் வருமானத்திலிருந்தே சரிக்கட்டிக் கொள்ளவேண்டும்," என்பவையே.

இங்கிலாந்திலிருந்து போப்பு பணம் வாங்கியமையாலும் நிலைமை சீர் கேடடைந்தது. போப்பினுடைய அரசும், ஏனைய உலகியல் சார்புள்ளஅரசுகளைப்போலவே செலவுகளை ஏற்கவேண்டியிருந்தது; எனவே அவரது அரசும் ஐரோப்பா முழுவதும் ஊக்கமாகச் சில சட்டதிட்டங்களின் மூலம் தனது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்றது. இங்கிலாந்து போப்பின் மீது படைமானிய முறையின்படி சார்ந்திருந்தமையால், அது மிகவும் அல்லலுற்றது; ஆயினும் அதனுடைய செல்வ வளமும் அதனை வரிவாங்குதற்கு ஏற்றதாகச் செய்தது. சமய நிலையத்துக்

காகக் கொடுக்கப்படும் கோவில் மகமைகள் (Tithes-வருமானத்தின் பத்திலொருபங்கு) அடிக்கடி வாங்கப்பட்டன; ஆயினும் மிகவும் குறைகூறலுக்கு இடமாக இருந்தது 'புரொவைசர்ஸ்' (Provisors) எனப்படும் முறையே. இம்முறையாவது கோயில் மானியத்தையோ அல்லது உடைமையையோ மேற்பார்க்கும் அலுவலில் வெறுமை ஏற்பட்டால், அதனை நிரப்புதற்கு, அடுத்த உரிமையாளரை அமர்த்துதலேயாம். அவ்வலுவலில் வெறுமை ஏற்படு முன்னரே அடுத்த உரிமையாளரைத் தேர்ந்தெடுத்து அமர்த்துதலும் உண்டு. இவ்வெறுமைகளில் ஆட்களை அமர்த்தும் உரிமையைப் போப்புக்கள் சிறிது சிறிதாகப் பயன்படுத்தினர்; அவர்களுடைய பணத்தேவைக்கு வேண்டிய உதவியைத் தரும் ஆதாரமாக இவ்வுரிமை இருந்தது. போப்பின் அரசவையிலிருந்து இங்கிலாந்திலுள்ள கோவில் மானியம் ஒவ்வொன்றுக்கும் அமர்த்தப்பட்ட ஒரு அலுவலர், அங்குவந்து அவ்வலுவலை அவ்வூர் சமயக் குருவின் மூலமாகச்செய்து, அம்மானியத்திலிருந்து கிடைக்கும் வரும்படியில் பெரும்பகுதியைத், தாம் ரோமில் போப்பின் சார்பாகச் செய்யும் அலுவல்களுக்குச் சம்பளமாகப் பெற்றுவந்தார். எனவே ஆங்கில சமய நிலையக் குருக்களின் குழுவினர், இத்தகைய முறையில் அமர்த்துதல் பெருந்தவறுகுமென எண்ணி, இச்செயல்களை எதிர்த்து, "இங்கிலாந்து ஆங்கிலேயருக்கே" எனக் கூக்குரல் விட்ட பெருமக்களோடு தாமும் சேர விழைந்தனர்.

மூன்றும் ஹென்றியின் காலத்தில் நடைபெற்ற இருமாறுதல்களுக்கு மேற்கூறிய நிகழ்ச்சிகள் துணையாகவும் காரணங்களாகவும் இருந்தன. அவற்றுள் ஒன்று நாட்டு இனஉணர்ச்சி; இதுவே இக்காலக் கருத்தாகிய நாடு என்பதற்கு அடிப்படையாகும். கூட்டான அமைப்பில் சமுதாயமானது, அரசினின்றும் வேருயது; ஆயினும் அரசு சமுதாயத்திற்காகவே இருப்பது என்ற இக்காலக் கருத்துக்களையும் தோற்றுவித்தது இப்போது தோன்றிய நாட்டு இன உணர்ச்சியே யாகும். இந்த நாட்டு இன உணர்ச்சி தோன்றியதைக் கூறும்போது, ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை மிகைப்படுத்திக் கூறுதல் எளிது. 'தலைநகரும், நாடும் ஒரே தரத்தில் அமைந்தவை, சமுதாயத்தின் எல்லா வகுப்பினருக்கும் ஒத்த அரசியல் உரிமைகள் உண்டு, யாவரும் கொள்கையளவிலேனும் எல்லாப் பொது அலுவலையும் நிர்மானிக்கிற ஒத்த அதிகாரம் உண்டு,' என்ற கருத்துக்களினடிப்படையில் அமைந்துள்ள இக்காலக் குடியாட்சி நாடு எதுவும், இடைக் காலத்தில் இருப்பதற்கு வழியே இல்லை. இடைக் காலத்தில், ஒவ்வொரு நாட்டிலும் சமுதாயமானது பல வகுப்புக்களாகப் பிரிந்தே இருந்தது. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்த சில நலன்கள்

இருந்தமையால், அவைகளெல்லாம் சேர்ந்து உண்மையான ஒற்றுமை அமைப்பு தோன்றுவதற்கு இயலவில்லை; இதனால் ஒவ்வொருவரும் பொதுவான ஆட்சி அலுவல்களில் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டு அந்த அளவிற்கு, அவ்வலுவல் துறை வளர்வதற்கு இக்கால நாட்டில் ஒரு பழக்கம் இருப்பதுபோல், இடைக்காலத்திய நாட்டில் கிடையாது. மூன்றும் ஹென்றியின் ஆட்சியில் நாம் காண்பதெல்லாம், இத்தகைய முடிவான நல்ல பழக்கம் மிக மங்கலாகத் தோன்றிய ஒரு நிலையில் இருந்தது என்பதே. எனவே இவ்வாறு தோன்றத் தொடங்கிய தன்மை அல்லது பழக்கமே இவ்வாட்சியில் ஏற்பட்ட இரண்டாவது மாறுதலாகும்.

நாட்டின் அரசியலமைப்பாக இருந்துவந்த படைமானிய முறை, அவ்வரசியலமைப்பு இயக்கமாக இராமல், பதின்மூன்றும் நூற்றாண்டில் மறைந்து வந்தது. அரசியலில் நாடு சிதறுண்டு போகக்கூடிய நிலையிலிருந்தபோது படைமானிய முறை நாட்டிற்குச் செய்த வேலையானது இப்பொழுது தேவைப்படவில்லை. அம்முறையினால் நாட்டுக்குச் சட்டம், முறைமை செய்தல், படை, நிதி முதலிய துறைகளில் செய்யப்படவேண்டியிருந்த அலுவல்களனைத்தும் செய்யப்பட்டுவிட்டன. இவ்வலுவல்களைச் செய்தற்கு இம்முறையைவிடச் சிறந்த முறைகள் இக்காலத்தில் தோன்றலாயின. அரசியல் படைமானிய முறையின் அலுவல்கள் மறைந்து, நாட்டு இன உணர்ச்சிதோன்றியபோது, படைமானிய முறைக் காலத்தில் நாட்டையும் அரசையும் பற்றி எழுந்த பழைய கருத்தும் மறைந்தது. இதனால் முன்னைப்போல் அரசரை அவருடைய கீழாட்களுக்கெல்லாம் ஒரு பெருமகனாக எவரும் கருதவில்லை; நாடு என்பது அவருடைய விருப்பைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க, அவருடைய மேலாட்சிக்குட்பட்ட ஒரு படைமானியச் சொத்தாகக் கருதப்படவில்லை; இதற்கு மாறாக, அரசரது நிலைமையும் ஒரு அலுவல்தான் என்ற கருத்து வளர்ந்து கொண்டு வந்தது. இக் கருத்தின்படி, சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய செயல்களை, அவை அரசருடைய சொந்த நலன்களுக்கு மாறாக இருப்பினும், அரசர் தெளிவாக உணர்ந்து செய்தலே அரசரது அலுவலாகும் என எல்லோரும் கருதினர். அக்காலத்திய நாட்டின் சமுதாயத்தை, நாம் இக்காலத்தில் கூறுவதுபோல், ஒரு நாட்டின் இனத்தவர் எனக் கூறமுடியாது! அக்காலத்தவர், தங்கள் சமுதாயத்தைப் பலர் சேர்ந்த ஒரு முழு வடிவமாகவும், கூட்டாக அமைந்த முழுமை நிலையாகவும் (Corporate unity) கருதினர். மேலும், அரசர் தமது விருப்பத்திற்கிணங்கவே செயலாற்றினால், சமுதாயத்திற்கு உகந்த நலன்

கள் கேடுறவும் கூடுமென அக்காலத்தவர் கருதினர். இவ்வாறு நேரிட்டால், அரசர் தமது நலன்களை விட்டுக்கொடுத்தல் வேண்டும்; சமுதாயம் தனது கருத்துக்களை நிலைபெறுதல் வேண்டுமென வற்புறுத்தும். "படைமானிய முறைப்படி அமைந்த அரசியலின் அடிப்படையான கொள்கையினின்றும் இயல்பாகத் தோன்றிய தங்களுடைய உரிமைகளை அரசர் மீறுதபடி காத்துக்கொள்ளப் பெருமக்களுக்கு உரிமை உண்டு,' என்பது மாபெரும் பட்டயத்தின் கருத்தாகும்." இக்குறுகிய கருத்தானது, இக்காலத்தில் விரிவடைந்து, 'நாட்டு இனம் முழுமையும் சார்ந்த அரசு' (National state), 'ஆளப்படும் சமுதாயத்தோடு ஆளும் அரசினருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு' (relation of the government to the community of the governed) என்ற இக்காலக் கருத்துக்களாக வளர்ந்தது.

இவ்வாறு நடைபெற்ற நிகழ்ச்சிகளின் கடைசியான உட்கருத்து யாதென நாம் விளக்குகையில், ஒரு கொள்கையை ஒட்டியோ, அல்லது ஒரு சிறந்த நிலைமையை எடுத்துக்காட்டாக மனத்தில் வைத்துக்கொண்டோ தோன்றிய மாற்றம் இது என்று கருதக்கூடாது. இம்மாற்றம் செயல்முறை பற்றி எழுந்ததேயாகும். இது அரசருடைய சில குறிப்பிட்ட தவறுகளினால் தோன்றியது; அத்தவறுகளைப் பற்றி எழுந்த முறையீடுகளின் மூலமாக இம்மாற்றம் வெளிப்பட்டது. அரசர் வெளிநாட்டினருக்கு அளித்த நன்கொடைகள் எல்லாம் முறைப்படி தங்களைச் சேரவேண்டியவை என ஆங்கிலப் பெருமக்கள் வருத்தத்துடன் முறையிட்டனர். சமுதாயத்திற்கு விருப்பமில்லாத நலன்களை வெளிநாட்டில் பெறுவதற்கு முயற்சி செய்யவும் இம்முயற்சிகளினால் ஆகும் கடும் செலவைச் சமுதாயமே ஏற்கும்படியாக நேரிடவும், எழுந்த சூழ்நிலையானது, அரசருக்கு இயற்கையிலேயே குடிமக்களாக இருந்த ஆங்கிலேயரிடையே, வெளிநாட்டினருக்கெதிராக, "அவர்களெல்லாம் கூட்டமான ஒரே முழு நிலைமையினரே" (corporate unity) எனவும், "அவர்களுடைய நலன் கூட்டான நலனே" (corporate interests) எனவும், சில உணர்வுகளை உண்டாக்கிற்று. பெருமக்களில் பலர் ஆங்கிலேயருக்கும் ஆங்கிலரல்லாதவருக்குமுள்ள வேறுபாட்டையும், மக்களுடைய நலன்களுக்கும், அரசருடைய தனி நலன்களுக்குமிடையேயுள்ள வேறுபாட்டையும் தெளிவுபடுத்திக் கூறலாயினர். அரசருக்கும் ஆளப்படும் சமுதாயத்துக்கும் உள்ள உறவைப்பற்றிய இப்புதிய கருத்தானது, ஹென்றியின் ஆட்சியில் நாட்கள் செல்லச்செல்லத் தெளிவும், வலிமையும் பெறலாயிற்று; எனினும் செயல் உணர்வு (practical sense) நிறைந்த மக்களாகிய ஆங்கிலர், இக்கருத்தை வைத்துக்கொண்டு முழுமையான வடிவில் ஒரு கொள்கையை

வகுக்காமல் அதனைவைத்து அக்காலத்தில் மிகவும் முக்கியமான தாக உள்ள மக்களது நலன்களையே ஒரு சட்டத்தின் அமைப்பில் வெளிப்படுத்தினர். எனவே இவ்வாறு செய்ததன் மூலம், பெரு மக்கள், சமுதாயத்தின் நலன்களை மதிக்கும்படியாக அரசரைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மாபெரும் பட்டயத்தின் அடிப்படை யான கொள்கையைப் புதிய வகையில் கையாண்டவர் ஆயினர்.

மாபெரும் பட்டயத்தை ஏற்று நடத்தும் முயற்சிகளைத் தெளிவாகத் திரும்பவும் புதுப்பித்தால், தாங்கள் சுட்டிக் காட்டுகிற தவறுகளை அரசர் செய்வதனின்றும் அவரைத் தடுக்கலாமென்பதாகப் பெருமக்கள் எண்ணினர். இவ்வெண்ணத் தின் அடிப்படையில் 1237-ல் முதல் முதலாகப் "பட்டயத்தை அரசர் உறுதிப்படுத்துதல்" நிகழ்ந்தது. இதுவே அடுத்த இருநூறு ஆண்டுகளில் நடைபெற்ற இதையொத்த வாக்குறுதிகளில் முதலாவதாகும். இம்மாதிரித் திரும்பவும் அரசர் பட்டயத்தை ஒரு தனிப் பட்டயமாக வெளியிட்டதற்குச் "சிறு பட்டயம்" என்று பெயர். இதையொட்டி நடந்த இறை வழிபாட்டில், கான்டர்பரி அதிமேற்றிராணியார், பட்டயத்திற்கு எதிராகக் குற்றம் செய்பவர்களைச் சமயத்துக்குப் புறம்பாக்கித் தாம் முன்னரே வெளியிட்ட ஓர் ஆணையைத் திரும்பவும் புதுப்பித்து வெளியிட்டார். இவ்வாறெல்லாம் அரசர் செய்தபோதிலும், அரசர் கொடுத்த இத்தகைய வாக்குறுதி போதாது என்பது தெளிவாகத் தெரிந்தது. எனவே ஹென்றியின் தகப்பனரது காலத்தில் தோன்றியது போலவே, ஹென்றியின் காலத்திலும், "தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசரை என்ன செய்வது?" என்ற கடினமான கேள்வி எழுந்தது. இப் பொழுது குறையாகச் சுட்டப்பட்ட தவறுகளும், ஹென்றிக்கு முந்தியவரது ஆட்சியில் சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளைப் போன்றவை அல்ல. மூன்றாவது ஹென்றி செய்த குற்றமாவது, அவர் படைமானியச் சட்டத்தைத் தெளிவாக மீறினார் என்ப தல்ல! ஆட்சியை நடத்துவதில், அவர் அரசின் வருமானங்களை வீணாக்கித், தமது நலன்களுக்காகவும், தமக்கு வேண்டியவர்களின் நலன்களுக்காகவும் சமுதாயத்தின் நலன்களை விட்டுக்கொடுத்தார் என்பதே அவர் செய்த குற்றங்களாகும்.

இத்தகைய சூழ்நிலையில், இத்தவறுகள் எல்லாம் களையப்பட வேண்டுமாயின், மாபெரும் பட்டயத்தின் 61-வது பிரிவில் கூறப் பட்டுள்ளபடி, நிறுவன வடிவத்தில் அரசரின்மீது கட்டுப்பாடு ஏதாவது அமைத்தல் வேண்டுமென்ற கருத்து எழுந்தது. இப் பிரிவானது, பட்டயம் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட போது, அதனின்றும் நீக்கப்பட்டது; எனினும் அதுவும், அதன்

வழியும் மறக்கப்படவில்லை. அரசர், தாம் கொடுத்த வாக்குறுதிகளை மீறுவதில் சிறிதும் மாருமல் இருந்தால், அவரை, அவருக்குப் பொறுப்பாக இல்லாததும், பெருமக்கள் அடங்கியதுமான ஒரு சிறு குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி வைக்கவேண்டுமென்பதே மேற்கூறிய பிரிவில் சொல்லப்பட்டிருந்த திட்டம் ஆகும். குறிப்பிட்ட இந்தக் காலத்தில் ஏற்பட்ட கடினமான நிலை, அரசைப் பொதுவாக எப்படி நடத்துவது என்பதைப் பற்றியதேயாகும். 1244-ல் ஆட்சிமுறை அமைப்பைப் பெரிதும் மாற்றியமைத்து, அரசரின் பேரவை, அரசை நடத்துவதற்கு ஒருவழியைக் கண்டுபிடித்தது. இதன்படி பேரவையினுல் அமர்த்தப்பட்டு அதற்குப் பொறுப்பாக உள்ள அரசின் பெரிய அலுவலாளர்கள் எல்லாரும் எப்போதும் அரசருடன் இருந்து, அவர் பெயரில் அரசை ஏற்று நடத்தவேண்டும். இவ்வேற்பாட்டை வேறுவகையாகச் சொல்லப்போனுல், பேரவையானது அரசை அரசரிடமிருந்து எடுத்துக்கொண்டு, அவ்வரசு தனது கருத்துக்களுக்கும், விருப்பங்களுக்கும் இயைய நடைபெறும் என்பது உறுதியாக இருக்கும்பொருட்டு அரசியலமைப்பின் மூலமாக ஒரு வழி செய்துகொண்டது. அவர்கள் அக்காலத்தில் கொண்டிருந்த நோக்கத்தின் விளைவாகத் தோன்றிய இவ்வமைப்புக்கும், இக்காலத்திலுள்ள ஆங்கில அரசியலமைப்புக்கும் பெருத்த ஒற்றுமையிருப்பது கண்கூடு. இரண்டிலும் பாராளுமன்றத்தின் குழு ஒன்றினுலேயே அரசரது பெயரில் அரசு நடத்தப்பட்டது: ஆயினும், இரண்டிலும் இம்முறை அமைக்கப்பட்ட வகை முற்றிலும் வேருக இருந்தது. இக்கால அரசியலமைப்பில், எந்தத் தனி நிறுவனமும் அரசரைக் கட்டுப்படுத்தவில்லை : இதில் அரசின் எந்த அலுவலரும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடையவராக இல்லை. முன்னுலேயே 1244-ல் தோன்றிய இவ்விளைவே ஆங்கில அரசியலமைப்பின் முடிவான விளைவாக இருந்தது. இவ்வாறு தொடக்கத்தில் செய்யப்பட்ட நிறுவனத் தேர்வு முறைகளெல்லாம் இந்த விளைவையே பிற்காலத்தில் உண்டாக்கின; எனினும் இவ்விளைவை அடைதற்கு மிகச் சிறந்த வழி பிற்காலத்தே கண்டுபிடிக்கப்பட்டது.

1244-ல் வரையப்பட்ட இந்த ஏற்பாடானது செயல்படுத்தப்பட்டதா என்பது நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. அவ்வாறு அது செயல்பட்டிருந்தாலும், கூடிய விரைவில் அது அரசரால் நீக்கப்பட்டிருக்கும்; பழைய தவறுகள் மீண்டும் மிகுதியாகத் தலைதூக்கின. இதே போன்ற சீர்திருத்தங்களைச் செய்வதற்காக இடையிடையே பயனற்ற முயற்சிகள் பல செய்யப்பட்டன. ஆயினும் 1258-ல் தான் அரசரைக் கட்டுப்படுத்தும் பொருட்டுச்

சிறிதும் தளர்வில்லாத முழு முயற்சி செய்யப்பட்டது. அவ்வாண்டில் முழுமையான ஓர் அரசியலமைப்புச் செய்யப்பட்டது; அது ஒரு சில மாதங்களுக்காயினும் முழுவதும் நடைமுறையில் இருந்தது. அப்பொழுது மக்களால் "பாராளுமன்றம்" என அழைக்கப்பட்ட பேரவையானது 1258-ல் ஏப்ரலில் லண்டனில் கூடியது. தமக்குப் பணமுடையா யிருப்பதனால் அதனைத் தமக்கு உதவி செய்யும்படி அரசர் கேட்டுக் கொண்டார். இப்பணமுடை அவருக்கு மிகுதியும் ஏற்பட்டது அவரது ஊதாரித்தனமான போக்கினாலும், அவரது அவையில் செல்வாக்கு மிக்க வெளிநாட்டு உறவினர்களுக்கு அவர் நன்கொடைகள் வழங்கியதனாலும் மட்டுமேயன்று. போப்பிடமிருந்து அரசர் தமது இரண்டாம் மகன் எட்மண்டுக்காக சிசிலிநாட்டின் அரசுரிமையைப் பெற்றார்; இவ்வரசை ஆண்டுவந்த ஹோஹன் ஸ்டாபன் அரச குடும்பத்தாரிடமிருந்து இதனை வென்றுகொள்ளப் பணம் அவருக்குத் தேவையாக இருந்தது; இவ்வகையில் அவரது பணமுடை அளவில் பெருகிற்று. எனினும் இதை அவர் பேரவையில் கேட்ட போது, அதிலுள்ள பெருமக்கள் பணத்தைக் கொடுக்க மறுத்தார்கள்; அதற்கு மாறாக அவர்கள் அரசர் தமது ஆட்சியில் நல்ல சீர்திருத்தங்கள் செய்தல் வேண்டுமெனக் கேட்டனர். இதற்கு ஹென்றி விட்டுக்கொடுக்கவேண்டி யிருந்தது. எனவே இப்பொழுது செய்த ஏற்பாட்டின்படி, அரசரால் அமர்த்தப்பட்ட பன்னிருவர், பெருமக்களால் அமர்த்தப்பட்ட பன்னிருவர் ஆக இருபத்து நான்கு பேர்கொண்ட ஒரு சிறப்புக்குழு (Commission) அமைக்கப்பட்டது; இதுவே தேவையான மாறுதல்களைச் செய்ய வேண்டியது. இக்குழு ஓர் அரசியலமைப்பு முறையை வரைந்து பேரவை ஜூன் மாதத்தில் ஆக்ஸ்பர்டில் கூடியபோது, அக்கூட்டத்தில் அதை அது பேரவையிடம் கொடுத்தது; இப்பேரவை ஏற்றுக்கொண்ட இவ்வரசிய லமைப்பே, "ஆக்ஸ்பர்டு ஏற்பாடுகள்" (Provisions of Oxford) என அழைக்கப்பட்டது.

இப்புதிய அரசியலமைப்பானது, பலர் கருதுவதுபோல், அரசரது நிலைமையை ஒரு சிறப்புக் குழுவின் ஆட்சிக்குள் கொண்டு வைத்தது. நடைமுறை அலுவலில் அரசருக்கு ஒன்றும் தொடர்பில்லை; அரசில் அவருடைய இடத்தைப் பல சிறு குழுக்களும், பெருங்குழுக்களும் ஏற்றுக்கொண்டன: இவையெல்லாம் அரசரது பெயரால் வேலைசெய்து, பேரவைக்குப் பொறுப்பாக இருந்தன, அரசின் எல்லாத் துறைகளையும் மேற் பார்வையிடவும், அரசரைக் கட்டுப்படுத்தவும் பதினைந்துபேர் அடங்கிய ஒரு நிலைக் குழு (Standing Committee) நிறுவப்பட்டது; இதில் ஒன்பது பேர் பெருமக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள். பாராளுமன்றத்தின்

அதிகாரத்தையும், அலுவல்களையும் செய்வதற்குப் பன்னிரண்டு பேர் அடங்கிய இன்னொரு கூட்டத்தினர், மேற்கூறிய நிலைக்குழுவினராகிய பதினைந்துபேரை ஆண்டுக்கு மூன்று முறை சென்று கண்டனர். முற்கூறப்பட்ட இருபத்து நான்கு பேரடங்கிய குழு சமய நிலையத்தைப் பற்றிய கேள்விகளை ஆய்தல் செய்தது; அரசர் கேட்கும் பண உதவித் தொகைகளைப் பற்றித் தீர்மானிப்பதற்கு இருபத்து நான்கு பேரடங்கிய இன்னொரு குழு அமைக்கப் பெற்றது. பெரிய தரத்துச் செயல் முறை அலுவலரான (Great executive Officers), பெரிய முறைவர் (Justiciar), நீதித் தலைவர் (Chancellor), கருவூலத்தார் (Treasurer), முதலியவர்களும், உள்நாட்டுப் பிரிவிலுள்ள செயல்துறை அலுவலராகிய கொத்தவால்களும் புதிய அரசினல் அமர்த்தப்பட்டு, அதற்கே பொறுப்பானவராயினர்.

இத்தகைய புதிய அரசியலமைப்பு 1215-ல் செய்யப்பட்ட செப்பமற்ற அரசியலமைப்பை விடத் திருந்தியதாகவும், 1244-ல் செய்யப்பட்டதை விடச் சிறிது விரிந்ததாகவும் இருப்பது தெளியப்படும். இவ்வரசியலமைப்பு, நம்பிக்கைக்கு உகந்தவரல்லாத ஓர் அரசரை ஆட்சியினின்றும் நீக்கி, பாராளுமன்றத்துக்கு நேராகப் பொறுப்பு வாய்ந்த ஓர் அரசை நிறுவிற்று; இப்பாராளுமன்றம், இக்காலத்திய பொருளின்படி வகையாட்களால் அமைந்த ஓர் அவையாக இல்லை; அது, அக்காலத்திய சமுதாயத்தில், அரசை நடத்துவதற்கு நேரான பங்கு கொண்டுள்ளவர்களாக இருந்த ஒரு பகுதியினரது வகையாட்களை மட்டும் கொண்டதாக இருந்தது. எனவே, 1258-ல் செய்யப்பட்ட இந்த அரசியலமைப்பு ஒன்றுதான், மாபெரும் பட்டயத்தின் அடிப்படையான கருத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு உதவியாக நிறுவன அமைப்புக்களைச் செய்த பதின்மூன்றும் நூற்றுண்டினருடைய முயற்சிகளில், கூடுமானவரை வெற்றியளித்த முயற்சியாகும். இக்காலத்தில் இருப்பதுபோலப் பாராளுமன்றத்திற்கு மறை முகமாக பொறுப்பாக இருக்கும்படி அரசரை ஆக்காமல், இடைக்காலத்தில், பாராளுமன்றத்திற்கு நேரான பொறுப்புடையதாகவும், வரையறுக்கப்பட்டதாகவும் அமைந்த ஒரு முடியரசை நிறுவன வடிவத்தில் ஆக்குவதற்குப் பல சோதனைகள் செய்யப்பட்டன; இவற்றிற்கெல்லாம், மேற்கூறிய (1258-ம் ஆண்டைய) முயற்சியே எல்லா வகையிலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்க எடுத்துக் காட்டாக இருந்தது.

ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள் நடைமுறைச் செயலில், ஒரு சிறிது காலத்திற்குத் தான் செல்லுபடியாயிருந்தன. வெகு விரைவில்

அரசர், பெருமக்களுக்கு எதிராக ஒரு கட்சியைத் திரட்டினர்; 1261-ல் அவர் ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகளுக்குக் கட்டுப்பட மறுத்தார்; உள்நாட்டுப் போர் தொடங்கிற்று. 1263-ம் ஆண்டின் இறுதியில், அரசருக்கும் பெருமக்களுக்கும் இடையேயுள்ள மாறுபாடுகளைப் பிரெஞ்சு அரசர் ஒன்பதாம் லூயியின் நடுத்தீர்ப்புக்கு விடுவதென இருசாராரும் ஒப்புக்கொண்டனர்; பிரெஞ்சு அரசர், மாபெரும் பட்டயத்திற்கு ஆங்கில அரசர் கட்டுப்பட வேண்டுமெனக் கூறியபோதிலும், அவர் ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகளைப் பற்றி வெளியிட்ட முடிவைப் பெருமக்கள் ஏற்க மறுத்தனர்; எனவே போர் தொடர்ந்து நடைபெற்றது. 1264-ல் இளவேனிற் காலத்தில், பெருமக்களது படை . லீஸ்டர் கோமகனாகிய சைமன் டி மாண்ட்பர்ட்டின் (Simon of Montfort Earl of Leicester) தலைமையில், லூவிஸ் சண்டையில் (Battle of Lewes) அரசரது படைகளைத் தோற்கடித்து அரசரையும் அவரது மூத்தமகன் எட்வர்டையும் சிறைப்பிடித்தது. ஓராண்டுக்கு மேலாக சைமன் டி மாண்ட்பர்ட் அரசரைச் சிறைப்பிடித்தே வைத்திருந்து, தாமே அரசை, அரசரின் பெயரில் நடத்தி வந்தார். இவ்வரசு செய்யும் வேலை மிகவும் தொல்லைகள் நிறைந்த ஒன்றாக இருந்தது; இவ்வேலையினால், பின்பு நாம் விரித்துரைக்கப்போகும் பாராளுமன்றம் தோன்றியதைத் தவிர, அரசியலமைப்பின் வளர்ச்சியில் யாதொரு முன்னேற்றமும் தோன்றவில்லை.

மீண்டும் 1265 ஆகஸ்டில் நடைபெற்ற எவிஷாம் சண்டையில் (Battle of Evesham) சைமன் டி மாண்ட்பர்ட் கொல்லப்பட்டு அவரது படைகளெல்லாம் கலைக்கப்பட்டுப் போனபின்பு, இவ்வெற்றியை அடைந்த எட்வர்ட், அரசை நடத்துவதில் மிகவும் செல்வாக்கு உடையவராயினர். அவர் இதுவரையிலும், அரசாட்சியில் காணப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கலகஞ் செய்து வந்த கட்சியோடு ஒத்த உணர்வுடையவரா யிருந்தாரென்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, 1267-ல் செய்யப்பட்டதும். பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் செய்யப்பட்ட பெரிய சட்டங்களின் வரிசைகளிலெல்லாம் முதலாவதுமான மால்பரோ சட்டம் (Statute of Marlborough) மிகவும் முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்தது. ஆயினும் அரசர்மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் நிறுவன மாறுதல்களைச் (Institutional changes) செய்த ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கடந்த நெருக்கடியின் மூலம் விளைந்த அரசியலமைப்பானது, வரையறுக்கப்பட்ட முடியரசு என்ற ஒரு தெளிவான அளவிற்கு மட்டுமே ஒப்புக்கொள்ளப்பட்டது. 'வரையறுக்கப்பட்ட முடியரசு உண்மையில் ஓரளவு காலத்திலேனும் நடை

பெற்றது என்ற ஒரு மேற்கோளை அவ்வரசியலமைப்பு உண்டாக்கிற்று' என்ற அளவிற்கு மட்டுமே அது ஒப்புக்கொள்ளப்பட்டது. திட்டவட்டமான இந்த விளைவுகளோடுகூடத் தெளிவாக அறியக்கூடாததும், ஆயினும் வலிமையில் குறையாததுமாகிய, அரசருக்குப் பெருமக்கள் காட்டும் எதிர்ப்பு என்ற ஒரு மரபு வழக்கம் தோன்றலாயிற்று. அரசருக்குப் பெருமக்களது எதிர்ப்பு தோன்றிற்று என்பதனால், "படைமானியப் பெருமக்கள் தங்களுடைய சிறுசிறு நாடுகளிலெல்லாம் அரசரது கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டு இருப்பதற்காக அரசரை எதிர்த்தார்கள்" என்பது பொருள் அல்ல; தாம் கூட்டமைப்பாக இருக்கின்றோம் என்ற ஓர் உணர்வும், ஆளப்படும் சமுதாயம் முழுவதற்கும், அதன் சார்பில் அதனுடைய உரிமைகளைத் தெரிவிக்கத் தாமே தகுதியுடையவர் என்ற கருத்தும் கொண்ட பெருமக்களின் முழு வகுப்பானது, இப்பொழுது இவ்வெதிர்ப்பின் மூலமாக அரசின் கோட்பாடுகளைத் தீர்மானஞ் செய்து வகுப்பதற்கும், நாட்டின் ஆட்சியை நடத்துவதற்கும் பங்கு கேட்டது; இதுவே இவ்வெதிர்ப்பின் பொருளாகும். மூன்றும் ஹென்றியோடு மாறுபாடு கொண்டு பெருமக்களது கட்சி இயங்கிய காலத்திலும், அவருக்குப் பிந்திய தலைமுறைகளிலும், அது தனது சொந்த நலன்களைத் தேடுவதிலும், அக்காலத்திய தேவையைத் தவிர, வேறு பெரிய விளைவு எதனையும் கருதாமலும் இருந்து வந்துள்ளது. இப்படி அது இருந்தபோதிலும் இம்மாதிரியான வழியில் அது அரசரை எதிர்த்ததனால் தான், அவரைக் கட்டுப்படுத்தும் வகையில் பல முன் நிகழ்வுகள் அல்லது முற்சான்றுகள் (Precedent) ஒவ்வொன்றாகத் தோன்றி யிருக்கின்றன; இதை ஒட்டியே பல பெரிய அரசியலமைப்புக் கொள்கைகள், பத்திரங்களின் வடிவிலும், சட்டங்களின் வடிவிலும் தோன்றி யிருக்கின்றன. இத்தகைய முடிவான தொரு விளைவை முன்னாலேயே எதிர் பார்த்திருக்க முடியாத பெருமக்களுடைய எதிர்க்கட்சி, அதனுடைய கோட்பாடுகளின் பொருளையும் உணரவில்லை; எனினும் ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு வேண்டிய காவலையும், அது இயங்குதற்குரிய ஓர் ஆற்றலையும், பெருமக்கள் காட்டிய எதிர்ப்பு அதற்குக் கொடுத்தது; இவ்வரசியலமைப்பு உருவாகிக் கொண்டிருந்தது; கோட்பாட்டில் ஒரு தொடர்ச்சியும், முரண்பாடு இல்லாத தன்மையும் உடைய பாராளுமன்றம் தோன்றி, அதுவும் இவ்வெதிர்ப்பின் முடிவான விளைவைத் தெளிவாக முன்கூட்டியே அறியாமல் இருந்தபோதிலும், அதுவே அரசியலமைப்பைக் காத்து அதை வளர்ப்பதற்கு ஆயத்தமாகும் வரையிலும், பெருமக்கள் காட்டிய எதிர்ப்பு, ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு வேண்டி

காவலையும் அது இயங்குதற்குரிய ஆற்றலையும், அவ்வமைப்புக்கு அளித்துக்கொண்டிருந்தது.

இவ்வாறு அரசருக்கும் பெருமக்களுக்கும் உள்ள மாறுபாடு ஒரு பக்கத்தில் அரசியலமைப்பில் பெரும் விளைவுகளை இவ்வாட்சியில் உருவாக்கிக் கொண்டிருக்க, நிறுவன அமைப்பில் ஒரு சில மாறுதல்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இக்காலத்தில் தான் அரசியல் படைமானிய முறை விரைவாக மறைந்து போய்க் கொண்டிருந்தது ஒரு காலத்தில் அரசு தனது அலுவல்களைச் செய்வதற்காகத் தேவையெனக் கருதிய பெருமக்களினின்றும், இப்பொழுது விடுபட்டு ஒவ்வொரு வகையிலும் தனித்து நின்று இயங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது படைமானிய முறையிலுள்ள படைத்துறை அலுவலைக்கூடப் பெரிதும் அரசு சார்ந்திருக்கவில்லை. கூலிப்படையைச் சேர்ந்த வீரரே (Mercenary Soldier) இப்பொழுதுபெரிதும் மதிக்கப்பட்டார்; பெருமகனையும், அவரதுவீரரையும் படைத்துறை அலுவல் செய்யவேண்டிய காலம் கழிந்த பின்னும், அவர்கள் கூலிப் படையினரல்லாவிடினும், அரசன் சம்பளம் கொடுத்துப் போர்க்களத்தில் நிறுத்தி வைப்பது என்ற முறை பெருகிற்று. பெருமகன் தான் அரசருக்குப் போர்க்களத்தில் அளிக்கவேண்டிய படைத்துறை அலுவல்களனைத்தையும் கொடுக்கும்படியாக அரசர் அவருக்கு ஆணையிடுவதென்பது குறைந்தது; இந்த அளவுக்குப் பெருமகனது படை அலுவல்களின் மதிப்புக் குறைந்தது; அவர் செய்யவேண்டிய படைத்துறை அலுவல்கள் அனைத்தையும், அவரால் கொடுக்கப்படவேண்டிய பழைய அளவுள்ள வீரர்களின் எண்ணிக்கையில் ஒரு சிறு கூறு அல்லது துகள் செய்யக் கூடுமென்பதாகப் பல முற்சான்றுகளும் விரைவாகத் தோன்றலாயின.

படைமானிய முறையில் பெருமகன் செய்ய வேண்டிய முறைமை அலுவலிலும் (Court service) பெரும் மாறுதல் உண்டாயிற்று. பேரவையானது, அது ஒரு முறைமன்றம் என்ற அளவில், அதனுடைய உறுப்பினரைப் பொறுத்த வரையிலும், அதனுடைய செயல்முறையைப் பொறுத்தவரையிலும் யாதொரு மாற்றமும் அடையவில்லை; சிறிய அளவையும் முறைமன்றமாக வேலைசெய்யும்போது யாதொரு மாறுதலுக்கும் உட்படவில்லை. இந்த இருவகை அவைகளும் படைமானியக் காலத்திலிருந்த பழைய சட்டமன்ற முறைமன்றங்களாகும் (Assembly courts). பேரவையினின்றும் தோன்றிய புதிய முறைமன்ற நிறுவனங்களை நாம் காணுகிறபோது, பன்னிரண்டாம் நூற்றுண்டில் முறைமை செய்யும் துறையில் தொடங்கப்பட்ட வளர்ச்சியில் விரைவான

முன்னேற்றம் ஏற்பட்டதெனத் தெரிகிறது. ஒரு தொழிலாகவே முறைமையைச் செய்வதென்பது (Professional justice) இப்புதிய முறைமன்றங்களில் மேன்மேலும் மூலமான வழியாக ஆயிற்று; அதே சமயத்தில் பெருமக்களது அவைமன்றம், [1] என்ற கொள்கையானது மேலும் மேலும் ஒரு கற்பனையாக ஒதுக்கப்பட்டது. படைமானிய முறை மன்றங்களெல்லாம், பெருமக்கள் முறைமன்றங்களாக (court of peers) வேலை செய்யக்கூடியவை என்பது இனி ஒப்புக்கொள்ளப்படாது போயிற்று; இத்தகைய பெருமக்கள் முறைமன்றமாவது பேரவை, சிறிய அவை ஆகிய இவற்றுள் ஒன்றினுடைய பல வடிவங்களிலே ஒன்றில் தான் தோன்ற முடியும். வழக்குகளின் தன்மையை ஒட்டி அவற்றைப் பாகுபாடு செய்தலினாலும், அவைகளுக்கேற்ப ஆணை வகைகள் பெருகியதனாலும், முறைமன்றத்தில் உள்ள பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்ட பெருவாரியான வழக்குகளில் கூறப்பட்ட தீர்ப்புகளினாலும், பொதுச் சட்டத்தின் தொகுதியானது அளவில் பெருகியதாயிற்று; எனவே, அதனைக் கையாளுதற்கு, இதற்கு முன்பு எப்பொழுதும் இல்லாத வகையில், அதனைப்பற்றிய தனியான தொரு அறிவு தேவையாயிருந்தது.

இந்த நூற்றாண்டின் நடுவில் பிராக்டன் என்பவரால் எழுதப்பட்ட பொதுச் சட்டம் பற்றிய பெரிய விளக்கமானது, கிளான்வில்லால் எழுதப்பட்ட முதல் விளக்கத்தை ஒத்தே இருக்கிறது; ஆயினும் அது முன்னதைவிட அளவில் பெரியது; இதில் காணப்படுகிற பொதுச் சட்டமானது மிகவும் வளர்ச்சியடைந்த ஒன்றாகும்; இது நூற்றுக்கணக்கான மேற்கோள்களைத் தீர்க்கப்பட்ட வழக்குகளிலிருந்து எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் பொதுச் சட்டத்தின் அமைப்புக்கள் தமது வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையை இழந்து விட்டன; அவை எல்லா வகைப்பட்ட வழக்குகளுக்கும் ஒத்தவாறு பொருந்தக்கூடிய நிலையை இழந்து விட்டன. இத்தகைய வளைந்து கொடுக்கும் இயல்பும், பொருந்தும் இயல்பும், அரசரது தனிச்சிறப்புரிமை அதிகாரங்களை வெளிப்படுத்துவனவாகப் பொதுச் சட்டத்தில் முன்பு ஒரு காலத்தில் காணப்பட்டன: இப்பொழுது அத்தன்மைகளை அவ்வமைப்புக்கள் இழந்து, அவை மிகவும் வரையறைகளுக்கு உட்பட்டு இறுகிய நிலைமையை அடைந்தன; எனவே ஒவ்வொரு புதிய வழக்கும் பொதுச்சட்ட முறைமன்றத்தில் தீர்க்கப்பட வேண்டுமாயின், அது இப்பொதுச் சட்ட அமைப்புக்களால் வகுக்கப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டுமென்பதாயிற்று. இவ்வாறான நிலைமையில் பொதுச்சட்ட முறைமன்றங்களுக்கு வரும் வழக்குகள் குறைந்தன. ஒவ்வொருவருக்கும் முறைமை செய்யப்

[1] The theory of a baronical assembly

படுதல் வேண்டுமென்ற அரசரது தனிச் சிறப்புரிமை அதிகாரத்தைச் செயல்படுத்தும் உறுப்புக்களாக இப் பொதுச்சட்ட முறை மன்றங்கள் இயங்கிவந்தன; எனவே இவை இழந்த இவ்வேலையைச் செய்வதற்காகச் சிறிய அவை, தனிப்பட்ட வழக்குகளில் குறையை நீக்கித் தீர்ப்புகளை வழங்கும்பொருட்டு அரசரிடம் கொடுக்கப்படும் தனியார் விண்ணப்பங்களை வாங்கி அவற்றின் மூலம் ஒரு பொதுவான முறையை வழங்கும் வேலையைக் கொஞ்சமாக மேற்கொள்ளத் தொடங்கிற்று. இவ்வகையில் சிறிய அவை முறைமை வழங்கி உயர்தர முறைமன்றத்தின் ஒரு பகுதியான முறை மன்றமும் (Chancary-சான்சரி), தருமநியாயச் சட்ட முறைமையும் (Equity jurisprudence) தோன்றச் செய்தது. குற்றவழக்குகளை ஆயும் முறையிலும் ஒரு பெரும் மாறுதல் தோன்றிற்று; சமய நிலையம் ஒப்புக் கொள்ளாததற்கிணங்கக், கடுந்தேர்வு முறையை வைத்துக்கொண்டு, குற்றம் சாட்டும் தீர்ப்புச் சான்றுளர் குழுவினது தீர்ப்பில் உண்மை காண்பது என்ற பழையமுறை கைவிடப்பட்டது; ஆயினும் முறைமன்றங்கள் அப்பழைய முறைக்கு ஈடாகப் (Substitute) பல முறைகளைச் சோதித்துப் பார்த்துக்கொண்டிருந்தன; எனவே மேலும் ஒரு நூற்றுண்டுக்கப்புறம் தான் இக்காலத்திய அமைப்பான, இரட்டைத் தீர்ப்புச் சான்றுளர் குழுக்கள்-ஒன்று குற்றஞ் சாட்டுகிற அல்லது பெரிய தீர்ப்புச் சான்றுளர் குழு, மற்ருென்று, சிறிய தீர்ப்புச் சான்றுளர் குழு-என்பதான முறையானது நிறுவப்பட்டது. இவ்வரசரது ஆட்சிக் காலத்திலேயே வழக்கு மன்றங்களையும், அரசரால் நிறுவப்பட்ட வழக்கு முறைமன்றக் குழுக்களையும் மக்கள் மிகுதியாகப் பயன்படுத்தி வரலாயினர்; சுற்றிவரும் முறைமன்றங்கள் பெரிய அளவில் அலுவல்களைச் செய்வதற்காகக் கோட்டங்களுக்குக் குறிப்பிட்ட காலங்களில் வந்து போயின; அவை அரசரின் வகையாளாக இருந்து வேலை செய்வனவாகக் கருதப்பட்டபடியால், அவையே நெடுங்காலத்திற்கு அரசரால் தமது தனிச் சிறப்புரிமையை ஒட்டிச் செய்யப்படவேண்டிய தரும நியாயத்தைச் (Equity justice) செய்து வந்தன. இவ்வாறு முறைமன்றங்களும் சட்டமும் மிகவும் குறைவான அளவிலேயே படைமானிய முறையின் ஆதிக்கத்துக்குட்பட்டு வளர்ச்சியடைந்தன.

பெருமக்கள் தாங்களாகவே முறைமை வழங்கும் அதிகாரத்தைப் பொறுத்தவரை அவருடைய படைமானிய முறையின் ஆதிக்கமும், நலனும் மறைந்து வந்தன. 1258-ம் ஆண்டைய ஆக்ஸ்பர்ட் ஏற்பாடுகளைச் செய்த புரட்சியைப் பற்றிக் கூறும் பத்திரங்களில் தனியாருடைய முறைமை செய்யும் அதிகாரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இவ்வதிகாரத்தைப் பற்றி

அவற்றில் காணப்படும் ஈடுபாடு, 1215-ம் ஆண்டையப் பெரும் பட்டயத்தில் காணப்படும் இவ்வதிகாரத்தைப் பற்றிய ஈடுபாட்டினின்றும் வேறனது. இப்பொழுது பெருமகனது நோக்க மெல்லாம், அரசரினின்றும் தாம் தனியாக இருக்கவேண்டு மென்பதோ அல்லது தமக்குரிய அரசியல் நிலையைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதோ அன்று; இப்பொழுது அவருடைய நோக்கமெல்லாம் பண வரும்படியைப் பற்றியதே யாகும். அவர் விரும்பியது முறைமை செய்யும் அலுவலையே; இதுபற்றி எழுந்த கேள்வியானது பெருமகனுக்கும் அரசருக்கும் எழுந்த கேள்வி அன்று; இது பெருமகனுக்கும், அவரது முறைமன்றத்திற்கு வழக்குக்கொண்டுவரக் கூடியவருக்கும் தோன்றிய கேள்வியாகும். அதில் வழக்குக்கொண்டுவரக் கூடியவர்கள் இப்பொழுது பெருமகனது முறைமை அலுவலை உதறித் தள்ளலாயினர்; இதனால் பெருமகன் தமது முறைமை செய்யும் உரிமைகளை நிலைநிறுத்துவது கடினமாயிற்று. அவர்களுக்குள் எழும் வழக்குகள் தனியார் ஆட்சியிலுள்ள பொது முறைமன்றங்களிலேயே தீர்க்கப் படவேண்டியவையாகக் கருதப்பட்டன; எனவே படைமானிய முறைமை அதிகாரத்தை, அதாவது பெருமக்களது தனிப்பட்ட முறைமை அதிகாரத்தை அடியோடு நீக்கி, அது முறைமை செய்யும் அவைப் பெருமகன் (Court baron) என்ற பெயரளவில் மட்டுமே நீடித்து இருக்கும்படியாகச் செய்த, ஒரு செயல் முறையானது இப்போதிருந்தே ஒரு நூற்றுண்டு காலத்திற்கு வழக்கத்திலிருந்து வரலாயிற்று. இவ்விளைவு உண்மையில், அரசரது பொதுச் சட்டமுறை எல்லை (Royal common law jurisdiction) என்பது வளரவும், ஏற்பட்டது. இச் சட்டமுறை எல்லைக்கு எதிராகவே மாபெரும் பட்டயத்தில் 34-வது பிரிவில் பழைய படைமானியச் சட்டமுறை சேர்க்கப்பட்டிருந்தது; ஆனல் அவ்வாறு சேர்க்கப் பட்ட அம்முறையும் பயனில்லாததாகவே ஆயிற்று. மாபெரும் பட்டயத்தில் 18-வது பிரிவில் உடைமை வழக்குகளைப்பற்றிப் பெருமக்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் மிகவும் அழிவைத் தரக் கூடிய முறையற்ற சலுகைகளாகும். மேலும், மிக்க காப்புறுதியையும், பிழையில்லாத முறைமையையும் அளிக்கவல்ல அரசரது முறைமன்றங்களுக்கு எதிராகப் பெருமகனது முறைமன்றம் ஒரு நாளும் நிலைத்து நிற்க இயலாது. ஏற்கெனவே, "எந்த ஆணையின் படி" (Quo Warranto) என்ற ஆய்வுமுறையை ஒட்டி அரசர், பெருமக்கள் ஆட்சியிலுள்ள பொது முறைமன்றங்களின் தன்மையை ஆய்வுசெய்யத் தொடங்கினர்; இவ்வாணைப்படி பெருமகன் தாம் முறைமன்றத்தை வைத்து நடத்துவதற்கு உரிமை

யுண்டு என்பதைச் சட்டத்திலிருந்து சான்று காட்டி மெய்ப்பிக்க வேண்டும்; எனவே இவ்வாணை முறையினால், அடுத்த அரசரது ஆட்சியில், முறைமன்றத்தை வைத்து நடத்தும் இவ்வுரிமைக ளெல்லாம், அரசு தானே நடத்துகிற உள்நாட்டு முறைமை வரம் பிற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டன.

ஆட்சி நிறுவனங்களைப் பொறுத்த அளவில்கூட, படைமானிய முறையிலிருந்து, இக்காலத்திய அமைப்புக்கு மாறும் நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இந்தத் துறையில் ஏற்பட்ட மாற் றங்களை நாம் மற்றத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களைப் போல அவ்வளவு தெளிவாகக் கூற இயலவில்லை; ஏனெனில் பதின்மூன் றாம் நூற்றாண்டைய ஆட்சித்துறை பற்றிய வரலாறு இன்னும் முழுமையும் ஆய்ந்தறியப்படவில்லை. எனினும் ஹென்றியின் ஆட்சிக்காலத்தில் தோன்றிய சில மாறுதல்களைப் பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த நிலைகளில் நாம் பார்க்கிறோமாகையால், அவற் றின் தோற்றத்தை நாம் காணலாகும். படைத்துறை அலுவ லுக்கு ஈடாகக் கொடுக்கப்பட்டிருந்த பண்ணை அல்லது மானியமே, நாட்டிற்குப் படையைக் கொடுக்கும் மானியமாக இருந்ததைப் போல, மானியத்துக்கெதிராக அரசருக்கு மட்டும் அலுவல் செய் தல் என்னும் அலுவலும் (Serjeanty), நாட்டின் ஆட்சிக்காகப் படைமானிய முறையால் அளிக்கப்பட்ட ஒன்றாகும். இப்பொழுது தனது படை அலுவல் தேவைகளுக்கு அரசு ஏற்பாடு செய்த தைப் போல, தனது ஆட்சி அலுவல் தேவைகளையும் மற்ற சிறந்த முறைகளின் மூலம் பெறுவதற்கு ஏற்பாடு செய்தது. இவ்வாறு அரசு ஏற்பாடு செய்தது என்பது அரசரது படை மானிய அலுவலாளர், தனது அலுவலைப் பணமாக அடிக்கடி செலுத்தினர் என்பதனால் தெரியவருகிறது. இவ்வகையாக அலு வலுக்கு மாறாகச் செலுத்தும் பணத்துக்கு 'அரன்டேஷன்' (arrentation) என்று பெயர். மிகவும் மெதுவாக, அரசரது தனி அலுவல்கள், மதிப்பியலான பட்டங்களாகவும், வெறும் மதிப்புமட்டுமே உள்ளவைகளாகவும் மாற, அவ்வலுவல்களில் செய்யப்படவேண்டிய கடமைகளெல்லாம், உண்மையில் அவரது அவையில் கீழ் நிலையிலுள்ளோரால் செய்யப்பட்டன. இம்மாறு தலும் மேற்கூறப்பட்ட படைமானிய அலுவலில் ஏற்ற மாறு தலையே காட்டுகிறது. ஆயினும், உயர்முறை மன்றத்தின் ஒரு பகுதியின் தலைவர் (chancellor), கருவூலத்தார் ஆகியோரின் அலுவல்கள் வேறு வகையில் மாற்றமடைந்தன; இதனால் இவ் வலுவல்களெல்லாம் முன்னைவிட மிகுதியாகச் செயலாற்றும் அலு வல்களாக ஆயின; எனவே இவை அடைந்த மாறுதல் அவற்றின் உட்பொருளைப் பற்றியதன்று.

இக்காலத்தில் மெதுவாக நடைபெற்று வந்ததும், அதைப் பற்றி இன்னும் போதுமான அளவில் எழுதப்படாததுமான ஒரு பாகுபாடு என்னவெனில் சிறிய அவையானது மூன்று குழுக்களாக,—அரசரது முறை மன்ற நீதிபதிகள் குழு (court of the king's bench), உயர்தர நீதிமன்றம் (chancery court), ஆட்சி அல்லது அறிவுரைக்குழு (advisory council) என்பதாகப் பிரிந்ததேயாகும்; இத்தகைய பாகுபாடு முறைமை செய்தல், ஆட்சிசெய்தல் ஆகிய இரு துறைகளையும் பற்றியதாகும். பெரிய குழுவின் பொதுவான வேலைகளையும், அரசில் அதற்குரிய பங்கையும் அதிலிருந்து தோன்றிய அறிவுரைக்குழு செய்து வந்தது. எனினும் சிறிய அவை இன்னும் பாகுபாடற்ற நிலையில் இருக்கிறதெனவே நாம் கொள்ளலாகும்; இச்சிறிய அவை தனிப்பட்ட முறையில் செய்யப்பட்ட சில அலுவல்களைப் புதிய சில குழுக்களுக்கு அளித்த போதிலும், இவ்வலுவல்களை அது தனது விருப்பத்திற்கிணங்கச் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தைத் தன்னிடம் வைத்திருந்தது; ஏனெனில் அதுவே அரசரின் தனிச்சிறப்புரிமைக்குகந்த ஒரு தனிப்பட்ட உறுப்பாகும். இவ்வவையில், அவை என்ற முறையில் மூன்றும் ஹென்றியின் காலத்தில் ஏற்பட்ட மாறுதல் என்னவெனில், அதற்குரிய அறிவுரை வழங்கும் அலுவலும், அது அரசருக்கு அறிவுரை வழங்கி, அரசின் கோட்பாட்டைச் செயல்பட இயக்குவதில் பங்கு கொள்ளும் அலுவலும் வற்புறுத்தப்பட்டன என்பதேயாகும். அவையாளர் (councillor) என்ற சொல் இப்பொருளில் ஒரு தனிப்பட்ட அலுவலைக் குறிக்கிறது; இவ்வலுவலுக்கு ஆராய்ந்த தீர்மானத்தின் பேரிலேயே தான் ஆட்கள் அமர்த்தப்பட்டனர்; அவ்வாறு அமர்த்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டிய தனிப்பட்ட ஓர் உறுதிமொழியும் வரையறை செய்யப்பட்டிருந்தது; எனினும் அறிவுரைக்குழு என்பதாகத் தனியாக ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை.

1272-ல் ஹென்றிக்குப் பிறகு அவரது மகன் முதலாம் எட்வர்டு அரசரானார்; இவர் நெடுங்காலம் அரசு செய்யும் தொழிலில் பயிற்சி பெற்றிருந்தவரே. இங்கிலாந்தின் அரசியல் வரலாற்றிலும், அரசியலமைப்பு வரலாற்றிலும் இவ்வரசரது முப்பத்தைந்து ஆண்டு ஆட்சிக்காலமானது மிகப் பெரிய ஆக்கவேலையைச் செய்த ஒரு காலமாக இருந்தது. அரசியலமைப்பு வளர்ச்சியைப் பொறுத்த அளவில், பொதுச்சட்டமும், முறைமை செய்யும் மன்றங்களும் வளர்ச்சியுற்றதும், பாராளுமன்றம் தோன்றி வளர்ந்ததும், இவ்வரசரது ஆட்சியில் உள்ள மற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைவிடச் சிறப்பு மிக்கவை. இவ்வியலில்

நாம் இவற்றுள் முதலில் கூறப்பட்ட வளர்ச்சியையே ஆய்தல் செய்து விரித்துரைப்போம்.

எட்வர்டு அரசரை, ஆங்கில ஜஸ்டினியன் (English Justinian) என்பதாக ஓரளவு மட்டுமே பொருந்துமாறு அழைப்பர்; எனினும் இப்பட்டம் நல்ல விரிவான தன்மை உடையதாயில்லே. ஜஸ்டினியனுக்குப் புகழைத் தேடித்தருகிற அவர் செய்த சட்டம் பற்றிய வேலே, சட்டங்களேத் தொகுத்தமையேயாகும். அவர் புதிதாகச் சட்டங்களே உண்டாக்கி அவ்வகையில் முன்னேற்றம் எதுவும் உண்டாகச் செய்யவில்லே; ஆயினும் எட்வர்டுக்குப் புகழைத் தரக்கூடியனவாக இவ்விருகாரணங்களும் இருந்தன என்பதை நாம் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அவரது ஆட்சியின் முற்பகுதியில் செய்யப்பட்ட பெரிய சட்டங்களெல்லாம், பழைய காலத்தில் வளர்ந்து வந்த பொதுச் சட்டத்தின் தொகுப்புக் களெனத்தக்க வகையில் அமைந்திருந்தன. இப்பெரிய சட்டங் களினுள் முறை மன்றங்கள் சிறிது சிறிதாக உண்டாக்கிய சட்டங் கள் அடங்கவில்லே. இச்சட்ட வரிசைகளெல்லாம், சமுதாயத் தின் அத்தலேமுறையினர் அடைந்த முன்னேற்றத்தையும், சட் டத்திலும், முறைமை நிறுவனங்களிலும் ஏற்பட்ட புதிய சூழ் நிலேகளேயும் காட்டுவனவாகவும், பழையகால வளர்ச்சிகளேத் தொகுத்துச் சுருக்கிக் கூறுவனவாகவும், எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு தொடக்க நிலேயாக அமைவனவாகவும் இருக்கின்றன. வழிமுறையைப் பற்றிக் கூறுத, பொருள் நிலே பற்றிய சட்டங்கள் (substantiue law) பிராக்டனது சட்ட நூலில் தெளிவானதாக வும், நிலேயாக ஏற்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றன; இவை எதிர்காலத்தில் பெரிதும் பொதுச்சட்டத்தோடு கலந்தன; ஆயினும் இப்பொருள் பற்றிய சட்டங்கள், மேற்கூறப்பட்ட எட்வர்டு காலத்தில் சட்டங்களில் காணப்படவில்லே; இச்சட்டங் கள் பிராக்டனுடைய சட்டத்திற்குப் புதியனவாகவும், அதனின் றும் மேலும் ஒருபடி வளர்ச்சியடைந்த நிலேயிலும் இருக்கின்றன.

சட்டம், அல்லது நிலவரச் சட்டம் (statute) என்ற சொல் லுக்கு எட்வர்டின் காலத்தில், பிற்காலத்திலுள்ளதுபோது ஒரு முறைபற்றிய, குறிப்பிட்ட பொருள் இல்லே; அது எவ்வாறு செய்யப்பட்டது என்பதை அச்சொல் உணர்த்தவில்லே; அரசினுல் விதிக்கப்பட்டதும், எப்பொழுதும் நிலேயாயிருக்கக்கூடியதுமான விதி எதனேயும் அச்சொல் உணர்த்திற்று. பிற்காலத்தில் இவ் விதிகளேச் சட்டம் எனவே ஒப்புக்கொண்டனர்; ஏனெனில் சட்ட வளர்ச்சிக்கு இவ்விதிகள் பெரிதும் துணேயாயிருந்தன. எனினும் இதனுல் இவ்விதிகளெல்லாம் அக்காலத்தில் பாராளு

மன்றத்தைப் போன்ற ஏதாயினும் ஓர் அவையினால் சட்டமாக இயற்றப்பட்டனவாக நாம் கொள்ளக்கூடாது. இவ்வகையில் இனங் கண்டுபிடிக்கப்பட்ட எட்வர்டின் சட்டங்களெல்லாம் அடங்கிய பட்டியல் நீளமான ஒன்றே; அவையாவன—ஒன்று, முதலாவது வெஸ்ட்மினிஸ்டர்சட்டம் (statute of Westminster I) இச்சட்டம் செய்யப்பட்ட இடத்திலிருந்து இதற்கு இப்பெயர் வந்தது; 1275-ல் செய்யப்பட்ட இச்சட்டம் பல செய்திகளையும் கொண்டதாக இருக்கிறது; இதற்குப் பிற்சேர்க்கையாக (supplement) அடுத்த ஆண்டில் ரேக்மன் சட்டம் (statute of rageman) என்பதாக ஒன்று செய்யப்பட்டது; 1278-ம் ஆண்டைய கிளாஸ்டர் சட்ட மானது வழக்கு மன்றங்களையும் (assizes) "எந்த ஆணையைக்கொண்டு" என்ற ஆய்வு முறையையும் பற்றிக் கூறுவது; இரண்டு 1279-ம் ஆண்டைய மார்ட் மெயின் (mortmain) சட்டம்; மூன்று 1283-ஆம் ஆண்டைய ஆக்டன் பர்னல் (acton burnell) சட்டம்; வணிகர்கள் தமக்கு வரவேண்டிய கடன்களைச் சட்டத்தின் மூலமாக வழக்கிட்டுத் தாமதமாக வாங்காமல் எளிதில் வாங்குவதற்கு உதவியாக அக்கடன் கொடுத்தல்களைப் பதிவு செய்துகொள்ளுவது என்றிருந்த ஒரு வழக்கத்தை ஒரு சட்டமாக ஆக்கியது இச்சட்டம்; நான்கு, வேல்ஸ் சட்டம்; இச்சட்டம் பொதுச்சட்டத்தை வேல்ஸ் நாட்டில் புகுத்தியது; ஐந்து, ருத்லான் சட்டம் (Rhuddlan); 1284-ல் செய்யப்பட்ட இச்சட்டம், அரசருக்குப் பொதுச்சட்ட வழக்குகளில் ஏதேனும் ஈடுபாடு இருந்தாலொழிய, அவற்றைக் கருவூல முறை மன்றத்தில் ஆய்வு செய்து தீர்க்கப்படுவதைத் தடைசெய்கிறது; ஆறு, இரண்டாவது வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம்; இது நிலத்தையும், வேறு சில பொருள்களையும் பற்றி விரிவாகக் கூறுகிறது; ஏழு, வின்செஸ்டர் சட்டம் (statute of Winchester); இது காவல் துறையாளரையும், படையினரையும் பற்றியதாகும்; இது சமயச் சார்புள்ள முறை மன்றங்களுக்கும், சமயச்சார்பில்லாத முறை மன்றங்களுக்குமுள்ள தொடர்பையும் விளக்குகிறது; எட்டு, மூன்றாவது வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம்; 1290-ல் செய்யப்பட்டது இச்சட்டம். இதற்கு quia emptores என்றும் பெயர் உண்டு.

எட்வர்டு ஆட்சிக்கு வந்ததும் முதலில் செய்தது எதை எனில், தனது தகப்பனார் தொடங்கியதும், ஆனால் யாதொரு விளைவையும் அடையாமல் பாதியில் விட்டுவிட்டதும் ஆகியஓர் ஆய்வு முறையையேயாகும். அவர் நாடெங்கிலும் தமது ஆணையாளரை விடுத்தார்; இவர்கள், இப்போது பழக்கமாக இருந்த பொது ஆய்வு முறையின்படி 'அரசரது அலுவலர்

முறைமை செய்யும் உரிமையோடு குறுக்கிடும் தனியான பெரு மக்களது உரிமைகள் எவை?' என ஆராய்ந்தார்கள். இந்த ஆய்வுகளின் விளைவாக அரசருக்குக் கிடைத்த அறிக்கைகள் எல்லாம், "நூற்றுப் பதிவேடுகள்" (hundred rolls) எனப்படும் ஏட்டில் பதிவு செய்யப்பட்டன; உள்நாட்டு ஆட்சிமுறையைப் பற்றிய இவ்வறிக்கைகளின் தொகுப்பானது, நிலவுடைமைக் கணிப்பேடு (Domesday returns) பதினோராம் நூற்றாண்டைய நிலைமையை அறிதற்கு நமக்கு உதவியாயிருந்ததைப் போல, பதின்மூன்றாம் நூற்றாண்டைய நிலைமையை அறிதற்கு உதவி யாக இருக்கிறது. இந்த அறிக்கைகளை அடிப்படையாக வைத்துத் தான், "எந்த ஆணையைக் கொண்டு?" (quo warranto) எனப் படும் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கை முறைகளே கிளாஸ்டர் சட்டத்தில் ஒரு வடிவம் கொடுக்கப்பட்டன; இச்சட்டத்தில் கூறப்பட்ட இம்முறைகளின் படி வேறு சில ஆணையாளர்கள் நாடு முழுவதற்கும் அனுப்பப் பட்டுப் "பொதுவாக அரசியலார் செலுத்த வேண்டிய முறைமை அலுவல் அதிகாரங்களைப் பெருமக்கள செலுத்துவது எவ்வகை உரிமையைக் கொண்டு?" என்று காரணம் காட்டும்படியாகப் பெருமக்களுக்கு ஆணை கொடுக்கப்பட்டது. இதற்கு வெகு காலத்திற்கு முன்பாகவே, பிராக்டன் என்பவரால் ஆங்கிலச் சட்டத்தில், "மரபு வரையறையாக உரிமை எதனையும் எவ்வளவு நீண்ட காலத்திற்கு ஒருவர் அடைந்திருந்தாலும், அது அரசருக்கெதிராக யாதொரு உரிமையையும் நிறுவவல்லது அல்ல" எனச் சுட்டிக் காட்டப்பட்டது. ஆணையாளருக்கு முன்ன ராகவே, அரசரின் வகையாட்களாக வந்த வழக்கறிஞர்கள், "இந்த நடவடிக்கை முறையில், பெருமக்கள் தங்களது உரிமைக்கு மேற்கோளாக ஏதேனும் ஒரு சட்டத்தின் மூல மாகவோ, ஒரு பட்டயத்தின் மூலமாகவோ சான்று காட்ட வேண்டும்; இல்லாவிடில் அவரது முறைமை செய்யும் உரிமை கள் அரசரால் எடுத்துக்கொள்ளப்படும்," என்பதாக வலி யுறுத்தினர்.

இத்தகைய நடவடிக்கைகளினால் ஒரு சில வழக்குகளில் மட்டுமே மேற்கூறிய வகைப்பட்ட சான்றுகள் காட்டப்பட்டன. எனவே இந்த ஆய்வு முறையானது பெருமக்களிடமிருந்து வலியதொரு எதிர்ப்பைக் கிளப்பிற்று. எட்வர்டு தமக்கு நல்ல பயனைத்தரக்கூடிய இந்த நடவடிக்கை முறையை இறுதிநிலைவரை யிலும் கொண்டுபோய்ச் செலுத்த விரும்பவில்லை. எனவே "ஒரு நூற்றாண்டு காலத்துக்கு, அதாவது முதலாம் ரிச்சர்டு முடிசூடிய நாளிலிருந்து இத்தகைய பொது முறைமைஅலுவல்கள் தொடர்ச்

சியாசச் செய்யப்பட்டிருந்தால், அதுவே இத்தகைய உரிமையை மெய்ப்பிக்கப் போதிய சான்றாகும்.''- என்பதாக எட்வர்டு 1290-ல் ஒப்புக்கொண்டார். இத்தகைய ஏற்பாட்டினால் பல உட்பிரிவுகளில் முறைமை செய்யும் அலுவல் தனியாரிடமிருந்து அரசரால் மீட்கப்படவில்லை; எனினும், இந்நிலைமைகளிலும்கூட தனியார் வசமுள்ள முறைமை அலுவல்கள் அரசராலேயே அளிக்கப்பட்டிருத்தல்வேண்டும்' என்பதும், 'அந்தத் தனியார்களைவிட அவ்வலுவல்களைச் செய்வதற்கு அரசுக்கே மேலான உரிமையுண்டு' என்பதும் வற்புறுத்தப்பட்டன. மேலும் இத்தகைய முறைமை அலுவல்களை முன்பு நடைபெற்றதுபோல ஒருவரிடமிருந்து மற்றொருவர் எடுத்துக்கொள்வதும் ஒருவருக்குப் புதிதாக வழங்குவதும் தடைசெய்யப்பட்டன. இத்தகைய கொள்கையோடு இத்தகைய வெற்றியுடன் "எந்த ஆணையைக்கொண்டு?" எனப்படும் இந்த ஆய்வு நடவடிக்கை முறையை அரசர் நடத்த முடிந்தது என்றஉண்மை நிகழ்ச்சியே இரண்டாம் ஹென்றி தமது சீர்திருத்தங்களைச் செய்த காலந்தொட்டு, நீதித்துறை அமைப்பின் வளர்ச்சியிலும் நாடுமுழுவதற்கும் பொருந்துவதான சட்டமுறையின் வளர்ச்சியிலும் அரசியலாருக்குரிய அலுவல்களையும் வரம்பையும் பற்றிய கருத்தின் வளர்ச்சியிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. இத்தகையநடவடிக்கைஆய்வுமுறையின்படி தனியார்வசமுள்ளபொது முறைமை அதிகாரங்களை, அதாவது தனியார் வசமுள்ள நூற்றின் முறைமன்றத்தை மட்டுமே ஆய்வு செய்தல் கூடும் என்பது இங்கு நினைவில் வைக்கப்படவேண்டும். இவ்வாறு தனியார் வசமுள்ள நூற்றின் முறைமன்றத்திலும் உறுதிமொழி எடுத்தவரது கருத்துக்களைக் கேட்டலும், அரசரது ஆணைகளை ஏற்பதும், அரசரால் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளை ஆய்வு செய்தலும், குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுத்தலும், சில சமயங்களில் கொலைத் தண்டனை கொடுத்தலும் இவ்வழக்குகளில் தண்டப்பணம் வாங்குதலும், அவற்றில் ஒரு பகுதியைத் தாமே வைத்துக்கொள்ளுதலும் நடைபெற்றன. பொருளியல் அலுவல்களைப் பற்றிய பண்ணை முறைமை அதிகாரம் (manorial jurisdiction) தொடர்ந்து, யாதொரு தடையுமில்லாமல் நடைபெறலாயிற்று; இம்முறையானது, அமெரிக்கநாடு உருவாகி நிலைபெற்ற பின்பும், அக்குடியேற்ற நாடுகளில் வழக்கத்தில் இருந்து வந்தது; இதைப்போலவே பெருமக்களது படைமானிய முறைமை அதிகாரமும், பண்ணையாட்கள் தரத்திலுள்ள சிறிய தனி நில உடைமையாளரைப் பற்றிய வழக்குகளைத் தீர்ப்பது என்ற சுருங்கிய அளவில், யாதொரு தடையுமின்றிப் பண்ணை முறைமன்றத்தில் நடைபெற்று வரலாயிற்று. எனவே படைமானிய

முறைமை அலுவலின் ஒரே அடையாளமாக எஞ்சி இருந்தவை யெல்லாம் "முறைமன்ற அவைப் பெருமகன்" (court baron) என்ற ஒரு பட்டமும், பண்ணை முறைமன்றத்தை அமைப்பதற்கு இரண்டு தற்சார்பான நில உடைமையாளரேனும் இருக்க வேண்டும், என்ற ஒரு விதியும் தான். தற்சார்பு அற்ற நிலக் குத்தகையானர் படைமானியக் குத்தகையாளருடைய அலுவலைச் செய்ய முடியாதாகையால் இவ்விதி வலியுறுத்தப்பட்டது. ஆயினும் படைமானியக் குத்தகையாளர் எவரும் இம் முறை மன்றத்தில் அமர்ந்து அலுவல் செய்யவில்லை.

எட்வர்டு செய்த சட்டங்களுள், நிலஉடைமையைப்பற்றிய சட்டங்களைப்போல எதிர்காலத்தை உருவாக்குவனவும், அவர் செய்த அமைப்பிலேயே இன்றுவரை நடைமுறையில் இருந்துவரக் கூடிய சட்டங்கள் வேறெதுவும் இல்லை. ஒரு காலத்தில் நாட்டில் முக்கியமான அரசியலமைப்பாக இருந்த படைமானியமுறை, தனது பொருளியல் தன்மைகளை மட்டிலும் நாட்டில் நிலைபெறும் படியாகவிட்டு, அரசியல் தன்மைகளை இழந்து, பிற்காலத்தில் மறைந்துபோகவும், அதனுல் தோன்றிய பல சிக்கலான கேள்விகளைத் தீர்ப்பதற்காக இச்சட்டங்கள் செய்யப்பட்டன. பெருமக்களைத் தாழ்த்தித் தனது வலிமையைப் பெருக்கிக்கொள்ளுதல் வேண்டுமென்ற கொள்கையோடு இச்சட்டங்களை எட்வர்டு செய்தார்; இதனுல் உண்டாகும் கடைசி விளைவு தனது நலத்திற்கே வழி செய்யுமென்பதை அவர் பெரும்பாலும் மற்ற அரசர்களை விடத் தெளிவாக உணர்ந்திருந்தார். ஆயினும் படைமானிய முறை மறையவும், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும், இதே சிக்கலான கேள்விகள் எழுந்தன; அவைகளும் இதே மாதிரியான வழியில் தீர்க்கப்பட்டன; உண்மையில் சட்டம் செய்த ஆங்கிலேயர் நெடுங்காலமாக இவற்றை நன்கு அறிந்திருந்தனர்; எனவே எட்வர்டு அரசர் பிறப்பதற்கு முன்னரே இக்கேள்விகளைத். தீர்க்கத் தொடங்கினர்.

நில உடைமைத் தொடர்புகளைப் படைமானிய முறையிலிருந்து இக்கால முறைக்கு மாற்றியதனுல் குத்தகையாளருக்குத் தெளிவான நன்மையும், பெருமகனுக்குக் குறையும் உண்டாயின. படைமானியச் சட்டமானது குத்தகையாளரை உண்மையில் குத்தகையாளராகத்தான் ஒப்புக்கொண்டதேயன்றி, அவருக்குஉடையவர் (owner) என்ற உரிமைகள் எதுவும் உண்டென ஒப்புக் கொள்ளவில்லை. இக்கால இயல்பின்படியும், பதின்மூன்றும் நூற்றுண்டில் மிகவும் உறுதியாகக் கொள்ளப்பட்ட இயல்பின்படியும், குத்தகையாளரே உண்மையில் உடையவராக ஒப்புக்கொள்ளப்

பட்டு, அவருக்கு உடையவரது உரிமைகள் யாவும் உண்டென ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்வியல்பே முடிவில் வெற்றியடைதல் திண்ணமாயிருந்தது. எனினும் இவ்வியல்புக்கு எதிராக இருந்த ஓர் இயல்பையே முதலாம் எட்வர்டின் சட்டங்கள் காட்டுகின்றன; இந்த எதிரான இயல்பினாலேயே, இக்காலத்தில் மற்ற பெரும்பாலான நாடுகளிலுள்ளதைவிட நமது நாட்டிலுள்ள நிலச் சட்டத்திற்றான் படைமானிய முறையின் ஆதிக்கம் சிறிது கூடுதலாகக் காணப்படுகிறது. பாராளுமன்றத்தில் பெரும்பாலோர் பெரிய பெருமக்களே; அவர்களுக்கெல்லாம் பெரிய பெருமகனான அரசருடைய உதவியினால், அவர்கள் தங்களது நலன்களைக் காத்துக் கொள்ளும் இயல்பில் சட்டங்களை வகுத்தனர். ஆயினும் நமது நிலச்சட்டத்தின் தோற்றத்தையும், வரலாற்றையும், பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் அதனின்று தோன்றிய பல்வேறு சட்டவகைகளையும் நாம் நன்கு அறிந்துகொள்ளவேண்டுமானால், வழக்கறிஞர்களும் முறைமன்றங்களும் குத்தகையாளருக்குச் சார்பாக இருந்து, அவருடைய நிலத்தை அவர் அவருடைய விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளலாமென்ற உரிமையை ஒத்துக் கொண்டனரென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். உண்மையில் நமது நிலச்சட்டத்தின் வளர்ச்சியானது சட்டமன்றத்துக்கும் முறைமன்றங்களுக்கு மிடையேதோன்றிய ஒரு சண்டையின் பயனேதான் என்று சொன்னால் அது மிகையாகாது.

இவரால் செய்யப்பட்ட சட்டங்களின் ஆண்டுகள் முன்பே குறிக்கப்பட்டுவிட்டன; எனவே நாம் இங்கு இவற்றின் ஆண்டுகளைக் குறிப்பிடாமல் அவற்றில் உள்ள எளிய சிறு கேள்விகளை விடுத்துச் சிக்கல் நிறைந்த கேள்விகளை ஆராய்ந்து பார்க்கலாம். பொருளியல் வருமானத்திற்கு மதிப்பு கூடுதலாகவே, படைமானியப் பண உதவிகளான, விடுதலைப்பணம் (relief), பொறுப்புரிமைப் பணம் (wardship), திருமணப் பணம் (marriage), உரிமையாளில்லாப் பறிமுதல் செய்தல் (escheat) ஆகியவற்றின் மதிப்பும் பெருகலாயிற்று. பழைய படைமானியமுறையில் இந்தப் பண உதவிகளெல்லாம் மானியத்திலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயாகக் கருதப்படவில்லை; இவையெல்லாம், பெருமகனே நிலத்திற்கு உடையவர் என்பதையும், கிழான் ஒரு குத்தகையாளர் என்பதையும் காட்டுவனவாகக் கருதப்பட்டன. இப்பொழுது, நிறைய வருவாய் உடையவராக இருப்பது, கிழாட்களை உடையவராய் இருப்பதைக் காட்டிலும் மிக்க நல்லதொரு விளைவாகக்கருதப்பட்டது. உரிமையாளில்லாமல் மானியத்தைப் பறிமுதல் செய்தலும், அல்லது கிழான் கொடுங் குற்றம் செய்ததற்காக மானியத்தைப் பறிமுதல் செய்தலும், மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாகும்.

ஏனெனில் இப்பறிமுதலினால் மானியம் முழுவதும் அதன் விடுமுதலோடு, [1] பெருமகனுடைய ஆட்சிக்கு வந்துவிட்டது. இதைப் போலவே பொறுப்புரிமையும் ஊதியம் மிக்கதாக இருந்தது; ஏனெனில் இதன்படி, உரிமையாளர் சிறுபான்மை வயதினராயிருக்கும் வரையிலும், மானியத்தின் வருவாய் முழுவதும் பெருமகனைச் சேரும். இதில் பெருமகனது கடமையெல்லாம் தனது கிழாரின் குழந்தைகளை அவர்களது நிலைக்கு ஒத்தவகையில் வளர்க்க வேண்டுமென்பதே. உரிமையாளர் பெண்ணாயின் அவரைத் திருமணம் செய்துகொடுக்கும் உரிமையும் பொறுப்புரிமையைப்போன்றதே. இவ்வுரிமையினால் மானியத்துக்கு உரிமையாளாகும் தன்மையை நல்ல விலைக்கு அதன் விடுமுதலில் ஒரு பெரும் பகுதிக்குக் கணவனாக வருபவரிடம் கொடுக்கலாம். விடுதலைப் பணம் என்பது (உரிமையாளாக மானியத்தை ஏற்கும்போது பெருமகனுக்குக் கொடுக்கப்படவேண்டிய பணம்) மேற்கூறியவற்றைப் போல அவ்வளவு முக்கியமானதன்று; எனினும் ஒரு தலைமுறையில், மானியத்தின் ஓராண்டிற்குள்ள வருமானத்தை அதனின்றும் பெற முடியும்.

குத்தகையாளர் பலர் இடைக்காலத்தில் செய்ய விரும்பியதைப் போலக் கோவிலுக்கு அல்லது துறவிமடத்திற்கு நிலம் அளிக்க விரும்பினால் ஒரு சிக்கலான வினா எழுந்தது. கோவிலோ அல்லது துறவிமடமோ, இறப்பதுமில்லை, திருமணஞ் செய்வதுமில்லை; எனவே இவற்றிற்கு நிலம் மானியமாக அளிக்கப்படாமல் படைமானிய உதவிகளான பறிமுதல் வரும்படி, பொறுப்புரிமைப் பணம், விடுதலைப் பணம், முதலியன படைமானியப் பெருமகனுக்குக் கிடைக்காது. எனவே இந்நிலையிலளிக்கப்படும் மானியம் எந்நிலையிலும் விட்டுப்பிரியாத கைக்கு அதாவது ஓர் நிலையத்துக்கு வந்து சேர்ந்ததாகும்; இம்மாதிரியான சிக்கலைத் தடுக்க அக்காலத்தில் ஐரோப்பா முழுவதிலும் கையாளப்பட்ட ஓர் எளிய முறை உண்டு. இதன்படி செய்யப்பட்ட மார்ட்டுமெயின் சட்டமானது, பெருமகனது உடன்பாடு இல்லாமல் நிலம் இவ்வாறு கோயில்களுக்கும் மடங்களுக்கும் அளிக்கப்படுவதைத் தடைசெய்தது; இதைமீறுபவரது மானியம் பெருமகனால் பறிமுதல் செய்யப்படும். இத்தடுப்பு முறையை நடைமுறையில் செயல்படுத்தக் கூடுமானால் இது நல்ல எளியதொரு முறையே. ஆயினும் நடைமுறையில் இவ்வழியில் நிலத்தை மாற்றுதற்குத் தனியாக விலக்குரிமைகள் வழங்கப்பட்டன; இச்சட்டத்தைக்கொண்டே, அதனை மீறுதற்கு அறிவுத்திறன் மிக்க வழக்கறிஞர்கள் முறைமன்றங்களின் துணைக் கொண்டு ஒரு வழியைக் கண்டுபிடித்தனர்.

---

[1] Capital Value

மூன்ருவது வெஸ்ட்மின்ஸ்டர் (Quia Emptores) என்ற சட்டமும் ஏறக்குறைய மேற்கூறிய கேள்வியைப்போன்ற ஒன்றைத் தீர்க்க முயன்றது. பழைய படைமானிய முறையானது, உட்பிரிவுப் படைமானிய முறையைத் (subinfeudation) தடுக்கும் தன்மை உடையதன்று. இவ்வுட்பிரிவுப் படைமானிய முறையின்படி, குத்தகையாளர், தனது மானியத்திலேயே பல சிறு உள் மானியங்களை உண்டாக்கித் தான் தனக்கு மேலான பெருமகனுக்குச் செய்யும் அலுவல்களுக்கு ஈடாக அம்மானியத்தை வைத்திருப்பதுபோல, அதே வகையான அலுவல்களைத் தனக்கு வேறு சிலர் அளிப்பதற்கு ஈடாக அச்சிறு மானியங்களை அவருக்குக் கொடுத்தல் இயலும். உண்மையில் நாட்டின் அரசு அலுவல்கள் ஒழுங்காக கவனிக்கப்பட வேண்டுமாயின் இத்தகைய முறையில்தான் படைமானிய முறையானது பரவுதல்வேண்டும்; எனினும் படைமானிய முறையின் மதிப்பில் மாறுதல் ஏற்படவே சிக்கலான கேள்வி எழுந்தது. 'ஏ' என்பவரிடமிருந்து மானியம்பெற்ற 'பி' என்ற குத்தகையாளர், தனது அம்மானியத்திலிருந்து ஒரு பகுதியை 'சி'க்கு உட்பிரிவு மானியமாகக் கொடுப்பாராகில், 'பி'யின் மானியத்தைப்பற்றி ஏற்படும் உரிமையாளரில்லாப் பறிமுதல்களும் பொறுப்புரிமைகளும் அவரது வழியினரைப் பொறுத்த அளவில் மட்டுமே நிகழும்; 'சி' அடைந்துள்ள மானியத்தின் மதிப்பையும், வருமானத்தையும் 'ஏ' அடைய முடியாமல் அவர் இழக்க நேரிடுகிறது. 'சி' எந்த அலுவல்களுக்கு ஈடாக 'பி' யிடம் மானியத்தை வாங்கியிருக்கிருரோ, அந்த அலுவல்களைத்தான் 'சி' யிடமிருந்து 'ஏ' யானவர் பெறமுடியும். மூன்ருவது வெஸ்ட்மின்ஸ்டர் (Quia Emptores) என்னும் சட்டத்திருல், மேல்பெருமக்கள் இத்தகைய உட்படைமானியப் பிரிவின்மூலம் தங்களுக்கு உண்டாகிற பொருள் அழிவினின்றும் தங்களைக் காத்துக் கொள்ளுவதற்கு முயன்றனர். இதன்படி, உட்பிரிவுப் படைமானிய முறைக்கு இணக்கம் கொடுக்கப்பட்டது; ஆனல் உட்பிரிவு மானியம் வாங்கியவரெல்லாம், அதை அளித்தவருடைய குத்தகையாளரல்லர்; உட்பிரிவு மானியங்களை மொத்த மானியமாக முதலில் அளித்த பெரிய பெருமகனுக்கே இவ்வுட்பிரிவு மானியத்தார் குத்தகையாளராவர்; எனவே இவரெல்லாம், பெரிய பெருமகனுக்கு, உட்பிரிவு மானியங்களைக் கொடுத்த குத்தகையாளர் அளிக்கவேண்டிய படைமானிய அலுவலில் ஒரு பகுதியை அளிக்க வேண்டும்; ஏனெனில் இச்சிறு உட்பிரிவு மானியக்காரர் வைத்திருக்கும் மானியங்கள், உண்மையில் அவருக்கு அவைகளைக் கொடுத்த குத்தகையாளர் வைத்திருக்க வேண்டியவையாகும். மேற்கூறிய எடுத்துக்காட்டின் மூலம் விளக்கினல், 'பி' தனது

நிலத்தை உட்பிரிவு மானியத்தில் பிரிக்கலாம்; ஆயினும் அவர் அவ்வாறு செய்யும்போது, 'சி' யானவர் 'பி' யின் குத்தகையாளராக மாட்டார்; ஆயின் அவர் வைத்திருக்கும் நிலம், 'பி' யின் மானிய மாகையால், 'பி' யானவர் 'ஏ' க்கு அளிக்க வேண்டிய அலுவல் களின் ஒரு விகிதத்தை, 'ஏ' க்குத்தான் அளிக்கவேண்டும். எனவே உட்பிரிவுப் படைமானிய முறையினால் தோன்றிய புது மானியத் தைப் பற்றி எதிர்காலத்தில் உண்டாகும் படைமானிய உதவிப் பணங்களெல்லாம், 'பி' க்குச் செல்லாது; அவை 'ஏ' க்குத்தான் உரியதாகும். கொள்கையைப் பொறுத்த அளவில், இம்மாதிரி யான உட்பிரிவுப்படைமானியத்தால் ஏற்படும் பொருள் இழப்பி லிருந்து பெருமகன் விருப்பினால் தன்னைக் காத்துக் கொள்ள இயலும்; எவ்வாறெனில் அவருடைய குத்தகையாளர் மானி யத்தைப் பிரித்து வழங்கு முன்னர் பெருமகனுடைய இசைவு பெற்றாக வேண்டும்; எனினும் இவ்விதியானது அரசருடைய நேர்க் குத்தகையாளரால் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டது; மற்றவர்களால் நடைமுறையில் பின்பற்றப்படவில்லை; இப் பொழுது செய்யப்பட்ட இச்சட்டமானது, அதிற் குறிக்கப் பெற்ற கட்டுப்பாட்டுக்கு இணங்க, படைமானிய அலுவலுக்கு ஈடாக மானியத்தை உடைமையாகப் (fee-simple) பெற்றிருப்ப வர் எவரும், அதனைப்பிரித்து மற்றவருக்குக் கொடுக்கலாமென உரிமை வழங்கிற்று. அரசருடைய நேர்க் குத்தகையாளரைப் பற்றி இச்சட்டம் யாதொன்றும் குறிப்பிடவில்லை; எனவே அவர் கள் முன்போலவே தமது மானியத்தைப் பிரித்து வழங்குவதற்குத் தமது பெருமகனது இசைவைப் பெற வேண்டியவராயினர்.

எனினும் இச்சட்டத்தின் மற்றப் பகுதிகளெல்லாம் அரசரது குத்தகையாளருக்கும் பொருந்தும்; என்வே எல்லா உட்பிரிவுப் படைமானிய முறையும், படைமானிய முறை என்ற பொருளில் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இம்மாதிரியான பழக் கத்தினால் படைமானியக் குத்தகையாளரர்க நிலம் வைத்திருப்ப வரெல்லாம் அரசருடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளும் படி செய்யப்பட்டனர்; இதனால் படைமானிய முறையில் தனித்து இருக்கும் உரிமையும், வேறு உரிமைகளும் பரவுவது நின்று, அரசரது நேர்க் குத்தகையாளரது எண்ணிக்கை பெருகிற்று.

இரண்டாவது வெஸ்ட்மின்ஸ்டர் சட்டத்தின் ஒரு பகுதி, 'ஏதேனும் ஒரு கட்டுப்பாட்டின் பேரில் நிலத்தை விற்பது, என்பதா கும் (Dedoris conditionalibus). இது மேற்கூறியதைவிடச் சிக்கல் நிறைந்த, எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதுமாகிய ஒரு பொருளைப் பற்றியது. படைமானியச் சட்டமானது பழைய

டியூடானியச் சட்டத்திலுள்ள பல கொள்கைகளைப் பின்பற்றியது. இதனைகய படைமானியப் பழக்கத்தின்படி, நிலத்தை விற்பவர்; அதனை வாங்குபவருக்கு அந்நிலத்தின் முழு உடைமை உரிமையையும்கொடுக்காமல், உடைமை உரிமையில் ஒரு பகுதியை மட்டுமே கொடுப்பது வழக்கம். படைமானிய முறையின் அடிப்படைக் கொள்கைகளின்படி, நிலத்தை விற்பவர், வாங்குபவருக்கு, அதன் முழு உடைமை உரிமையையும் கொடுத்த போதிலும், அவர், தனக்கு, அதை வாங்குபவர் பற்றுறுதியும்,[1] உதவி அலுவல்களும் செய்யவேண்டுமெனவும், இவ்வாறு செய்யப்படாவிடில், கொடுத்த நிலம் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமெனவும், இதுபோன்ற பல கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ளலாம். படைமானிய முறையின் அரசியல் அமைப்பைவிட, பொருளியல் அமைப்பே மிகவும் சிறப்பாகப் பரவியதால், நிலத்தைக் கொடுப்பவர், அந்நிலம் தனது உடைமையாக மீண்டும் தன்னிடத்திற்கே பறிமுதல் மூலமாக வரும்படியான வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொண்டால், அது அவருக்கு நலன் பயப்பதாக இருந்தது. இதேசமயம் நிலத்தை வாங்கியவர் அதில் தனது குடும்பத்தை நிலையாகக் குடியேற்று வதற்கு விரும்பினராதலின், அவர், தான் வாங்கிய நிலத்தைத் தனது வழியினர் இழந்து விடாமலும், வேறொருவருக்கு விற்காமலும் ஆக்கிவிட்டால், அதில் நன்மை இருப்பதை உணர்ந்தனர்.

இது விளக்கமாக ஓர் எடுத்துக் காட்டை இங்கே கூறுவோம். 'ஏ' என்பவர், நிலத்தை 'பி' என்பவருக்கும், அவருடைய சட்டப்படியான அவன் வழியினருக்கும் விலைக்குக் கொடுக்கிறார்; எனவே, இம்மாதிரியாகக் கொடுப்பது சட்டப்படியானதாக இருந்தால், அதில் குறிப்பிட்டவர் தான் இந்நிலத்திற்கு உரியவராகலாம்; எனவே, இந்நிலையில், அந்நிலத்தை அதனைக் கொடுத்தவரே மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு வாய்ப்புப் பெறுகிறது. இம்மாதிரியான கட்டுப்பாட்டின் பேரில் வழங்கப் பட்ட நிலம் மரபுரிமையாளர் இல்லாமல் திரும்ப எடுந்துக் கொள்ளப்படும் முறையைக் குறிப்பிடுவதற்கு, 'மரபு நின்று உடைமை மீளுதல்' (reversion) என்ற சொற்றொடரைப் பயன் படுத்தினர்; அதாவது மரபு உரிமை வழி நின்று போனால், அதற் குரிய நில உடைமை அதைக் கொடுத்தவருக்கே திரும்பவும் வந்து சேருகிறது என்பது பொருள். ஆயினும், நிலம் வாங்கியவரும் அதனைத் தனது மரபு வழியினரை விடுத்து வேறு எவருக்கும் விற்பதற்கு உரிமை கிடையாது; இவ்வாறு செய்தற்கு அவரது வழிவந்த உரிமையாளருக்கும் உரிமை கிடையாது; ஏனெனில் இந்நிலத்தை வாங்கியதைக் குறிக்கும் உடன்படிக்கைப் பத்திரத்தில், இந்நிலத்திற்கு உரியவராகப் பொதுவாக எவரையும்

[1] Fealty

குறிப்பிடாமல், குறிப்பாக அதனை வாங்கியவரும், அவரது வழியினரும் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தனர். எனவே இத்தகைய நிலத்தை அடைந்த ஒவ்வொரு உரிமையாளருக்கும், தத்தம் வாழ் நாளளவும் அதன் பயனை அடையும் உரிமை மட்டுமே இருந்தது. இம்மாதிரியாக விற்பது அல்லது வாங்குவது என்ற முறையில், அது பற்றிய நிலம் முழுவதும் கொடுக்கப்படாமல், அதனின்று ஒரு சிறு பகுதி குறைக்கப்பட்ட அளவிலேயே (taille) கொடுக்கப்பட்டது. எனவே நிலத்தை வாங்குபவர் அதன்மீது முழு உடைமை உரிமையையும் அடையாமல், அதன்மீது கட்டுப்பாடு உடைய உரிமையை (fee tail) மட்டுமே உடையவராயினர். எனவே இம்முறைப்படி நிலம் மரபு உரிமையில் கட்டுப்படுத்தப்பட்ட நிலமாயிற்று. சிலகட்டுப்பாடுகளுடன் நிலத்தை விற்பதனால் மரபு நின்று உடைமை மீளுதல் என்ற உரிமை வளருவதற்கு வாய்ப்பு மிகுதியும் பெருகிற்று; இத்தகைய முறையில் அமைந்த நிலம் விற்கும் உரிமை ஒரு சொத்து உரிமையாக மதிக்கப்பட்டு, அது நிலத்தை விற்பவருக்கே உண்டு எனக் கொள்ளப்பட்டது; இவ்வுரிமையை, அவர், விரும்பினால், வேறொருவருக்கு விற்கவும் கூடும்; அதாவது, தமக்கு உரியதான மரபு நின்று உடைமை மீளுதல் என்ற உரிமையை அவர் விற்கலாம், அல்லது இவ்வுரிமையின்படி மீளும் மானியத்தை அவர் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் நேர்குத்தகை மானியமாகவோ, உட்பிரிவு மானியமாகவோ கொடுக்கலாம். மேற்கூறிய எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம்; மேற்கூறிய முறையின்படி, 'பி' என்பவருக்கு மானியம் விற்கப்பட்டு, அவருடைய வழியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மரபு உரிமையாளர் இல்லாமல் நின்றுபோய் முடிவடைந்து விட்டால், அந்த மானியம் அதை விற்றவரிடம் திரும்ப மீளுதல் இல்லை; மீளாமல் அது தனித்து இருந்து, பிறகு இரண்டாவது எஞ்சி நிற்கும் வழியினரான 'சி' என்பவருக்கு அல்லது அவருடைய உடன் பிறந்தாருக்கு அல்லது மகளுக்கு எஞ்சிய உரிமையாகக் கொடுக்கப்பட்டது; இதில் 'ஏ' க்கும் அவரது முறையான ஆண் மரபு வழியினருக்கும் ஒரு பகுதி கொடுக்கப்பட்டது. எனவே இவ்வகையாக எஞ்சிய உரிமை என்ற கருத்தும், எஞ்சி நிற்கும் உரிமையாளர் என்ற கருத்தும் தோற்றுவிக்கப்பட்டன.

படைமானியக் கொள்கைகளை எளிதாக விரிவுபடுத்தியதனால் தோன்றுவனவே இம் முறைகள் ஆகும்; இவற்றைச் சட்டமாகச் செய்வதற்கு யாதொரு புதிய சட்டமும் தேவையில்லை. எனினும் நிலத்தை வாங்கியவர் தமது விருப்பம் போல் அதனைத் தடையில்லாமல் விற்பதைத் தடைசெய்வனவாகவே இச் சட்டங்கள் இருக்கின்றன; மேலும் நிலத்தை வாங்கியவரது விருப்பங்கள் அவரது

வழியினரதை ஒத்திருக்க மாட்டா; எனவே அவ் வழியினர் நிலத்தை விற்க முயன்ருல், அதை இச் சட்டங்கள் தடைப்படுத்துவனவாயின. எனினும், மற்றச் சட்டங்களில் உள்ளது போலவே, இச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், பொதுவாக வழக்கறிஞரும், முறை மன்றங்களும், "சொத்தை எவரும் விருப்பம் போல விற்கலாம்" என்ற கருத்தையே ஒப்புக்கொண்டனர்; எனவே, இவ்வாறு சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்ட மரபுரிமையில் கட்டுப்படுத்தப்பட்ட உடைமை என்பதை வழக்கறிஞரும், முறை மன்றங்களும், தாங்களாகவே வழக்கமாகக் கொடுத்த புதியதொரு விளக்கத்தின் மூலம் தகர்த்தெரியலாயினர். இவர்கள், இம்மாதிரியாக வாங்கப்பட்ட நிலமானது, அதை வாங்கியவருக்கும், அவரது ஆண் வழியினருக்கும் உரியதெனவும், வாங்கியவருக்கு ஆண் உரிமைவழியினர் பிறந்ததும், வாங்கியவர், அம்மானியத்தின் உடைமை உரிமையை, தான் இனி சட்டப்படி அதற்கு உரியரல்லராயினும், வேருெருவருக்கு விற்பதற்குத் தகுதியுடையவர் எனவும் விளக்கம் கொடுத்தனர். முறை மன்றங்கள் கொடுத்த இத்தகைய விளக்கத்திற்கு எதிராகத்தான். இந்தக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு நிலம் வழங்கும் சட்டம் (De Donis conditionallbus) செய்யப்பட்டது. இச் சட்டமானது மேற்கூறிய விளக்கத்தைச் சட்டத்திற்குப் புறம்பானதெனக் கூறி, கட்டுப்பாடுகளுக்குட்பட்டு கொடுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய விளக்கங்கள், அக்கட்டுப்பாடுகளுக்கு ஒத்தமுறையில் இருக்கும்படியாகத் தான் அமைய வேண்டுமென்பதாகவும் கூறிற்று. இவ்வகையாக இச் சட்டம் படைமானிய முறை அதற்குரிய சட்டப்படி வளருதற்கு உதவியது; இது மரபுரிமையில் கட்டுப்படுத்தப்பட்ட உடைமை என்னும் அமைப்புக்களை (system of entails) நிலைத்து நிற்கும்படிச் செய்தது; ஆயினும் இச் சட்டம், இந்த மரபுரிமையில் கட்டுப்படுத்தப்பட்ட உடைமை முறையைத் தகர்த்து நீக்குவதற்கு வேறு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதையும் வழக்கறிஞர்களுக்கு உணர்த்திற்று.

பாராளு மன்றம் வழக்கறிஞரது முயற்சிகளைத் தோற்கடிப்பதற்காகப் பல சட்டங்களைச் செய்தது; என்ருலும் விருப்பம்போல் உடைமையை விற்க முடியாமல் தடுக்கிற, கட்டுப்பாடுடன் நிலம் வழங்கும் சட்டம் போன்ற சட்டங்களின் நோக்கங்கள் நிறைவேருமல் செய்வதற்காகப் பல வழிகள் உண்டாக்கப்பட்டன; இவற்றையெல்லாம் நுட்பமாக விரித்துரைத்தல் இந் நூலின் நோக்கத்திற்குத் தேவையன்று. இவ் வழிகளிஞல் தோன்றிய இரு விளைவுகளைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் வேண்டும். திரும்பி வராத முறையில் கோவில்களுக்கும், மடங்களுக்கும் நிலம் அளிக்கப்படுவதைத் தடுக்கச் செய்யப்பட்ட பழைய சட்டங்களைப் பயனற்ற

தாகச் செய்ய "மீட்பு முறை" (recovery) என்று ஏமாற்றுவதற்காக இருவர் கூடித் தொடரும் சட்டவழக்கு (collusive lawsuit) என்பதன் மூலம் நிறுவப்பட்டது. எடுத்துக்காட்டாக, 'ஏ' என்பவர், 'எக்சு' என்ற துறவி மடத்துக்கு மானியம் வழங்க விரும்புவதாக வைத்துக் கொள்ளுவோம்; இவர் இவ்வாறு வழங்குவதற்கு மார்ட்டுமெயின் சட்டத்திற்கியைய, உடன்பாடு பெற முடியாது. ஆயினும் இவரும் மடமும் தமக்குள் செய்து கொண்ட ஓர் ஏற்பாட்டின்படி, மடம், அந்நிலத்திற்கு 'ஏ' என்பவருக்கு உள்ள உரிமையைக் காட்டிலும், தனக்குள்ள உரிமை மேலானது என்பதாகக் கூறி, நிலத்தைக் கேட்டு, 'ஏ' யின் மீது முறை மன்றத்தில் வழக்குத் தொடருகிறது. இவ்வழக்கில் 'ஏ' முறை மன்றத்துக்கு வராமல், தாம் எதிர் வழக்காடாமல் இருந்து வழக்கு அவருக்கு எதிராகத் தீர்க்கப்படும்படி விட்டுவிடுகிறார்; எனவே முறை மன்றத்தின் தீர்ப்பின்படி அவரது நிலம் மடத்துக்கு அளிக்கப்படுகிறது. இம்மாதிரியான நடவடிக்கையே பிற்காலத்தில் "பொது மீட்பு முறை" (common recovery) எனப்பட்டது; இதுவே பதினைந்தாம் நூற்றாண்டினிறுதியில், மரபு உரிமையில் உடைமை முறை கட்டுப்படுத்தப் படுவதைத் (entails) தடுப்பதற்கு அல்லது தகர்ப்பதற்குத் தகுதியான வடிவத்தில் அமைக்கப்பட்டது. இப்பொழுது மீட்பு முறை என்பது சாக்சனியரது காலங்களிலேயே தோன்றி யிருந்ததான "பொறுப்பு மெய்ப்பிக்கும் கொள்கை" யினின்றும் (doctrine of warranty) விரிவுபடுத்தப்பட்டு எழுந்த ஒரு மீட்பு முறையேயாகும். இப்பொறுப்பு மெய்ப்பிக்கும் கொள்கையாலேதான், மானியத்தைப் புதிதாக அடைந்தவருக்கு அதன் மீதுள்ள உடைமை உரிமை உறுதியாக ஆயிற்று. ஓர் எடுத்துக்காட்டு; 'பி' என்பவர் 'ஏ' என்பவரிடமிருந்து மரபுரிமையில் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் உடைமையை அதாவது, நிலத்தை வாங்க விரும்புகிறார்; மேலே நாம் பார்த்தபடி, அதன் மீது உரிமை கேட்டு 'ஏ' யின் மீது வழக்குத் தொடருகிறார்; ஆனால் இவ் வழக்கில், 'ஏ' சும்மாயிருந்து விடாமல், தமது உடைமையின் உரிமைக்குப் பொறுப்பாக மூன்றுமவரை, 'சி' என்பவரை உறுதியாகக் கூறி, தாம் அவரிடமிருந்தே அந்நிலத்தை வாங்கியதாகக் கூறுகிறார்; எனவே அவர்தான், 'சி' அதற்குரிய உரிமைக்குப் பொறுப்புடையவராக ஆகிறார். 'சி' முறை மன்றத்துக்கு வந்து அவ்வுடைமையின் உரிமைக்குத் தாமே பொறுப்பு ஏற்கிறார்; எனவே வழக்கில் 'ஏ' யின் இடத்தை 'சி' ஏற்கிறார்; ஆயினும் 'சி' இவ்வாறு ஏற்றபின் முறை மன்றத்துக்கு வராமல், வழக்கு, எதிராளி இல்லாமல் அதைத் தொடர்ந்தவருக்குச் சார்பாக தீர்க்கப்படும்படியாக விட்டு

விட்டு மறைந்து விடுகிறார். எனவே இப்பொழுது முறை மன்றத்தின் தீர்ப்புப்படி நிலமானது 'பி' என்பவருக்கு மாற்றப்படுகிறது. இந்த மாதிரியான முறையினால், 'ஏ' என்பவரது மரபு வழியினருக்கு அந்நிலத்தின் மீதுள்ள உரிமைகளெல்லாம் அறவே நீக்கப்பட்டு விடுகின்றன; அவர்கள் வழக்குத் தொடர்ந்தால், 'சி' க்கு எதிராகத் தொடர வேண்டும். நிலத்தை வைத்திருக்கும் 'பி'க்கு எதிராகத் தொடர்தல் கூடாது என்பதாகத் தான் முறை மன்றம் தீர்ப்புச் செய்யும். இத்தகைய வழக்கில், 'சி' செய்ய வேண்டிய அலுவல்களைச் செய்தற்குச் சொத்து ஏதும் இல்லாத ஒருவரையே மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்தனர். இத்தகைய வழக்குகளெல்லாம், நாளாவட்டத்தில் முழுவதும் ஆய்வு செய்யப்படவே இல்லை; இதற்குரிய பிடிபாடுகளெல்லாம் முறைமன்றத்தில் கொடுக்கப்பட்டதும், ஆய்வு முறை முடிவுற்றதாகக் கருதப்பட்டது; அதற்குரிய கட்டணங்களும் செலுத்தப்பட்டன. மரபுரிமையில் உடைமைகள் கட்டுப்படுத்தப்படுவதைத் தடுக்க பத்தொன்பதாம் நூற்றாண்டில் வேறு ஒரு எளிய முறை கண்டுபிடிக்கப்படும்வரை, இத்தகைய "பொது மீட்பு முறை" வழக்கில் தொடர்ந்து இருந்து வந்தது.

விருப்பம் போல் நிலத்தை விற்பதைத் தடுக்கும் சட்டங்களைப் பயனற்றவையாகச் செய்யும் இன்னொரு வழியும் வெகுகாலமாக நடைமுறையிலிருந்த ஒரு செயற் பழக்கத்திலிருந்து தோன்றியது; இம் முறையினால் வேறு சில பயன்களும் விளைந்தன; வெகுகாலமாக இருந்து வந்த இச் செயற் பழக்கத்தின்படி, உண்மையில் ஒருவருக்குப் பயன் கிடைப்பதற்காக வேண்டி, ஒரு சொத்தை வேறொருவரது பெயரில் கொடுப்பதென்பது நடைபெற்றது. எடுத்துக்காட்டாக, ஒரு சொத்துக்கு 'ஏ' என்பவர் சட்டப்படி உடைமை உரிமை உடையவர்; ஆயினும் நடை முறையில் அச்சொத்தின் பயனும் நுகர்ச்சியும் 'பி' என்பவரைச் சேரும். முதலாம் எட்வர்ட்டின் சட்டங்களுக்குப் பிறகு, இம்முறை விரிவாக்கப்பட்டு, 'பயன்களின் கொள்கை' (doctrine of uses) என்பதையும், இக்காலத்தில் பெரிய அளவில் பயன்படுத்தப்படும் நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம் அல்லது பொறுப்பாண்மைச் சட்டம் (Law of Trusts) என்பதையும் தோன்றச் செய்தது. இந்த முறையும், மேலே கூறப்பட்ட மீட்பு முறைகளைப் போலப் பலபடிகளில் பெருகி விரிவடைந்த ஒரு முறையே. இது வளர்ச்சியடைந்த நிலைகள் எளிய முறையில் அமைந்தவை; ஆயினும் இவ் வளர்ச்சி படிப்படியாக நடைபெற்றமையால், இவ் வெளிய முறை அது பரந்த நீண்ட வளர்ச்சி முறையாக ஆகியதை நாம் எளிதில் புரிந்துகொள்ளச் செய்கிறது.

பொறுப்புச் சட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு: மார்ட்டு மெயின் சட்டப்படி நேரடியாகச் செய்ய முடியாத ஒரு செயலை, அதாவது ஒரு கோவிலுக்கோ துறவி மடத்துக்கோ நிலம் அளிப்பதைச் செய்வதற்கு 'ஏ' என்பவர் விரும்புகிறார்; எனவே அவர் நிலத்தை 'பி' என்பவருக்குக் கொடுத்து, இம்மாற்றல் உடன்படிக்கைப் பத்திரத்தில் அந்நிலத்தின் வருமானம் கோவிலைச் சேரட்டும் என்று குறிப்பிடுகிறார். எனவே சட்டப்படி இந் நிலமானது கோவிலுக்குக் கொடுக்கப்பட்டதன்று; அது 'பி' என்ற ஆளுக்கே கொடுக்கப்பட்டதாகும். நிலத்தை மேற்பார்வை செய்து, அதனுடைய வருமானத்தைக் கோவில் அடையும்படியாக, அதற்கு 'பி' என்பவர் இசைவு கொடுப்பார் என்பதாக 'பி' யின்மீது 'ஏ' நம்பிக்கை வைக்கிறார். இத்தகைய நம்பிக்கை மிகவும் பெரிய அளவினதாக உள்ளது; ஏனெனில் 'பி' இவ்வாறு கோவிலுக்கு இசைவு கொடுக்காவிட்டால் உண்டாகிற இந்நம்பிக்கை அழிவைச் சரிப்படுத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை. உடன்படிக்கைப் பத்திரத்தின் சான்றைப் பொறுத்த அளவில் நிலம் 'பி' என்பவருடையதேயாகும்; இந்த நிலையைத் தவிர வேறு எதனையும் பொதுச்சட்டம் ஒத்துக்கொள்ளாது. எனினும் இந்நம்பிக்கைப் பொறுப்பு முறையினால், மார்ட்டு மெயின் சட்டம் (அதாவது கோவிலுக்குப் படைமானியப் பெருமகனது உடன்பாடில்லாமல் நிலம் வழங்குவதைத் தடுக்கும் சட்டம்) விலக்கப்படுகிறது; எவ்வாறெனில் இந்த நம்பிக்கை முறைப்படி யாதொரு நிலமும் கோவிலுக்குக் கொடுக்கப்படவில்லை. எனினும் இந்த எளிய முறையின்படி அமைந்த இச்செயற் பழக்கமும் வேறு ஒரு சட்டத்தினால் தடுக்கப்பட்டது; தடுக்கப்பட்டாலும் இந் நம்பிக்கைப் பொறுப்பு முறையானது பல்வேறு வகைப்பட்ட நோக்கங்களுக்குப் பலவகையான அமைப்புக்களில் எளிதாகப் பொருந்தி வரவே, இம் முறை பெரிய அளவில் கையாளப் படலாயிற்று. இம் முறையைப் பின்பற்றி, ஒருவர் தாம் கொடுக்க வேண்டிய கட்டாயமான படைமானிய உதவிப் பணங்களைக் கொடாமல் தப்பலாம், மரபுரிமையில் கட்டுப் படுத்தப்பட்ட உடைமை முறையைத் தகர்த்து விடலாம், சதிக்குற்றத்துக்குரிய சில தண்டனைகளிலிருந்து தப்பலாம்; படைமானிய முறையின்படி அவர் வைத்திருக்கும் மானியத்தைத் தமது இறுதி விருப்பப் பத்திரத்தின் மூலம் வேறொருவருக்குக் கொடுக்க முடியாதாகையால், தாம் கடைசியாக எழுதிய விருப்பப் பத்திரத்தில் ஒரு பயனைக் குறிப்பிட்டு, அப்பயனுக்கு ஒத்த முறையில் தமது நிலத்தைப் பிறர் கையாளும்படி செய்யலாம். அவருடைய நிலங்களுக்கு என்றும் நிலையாகவும், பெயரளவிலும் இருக்கத் தக்கதாக உரிமை

யாளரை நிறுவும் பொருட்டு, ஒருவரையல்லாமல் பலர் பொறுப்பாளராக நிறுவப் பட்டனர்; அவர்களுள் ஆளின்மை (vacancy) ஏற்பட்டால் அதை நிரப்புவதற்கு அவர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. இத்தகைய முறைகளையும் நீக்குவதற்குப் பல தடவைகளில் சட்டங்கள் செய்யப் பட்டன; ஆனால் அவை பயனற்றவையாயின; ஏனெனில் இச்சட்டங்களை விலக்குதற்கு ஏதேனும் ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டே வந்தது. கடைசியில் நேர்மைச் சட்டம் அல்லது தரும நியாயம் (Equity justice) இந் நம்பிக்கைப் பொறுப்பு வகையை ஏற்றுக் கொண்டு, பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இவ்வகையை முறைமைக்கும் மனச் சான்றுக்கும் உகந்த ஒரு வகையாகக் கருதி அதனைச் செயல் படுத்தத் தொடங்கிற்று. இவ்வாறு எளிய ஒரு தொடக்கத்திலிருந்து நாளாவட்டத்தில் நம்பிக்கைப் பொறுப்பு என்ற சட்டம் வளர்ச்சியடைந்து நயக்கு வழக்கத்தில் வரலாயிற்று; இவ்வளர்ச்சிக்கு ஏற்பத் தரும நியாயச் சட்டமுறைமை அல்லது அருள் முறைச் சட்ட முறைமை (Equity jurisprudence) என்ற இயலும் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்தது,

இயல் ஏழு

பாராளுமன்றத்தின் தோற்றம்[1]

பதின் மூன்றும் நூற்றாண்டில் ஏற்பட்ட சட்டவளர்ச்சி எல்லா ஆங்கிலோ-சாக்சனியரது நாடுகளுக்கும் சிறப்பாக அமைந்திருத்தல் போலவே, அதே காலத்தில் ஏற்பட்ட நிறுவன மாறுதலும் மிகவும் பரந்த செல்வாக்கு உள்ளதாக அமைந்தது; ஏனெனில் சில நிறுவன மாறுதலால் ஏற்பட்ட விளைவுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மனித இனம் முழுமைக்கும்நன்மை பயக்குமளவிற்கு விரிவாக்கப்பட்டன. பேரவையானது (great council) பாராளுமன்றமாக- (parliament) மாறுதலடைந்ததுதான் இந்நிறுவன மாறுதலாகும்; இந்த நூற்றாண்டு முடிவடைவதன் முன்னமேயே இம்மாறுதலானது பெரும்பாலும் நிறைவேறிற்று.

பாராளுமன்றத்தின் தோற்றமுறையை, ஒரு மாறுதல் முறை எனக் குறிப்பிடுவது பொருத்தமேயெனினும், பழைய பெருங்குழு அல்லது பேரவை (old great council) யானது இப்புதிய பாராளுமன்றத்தில் ஒரு சில மாறுதல்களுடனேயே தொடர்ந்து இருந்து வந்தது; அப்பெருங்குழுவே சில மாறுதல்களுடன், இரண்டாவது

---

1 The Origin of Parliament.

ஹென்றியின் காலத்தில் இருந்தவண்ணமே இப்பொழுது பாராளு மன்றத்தில் பெருமக்கள் மன்றமாக (House of Lords) இருக்கிறது. படைமானிய முறையின் கருத்துக்கள் யாதொரு மாற்றமும் அடையாமல் செயல்பட்டு வந்த காலத்தில், சமுதாயத்தில் யாதொரு செல்வாக்கும் இல்லாதிருந்த மக்கள் கூட்டத்தார், இப்பொழுது, பெருங்குழுவின் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அழைக்கப்படவே, பாராளுமன்றம் அமையும் முறை தோன்றலாயிற்று. எனவே பாராளுமன்றத்தின் தோற்றத்தை நாம் ஆராயும்போது, இப்புதிய மக்கட் கூட்டத்தார் எந்தெந்த நிலைகளில் பெருங்குழுவில் சேர்க்கப்பட்டனரெனவும்' அவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டதற்கு உரியகாரணங்கள் எவை எனவும் நாம் முதலில் ஆராய வேண்டியிருக்கிறது.

பதின்மூன்றும் நூற்றுண்டில் பொருளியலிலும், சமுதாய இயலிலும் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இம் மாறுதலின் பயன் இந்நூற்றுண்டின் இடையிலேயே வெளிப்படையாகத் தெரியலாயிற்று. பழைய காலத்திலிருந்து ஆட்சி செய்த வந்த படைமானிய வகுப்பினரோடு கூட, இக்காலத்தில் புதிதாக வேறு இரு வகுப்பினர் தோன்றி, நாட்டின் பொதுப் பணிகளில் ஈடுபாடு காட்டலாயினர்; இதுவே இப்பொழுது தோன்றிய மாறுதல் ஆகும்; அவர்கள் காட்டிய இத்த ஈடுபாடு 'பொதுப்பணியில், என்பதை விட, இக்காலத்தில் நாம் கூறுவதுபோல், 'நாட்டை ஆளுதலில்'' என்றே, தங்களுடைய சொந்த நலன்களை வகுக்கும் 'ஆட்சிக் கொள்கையில்' என்றே நாம் கூறிலுலும் அது மிகையாகாது. அக்காலத்திய அரசுக்கும், ஆளும் வகுப்பினருக்கும் உதவி யளிப்பவராக அவர்கள் இருந்து வெகு விரைவில் சிறப்படைந்து வந்தனர். இந்த இரு வகுப்பினர் யாவரெனில் அவர் நாட்டுப்புற மாவட்டங்களிலுள்ள வீரர்களும்,[2] பேரூர்களில் வாழும் நகரவாசிகளும்[3] ஆவர்.

இதில் வீரர்கள் என்பார் படைமானிய வகுப்பினருள் ஒரு வகுப்பினராவர்; இவரும் பழைய வடுப்பினரே; ஆயினும் பதின்மூன்றும் நூற்றுண்டில் நடைபெற்ற ஒரு மாறுதலினுல் இவ்வகுப்பினர் புதியதொரு வகுப்பினராயினர்; இத்தகைய புதிய வகுப்பு சில வகைகளில் இங்கிலாந்திற்கே உரிய தனியானதாக இருந்தது; இவ்வகுப்பினரது தனித்த பண்பையும், பொருளையும் பற்றிப் பின்னுல் கூறுவோம். அரசரிடமிருந்து நேர் குத்தகையாளராகச் சிறு மானியங்களைப் பெற்ற இவ்வீரர்கள் (Knights) அரசியல் படை

[2] Knights of the country districts.
[3] burgesses of the towns.

மானிய முறையில் யாதொரு ஈடுபாடும் காட்டவில்லை; அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறிய பண்ணை முறை மன்றந்தான் அமைக்க முடியும்; அதனை விட்டுவிட்டு அவர் தனி அரசியல் உரிமையோடு இருக்க விரும்பவில்லை. அவர் அரசருக்கு அளித்த படைத்துறை அலுவல்களும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தவையாக இல்லை. அவர் அரசருடைய அவையில் செய்யவேண்டிய அலுவல்களும் பொது வாகச் செய்யப்படவே இல்லை, ஏதோ சிற்சில சமயங்களில் தான் செய்யப்பட்டன. பதின்மூன்றும் நூற்றுண்டில் அரசியல் படை மானிய முறை மறையத் தொடங்கியதால், அதனுல் பல படை மானிய வகுப்பினரது நிலை மாறியது; அரசியல் படைமானிய முறையின் மறைவு மேற்கூறிய சிறு குத்தகையாளராகிய வீரப் பெருந்தகையினருடைய நிலையையும் விரைவாகவும், மிகுதியாக வும் மாற்றியமைத்தது. ஆக்ஸ்போர்ட் ஏற்பாடுகளில் காணப் படும் உரிமைக் கோரிக்கைகள் இவர்களது நிலை மாறுதலடைந்த தைத் தெளிவாகக் காட்டுகின்றன. அதற்கப்புறமான காலத்தில் இவ் வகுப்பினரது எண்ணிக்கை வளர்ந்தது. அரசரிடமிருந்து மானியம் பெற்ற இச்சிறு நேர்க் குத்தகையாளரான வீரர்களே அல்லாமல், பெருமக்களாகிய குத்தகையாளரிடமிருந்து சிறு மானி யங்களைப் பெற்ற வீரர்களடங்கிய ஒரு வகுப்பும் இருந்தது; இவ் விரண்டு வீரர் வகுப்புக்களுக்கும் இயற்கையாக யாதொரு வேறு பாடும் இல்லை; இருந்த வேறுபாடு செயற்கையிலுண்டானதுதான். முதலாம் எட்வர்டின் நீண்ட ஆட்சியின் தொடக்கத்திலேயே இவ் வேறுபாடு முற்றிலும் மறைந்துவிட்டது. ஆண்டுக்கு இருபது பவுன் வருமானமுள்ள நிலத்தை மானியமாகப் பெற்ற எல்லாக் குத்தகையாளரும் ஒரே வகையான படைத்துறை விதிகளுக்கு உட் படுத்தப்பட்டனர். அவர்களெல்லாம் ஒரே வகையான படை அலுவலுக்கு, ஈடு விதிக்கும் சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். இதற்குக் குறைவான மதிப்பு வருமானமுள்ள சிறு நிலப்பகுதிகளை உடையவரும், இந்நூற்றுண்டில் பொருள்களின் விலைகள் உயரவே மேற் குறிப்பிட்ட அளவு வருமானமுள்ளவராகவே ஆயினர்; எனவே, வழக்கத்தில் இதுகாறும் வீரர்களாகவே ஒப்புக்கொள்ளப் பட்ட இவ்வகையான நில உரிமையாளரும், இப்பொழுது இச்சட் டத்தின்படி வீரர்களாகவே கருதப்பட்டனர். இவர்கள்தான் இத்தகைய சூழ்நிலையில் இங்கிலாந்தின் நாட்டுபுறத்தவரிடையே உயர் குடிப்பிறந்தோர் என்னும் வகுப்பினராகத் தோன்றலாயி னர்; கோட்டங்களின் அலுவல்களைக் கண்காணிக்கும் அரசியல் வேலையில் நெடுங்காலமாகவே இவ்வகுப்பினர் ஈடுபட்டிருந்தனர். சுற்றிவரும் நீதித்துறை அமைப்பினுல் இந்த வகுப்பினருக்கு முக் கியத்துவம் மேலும் வளரலாயிற்று; பெரிய நிலப்பெருமக்களைப்

பொறுத்தவரை தனிவாழ்விலுள்ள நலன்களுக்கும், பொது வாழ்வின் நலன்களுக்கும் வேறுபாடு கிடையாது; ஆனால் இந்தப் புதிய வகுப்பினரைப் பொறுத்த வரையில் இவ்விருவகை நலன்களுக்கும் சில சமயங்களில் வேறுபாடு உண்டு; இப்புதிய வகுப்பு, வலுநிறைந்ததும், நிறைய வருமானமும், உள்ளூரில் செல்வாக்கும் உள்ளதும், வாய்ப்புக் கிடைக்கும்போது, தனது கருத்தை எடுத்துக் கூறி, தனது நலன்களைக் காத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு வகுப்பு நல உணர்ச்சி மிக்கதும் ஆன ஒன்றாகும்.

இதில் மற்றொரு வகுப்பினரான நகரவாசிகள் புதிய ஒரு வகுப்பினராவர் ; இவ்வகுப்பு, நாட்டில் பழங்காலத்திலும், பாராளுமன்றம் தோன்றிய இக்காலத்திலும் உறுதியாக நிலைபெறவில்லை. எப்பொழுது வேண்டுமாயினும் பயன்படுத்தக்கூடிய முதலும், வளர்ச்சியடையும் வாணிகத்தால் வளரும் செல்வமும் இவ்வகுப்பினருக்கு இருந்ததனால்தான் இவர்களுடைய நிலைமை சமுதாயத்தில் வலுவாயிருந்தது. இங்கிலாந்து தொழில் மூலப்பொருள்களை விளைவித்துக் கொண்டிருந்த காலம் அது. எனவே அப்பொழுது ஓரளவே நடைபெற்றுக் கொண்டிருந்த தொழில்களைவிட, பட்டணங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்த வாணிகமே நாடு முழுமைக்கும் முக்கியமானதாக இருந்தது. வெளிநாட்டுப் படையெடுப்புகளினின்றும், உள்நாட்டுப் போர்களினின்றும் இந்நாடு விடுபட்டிருந்தமையால், தொடக்கத்திலிருந்தே, எதிர்காலத்தில் அதற்கு முக்கியப் பொருளாக இருந்த கம்பளி மயிரை அது பெரிய அளவில் உண்டாக்கியது; பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே நாட்டின் அரசுக்குக் கம்பளி மயிர் வாணிகத்தினின்றும் நல்ல வருமானம் கிடைக்கக் கூடுமென்பதை யாவரும் அறிந்து கொண்டனர். முதலாம் ரிச்சர்டின் ஆட்சிக் காலத்திலேயே பட்டயம் வழங்கப்பட்ட நகரங்களின் எண்ணிக்கை மிகவும் பெருகலாயிற்று. ஜானின் ஆட்சியில் இப்பெருக்கம் இன்னும் விரைவாக ஏற்பட்டது. நார்மானியரது வெற்றியினால் படைமானிய முறை இங்கிலாந்தில் புகுத்தப்பட்டாலும், அந்நாட்டில் முன்னரேயே சாக்சனியரது ஆட்சி நிலப்பிரிவுகளில் வேரூன்றியிருந்த தன்னுரிமை நிலைமைகள் (condition of local independence) அதனால் மாற்றப்படவில்லை; ஆயினும் படைமானிய முறையினால் இப்பட்டணங்கள் அரசர், பெருமக்கள், மேற்றிராணியார்கள் ஆகியோரது மானியங்களோடு அவர்களுடைய ஆட்சிக்குள் வந்துவிட்டன; சமயநிலையத்தின் மானியத்தோடு பல பட்டணங்கள் சேர்ந்திருந்தன. பெருமகனுக்குரியதாகிய இத்தகைய பட்டணம், அவருடைய பண்ணை நிலங்களின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது ; எனவே நிலஊழியர் பெருமகனுக்கு அவர் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்

தும், பல தடைகளுக்கு உட்பட்டும் இருந்தது போல், இப்பட்டணங்களும் பெருமகனுக்கு அடங்கியிருந்தன.

இத்தகைய கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டிருந்தமையால், இத்தகைய பட்டணங்களுக்குப் பலவகையான உரிமைகளைப் பட்டயத்தின் மூலமாக வழங்குவது என்பது, படைமானியக் காலத்திலேயே தோன்றிய ஒரு பழக்கமாகும். எனவே இப்பழக்கத்தினால் பட்டணம் சிறிது சிறிதாக மேற்கூறிய தடைகளிலிருந்து விடுபட்டது. இவ்வாறு இங்கிலாந்திலுள்ள பட்டணங்களுக்குப் பட்டயத்தின் மூலமாக வழங்கப்பட்ட உரிமைகளை நான்காகப் பாகுபாடு செய்யலாம்; சில உரிமைகள் சில பட்டணங்களுக்கும், மற்றவை வேறு சில பட்டணங்களுக்குமாக வழங்கப்பட்டன; எல்லா உரிமைகளும் அரசருக்கு மிகவும் வேண்டிய பட்டணங்களுக்கே கொடுக்கப்பட்டன. நால்வகை உரிமைகளாவன: முதலாவது, படைமானியப் பெருமகனுக்கு அவரது ஊழியர் அல்லது அடிமையின் மீதுள்ள உரிமைகளினின்றும் இப்பட்டணங்களுக்கு விடுதலை; அதாவது ஊழியர் தமது திருமணத்துக்காக, அவருடைய பெருமகனுக்குத் தண்டப்பணம் செலுத்தும் உரிமை, மற்றும் இவைபோன்ற உரிமையினின்றும் இப் பட்டணங்களுக்கு விடுதலை; இரண்டாவது இப்பட்டணங்களுக்குப் பொருளியலில் விடுதலை; தீர்வை செலுத்துதலினின்றும் விடுதலை; சந்தை கூட்டுவது போன்றவைகளுக்கு உரிமை; மூன்றுவது, சட்டத் துறையில் ஒரு சில உரிமைகள்; வேறு முறைமன்றங்களின் ஆட்சிக்குட்படாமல், தங்களுக்குத் தாங்களே முறைமன்றங்களை அமைத்துக் கொள்ளவும், தீர்ப்புச்சான்றுளர் குழுமுறையில் அல்லாமல் வேறுவழியில் வழக்குகளை ஆய்வு செய்யவும் உரிமைகள்; நான்காவது, ஆட்சித்துறையில் ஒருசில உரிமைகள்; அரசரது அலுவலர்களை விலக்கவும், தங்களுக்கு வேண்டிய அலுவலர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், தங்களுடைய உள்ளூர்ப் பகுதிகளின் ஆட்சிமுறையைத் தாங்களே ஏற்படுத்தவும் ஆகிய உரிமைகள். முழு உரிமைகளையும் பட்டயத்தின் மூலமாகப் பெற்ற பட்டணங்கள், கோட்டத்தில், தனித்து நூறுகள் இருக்கும் தரத்தில் இருந்துவந்தன; ஆயினும் இடைக்காலத்தின் இறுதிக்குள் அவைகளுள் பல, தங்களுக்குத் தனியாகக் கொத்தவால்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றுத் தாங்களே கோட்டங்கள் என்ற நிலைமையை அடைந்தன. முழு உரிமைபெற்ற பட்டணங்கள் கோட்டத்தின் முறைமன்றத்தில், தனியான கூறுகளாக அமைந்து, சுற்றிவரும் முறைவர்களைக் கண்டு, அலுவல் செய்யும் சலுகைகளைப் பெற்றிருந்தன.

படைமானிய முறையில் அரசரோடு தொடர்பு ஏதும் இல்லாத ஒரு சிலர் சிற்சில சமயங்களில் பெருங்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தார்கள்; அவ்வாறு இருந்தாலும், பொதுவாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இங்கிலாந்தில், குத்தகையாளர் என்ற நிலையில்லாதவர்கள் படைமானிய வகுப்பினரல்லாத சமுதாயத்தினரின் ஆட்பேர் உரிமை பெற்றவர்களாக (delegates) இப்பெருங் குழுவில் பெரிய அளவில் கலந்து கொள்ளுவதென்பது இயலாததாகவே இருந்தது. ஆயினும் பதின்மூன்றும் நூற்றாண்டில் இவ்வாறு நடைபெற்றது என்பது, படைமானியமுறை மறைந்ததையே காட்டுகிறது. பழைய படைமானியப் பெருங்குழுவில், படைமானிய அடிப்படையில் அல்லாமல், சமுதர்யத்தில் படைமானிய அமைப்பிலில்லாத வகுப்புகளின் வகையாட்களாகப் புதியவர்களைச் சேர்த்ததனால் பாராளுமன்றம் அமைந்தது. இவ்வாறு புதியவர்களைச் சேர்க்கவும், பழைய பெருங்குழுவின் அமைப்பில் ஒரு மாறுதல் ஏற்பட்டது; இம்மாறுதல் முற்காலத்திலிருந்த டியூடானிய நாட்டுப் பேரவையானது படைமானியப் பெருங்குழுவாக மாறுதலடைந்ததைப் போலிருந்தது. பெருங்குழுவின் அமைப்பில் ஏற்பட்ட இந்த மாறுதல், அதனமைப்பைப் பொறுத்தவரையில் ஒரு புதிய கொள்கையை, அதாவது வகையாள் கொள்கையை அல்லது பகராண்மைக் கொள்கையைப் (Principle of representation) புகுத்தியதாக ஆயிற்று. ஆயினும் இம்மாறுதலை மிகைப்படுத்திக் கூறுதல் கூடாது. இவ்வாறு பதின்மூன்றும் நூற்றாண்டில் புகுந்த புதிய கூட்டத்தினருக்குத் தங்களுடைய வகுப்பு, தங்களுடைய நலன்கள் ஆகியவற்றைப் பற்றியல்லாமல், வேறு வகுப்பினரையோ, அவரது நலன்களையோ பற்றித் தீர்மானித்து முடிவு செய்யும் வேலைகள் உண்டு என்பதற்கு ஒரு சான்றும் இல்லையென்பது நாம் நினைவில் வைக்கத்தக்கது. பழைய பெருங்குழு என்ற நிலையிலும், அது யாதொரு மாற்றமுமின்றி இருந்து வந்தது. நெடுங்காலமாக அது ஒரோர் சமயங்களில்தான் பாராளுமன்றமாக வேலைசெய்து வந்தது; நெடுங்காலத்திற்கு அதனுடைய தனித்த அதிகாரங்களும், வேலைகளும் தொடர்ந்து இருந்தன. அதில் புதிதாகச் சேர்ந்த வகுப்பினர், தற்காலிகமாகத்தான் அதனோடு சேர்க்கப்பட்டனர்; அவர்கள் அக்குழுவின் தன்மையையே மாற்றக் கூடிய அளவிற்கு அக்குழுவின் உறுப்புக்களில் சேர்க்கப்படவில்லை.

'நாம் இக்காலத்தில் கையாளுகிற வகையாள் முறை (Representative system) என்ற கருத்திற்குத் தோற்றுவாய் எது? என்பதைப் பற்றி இன்னும் அறிஞர்கள் யாதொரு முடிவுக்கும்

வரவில்லை. இக்கருத்து மட்டும் ஒரு தோற்றுவாயினின்றும், இக் கருத்தை நாட்டின் அரசியலில் வெளிப்படுத்தும் நிறுவன அமைப் புக்கள் வேறொரு தோற்றுவாயினின்றும் தோன்றின என்பதே இதைப் பற்றிய முடிவான தீர்மானமாக இருக்குமென்று தெரி கிறது. சமய நிலையத்தினுடைய அவைகளையும், திருக்கூட்டங் களையும் பற்றிய பத்திரங்களில்தான், இவ்வகையாள் முறையைப் பற்றிய கருத்தானது இக்காலப் பொருளில் ஓரளவு ஒட்டியதாக முதன் முதலில் கூறப்பட்டிருக்கிறது. எனினும், படைமானிய வகுப்பிலல்லாதவரது வகையாட்களைப் பெருங்குழுவில் சேர்த்த முறையானது சமயநிலையத்தின் தொடர்புகளினின்றும் முற்றிலும் வேறானதாகவே இருந்ததென்பதும் தெளிவாகக் காணப்படுகிறது. இம்மாறுதலை ஒட்டி ஏற்பட்ட நிகழ்ச்சிகளில் முதலாவதாக, உள் ளூர்ப் பகுதிகளிலுள்ள சமுதாயத்தினருடைய ஆட்பேர் உரிமை பெற்றவர்கள் (delegates) பெருங்குழுவிற்கு அமைக்கப்பட் டனர்: தற்காலப் பொருளில் வகையாள் முறை என்பதாக யாதொரு கருத்தும் ஏற்படாத காலம் அது; இக்காலப் பொரு ளில், வகையாள் என்பவர், தமது தொகுதியினர் முன்ன தாகவே செய்துள்ள முடிவை மட்டும் அவைக்குத் தெரியப்படுத்த வருகிறவரல்லர்; தமது தொகுதியினரது கருத்துக்களை மட்டு மன்றி, முடிவு செய்யப்படாமல் விட்டுப்போன கேள்விகளையும், தாம் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தோன்றாமல் பிறகு தோன்று கிற கேள்விகளையும் கூட, அவையின் மற்ற உறுப்பினரோடு கூடி ஒத்தநிலையிலிருந்து ஆய்ந்து, முடிவு செய்வதற்கு வேண்டிய உரிமைகளோடு அவைக்கு வருகிறவரே வகையாள் என்பது இக் காலப் பொருளாகும். மேற்கூறிய அக்காலப் பொருளில் ஆட் பேர் உரிமை பெற்றவர்கள் அவைக்கு அடிக்கடி அழைக்கப்படவே, வகையாள் முறை என்ற கருத்து, அதனுடைய இக்காலத்திய முழுப்பொரு ளில்லாவிடினும், வழக்கத்தில் கையாளப்படக் கூடிய அளவுக்கு ஓரளவு தெளிவாகப் பழக்கத்தில் வரலாயிற்று. இவ்வாறு ஏற்பட்ட தொடக்கத்திலிருந்து, இவ்விரண்டு முறை களும்—ஆட்பேர் உரிமை முறையும், வகையாள் முறையும்— ஒன்றாக இணைந்து பழக்கத்தில் வந்து இக்காலத்திய வகையாள் அரசுமுறை என்ற கருத்தைத் (Conception of representative government) தோற்றுவித்தன.

பெருங்குழுவைப் பாராளுமன்றமாக மாற்றிய பல நிகழ்ச்சி களின் வரிசைகளை நாம் கவனிக்கும்போது, அக்காலத்தில் இம் மாதிரியாக ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருந் தது என்பதனை ஒருவரும் உணர்ந்து அறிந்து கொள்ளவில்லை என்பதை நாம் காணத் தவறலாகாது. இம் மாறுதலானது எவ

ருடைய சிறப்பான கவனத்துக்கும் உரியதாக அக்காலத்தில் இல்லை. அக்காலத்திய வரலாற்றுக் குறிப்புக்களிலாயினும், பதி வேடுகளிலாயினும், வழக்கத்திற்கு மாறான வழியில் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக யாதொரு சான்றும் காணப் படவில்லை. பாராளுமன்றத்தின் தோற்றத்தைப் பற்றி எத்தகைய விளக்கம் கொடுக்கப்பட்டாலும் சரி, வெகு காலமாகவே, நடைமுறையில் செயல்பட்டு வந்தவைகளை ஒட்டியும், பொது வாகப் பழக்கத்திலிருந்து வந்த செயல் முறைகளுக்கு மாறுபடாம லும்தான் அதன் தோற்றம் அமைந்திருந்தது என்பதே பொருத்த மான விளக்கமாகும். அரசரது அவையில் (Curia regis) இப்புதிய கூட்டத்தினரைப் புகுத்திய ஐம்பது ஆண்டுகளாக, இவர்கள் இக் குழுவில் செய்துவந்த அலுவலானது, இதே அவையினர், இதே வகையான சூழ்நிலையில் செய்துவந்த அலுவல்களை ஒத்திருந்தன; எனவே பழக்கமான முறையினின்றும் விலகி வேறொரு முறையில் செயல்கள் செய்யப்பட்டதாக அக் காலத்தவருக்குத் தோன்ற வில்லை.

'பாராளுமன்றம் படிப்படியாகத் தொடர்ச்சியாக வளரத் தொடங்கியதில் முதல் நிலையானது 1254-ம் ஆண்டில், எனப் பெரும்பாலும் கொள்ளப்படும். அவ்வாண்டின் தொடக்கத்தில் அரசர் காஸ்கனியில் இருந்தார். அவருடைய செலவுகளுக்குப் பணம் மிகுதியும் வேண்டியிருந்தது; எனவே அவர், இங்கிலாந்தி லிருந்து தன்னுடன் வந்து நேரில் தனக்கு உதவி செய்யாதவர்க ளெல்லாம் அதற்கு ஈடாக உதவிப் பணம் கொடுக்க வேண்டு மெனத் தீர்மானித்தார். அவர், இவ்வாறு பணம் திரட்டுவதற்கு அண்மையில் செய்த முயற்சிகள் எல்லாம் அவருக்கு நல்ல பய னளிக்கவில்லை. அதில் ஒவ்வொரு தடவையும், அவருக்கு உடன் பாடு அளிக்கப்படுவதற்கோ மறுப்புக் கொடுப்பதற்கோ தக்க காரணங்கள் இருந்தன. எனவே இத்தகைய சூழ்நிலையில் தான், "இவ்வாறு பண உதவி பெறுவதற்குக் கோட்டங்களின் உடன்பாட்டை முன்னதாகவே வாங்கி, அவ்வுடன்பாடு அரசரது பெருங்குழுவிற்கு மேலாண்மை உரிமையோடு தெரிவிக்கப்பட்டு விட்டால், பணம் திரட்டும் இம்முயற்சி வெற்றியடைவதற்குப் பல வாய்ப்புக்கள் உண்டு" என்ற நல்ல அறிவுரையை, அரசருக்கு அவரது அறிவுரைக் குழுவில் உள்ள யாரோ ஒருவர் கூறியிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. அரசரது பணத் தேவைகளை எல் லாம் நன்றாக எடுத்துச் சரியாகக் கொத்தவால்கள் கோட்டங்களின் அவைகளுக்கு விளக்கினால், அக்கோட்டங்க ளெல்லாம், வரி கொடுப்பதற்கு எளிதில் இணங்குமென்பதாகவும், அரசரது அறி வுரையாளர்கள் கருதினர் போலும். எவ்வாறாயினும், இதுவே

அவர்கள் செயலில் நிறைவேற்றிய திட்டமாகும். எனவே பிப்ரவரி, 11-ம் தேதி, நாட்டில் அரசருடைய இடத்திலிருந்து ஆட்சிசெய்த அரசியும், கார்ன்வால் கோமகனும் (Earl of Cornwall) மேற்கூறிய திட்டத்தின்படி செயலாற்றும்படியாகக் கொத்தவால்களைக் கேட்டுக்கொண்டு ஓர் ஆணையை விடுத்தனர். வரி கொடுப்பது கோட்ட அவையில் தான் முடிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதையும், படைமானிய வீரர்கள் இவ்வாறு செய்யப்பட்ட முடிவை அரசரது பெருங்குழுவிற்குத் தெரியப்படுத்தி, அலுவல் முறைப்படி உறுதி செய்தலைத் தவிர வேறொன்றும் செய்ய வேண்டுவதில்லை என்பதையும், மேற்கூறிய ஆணை தெளிவாகக் காட்டுகிறது. பேராளின் (delegate) அலுவல் இத்தகையதே என்பதற்கு மேற்கூறிய விளக்கம் சரிதான் என்பதை, இவ்வாணை விடுக்கப்பட்ட அதே நாளன்று, கான்டர்பரி அதிமேற்றிராணியாருக்கு விடுக்கப்பட்ட மற்றோர் ஆணையின் சொல் அமைப்பும் காட்டுகிறது. இவ்வாணையின்படி, கான்டர்பரி அதிமேற்றிரரணியார், தனக்குக் கீழ்ப்பட்ட சிறுதரத்துச் சமயக் குருக்களையெல்லாம் கூட்டி, அவர்களும் மற்றவர்களைப் போலவே அரசருக்குத் தாராளமாகப் பண உதவி அளிக்குமாறு அவர்களைத் தூண்டுதல் செய்யவும் வேண்டியவராயினர்; மேலும், மற்றவர்களுடைய பேராட்கள் அரசரது பெருங்குழுவிற்கு வரும் நாளிலேயே, சமயக் குருக்களால் அனுப்பப்படும் திறம் மிக்க பேராட்களும் அக்குழுவில் வந்து சமயக் குருக்கள் அரசருக்கு அளிக்கத் தீர்மானித்துள்ள பண உதவியின் தொகையையும், அது அளிக்கப்படும் வகையையும் உறுதி செய்து சொல்ல வேண்டுமெனவும் இவ்வாணையில் கூறப்பட்டிருந்தது. எனவே, உள்ளூர்ப் பகுதிகளிலுள்ள மக்கள் கூடித் தாம் முதலிலேயே செய்த ஒரு தீர்மானத்தைப் பெருங்குழுவிற்கு வந்து எடுத்துச் சொல்லுவது என்பதுதான் பேராட்களின் ஒரே வேலை என்பது இவற்றால் மிகத் தெளிவாகத் தெரிகிறது. எனவே வகையாள் முறை (அல்லது பகராண்மை முறை, அல்லது 'பிரதி நிதித்துவ முறை', (representation) எனப்படும் இக்காலத்திய கருத்து அக்காலத்தில் காணப்படவில்லை என்பது தெளிவு; படைமானிய வீரர் ஒவ்வொருவரும் தத்தம் கோட்ட மக்களுடைய தீர்மானத்தை அலுவல் முறையில் எடுத்துச் சொன்னார்களாகையால், வகையாள் முறை என்ற கருத்து ஓரளவுதான் மறைமுகமாகப் பேராள் முறையில் அமைந்திருந்தது.

இவ்வாறு 1254-ல் கோட்டங்களிலிருந்து படைமானிய வீரர்களை அழைத்து அவர்கள் செய்யும்படியாக அவர்களுக்கு வேலைகளைக் கொடுத்ததை நாம் பார்க்கும்போது, இந்தப் பழக்கமானது, நெடுங்காலமாகவே கோட்ட முறை மன்றம் ஆய்ந்து

தீர்ப்புச் செய்த ஒரு வழக்கின் பதிவுச் சான்றை (record) நடு அரசிலுள்ள அரசரது முறைமன்றத்துக்கு அனுப்பி வைக்கும் முறையினை ஒட்டி எழுந்த ஒன்று என்பதில் ஐயமில்லை என்னலாம். இவ்வகையான வழக்கம் புதியதொன்று அல்ல; 1254-ல் பெருங் குழுவிற்குப் பேராட்கள் வரவழைக்கப்பட்ட முறையைப் போன்ற முறை இருந்திருக்கிறது என்பதற்கு முறைமன்றங்களின் பதிவுச் சான்றுகள் உள்ளன. இவ்வகையான முறையினால் கோட்ட முறை மன்றத்துக்கும் அரசரது பெருங்குழுவுக்கும் நேரடியான ஒரு தொடர்பு ஏற்பட்டு, அது அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்தது. எனவே இத்தகைய ஒரு தொடர்பையே தான் 1254-ல் படை மானிய வீரரும் உண்டாக்கினர். அப்போது அவர்கள் கோட்ட முறைமன்றத்தில் எழுதப்பட்ட ஒரு பதிவுச் சான்றை (record) அலுவலக முறையில் சான்று என ஒப்புக் கொள்ளப்படும் பொருட்டு அரசரது பெருங்குழுவுக்குக் கொண்டு வந்தவர்களே யாவர். அவர்கள் உள் நாட்டுப் பிரிவுகளிலுள்ள மக்களின் உணர்ச்சிகளையும் அவர்களுடைய முடிவான கருத்துக்களையும் அரசரது பெருங்குழுவிற்குத் தெரியப்படுத்தினர்; எனவே இவ் வாறு அவர்கள் செய்த அலுவலானது, தீர்ப்புச் சான்றுளர் குழுவி னரது அலுவலை ஒத்திருந்தது என்பது தெளிவாக நமக்குத் தெரிகி றது; இந்த முறைகளின் பயன்கள் ஏறக்குறைய ஒன்றுதான்; எனி னும் மிகவும் நுட்பமாக இந்த இரண்டு முறைகளையும் ஒத்துப் பார்ப்போமானால், 1254-ல் இரண்டு படைவீரர் பேராட்களாக ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் பெருங்குழுவுக்கு வந்த செய லானது, கோட்ட முறைமன்றத் தீர்ப்பை அரசரின் நடுமுறை மன்றத்திற்குக் கொண்டு வந்த படைமானிய வீரரது செயலையே ஒத்திருந்ததன்றி, தீர்ப்புச் சான்றுளர் குழுவினரது செயலை அவ்வளவாக ஒத்திருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

1254-ம் ஆண்டில் இவ்வாறு ஒரு புதிய முறையில் படைமா னிய வீரர்கள் செயலாற்றத் தொடங்குவதற்கு ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அவர்களை அரசின் அலுவல் களில் அமர்த்துவது என்ற வழக்கம் இருந்து வந்தது. இரண்டா வது ஹென்றியினால் அமைக்கப்பட்ட நாட்டின் நீதித் துறையில், கோட்ட முறைமன்ற அலுவலில் படைமானிய வீரர்கள் அமர்த் தப் பட்டனரென நாம் முன்னரே அறிந்திருக்கிறோம்; 1194-ம் ஆண்டில் விடுக்கப்பட்ட ஆணையின்படி, குற்றம் சாட்டும் பெரிய தீர்ப்புச் சான்றுளர் குழுக்களும் இவர்களாலேயே இவ்வாறு அமைக்கப் பட்டன. கோட்ட முறைமன்றங்களில் இத்தகைய செயல்களுக்காக நான்கு படைமானிய வீரர்களைக் கோட்ட மன்றத்தினரே தேர்ந்தெடுத்து அமர்த்தினர் என நாம் ஊகித்

தல் கூடும். எனவே 1254-க்கு முன்னரே தேர்தல் முறை இருந்த தென்னலாம். ஒரு கோட்டத்தைப் பற்றிய பதிவுச் சான்றை வேறு ஒரு முறைமன்றத்துக்காக ஆயத்தம் செய்தல், முறை மன்றத் துக்கு வரவேண்டியவர் வாராதிருப்பதற்காகக் கேட்கும் விலக்கு களை (essoin) ஆராய்ந்து தீர்ப்புச் செய்தல், நிலங்களின் எல்லை களைத் தீர்மானிக்கும் பொருட்டு அவைகளை மேற்பார்வை செய் தல் ஆகிய கோட்ட முறைமன்ற அலுவல்களைச் செய்தற்கும் படைமானிய வீரர்கள் அமர்த்தப்பட்டனர். நாட்டின் அலுவ லாகிய வரிவிதிப்பு வேலையில் உள்ளூர் மக்களின் சார்பாக இப் படைமானிய வீரர்கள் வேலை செய்தார்கள் எனவும், தத்தம் கோட்டங்களுடைய ஆட்சி அலுவல்களைப் பற்றிய அறிக்கைகளை யும் அவர்கள் அவ்வப்போது அரசரது பெருங்குழுவிற்குக்கொண்டு வந்தார்களெனவும் நாம் முன்னரேயே பார்த்திருக்கிறோம். இது போன்ற வேலைகளை அவர்கள் மூன்றும் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் மிகுதியும் செய்து வந்ததற்குப் பல எடுத்துக் காட்டுகள் காட்டலாம்; 1220-ல் ஒவ்வொரு கோட்ட மன்றத்திலும் ஓர் ஏர் உழக்கூடிய நிலங்களுக்குத் தீர்வை விதிக்கவும், அதை வாங் கவும் இரண்டு படைமானிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1225-ல் ஒவ்வொரு நூறு என்ற பகுதியிலும் பதினைந்தில் ஒரு பங்கு என்ற வரியை விதிக்கவும் வாங்கவும் நான்கு படைமானிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; 1226-ல் தங்களுடைய கோட்டங்களில் அலுவல் செய்யும் கொத்தவால்களினுடைய நட வடிக்கையைப் பற்றி அரசருடைய பெருங்குழுவிற்கு அறிவிக்கு மாறு 8 கோட்டங்களிலின்று 4 படைமானிய வீரர்கள் அழைக்கப் பட்டனர்; 1227-ல் இதே நோக்கத்திற்காக 27 கோட்டங்களி லிருந்து படைமானிய வீரர்கள் அழைக்கப்பட்டனர். (1232-ல் 40ல் ஒரு பங்கு என்ற வரியையும் 1237-ல் 30-ல் ஒரு பங்கு என்ற வரியையும் விதிப்பதில் மேற்பார்வையிட்டு உதவி செய்யுமாறு படைமானிய வீரர்கள் அமர்த்தப்பட்டனர்; 1235-லும், 1242-லும், படைமானிய வீரர்கள் கடமை மாற்றுப் பணத்தை வாங்கு வதில் அரசினருக்கு உதவி செய்தனர்; 1258-ல் ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும், அக்கோட்டத்தின் கொத்தவாலைப் பற்றிய அறிக்கையை அரசருடைய பெருங் குழுவிற்குக் கொடுப்பதற்காக 4 படை மானிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.) இத்தகைய பழக்கம் இருந்து வந்ததனால், 1254-ல் அரசர் வாங்கத் தீர்மா னித்த வரிப்பணத் தொகையைப் பற்றிக் கோட்டமன்றம் செய் துள்ள முடிவைத் தெரிவிப்பதற்காக அரசருடைய பெருங் குழுவிற் குப் படைமானிய வீரர்கள் அழைக்கப்பட்டபோது, அது இயல்பி லேயே நடைமுறையில் இருந்துவந்த ஒரு பழக்கமாகவே யாவருக் கும் தோன்றிற்று.

இவ்வாறு இயல்பான பழக்கத்தை ஒட்டிப் படைமானிய வீரர்கள் 1254-ல் அழைக்கப்பட்டாலும், அவர்கள் வந்து கலந்து கொண்ட அரசரது பெருங்குழு, உண்மையில் ஒருசிறிய கூட்டமே, அவர்களுடைய அலுவலும் மிகவும் வரையறை செய்யப்பட்ட ஒன்றுதான். இது ஒரு தொடக்க முயற்சியே எனினும், பெரிய முயற்சி ஆகாது : மேலும் பல வேலைகள் செய்யப்படவிருந்தன. நம் காலத்தவருக்குத் தோன்றுவதை விட இது பதின்மூன்றும் நூற்றுண்டினருக்கு ஒரு பெருமுயற்சியாகத் தோன்றலாம்; ஏனெனில் இதனையடுத்து வேலைகள் தொடர்ந்து விரைவாக நடைபெற்றன. 1261, செப்டம்பரில், மூன்றும் ஹென்றி கொத்தவால்களுக்கு விடுத்த ஆணைகளில், தமக்கு எதிராகக் கலகஞ் செய்த பெருமக்கள் ஒவ்வொரு கோட்டத்தினின்றும் மூன்று படைமானிய வீரர்களை அழைத்து, அவர்கள் எல்லோரும், அம்மாதம் 21-ம் தேதியன்று தங்களோடு சேர்ந்து செயின்ட் ஆல்பன்ஸ் என்னும் ஊரில் கூடி " நாட்டின் பொதுவான செயல்களைப்பற்றி " ஆய்ந்து தீர்மானிக்க வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினர். எனவே, அரசர் இவ்வாணைகளில், கலகஞ் செய்த பெருமக்கள் தம்முடன் நட்பு உடன்படிக்கை பற்றிப் பேச வருகின்ற அதே நாளில், தம்முடன் நாட்டின் நிலைபற்றி உரையாடுதற்காக விண்ட்சருக்கு மேற்குறிப்பிட்ட படைமானிய வீரர்களை அனுப்பி வைக்கும்படியாகக் கொத்தவால்களுக்குக் கட்டளையிட்டார். அரசராலும், பெருமக்களாலும் இவ்வாறு கோட்டங்களினின்று படைமானிய வீரர்கள் நாடு முழுவதற்கும் நடுவான ஒரு குழுவிற்கு அழைக்கப்பட்டனரென்பதை விடச் சிறப்பாக இந்த ஆணையில் காணப்படுவது எது எனில், அது, முன்பே கோட்டங்களின் தீர்மானத்துக்கு விடப்படாத பொதுச் செயல்களைப் பற்றி ஆய்ந்து தீர்மானிப்பதற்காகப் படைமானிய வீரர்கள் அழைக்கப்பட்டனர் என்பதே யாம். இந்த ஒரே காரணத்தை வைத்துத்தான், இப்படைமானிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையைப் பற்றியோ, அவர்கள் கூடி அமைக்கவேண்டிய மன்றத்தைப் பற்றியோ, நமக்கு ஒன்றும் தெரியா விட்டாலும், அவர்கள் இந்நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட நிகழ்ச்சியே, பாராளுமன்றத்தைத் தோற்றுவிப்பதில் முதல்படியாய் அமைந்ததென்பதாக நாம் கொள்ளுதல் வேண்டும்.

இதனை அடுத்துப் பாராளுமன்றத் தோற்றத்தின் இரண்டாவது நிலையானது அக்காலத்திய நிலைகளெல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து அமைத்த ஒன்ருகும். லூவிஸ் (Lewis) சண்டையில் வெற்றிபெற்று, இங்கிலாந்தின் ஆட்சியாளராகிய சைமன்

டி மான்ட்பர்ட்டு, லண்டனில் நடைபெறப்போகும் பாராளு மன்றத்துக்கு ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் அக்கோட்டம் முழுவதற்குமாக அறிவிற் சிறந்த படைமானிய வீரர் நால்வர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும், அவர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து தலைமைக் குருமார்களுடனும் (prelates), பெருமக்களுடனும், கூடி அரசரைப்பற்றியும், நாட்டின் ஆட்சியைப் பற்றியும் கலந்து பேசி முடிவுசெய்ய வேண்டுமெனவும் ஓர் அறிக்கையை அரசரின் சார்பாகவே வெளியிட்டார். எனவே அரசரது பெருங்குழு பாராளுமன்றமாக மாறுதலடையத் தொடங்குவதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலை இந் நிகழ்ச்சியில் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். இதனால் வகையாள் முறை என்ற கருத்து அங்கே தோன்றிற்று என்றோ, வகையாள் முறை ஆட்சி அமைப்பு அங்கே நிறுவப்பட்டது என்றோ நாம் கருதவில்லை. பாராளுமன்றம் தோன்றுவதற்கு நிறுவன முறையில் செய்யப்பட்ட ஒரு முன்னேற்பாடுதான் இந்த நிகழ்ச்சி; இந்த முன்னேற்பாடு முற்றுப்பெறச் செய்யப்படா விட்டாலும், இது பெரிய அளவில் செய்யப்பட்டு இதுவே வகையாள் முறை என்ற கருத்தைத் தோற்றுவிக்க வல்லதாயிற்று. இவ்வாறு ஜூன் மாதம் 4-ம் நாள் வெளியிடப்பட்ட ஆணை அரசரின் பெயரால் வெளியிடப்பட்ட ஒன்று ஆயினும், அது உண்மையில் அவருக்கு எதிராகக் கலகம் செய்து அண்மையில் லூவிசில் வெற்றியடைந்த பெருமக்களாலேயே விடுக்கப்பட்டதென்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். எனவே புரட்சிக் கருத்துக்கள் மிக்க சூழ்நிலையில், தங்களுடைய ஒற்றுமையை உறுதியாக்க முயன்ற கலகம் செய்த கட்சியினர் விடுத்த இப்புதுவகையான ஆணையானது, வரலாற்றுமுறைப்படி அமைந்த அரசினால் விடுக்கப்பட்ட ஆணையைப் போன்றதாகாது. பாராளுமன்றமாக மாறுதலடைவது, இத்தகைய ஒரு நிகழ்ச்சியினால் தடைப்படுதலும் கூடும்.

1264-இல் இவ்வாறு நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பின்னும், பாராளுமன்றம் அமைவதற்கு நிறுவன அடிப்படையில் செய்யப்பட்ட முன்னேற்பாட்டில் இன்னும் ஒரு வேலை எஞ்சி இருந்தது. 1265 ஜனவரியில் புகழ்பெற்ற முதல் பாராளுமன்றத்தைக் கூட்டுவதாக, 1264 டிசம்பரில் சைமன் டி மான்ட்பர்ட் ஆணைகள் விடுத்துத் தெரிவிக்கவே, அவ்வேலையும் முற்றுப்பெற்றது. லூவிஸ் சண்டைக்குப் பிறகு சைமனுடைய பெருமக்களின் கட்சிக்குப் பெருமக்களிடையே செல்வாக்கு மிகவும் குறைந்து வரலாயிற்று; எனவே இந்தப் பாராளுமன்றத்துக்கு அவர் ஐந்து கோமகன்களையும் (Earls) பதினெட்டுப் பெருமக்களையும் (barons) அழைத்திருந்

தார்; நடுத்தர வகுப்பாரிடையே தமக்குச் செல்வாக்கைத் தேடிக் கொள்ளுவதற்காக, அவர் ஒவ்வொரு கோட்டமும் இரு படைமானிய வீரர்களை விடுக்கும்படி கேட்டிருந்தார்; இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, அவர் இப் பாராளுமன்றத்தில் சிறப்பான புது முறையில், ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு பேரூரும் இரு வகையாட்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்; கடைசியிற் குறிப்பிட்ட பகுதிகளைப் பொறுத்த வரையில், அவற்றுக்குரிய ஆணைகள் கொத்தவால்களுக்கு அனுப்பப் படாமல், அப்பட்டணங்களுக்கே அனுப்பப்பட்டன.

இதற்கு முந்திய ஜூன் மாதத்தில் விடுக்கப்பட்ட ஆணை களுக்கு மாறாக, இந்த ஆணைகளில், பேரூர்களிலும் நகரங்களிலு முள்ள மக்களுக்கு அழைப்பு இருந்தது என்பதைத் தவிர வேறொரு சிறப்பும் இல்லை. நமக்குக் கிடைக்கிற சான்றுகளை வைத்துக் கொண்டு பார்க்கும்போது, டிசம்பரில் விடுக்கப்பட்ட ஆணைகள் ஜூனில் விடுக்கப்பட்டவற்றைவிடக் குறைந்த தெளிவும் விளக்கமு முடையன என்றே தெரிய வருகிறது. எனினும் முந்திய ஆணை களுக்குரிய பொருளிலேயே பிந்தியவற்றையும் கொள்ளவேண்டும் என்பதே அவற்றின் பொருளாக இருக்கலாம். இவ்வாறு நாம் கொண்டால், ஜூனிலும், டிசம்பரிலும், தேர்ந்தெடுத்தல், வகையான முறை, நடைபெற வேண்டிய ஆட்சி வேலைகளில் பங்கு கொள்ளுதல் ஆகிய கருத்துக்கள் இருந்தன என நாம் எண்ண இடமிருக்கிறது. வேறுபாடில்லாத இந்த இரண்டு ஆணைகளையும் ஒப்ப நோக்கினால், டிசம்பரில் விடுக்கப்பட்ட ஆணைகள் சைமன் டி மான்ட்பார்ட்டினால் விடுக்கப்பட்டவையாயிருத்தல்போல, ஜூனில் விடுக்கப்பட்ட ஆணைகளும், அவராலேயே விடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என நாம் கருதுவது சரியே என எனக்குத் தோன்று கிறது; இதனாலேயே, பாராளுமன்றம் அமைப்பதில் முற்றிலும் புதிய முறைகள் கையாளப்பட்டன என்பதற்கு நமக்குக் கிடைக் கும் முழுச் சான்றுகளிலிருந்து, இம்முறைகளையெல்லாம் முதலில் கொண்டு வந்தவர் சைமன் டி மான்ட்பார்ட்டு தான் எனவும் நாம் கருதுதல் சரியே எனத் தெரிகிறது. நகரவாசிகளும் மன்றத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பது மட்டுமே மேலே குறிப் பிட்ட புதிய முறை ஆகாது; ஆணையில் குறிப்பிட்டபடி பெருகுங் குழுவின் முழு உரிமை பெற்ற உறுப்பினர்களாக, கோட்டங்களி லிருந்து படைமானிய வீரர்களை,—அவர்கள் உண்மையில் செயல் களைக் கலந்து ஆய்வதில் யாதொரு பங்கும் பெறாவிட்டாலும், ஏற்றுக்கொண்டு அழைத்ததும் ஒரு புதிய முறையாகும். பிஷப் ஸ்டப்ஸ் என்னும் ஆசிரியர் கூறுவதுபோல, தொடக்க முறை யிலும், அதன் சாரமான தன்மையிலும் அதை நாம் ஆராய்ந்தால்,

"இந்தப் பாராளுமன்றக் கூட்டம் அரசியல் சட்ட அமைப்புக்கு ஒத்த ஒரு மன்றம் ஆகாது" என்பதில் ஐயமில்லை. அது பெருமக்களது கட்சியினர் அடங்கிய ஒரு புரட்சி மன்றமேயாகும். ஆயினும் அதன் அமைப்புக்கள் அதை அரசியல் சட்டத்துக்கு ஒத்ததாகவே காட்டின. இவ்வாறான அமைப்புகளோடு அதைக் கூட்டுவதற்குப் பெருமுயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன; அது சட்டப்படியாக அமைந்த அரசரது பெருங் குழுவே என்பதிலும், சைமன் டி மான்ட்பர்ட்டுக்கும், அவரது உதவியாளர்களுக்கும் யாதொரு ஐயமும் இல்லை.

வரலாறு முழுவதிலும் காணப்படுகின்ற ஆங்கிலப் பாராளுமன்றத்தில் உள்ளபடி, பெருமக்கள், கோட்ட உறுப்பினர்கள், நகரவாசிகள் என எல்லா வகுப்பினரையும் கொண்ட பாராளுமன்றம் ஒன்றை சைமன் டி மான்ட்பர்ட்டு நிறுவினார்; எதிர் காலத்தை உருவாக்குவதில், இவரது மன்றம் அமைத்துக் கொடுத்த சூழ்நிலையைப் பற்றி மிகைப்படுத்திக் கூறுவது எளிது. எனினும் அதுவும் பொதுவாக மன்றம் தோன்றுவதற்கு முன்னேற்பாடு நடைபெற்ற காலத்தைச் சேர்ந்ததேயாகும். மாறுதல் ஏற்படத் தொடங்கிய காலத்தைத்தான் காட்டுவதாக அது இருக்கிறதேயன்றி, அம்மாறுதல் முற்றுப்பெற்ற காலத்தை அது காட்டுவதாக இல்லை. வரலாற்றில் முதன் முதலாக மேலே குறிப்பிட்ட மூவகை வகுப்பாரையும் ஒருங்கே தன்னிடத்துக் கூட்டியிருந்தது இம்மன்றம் என்ற ஒரு மிகச் சுருங்கிய பொருளிலல்லாமல், இம்மன்றத்தை இக்காலத்திய மக்கள்மன்றத்தின் தோற்றுவாய் எனக் கூறுவது தவறாகும். இவ்வாறு சேர்க்கப்பட்ட மன்றம் புதிதாக எதையும் தீர்மானிக்கவில்லை. தேவையான எதையும் செய்யவில்லை. பின்னால் அமையப்போகிற பாராளுமன்றத்தைக் காட்டும் அறிகுறியாக அது இருந்தது. சமுதாயத்திலும், பொருளியலிலும் உண்டாகும் பெரிய மாறுதல்கள், சட்டத்திலும் அரசியலமைப்பிலும் மாறுதல்களை உண்டாக்குவன; அத்தகைய மாறுதல்கள் இங்கிலாந்தில் இதற்கு முன்னாலில்லாவிட்டாலும் பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தாயினும் தோன்றிருப்பதை நாம் காணமுடியும். இந்த மாறுதல்களே ஆங்கில அரசின் அமைப்பிலும் மாற்றத்தைச் செய்யத் தொடங்கியிருந்தன என்பதைக் காட்டுகிற அறிகுறியாக இப் பாராளுமன்றம் இருக்கிறது; இதில்தான் இதனுடைய பெருஞ் சிறப்பு காணக் கிடக்கிறது. சமுதாய, பொருளியல் துறைகளிலுள்ள முடிவான ஆற்றல்கள் இவ்வாறாக அரசில் ஒரு விளைவை வெகு சுருங்கிய காலத்திலேயே உண்டாக்குமென்பது உறுதியே. பழைய படைமானியக் கருத்துக்கள் மாறிவரும் காலத்தில் இத்த

கைய விளைவு அரசில் உண்டாவதென்பது தவிர்க்க முடியாதது; மேலும் ஒரு சில சமுதாய வகுப்பினரால் மட்டுமே ஆட்சி நடத்தப் பட்டுவந்த அந்தக் காலத்தில், ஆட்சியை நடத்துவதில் புறக்கணிக் கப்படலாகாத தனித்த சில நலன்களையும், வெகுவிரைவாக வளரும் செல்வாக்கையும், தங்களுடைய செல்வாக்கை வெளிப்படுத்தக் கூடிய வழிகளையும் பெற்று, ஒரு தனித்த வகுப்பாக அமைந்த நகரவாசிகளை, அவர்களுடைய விருப்பத்திற்காக வல்லாமல், அவர்களுடைய இசைவைப் பெறும் பொருட்டாக வாயினும், அரசரது நடு மன்றத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுவது இன்றி யமையாததாயிற்று. இதேவகையாகச் சமுதாய, பொருளியல் துறைகளில் மாறுதல்களும், கூடவே அரசு அமைப்பில் மாறுதல் களும் பல ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்து கொண்டிருந்தன; இத்தகைய வளர்ச்சியைப் பற்றிய வரலாற்றில் மற்றநாடுகளை விட இங்கிலாந்துக்கு முந்திய இடம் கிடைக்காமல் பிந்திய இடமே உண்டு.

நகரவாசிகள் பழைய நிறுவனமாகிய அரசரது பெருங்குழுவில் சேர்க்கப்பட்டிருப்பின் புதிய நிறுவனமாகிய பாராளுமன்றத்தை அமைப்பதற்கோ, அதனுடைய தன்மையை உறுதியாக்கு வதற்கோ அது உதவாது. எதிர்காலத்தை உருவாக்குவதைப் பொறுத்த அளவில் இந்நிகழ்ச்சி மிகவும் முக்கியத்துவம் உடையது. வருங்காலத்தில் அரசியலமைப்பு நிலைபெற்றிருப்பதும், மாபெரும் பட்டயத்தின் அடிப்படையான கருத்துக்களுக்கு உரிய விரிவான உட்பொருள் நிலைபெறுவதும், இதனைப் பொறுத்தே இருந்தது; எவ்வாறெனில் அடுத்த ஒரு நூற்றாண்டளவில், பெருமக்கள் அரசருக்குக் காட்டிய பயனற்ற எதிர்ப்புக்கு மாறாகப் பாராளு மன்றமே, வரையறுக்கப்பட்ட கோனாட்சியை அமைக்கும் வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கு முன்பாகவே, தங்களிடம் எதிர் பார்க்கப்பட்ட ஆக்கவேலையைத் தங்களால் செய்ய இயலாதென் பதைப் பெருமக்கள் நன்றாக எடுத்துக் காட்டி விட்டனர். ஆக்ஸ் பர்டு ஏற்பாடுகளுக்கு மேலாக அவர்களால் யாதொன்றும் செய்ய இயலாதென்பதும், அவைகளை மட்டுமே அவர்கள் செய்ய முடியு மென்பதும் தெளிவாகக் காணப்படுகின்றன. எனவே இந்த ஆக்கக் காலத்தில் உருவாகிக் கொண்டிருந்த இந்த புதிய நிறுவனத்தின் தன்மையைப் பொறுத்தே, நாட்டின் வருங்கால அரசியலமைப்பும், வரையறுக்கப்பட்ட கோனாட்சி அமைவதும் இருந்தன.

இப்புதிய நிறுவனத்திற்கு வேறு வகையான ஒரு பயனற்ற அமைப்புக் கொடுக்கப்பட்டிருக்கலா மென்பதையும், ஒரு நல்ல

வலுவான பாராளுமன்றம் அமையாதபடி தடுக்க மிக எளிய முயற்சியே தேவை என்பதையும், 1265 லிருந்து 1295 வரையுள்ள மாறுதல் காலத்தில் நடைபெற்ற சோதனை முறைகளின் மூலம் இந்நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்ட அமைப்புக்கள் நமக்குக் காட்டுகின்றன. மூன்றும் ஹென்றியின் ஆட்சியின் கடைசியில் 1267-லும், 1269-லும் கூடிய இரண்டு பாராளுமன்றங்களிலும், உறுப்பினர் நிலை என்பது மேற்கொள்ளப்படாமல், பெருங்குழுவின் உறுப்பினர் நிலை என்பதே இருந்து வந்ததாகத் தெரிகிறது. முதலாம் எட்வர்டின் காலத்தில் 1275-ல் கூடிய அவரது முதல் பாராளுமன்றத்திற்குக் கொத்தவால்களின் மூலமாக ஒவ்வொரு கோட்டத்தினின்றும் நான்கு படைமானிய வீரர்களும், ஒவ்வொரு பேரூரினின்றும் ஆறு அல்லது நான்கு நகரவாசிகளும் வரவழைக்கப்பட்டனர்; ஆயினும் இதற்கப்புறம், இம்முறையானது 1295 வரை கையாளப்படவில்லை. இவ்வாறு வரவழைக்கப்பட்டவர்கள் பெருமக்களோடு கலந்து நாட்டு ஆட்சி அலுவல்களைப் பேசி முடிவு செய்வதற்காக அழைக்கப்பட்டனர். எட்வர்டு அரசர் வேல்சோடு தான் நடத்திய போரின் செலவுக்குப் பணம் திரட்டுவதற்காகத் தனித்தனியே கோட்டங்களோடும், பேரூர்களோடும் பேச்சு நடத்திய பிறகு, 1282-ல் கூதிர்ப் பருவத்தில் இரண்டு மன்றங்களைக் கூட்டினார்; ஒன்று வடக்கிலுள்ள கோட்டங்களுக்காக யார்க்கிலும், மற்றொன்று மற்றெல்லாக் கோட்டங்களுக்குமாக நார்த்தாம்ப்டனிலும் கூடின; இம்மன்றங்களுக்கு ஒவ்வொரு கோட்டத்தினின்றும் நான்கு படைமானிய வீரர்களும், ஒவ்வொரு நகரத்தினின்றும், பேரூரினின்றும் இரண்டு வகையாட்களும் வரவழைக்கப்பட்டனர்; இவற்றில் வரும் படைமானிய வீரர்களுக்கும், நகர வகையாட்களுக்கும் ஒத்த உரிமைகள் உண்டு என்பதாக வரையறை செய்யப்பட்டது. போரில் சிறைபிடிக்கப்பட்ட வேல்சின் அரசர் டேவிட்டை என்ன செய்வதென்பதைத் தீர்மானிப்பதற்காக 1283-செப்டம்பரில் ஷ்ரூஸ்பரியில் ஒரு மன்றம் கூட்டப்பட்டது. இதற்காக ஒவ்வொரு கோட்டத்தினின்றும் இரண்டு படைமானிய வீரர்களை அனுப்பும்படி கொத்தவால்களுக்கும், ஒவ்வொரு நகரத்தினின்றும் இரண்டு வகையாட்களை அனுப்பும்படி இருபத்தொரு நகரங்களுக்கு நேராகவும் ஆணைகள் விடுக்கப்பட்டன; இவ்வாணைகளின்படி வீரர்களும், நகரவாசிகளும் டேவிட்டைப் பற்றிய கேள்வியை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியவராயினர். இவ்வாணைக்குப் படைமானிய வீரர்கள் கீழ்ப்படிந்து நடந்து கொண்டனர்; நகரவாசிகள், இக்கேள்வி அரசுக்கு எதிரான குற்றவழக்காக இருப்பதால், இதில் கலந்து கொள்ளாமல் விலகி விட்டனர். சட்டப்படி இத்தகைய குற்ற

வழக்குகளை ஆய்வதில் அவர்களுக்குப் பங்கு கிடையாதாகையால் அவர்கள் இவ்வாறு வாராதிருந்தனர்; இவ்வகையான முறையிலே தான் நகரவாசிகள் வணிகரது கடன் மீட்புச் சட்டத்தை அரசரும் அவரது குழுவும் ஓர் ஆணை வடிவத்தில் வெளியிடும் வண்ணம் தாங்களாகவே உரிமை அளித்தனர். 1290, மே மாத இறுதியில் மேற்றிராணியார்களும், பெருமக்களும் அடங்கிய ஒரு பெருங் குழுபாராளுமன்றமாகக் கூடி "நாடு முழுவதிலும் அடங்கிய சமுதாயத்தாரின் சார்பாக" ஒரு பணத்தொகையை அரசரது மகளுடைய திருமணத்திற்கு உதவியாகக் கொடுத்ததாக ஒரு குறிப்பு கூறுகிறது. இதன் பிறகு ஜூலை மாதத்தில் இவர்களோடு கலந்து, "ஆய்ந்து முடிவு செய்யவும், தங்களுடைய இசைவைத் தருவதற்கும் முழு உரிமையோடு" ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் இரண்டு படைமானிய வீரர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வரும் வரை காத்திராமல், படைமானிய வீரர்களுடைய நலன்களைப் பற்றியதான, சட்டத்தை—படைமானிய உள்பகுப்புக்களைத் தடைசெய்யும் சட்டத்தை (Quia Emptores) இக் குழுவினரே நிறைவேற்றினர். 1294-ல் சமயக் குருமார்கள் அடங்கிய தனி மன்றமொன்று அரசருக்கு ஒரு பொருள் உதவியை அளித்தது; சமயச் சார்பற்ற பெருமக்களும் வேரொரு மன்றமாக இதற்காகக் கூடினர்; இக் கூட்டத்திற்கு அந்த ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் நாளன்று, 1290-ம் ஆண்டில் கூறப்பட்டது போன்று, "கலந்து ஆயும் பொருட்டும், இசைவு கொடுக்கும் பொருட்டும்" ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் இரண்டு படைமானிய வீரர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர்; இதற்கு அடுத்த நாள் "அரசர் சொல்வதைக் கேட்டு, அவர் ஏவியவற்றைச் செய்யும் பொருட்டு" "மேலும் இரண்டு படைமானிய வீரர்கள் வரவழைக்கப்பட்டனர்; எனினும் இவற்றில் ஒன்றிலேனும் நகரவாசிகள் அழைக்கப்படவில்லை. இதே ஆண்டில் வணிகரும் கூடித் தாங்கள் வாணிகம் செய்யும் கம்பளியின் மீது உள்ள தீர்வையோடு ஒரு சிறு பகுதி கூடுதலாக அரசருக்கு அளித்தனர்.

மேலே குறிப்பிட்ட உறுப்பினர் பட்டியலிலிருந்து நாம் காண வேண்டுவது யாதெனில் நாட்டின் பாராளுமன்றத்தை மாநில மன்றங்களாகவும், ஒவ்வொரு அரசியல் வகுப்புக்கும் ஒவ்வொரு தனி மன்றமாகவும் பிரிப்பதற்குப் பல சூழ்நிலைகள் தோன்றியமையே; இவைபோன்ற சூழ்நிலைகளை நன்கு பயன்படுத்திக் கொண்டுதான் பிரஞ்சு அரசர்கள் பிரஞ்சுப் பாராளுமன்றமாகிய எஸ்டேட்ஸ் ஜெனரலை (Estates General) வலியற்றதாக ஆக்கி, அதை அரசருக்கு வேலை செய்யுமாறு தங்களுடைய ஆட்சிக்குள்

கொண்டு வந்தனர். அரசியல் வகுப்புக்களுக்குரிய மன்றங்களாகக பாராளுமன்றம் அமையும்போது, அதைப்பற்றி எவரும் குறிப்பிட்டுக் கூறவோ, மறுக்கவோ இல்லை. இப்போது இத்தகைய பாகுபாட்டினுல் விளையக்கூடிய இடரைத் தெளிவாகக் காணக்கூடவில்லை. பதின்மூன்ரும் நூற்றுண்டில் அரசியல் வகுப்பினர் தனித்தனி மன்றங்களாகக் கூடிச் செயலாற்றுவதற்கு இருந்த தகுதி, அடுத்த நூற்றுண்டில் அவர்கள் ஒரு முழுப் பாராளுமன்றமாகக் கூடிச் செயலாற்றுகையில் குறைந்து விடவில்லை. இந்த முன் நிகழ்ச்சிகளை ஒட்டி எதிர்காலத்தில் பாராளுமன்றம் வளர்ச்சியடையுமாறு அதனை நடத்துவதில் யாதொரு இடரும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. முழுப் பாராளுமன்றத்திடம் பொருள் உதவிகேட்டு வாங்குவதிலுள்ள இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக, முதலில் சிறிது காலம் அரசர்கள் தனித்தனியாகச் சில அரசியல் வகுப்பினரோடு கலந்துபேசி முடிவு செய்து கொண்டனரெனினும், பதினன்காம் நூற்றுண்டில் பொதுமக்கள் மன்றத்தின் நேர்ச்சி மிக்க செயல் திறத்தினுல், அரசர்கள் மேற்கூறிய வழக்கத்தைக் கைவிடும்படியாயிற்று; உறுப்பினர் நிலையும் ஒழுங்கற்றதாகவே முதலாம் எட்வர்டின் ஆட்சி முழுவதும் இருந்து வந்தது, இத்தகைய ஒழுங்கற்ற நிலையில் உறுப்பினரை அமர்த்துவதென்பது முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டிருக்குமாயின், ஆங்கிலேயர் கையாளுகிற பொருளில் பாராளுமன்றமோ, அரசியலமைப்போ தோன்றியிருக்காது என்பதை நாம் இங்கு எடுத்துக் கூற வேண்டியதில்லை.

பாராளுமன்றமும், அரசியலமைப்பும் இத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது எதனுலெனில், அப்போது மக்களுக்கு இருந்த அறியாமை அல்லது செயலறிவு இல்லாத ஒரு தன்மையினுலேயே, தமக்குச் சில தலைமுறைகளுக்குப் பின் பிரான்சில் அரசர்களாயிருந்த ஐந்தாம், ஏழாம் சார்லசுகளைப் போலவே, முதலாம் எட்வர்டுக்கும், பாராளுமன்றத்திற்கு எதிர்காலத்தில் உண்டாகக் கூடிய வளர்ச்சியைப்பற்றி ஒரு சிறிது முன்னுணர்வு இருந்திருக்குமாயின், ஒரு வலிமை மிக்க பாராளுமன்றத்தின் வளர்ச்சியினுல் முடியரசுக்கு ஏற்படக்கூடிய இடரை அவர் உணர்ந்திருப்பாராயின், அவர் இத்தகைய வலிய பாராளுமன்றத்தின் வளர்ச்சியைத் தடுத்திருப்பார்; தடுக்கவும் அவரால் இயலும். அவருடைய ஆட்சிக்குப் பிறகு இவ்வாறு அதை எவரும் தடுத்தல் இயலாது. இரண்டாம் எட்வர்டின் ஆட்சி நீக்கத்திற்குப் பிறகு (deposition) பாராளுமன்ற வளர்ச்சியைத் தடுத்தலென்பது முற்றிலும் இயலாத ஒரு செயலாகவே போய்விட்டது.

இக்காலத்திலிருந்த பல ஒழுங்கற்ற நிலைகளிடையேயும் வளர்ச்சிக்குரிய வழி ஓரளவு காணப்படுகிறது. உள்ளூர்ப் பகுதியினரது வகையாட்கள் அரசரது பெருங் குழுவிற்கு வந்து கலந்து, அதில் சமயத்தலைமைக் குருமாரோடும், பெருமக்களோடும் கூடிப்பேசுதல் என்பது ஒரு வழக்கமாக வளர்ந்து வரலாயிற்று. இது பற்றிச் சில விதிகளும், திட்டவட்டமான விதிகளும் தோன்றியதாகக் கூறத்தக்க சான்று எதுவும் இல்லை; ஆயினும் இச்செயல் ஒரு பழக்கமாக ஆகிக்கொண்டு வந்தது. வகையாட்கள் அரசரது முறை மன்றத்திலும் கலந்துகொண்டு, அதிலுள்ள பழைய உறுப்பினரோடு கூடி அரசின் அலுவல்களைச் செய்தற்கு அழைக்கப்பட்டனர் என்பதும் உண்மையே. பிற்காலத்திய பாராளுமன்றந்திலுள்ளதைப்போன்று ஒரு தடையற்ற ஆய்வு முறையில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு அவர்கள் அழைக்கப்பட்டார்களென்பதற்கு ஒரு சான்றும் இல்லை; மேலும் தாங்கள் விரும்பும் ஒரு தீர்மானத்தைச் செய்வதில் பங்கு கொள்ளுவதற்காக உறுப்பினர்கள் அழைக்கப்பட்டன ரென்பதற்கும் சான்று கிடையாது. அக்காலத்திய சூழ்நிலையில் இந்த இரு செயல்களும் நடைபெற இயலாதவை! தீர்மானிக்கப்படுகிற செயல்கள் உறுப்பினர்களைப் பற்றியனவாக இருந்தால் மட்டுமே அவர்கள் மேற்கூறியவாறு அழைக்கப்பட்டனரென நாம் கருதுதல் கூடும். எனினும் தீர்மானிக்கப்படுகிற செயல்களைப்பற்றி உள்ளூர்ப்பகுதிகளிலுள்ள மக்கட்கருத்து என்ன என்பதை இவ்வகையாட்கள் மன்றத்துக்கு அறிவித்தல் என்பது ஒரு சிறப்பான செயலாகக் கருதப்பட்டது. இவ்வாறு அறிவிக்கப்படும் மக்களுடைய கருத்தானது தீர்மானத்தைச் செய்பவர்களுக்கு அளிக்கப்படும் ஒரு சலுகையாகவே கருதப்பட்டது. வகையாட்களெல்லாம் "முழு உரிமை உடையவர்களாக" ஆணைகளில் சுட்டப்பட்டிருப்பதன் பொருள் என்னவெனில், அவர்கள் தாங்கள் வெளியிடும் அறிக்கைகள் உண்மையே எனக் காட்டுவதற்குத் தக்க சான்றுப் பத்திரங்களை (credentials) வைத்திருந்து, செய்யப்படும் தீர்மானங்களுக்குச் சமுதாயத்தினர் கட்டுப்படும்படியாகச் செய்தல் வேண்டும் என்பதேயாம்.

வரி விதிப்புக்காக மட்டுமே மக்களுடைய முன் இசைவைப் பெறுதல் வேண்டுமென்ற நோக்கத்திற்காக, அரசரது பெருங் குழுவில் மேலே குறிப்பிட்ட புதிய வகுப்பினர் வரவழைத்துச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பது இக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளினின்றும் தெளிவாகத் தெரிகிறது; பலவற்றுள் அது ஒரு நோக்கமாகத்தான் இருந்தது; ஒருவேளை அது ஒரு முக்கியமான நோக்கமாகவும் இருந்திருத்தல் கூடும். புதிதாகச் சமுதாயத்தில் தோன்றிக் கொண்டிருந்த நில உடைமையாளரைக்

கொண்ட நடுத்தர வகுப்பாரிடம் நிறைய வரி வருமானத்தைக் கொடுக்கக்கூடிய செல்வ வளம் இருந்தது; அரசருடைய நிலத்தில்லாமல், வேறு நிலத்தில் தோன்றிய பட்டணங்களிலும் இவ்வாறு வரி வருமானத்தைக் கொடுக்கக்கூடிய செல்வ வளம் நிறைய இருந்தது; இவ்விரு திறத்தவர்களிடமிருந்தும் மிகுதியான வரி வருமானத்தைத் திரட்டுவதற்கு அரசு பழைய படைமானிய ஆட்சி முறைகளைக் கையாள இயலாது; அம்முறைகள் இவ் வகுப்பினரை அரசோடு எவ்வகையிலும் இணைக்கவில்லை. பதின்மூன்றும் நூற்றுண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளினுல், "கூடுதலான வரிப் பொருளைத் திரட்டுவதற்கு மக்களுடைய முன் இசைவை (Advance Consent) அரசு பெறுதல் வேண்டும்" என்ற படைமானியக் கொள்கையானது அரசுக்கு மிக உறுதியாக உணர்த்தப்பட்டுவிட்டது; எனவே 1215-க்குப் பிறகு இக் கொள்கையானது எவராலும் மீறப்படவில்லை. எனவே பிற்காலத்தில் தீர்வைகள் பலவாறுகப் பெருகப் பெருக, அவற்றை வாங்கும் போதெல்லாம் இக்கொள்கையும் பொருந்தக் கையாளப்பட்டதில் வியப்பில்லை. மேலும், அரசின் கொள்கைகளைப்பற்றிய கேள்விகளையும், முக்கியமாக, அரசுக்கு ஆகும் கூடுதலான செலவையும், ஐயத்திற்கு இடமான கேள்விகளையும் ஆய்ந்து தீர்மானிப்பதில், அரசு உட்பகுதிகளில் வாழும் சமுதாயத்தினரின் கருத்தை அறிய ஆவல் கொண்டிருந்ததென்பது, டேவிட்டைப்பற்றிய வழக்கை ஆய்வதற்காக விடுவிக்கப்பட்ட ஆணைகளினின்றும் தெளிவாகத் தெரிகிறது. பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிடவும், வெளியிட்ட கருத்துக்களைத் திரட்டி அரசுக்குத் தெரியப்படுத்தவும் இக்காலத்தில் உள்ளது போன்ற வசதிகளும், போக்குவரவுத் தொடர்பு வசதிகளும் இல்லாத காலமாகிய இடைக்காலத்தில், நாட்டின் நிலைமைகளை நன்கு உணர்ந்த பேராட்களை ஓரிடத்தில் ஒருங்கு திரட்டிக் கூட்டுவதின் மூலமாகவே, முழுச் சமுதாயத்தினரின் கருத்துக்களையும் அறிந்து, கொள்கையை வகுப்பது என்பது செய்யக்கூடிய செயலாக இருந்தது. இவ்வழிதான் அரசின் கொள்கைபற்றிய கேள்விகளை ஆய்வதற்கு மட்டுமன்றி, வரிவிதிப்புப்பற்றிய கேள்விகளை ஆய்ந்து முடிவு செய்வதற்கும் பயன்பட்டது. அக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நாம் அறிவதற்கு இவ்வுண்மையே ஒரு திறவுகோல் போன்றது. அந்தக் காலத்தில், பொதுப் பணிகளைச் செய்வதற்குச் சமுதாயத்தில் புதிதாகத் தோன்றிக்கொண்டிருந்த ஒரு வகுப்பாரது கருத்தையும், செல்வ வளத்தையும் துணைக்கொள்ள வேண்டுமென்ற உணர்வும், பொதுநலன்களைப் பெருக்கவேண்டுமென்ற உணர்வும் மக்களிடையே மிகுதியாகக் காணப்பட்டன; இந்த நிலையையும்,

பதின்மூன்றும் நூற்றுண்டில் போக்குவரவு வசதிகளில்லாததனுல் இடர்கள்மிகுந்த சூழ்நிலையையும் நாம் மனத்தில் வைத்துக்கொண்டால், இப் பாராளுமன்றத்தின் அமைப்பும் நோக்கமும் நமக்குத் தெளிவாக விளங்கும்.

முப்பது ஆண்டுகளாகப் பாராளுமன்றத்தைப்பற்றி மக்களுக்கு இருந்த செயலறிவானது (Experience) ஒன்று சேர்க்கப் பட்டுப் பிற்காலத்திற் கூறப்பட்டபடி, 1295-ம் ஆண்டில் கூடிய மாதிரிப் பாராளு மன்றத்தில் உறுதியாக்கப்பட்டுக் காப்பாக வைக்கப்பட்டது. 'கடந்த காலத்தில் செய்யப்பட்ட முன்னேற் பாடுகளை எல்லாம் முற்றுப்பெற உடைய பாராளுமன்றம்' என்ற பொருளில்தான் இதனை மாதிரிப் பாராளுமன்றம் என நாம் குறிப் பிடலாம். இது ஒரு புதிய கருத்தைத் தோற்றுவித்தது என்ற பொருளிலோ, இது பிற்காலத்தவரால் பின்பற்றப் படத்தக்க வகையில் அமைந்த ஒன்று என்ற பொருளிலோ இதனை நாம் மாதிரிப் பாராளுமன்றமெனக் கொள்ளுதல் கூடாது; ஏனெனில் உறுப் பினர்களை இது அழைத்த முறையிலும், செயல்படுவதற்காக இது அமைந்த முறையிலும், இது பிற்காலப் பாராளு மன்றங்களுக்கு முன்மாதிரியாக இருக்கவில்லை. இதுவரையிலும் வழக்கத்தில் இருந்துவந்ததற்கு மாருக, இப் பாராளுமன்றத்தில் நாட்டிலுள்ள எல்லா வகுப்பாருடைய வகையாட்களும் இருந்தனர். 1295-ல் கோஷ்டக்கால இறுதியில் முதலாம் எட்வர்டுக்குக் கடுமையான பணமுடை இருந்தது; அண்மையில்தான் வேல்சில் கலகம் செய்தவர்களோடு அவர் மிகுந்த செலவு செய்து நடத்திய போர் முடிவடைந்திருந்தது; பிரான்சோடு அவர் செய்த போர் முடிவடையாமல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது; போதாததற்கு இப்போது அவர் ஸ்காட்லாந்தோடும் ஒரு போரைத் தொடங்கிக்கொண்டிருந்தார். இவற்றினுலெல்லாம் ஏற்படும் பெருஞ் செலவுகளை ஏற்றுத் தாங்கிக் கொள்ளுவதற்குத் தமது நாட்டினர் யாவரும் ஆயத்தமாயிருப்பதாகவும், பொதுவாக அவருடைய வெளிநாட்டுக் கொள்கைக்கு நாட்டினருடைய ஆதரவு இருப்பதாகவும் அவர் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியிருந்தது. அரசர் எட்வர்டுக்கு மனதில் இருந்த இந்த இரு நோக்கங்களே அவர் கூட்டிய இந்த 'மாதிரிப் பாரர்ளுமன்றத்'திற்கு ஒரு புதிய தன்மையைக் கொடுத்தன.

பழைய பெருங் குழுவில் முன்பே இருந்துவந்த தலைமைக் குருக்கள், பெருமக்கள் ஆகியவரோடுகூட இம் மன்றத்திற்கு இப் பொழுது ஒவ்வொருகோட்டத்திலிருந்தும் இரண்டு படைமானிய வீரர்களும், ஒவ்வொரு பட்டணத்திலிருந்தும் இரண்டு நகரவாசி களும், வரவழைக்கப்பட்டிருந்தனர்; அதிமேற்றிராணிமார்களுக்

தும் மேற்றிராணியார்களுக்கும் விடுக்கப்பட்ட ஆணைகளில் அவர்களுக்குக் கீழ்த்தரத்தில் உள்ள சமயக் குருமார்களின் வகையாட்களும் வருதல் வேண்டுமென்ற அழைப்பு அடங்கியிருந்தது; இத்தகைய குருக்களின் வகையாட்கள் இந்தப் பாராளுமன்றத்தில் ஒரு புதிய கூட்டமாக அமைந்தனர்; எனினும் இவர்கள் பாராளு மன்றத்தில் ஒரு கூட்டமாக எப்போதும் நிலைத்திருக்கவில்லை. இப் பாராளுமன்றம் கூடியதும், இது மூன்று மன்றங்களாகப் பிரிந்து அமைந்தது; இம் மூன்று மன்றங்களும் படைமானியச் சமுதாயத்தின் மூன்று அரசியல் வகுப்புக்களாக, அதாவது, முதல் வகுப்பு சமயக் குருமார், இரண்டாவது பெருமக்கள், மூன்றுவது நகர வாசிகள் என்று வகுப்புக்களுக்குப் பொருந்த இருந்தன. படைமானியக் கருத்துக்களின்படி, படைமானிய வீரர்கள் பெருமக்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களாகையால், இம் மன்றப் பாகுபாட்டிலும், படைமானிய வீரர்கள் பெருமக்களுடன் சேர்ந்து இரண்டாவது மன்றத்தை அமைத்தனர். இதில் ஒவ்வொரு மன்றமும் அததற்கு உரிய வகுப்பினர்மீது, மற்ற வகுப்பாரினின்றும் வேறுபட்ட விதத்தில் வரியை விதித்தது. இத்தகைய முறையில் உறுப்பினரை வரவழைத்து மன்றத்தை அமைத்த இந்த அமைப்பானது, இதே காலத்தில் பிரான்சில் தோன்றிப் பிற்காலத்தில் நிலைபெற்ற "பொது வகுப்பு மன்றங்கள்" (எஸ்டேட்ஸ் ஜெனரல் - (Estates General) என்ற பிரெஞ்சுப் பாராளு மன்றத்தை ஒத்திருந்தது. இப் பாராளு மன்றத்தை ஆட்சிக்குரிய ஒரு கருவியாகவோ பிற்காலத்தவருக்கு ஒரு வழிகாட்டியாகவோ எட்வர்டு கருதவில்லை. அவரது காலத்தில் கூட்டப்பட்ட இருபது பாராளுமன்றங்களில் பன்னிரண்டிற்குக் கோட்டங்களிலிருந்தோ, பட்டணங்களிலிருந்தோ வகையாட்கள் வரவழைக்கப்படவில்லை. மூன்று பாராளுமன்றங்கள் மட்டுமே 1295-ம் ஆண்டிலுள்ள மாதிரியைப் பின்பற்றிக் கூட்டப்பட்டன.

எட்வர்டின் பாராளுமன்றத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் சில ஆசிரியர்கள், எட்வர்டு 1295-ல் பாராளுமன்றத்தைக் கூட்டியபோது, வகையாள் முறையைப்பற்றி ஒரு தெளிவான கருத்தை மனதில்வைத்து, நடு அரசின் சட்டமன்ற அமைப்பிலே அதை ஒரு நிலையான வழக்கமாக ஆக்கும் நோக்கத்துடன்தான் கூட்டியதாகக் கருதுவர்; ஆயினும் அப்போது நடைபெற்ற நிகழ்ச்சிகள் இக் கருத்தைத் தெரிவிப்பனவாக இல்லை. அரசியல் அறிஞர்களாக விளங்கிய ஆங்கில அரசர் பலருள் எட்வர்டும் ஒருவர் என்பது உண்மையே; ஆயினும் மேலே குறிப்பிட்ட தெளிவான கருத்தும் நோக்கமும் அவருக்கு இருந்திருக்குமாயின், வரலாற்றிலேயே

அவர் ஒரு தலைசிறந்த அரசியலறிஞராக இருந்திருப்பார். புகழ் எனத் தன் மனதுக்குத் தோன்றுவது இங்கிலாந்துக்குக் கிடைக்க வேண்டுமென அவர் முயன்றார்; இந்த நோக்கத்திற்கு இசைய, அவர் தம் கைவசமுள்ள கருவியை-அதாவது பாராளுமன்றத்தை--எவ்வாறு கையாண்டு, முழு வெற்றி இல்லாவிடினும், குறிப்பிடத் தக்க அளவிலாயினும் வெற்றியடைவது என்பதை அவர் கண்டறிந்த அளவில்தான் அவருடைய அரசியலறிவு அல்லது அரசியல் திறம் காணப்படுகிறது. 1295-ல் விடுக்கப்பட்ட ஆணைகளில் அடங்கியதும், அடிக்கடி சுட்டிக்காட்டப்படுவதுமாகிய ரோமானிய மேற்கோளுரையாகிய, ''யாவரையும் பற்றிய செயல்கள் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியவை'' (What Concerns all should be approved by all) என்பது அவருடைய ஆணைகளிற் சேர்க்கப்படும் வரையிலும், அதன் பொருளைப்பற்றி அவர் அறியவில்லை. இம் மேற்கோளுரையானது ஆணைகளிற் சேர்க்கப்பட்டபோதுங்கூட, அதற்குரிய முழுப் பொருளிலல்லாமல் முன்னால் கையாளப்பட்ட இதுபோன்ற மேற்கோளுரைகளுக்குக் கொடுக்கப்பட்ட சுருங்கிய பொருளிலேயே கையாளப்பட்டது. எட்வர்டின் காலத்திற்குப் பிந்திய கால வரலாற்றை நாம் அறிவோமாகையால், எட்வர்டும் அவரது ஆட்களும் என்னென்ன செய்தார்களென்பதை நாம் தெளிவாக அறிய இயலும். தங்களுக்குப் பிந்திய கால வரலாறு அமையும் விதத்தை அவர்களால் அறிய இயலாது. கடைசியில் நிலையாகத் தோன்றிய அமைப்பானது எவராலும் திட்டமிடப்படாததும், எவராலும் முன்னதாகவே எண்ணிச் செய்யப்படாததுமாகிய ஒன்று ஆகும். இங்கிலாந்தில் பதின்மூன்றும் நூற்றாண்டினிறுதியில் அமைக்கப்பட்ட பாராளுமன்றம் அதே காலத்தில் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அமைக்கப்பட்ட பாராளுமன்றங்களினின்றும், தன்மையிலும், நோக்கத்திலும் வேறுபட்டிருந்தது என நாம் கூற இயலாது. வரலாற்றில் ஆங்கிலப் பாராளு மன்றத்திற்கு ஒரு சிறந்த இடத்தைத் தேடித்தந்தது எது என்றால், அது தோன்றிய காலத்திற்குப் பிறகு, அதனை மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டு, பயன்படுத்தி, அதற்கு ஒரு புதிய நல்ல நோக்கமும், பொருளும் கொடுத்ததுதான்.

இரண்டாம் ஹென்றியின் சீர்திருத்தங்களினால் சுற்றிவரும் நீதிமன்றம் மாற்றி அமைக்கப்பட்டதைப் போலப் பாராளுமன்றமும் அமைக்கப்படுதல் வேண்டுமென்பதாக எவரும் தீர்மானம் கொண்டு வந்ததாகவும் தெரியவில்லை. கோட்டமுறை மன்றங்கள் சுற்றிவரும் முறைவர்களைக் கலந்து வழக்குகளை ஆய்வு செய்

யும்படியாக அவைகளுக்கு இந்த நூற்றூண்டினிடையில் ஆணைகள் விடுக்கப்பட்டன; இவ்வாணைகள், ஒன்றுக்கொன்று தனியான வகுப்புக்களாகிய பெருமக்களும், சமய நிலையச் சார்புடைய பெருமக்களும், தனியாட்களும், நகரவாசிகளும், பெருமக்களுக்கும் தனியாட்களுக்குமிடையில் படைமானிய வீரர்களும், இணைந்து அமைந்திருந்ததைக் காட்டுகின்றன. பதின்மூன்றும் நூற்றூண்டிளிறுதியிலும் படைமானிய வீரர்கள் எவ்வகுப்பினரோடு சேருவார்களென்பது தெளிவாகத் தெரியக்கூடவில்லை; எனினும் இது வரை பழைய பெருங்குழுவில் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்த இரண்டு புதிய வகுப்பினரான தனியாட்களும், நகரவாசிகளும் இப்பொழுது இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டனரென்பது இப்பொழுது தெளிவாயிற்று. இந்த இரு வகுப்பினரும், கொள்கையளவிலேனும் இக்காலம் வரையிலும் பெருமக்களினின்றும் தனித்து, வேறுபட்டே இருந்து வருகின்றனர்.

இப்புதிய இரு வகுப்பினரும் பெருங்குழுவில் சேர்க்கப்பட்டமையால், அதனுடைய அடிப்படையான அமைப்பிலேயே ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது; எனவே நிறுவன அமைப்பு என்ற முறையிலேயே இக்குழு பழைய பெருங்குழுவினின்றும் வேறுபட்ட ஒன்று ஆயிற்று. இவ்வாறு ஏற்பட்ட மாறுதல், அதன் தன்மையிலும், பொருளிலும், படைமானியக் காலத்தில் இருந்த ஆங்கிலோ-சாக்சன் நாட்டு மன்றமானது படைமானியப் பெருங்குழுவாக மாறிய தன்மையை ஒத்திருந்தது. இந்த மாறுதல், முதலில் நடைபெற்ற மாறுதலைப்போலவே, உறுப்பினர் நிலையைப்பற்றி ஒரு புதிய கொள்கையை, அதாவது கடைசியில் வகையாள் முறையைத் தோற்றுவிக்கும் கொள்கையைப் புதிதாகப் புகுத்தியதனுல் உண்டாயிற்று.

1295-ம் ஆண்டில் கூடிய பாராளுமன்றத்தோடு, பொதுவாகப் பாராளுமன்றத்தின் தோற்றக் காலம் முடிவடைந்ததாக நாம் கூறலாம்; எனினும் இப்புதிய நிறுவனம் இன்னும் ஒரு திட்டவட்டமான அமைப்பும் பெருமலிருந்தது; அரசின் நிறுவனங்களுள் எதிர்காலத்தில் அதனுடைய இடம் என்ன என்பதும் உறுதியாகாமலிருந்தது. மாபெரும் பட்டயத்தினுல் தொடங்கி வைக்கப்பட்ட மரபைப் பாதுகாத்து அதைத்தொடர்ந்து செயல்படுத்துதல், வரையறுக்கப்பட்ட கோனுட்சியை உண்டாக்கிய பல மேற்சான்றுகளையும் முன்நிகழ்வுகளையும் ஏற்படுத்துதல் முதலிய பெரும் வேலைகளைக் கடைசியில்தான் அது செய்தது; அது தொடக்கத்தில் ஆங்கில அரசியலமைப்பை ஆக்கும் பெரும் வேலையைச் செய்ய இயலாதிருந்தது. 1295-ம் ஆண்டிலுள்ள பாராளுமன்

றத்தை ஒட்டி அடுத்த காலத்திலேயே அதன் முன்னேற்றத்தில் அடுத்த நிலை தொடங்கப்பெற்றதென்பதும் நமக்கு வியப்பைத் தரும் செய்தியாகும்; இந்த இரண்டாவது நிலையில் வகுக்கப்பட்ட கொள்கையை அடிப்படையாக வைத்துத்தான் அடுத்த நூற்றாண்டில் பாராளுமன்றத்தின் வளர்ச்சி முழுவதும் அமைந்திருந்தது.

1295-ல் பாராளுமன்றத்தினால் கொடுக்கப்பட்ட பொருளுதவிகள் எட்வர்டை அவருடைய பணம் இல்லாத இடரிலிருந்து மீட்கவில்லை. பிரான்சோடும், ஸ்காட்லாந்தோடும் அவர் நடத்திய போர்களில் தோல்விகளும், இடர்களும் தோன்றியமையால், இந்தப் பணமில்லாத இடையூறுகளும் பெருகலாயின, பெருமக்களோ பொதுமக்களோ அவரைப்போல இந்தப் போர்களில் ஈடுபாடு காட்டவில்லை; தமக்கு வேண்டிய பொருளை அவர் ஒழுங்கான உதவிநிதிகளின் மூலம் பெறுவதும் இயலாதென்பதை உணர்ந்துகொண்டார். சமய நிலையக் குருமார்களும் தங்கள் மீது அரசு வரிவிதிப்பதை எதிர்த்தனர்; அவ்வாறு எதிர்க்கும்படியாக அவர்களை 1296-ல் போப்பு எட்டாம் போனிபாசினுடைய ஒரு தனி ஆணை கேட்டுக்கொண்டது. இத்தகைய சூழ்நிலையை மனத்துட்கொண்டுதான் நாட்டைக் காக்கவேண்டிய கடமையை முன்னிட்டு, மக்களுடைய முன் இசைவைப் பெறாமலே வரிகளை வாங்குவது சரியே என உறுதியாக எட்வர்ட் நம்பினார்; இதற்காக அவர் நாட்டினருக்கு விடுத்த வேண்டுகோள்களில் இக்காரணத்தைக் கொண்டு தம் செயலைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். இவ்வகையாக அவர் பெருமக்களும் நகரவாசிகளும் முறையாகக் கூடாத மன்றத்தினால் ஓரளவு உதவிப் பொருள் கொடுக்கப்பெற்றார். இம்மன்றத்தில் உறுப்பினர் கூடிய முறையிலும், அது அமைந்த முறையிலும் அதனை ஒரு பாராளுமன்றமாகவோ ஒரு பெருங்குழுவாகவோ நாம் கருத முடியாது. பின்னால் திருப்பிக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, கணக்கு வைத்துக்கொண்டு, வணிகர்கள் ஏற்றுமதிக்காக வைத்திருந்த கம்பளிமயிரை அவர் கைப்பற்றிக்கொண்டார்; இதே வகையில் பல சமயக் குருமார்களை விலக்கிவிட்டு அவர்களுடைய நிலங்களில் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வாறெல்லாம் அவர் திரட்டிய வரியானது மக்களுக்குப் பெரும் சுமையாக இருந்தது; எல்லோருடைய எதிர்ப்பையும் தூண்டிவிட்டது. "எந்த ஆணை பற்றியோ?" என்ற சட்டத்திலடங்கியிருந்த ஒரு பிரிவுக்கெதிராகவும், வேறு பல குறைகளுக்கெதிராகவும், பெருமக்களும் அரசரை எதிர்த்தனர். 1215-லும்; 1258-லும் இருந்தது போல, இவ்வெதிர்ப்புக்குத் தலைமை தாங்க

வும் பெருமக்கள் முன் வந்தனர்; ஆயினும், இப்பொழுது அவர்கள் முன் வந்ததெல்லாம் தங்களுடைய சொந்த நோக்கத்திற்காகவும் நலனுக்காகவுமே என்பதை நாம் இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். இவ்வாறு இருந்த ஒரு பொதுவான நிலையைப் பெருமக்கள் தங்களுடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டாலும், இவ்வாறான ஒரு நிலை இருந்த தென்பதிலும், இத்தகைய நிலை பிற்காலத்தில் ஓர் அரசியலமைப்பின் நெருக்கடியாகக் குறிப்பிடப்படுமென்பதிலும் ஐயமில்லை. இவ்வாறாக அதனைக் குறிப்பிடுவது தான் சரியென்பதையும் 1297-ல் இருந்த மக்கள் அறியார். எனினும் அப்பொழுது அவர்கள் தீர்த்துவைத்தது அரசியலமைப்பு பற்றிய ஒரு கேள்வியையே; இத்தீர்ப்பையும் அவர்கள் ஓர் அரசியலமைப்பின் வடிவமாகவே வழங்கினார்கள். பெருமக்கள் வேண்டிய உரிமைகளும், கடைசியில் அவர்கள் அடைந்த சலுகைகளும், அந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த அவர்கள் காட்டிவந்த எதிர்ப்புக்கு ஏற்பவே இருந்தன; இதனால் உண்டாய விளைவு என்னவெனில் அது மாபெரும்பட்டயத்திற்கு அடுத்துள்ள காலத்தில், வரையறுக்கப்பட்ட கோனாட்சி நிறுவுவதில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய முன்னேற்றமாகும்.

பெருமக்கள் அரசரை எதிர்த்து, அவருக்கு உதவி செய்ய மறுத்தபோதிலும், 1297-ல் கோடைக்காலத்தில் ஒரு பெரும் படையுடன் பிளாண்டர்சில் (Flanders) இறங்குவதற்கு எட்வர்ட் பல முன்னேற்பாடுகளைத் தொடர்ந்து செய்யலானார். அவ்வாண்டு ஆகஸ்டு மாத நடுவில், பெருமக்கள், தங்கள் பெயராலும், "நாட்டின் முழுச் சமுதாயத்தின் பெயராலும்" தங்களுடைய, குறைகளையெல்லாம் எடுத்து ஓர் அறிக்கையில் எழுதி அதை அரசரிடம் கொடுத்து, அக்குறைகளைத் தீர்த்துவைக்கும்படி அரசரை வேண்டினர். தங்களை வறியவர்களாக ஆக்குகின்ற பெரும் வரிச் சுமையைப்பற்றி அவர்கள் குறைகூறினர்; சட்டத்திற் கொப்பவும், வழக்கத்திற் கொப்பவும் தாங்கள் நடத்தப்படவில்லை எனவும், மாபெரும் பட்டயத்திலுள்ள பல பிரிவுகளும், காடுகள் பற்றிய உரிமைப் பட்டயங்களும் நடைமுறையில் கையாளப்படவில்லை என்பதாகவும், அவர்கள் குறைகூறினர்; புதிதாக அரசரால் கம்பளி மயிரின்மீது விதிக்கப்பட்ட தீர்வையானது நிலத்தின் மதிப்பில் ஐந்தில் ஒரு பங்குக்குச் சமமான அளவுக்குக் கடுமையானதெனவும் அவர்கள் முறையிட்டனர். கப்பலேறுதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருந்த எட்வர்டு இக்கேள்விகளை யெல்லாம் தட்டிக்கழித்துவிட்டார். பிளாண்டர்சில் பெரிய அளவில் இருந்த தனது அறிவுரையாளர்களடங்கிய மன்றத்தைக் கூட்டாமல், தான்

இக் குறைகளுக்கு விடை சொல்லமுடியாது என்று கூறிவிட்டு, அவர், தமது மகனுகிய இளைய எட்வர்டைப் பகர ஆட்சியாளனுக (ரீஜன்ட்-Regent-அல்லது கண்காணிப்பாளனுக) அமர்த்தி, பெரு மக்களுடைய உரிமைகளை வழங்குமாறு அவரிடம் கூறிவிட்டு அம் மாதம் இருபத்திரண்டாம் நாள் கப்பலேறிச் சென்ருர்: இவ் வாறுதான் அவர் செய்தல் வேண்டுமென்பதை யாவரும் அறிந் திருந்தனர். அவர் கூறியவாறே அவ்வாண்டு அக்டோபர் முற் பகுதியில் இளவரசரால் மேற்குறிப்பிட்ட சலுகைகள் அளிக்கப் பட்டன; அவ்வாண்டு நவம்பர் ஐந்தாம் நாள் அரசரால் இவ் வுரிமைகள், "பட்டயங்களின் உறுதிப்பாடு" (Confirmation of the charters) என்ற ஒரு அளிப்பின்மூலம் உறுதி செய்யப் பட்டன.

இந்த உறுதிமொழிப் பத்திரத்தின் 6-வது 7-வது பிரிவுகள் வருங்காலத்தை உருவாக்குவனவாகையால் அவை முக்கிய மானவை. ஐந்தாவது பிரிவில் எட்வர்டினுல் விதிக்கப்பட்ட வரி களையும், தீர்வைகளையும் எண்ணிக்கைப்படுத்திக் கூறியபின்பு, 6-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது;—"இனிமேல் நாட்டின் எச் செயல் காரணமாகவும், எமக்கு வழக்கமாகக் கொடுக்கப்பட வேண்டிய உதவிப் பொருள்களையும், வரியையும் தவிர்த்து, குறை கூறப்பட்டிருக்கிற வகையில் வரிகளையும், தீர்வைகளையும், உதவிப் பொருள்களையும் வாங்குவதில்லை என எம் சார்பிலும், எமது வழியினர் சார்பிலும், புனித சமயநிலையத்தைச் சேர்ந்த அதி மேற்றி ராணியார்கள், மடத்துத் தலைவர்கள் ஆகியோருக்கும், கோமான்கள், பெருமக்கள் மற்றும் நாட்டின் சமுதாயத்தார் ஆகிய யாவருக்கும் உறுதியாக உறுதி அளிக்கிருேம்." ஏழாவது பிரிவு கம்பளி மயிரின்மீது புதிதாக விதிக்கப்பட்ட தீர்வையைக் (Maletote) குறிப்பிட்டுவிட்டு, "அரசர், முன்பே பொது மக்களால் தமக்கும் தமது வழியினருக்கும் அளிக்கப்பட்டிருக்கிற கம்பளி மயிரின் மீதும், தோலின் மீதும் உள்ள தீர்வையைத் தவிர, கம்பளியின் மீதும், மற்றப் பொருள்களின் மீதும் வேறு புதிய தீர் வைகள் பொது மக்களினுடைய இசைவும் விருப்பமும் பெருமல் ஒருபோதும் வாங்கப்படமாட்டா" என்பதாகக் கூறுகிறது. ஆரு வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரசரது உரிமை, மாபெரும் பட்டயத்தில் பன்னிரண்டாவது பிரிவில் சுட்டப்பட்டிருக்கும் இந்த உரிமையை ஒத்திருக்கிறது; ஏழாவது பிரிவில் சுட்டப்பட் டிருக்கும் உரிமையும், 1275-ல் எட்வர்டுக்கு அளிக்கப்பட்டதும், பழங்கால முதல் வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்ததுமாகிய உதவிப்பொருள் உரிமையை ஒத்திருக்கிறது. இதே காலத்தில் வெளியிடப்பட்ட வேருெரு பத்திரத்தில், அரசரது நிலங்களிலுள்ள

பேரூர்களின் மீதும், குத்தகையாளருக்கு விடப்படாத நிலங்களின் மீதும் தீர்வை (tallage) விதிப்பதற்கும், மற்ற உதவிப் பொருள் களில் செய்வது போல, மக்களுடைய முன் இசைவை அரசர் பெறுதல் வேண்டுமென விதிக்கப்பட்டது; இப் பத்திரத்தை வெளியிட்டவர் யாவரென அறியக்கூடவில்லை; அது ஒருக்கால் பெருமக்களுடைய உரிமைகளைப்பற்றிய அறிக்கையாக இருக்க லாம்; அல்லது அரசரது உறுதி செய்யும் பத்திரத்திலிருந்து சுருக்கமாக எடுக்கப்பட்ட கருத்தாகவும் இருக்கலாம்; இது ஒரு சட்டமாக இயற்றப்படா விட்டாலும், இது ஒரு சட்டமாகவே (de tallagio non concedendo) பிற்காலத்தவரால் கருதப் பட்டது. இத்தகைய "தீர்வை" வகையை அக் காலத்தவர் மறந்து விடவில்லையாகையால், இதனுடைய பொருளைச் சரியாக உணராமல், இதற்கு அப்பெயரைக் கொடுத்திருக்கலாம். சொத் துக்களோடு பெருமகனுடைய ஆளாக இருக்கும் நில ஊழியர் அல்லது நில அடிமைகளிடமிருந்து வாங்கப்படுவதே குறிப்பிட்ட பொருளில் 'தீர்வை' எனப்படும்; செலவழிக்கப்பட்ட முதலி னின்றும் கிடைக்கும் வருமானம் வரி என்பதாகாது. எனவே, இத் தகைய பொருள்படும் தீர்வைப் பணத்தை அரசர் வாங்குதல் கூடாது என வற்புறுத்துவதற்குப் பெருமக்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது. 1304-ல் தனது நிலங்களின்மீது இவ் வாறு ஒரு தீர்வையை அரசர் விதித்தார்; எனவே அவர், தாம் இத்தகைய ஒரு உரிமையை விட்டுக் கொடுத்ததாகவே கருத்திற் கொள்ளவில்லை.

1297-ம் ஆண்டில் உண்டாக்கப்பட்ட இவ்வுறுதிப் பத்திர மானது பட்டயங்களின் உறுதிப்பாடு (confirmation of the charters) என அழைக்கப்பட்டாலும், இப்பெயர் அவ்வுறுதிப் பாட்டுக்கு வரலாற்றில் உள்ள இடம் இன்னது எனச் சுட்டாமலே விட்டுவிடுகிறது. அரசியலமைப்பு ஆக்கப்பட்டுள்ள அடிப்படை யின் ஒரு பகுதியாக இருக்கிற இந்த உறுதிப்பாடு என்னும் பத்தி ரம், மாபெரும் பட்டயத்தைவிட எவ்வளவிலும் சிறப்பில் குறைந் ததன்று. அரசின் அடிப்படையாக உள்ள இரு விதிகளை மட்டும் விட்டுவிட்டு மாபெரும் பட்டயத்தின் மற்றெல்லாப் பிரிவுகளையும் நாம் பார்த்தால், அரசியல் அமைப்பை ஆக்குவதற்குத் தக்க சூழ் நிலையை உண்டாக்கிய மிக முக்கியமான பிரிவு, வேறொன்றாக இருப்பது தெரியவரும்; "வழக்கமாகப் படைமானிய முறைப் படி கொடுக்கப்பட வேண்டிய வரிப் பொருள்களைத் தவிர, அவற் றுக்கும் கூடுதலாக எந்த உதவிப் பொருளை அரசு வாங்கவேண்டு மாயினும், அதற்கு மக்களுடைய முன் இசைவை அது பெறுதல் வேண்டும்" என்பதே அத்தகைய முக்கியமான பிரிவாகும். இதிற்

கையாளப்படும் மொழி நடையானது படைமானியக் காலத்தது ஆகும். ஆயினும், இதிற் காணப்படும் 'உதவிப் பொருள்' என்ற சொற்களுக்கு வழக்கில் மிகவும் விரிவான பொருள் ஏற்பட்டது. அவ்வப்போது வாங்கப்பட்ட படைமானிய முறையிலல்லாத வரி களையும் அச்சொல் சுட்டிக் காட்டுவதாக அக்காலத்திய மக்கள் கருதியிருந்தால் அதற்கு அத்தகையபொருளும் கொடுக்கப்பட்டது. இது எவ்வாறாயினும், இதிற் கூறப்பட்டவிதியானது, படைமானிய முறை வரிகளை வாங்குதலில் மட்டுமன்றி, படைமானிய முறையி லல்லாத வரிகளை வாங்குதலிலும் கையாளப்பட வேண்டிய ஒரு சிறந்த சட்டமாக ஆயிற்று. இந் நூற்றாண்டில் தோன்றிய மற் றொரு சிறப்பான தன்மை யாதெனில், நாம் முன்பே பார்த்தபடி படைமானிய முறையிலல்லாத வரி முறைகள் பெரும்பாலாக வளர்ந்து வந்ததே யாகும். 1215-ல் வெளியிடப்பட்ட மாபெரும் பட்டயத்தில் உள்ள இதனைப் பற்றிய பிரிவானது மூன்றாம் ஹென்றியினால் 1225-ல் இப்பட்டயம் திரும்பவும் வெளியிடப் பட்டபோது அதனின்றும் விட்டுவிடப்பட்டது. இவ்வாறு திரும்ப வெளியிடப்பட்ட மாபெரும்பட்டயமே சட்டத்திலுள்ளமாபெரும் பட்டயமாக ஆயிற்று. அது நடை முறைக்கு மாறாகவும் இல்லை. எனவே இப்பொழுது ஏற்பட்ட விரிந்த பொருளில் அது செயல்படு வதற்குத் தேவைப்பட்டதெல்லாம் நடை முறையிலுள்ள படை மானியச் சட்டத்தின் ஒரு பகுதியே யாகும்; தேவைப்பட்ட இச் சட்டத்தின் பகுதியும், மாபெரும் பட்டயத்தின் மற்றச் சில பிரிவு களைவிட மக்களால் ஒழுங்காகப் பின் பற்றப்பட்டு வந்தது. எனவே, 1297-ல் தோன்றிய 'பட்டயங்களின் உறுதிப்பாடு' செய் தது யாதெனில் மாபெரும் பட்டயத்திற்கு அதனுடைய பழைய பொருளையும் மரபையும் அது திரும்ப அளித்ததேயாகும்; மேலும் அது அரசரையும் அவரது பின் வழியினரையும் அம்மரபிற்கு அதாவது மேற் கூறிய முக்கிய விதிக்குக் கட்டுப்பட்டிருக்குமாறு செய்தது. இவ்விதியானது முன்னைப் போலப் படைமானிய முறைக் காலத்திய மொழியிலல்லாமல், இக்காலத்தில் யாவ ரும் ஒப்புக்கொள்ளுவதும், படைமானிய முறையிலல்லாததுமான வரிவிதிப்பு முறையையும் சுட்டிக் காட்டக்கூடிய விரிவான பொரு ளில் இதில் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த உறுதிப்பாட்டின் பத்திரத்தை வரைந்தவர்கள் அது படைமானிய முறைக் கடன்களை மட்டுமன்றி (dues) மற்றெல்லா வரிகளையும் சுட்டக் கூடியதாக இருக்க வேண்டுமென்றுதான் அதனை வரைந்தனர்; அவ்வாறு தாங்கள் வரைவதாகத் தான் அவர்கள் எண்ணினர். வருங்காலத்தில் இது பற்றிய கேள்வி எழும்போது, இக் கொள்கைக்கு இவ்வாறான பொருளிலேயே

விளக்கம் கொடுக்கப்பட்டது ; இந்த நாளிலிருந்து ஆட்சியின் செயலுக்கு அடிப்படையாக அமைந்த இச்சட்டத்தை எந்த ஆங்கில அரசரும் மறுத்து எதிர்த்ததில்லே. வரிசையாக ஒரு சில அரசர்கள் இவ்விதியை மீறுவதற்காகச் சில புதிய தீர்வைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டு, அப்புதிய தீர்வைகளுக்கு இப்பழைய விதியானது செல்லாது எனக் கூறலாம் ; அல்லது பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே அவர்கள் சில பழைய வரி வருமானங்களை நீடித்து வாங்கலாம் ; எனினும், "அரசர், தமக்கு முதலில் அளிக்கப்பட்ட பொருளுதவியைத் தான் செலவுக்குத் துணையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்" என்னும் விதியானது அரசியலமைப்பிலேயே ஒரு அடிப்படைச் சட்டமாக 1297-ம் ஆண்டில் திட்டமாக வரையறை செய்யப்பட்டு விட்டது. இந்த விதிக்கு இவ்வுறுதிப் பாட்டில் கொடுக்கப்பட்ட வடிவத்தின் மூலமாகத்தான், இவ் விதியானது, பதினான்காம் நூற்றாண்டில் பாராளுமன்றத்திற்கு ஓர் ஆற்றலைத் தருவதற்கும், கடைசியில் அரசியலமைப்பு முழுவதையும் ஆக்குவதற்கும் அடிப்படையாக ஆயிற்று.

இயல் எட்டு

பாராளுமன்றத்தின் வளர்ச்சி[1]

ஆங்கில அரசியலமைப்பின் வரலாற்றிலே, பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் பதினான்காவது நூற்றாண்டும், பதினேழாவது நூற்றாண்டும் இரு முக்கியமான காலங்களாக விளங்குகின்றன ; எவ்வாறெனில், இவ்வகையில் பதினாறாவது பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும் கூட, இந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றம், அம்முன்னேற்றம் தொடங்கிய நிலையைப் பார்க்கும்போது, மேலே குறிப்பிட்ட இரண்டு காலங்களோடு ஒப்பிடத் தகாததாய் இருக்கிறது. பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்டவளர்ச்சியின் நோக்கங்களாவன:-பாராளுமன்றம் நாட்டில் அதற்கு உரிய நிலையில் உறுதியாக அமைதல், இதுவரை அரசருடைய வரம்பற்ற ஆட்சிக்கு எதிராக அது காப்பாற்றி வந்த திட்டமான உரிமைகளைப் பெற்றிருத்தல், அரசியலமைப்பின் அடிப்படையான விதிகளுக்குக் காப்பாளராகவும், அரசருக்கு எதிராகவும் இருந்த பெரு மக்களுடைய பின் வழியின

1 The growth of Parliament.

ராக இருத்தல், ஆகியவையே. இவ்வாருயினும், அந் நூற்ருண்டின் தொடக்கத்தில் பாராளுமன்றத்தின் நோக்கம் இவற்றினின்றும் வேருக இருந்தது. பதின்மூன்ரும் நூற்ருண்டில் அது பலவகையில் வளர்ச்சி யடைந்தாலும், அதில் உறுப்பினர் அமைப்பு, அமைப்பு முறை, செயலாற்றும் வகைகள் ஆகியவை தீர்மானிக்கப்படாததால், அது பதினன்காம் நூற்ருண்டின் தொடக்கத்தில் உருவற்ற, தெளிவில்லாத நிலையில் இருந்தது.

அரசாங்கத்தினுடைய எல்லா அலுவல்களையும், வேலைகளையும் கட்டுப்படுத்தக் கூடிய தலைமை அதிகாரத்தோடு, நாட்டின் வகையாளாகப் பாராளுமன்றம் அல்லது மக்கள் மன்றமானது ஆங்கில அரசியலமைப்பில் பொருந்தி இருக்கிறதென நாம் சாதாரணமாக எண்ணுகிருேம்; இவ்வாறு எண்ணுவதற்குப் பழக்கப்பட்டுவிட்ட நாம், பதினன்காம் நூற்ருண்டின் தொடக்கத்தில் பாராளுமன்றமானது இங்கிலாந்தில் மட்டுமன்றி, வரலாறு முழுவதிலுமே, வகையர்ள் ஆட்சி முறைக்கு ஏற்ற ஓர் உறுப்பாக இருக்கத் தொடங்கிற்று என்பதை உணரவேண்டுமாயின், அது சிறிது நுட்பமாக முயன்ருல்தான் முடியும். அது எதிர்காலத்தில் எவ்வாறு உருவாகும் என்பதும், நடைமுறையில் ஆட்சியில் அதன் பங்கு என்ன என்பதும் இனித்தான் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தன; இதுவரை இவைகளைப் பற்றி ஒன்றும் தீர்மானிக்கப்படவில்லை. இந்தப் புதிய நிறுவனத்தின் உரிமைகளும் அலுவல்களும் தெளிவில்லாமலும் வரையறுக்கப்படாமலும் இருந்தன; அதனுடைய செயல் திறத்தைப் பற்றியும் எவரும் ஒன்றும் அறியக்கூடவில்லை. பாராளுமன்றம் படைமானியக் காலத்திய பெருங்குழுவின் வழியில் வந்த ஒன்ருகும்; வரி விதிப்புக்கு இசைவு பெறுதல் என்ற படைமானியக் காலத்தியக்கொள்கையானது, பதின்மூன்ரும் நூற்ருண்டில் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு வகுப்பும் தான் கொடுக்க வேண்டிய வரிக்கு இசைவு தருதல் வேண்டுமென்ற கொள்கையாக மாறியபோது, அக்கொள்கைக்கு உரிய ஒன்று என்ற முறையிலும் பாராளுமன்றம் இருந்தது; எனவே இவ்வாறு இரு தன்மைகளில் அல்லது முறைகளில் பாராளுமன்றம் இருந்தமையால், அதிகாரங்களைப் பெற அது முன்னேறத் தொடங்குவதற்கு நடைமுறைத் திறம் மிக்க (strategic value) ஒரு தொடக்கநிலை (starting point) அதற்கு இருந்தது. இத்தகையநிலை ஒரு தொடக்கநிலையே; எனினும் இத்தகைய சாதகமான சூழ்நிலையின் பயனைப் பாராளுமன்றம் நன்ருக உணர்ந்திருந்தது என்பதாக நாம் துணிவாகக் கூற முடியாது. பாராளுமன்றத்தின் தோற்றக் காலத்தில் ஏற்பட்டது போல, இவ்வளர்ச்சிக் காலத்திலும் ஒவ்வொரு செயலும் நடைபெற்றபோது, அவ்வச் சமயத்துக்கு உகந்த செயல்;

எது என்பதை ஒட்டித்தான் செயல்கள் தீர்மானிக்கப்பட்டனவே யன்றி, மக்களாட்சிக்குரிய அரசியலமைப்பை எதிர் காலத்தியக் குறிக்கோளாகக் கொண்டோ, வேறு ஏதாயினும் ஆட்சிமுறைக் குரிய கொள்கையை ஒட்டியோ, செயல்கள் ஆற்றப்படவில்லை என்பதையே நாம் கூறமுடியும்.

நாட்டின் வருமானங்களையும் செலவுகளையும் பொறுத்த வரையில் முழு அதிகாரத்தையும் அடைவதற்குப் பாராளுமன்றம் நீண்ட காலம் கடுமையாக அரசரை எதிர்த்துப் போராடவேண்டி யிருந்தது. சட்டம் இயற்றும் அலுவலிலோ, இப்புதிய நிறுவனம் யாதொரு தொடக்க நிலையையும் இன்னும் உண்டாக்கவில்லை; அரசாங்கத்தின் பொதுக் கொள்கையை வகுப்பதில் எதிர் காலத்தில் தனக்கு வரப்போகிற பொறுப்பைப் பாராளுமன்றம் உணரவில்லை; உண்மையில் தனக்கு அத்தகைய நோக்கம் எதுவும் கிடையாதென அது ஒரு சில சமயங்களில் மறுதலித்தும் கூறியது; எனவே தான் செய்யும் செயல்களைச் சரிவர உணராத, தன்னை மறந்த ஒரு நிலையிலேதான் பாராளுமன்றம் எதிர்காலத்தில் தனக்கு ஏற்படப்போகிற அதிகாரத்துக்கு அடிப்படைகளை அமைத்தது. இக்காலத்திய பாராளுமன்ற அரசாங்கம் தோன்று வதற்கு முன்பாக, மூன்று வகையான அதிகாரங்களைப் பாராளு மன்றம் கைப்பற்றியாகவேண்டும்; அவையாவன—நாட்டின் வரு மானங்களும், செலவுகளும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக் குள் வருதல், சட்டம் இயற்றும் உரிமையைப் பொதுமக்கள் மன் றத்தை ஓர் ஒத்த பங்காளியாக உடைய பாராளுமன்றம் மட்டுமே கையாளுதல், எச்சமயத்திலும் அரசாங்கத்திற்கு ஒரு தன்மையையும் நோக்கத்தையும் அளிக்கவல்ல பொதுக்கொள் கையைப் பாராளுமன்றமே உருவாக்கித் தீர்மானித்தல், ஆகிய வையே. எதிர் காலத்தில் யாதொரு இடர்ப்பாட்டுக்கும் இட மில்லாதவகை அதிகாரத்தில் எதுவும் பாராளுமன்றத்திற்குப் பதி னைன்காம் நூற்றாண்டின் இறுதிவரையில் கிடைக்கவில்லை; எனினும் அவற்றை அடையும் போக்கிலேதான் பெரும் முன்னேற்றம் ஏற் பட்டது; முக்கியமாக முதலாவது சொல்லப்பட்ட அதிகாரத்தை அடைவதில் மிக்கதொரு முன்னேற்றம் காணப்பட்டது; எனினும் ஒப்புநோக்கிக் காணுமிடத்து, இன்னும் செய்யப்படவேண்டியவை பல இருந்தன.

பதினைன்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாராளுமன்றம் அதனுடைய உறுப்பினர் அமைப்பு (composition), உள் அமைப்பு முறை (organization) ஆகியவற்றில் தெளிவின்றியும், உருவற்றும் இருந்தபோதிலும், இவைபற்றிய கேள்விகள் முடிவு செய்யப்

பட்டன. இரு புதிய பிரிவுகளாகிய கோட்டங்களிலிருந்தும், பட்டணங்களிலிருந்தும் வகையாட்களைக் கொண்டதாகத்தான் முழு அதிகாரமும் உடைய பாராளுமன்றம் இருக்கவேண்டுமென்ற கருத்தே யாவரும் விளங்கிக்கொண்ட ஒன்றாக இருந்தது. இப் புதிய பிரிவினரைத் தன்னிடத்துக் கொண்டிராத பழைய பெருமன்றமானது (Old Great Council) அதனுடைய பழைய அதிகாரங்கள் சிலவற்றை நெடுநாள் வரையிலும் நீடித்துத் தன்னிடம் வைத்திருந்தது; அரசரோடு சேர்ந்து செயலாற்றிய சிறிய மன்றமும் சில அதிகாரங்களை வைத்துக்கொண்டு, பாராளுமன்றத்தினுடைய அதிகார வரம்பை மீறியது; ஆயினும் இந்த நூற்றாண்டிலிருந்து, இந்த நிலைமை மாறி, மறைந்துகொண்டிருந்த ஒரு பெருமை காலங்கடந்து வாழுவதையே இந்தப் பழைய மன்றங்கள் காட்டி வரலாயின. எனவே இவ்வகையில் சட்டமியற்றுதல் போன்ற எல்லா உரிமைகளையும் உடையதாகத் தோன்றிய பாராளுமன்றமானது ஒரு புதிய நிறுவனமாகும்; அது ஒரு பழைய நிறுவனமன்று.

பாராளுமன்றத்தினுடைய முடிவான உருவ அமைப்பு, அதனுடைய உறுப்பினரை முடிவாக அமைக்கும் முறையைப் பொறுத்து இருந்தது. இதில் இருந்த சமயநிலையத்தைச் சேர்ந்தவருள் பொதுக்குருக்களின் வகையாட்கள் இந் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பாராளுமன்றத்தினின்றும் விலகித், தங்களுடைய பாராளுமன்ற அலுவல்களையெல்லாம், 'குருமார் கூட்டம்' (கான்வொக்கேஷன் - Convocation) எனப்படும் தங்களுக்குரிய மன்றங்களிலேயே செய்தனர்; இத்தகைய மன்றங்கள் சமயக்குருக்களுக்குச் சட்டம் செய்யும் மன்றங்களாக ஒரு நூற்றாண்டுகாலமாக இருந்துவந்தன. அரசருக்கு வரிப்பணம் அளிக்கும் உரிமையைத் தங்கள் கையிலேயே வைத்திருப்பதற்கு அவர்கள் விரும்பியதனால்தான், அவர்கள் இவ்வாறு விலகினர்; ஒவ்வொரு வகுப்பினரும் தனித்தனியே தாம் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் வரிப்பணத்தைப்பற்றி முடிவு செய்யப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் உரிமை இருந்தது என்பது இதிலிருந்து நமக்குத் தெளிவாகத் தெரிகிறது; எனினும் இதிலிருந்து அவ்வுரிமை மறைந்துகொண்டிருந்ததைக் கண்டு அவர்கள் அஞ்சினர் என்பதும் தெரியவருகிறது. இதை அடுத்துச் சிலகாலம் வரையிலும் அவர்கள் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டனர்; ஆயினும் அவர்கள் அதில் ஒரு தனிமன்றமாகக் கூடவில்லை; 1664 வரையிலும் அவர்கள் தனித்து இருந்தே தங்களுடைய வரிப்பணத்தை வாக்கெடுப்பின்மூலம் அளிக்கும் உரிமையைக் கையாண்டுவந்தனர். அவர்கள் விலகிக்கொண்டமையால் பாராளுமன்றமானது இரண்டாவது, மூன்றாவது

வகுப்பாருக்குரிய மன்றங்களை மட்டுமே உடையதாக அமைந்தது. மேற்றிராணியார்களும், மடத்துத் தலைவர்களும் பெருமக்களாகக் கருதப்பட்டமையால், அவர்கள் பெருமக்கள் மன்றத்திலேயே சமயக்குருக்கள் என்ற நிலையிலல்லாமல், பழைய பெரு மன்றத்தின் (Old great council) உறுப்பினர் என்ற நிலையில் தொடர்ந்து இருந்து வந்தனர்.

இவ்வாறு சமயக் குருக்கள் விலகிக்கொண்டாலும், இப் புதிய நிறுவனத்திலுள்ள மன்றங்களின் எண்ணிக்கைபற்றிய கேள்வியானது முடிவாகத் தீர்க்கப்படவில்லை. பதின்மூன்றும் நூற்றாண்டிலே, மேலே குறிப்பிட்ட வகையாட்களை ஒரு மன்றமாகப் பழைய பெரு மன்றத்தில் இணைப்பது என்பது சாதாரணமாக நடைபெற்றுவந்த ஒரு செயலாகும். ஐரோப்பா முழுவதிலும் இச் செயலானது நடைபெற்றதெனினும், எல்லா நாடுகளிலும் இது ஒரே வகையான முறையில் நடைபெறவில்லை. ஸ்பெயினிலுள்ள அரகன் (Aragon) மாகாண மன்றத்தில் படைமானிய வீரர்கள் தமக்கெனத் தனியாக ஒரு மன்றம் அமைத்துக்கொண்டிருந்தனர்; வேறு பல நாடுகளில் அவர்கள் படைமானியப் பெருமக்களோடு சேர்ந்திருந்தனர். ஸ்வீடன் நாட்டில் நான்கு மன்றங்கள் இருந்தன; அங்கு நாட்டுப்புறப் பொதுக்குடி மக்களுடைய (country freemen) வகையாட்கள் ஒரு தனி மன்றமாக இருந்தனர்; ஸ்காட்லாந்தில் ஒரு மன்றந்தான் இருந்தது. பெரும்பாலான நாடுகளில் பட்டணங்களின் வகையாட்கள் பாராளுமன்றத்தில் ஒரு தனிப்பகுதியாகவே அமைந்திருந்தனர். இதுபற்றி இங்கிலாந்தில் எழுந்த கேள்வி என்னவெனில், அது, "படைமானிய வீரர்கள் முடிவாக மேல் அவையிலுள்ள பெருமக்களோடு சேருவார்களா, கீழ் அவையிலுள்ள நகரவாசிகளோடு சேருவார்களா ?" என்பதேயாகும். இக் கேள்வியானது மூன்றும் எட்வர்டின் ஆட்சியின் முற்பகுதியில் தீர்க்கப்பட்டுவிட்டது. படைமானிய வீரர்கள், நிலம் வைத்திருந்த உயர்குடிப் பிறப்பாளரது (aristocracy) வகுப்பினின்றும் தோன்றியவராக, ஒரு சிறு உயர் குடிப்பிறப்பாளராக இருந்த போதிலும், அவர்கள் பட்டணங்களிலுள்ள வணிக மக்களுடைய வகுப்போடு இணைந்து, அதன் மூலம் பொதுமக்கள் மன்றத்தை (House of commons) உருவாக்கினர். இத்தகைய புதியதொரு விளைவு இங்கிலாந்தில் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த சில தனித்த சூழ்நிலைகள் இதற்கு முந்திய இயலில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

கோட்டமுறை மன்றத்தில் நகரவாசியாகிய வணிகரோடு அரசியலில் சமநிலையுடையவராக இருந்த படைமானிய வீரர், பதினான்காம் நூற்றாண்டின் இங்கிலாந்தில் அவரோடு சமுதாயத்தி

லும் ஒத்த நிலையுடையவராகக் கருதப்பட்டார்; எனவே நகர வாசியான வணிகர் தமது பிள்ளைகளையும், பெண்களையும் படைமானிய வீரரது குடும்பங்களில் யாதொரு தடையுமின்றித் திருமணம் செய்து கொடுத்தனர்; அவர் தனக்கென நிலம் வாங்கினாலோ, தாமே ஒரு படைமானியக் குடும்பத்தை நிறுவினாலோ, அதற்கு யாதொரு தடையும் கிடையாது. வழக்கத்தை ஒட்டியும், தன்னலத்தின் காரணமாகவும் பெரிய படைமானியப் பெருமக்களுக்கும், சிறிய படைமானியப் பெருமக்களான வீரருக்குமிடையே பல தடைகள் இருந்தபோதிலும், பிற் கூறப்பட்டவரான படைமானிய வீரருக்கும், நகரவாசிகளுக்குமிடையே உள்ள தடைகளெல்லாம் தகர்ந்து மறைந்துவிட்டன. பதினான்காம் நூற்றாண்டில் ஆங்கிலப் படைமானிய வீரர்கள் நகரவாசிகளுடன் எப்பொழுதும் தங்களுக்கு நல்ல உறவு ஏற்படுமென்பதை முடிவாக உணர்ந்தனர். எனவே இந்த இரு வகுப்பார்களும் இணையவே, பொதுமக்கள் மன்றம் உருவாயிற்று. இதை விளக்கும் வகையால், 'படைமானிய வீரர்கள் நகரவாசிகளிடந்தான் தமக்கு நல்லுறவு உணர்ச்சி ஏற்படுமென்பதை உணர்ந்தனர்' என்பதே நாம் கூறவேண்டுவதாகும்.

முன்பே எண்ணித் திட்டம் செய்யப்படாத இச்செயல்தான் பதினான்காம் நூற்றாண்டில் பாராளுமன்றம் அதிகார வளர்ச்சியில் முன்னேறுதற்குப் பெரிதும் துணை செய்தது. ஏனெனில் இம் முன்னேற்றம் உண்மையில் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒத்ததாகக் காணப்படாமல், பொதுமக்கள் மன்றத்தில் மட்டுமே காணப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்ததைவிட அதனுடைய இறுதியில்தான் பெருமக்கள் மன்றமானது, அதனைப் பொறுத்தவரையில் சிறப்பில் குறைந்த ஒன்றாகக் கருதப்பட்டது. இக்காலத்தில் பொதுமக்கள் மன்றத்தினிடம் சிறப்பான தலைமை ஏற்கும் தன்மையும், மிகுந்த தன்னம்பிக்கையும், அரசரது அமைச்சர்களோடும் பெருமக்களோடும் தான் ஒத்தது என்னும் மேலோங்கிய உணர்ச்சியும் காணப்பட்டன. மற்ற ஐரோப்பிய நாடுகளில் இதை ஒத்த மூன்றாவது மன்றங்களான மக்கள் மன்றங்களினிடத்தே இத்தகையபண்புகள் பொதுவாக அக்காலத்திலும் அதற்கடுத்த நீண்ட காலத்திலும் காணப்படவில்லை. இத்தகைய இரு சட்டமன்ற அமைப்பானது (bicameral legislative organization) பல அரசியல் மாணவர்களால் புகழ்ந்து பாராட்டப்படுகிறது; இவ்வகையான அமைப்பு ஆங்கிலோ—சாக்சனிய இனத்தவருடைய அரசியல் நுண் திறத்தினால் தோன்றியதாகவும் சிலர் கருதுகின்றனர். ஆங்கில அரசியலமைப்பிலிருந்து தோன்றிய பிற நாட்டு அரசியலமைப்புக்களிலெல்லாம்

இவ்வகையான அமைப்பே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது; இவ்வாறு அது தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதே நடைமுறையில் அது சிறந்ததென்பதை உறுதிப்படுத்துகிறது. ஆயினும் பாராளுமன்றத்தின் தோற்றத்தைப்பற்றிய வரலாற்றிலிருந்து, "அது பதினான்காம் நூற்றாண்டில் மக்கள் மனதார, வேண்டுமென்றே தேர்ந்தெடுத்துக் கொண்டதனாலுண்டாகிய விளைவு அல்ல" என்பதும், "இந்நிகழ்ச்சியில் அவர்களுடைய அரசியல் திறம் எதுவும் செயல்படவில்லை" என்பதும், "சமயக் குருக்கள் பாராளுமன்றத்தினின்றும் விலகவே, தற்செயலாக இவ்விளைவு தோன்றியது" என்பதும் நமக்குத் தெளிவாக விளங்குகின்றன.

பாராளுமன்றத்தின் தோற்றத்தினால் பெருமக்கள் மன்றம் உண்டாகவில்லை; ஏனெனில் அதுவே பழம் பெரு மன்றமாக இருந்த ஒன்று ஆகும்; எனினும் பாராளுமன்றத்தின் தோற்றத்தினால், பிற்காலத்தில் யாவராலும் குறிப்பிடப்பட்ட பெருமக்கள் வகுப்பு என்ற ஒன்று தோன்றியதென்பது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. பழைய காலத்திய பெருமக்களுடைய தரத்துக்குப் பதிலாக இக்காலத்திய பிரபுக்கள் அல்லது பெருமக்கள் சமுதாயம் தோன்றுவதற்கு முன்னதாகவே, பாராளுமன்றமானது ஒரு திட்டவட்டமான அமைப்பைப் பெற்றது; இதுவே இங்கு முக்கியமாகக் குறிப்பிடத்தக்க உண்மையாகும். ஒரே சமயத்தில் ஒரே ஒருவரால்தான் வைத்திருக்கப்படவேண்டிய பெருமகன் பண்ணையைப் (baronage) பெற்றிருக்கும் ஒவ்வொரு பிரபுவும், பெருமக்கள் மன்றத்துக்கு அழைக்கப்பட்டார். அவருடைய குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்குப் பெருமக்கள் மன்றத்தில் இடம் கிடையாது; அவர்களெல்லாம் விரும்பினால், பொதுமக்கள் மன்றத்துக்குச் செல்லலாம்; சட்டத்தில் அவர்களெல்லாம் பொதுமக்களாகவே கருதப்பட்டார்கள். இந்த உண்மையான நிலைமையினாலேதான், மற்றவர்களுக்கு விலக்கப்பட்டுத் தமக்கு மட்டும் வழிவழியாக வரக்கூடியதாகவுள்ள சில மதிப்பான தரங்களையும், எல்லாத் துறைகளிலும் சில சிறப்பான சலுகைகளையும் உடைய ஒரு தனித்த சாதியாக ஆங்கிலப் பெருமக்களது கூட்டம் ஒருபோதும் மாறியதில்லை. அதற்கு மாறாக இப் பெருமக்கள் வகுப்பானது அவ்வப்போது பொதுமக்கள் வகுப்போடு இணைந்து, அதனால் உறுதி பெற்றும், தன்னிடத்துள்ள திறம் மிக்கவரைப் பொதுமக்கள் வகுப்பிற் சேர்த்து அவ்வகுப்பை உறுதிப்படுத்தியும் வந்துள்ளது.

பாராளுமன்றம் தனது வளர்ச்சிக்குரிய காலத்தை அடையும்போது, அதனுடைய அதிகார வளர்ச்சிக்கு ஏற்ற ஓர் அடிப்படையானது 1297-ம் ஆண்டின் பட்டய உறுதிப்பாட்டுக் கொள்கை

யினுல் அமைக்கப்பட்டிருந்தது; 'அரசர், தமக்கு முதலிலேயே பாராளுமன்றத்தினு லளிக்கப்படும் வரிப்பணத்தையே சார்ந்திருந்து அதிலிருந்துதான் செலவுசெய்தல்வேண்டும்' என்பதே அடிப்படையான அக் கொள்கையாகும். பாராளுமன்றமானது நாட்டில் தனக்கு உரிய நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு இக் கொள்கையானது பயன்படுமென்பதைச் சிறிது சிறிதாகத் தான் உணரத் தொடங்கியது என்பது உண்மை. இக்கொள்கையை வகுத்தவர்களுடைய நோக்கத்திற்கொப்ப இது எல்லாவற்றுக்கும் பொருந்தும் வகையில் இல்லை என்பதையும் பாரளுமன்றம் கண்டுகொண்டது. எனவே இக் கொள்கையானது பாராளுமன்றத்தினுடைய எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு அடிப்படையைத்தான் தொடங்கிற்று; எனினும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தை வளர்ப்பது என்ற வேலையானது இன்னும் தொடர்ந்து செய்யப்பட வேண்டியதாயிருந்தது. இவ் வேலை முழுவதும் செய்யப்படுதல் வேண்டுமாயின், முன்பே குறிப்பிடப்பட்டதும், அதிகாரம் சார்ந்துள்ளதுமான மூன்று செயல்களும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்; முதலாவது செயல், எல்லா வகையான அரசாங்க வருமானங்களையும் பாராளுமன்றம் கட்டுப்படுத்துதல்; இரண்டாவது செயல் எல்லாச் சட்டம் இயற்றும் வேலையிலும் பொது மக்கள் மன்றத்துக்கு ஒத்த பங்கு உண்டு என்ற உரிமையை நிறுவுதல்; மூன்ருவது செயல், அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைக் கண்காணித்தலும் அதை இயக்குதலும் ஆகிய உரிமைகளைப் பாராளுமன்றத்துக்குக் கிடைக்குமாறு நிறுவுதல். இம்மூன்று வகையான குறிக்கோள்களை நோக்கியே ஏற்பட்ட வெகு விரைவான முன்னேற்றந்தான் பதினுன்காம் நூற்ருண்டின் வரலாறு ஆகும்; இம் முன்னேற்றமானது ஒன்றிலுள்ளதை விட மற்றென்றில் மிகவும் விரைவாகவும், நெடுந் தொலைவுக்கு ஏற்படுவதாகவும் இருந்தது.

பட்டய உறுதிப்பாட்டைத் தொடர்ந்து அடுத்து முன்னேற்றப்பாதையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவெனில், 1297ம் ஆண்டில் இவ் வுறுதிப்பாட்டின் மூலம் தனக்குக் கிடைத்த புதிய கருவியை அரசருக்கெதிராக எவ்வாறு கையாளுவது என்பதைப் பாராளுமன்றம் சிறிது சிறிதாகக் கற்றறிந்து கொண்டதேயாகும். நாம் முன்பே அறிந்துள்ளபடி, அப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருந்த அரசியலமைப்புக் காப்பாளராக இருக்கும் பொறுப்பானது, அரசரை எதிர்த்த பெருமக்கள் கட்சியிடம்தான் இருந்ததேயன்றிப் பாராளுமன்றத்திடம் இல்லை; ஆயினும் இப்பொழுது ஏற்பட்ட புதிய சிறு முன்னேற்றத்தினுல் முதன் முதலா

கப் பெருமக்களுடைய கண்காணிப்பிலிருந்து பாராளுமன்றத்தினுடைய மேற்பார்வைக்கும், பொறுப்புக்கும் அரசியலமைப்பின் வளர்ச்சி மாற்றப்பட்டு விட்டது. இரண்டாம் எட்வர்டு அரியணை ஏறிய ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே உறுதியும், தீர்மானமும்கொண்ட ஒரு எதிர்க்கட்சி அவருக்கெதிராகத் தோன்றியது ; இவ்வெதிர்க் கட்சியானது இதற்கு முன் எவருக்கு மில்லாத அளவுக்கு எதிர்கால உணர்வு இல்லாமலும், குறுகிய தன்னல மனப்பான்மையோடும் இருந்தபோதிலும், இது பதின்மூன்றும் நூற்றுண்டில் ஏற்படுத்தப்பட்ட மேற்கோள்களை (முன்நிகழ்வுகளை) ஒப்புக்கொண்டு, அவற்றின்வழியே செயலாற்றியது. இவ்வெதிர்க் கட்சி தனது கோரிக்கைகளையும், அவற்றின் பயனையும் அரசியலமைப்பிற்கொத்த வடிவங்களில்தான் அமைத்தது; எனவே இவ்வகையில் அது மாபெரும் பட்டயத்தின் அடிப்படையான கொள்கைகளை வெகுவாக நடைமுறையில் செயலாற்றியது. 1309-ல் கூடிய பாராளுமன்றமானது ஒரு பழைய பெரு மன்றம் அன்று; அது முற்றிலும் புதிய வகையான ஒரு மன்றம் ஆகும். அது, தான் முறையிட்டுவந்த குறைகளை எல்லாம் ஒரு பட்டியலாக எழுதி, அதைத்தான் அரசருக்கு அளிக்கும் வரிப்பொருள் உதவியோடு இணைத்து, அக் குறைகளை அரசர் நன்கு கவனித்து அவற்றுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டின் பேரில் அவருக்கு அப்பொருள் உதவியை அளித்தது. அது அளித்த குறைகளடங்கிய பட்டியல் அவ்வளவு முக்கியமானதன்று; அது அரசியலமைப்பில் அவர்களடைந்த முன்னேற்றம் எதனையும் குறிக்கவில்லை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தலைமுறைகளுக்குப் பிறகு, தான் அளிக்கும் பொருளுதவியோடு சில கட்டுப்பாடுகளையும் இணைப்பது என்பது பாராளுமன்றச் செயல் முறையில் யாவரும் ஒப்புக்கொண்ட வரலாறு ஆகும், இதை நாம் 1309-ம் ஆண்டிலிருந்தோ அதற்கு முன்னுல் இருந்த குறைவுபட்ட இத்தகைய நிகழ்ச்சிகளிலிருந்தோ தொடங்குதல் கூடாது; பாராளுமன்றம் தான் இவ்வாறு செய்ய இயலும் என்பதை உணர்ந்ததும், இப் புதிய கருவியின் மூலம் பல சோதனைகளை நடத்திப் பிற்காலத்தில் கையாளப்பட்ட பல மேற்கோள்களை நிறுவிற்று என்பதை நாம் அறிய நமக்கு வியப்பு உண்டாகிறது.

இரண்டாம் எட்வர்டின் ஆட்சியில் (1307-1327) வரையறுக்கப்பட்ட முடியரசை ஏற்படுத்துவதில் தெளிவாகச் சில முயற்சிகள் செய்யப்பட்டன ; எனினும், இதனுல் அவ்வாட்சி அரசியலமைப்பைப் பொறுத்தவரை சிறப்புடையதாக இல்லை: இவ்வாட்சியில் அரசரைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில முன் நிகழ்வுகள் நிறுவப்பட்டமையாலும், இப்பொழுது ஏற்படுத்தப்பட்ட இந்த

மேற்சான்றுகள் மிகவும் கடுமையான அரசியல் நெருக்கடிகள் பிற் காலத்தில் எழுந்தபோது மிகவும் பயனுள்ளவையாக இருந்தமையாலும், இவ்வாட்சி அரசியலமைப்பைப் பொறுத்தவரை சிறப்பு மிக்கதாக அமைந்தது. மாபெரும் பட்டயத்தின் அடிப்படையான கொள்கைகளை நன்ருக அறிந்து கொள்ளுவதில், 1215லிருந்து ஏற் பட்ட முன்னேற்றத்தைக் காட்டுகிற ஒரு பிரிவு, முடிசூட்டு விழா உறுதி மொழியில் சேர்க்கப்பட்டது. இவ்வுறுதி மொழியில் "ஐயா, உங்களுடைய நாட்டின் சமுதாயத்தினரால் ஏற்படுத்தபட்டுள்ள சட்டங்களையும், வழக்கங்களையும் நீங்கள் ஏற்று ஒப்புக்கொள்ளுவதாகவும், அவைகளைக் காப்பாற்றிக் கடவுளுக்கு உண்மையாக, உங்களாலியன்ற வரை உறுதி செய்வதாகவும், நீங்கள் வாக்குறுதி மொழி கூறுவீர்களா ?" என எட்வர்டு கேட்கப்பட்டார். 1311-ம் ஆண்டில் பெருமக்கள் 1258-ம் ஆண்டில் நடைபெற்ற மேற் கோளைப் பின்பற்றி "ஆணைகள்" அல்லது "கட்டளைகள்" (ordinance) எனப்படும் ஒரு சட்டத்தைச் செய்து அதற்கு அரசரைக் கட்டுப்படுத்தினர் ; இதன்படி, எல்லா அலுவல்களுக்கும் ஆட்களை அமர்த்துவதென்பது பெருமக்களைச் சார்ந்தே செய்யப்பட வேண்டிய ஒன்ருக ஆயிற்று. பெரு மக்களுடைய கருத்துக்களுக்கு ஒப்பவே பல செயல்களை இவ்வாணைகள் ஒழுங்கு செய்தன ; ஆயினும் அவை உட்பொருளைப் பொறுத்தவரையில் ஆக்சுபர்டு ஏற் பாடுகளை முழுவதும் ஒத்திருந்தன ; மேற்குறிப்பிட்ட நிலையைத் தாண்டி அதற்கும் மேலாக இவ்வாணைகள் புதிய மேற்கோள் ஒன்றை நிறுவின, என்பதைத் தவிர அரசியலமைப்பு வளர்ச்சியில் முன்னேற்றத்தை உண்டாக்கவில்லை.

1322-ம் ஆண்டில் அரசரது கட்சி வலுவடையவே, அவர் ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் மூலமாக மேற்கூறிய ஆணைகளைத் தள்ளுபடி செய்தார். இந்தச் சட்டமானது அரசியலமைப்பில் முக்கியத்துவம் உடையதென்பதாக மிகைபடக் கூறப்படுகிறது. இச்சட்டத்தில், பின்வரும் சொற்ருெடர் காணப்படுகிறது. "எமது தலைவராகிய அரசர், அவரது வழியினர், நாடு, அதிலுள்ள மக்கள் ஆகியோரைப் பற்றிய எல்லாச் செயல்களும், இதற்குமுன் வழக்கமாக இருந்து வந்துள்ளபடி, நாட்டிலுள்ள பொது மக்களும், கோமான்களும், பெருமக்களும், தலைமைக் குருமார்களும் கூடியுள்ள பாராளுமன்றத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டு, எமது தலைவராகிய அரசரால் நிறுவப்படுதல் வேண்டும்" என்பதே அச்சொற்ருெடர். இச்சொற்கள் பொது மக்களுக்குச் சட்டம் இயற்றுதலில் பங்கு உண்டு, என்னும் அவர்களது அரசியலமைப்பு உரிமையைக் காட்டுவதாக ஒரு சிலரும், அரசியலமைப்பின் தன்மையை உடைய எல்லாச் சட்டங்களையும் இயற்றுவதற்

குப் பொதுமக்களுக்கு உரிமை உண்டு எனக்காட்டுவதாக ஒரு சிலரும் கருதுகின்றனர்; ஆயினும் இந்த இரண்டுவகையானமுடிபுகளும் பொருந்தாதவையே; பழையகாலச் செயல் முறையில் யாதொருமாற்றமும் செய்யப்படவில்லை என்பதை இதன் மொழி அமைப்பு தெளிவாகக் காட்டுகிறது, உண்மையில் யாதொருமாற்றமும் செய்யப்படவில்லை; ஏனெனில் இவர்கள் கருதுகிற உரிமைகளெல்லாம் நெடுங் காலத்திற்கும் பின்னரே பொது மக்கள் மன்றத்திற்குக் கிடைத்தன. இதில் "பொது மக்கள்" (Commonalty) என்ற சொல்லுக்குச் சிறப்பான அழுத்தம் ஏதும் அவர்கள் கொடுக்க எண்ணவில்லை; மொத்தத்தில் இச்சொற்றொடர், அரசில் பாராளுமன்றத்திற்கு உரிய நிலையை மக்கள் ஒப்புக்கொள்ளுவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத்தான் காட்டுகிறதேயன்றி வேறொன்றும் செய்யவில்லை.

1327-ல் ஒரு புரட்சிதோன்றி, யாவரும் கைவிட்டு விடவே, அரசர் எட்வர்டு அரச நிலையினின்றும் நீக்கப்பட்டார். இவ்வரசு நீக்கத்துக்கு இவ்வரசர் மீதுள்ள நேரடியான பகைமை உணர்ச்சியே காரணமாகும். எனினும் அவர்மீது குற்றஞ் சாட்டும் விதிகள் இவ்வரசு நீக்கத்துக்கு, அரசியலமைப்பிற்கொத்த காரணங்களைக் காட்டுகின்றன. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட இந்த முன் நிகழ்வானது, முக்கியத்துவம் பொருந்திய இரண்டாம் ரிச்சர்டு, இரண்டாம் ஜேம்சு ஆகிய அரசர்களின் அரசு நீக்கங்களுக்கு மிகவும் பேருதவியாக அமைந்தது. இவ்வாட்சியில் எதிர்ப்போராகிய பெருமக்களின் உண்மையான தொண்டைப் பின் வருமாறு சுருக்கிக் கூற இயலும். "பொதுப்படப் பெரு மக்களின் எதிர்ப்பைப் பற்றிக் கூறக் கூடிய சிறப்பு என்னவெனில் அவர்கள் மக்களைப் போலவே அரசரையும் சட்டத்தின் ஆட்சிக்குக் (Rule of Law) கட்டுப்படுத்தினார்கள் என்பதே. அரசர் சட்டத்துக்கு உட்பட்டவரே என்பதாக மாபெரும் பட்டயத்தில் காணப்படும் பெரிய விதியானது மிகவும் தவறான விளக்கத்துக்கு உட்பட்டிருந்தது. இத்தகைய தவற்றுக்குப் பெரு மக்களையும் அவர்களது கொள்கை உட்படுத்திற்று. மிகச் சரியான கோணத்திலிருந்து பார்த்தால், எதிர்ப்பாளர்களுடைய நோக்கங்கள், 'சட்டத்திற்கு எல்லா வல்லமையும் உண்டென்பதை நிறுவுதல், சட்டத்திற்கு நேர்மாறாகவோ, அதை அழிக்கவோ கூடிய வகையிலோ அரசர் கையாளதாபடி அவருடைய அதிகாரங்களைக் குறைத்தல்,' என்பனவாகவே தெரிகின்றன.

இந்த நூற்றாண்டின் எஞ்சியுள்ள பகுதியில், அதாவது மூன்றாம் எட்வர்டு (1327-1377), அவரது பேரர் இரண்டாம் ரிச்சர்டு (1377-1399) ஆகியோரது ஆட்சிக் காலங்களில், அரசியலமைப்

பின் தெளிவான சட்டங்களோடு பல புதியனவாகச் சேர்க்கப் பட்டன. பிற்காலத்தில் மேலும் பல சட்டங்களைச் சேர்ப்பதற்கும் வழி வகுக்கப்பட்டது. முன்பே குறிப்பிட்டுள்ளபடி இவையெல்லாம் அரசாங்கத்தில் பொது மக்கள் மன்றத்தினுடைய அதிகாரம் மேலும் பெருகுவதற்கு உதவியா யிருந்தன.

இக்காலத்தில் வரி விதிப்பைக் கட்டுப்படுத்துதலில் பாராளுமன்றம் அடைந்த முன்னேற்றமே மிகவும் சிறப்பானது. இதில் உள்ள தொடக்க நிலையாவது, செலவுக்கு வேண்டிய வரிப் பணத்தைத் தான்மட்டுமே அரசாங்கத்துக்கு அளிக்க முடியும் என்ற நிலையைப்பாராளுமன்றம் அடைந்திருந்ததேயாகும். இத்தொடக்க நிலையிலிருந்து, அது முன்னேறிச் சென்று, அது நாளா வட்டத்தில் அவ்வரிப் பணமானது பயன்படுத்தப்பட்ட வழிகளை ஆராயவும், அதிலுள்ள குற்றங்களை எடுத்துக் கூறவும், செயல் முறையையும் தொடங்கிற்று. 1297-ம் ஆண்டில் ஆகிய மக்களது உடன்பாட்டை அரசர் முன்னராகவே பெறுமல், அவர்களிடமிருந்து வரிகளை வாங்குதல் கூடாது என்பதாகப் பட்டய உறுதிப் பாட்டின்மூலம் அரசரைக் கட்டுப்படுத்தியவர்கள், இதன் மூலம் அரசருக்கு முக்கியமான வரிப்பணம் கிடைக்கக் கூடிய மூலாதாரங்களையெல்லாம் நிறுத்திவிட்டதாக எண்ணி யிருக்கலாம்; ஆயினும் ஒரு சில ஆண்டுகளில் அவர்கள் தங்கள் செயலிலுள்ள தவற்றை உணரலாயினர். பதினுன்காம் நூற்றாண்டில் இங்கிலாந்துக்கு மிகுதியான ஊதியம் தேடித் தந்ததும், அங்கிருந்து பெருவாரியாக ஏற்றுமதி செய்யப்பட்டதுமான பொருள் கம்பளி மயிர் ஆகும். ஆங்கிலநாட்டுக் கம்பளியே, ஆங்கிலக் கால்வாய்க்கு அக்கரையில் உள்ள தாழ்ந்த நாடான ஹாலண்டின் செல்வவளமும், தொழில் வளமும் மிக்க பட்டணங்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது, இங்கிலாந்திலுள்ள மடங்களிலிருந்தும், பண்ணைப் பெருமக்களிடத்திலிருந்தும் கம்பளி மயிரை விலைக்கு வாங்கிக் கொண்டு போவதற்காக இங்கிலாந்தில் பயணம் செய்த வெளிநாட்டு வணிகர்களுக்கு, ஆங்கில அரசியலமைப்பிலோ, ஆங்கில அரசரை வரி விதிப்பு உரிமையின் மூலமாகக் கட்டுப்படுத்துவதெவ்வாறு என்ற கேள்வியிலோ, யாதொரு ஈடுபாடும் கிடையாது. அதற்கு மாருக, அவர்கள், அரசர் தங்களுக்குத் துறைமுகப் பட்டணங்களிலும், சந்தைகளிலும்,நாட்டின் பெருவழிகளிலும்,அளித்த சில சலுகைகளிலும், அவற்றை அரசர் மூலமாகக் காப்பாற்றிக் கொள்ளுவதிலுமே ஈடுபாடுடையவரா யிருந்தார்கள்; எனவே அரசர் தங்களுக்கு அளிக்கும் பாதுகாப்புக்கு ஈடாக அவருக்குப் பணம் கொடுப்பதற்கு அவர்கள் ஆயத்தமா யிருந்தனர். எண்ணிக்கையில் மிகச் சிலரான ஆங்கில நாட்டு வணிகரும் இத்தகைய ஒரு நன்மை

யைப் புறக்கணிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட நிறையுள்ள கம்பளி மூட்டைக்குரிய ஏற்றுமதித் தீர்வைப்பணத்தை, அரசரும் வணிகர்களும் கூடித் தமக்குள்ளாகவே உறுதி செய்து கொள்ளுவதும், அதை அரசர் உடனே திரட்டுவதும் எளிதாகவே இருந்தன; இப்பொருளின் விளைவு பெருகவும், தீர்வை வருமானமும் பெருகிற்று; மேலும் அக்காலத்தில் பணத்தின் மதிப்பும் மிகுதியாக இருந்தது. இத்தகைய செயல்களெல்லாம் பாராளுமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்குச் சிறிது கடினமானவையே. ஏனெனில் இதையும் பாராளுமன்றம் தடைசெய்யவே, இதில் தீர்வை கொடுப்பவர்கள் வெளிநாட்டினரே என்பதாக, யாவருக்கும் சரியெனப் படக்கூடிய வகையில். மூன்றும் எட்வர்டு அரசர் வழக்காடினூர். பாராளுமன்றம் இதிலுள்ள குறையைக் கண்டுகொண்டு இந்த ஏற்றுமதித் தீர்வையானது பொருளை வாங்கிய விலையிலிருந்து கழித்துக்கொள்ளக் கூடியதொன்று என மீண்டும் வற்புறுத்திக் கூறியது; எனினும் இவ்வாட்சியின் கடைசியில் தான் அரசர் இவ்வகையாகப் பணம் திரட்டும் செயலை முழுவதும் கைவிடும்படியாயிற்று; இதனுல் இரு பக்கத்துக்கும் நன்மையே ஏற்பட்டது.

இவ்வாறு அரசர் தானே தனியாக வணிகருடன் பேச்சு நடத்தி உடன்படிக்கை செய்து, அதன் மூலம் அவர்களிடமிருந்து புதிய சுங்க வரிகளைத் திரட்டும் முறையானது, 'ஒவ்வொரு வகுப்பாரும் தனித்தனியே அரசருக்கு வரிப்பணத்தை வாக்கெடுப்பின் மூலம் அளிப்பது' என்ற பதின்மூன்றும் நூற்றுண்டுக் கொள்கையை ஒட்டி எழுந்த செயலாகும். பட்டய உறுதிப்பாட்டில் பழைய படைமானிய உதவித் தொகைகளின் மூலமாகவும், அது போன்ற வேறு சில பண உதவிகளின் மூலமாகவும் அரசர் சில வருமானங்களைத் தேட இயலும் என்பதாக ஓர் உரிமை இணக்கம் (sanction) தெளிவாகக் கொடுக்கப்பட்டது. இத்தகைய வருமானங்களுள் ஒன்று அரசரது பட்டணங்களில் அவர் வரி (tallage) விதிப்பதாகும். இத்தகைய முறையில் நிலவரிகள் 1304, 1312, 1332-ம் ஆண்டுகளில் வாங்கப்பட்டன. ஆயினும் பட்டணங்கள் இப்பொழுது உரிமை கோரியமையால் அரசர் இவ்வாறு ஏதேர் இடையீடு இட்டு ஒரோரு காலத்தில் தன்மனம் போனபடி அவைகளில் வரி விதித்தாலும், அதற்கு அவைகள் கட்டுப்பட்டிருக்க மாட்டா. 1322-ல் பாராளுமன்றம் அரசருக்கு ஒரு பொதுவான வரிப் பொருளுதவியை அளித்து, இவ்வாறு தனது நிலங்களிலுள்ள பட்டணங்களில் அவர் வரி விதிப்பதைக் கைவிடும்படி கேட்டுக் கொள்ள அவர் அவ்வாறே செய்தார். "தனது முன்னேர்கள் வாங்கியதைப் போலல்லாமல்" வேறு வழியில் இத்தகைய

நிலவரியைப் பட்டணங்களிலிருந்து தாம் மறுபடியும் வாங்குவ தில்லை என்பதாக அரசர் வாக்குறுதி கொடுத்தார். இவ்வளவில் பார்க்கும்போது, இது அவர் தம்முடைய உரிமையைத் துறந்த தாகாது; எனினும் பட்டணங்களிலிருந்து நிலவரி திரும்பவும் வாங்கப்படவில்லை.

வணிகருடன் தனியே பேச்சுவார்த்தை நடத்தி அதன்மூலம் வரிப்பொருள் திரட்டுவதென்பது மிகவும் துன்பம் நிறைந்த செயலாகும்; ஏனெனில் இத்தகைய வரி ஆண்டுதோறும் வாங்கப் படுவதாகிவிடும்; இதனால் கம்பளி மயிரின் விலையும், அதுபற்றி நாட்டின் செல்வ நிலையும் மாறுதலுக்குள்ளாகும். 1303-ல் முதலாம் எட்வர்டு, கம்பளி, மற்றும் சில பொருள்களின்மீது ஒரு சிறு புதிய தீர்வையை (Parva or nova Custuma) வணிகரோடு பேசி முடிவு செய்து கொண்டார். இது 1311-ல் ஆணைகளினால் தள்ளுபடி செய்யப்பட்டது; ஆயினும் 1322-ல் இது இரண்டாம் எட்வர்டினால் திரும்பவும் கையாளப்பட்டது; மூன்றும் எட்வர்டு அரியணை ஏறுகையில் இது உறுதியாகத் தீர்மானிக்கப்பட்டது. மூன்றும் எட்வர்டு பின்னால் தமது அறிவுரைக் குழுவின் மூலம் இதைப் போன்று வேறு சில வரிகளையும் விதித்தார். திரும்பத் திரும்பப் பாராளுமன்றம் அல்லது அதிலுள்ள பொது மக்கள் மன்றமானது இத்தகைய முறைகளில் பணம் வாங்குவதை எதிர்த்து விண்ணப்பம் செய்தது; அல்லது இது போன்ற ஒரு வரிப் பொருளைத்தானே அரசருக்கு அளித்து அவ்வகையில் ஒரு புதிய முன் நிகழ்வை அல்லது மேற்சான்றை ஏற்படுத்த முயன்றது. இவ்வாறான வகையில்தான் 1253-ல் மேற் குறிப்பிட்ட சிறு புதிய தீர்வையானது, முக்கியப் பொருள்கள் சட்டத்தில் (Statute of Staples) (பாராளு மன்றத்தினால் ஒரு சட்டத்தின்மூலம் அளிக்கப் படவேண்டிய வரிப் பொருள் உதவியாக ஆக்கப்பட்டு) இணைக்கப் பட்டு விட்டது. "பாராளுமன்றத்தில் கூடியுள்ள தலைமைக் குருக்க ளும்பெருமக்களும், பொதுமக்களும் பொதுவான ஒப்புதல்கொடுத் தாலல்லாமல், எவ்வகையான செலவுப் பணமோ அல்லது உதவிப் பொருளோ இனிமேல் அரசர் வாங்குதல் கூடாது" என்பதாக வரிப்பொருள் அளிப்பதில் ஒரு கட்டுப்பாட்டைச் செய்து, ஒரு சட்டமானது 1340-ல் முறையாக நிறைவேற்றப்பட்டது. இச் சட்டமானது பட்டய உறுதிப்பாட்டிலுள்ள குறைகளை நீக்குதற் காகவே செய்யப்பட்டது; எனினும் அரசர் இதற்கு விருப்பமில் லாமல்தான் இணங்கினார். 1362-லும் 1371-லும் மேலே குறிப் பிட்ட தடைகள் திரும்பவும் வற்புறுத்தப் படவேண்டியதாயிற்று. எனினும், இவ்வாட்சியில் தோன்றிய முன் நிகழ்வுகள் எல்லாம், பட்டய உறுதிப்பாட்டில் நாம் செயலறிவின் மூலம் கண்டுள்ள

குறைகளை நீக்கின என்பதையும், சட்டப்படி வரிப்பொருள் உதவி வழங்கும் உரிமையை, 1297-ல் குறிப்பிடப்பட்டது போல, ஒரு தெளிவில்லாத பொது ஒப்புதலுக்கு விட்டு விடாமல், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் பாராளுமன்றத்தில் ஒத்த ஒரு பங்காக அமைந்துள்ள பொது மக்கள் மன்றத்திற்கே கொடுத்தது என்பதையும் நாம் இங்கே குறிப்பிடுதல் வேண்டும்.

வரிப்பணக் கட்டுப்பாடு செய்யும் அதிகாரத்தின் மூலமாகத் தனக்குக் கிடைத்துள்ள ஒரு புதிய கருவியின் தன்மையைப் பாராளுமன்றமானது, மேற் குறிப்பிட்ட செயலறிவுகளினால் நன்றாக உணர்ந்துகொண்டது. தனது குறைகளைப் பற்றி முறையிட்டுக் கொண்டு, அரசருக்கு வரிப் பொருளுதவி அளிப்பதை அடுத்த பாரளுமன்றத்துக்கு ஒத்திவைத்து, ஒரு தீர்மானத்தை 1339-ல் பொது மக்கள் மன்றம் நிறைவேற்றியது; 1340-ல் பொது மக்கள் மன்றமானது, செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களின் பட்டியல் ஒன்றை எழுதித், தான் கொடுக்கும் வரிப் பொருளுதவிக்கு அவைகளைக் கட்டுப்பாடுகளாக ஆக்கியது; இச் சீர்திருத்தங்களைச் செய்வதாக அரசரும் ஒப்புக்கொண்டார். இந்த முன் நிகழ்வே 1344-லும் கையாளப்பட்டது; 1348-ல் வரிப் பொருளுதவி அளிக்கப்படுவதற்கு முன்பாகவே, குறைகள் நீக்கப் பட்டுச் சீர்திருத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதாக வற்புறுத்தப்பட்டது; 1340-லும் 1344-லும் தோன்றிய முன் நிகழ்வுகள் மேலும் பரந்த அளவில் கையாளப்பட்டன..

மூன்றும் எட்வர்டின் ஆட்சியின் பெரும்பகுதியிலும் பிரான்ஸோடு நடைபெற்றுக்கொண்டிருந்த நீண்ட போரானது, பாராளு மன்றத்துக்குப் புதியதான வகையில் ஒரு சாதகமான சூழ்நிலையை உண்டாக்கியது. அரசருக்கு அடிக்கடி பணம் தேவைப்பட்டது; பிரெஞ்சுப் போரினால் தான் அடையக் கூடுமென எதிர்பார்த்த நலன்கள், அப்பொழுது பாராளு மன்றம் உரிமையுடன் கேட்டுக்கொண்டிருந்த சில சலுகைகளைவிட, மிக முக்கியமானவை என்பதாக அரசருக்கு இயல்பாகத் தோன்றியது. மூன்றும் எட்வர்டு அரசருக்கு முந்தியிருந்த எந்த அரசரும், அவரைப்போல அடிக்கடி பாராளுமன்றத்தினிடம் வரிப்பொருளுதவிகளைக் கேட்டதில்லை. போரினாலேற்படும் பெருஞ்செலவுகளைப்பற்றி உணராத பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணம் எவ்வாறேனும் வீணாகச் செலவழிக்கப் படுகிறது என்பதாகவே தோன்றிற்று. இச்செலவு பற்றிய விவரங்களுக்கு விளக்கம் கொடுக்குமாறு அவர்கள் அரசரைக் கேட்கும் மன இயல்பு உடையவராயினர்; மேலும் அவர்கள், “கடந்த ஆண்டில் இதே நோக்கத்திற்காக நாங்கள் கொடுத்த பணத்தைக்

கொண்டு நீங்கள் என்ன செய்தீர்கள்?'' என்று அரசரைக் கேட்டனர். எனினும் போரினுல் ஏற்பட்டுள்ள பெருஞ் செலவுகளைப் பற்றி அரசர் நன்கு உணர்ந்திருந்தார்; எனவே, தாம் நம்பிக்கைக் குகந்தவர்தான் என்பதை எண்பிப்பதற்கு அரசருக்கு உரிய மிக எளிய வழி என்னவெனில், தனக்கு அளிக்கப்பட்ட வரிப் பொருளுதவியைத் திரட்டுதல், அதைச் செலவுக்குக் கொடுத்தல் ஆகிய வேலைகளைச் செய்வதற்குக் கருவூலத்தார்களைப் பாராளுமன்றமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியாகவும், அக் கருவூலத்தார்கள் இவ்வகையில் தங்களுடைய கணக்குகளைப் பாராளு மன்றத்துக்குக் காட்டும்படியாகவும், அக் கணக்குகளைப் பாராளுமன்றக் கமிட்டி அல்லது குழு ஒன்று தணிக்கைசெய்யும்படியாகவும், ஒப்புக் கொண்டு இணங்குவதுதான் என்பதாக அரசருக்கு இயல்பிலேயே தோன்றியிருத்தல் கூடும்.

கடந்த ஆண்டில் அளிக்கப்பட்ட வரிப்பொருள் உதவியைத் திரட்டியவர்களுடைய கணக்குகளைச் சோதனை செய்வதற்காக 1340-ல் ஒரு பாராளுமன்றக் கமிட்டி அல்லது குழு அமர்த்தப் பட்டது. இதே நோக்கத்திற்காக ஆணையாளர்கள் அமர்த்தப் படுதல் வேண்டுமென்பதாக 1341-ல் ஒரு சட்டம் இயற்றப் பட்டது. எந்த நோக்கத்திற்காக வரிப் பொருள் உதவி கேட்கப் பட்டதோ, அளிக்கப்பட்ட உதவிப் பொருளானது அந்த நோக்கத்திற்காகத்தான் செலவு செய்யப்படுதல் வேண்டுமென்பதாகப் பாராளுமன்றம் உரிமையுடன் 1344-ல் கேட்டது. நாட்டை ஸ்காட்லாந்தியரிடமிருந்து காப்பாற்றுதற்கு என்ற ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, அது 1348-ல் வரிப் பொருள் உதவி அளித்தது. 1353-ல் அளிக்கப்பட்ட கம்பளி வரியானது போர்ச் செலவுகளுக்குமட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதாயிற்று. பாராளுமன்றத்தில் நம்பிக்கை உறுதிமொழி எடுத்த இருவரை, அரசருக்கு அளிக்கப்பட்ட வரிப் பொருள் உதவியை வாங்குவதற்கும், அதனை மற்ற எதற்கும் செலவிடாமல் போர்ச் செலவுகளுக்கு மட்டுமே செலவு செய்வதற்குமாகப் பாராளுமன்றம் 1377-ல் அமர்த்தியது. தமது நோக்கங்களைப்பற்றி எட்வர்டு நன்கு உணர்ந்திருந்தார்; மேற்கூறிய எளிய சூழ் திறத்தின் மூலமாகவே (expedient), அரசர், தாம் ஒப்புக்கொண்ட நோக்கத்திற்குக் கொடுக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்ததாகப் பாராளுமன்றத்தை நம்பும்படியாகச் செய்தலில் ஈடுபாடுடையவரா யிருந்தார். எளியது போலத் தோன்றிய இத் தொடக்கத்தில் பொதிந்துள்ள உட்பொருளை அரசரோ பாராளுமன்றமோ அப்பொழுது உணரவில்லை. உண்மையில், இதுவே பாராளுமன்றத்தின் செலவு வகுத்தல்கள் அல்லது ஒதுக்கல்கள்

(Parliamentary appropriations) என்பதனுடைய தொடக்கநிலையாகும்; நாட்டின்வருமானத்தை அரசாங்கத்தின் ஒவ்வொரு செலவுக்குமாக வகுத்து ஒதுக்குதல் என்ற செயலின் தொடக்க நிலை இதுவேயாகும்; இச்சிறு செயல் நேரடியாக இல்லாவிட்டாலும், பெரியஅளவில் அரசாங்கத்தின் கொள்கைக்கு ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதனுல், இறைவிட அடிப்படையான உரிமையாகிய வரிப்பொருள் அளித்தல் என்பதைவிட, இதனையே மிக முக்கியமானதாக இக்காலத்திய ஆங்கிலோ சாக்சன் பாராளுமன்றங்களெல்லாம் கருதுகின்றன. ஒரு குறிப்பிட்ட காரியத்துக்குப் பாராளுமன்றம் பணம்ஒதுக்க மறுத்தால் அப்பொழுது அரசாங்கம் அக்குறிப்பிட்ட நோக்கத்தைக் கைவிடுதல் வேண்டும். இத்தகைய ஒரு விளைவு தோன்றக் கூடு மென்பதாகப் பதினைன்காம் நூற்றுண்டில் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை; மூன்றும் எட்வர்டின் காலத்தில் தோன்றிய இந்தச் செயல் உரிமை, இரண்டாம் ரிச்சர்டின் காலத்தில் சட்டமாக ஆக்கப்பட்டாலும், லங்காஸ்ட்டிரியரது காலத்திலும் அது வெகுவாகக் கையாளப்பட்ட போதிலும், இந்த உரிமையின் உட்பொருளையெல்லாம் தெளிவாக உணர்ந்து அதைக் காத்துக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பதினைந்தாம் நூற்றுண்டில்கூடப் பாராளுமன்றம் முழு வளர்ச்சியையும் அடையவில்லை. பதினேழாம் நூற்றுண்டினிறுதியில் பாராளுமன்றத்தின் அதிகாரங்களெல்லாம் முழுவதும் நிறுவப்படுகிற வரையில், இக்காலத்திய முறையாகிய. அரசாங்கத்தின் செலவில் மிக நுண்ணிய இனங்களுக்கும் கூடச் செலவுப் பணம் ஒதுக்குதல் என்பது செய்யப்படாமல் காத்திருக்க வேண்டியதாயிற்று.

எல்லாச் சட்டங்களையும் இயற்றுவதில் ஒத்த பங்கு உரிமையைப் பொதுமக்கள் மன்றம் அடைவதைவிட, எல்லா வகையான வரிவிதிப்புக்களுக்கும், மன்றத்தின் கட்டுப்பாட்டை நிறுவுவதுதான் மிகவும் எளிதான சிக்கலில்லாமல் செய்யக்கூடிய ஒன்று ஆகும். மிகப் பழமையான வரிவிதிப்பு முறையில், ஒவ்வொரு வகுப்பாரும் தனித்தனியே வரிப்பொருள் உதவியை அரசாங்கத்துக்கு அளிப்பது என்ற செயலானது, இப்பொழுது இயல்பாகப் பாராளுமன்றத்திற்கு வழிமுறையின்படி கிடைத்தது; அச் செயலை அது புதிய சூழ்நிலைகளுக்கேற்ப விரிவாகக் கையாண்டது. சட்டம் இயற்றும் செயல், பாராளு மன்றத்துக்கு வழிமுறைப்படி கிடைப்பதற்கோ, விரிவாகக் கையாளுதற்கோ ஒன்றும் இல்லை. சட்டம் செய்வதில், அதனைச் செய்வோர் தாம் என்ன செய்கின்றே மென்பதைப்பற்றி ஒரு தெளிவான உணர்வுடனிருக்கின்றனர்; இத்தகைய முறைப்படி அமைந்த சட்டம் இயற்றல் என்ற செயலானது வரி விதிப்பைவிடப் புதியதான

ஒன்று ஆகும். படை மானியக்காலத்தில் பல சட்டங்கள் செய்யப்பட்டன; எனினும் அவையெல்லாம் இக்காலத்திய சட்டங்களினின்றும் வேறுவகைப் பட்டவையாகும். படை மானியக் காலத்திலுள்ள சட்டமியற்றும் செயலானது பழைய மூத்தோர் சபை முறைமை செய்யும் அலுவல்களோடு இணைந்திருந்த ஒன்று ஆகும். படைமானியக் கோட்பாட்டின்படி, ஒரு வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பு, அரசருடையதாகவே யிருத்தலைப்போல, சட்டமாகச் செய்யப்படவேண்டிய எதுவும் அரசருடைய செயலினாலேதான் சட்டமாக இருந்தது. இந்த இருசெயல்களிலும் தீர்மானங்கள் பெருமக்களுடைய அறிவுரையினாலும், ஒப்புதலினாலுமே செய்யப்பட்டன ; எனினும் இந்த இரண்டிலும் வரம்பற்ற தன்னுரிமை (Absolute Veto) அரசருக்கு உண்டு. எனவே அரசருக்குத் தங்களுடைய ஒரு விண்ணப்பத்தின் மூலமாக அல்லாமல், பெருமக்கள் தம் முயற்சியினாலேயே ஒன்றும் செய்ய முடியாது. தாம் இணைந்து பொதுமக்கள் மன்றத்தை உண்டாக்கிய இரண்டு புதிய வகுப்புக்களின் வகையாட்கள், படைமானியக் காலத்திய சட்டம் இயற்றும் அலுவலில் காணப்படவே யில்லை; ஒரோரு சமயங்களில் மட்டுமே படைமானிய வீரர்கள் பிரபுக்களாக (minor barons) பெருமக்கள் மன்றத்துக்கு வந்திருந்தனர்; அப்பொழுதும் அவர்களுக்கு அம்மன்றத்தின் முடிவுகளை மாற்றக்கூடிய யாதொரு செல்வாக்கும் கிடையாது.

இச் செயலில் பதின்மூன்றும் நூற்றாண்டில் மெதுவாக ஒரு மாறுதல் தோன்றிக் கொண்டிருந்தது. சட்டத்தைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து ஏற்படலாயிற்று. அந் நூற்றாண்டின் நடுப் பகுதிக்குள்ளாகவே அரசாங்கத்தால் செய்யப்படும் சட்டத்துக்கும் சட்டமாக இருந்துவரும் வழக்கத்துக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் உணரத் தொடங்கினர். சட்டமன்றத்தா லியற்றப்பட்டதும் எழுதப்பட்டதுமான சட்டம் (Statute) என்பதைப்பற்றிய கருத்து வழக்கத்திற்கு வரலாயிற்று. வழக்கம் எப்படி இருந்தாலும், எழுதப்பட்ட இத்தகைய சட்டந்தான் முறை மன்றங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒன்றாக மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும் சட்டம் செய்தலில் உள்ள பழைய முறைக்கும், புதிய முறைக்கு முள்ள வேறுபாடும், எழுதப்பட்ட சட்டங்களுக்கும், ஆணைகளுக்கு முள்ள வேறுபாடும் இன்னும் தெளிவாக்கப்படவில்லை; இரண்டு சொற்களும் வழக்கிலிருந்தன, ஏனெனில் சட்டம் செய்தலில் புதிய முறை இன்னும் தொடங்கப்படவில்லை. இந்த நூற்றாண்டிலே தான் மூன்றாவது வகுப்பினராகிய பொதுமக்கள் சமுதாயத்தில் ஒரு புதிய நிலைமைக்கு உயரவும், அதனால் சட்டம் செய்யும் முறையில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. இம் மாறுதலா

ஏது வணிகரது கடன்பற்றி எழுந்த ஒரு வழக்கத்தைச் சட்டமாக ஆக்கியசட்டம் (Statute De mercatoribus) செய்யப்பட்டபோது காணப்பட்டது. 1297-ம் ஆண்டில் கூடிய மாதிரிப் பாராளுமன்ற மானது, நாம் அறிந்த வரையில் ஒரு சட்டமும் செய்யவில்லை, எனினும் பழம்பெரு மன்றத்தில் உள்ள சட்டம் செய்யும் உரிமை களுக்கும், செயல்களுக்கும் தகுதி யுடையவர்களாகச் சமுதாயத் தில் புதிதாகத் தோன்றிய வகுப்பினர்களை முதன் முதலாகக் கொண்ட பாராளுமன்றமாக, அவ்வாண்டிலுள்ள மாதிரிப் பாரா ளுமன்றத்தைக் கூறலாம். ஆயினும் முதலில் இப்பாராளு மன்றத் திற்குப் பழைய பெரு மன்றத்திலுள்ள உரிமைகளும், செயல்களும் அன்றி வேறு கூடுதலாக உரிமைகளோ செயல்களோ இல்லை; பதினன்காம் நூற்றுண்டில் அரசருக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுவதன் மூலமாக அன்றிப் பாராளு மன்றத்திற்குத் தன் முயற்சியினுலேயே சட்டம்செய்யும் உரிமை கிடையாது; அரசரும் அவருடைய பெரிய மன்றமும், சில சமயங்களில் அரசரும், அவரு டைய சிறிய மன்றமும் சில காலம்வரை சட்டம்செய்தலில் ஒத்த உரிமை உடையவரா யிருந்தனர்.

இத்தகைய சூழ் நிலையிலேதான் சட்டம் செய்யும் உரிமைக் காகப் பதினன்காம் நூற்றுண்டில், பாராளு மன்றம் செய்த போராட்டத்தின் பல கூறுகள் நமக்குக் காணக் கிடைக்கின்றன. தற்காலத்திய சட்டம் செய்யும் முறைகளை அப்பொழுது நிறுவு வதில் உள்ள முக்கியமான இடையூறு நீக்கப்படுதல் வேண்டுமா யின், அது, சட்டம் இயற்றும் செயல்முறையைத் தொடங்குவதற் காகப் பொது மக்கள் மன்றம் அளிக்கும் விண்ணப்பமானது அரச ரால் ஒப்புக்கொள்ளப்படும்படி செய்வதால் மட்டுமே ஆகக்கூடிய ஒன்று அல்ல. இவ்வாறுன விண்ணப்பத்தை அரசர் ஒப்புக்கொள் ளும்படியாகச் செய்தல் எளிதுதான். ஆயினும் பழையமுறை யாகிய பெரு மன்றத்தின் மூலம் சட்டம் இயற்றுதல் என்ற முறையை முற்றிலும் வழக்கத்திலிருந்து நீக்கிவிட்டு, சட்டம் இயற்றும் முழு வேலையைப் பாராளு மன்றத்தினுடைய விண் ணப்பங்களுக்கே ஆக்கி, அவ்வேலையில் அதற்கே தனி உரிமை உண்டு என ஏற்பாடு செய்வதுதான் கடினமானதாக இருந்தது, பதினன்காம் நூற்றுண்டில் இத்தகைய கடினமான வேலையைச் செய்வதையே தனது நோக்கமாகப் பொதுமக்கள்மன்றம் கொண் டிருந்தது. இவ்வாறுன வேலையை ஒருக்கால் அது நன்றுக உண ராமலே செய்திருக்கலாம்; அல்லது அக்காலத்தில் அது கொண் டிருந்த நோக்கத்தைச் செயலில் நிறைவேற்றுவதற்கு இது ஒன்றுதான் வழி என்பதாக அதற்குத் தோன்றியிருந்து, அதனு லும் அது அவ்வேலையைச் செய்திருக்கலாம்; எவ்வாறுயினும்

இவ்வேலை மிகப்பெரிய ஒன்று ஆகும்; எனவே இது பல தலைமுறைகளுக்கும் பிந்திய காலத்தில்தான் முற்றிலும் நிறைவேற்றப்பட்ட வேலையாக ஆயிற்று.

இக்கடினமான வேலையின் ஒரு பகுதி என்னவெனில், எழுதப்பட்டுள்ள சட்டநூலில் உள்ள சட்டமானது, பொதுமக்கள் மன்றத்தால் கொடுக்கப்படும் விண்ணப்பத்தை எல்லா வகையிலும் ஒத்திருக்கும்படி செய்வதேயாகும். முந்தியகாலத்து வழக்கம் எப்படி இருந்தது என்ருல், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், அது செய்த சட்டத்தைச் சட்ட நூலில் பதியும்போது, அதனுடைய அமைப்பானது பொதுமக்கள் கொடுத்த விண்ணப்பத்திலிருந்தே எடுத்து எழுதப்பட்டது. இவ் வழக்கத்திஞல், பாராளுமன்றத்தோடு தான் கருத்து மாறுபாடுகொள்ள, அதன் பின்னரே அதஞல் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் சட்ட நூலில் எழுதப்படும்போது, அவற்றில் அரசர் சில மாறுதல்களைச் செய்துவிடுவதற்கு வழி உண்டாயிற்று. இவ்வழக்கத்திஞல், சில சட்டங்கள் பதிவு செய்யப்படாமல், விண்ணப்பமும் பின்பற்றப்படாமலிருந்தது; தான் முன்பே முறையாக ஒப்புக்கொண்ட பாராளுமன்றத்தினுடைய சில கோரிக்கைகள் சட்டமாக ஆகியபோது, பாராளுமன்றம் கலைந்ததும், அவற்றை 1341-ல் மூன்ரும் எட்வர்டு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்; சில சமயங்களில் சட்டத்தின் பொருளைச் சிறிது மாற்றி, அதன் மூலமாகப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில்,அதில் ஒரு காப்புப்பிரிவு (saving clause)சேர்க்கப்பட்டதும் உண்டு; சில சமயங்களில் செய்யப்பட்ட சட்டமானது நிறைவேற்றப்படுவதற்குரிய பிரிவுகள் சேர்க்கப்படாமல் அப்படியே தனியாக விடப்பட்டது; சில சமயங்களில் சட்டம் எவற்றுக்குப் பொருந்தக்கூடியதாக இருக்குமோ, அவற்றை மாற்றும் நோக்கத்துடன் சில புதிய பிரிவுகளும் அதில் சேர்க்கப்பட்டன. தெளிவாக வரையறை செய்யப்படாத செயல் முறைகளிஞல் எழுந்த இத்தகைய தவறுகள் எல்லாம், மூன்ரும் எட்வர்டின் ஆட்சியை விட இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சியில்தான் மிகுதியாகக் காணப்பட்டன; என்ருலும், இதற்கு முந்திய காலத்திலிருந்த சரியான செயல் முறையில் பொதிந்துள்ள விதிகளை மக்கள் நன்கு உணரத் தொடங்கினர். தன்னைக் கலந்து செய்யாமல், அரசரும், சமயக் குருக்களும் மட்டுமே சேர்ந்து செய்த சட்டங்களை எதிர்த்துப் பாராளுமன்றமானது 1344-லும், 1377-லும் விண்ணப்பம் செய்து கொண்டது. தனது விண்ணப்பங்களை யெல்லாம் எழுதப்பட்ட சட்டங்களாக மாற்றி அமைப்பதற்காகப் பாராளுமன்றமே 1340-ல் ஒரு கமிட்டியை அல்லது குழுவை அமர்த்தியது. அது 1348-ல், 'பாராளுமன்றத்தில் கொடுக்கப்படும் பதில்கள் அல்லது

விடைகள் பின்னால் மாற்றப்படுதல் கூடாது' எனவற்புறுத்தியது. தொழிலாளர் சட்டமானது (Statute of Labourers) முதலில், 1349-ல் ஓர் ஆணையாகத்தான் இருந்தது; பிறகுதான் அது ஒரு எழுதப்பட்ட சட்டமாக ஆயிற்று. மூலப்பொருள் அல்லது முக்கியப்பொருள் சட்டமும் (Statute of staples) 1353-ல் இவ்வாறு தான் இருந்தது. "ஏதாவது கொடுக்கப்பட்ட ஓர் பொருளைப் பற்றிச் சட்டம் இயற்றும்போது, அது ஓர் ஆணையாக இருக்க வேண்டுமெனப் பாராளுமன்றம் விரும்புகிறதா? அல்லது அது ஒரு எழுதப்பட்ட சட்டமாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறதா?" எனப் பாராளுமன்றம் 1363-ல் கேட்கப்பட்டது; இதற்கு, மாற்றுவதற்கு எளிதாக இருக்குமாகையால், ஆணைவடிவமாகவே சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டுமெனப் பாராளுமன்றம் தீர்மானித்தது. இதிலிருந்து, எழுதப்பட்ட சட்டங்களைப்போல, ஆணைகள் நிலையான தன்மையுடையன அல்ல என்பதாக அக்காலத்தவர் கருதியமை நமக்கு விளங்குகிறது.

பதினான்காம் நூற்றாண்டில் ஒவ்வோர் எழுதப்பட்ட சட்டமும் செய்யப்பட்டபோது, அதில் தனது கருத்தைத் தெரிவிப்பதற்குப் பொதுமக்கள் மன்றத்திற்கு இருந்த உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் இத்தகைய ஒப்புதலினால் கேள்விமுழுவதும் தீர்ந்துவிடவில்லை. அடுத்தடுத்து வந்த ஒவ்வோர் அரசரும் பாராளுமன்றம் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளுக்கும் மிகுதியாகவே உரிமை ஏற்றுக்கொண்டு சட்டம்செய்ய விரும்பினர்; இத்தகைய விருப்பத்துடனிருந்தவர்களுக்கு 'அரசரும், அவரது அறிவுரை அல்லது ஆலோசனைக் குழுவுமாகச் சேர்ந்தே சட்டம் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தனர்' என்ற தொன்றுதொட்டுவந்த பழைய மரபு வழக்கமானது, ஒரு நல்ல சாதகமான குறிப்புப் போல விளங்கியது. எனவே அவர்கள் இப்பொழுது ஆலோசனைக் குழுவினுடைய சட்டம் இயற்றும் அலுவலுக்கு ஆணைகளின் வடிவத்திலும், ஆணை விளம்பரங்களின் வடிவத்திலும் மீண்டும் உயிர்கொடுத்து, வழக்கத்திற்குக் கொண்டுவர முயன்றனர். இவ்வாறே அவர்கள் புதிய வடிவங்களில் வரிகளையும் திரட்டி, பொருள் வரும்படிக்காகப் பாராளுமன்றத்தையே முழுவதும் சார்ந்திருத்தலினின்றும் தப்பித்துக்கொள்ள முயன்றனர். தற்காலத்தில் 'ஆலோசனைக் குழுவின் ஆணை' (ஆர்டர்-இன்-கௌன்சில்-order-in-Council கௌன்சில் உத்தரவுகள்) எனப்படுவதானது பழங்காலத்தில் பெருமன்றம் சட்டமியற்றும் முறையிலிருந்து தொடர்ந்து வந்து, அதன்வழி வந்த ஒன்று ஆகும்; இப்பொழுது இத்தகைய ஆலோசனைக்குழுவின் ஆணையானது பாராளுமன்றத்தினுடைய கண்டிப்பான மேற்பார்வைக் குட்பட்டே

செய்யப்பட்டாலும், அது மிகவும் பரந்த அளவுக்குச் செயல்படக் கூடியதாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கு மிடையேஉள்ள உறவுகளை மாற்றியமைப்பதில் இத்தகைய ஆலோசனைக்குழுவின் ஆணைகள் எவ்வாறு பயன்பட்டன என்பதை நாம் எளிதில் நினைவுபடுத்திக்கொள்ள முடியும்; தற்கால ஆங்கில அறிஞரொருவர் தமது நாட்டைப்பற்றிப்பின்வருமாறு கூறுகிறார். "நம்மை இப்பொழுது ஆளுவதும், சட்டமன்றத்தினுடைய நேரடியான ஒப்புதலுக்கு உட்படாதனவுமான ஆணைகள், பலர் அறியக்கூடாத அளவுக்குப் பரந்து பெருகி இருக்கின்றன."

அரசாங்கத்தால் கையாளப்படவேண்டிய கொள்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது, என்ற மூன்றுவது வகையான செயலில் பாராளுமன்றமானது மற்ற இருவகையான செயல்களிலும் அடைந்ததைவிடக் குறைவானதொரு முன்னேற்றத்தையே பதினான்காம் நூற்றாண்டில் அடைந்தது. அரசர் தமது பொருள் நிலையைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தைச் சார்ந்திருந்ததனால், அதை உதவியாகக்கொண்டு, இக்காலத்தில் செயல் முறையான செலவு ஒதுக்குதல்கள் என்பதற்கு அடிப்படை நிறுவப்பட்டது என்பதை முன்னரே பார்த்தோம். இத்தகைய செயல் முறையின் தோற்றத்தினால், கொள்கையையும் கட்டுப்படுத்தும் நிலையைப் பாரார்ளுமன்றம் அடைந்திருக்க முடியும்; என்றாலும் இவ்வகையில் ஒரு தொடக்கந்தான் செய்யப்பட்டது. பழைய முறையாகிய பிரபுக்களின் எதிர்ப்பு என்ற முறை விரிவாக்கப்படவில்லை; அதை எவரும் மறக்கவில்லை; எவ்வாறெனில். முன்போலவே 1341லும், பெரிய அலுவலரும், முறைவர்களும் பாராளுமன்றத்திலேதான் அமர்த்தப்படுதல் வேண்டுமென்பதாக உரிமையுடன் வேண்டப்பட்டது, இந்த நூற்றாண்டின் இடையிலேயே வேறொரு செயல்முறை கண்டு பிடிக்கப்பட்டது. இச் செயல்முறையானது இடைக்காலச் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகவும், அது கையாளப்படும் போது, பாராளுமன்றத்துக்கு நேர் எதிரான கொள்கை செயல்படுதலினின்றும் அதைத் தடுப்பதற்கு மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. அதனுடைய பரந்த செயல் அளவை நாம் பார்க்கும் போது, அது அரசாங்கத்தின் கொள்கையை மட்டுமே கட்டுப்படுத்துவதற்குரிய ஒன்று அன்று எனவும் நாம் கருதலாம்; மேலும் உள்நாட்டுப் போர், புரட்சிபோன்ற பேரிடரான வழிகளினாலல்லாமல், அரசரைக் கட்டுப்படுத்துவதற்குரிய புதிய நிறுவன அமைப்புக்களைக் கண்டுபிடிப்பதற்காக இடைக்காலத்தில் செய்யப்பட்ட முயற்சிகளுள் இச் செயல்முறை மிகச் சிறந்ததாகு மெனவும் நாம் கருதலாம். இவ்வாறு அதனை நாம் கருதினால், அதுவே அண்மை

யான காலம்வரையில், மிகச் சிறப்பாக வெற்றியான வகையில் சட்டத்துக்குட்பட்ட முடியாட்சியை நிறுவன மூலமாக வெளிப் படுத்திய ஒன்ருக இருந்து வந்தது ; வெற்றியாகச் செயல்படக் கூடிய இம்முறையின் திறமானது மிகவும் வளர்ச்சியடைந்தது : அதனுல்தான் இச்செயல் முறையானது பெருங் குற்றச்சாட்டு முறை என்ற கொள்கைவடிவில் (இம்பீச்மென்ட்-Impeachment) இன்றளவும் ஆங்கிலோ சாக்சன் அரசியலமைப்பின் ஒரு பகுதி யாக இருந்து வந்துள்ளது ; இம் முறையானது அரை குறையான வடிவத்தில் முதன்முதலாக எட்வர்டின் அமைச்சர்களுக் கெதிராக 1376லும், ரிச்சர்டின் அமைச்சரான சபக்கோமகனுக்கு (Earl of Suffolk) எதிராக 1386லும் கையாளப்பட்டது.

ஒரு செயல்முறை என்ற அளவில் இப்பெருங் குற்றச்சாட்டு முறையைப்பற்றி விவரித்துக் கூறவேண்டுவதில்லை; ஏனெனில் ஆங்கில அரசியலமைப்பிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் அர சியலமைப்பினுள் ஓர் உறுப்பாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இம்முறையை எல்லோரும்அறிவர். புதியதாகத்தோன்றிய பொது மக்கள் மன்றத்தினுள் இருந்தவர்கள் பழைமையான அரசரது ஆலோசனைக் குழுவின் (Old curiaregis) ஒருபகுதியாக அமைந்து விடவில்லை; எனவே அக்குழு முன்பு செய்துவந்த வழக்கு ஆய்தல் வேலையில் இப்புதிய பொதுமக்கள் மன்றமானது பங்கு கொள்ள வில்லை;ஆகையால் மேற்குறிப்பிட்ட பெருங்குற்றச்சாட்டு என்னும் செயல்முறையில் பொது மக்கள் மன்றமானது குற்றம் சாட்டும் குழுவாக அல்லது கட்சியாளராக மட்டுமே இருப்பதற்கு வழி உண்டாயிற்று. கொள்கையளவில் பார்க்கப்போனுல், பெருஞ் குற்றச்சாட்டு என்னும் இச்செயல் முறையானது இடைக்காலத்தி னரை அறிந்து கொண்டதாகிய "அமைச்சுப் பொறுப்பு" (Ministerial Responsibility) என்னும் கோட்பாட்டின்படி அமைந்த ஒன்று ஆகும். இக்கோட்பாடே பிற்காலத்தில் 'அரசர் தவறுதல் செய்யார்' என ஒரு பழமொழியின் வடிவத்தில் கூறப்பட்டது. மேலோட்டமாக இதில் காணப்படுவதுபோல இவ்வரசியல் பழ மொழியானது, வரம்பற்ற கட்டுப்பாடில்லாத முடியரசு ஆட்சி முறைக்கு ஆதாரமாக அமைந்த ஒன்று அல்ல. அதற்கு மாருக இது சட்ட வரம்பிற்குட்பட்ட முடியரசு ஆட்சி முறைக்கு அடிப் படை வகுக்கும் சொல்லாகத்தான் இருக்கிறது. எவ்வாறெனில் அரசாங்கம் யாதொரு தவறும் செய்யாது என்றோ, அல்லது அர சாங்கம் எதனைச் செய்தாலும் அது சரி என்றோ, இப்பழமொழிக்கு உறுதியாகப் பொருள் இல்லை, பின் அது கூறுவது என்னவென் ருல், அரசாங்கம் ஏதேனும் தவறு செய்தால் அத் தவற்றைச் செய்தவர் அரசர் அல்ல, அத்தவற்றைச் செய்தவர் அரசருடைய

அமைச்சரே என்பது தான். 1626ம் ஆண்டில் அரசருடைய அதிகாரங்களைப்பற்றி முதலாம் சார்லஸ் அரசர் கொண்டிருந்த கருத்துக்களைப் பாராளுமன்றம் எதிர்த்தது; அவ்வெதிர்ப்பின் முதற்படியாக அரசரது அமைச்சராகிய பக்கிங்காம் பிரபுவின் மீது பெருஞ்குற்றச்சாட்டு ஒன்றைப் பொதுமக்கள்மன்றத்தின் சார்பாகத் தொடங்கிவைத்து சர் டட்லி டிக்கஸ் (Sir Dudley Digges) என்பவர் பேசுகையில் பின்வருமாறு கூறியது இங்கு நாம் கவனிக்கத் தக்கது: "அரசர்கள் தவறானவற்றையும், சட்டத்துக்குப் புறம்பானவற்றையும் செய்யுமாறு எவருக்கும் ஆணை தருதல் கூடாது என்பதாக இங்கிலாந்தின் சட்டங்கள் நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. தவறான நிகழ்ச்சிகள் ஏதேனும் நடைபெற்றால், அவற்றைச் செய்தவர்களேதான் அவற்றுக்குப் பொறுப்பாளி ஆதல் வேண்டும்"

இவ்வாறு பெருங் குற்றஞ்சாட்டு முறைக்கு கொடுக்கப்பட்ட விளக்கத்திலிருந்து, அரசியலமைப்பு வளர்ச்சிக்காக அம் முறை உதவி செய்துள்ளது என்பதையும், சட்டத்துக்குக் கட்டுப்பட்ட முடியரசை நிறுவன வடிவத்தில் வெளிப்படுத்துவதற்காக இதற்கு முந்திய காலங்களில் செய்யப்பட்ட முயற்சிகளோடு, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இச் செயல்முறை ஒத்திருந்ததென்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம். அரசருடைய செயல்களுக்காக அரசரே நேரடியாக பொறுப்புப் உடையவராக ஆக்கப்பட்டால், எப்பொழுதும் உள்நாட்டுப் போர் என்னும் இடர் ஏற்படுவதற்கு வழி உண்டாகும்; எவ்வாறெனில் ஏதேனும் ஒரு கட்சியாவது தனக்கு உதவிக்காக வராத அளவுக்கு முழுவதும் கெட்டவராக வரலாற்றில் ஓர் அரசரும் இருந்ததில்லை. எனவே இத்தகைய உள்நாட்டுப்போர் என்னும் இடர் ஏற்படாதபடி,ஒரு அமைச்சரைக் கடும் பொறுப்புக்கு உட்படுத்துதல் இயலும். இம் முறையினால், அரசருடைய அமைச்சர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கப்பட்டது; அதாவது, அவர்கள் பாராளுமன்றத்தின் கருத்துக்கு எதிராக அரசருடைய கொள்கையே நிறைவேற்றப்படுதல் வேண்டுமென வற்புறுத்துவராயின், அத்தகைய அவர்களுடைய செயல்களுக்கு அவர்களே (அமைச்சர்களே) கடுமையான பொறுப்பாளி யாவர் என்பதே. இதனால் பொறுப்பற்ற முறையில் மனம் போனபடி ஆளும் அரசர்களுடைய போக்கிற்கு ஒரு பெருந் தடையானது ஏற்பட்டது.

இக்காலத்திய காபினெட் அமைச்சரவையானது அமைச்சர் பொறுப்பு என்ற கோட்பாட்டினடிப்படையில் அமைந்திருத்தலைப் போல, இடைக்காலத்திலெழுந்த பெருங் குற்றச்சாட்டு என்னும் இச்செயல்முறையும் அமைச்சர் பொறுப்பு என்னும் கோட்பாட்டி

னடிப்படையிலேயே அமைந்த ஒன்று ஆகும். ஆயினும் இடைக்காலத்திய அமைச்சர் பொறுப்பு என்னும் கோட்பாடானது, கருத்திலும் அது நிறைவேற்றப்படுதற்குரிய முறையிலும் இக்காலத்திய கோட்பாட்டினும் வேறுபட்டதாகும்.

எனவே இவ்விரு காலங்களிலும் காணப்படும் இந்த இரு கோட்பாடுகளும் தன்மையிலும், தோற்றத்திலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்பதை நாம் கவனிக்க வேண்டும்; இவ் வேறுபாட்டைப் பற்றி விவரமாகப் பின்னுல் கூறப்படும். முறையாகப் பார்த்தால், தற்காலத்தில் அமைச்சர் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு உடையவர் அல்லர் என்பதும், அவர் அரசருக்குத்தான் பொறுப்பானவர் என்பதும் தெரியவரும். பாராளுமன்றத்துக்கு அவர் பொறுப்பாளியாக இருக்கும் தன்மையானது நேரடியாக இல்லாமல், மறைமுகமானதாயும், வெளிப்படையாகத் தோன்றுமல் மறைந்து கிடப்பதாகவும்தான் காணப்படுகிறது. ஆனுல் இடைக்காலத்திய அமைச்சரோ உடனடியாகவும், நேரடியாகவும் (immediately and directly) பாராளுமன்றத்துக்கே பொறுப்பு உடையவராக இருந்தார். பெருங் குற்றச்சாட்டு முறை என்பது ஒரு குற்ற வழக்கு ஆய்வு முறையாகும். பாராளுமன்றத்தினுடைய கீழ் அவையான பொது மக்கள் மன்றமானது இச்செயல் முறையில் குற்றம்சாட்டும் வழக்காளியாக இருக்கிறது; இதுவே அமைச்சருக்கெதிராக அவருடைய குற்றங்களைப்பதிவுசெய்து, அவரைப் பெருமக்கள்மன்றத்தின் முன்பாக ஆய்வுக்குக் கொண்டுவருகிறது. இச்செயலில், தான் முன்பு முறைமை அலுவலைச் செய்துவந்த பழைய பெருமன்றத்தினுடைய (அல்லது மூத்தோர் அவையினுடைய) வழியில் வந்த ஒன்று என்ற தன்மையில் பெருமக்கள் மன்றமானது இருந்து, ஒரு முறைமன்றமாகச் செயலாற்றுகிறது. குற்றஞ் சாட்டப்பட்ட அமைச்சரை விடுதலை செய்வதோடு இவ்வழக்கு முடிவடையலாம்; அல்லது மேல் அவையாகிய பெருமக்கள் மன்றம் அவ்வமைச்சரைக் குற்றவாளியே எனக் கருதி, அவர்மீதுகடுந் தண்டனைகளை,கொலைத்தண்டனையைக் கூட விதிக்கலாம். எனவே இத்தகைய முறையில் செயல்படுத்தப்பட்ட பொறுப்பானது கடுமையாகவும், பாராளுமன்றத்துக்கே நேரடியானதாகவும், உடனடியானதாகவும் இருந்தது; பாராளுமன்றமே அமைச்சர்களை அமர்த்தியது என்பது போல நாம் எண்ணும்படி, அமைச்சர் பொறுப்பானது இத்தகைய முறையில் அமைந்திருந்தது. இடைக்காலத்திய பாராளுமன்றங்கள் சில சமயங்களில் அமைச்சர்களைத் தாமே அமர்த்தியதும் உண்டு. எவ்வாருயினும், இந்தப் பெருங்குற்றச் சாட்டு என்னும் முறையின் நோக்கமும், விளைவும் நமக்குத் தெளிவாகத்

தெரிகின்றன. மாபெரும் பட்டயத்தில் குறிப்பிட்டபடி இருபத்தைந்து பெருமக்கள் அடங்கிய குழுவைப்போலவோ, அல்லது ஆக்சுபர்டு ஏற்பாடுகளில் குறிப்பிட்டபடி, ஆணையாளர்களைப் போலவோ, ஏதாவதொரு அரசியலமைப்பு வடிவத்தைக் கண்டு பிடித்து, அதன் மூலமாகக் கூடியவரையில் உள்நாட்டுப் போர், புரட்சி முதலிய இடர்கள் வராதபடி தடுத்து, அரசரை உண்மையான பொறுப்புக்குக் கட்டுப்படுத்துதல் வேண்டுமென்று இடைக்காலத்தில் செய்யப்பட்ட பல சோதனைகளின் மூலம் கடைசியாகக் கிடைக்கப்பெற்ற சிறந்த விளைவே பெருங் குற்றஞ்சாட்டு முறை என்னும் இச் செயல் ஆகும். இடைக்காலத்தினருக்குக் கிடைத்த இவ்விளைவானது மிகவும் சிறந்த ஒன்றாக இருந்தமையால் தான், இது தற்கால அரசியலமைப்பிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டது; தற்கால அரசியலமைப்பில் இது மிகவும் பழைமையான முறையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

பெருங் குற்றச்சாட்டு என்னும் முறையானது, பதினைந்தாம் நூற்றாண்டில் பாராளுமன்றம் அதிகாரத்தில் வளர்ச்சியுற்றதைக் காட்டுகிற ஓர் அறிகுறியாகும். அதை ஒரு நிறுவனமாக நாம் நோக்கினால் மேலெழுந்தவாரியாக அது முக்கியமானதாகக் காணப்படும்; எனினும் அதனை ஓர் அறிகுறியாகக் கருதும் போது தான் அதனுடைய முக்கியத்துவம் இன்னும் தெளிவாகத் தெரிகிறது. மேலும் அதனை ஒரு நல்ல விளைவாகவும் நாம் கருதுதல் வேண்டும்; விளைவு என்ற முறையிலே அது அந்நூற்றாண்டிலேற்பட்ட முன்னேற்றத்தை ஒரு சுருக்கமான விளக்கத்தின் மூலம் காட்டுகிறது; மேலும் அது அந்நூற்றாண்டில் எல்லாவகைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றமானது எவ்வாறு ஒரு குவிமையத்திற்குக் (Focus) கொண்டுவரப்பட்டது என்றும், இதுவே எதிர்காலத்தில் ஒரு புதிய முன்னேற்றம் ஏற்படுவதற்கு இன்றியமையாத ஒரு தூண்டுகையாக (Impulse) இருந்ததென்றும் காட்டுகிறது.

பணிநிலைமையில் அரசர் பாராளுமன்றத்தைச் சார்ந்திருத்தல், சட்டம் இயற்றுவதில் அரசர் பாராளுமன்றத்தைச் சார்ந்திருத்தல்' அரசாங்கத்தின் கொள்கையைப் பொறுத்தவரையில் அரசர் ஓரளவாவது பாராளுமன்றத்தைச் சார்ந்திருத்தல், ஆகிய மூன்று வகையான செயல்களிலும் பாராளுமன்றம் தனது அதிகாரத்தை ஏற்படுத்தியபோது, அது உண்மையிலேயே மிகப் பெரிய வேலையொன்றைச் செய்ததாகும். மாபெரும் பட்டயத்தில், "அரசரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய சட்டம் ஒன்று உண்டு" என்று கூறப்பட்டுள்ளபடி, அரசரைக் கட்டுப்படுத்தும் அத்தகைய சட்டத்தைப் பாராளுமன்றமானது மேற்கூறிய செயல்களின் மூலம் விரிவாக்கிக் கொண்டிருந்தது. 'மாபெரும் பட்டயத்திற்கூறப்பட்ட

கருத்தை அது மாற்றிக் கொண்டிருந்தது' எனவும் நாம் கூறலாம்; எவ்வாறெனில்: அரசியல் படைமானிய முறையானது குறிப்பிட்ட இக்காலத்தில் வழக்கத்தினின்றும் மறைந்து விட்டது; அரசுக்குச் சில அலுவல்கள் செய்யப்பட வேண்டியதற்காக அம்முறை ஒரு காலத்தில் தேவையாக இருந்தது; இப்பொழுதோ அவ்வலுவல்களெல்லாம் வேறு சிறந்த வழிகளில் செய்யப்படலாயின; எனவே ஒருகாலத்தில் மாபெரும் பட்டயத்தில் பெருமக்களால் வற்புறுத்தப் பட்ட உரிமைகளெல்லாம் இப்பொழுது பழையனவாகக் கருதப் பட்டு, மறந்து விடப்பட்ட நிலையில் இருந்தன. படைமானியப் பிரபு என்ற நிலையே மறைந்துகொண்டு வந்தது. பதினைன்காம் நூற்றாண்டில் பிரபு எனப்படுபவர், தற்காலத்திய பிரபுவைப் போலப் பழைய படைமானியத் தனி உரிமையை (Feudal independence) உடையவராக இல்லாமல், ஒரு பட்டமும், நிறைய வருமானமும், அரசரது முறை மன்றத்தில் ஒரு நிலையும் உடையராக ஆயினர். இவ்வாறான மாறுதல் ஏற்பட்டாலும், மாபெரும் பட்டயத்தினுடைய அடிப்படையான கருத்தானது பழைமையாகப் போய்விடவில்லை; அது எவராலும் மறக்கப் படவும் இல்லை. கடந்த காலத்தில் எல்லா முன்னேற்றங்களும், மாறுதல்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போதும், பட்டயத்தின் அடிப்படைக் கொள்கையை எவரும் புறக்கணிக்கவில்லை. நாட்டினுடைய முன்னேற்றத்தின் எந்த நிலையிலும், அதனுடைய நலனுக்கும், அதனுடைய உரிமைகளுக்கெல்லாம் அடிப்படையாயுள்ள அறிக்கைகளுக்கும் உகந்தவையாகவும், உயிர் நிலையாகவும் இருக்கும் சட்டங்களை அரசர் பின்பற்றக் கடமைப் பட்டவரானர்.

இவ்வளர்ச்சியை இன்னும் தெளிவாகத் தெரிவித்தால் "பாராளுமன்றமானது பதினைன்காம் நூற்றாண்டில் அரசில் தனக்கு ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், எதிர்காலத்தில் தனது அதிகாரம் பெருகுவதற்கான அடிப்படைகளை அமைத்துக் கொள்ளவும் செய்யவே, அது அரசரை, வரிவிதிப்பதில் முழுவதுமாகவும், சட்டம் இயற்றுதலில் சிறிது குறைவான அளவிலும், அரசாங்கக் கொள்கையை வகுப்பதில் மிகச் சிறிய அளவிலுமாகக் கட்டுப்படுத்தியது" என நாம் கூறலாம். அரசாங்கக்கொள்கையைப் பொறுத்த அளவில் அதற்கு அரசர்மீது உள்ள கட்டுப்பாடு மிகச் சிறிய அளவில்தான் இருந்தது எனினும், அது எதிர்காலத்தில் வளர்ந்து வரக்கூடியஅளவுக்கு உறுதியாகவும் இருந்தது. இத்தகைய மூவகையான கட்டுப்பாடுகளும் அரசின் புதிய அடிப்படைச்சட்டங்களாயின. மாபெரும் பட்டயத்தினல் முறைப்படுத்திக் கூறப்பட்ட படைமானியக் கொள்கைகள் மாற்றம் அடைந்ததனல், இப்புதிய கட்டுப்பாட்டுச் சட்டங்கள் தோன்றி, அப்பழைய கொள்கைகளின்

இடத்தைத் தாம் ஏற்றுக்கொண்டன. இவை அரசரைக் கட்டுப்படுத்தக்கூடிய புதிய அரசியலமைப்பின் அடிப்படைகளாக அமைந்தன. இவை, அரசரைக் கட்டுப்படுத்துவதற்காக மாபெரும் பட்டயத்தில் உள்ளனவும், காலங்கடந்து விட்டாலும் நடைமுறையில் தொடர்ந்து இருந்து வருவனவுமான சில பட்டயக் கொள்கைகளோடு புதியனவாகச் சேர்ந்து அரசரைக் கட்டுப்படுத்தின. இக் கொள்கைகளுள் முறைமை செய்தலைப் பற்றியனவும், அரசருக்கு உணவுப்பொருளைக் கொண்டுவந்து கொடுப்பது பற்றியனவும் ஆகிய சில கொள்கைகள் அரசாங்கத்தின் சட்டத்தில் அவ்வளவு சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை. இத்தகைய கட்டுப்பாடுகளை யெல்லாம் அரசர்மீது பாராளுமன்றமே நிறுவியது என்பதனாலேயே, இக் கட்டுப்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்த அரசியலமைப்புக்குப் பாராளு மன்றமே பாதுகாவலராக அல்லது கண்காணிப்பாளராக (guardian) ஆயிற்று என்பது இதனின்று தவறுமல் பெறப்படும் முடிபு ஆகும். பிரபுக்களது எதிர்ப்புத்தான் பதின்மூன்றும் நூற்றுண்டின் முழுவதும், பதினன்காம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் அரசியலமைப்புக்குப் பாதுகாப்பாக அமைந்திருந்தது ; ஆனல் இப்பொழுது அவ்வேலையைப் பிரபுக்களுக்குப் பதிலாகப் பாராளுமன்றமே செய்யலாயிற்று. வரையறைக்குட்பட்ட முடியரசை அமைப்பதில் மேற்கூறிய பாதுகாவல் மாறுதல் மிகவும் முக்கியமானது. ஒழுங்கான அமைப்பு இல்லாததும், குறுகிய நோக்கமும், தன்னல எதிர்ப்பும் மிக்கதும், ஆளைப்பொர்றுத்து அமைவதும், தொடர்ச்சியான நல்ல நோக்கங்களோ நுண்ணறிவால் அமைக்கப்பெற்ற பயனுள்ள முன் நிகழ்வுகளோ இல்லாததுமான பிரபுக்களிடமிருந்து, மேற்கூறிய வகையாக, தலைமையேற்கும் தன்மையானது பாராளுமன்றத்திற்கு மாறியது. அரசியல் அதிகாரத்தில் முன்னேற்றத்தைக் கண்காணித்து நடத்தும் வேலையானது,விட்டுப்போகாமல் தொடர்ந்து செயலாற்றுவதும், தேடிய நலன்களை மறந்து புறக்கணிக்காததும் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் தன்மையையும் சூழ்நிலைக்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளும் தன்மையையும், உடைய பாராளுமன்றத்தை வந்தடைந்தது. “அரசருடைய கொள்கையை உருவாக்குகின்ற அவரது செயல் தலைவர்கள் தாம், (agents) பாராளுமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்; எனவே அரசரும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக் குட்பட்டுத்தான் இருப்பவர்” என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பெருங் குற்றச்சாட்டு என்னும் செயல் முறையானது, “அரசியலமைப்பின் பாதுகாப்பு பாராளுமன்றத்தின் கையில் இருக்கிறது” என்ற உண்மையை

திறுவன மூலமாக வெளிப்படுத்துவதாகும். நாம் இவ்வாறுன மாறுதல்களேயும், செயல்களேயும் பொருத்தமாக இணைத்து, "அரசியலமைப்பின் பெரும்பகுதிகள் இக்காலத்தில் உறுதியாக அமைக்கப்பட்டு விட்டன; இவைகளெல்லாம் எதிர்காலத்தில் நான் நுட்பமான செய்திகளால் நிரப்பப்படுதல் வேண்டும்; இனிமேல் இக்காலத்திலிருந்து வரையறுக்கப்பட்ட முடியாட்சிக்குத் தொடர்ந்து ஒரு வடிவம் கொடுக்கப்பட்டது. இச் செயலுக்கு அவ்வப்போது எதிர்ப்பு இருந்தபோதிலும், இது மறைந்துவிடாமல், உறுதியாக நடைபெறலாயிற்று," எனச் சுருக்கமாகக் கூறலாம்.

இத்தகைய மாறுதல்களே விவரிக்கையில், பாராளு மன்றமானது இப்புதிய ஒரு நிலையை யடைதல் வேண்டுமென்ற உணர்வுடனேயே இருந்தது என்றே, தனது நிலைமைக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள மிக முக்கியமான உட்பொருளை அது புரிந்துகொண்டது என்றே; நான் கூற எண்ணவில்லே. அடுத்த தலைமுறையில் நடைபெற்றநிகழ்ச்சிகள், அரசர் தம்மைப்பொறுத்த வரையில் ஏற்பட்டுள்ள நிலைமையை நன்கு உணர்ந்துகொண்டார் என்று நாம் கூறக்கூடிய உரிமையைக்கூட அளிக்கும் வகையில் அமைந்திருந்தன; இத்தகைய நிலைமையின் பயனுக அரசர் ஒரு சில செயல்களைச் செய்ய முயன்றதனுல் தோன்றிய விளைவுகள் பாராளுமன்றமும் இப்புதிய நிலையை உணரும்படி செய்தன. இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சி அவர் வயதுவராத இளைஞரா யிருக்கும்போதே தொடங்கிற்று; அக்காலத்திலே நடைமுறையில் பாராளுமன்றத்தினுடைய தனிமுதன்மை (Supremacy) தெளிவாகத் தெரியலாயிற்று: அப்பொழுது மூன்றும் எட்வர்டின் ஆட்சியில் தோன்றியமுன் நிகழ்வுகளெல்லாம் உறுதிசெய்யப்பட்டன. அரசரது செயல்களுக்கெல்லாம் உகந்ததாகிய அவரது ஆலோசனைக் குழுவும் இப்பொழுது பாராளுமன்றம் சொன்னதைச் செய்யும் கூட்டமாகவே இருந்தது. பதினைன்காம் நூற்ருண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில் பல துறைகளிலும் புரட்சி மனப்பான்மைகள் தோன்றின. கருங்கொள்ளே நோய் (Black Death) பரவவே, வேளாண்மைத் தொழிலாளர்கள் அதனுல் பெருவாரியாகத் தாக்கப்பட்டு, அவர்களுடைய சமுதாய நிலையை மாற்றும் வகையில் ஒரு பெரும் பொருளாதார மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தது; இப்பொருளியல் துறைமாற்றத்தினுல் 1381-ல் குடியானவர் கலகம் தோன்றவும், வெகு விரைவாகப் பண்ணேவேலையாள் அல்லது வாரியர் (Villeinage) என்ற நிலைமை மறையலாயிற்று. சமயத்துறையிலும், கடவுளைப்பற்றிய கொள்கை விளக்கத்திலும், விக்ளிப் (Wycliffe) என்பவரும். அவரது கூட்டத்தாரும் புரட்சிகரமான கோட்பாடுகளைப் பரவச் செய்தனர். அவர்களது கருத்

துக்கள் அரசியலிலும் புரட்சிகளை உண்டாக்கத் தக்க வகையில் அதற்கும் பொருந்துவனவாயிருந்தன. வெகு விரைவாகப் பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட்டபடியாலும், அதிகாரத்தைக் கைப்பற்றுதற்காகப் போட்டியும் பூசலும் கட்சியாளரிடை தோன்றியமையாலும், பிற்காலத்தில் அரசரது பண்பிலேயே ஒரு மாறுதல் ஏற்பட்டபடியாலும், அரசாங்கத் துறையிலும் ஒரு புரட்சி தோன்றுதல் வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்படலாயிற்று. இதில் கட்சிச் சண்டை என்பது எட்வர்டினுடைய ஆட்சியின் கடைசியில் நிலவிய அமைதியில்லாத நாட்களிலிருந்தே தொடர்ந்து நீடித்து இருந்தது; தலை மூப்பு உரிமை என்ற கொள்கையை ஒட்டி (Principle of Primogeniture) அரியணைக்கு வழி மரபு உரிமையானது முதல் தடவையாகத் தீர்மானிக்கப்பட்டபடியால், இதனால் தோன்றிய சூழ்நிலைகளும் கட்சிச் சண்டையைத் தூண்டுவனவாக இருந்தன. தமது சிறிய தகப்பன்மாரெல்லாம் வயது வந்தவர்களாகவும், செல்வமும், செல்வாக்கும், ஆட்சி நோக்கமும் உடையவர்களாக இருக்க, ரிச்சர்டு வயதுவராத இளமை நிலையிலேயே தமது பாட்டனருக்குப் பின் அரியணை ஏறினார். இரண்டாம் ரிச்சர்டின் கொள்கைக்கு நாம் விளக்கம் கொடுக்கக் கூடுமானால், இந்த அரசரது ஆட்சி, அரசியலமைப்பினுடைய இடைக்கால வரலாற்றிலேயே சுவை மிகுந்த ஒன்றாகவும், படிப்பினை நிறைந்த ஒன்றாகவும் இருப்பது என்றே நமக்குத் தோன்றுகிறது. அவ்வாட்சியானது பாராளுமன்றம் இதுகாறும் அடைந்த வளர்ச்சியையெல்லாம் சுருக்கிக் காட்டுவதாக உள்ளது; அது அரசியலமைப்பு என்னும் சட்டத்துக்கு உட்பட்ட முடியரசு என்பதாக, ஒவ்வொரு அரசாங்கச்செயலிலும் அமையாவிட்டாலும், பொதுவாகப் பரந்த அளவில் ஏற்கெனவே அது அமைந்திருக்கிறது என்பதையும் காட்டுகிறது.

அரசரது இளமைக் காலத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு, பாராளுமன்றம் ஏற்கெனவே பெருமக்களுடைய எதிர்ப்பினால் தோன்றிய முன் நிகழ்வுகளையும், மூன்றாம் எட்வர்டின் ஆட்சியில் அது ஏற்படுத்திய முன் நிகழ்வுகளையும் தொடர்ந்து கையாளத் தொடங்கிற்று. முற்கூறிய முன் நிகழ்வுகளினால் அது அரசரது ஆலோசனைக்குழுவையும், அலுவலுக்கு ஆட்களை அமர்த்துவதையும் கட்டுப்படுத்தும் அதிகாரங்களைப் பெற்றிருந்தது. பிற் கூறப்பட்ட முன் நிகழ்வுகளினால், அது வரிவருமானங்களையும், செலவுகளையும் கட்டுப்படுத்தவும், சலுகைகளைக் கொடுப்பதற்காக வரிப்பொருள் உதவிஅளிக்கவும், தானே சட்டம் இயற்றவும் ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருந்தது. ரிச்சர்டுக்கு வயது வந்ததும்,

அவர் கொடிய பண்பு உடையவராகக் காணப்பட்டார். ஊதாரித்தனமாகவும், தன்னலம் பேணுபவராகவும், பொது மக்கள் நலன்களைப் புறக்கணிப்பவராகவும், கட்டுப்பாடுகளையும், குறைகளை எடுத்துக் கூறுவதையும் வெறுக்கும் இயல்பினராகவும் இருந்தார். இவ் வாட்சியில் அமைதி இல்லாத காலங்களில் அரசருக்கெதிராக மரபைப் பின்பற்றிப் பழைய பெருமக்களும், புதிய பாராளுமன்றமும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கட்சியாக இருந்தனர். மூன்றும் எட்வர்டின் இறப்புக்கு முற்பட்ட நாளிலேயே பாராளுமன்றத்தினுடைய அதிகாரத்தை மிகவும் உறுதியாக அரசர்கள் பல தடவைகளில் ஒப்புக்கொண்டனர்; இவ்வாறு ஒப்புக்கொண்டார்களென்பதற்கு அடையாளமாக, அவர்கள் பொது மக்கள் மன்றத்தின் உறுப்பினராகத் தமக்கு வேண்டியவர்களை ஒரு கட்சியிலிருந்தோ மற்றக் கட்சிகளிலிருந்தோ மிகுதியாகத்தேர்ந்தெடுத்து அனுப்பச் செய்தனர்; இவ்வாறு எளிதில் செய்வதற்காகத் தேர்தல் அலுவலாளர்களாக (Returning officers) இருந்த கொத்தவால்களையும் அவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டனர்.

தமது வயதுவராப் பருவம் (minority) முடிவடையும் போது திவிரமாகத் தமக்கு எதிர்ப்பு ஏற்படவே, ரிச்சர்டு, இரண்டாம் எட்வர்டுச்கு ஏற்பட்ட கதி தனக்கும் ஏற்படுமென்று அஞ்சினார்; இச்சூழ்நிலையில் அவர் இரண்டு தடவைகளில் பாராளுமன்றத்திற்கு அல்லது மேல்முறையீட்டுப் பிரபுக்களுக்கு (Lords Appellant) விட்டுக்கொடுத்துப் போகவேண்டியதாயிற்று. கடைசியில் அவர் தாமே ஒரு திடீர்ப்புரட்சி செய்து (Coup d' 'etat), மேல் முறையீட்டுப் பிரபுக்களை அடக்கித் தமது வயதுவராப் பருவத்தை முடிவடையச் செய்தார். இதை அடுத்து, எட்டு ஆண்டுகளுக்கு அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் நடைபெற்றது. அரசருடைய பண்பும் நல்லமுறையில் திரும்பியதாகக் காணப்பட்டது; ஆயினும் அவர் பழி தீர்ப்பதற்காக ஒரு வாய்ப்பை எதிர் நோக்கி இருப்பதாகவே பலரும் எண்ணினர். அரசியல் அமைப்பில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக ரிச்சர்டுக்கு ஏற்பட்ட நிலைமையை, முடியரசின் பொருளை உணர்ந்த எந்த அரசரும் விளங்கிக் கொள்ளாமலிருக்க முடியாது. ரிச்சர்டு தாம் இருந்த இப்புதியநிலைமையை அறிந்துகொண்டாரென, எந்த நேரடியான சான்றிலிருந்தும் நாம் கூறமுடியாது; அவர் தமது முன்னோர்கள் பெற்றிருந்த நேரடியான, வரம்பற்ற அரச அதிகாரங்களைத் திரும்பவும் தான் பெறுதல் வேண்டுமென்பதாகத் தீர்மானித்தாரெனவும் நாம் கூறுவதற்கில்லை. எனினும் அவர் தமது புதிய நிலைமையை உணர்ந்து,

திறமையுடன் ஒரு திட்டம் வகுத்திருந்தாலும், அவர் தமது ஆட்சியின் முடிவில் செய்ததையேதான் செய்திருப்பாரென நாம் கூற முடியும். அத்தகைய ஒரு நோக்கத்தை நிறைவேற்றுதற்காகத்தான் அவரது செயல்கள் தெளிவாகவும், உணர்வோடு மிருந்தன என்பதுபோலத் தோன்றிற்று.

பாராளுமன்றத்தினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ரிச்சர்டு தமது திட்டத்திலுள்ள சில செயல்களை நிறைவேற்றவும், அதன் மூலமாகத் தமது தனி இயல்பான அல்லது கட்டுப்பாடில்லாத ஆட்சியை நிறுவவும்வேண்டுமென விரும்பினர். இது, அவர் பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியை உணர்ந்திருந்தமையைக் காட்டுகிறது. தமக்கு முன்புள்ளோர் செய்தது போல, அவரும் தமக்கு வேண்டியவர்களை யெல்லாம் பாராளுமன்றத்தில் உறுப்பினராகச் சேர்த்து நிரப்பியதோடு, தம்மிடம் சம்பளம்பெறுகிற வேல்ஸ் நாட்டு வில் வீரர்களடங்கிய படைகளைக் கொண்டு, பாராளுமன்றத்தை அச்சுறுத்தவும் செய்தார் 'பாராளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் பாராளு மன்றத்தில் கையாளுகிற சொற்களுக்கும், செயல்களுக்கும் அரசருக்கே நேரடியாகப் பொறுப்பானவர்கள்,' என்ற கொள்கையை நிறுவியதே அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு முதன்முதலில் எடுத்த நடவடிக்கையாகும். இதைத் தொடர்ந்து அவர், 1397-ல் தாம் ஒப்புக்கொள்ளாதஒரு மசோதாவை (Bill), ஹாக்சி (Haxey) என்ற பொதுமக்கள் மன்றத்தின் உறுப்பினர் மன்றத்துள்கொண்டு வந்தார் என்பதற்காக அவர்மீது கொலைத்தண்டனை விதிக்குமாறு செய்தார். இந்தக் கொலைத் தண்டனையை அளிக்கும் தீர்ப்பானது செயலில் நிறைவேற்றப்படவில்லை; ஆயினும் அரசரால் கையாளப்படுகிற இந்தப் புதிய கொள்கையானது, செயலில் நிறைவேற்றப்படுமாயின், பாராளுமன்றத்தின் வாயிலாக அரசரை எதிர்க்கக் கூடிய வாய்ப்பை யெல்லாம் அது அழித்துவிடும். இதன் பிறகு அரசர், தனக்கு எதனையும் தர மறுக்காத பாராளு மன்றத்திடமிருந்து, கம்பளி மயிரின் மீதுள்ள தீர்வையைத் தமது வாழ்நாள் முழுவதுக்கும் வாங்கிக்கொண்டார். அதனேடு, அவர், முழுவதும் தமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதும், பாராளு மன்றத்தின் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதுமான ஒரு கமிட்டி அல்லது குழுவை அமர்த்துவதற்கும் பாராளு மன்றத்திடமிருந்து உடன்பாடு வாங்கிக்கொண்டார். இத்தகைய குழுவிற்குக் கொடுக்கப்பட்ட அமைப்பானது, பிற்காலத்தில் சட்டம் இயற்றுவதில் முழுவதும் தன்னுரிமையாக அல்லது சுதந்திரமாக இருக்கும் நிலையை உண்டாக்குதற்கே ஒரு தொடக்கமாக இருந்தது. தமக்குப்

பாராளுமன்றத்தினால் அளிக்கப்பட்ட வரிப்பொருள் உதவியோடு கூட, அவர் சட்டப்படி அதனுடைய உரிமைபெறாத, தன் போக்காகச்சில வரிகளையும் சேர்த்து வாங்கத் தொடங்கினார்; இவைகளுக்கும்மேலாகத் தீவிரமாக அவர் சென்று, பாராளுமன்றத்தினுடைய இணக்கம் பெறாமலே, சட்டப் பத்திரங்களைக் கள்ளத்தனமாகப் பொய்யாகமாற்றிப், பாரர்ளுமன்றச் சட்டங்களை இல்லையாகும்படி செய்யும் உரிமையைத் தாமாகவே ஏற்றுக்கொண்டார்; தமது தனிச்சிறப்புரிமையைச் செயல்படுத்தியே பாராளுமன்றத்தினால் செய்யப்பட்டு எழுதப்பட்ட சட்டத்தை மாற்றும் உரிமையையும் அவர் எடுத்துக் கொண்டார்.

இத்தகைய முறைகளிலெல்லாம் அவர் செய்த செயல்களை ஒவ்வொன்றாக நாம் நோக்குகையில் அவர் ஒரு திட்டமிட்டே செய்தார் என்ற முடிவுக்கு நாம் வராமலிருக்க முடியாது. அரசரது செயல்களெல்லாம் நிலைபெற்று விட்டால், அரசியலமைப்பு என்பது சிறிதளவுகூடப் பழக்கத்திலில்லாமல் மறைந்துவிடும் என்பதையும் நாம் கண்டுகொள்வது எளிதே. ஆங்கிலக் கால்வாய்க்கு மறுகரையில் உள்ள பிரஞ்சு நாட்டில், அதேகாலத்தில் அறிவாளரான சார்லஸ் அரசரால் (Charles the Wise) தொடங்கப்பட்டதும், பிற்காலத்தில் முழுமையாக நிறைவேற்றப் பட்டதுமான வரையறுக்கப்படாத அல்லது கட்டுப்பாடில்லாத முடியாட்சியின் அடிப்படைகளையே ரிச்சர்டின் செயல்களும் வெகு உறுதியாக அமைத்திருக்கும். ரிச்சர்டின் ஆட்சியின் கடைசி மூன்று ஆண்டுகளும், ஆங்கில அரசியலமைப்பானது முதன்முதலாகத் தப்பிப்பிழைத்த, ஒரு இடர்மிகுந்த நெருக்கடியான காலமாக அமைந்தது. நல்லவேளையாக, அரசர் அடிப்படையான சட்டங்களைத் தகர்த்தெறிந்ததைத் தொடர்ந்து, அவரே நேரடியாகக் கொடுங்கோலாட்சியின் சில செயல்களைச் செய்யவே, ஒரு தலைவரைக்கொண்ட வலிய எதிர்ப்பு ஒன்று அவருக்கெதிராகத் தோன்றியது. போலிங்புரோக்கைச் சேர்ந்த ஹென்றி (Henry of Bolingbroke) என்ற இத்தலைவரின்கீழ் நாடு முழுவதும் அரசருக்கெதிராகத் திரண்டெழுந்தது; அரசரது பண்புகளை யாவரும் கண்டுகொண்டனர். எனவே இவ்வகையில் 1399-ம் ஆண்டில் தோன்றிய புரட்சியும் செயலளவில் வன்மையற்ற, இரத்தம் சிந்தாப் புரட்சியாகவே அமைந்தது.

இயல் ஒன்பது

பருவம் முற்ருத அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சி[1]

இரண்டாம் ரிச்சர்டை ஆட்சியினின்றும் நீக்கிய புரட்சிக்குத் தலைமைதாங்கி, அதை நடத்திய போலிங்புரோக்கின் ஹென்றிக்கு அந்த நெருக்கடியில் பொதிந்துள்ள அரசியலமைப்பு பற்றிய கேள்வியில் நேரடியாக யாதொரு ஈடுபாடும் கிடையாது எனத் தெரிகிறது. ரிச்சர்டிஞல் முறைதவறிக் கைப்பற்றப்பட்டதும், லங்காஸ்டிரிய (Lancastrian) வழியினருக்கு மரபுரிமைப்படி வரவேண்டியதுமான அரசுரிமையை அவர்களுக்கு மீட்டுக்கொடுப்பது என்ற தனிநோக்கமே அவருக்கு இருந்தது. ஆயினும் ரிச்சர்டினுடைய கொடுங்கோலாட்சியானது உருவாக்கிய எதிர்ப்பை, முழுவதும் நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளுவதில் அவர் ஈடுபட்டிருந்தார். அவ்வெதிர்ப்பு எழாவிட்டால், அவர் தமது நோக்கத்தை நிறைவேற்றியிருக்க முடியாது. குறிப்பிட்ட இந்த எதிர்ப்பானது, பெரும் அளவில் பெருமக்களுடைய கட்சியிஞல் வெளிப்படுத்தப்பட்ட எதிர்ப்பாக இருந்தாலும்கூட, அது பதின்மூன்ரும் நூற்ருண்டில் பல்வேறு காலங்களில் தோன்றி, அரசரிடமிருந்து பல்வேறு சலுகைகளை வலுவந்தமாகக் கைப்பற்றிய எதிர்க்கட்சியினரைவிட ஒரு சிறிது எதிர்கால உணர்வு மிக்கதாக இருந்தது. இத்தகைய எதிர்ப்பே 1399-ம் ஆண்டுப் புரட்சிக்கு அரசியலமைப்பை ஒட்டிய ஒரு தன்மையைக் கொடுக்கிறது. இந்தப் புரட்சியின் தன்மையைப்பற்றி மதிப்பிட்டு நாம் உரைக்கும்போது, மூன்ரும் எட்வர்டின் ஆட்சியில் பொதுமக்கள் மன்றம் அதிகார வளர்ச்சியில் அடைந்த முன்னேற்றத்தையும் கவனத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஏனென்ருல் ரிச்சர்டை ஆட்சியினின்றும் நீக்குவதில் பொதுமக்கள் மன்றம் சிறப்பாக ஒரு செயலும் ஆற்றவில்லை என்ருலும், அதனுடைய ஆதரவு அரசருக்கு ஒரு சிறிதும் கிடைக்கவில்லை என்பதற்கு மிகவும் உட்பொருள் உண்டு. ஒரு நோக்கத்தைக் காட்டுகிற வரலாற்று உண்மை என்ற அளவில், 1688-ம் ஆண்டின் புரட்சியைப் போலவே இந்தப் புரட்சியிலும், நாட்டினர் எடுத்த நடவடிக்கையானது, அரசருடைய கொள்கையினுல் அழிவுக்குள்ளாகுமோ என்றிருந்த அரசியலமைப்பைக் காப்பாற்றியதாக இருக்கிறது. 1688-ம் ஆண்டில் மக்கள் நாட்டின் அரசியலமைப்பையும், அதற்கு உற்ற இடரையும் தெளிவாக அறிந்து

1. Premature Constitutional government.

கொண்டதைப் போலவே, 1399-ம் ஆண்டிலும் நாட்டின் அரசியலமைப்பையும், அதற்கு உற்ற இடரையும் அறிந்துகொண்டார்களென நாம் உறுதியாகக் கூற இயலாது. ஆயினும் முதலில் நடந்த புரட்சியில் இரண்டாவது நடந்த புரட்சியில் உள்ளதைப்போலவே, நாட்டில் ஓர் அரசியலமைப்பும் அதை எதிர்நோக்கி ஓர் இடரும் இருந்தன எனவும், இந்த இரண்டு செயல்களும் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் ஓரளவாயினும் மக்களால் உணர்ந்து கொள்ளப் பட்டன எனவும் நாம் உறுதியாகக் கூறலாம். அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் இக்காலத்தில் அதில் உள்ள சிறப்பான போக்குகளெல்லாம் (Main lines of the Constitution) கொள்கையளவில் 1399-ம் ஆண்டை ஒட்டிய காலத்திலேயே அமைக்கப்பட்டுவிட்டன. இக்கொள்கைகளை அரசாங்க அலுவல்கள் ஒவ்வொன்றுக்குமாகப் பொருந்தச்செய்யும்வழியில் யாதொன்றும் (1399-ம் ஆண்டு வரை செய்யப்படவில்லை. இந்தக் கொள்கைகளை எல்லாம் இவ்வாறு பொருந்தக் கையாளுவதில் அமைந்த முதற் காலந்தான் பதினைந்தாம் நூற்றாண்டு ஆகும். அப்போது இக்கொள்கைகள் வழக்கத்திலிருந்தன. நாட்டின் பொதுமக்கள் கருத்து என்பதாக நம்மால் குறிப்பிடத்தக்க ஒன்று ஓரளவு இக்காலத்தில் தோன்றியது என்பதை நமக்குக் கிடைக்கிற சான்றுகள் காட்டுகின்றன. நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மையை ஓரளவில் பொதுமக்கள் அறிந்துகொண்டார்களென்பதையும் அச்சான்றுகள் காட்டுகின்றன. சாதாரணமாக நாட்டில் செய்யப்படவேண்டிய அலுவல்களைப் புரட்சிக்காலத்தில் செய்யும்போது கூட, ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட முறைகளையும், முன் நிகழ்வுகளையும் ஒட்டியே செய்தல் வேண்டுமெனப் பொதுமக்கள் உணர்ந்து கொண்டார்களென்பதையும், ஆட்சியை நடத்துவதில் பாராளுமன்றம் தனக்குத் தேடிக்கொண்ட ஓர் இடத்தை அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டார்களென்பதையும், அரசருக்கு இப்புதிய அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள நிலைமையை அவர்கள் உணர்ந்து கொண்டனரென்பதையும், அந்நிலைமையில் தன் மீதுள்ள கட்டுப்பாடுகளை அகற்ற அரசர் முயன்றால், அரசியலமைப்பில் ஏற்படக்கூடிய மாறுதல்களையும் அவர்கள் உணர்ந்து கொண்டனரென்பதையும் இச்சான்றுகள் காட்டுகின்றன. நாட்டினருக்குத் தங்களுடைய அரசியலமைப்பைப்பற்றி எவ்வகையான அளவில் முழுமையான கருத்து 1399ல் இருந்தது என்ற கேள்வியைப்பற்றி நாம் ஆராயாமல் விட்டுவிடுவோம்; ஆனால் நமக்குக் கிடைக்கும் பிற்கால வரலாற்றைப்பற்றிய அறிவை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட இந்த (1399-ஆம் ஆண்டின்) நெருக்கடியில் "என்ன உரிமையானது இடர்ப்பாட்டுக்

குள்ளாக இருந்தது ?" என்ற கேள்வியை—வரலாற்றினடிப்படையில் முக்கியமான கேள்வியை — நாம் ஆராய்ந்தோமாயின், இந்நெருக்கடியானது 1688 - ஆம் ஆண்டில் தோன்றிய நெருக்கடியை வெகு துல்லியமாக ஒத்திருப்பது நமக்குத் தெளிவாகத் தெரியவரும். இப்புரட்சியானது வெகு விரைவில் வெற்றியடைந்தது என்பதே ஐயப்பாட்டிற் கிடமில்லாதவகையில் அதற்கு அரசியலமைப்புபற்றிய ஒரு தன்மையைக் (Constitutional Character) கொடுத்தது.

குறிப்பிட்ட இவ்வகையிலும் இப்புரட்சியானது முற்றுப் பெற்ற நிலையிலிருந்தது. புரட்சியினுல் கைப்பற்றிய முடியைத் Crown) தம்மிடத்திலேயே வைத்துக்கொள்ளுவதற்காக லங்காஸ்டிரியர்கள், நாட்டினருடைய ஆதரவையே சார்ந்து நின்றனர்; மேலும் அவர்கள் பதினுன்காம் நூற்றுண்டில் பாராளுமன்றம் அடைந்துள்ள உரிமைகளை ஒப்புக்கொள்வதாக உறுதி கூறவேண்டிய நிலை இயல்பாக அமைந்தது; ரிச்சர்டு தகர்த்தெறிய முயன்ற பாராளுமன்ற உரிமைகளையெல்லாம் அது முழுவதும் கையாளுவதற்கு இவ்வரச குடும்பத்தினர் இணங்குவதாகவும் உறுதி கூறவேண்டியதாயிற்று. புதியஅரசர் அப்போது ஏற்பட்ட சூழ்நிலைகளின் வலியாலேதான் இத்தகைய கொள்கைக்கு ஒத்திருப்பதாக உறுதி கூற வேண்டியதாயிற்று; எவ்வாறெனில், இப்புரட்சியினுல் அரசராகவந்த நான்காம் ஹென்றியே தமக்கு எதிராகவும் வேறு புரட்சிகள் தோன்றக்கூடுமென்பதான இடர் வாய்ப்பட்டவராயினர்; எனவேதான் அவர் எத்திசையிலும் யாவர் மீதும் எதிர்ப்புக் காட்டித் தாக்கவொண்ணுத அளவுக்குத் தமக்குக் கிடைக்கக்கூடிய ஆதரவைச் சார்ந்திருந்தார்; மேலும் இதனுல்தான் அவர், மிகவலுவான நிறுவனமாக அமைந்துவிட்ட பாராளுமன்றத்தையும் பகைத்துக் கொள்ளவில்லை. ஹென்றி பல திறமைகள் உடையவரெனினும் அவருடைய ஆட்சி மிகவும் இடைத்தரமானது (mediocre); இதற்குக் காரணம் அவர் எல்லாச் செயல்களிலும் ஒரு நடுத்தரமான (தீவிரமில்லாத) இடைப்பட்ட போக்கையே கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதேயாகும். அவரது மகனும், அவருக்குப்பின் வந்தவருமான ஐந்தாம் ஹென்றி - ஹால் இளவரசரென நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரால் குறிப்பிடப்படுபவர் - பிரான்சோடு போரைத் திரும்பவும் தொடர்ந்து நடத்துவதற்குரிய அளவு உறுதியானவராக எண்ணினுர்; அவர் தாம் அடைந்த வெற்றிகளின் மூலம் பெரும் புகழ் அடைந்தார்; எனினும் அவருடைய நீண்ட காலப் படைஎழுச்சிகள் காரணமாக அவர் இங்கிலாந்தை விட்டு வெளிச்செல்ல வேண்டியிருந்தது; இத்தகைய படையெடுப்

புக்களே ஆங்கில அரசாங்கத்தை மற்றவர்கள் (பாராளுமன்றம்) நடத்தும்படியாக விட்டு வைத்தது. பருவத்துக்கு முந்திய காலத்திலேயே இவ்வரசர் இறந்து போகவும், ஆறும் ஹென்றி என்ற அவருடைய மகன் கைக்குழந்தையா யிருக்கையிலேயே அரியணை ஏறினர்; எனவே நீண்ட காலத்துக்கு அவருடைய வயது வராப் பருவ நிலையும், வயது வந்த பின்னரும் அவருக்கு ஏற்பட்ட உடல் நலக் குறைவும், பித்தேறிய நிலையும் சேர்ந்து பாராளுமன்றத்திற்கு அரசாங்கத்தின் மீதிருந்த பொதுவான கட்டுப்பாட்டை உருக்குலையாமல் வைத்திருக்க உதவின.

இப்புரட்சியை அடுத்து அறுபது ஆண்டுக்காலத்தில் பாராளுமன்றத்தினுடைய அதிகாரமானது எவராலும் தடுக்கப்படாமல், எதிர்க்கப் படாமலிருந்தது; லாங்காஸ்டிரிய அரசர்களும் அதனை எச்சமயத்திலேனும் எதிர்க்கும் மன இயல்புடையவராயில்லை; நாம் காணக்கூடிய அளவில், இவ்வரசர்களுடைய மன இயல்பானது தாம் பாராளுமன்றத்தோடு இணக்கமாகப் பொருந்தியே ஆட்சி செய்வதென்பதாக இருந்தது. எனவே இவ்வரசர்களது ஆட்சிக்காலம் முழுவதும், இடையறுத அரசியலமைப்புக்குட்பட்ட காலமாகவே இருந்தது. இத்தகைய ஆட்சி வியப்பைத் தரும் வகையில் பருவம் முற்றுத நிலையில் தற்கால அரசியலமைப்பாகவே இருந்ததென வேருெரு இடத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்; இந்த அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சி இயந்திரமானது இன்னும் பல நுட்பமான வேலைகளில் இயக்கப் படாமலிருந்தபோதிலும், இவ்வரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியானது மனநிலையை அல்லது தன்மையைப் பொறுத்த அளவில் தற்கால ஆட்சியை ஒத்திருந்தது. பாராளுமன்றம் தனது நிலைமை பாதுகாப்பாக உள்ளதென்பதை நன்முக உணர்ந்து கொண்டதைப் போலத் தோன்றிற்று; ஒரு பக்கம் அது பல நுட்பமான வேலைமுறைகளை எல்லாம் செம்மையாக ஆக்கிற்று; மறுபக்கம் அது தனது கட்டுப்படுத்தும் அதிகாரத்தை உறுதியாக்கிற்று; அது அரசருடைய ஆலோசனைக்குழுவைத் தனது கருவியாகப் பயன்படுத்திற்று; இவற்றை எல்லாம் விட மிகச் சிறப்பானது என்னவெனில், ஒத்த தன்மையிலிருக்கும் பல நிலைமைகளிலிருந்து, பாராளுமன்றத்திற்கும், ஆலோசனைக் குழுவுக்குமுள்ள தொடர்பில் மெல்ல மாறுதல் தோன்றத் தொடங்குவதை நாம் காண முடிகிறது; இத்தகைய மாறுதல்களிலிருந்து தான் தற்காலத்தை ஒட்டிய காலங்களில் ஆங்கிலக் காபினெட் அமைச்சரவை முறை (English Cabinet System) தோன்றி வளர்ந்தது. ஆயினும் நாட்டின் அன்ருட ஆட்சியை நடத்திவந்த ஆலோசனைக்குழுவைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்த பாராளுமன்றத்தின் அதி

காரத்திஞல் கூட, அந்நாளில் இருந்த பெரிய ஆட்களிடையே தோன்றிய கடும் கட்சிப் போட்டிகளைத் தடுக்க இயலவில்லை; இக்கட்சிப்போட்டிகள்தாம் அடுத்த நிலைமுறையில் நேரடியாக உள்நாட்டுப் போர்களில் (ரோஜாச் சண்டைகள் - Wars of the Roses) நாட்டைக் கொண்டு போய் விட்டன.

உண்மையில் அக்காலமானது பருவத்துக்கு வராத நிலையிலேயே வளர்ந்து தற்கால நிலையை ஒத்திருந்தது; அக்கால ஆட்சி அரசியலமைப்புக்குட்பட்ட தென்பது அரசியலமைப்பு என்ற ஒன்று உறுதியாக நிறுவப்பட்டு, நிலையாக உறுதியாக்கப்பட்டு, அரசாங்கம் அதன் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது என்ற நிலை தோன்றியதஞல் ஏற்பட்டதன்று; அல்லது அரசியலமைப்புக்குட்பட்ட வழி ஒன்றுதான் செயலாற்றுதற்கு இயற்கையாக அமைந்த வழி என்று மக்களுக்குத் தோன்றியமையால் அது ஏற்பட்டதன்று; பின் எதஞல் இத்தகைய ஆட்சி அமைப்பு தோன்றியது என்ருல், அது தற்காலிகமாகமட்டுமே இருக்கக்கூடிய சூழ்நிலைகளை வைத்துத்தான்; அரசருக்கு ஏற்பட்ட பாதுகாப்புத் தேவை, அவர் நாட்டை விட்டு வெளிச்சென்றமை, அவரது குழந்தைப் பருவம் அல்லது அவருடைய உடல், உள, மெலிவு ஆகிய இச்சூழ்நிலைகள்தாம் உண்மையில் பாராளுமன்றத்தை ஆட்சியில் ஓர் உறுதியான கூருக இருக்கும்படி செய்தன; எனவே அக்காலத்திய இச்சூழ்நிலைகளால் விளைந்த இந்த நல்ல அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியே சாதாரணமானதொன்ருகத் தோன்றும்படி வளர்ந்தது. அக்காலத்தில் வழக்கமாக அமைந்து விட்ட கருத்தும், செயலும் அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட முன் நிகழ்வுகளைவிட மிக முக்கியமானவை. இக்காலத்தில் இந்த அரசியலமைப்பானது நாட்டினரின் அரசியல் வாழ்க்கையில் மிக உறுதியாக ஒரு பகுதியாகிவிட்டதென்பதே, இதற்கு அடுத்த காலத்திலும் இவ்வரசியலமைப்பு பிழைத்திருப்பதற்கு ஒரு பெருங் காரணமாயிற்று.

குறிப்பிட்ட இக்கால அரசாங்கத்தில் அரசருடைய நிலைமையைப்பற்றி, மக்களுடைய கருத்து என்ன என்பது, அக்காலத்திலேயே இருந்து ஆங்கில அரசியலமைப்பைப்பற்றி ஆராய்ந்த ஆசிரியருடைய கருத்தின்வாயிலாக நாம் இங்கு குறிப்பிடத்தகும். சர்ஜான் பார்ட்டஸ்க்யு (Sir John Fortescue) என்ற இவ்வாசிரியருடைய கருத்தானது "தெளிவாகவும், பொருள் பொதிந்ததாகவும் இருப்பதால், ஆங்கில அரசியலமைப்பைப்பற்றி எழுதும் எந்த ஆசிரியரும் இதனைக் குறிப்பிடாமலிருக்க முடியாது" என ஹாலம் (Hallam) என்பவர் தாம் எழுதிய இடைக்கால ஐரோப்பா (Europe during the Middle ages) என்ற

நூலின் மூன்றும் பகுதியில், ஆங்கில அரசியலமைப்பைப் பற்றிய இயலில் கூறுகின்றார். இங்கிலாந்தின் தலைமை நீதிபதியாக இருந்த சர் ஜான் பார்ட்டஸ்க்யு, தான் சட்டம் பயின்றதும், அதன் பின் வேலை செய்த நாளும் லாங்காஸ்டிரியர் ஆட்சியிலேதான். நான்காம் எட்வர்டின் ஆட்சியின் தொடக்கத்தில் அவர் "இங்கிலாந்தின் சட்டங்களைப் பற்றிய பாராட்டு" (In Praise of the Laws of England) என்பதாக எழுதிய நூல் ஒன்றில், அரசாங்கத்தில் அரசரது நிலைமையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "தமது குடிமக்களுடைய உடன்பாடு இல்லாமல், அரசர் நாட்டின் சட்டங்களில் மாறுதல் எதுவும் செய்ய இயலாது; அவர்களுடைய உடன்பாடின்றி, அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாகப் புதிய வரிகள் எவற்றையும் அவர்கள் மீது அரசர் விதிக்கவும் இயலாது." மேலும் அவ்வாசிரியர் கூறுவதாவது: 'ஓர் இயற்கைப்பொருளாகிய உயிரின் தலையானது எவ்வாறு அவ்வுயிரின் நரம்புகளையும் தசைப்பிடிப்புகளையும் மாற்றவோ அல்லது அவற்றுக்கு உரிய அளவு உணவுப் பொருளையும், குருதியையும் கொடுக்க மறுக்கமுடியாதோ, அவ்வாறே அரசாங்கமென்னும் உடம்பின் தலையாக இருக்கிற அரசரும், அவ்வரசாங்கத்தின் சட்டங்களை, மக்களின் ஒப்புதல் இல்லாமல் மாற்றுதலும், அல்லது உரிமைகளையும், அவர்களுக்கு உடைமையாயிருப்பவற்றையும் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளுவதும் இயலாது. இவ்வாறுதான் ஒவ்வொரு நாட்டு அரசாங்கத்திலும் நிறுவன அமைப்பு இருக்கிறது. இதிலிருந்து தமது குடிமக்களுக்கும், சட்டங்களுக்கும் ஒப்ப அரசர் கையாளவேண்டிய அதிகாரம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இது ஏனெனில், அரசரானவர் தமது குடிமக்களையும், அவர்களுடைய உயிர்களையும், சொத்துக்களையும், சட்டங்களையும் காப்பாற்றுதற்கே அமர்த்தப்பட்டவராவர்; இந்தக் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே குடிமக்களிடத்திலிருந்து அதிகாரம் அரசருக்குப் பேராள் என்ற வகையில் அளிக்கப்பட்டிருக்கிறது. (Delegation of Power from the People); இத்தகைய அதிகாரத்தைத் தவிர வேறெவ்வகையான அதிகாரத்துக்கும் அவருக்கு முறையான உரிமை இல்லை." இக்கருத்துகளெல்லாம் அரசாங்கத்தைப் பற்றி மெய் விளக்க நூலாசிரியர் (Philosophical Student) ஒருவர் கூறுவதைப் போன்றிருந்தாலும், இவற்றின் சாரத்தைப் பார்க்கும்போது, பார்ட்டஸ்க்யு கூறுவது சரியே என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவர் எழுதிய காலத்தில், ''அரசரது அதிகாரமானது மக்களால் பேராள்முறையில் அளிக்கப்பட்டதாகும்' என்ற கொள்கை உண்மையில் நிலைநிறுத்தப்பட்டிருந்தது; எனினும் இக்கொள்கையானது நாட்டின் நடைமுறை அரசாங்கத்தில்

முழுவதும் செயல்படுத்தப்படுவது என்பது இன்னும் இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே நடைபெற்றது.

1399-ம் ஆண்டின் புரட்சியானது நிறுவுவதற்கு துணை செய்ததும், இங்கு நம்மால் கூறாமல் விட்டுவிடக் கூடாததுமான ஒரு புதிய பாராளுமன்ற உரிமை என்னவெனில் அது, முடியை அடையும் மரபுவழி உரிமையைத் தீர்மானிக்கும் உரிமையேயாம்; இதனால் கட்டுப்பாட்டுக் கடங்காத அரசரை ஆட்சியினின்றும் நீக்கும் உரிமை என்ற பெரிய முக்கியமான உரிமையும் நிறுவப் பட்டதென்று பொருள் இல்லை. ஓரளவில் அரசு நீக்கும் உரிமை யானது அரசியலமைப்பாகவே மாபெரும் பட்டயத்தில் ஆக்கப் பட்டிருக்கிறது. இதுவே "தற்காலிகமாக அரசுரிமையினின்றும் நீக்குதல்" என்பதாக 61-ம் பிரிவில் கூறப்பட்டுள்ள உரிமைக்கு அடிப்படையாக இருக்கிறது; இச்சிறு உரிமை மேலே குறிப்பிட்ட உரிமையோடு தொடர்புடையது; கெட்ட நடத்தைக்காகத் தற் காலிகமாக அரசுரிமை நீக்குதல் என்னும் உரிமையானது பெருங் குழுவினால் 1258-லும், 1310-லும் கையாளப்பட்டது; அரசு நீக் கும் முழு உரிமையும் 1328-ல் இரண்டாம் எட்வர்டுக்கு எதிராகக் கையாளப்பட்டது. ஆயினும் 1399-ல் இவற்றைவிடப் பெரிய அளவில் இவ்வுரிமை கையாளப்பட்டது. மூத்தோர் வழியுரிமை (தலை மூப்புரிமை - ப்ரிமொஜெனிச்சர் Primogeniture) என்னும் விதிப்படி அமைந்த மரபுவழி உரிமையினின்றும் விலகிச் செல்லுவ தற்கும் ஓர் உரிமையை இப்புரட்சிக் காலத்தில் பாராளுமன்றம் எடுத்துக்கொண்டது; உறவின் முறைப்படியே கண்டிப்பாக மரபு வழி உரிமையை ஏற்படுத்துகிற இந்த மூத்தோர் வழி உரிமை என் னும் கொள்கையானது இக்காலத்தில்தான் ஆங்கிலச் சட்டத்தில் நிறுவப்பட்டது; எனவே, இத்தகைய கொள்கையினின்றும் விலகி, இளையோர் வழியிலுள்ளவராகிய லங்காஸ்டிரிய குடும்பத்தவரை அரியணையில் ஏற்றும் உரிமையைப் பாராளுமன்றம் எடுத்துக் கொண்டது.

நான்காம் ஹென்றியானவர் மூன்றும் எட்வர்டின் மூன்றும் மகனான லங்காஸ்டர் பெருமகன் கான்ட்டின் மகனுவர் (John of Gaunt, Duke of Lancaster). இவர் அரியணை ஏற்றுக்கொள் ளும் நிகழ்ச்சிக்கு, இவ்வழியில் தலைமூப்பான குடும்பத்தின் வகை யாளாக மார்ச்சின் பெருமகனான எட்மண்ட் மார்ட்டிமர் என்பவர் (Edmund Mortimer, Earl of March) வந்திருந்தார்; இவர் மூன் றும் எட்வர்டின் இரண்டாவது மகனுடைய மகள்வயிற்றுப்பேரன். இவர் இந்நிகழ்ச்சியின்போது எட்டு வயதுக் குழந்தையாக இருந்தார். மார்ச்சின் பெருமகனுக்கு இந்தப்பட்டத்தின் வழியே

அரியணைக்குள்ள உரிமையானது, ஐந்தாவது ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் இப்பெருமகனுடைய உடன்பிறந்தாள் ஒருத்தியின் மூலமாக யார்க் குடும்பத்தினருக்கு வந்தது. ஹென்றியை அரசராக ஆக்குவதன்மூலம், தாங்கள் அக்காலத்தில் ஆங்கிலச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நேர்வழி மரபுரிமை அல்லது தாயமுறைக் கொள்கைகளைத் (Principles of Direct Line of Succession) தாங்கள் புறக்கணித்துச் செல்கிறோம் என்பதை அக்காலத்தவர் நன்கு உணர்ந்திருந்தனர்; இதைக் காட்டும் சான்றுகள் நிறைய உள்ளன. ஆயினும் இவ்வாறு செய்வதன் மூலம் தாங்கள் பாராளுமன்றத்தினுடைய அதிகாரங்களை விரிவுபடுத்தியும், புதிய முறைகளைப் பொருந்தச்செய்தும் கையாளுகிறோம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் என்பதற்குக் குறைவாகவே சான்றுகள் கிடைக்கின்றன. உண்மையில் அவர்கள் லங்காஸ்டிரிய குடும்பத்தினருக்கு அரியணையைப் பாராளுமன்றத்தின் உரிமையினாலேயே வழங்கியவராயினர்; இத்தகைய உரிமை என்பதாக ஒன்று பிற்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது; பாராளுமன்றத்தின் பட்டம் (Parliamentary Title) நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மற்றெல்லாப் பட்டங்களையும்விட மிகச் சிறந்த பட்டமாக மதிக்கப்பட்டது.

பழங்காலத்திய சாக்சன் நாட்டு மன்றத்தின் செயல்களைப் பற்றி அறிந்தவர்கள், அச்செயல்களைப்பற்றித் தாம் அறிந்ததிலிருந்து, குறிப்பிட்ட இக்காலத்தில் பாராளுமன்றம் செய்த மேற்கூறிய செயல் சரியே என்பதாகப் பழமையான காரணம் ஒன்றை அக்காலத்தில் எவரேனும் காட்டினார்களா என்பது, அவ்வளவு முக்கியமான செய்தி அல்ல; பழைய சாக்சன் நாட்டு மன்றமானது அரச குடும்பத்தினர் ஒவ்வொருவருடைய அரியணை வழி உரிமையை ஒழுங்குபடுத்திற்று. பெருமன்றம் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு, ஆர்தரை விடுத்து ஜானுக்கு அரசுரிமையை அளித்தது. இது வெல்லாம் இங்கு கருதப்படவேண்டுவதில்லை. முற்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் நேரடியாக வரலாற்றுத் தொடர்பு கிடையாது; செயலில் தொடர்பில்லை; அரசியலமைப்புச் சட்டமும், முற்காலத்திலிருந்து பிற்காலத்திற்கு வழி வழி உரிமையாக வந்ததில்லை. உருவாகிக்கொண்டிருந்த அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவே, 1399-ஆம் ஆண்டின் செயலானது புதியதாகவும், ஆக்க வேலைக்குகந்ததாகவும் இருந்தது.

தருக்க முறையாகப் பார்த்தால் பாராளுமன்றம் கையாண்ட இந்த உரிமையானது, ஆட்சி நீக்கும் பழைய உரிமையிலேயே பொதிந்து காணப்படுகின்றது; ஆனால் இவ்வுரிமை புதியமுறையில்

கையாளப்பட்டது ; இதனுல் இதனை அடுத்துள்ள நூற்ருண்டுகளில் இவ்வுரிமையில் பொதுமக்கள் ஈடுபாடுடையவரா யிருந்தனர் ; இப்புதியவுரிமையே, இது எதிலிருந்து தோன்றியதோ அந்தப் பெரிய உரிமையைவிடப் பாராளு மன்றத்துக்குப் பயன்படுவ தாயிற்று. இவ்வுரிமையினுலேயே 1460-ம் ஆண்டில், எதிர் காலத்தைத் தெளிவாக முன்னுல் உணர்த்தும்வகையில், பொருள் பட பாராளுமன்றத்தின் அதிகாரமானது வெளிப்பட்டது. எவ்வா றெனில் : அவ் வாண்டில் யார்க் பெருமகன் (Duke of York) லாங்காஸ்டிரியக் கட்சியினரைப் போர்க்களத்தில் வென்றதும், யார்க்குக் கட்சியினர் நிறைந்த பாராளுமன்றத்தினிடம், தாம் மூத்தவர் வழியில் வந்தவராகையால், மற்றெவரையும் விடத் தமக்கே பட்டத்திற்கு மேலான உரிமை உண்டெனை ஒப்புக்கொள் ளும்படி கேட்டார் ; இதற்குப் பெருமக்கள் மன்றமானது, ஒப்புக் கொள்ளமறுத்து, அதற்குப் பலகாரணங்களில் ஒன்ருகப் "பாராளு மன்றத்தின் சட்டம் மூலமாக லங்காஸ்டிரிய குடும்பத்துக்கு முடி அல்லது ஆட்சியுரிமை அளிக்கப்பட்டதானது, வேறெந்தச் சட்ட உரிமையையும் விடச் சிறந்த ஓர் உரிமையை அளித்ததாகும்," எனக் கூறியது.

பதினைந்தாம் நூற்ருண்டானது, பதினுன்காம் நூற்ருண்டிற்கு நேர்மாருனது ; இம் முரண்பாடு பாராளுமன்றத்தின் அதிகாரம் கையாளப்பட்டவகையில் காணப்படவில்லை ; பாராளுமன்றத்தின் அதிகாரம் கூடுதலாகியதில்தான் இம்முரண்பாடு காணப்படுகிறது. இடைக் காலத்தவருக்கு அரசியலில் எவ்வளவு எதிர்கால உணர்வு உண்டோ அவ்வளவுக்குக் கூடியவகையில், ஆக்கவழியில் பெரும் முன்னேற்றங்கள் உண்டாக்கப்பட்டுவிட்டன. பதினைந்தாம் நூற் ருண்டின் தலைவர்கள் வழிகாட்டியாகக் கொள்ளத்தக்க வகையில், கடந்த காலத்தில் அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சியில் செய லறிவு (experience) ஒன்றும் கிடையாது. நிறுவன முறையில் எல்லாப் பகுதிகளிலும் நிறைவு பெற்றதும், முழுவதும் சீர்திருத் தப்பட்டதுமான வரையறுக்கப்பட்ட முடியாட்சியைப்பற்றி அவர் களுக்கு யாதொரு கருத்தும் இருந்திருக்க முடியாது. இத்தகைய வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையையே கடைசி விளைவாக அடைவதற்காகத் தாம் முயற்சிசெய்ய வேண்டுமென்று ஒரு கருத் தும், இத்தகைய வரம்புக்குட்பட்ட முடியாட்சியைத்தாம் எத் தகைய இடர்களினின்றும் காக்கவேண்டுமோ, அத்தகைய இடர் களைப்பற்றி ஏதேனும் ஒரு தெளிவான கருத்தும் அவர்களுக்கு இருந்திருக்க முடியாது. மக்களாலமைந்த அரசாங்கம் என்ற இந்த வரலாற்றிலேயே ஒரு புதிய வேலையை அல்லது சோதனையை அவர்கள்செய்த பல்வேறு நிலைகளில்கூட, அந்தக்காலத்திற்கு உகந்

தது எதுவோ அதுதான் அவர்களுடையசெயலைத் தீர்மானிப்பதாக இருந்தது; இதுவன்றித் தாம் அடையவேண்டிய குறிக்கோளைப்பற்றிய கொள்கை நிலை (theoretical conception) எதுவும் அவர்களுடைய செயலைத் தீர்மானிக்கவில்லை; தமது காலம் வரையிலும் நாடு ஆட்சியில் அடைந்துள்ள நல்ல விளைவுகளைப்பற்றிப் பதினைந்தாம் நூற்றாண்டினர் மனநிறைவுடையவராகவே காணப்பட்டனர்; எனவே, மேலும் முன்னேறுதற்கு உடனடியான தேவை இருப்பதாக அவர்கள் எண்ணவில்லை. இதற்கு இவ்வரசாங்கமுறையானது செயலறிவைப் (Experience) பொறுத்தவரையில் புதியதான ஒன்று ஆகும்; இதனால் வெகு விரைவான முன்னேற்றம் ஏற்பட்ட பதினைன்காம் நூற்றாண்டை அடுத்துவந்த மூன்று தலைமுறைகளும் பொதுவாக இடைக்காலத்திய தலைமுறைகளைப் போலவே அமைதியும், நிலைபெற்ற தன்மையும் உடையனவாக இருந்தன. பாராளுமன்றத்தின் மேலான அதிகாரம், பாராளுமன்றத்தின் செயல்மூலமாகவே பல்வேறு வகைப்பட்ட செயல்களையும் செய்தல், அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கம் என்பதை இயக்குதல் ஆகிய இவையெல்லாம் நாளாவட்டத்தில் பெரும்பாலும் வழக்கமான செயல்களாக ஆயின. பாராளுமன்றத்தின் மேலாண்மை முறை அல்லது அதிகார முறை என்ற இந்தப் பழக்கமே (Habit of Parliamentary authority), முன்பு கூறப்பட்டபடி, அடுத்த நூற்றாண்டில் மேலெழுந்தவாரியாகக் காணப்பட்ட பிற்போக்கிற்கு அடிப்படையாக உள்ள 'அரசியலமைப்பு உரிமை'யினுடைய (Constitutional right) உறுதியான ஆதாரமாக அமைந்தது.

எனவே பாராளுமன்றம் 1399-ஆம் ஆண்டிலிருந்து 1460-ஆம் ஆண்டு வரை வழக்கமாக நடத்தும் ஒரு செயலாக அரசாங்கத்தை நடத்தி வந்தபோது, மிகப் பெரிய அலுவல்களிலல்லாமல், சிறிய அலுவல்களிலே தனது நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்ள அது முயன்றது. அது பாராளுமன்றத்தின் சலுகைகளெனக் கூறப்படுபவற்றை நிறுவுவதில் சுறுசுறுப்பாக இருந்தது; அவையாவன: மன்றத்தில் சொற்போரிடும் உரிமை (freedom of debate); இவ்வுரிமை ஒரு சிறிய அலுவலாகக் கொள்ளப்படமாட்டாது; மன்ற உறுப்பினர் சிறைப்படுதலினின்றும் விடுபட்டிருக்கும் உரிமை (Freedom of membres from arrest); மேல் மன்றத்திலின்றும் வேறாகப் பொதுமக்கள் மன்றத்திற்கே வரிவிதிப்புச் சட்டத்தைக் கொண்டுவரும் உரிமை; உறுப்பினர்களுடைய தகுதிகளைத் தீர்மானிப்பதற்குப் பொதுமக்கள் மன்றத்தின் உரிமை, மதிப்புக்கேடாக நடந்துகொள்ளும் உறுப்பினர்களையும், வெளி

யோரையும் ஒழுங்குக்குட்படுத்தவும், தண்டிக்கவும் பொதுமக்கள் மன்றத்துக்கு உள்ள உரிமை; கோட்டங்களில் வாக்கு அளிக்கும் உரிமையை ஒழுங்குபடுத்துதல்; செலவுகள் வகுக்கும் பழக்கத்தை விரிவாகக் கையாளுதல், சட்டமியற்றும் செயல்முறையைச் சீர் திருத்துதல் என்பனவாம்.

சொற்போரிடும் உரிமையைப்பற்றி எழுந்த கேள்வி ரிச்சர்டு அரசரது மனம்போன ஆட்சியினால் எழுந்து, மக்களுக்கு வழி உரிமையாக வந்ததொன்று; பாராளு மன்றம் ஆணவமான அரசாங்கத்தில் ஆட்சிக்கு ஏதேனும் தடைவிதிப்பதென்ற உரிமையைக் கையாள வேண்டுமாயின், அது அரசர் தம் மனம்போலத் தலையிடுதலினின்றும் ஆட்சியைக் காத்தல்வேண்டு மென்பதை ஹாக்சியின் வழக்கு (The Case of Haxey) தெளிவாக ஏற்கெனவே காட்டியிருந்தது. 'அரசருக்கெதிரான குற்றம் செய்ததாகக் காட்டப்படும் வழக்கில், அரசர் வசத்தில் பெருங்கேட்டை விளைவிக்கத்தக்க ஒரு கருவி இருக்கிறது' என்பதையும் இவ்வழக்கு காட்டிவிட்டது 'அரசரது தன்முனைப்பான போக்கைப் பாராளுமன்றம் மூலமாகத் தடுத்தல்' என்ற உரிமை, பாராளு மன்றத்தின் அதிகாரத்துக்கெல்லாம் அடிப்படையானதாக இருப்பதாகும்; அரசியலமைப்பைத் தகர்த்தெறிவதற்காக நிருவாகத் துறையானது (Executive) முதலில் முயன்றபோது, அது முதன் முதலில் தாக்கியது இந்த உரிமையையே; இது இயல்பாக நடக்கக்கூடியதுதான்; "இவ்வுரிமை இல்லாவிடில் மற்றெல்லா உரிமைகளுக்கும் மதிப்பு இல்லை" என்ற அளவில் இருக்கும் இந்த உரிமையானது பாராளு மன்றத்தின் ஒரு சலுகை என்பதாக மேற்கூறிய வழக்கைப்போன்ற ஒரு நெருக்கடியில் ஒரு கேள்வியாக எழுப்பப்பட்டது; அதுவரையில், அதன் தன்மையை மக்கள் முழுவதும் தெளிவாக உணராதிருந்தார்கள் என்பதும் இயல்பே. சிறைப்படுத்தப்பட்ட ஹாக்சி ரிச்சர்டின் வீழ்ச்சிக்கு முன்னதாகவே சிறையினின்றும் விடுவிக்கப்பட்டார். ஏனெனில் அவர் சமயக்குருமார்சங்கத்திலிருப்பவர்; ஆயினும் அவர் நான்காம் ஹென்றியின் ஆட்சியின் முதலாம் ஆண்டில் தமக்கு எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்பை மாற்றவேண்டுமென்பதாக ஒரு விண்ணப்பம் செய்தார்; பெருமக்கள் மன்றம் அவர் வேண்டியவாறே செய்தது; அதே ஆண்டில் இத்தகைய தீர்ப்புக்கெதிராகப் பொதுமக்கள் மன்றமும் விண்ணப்பம் செய்யவே, இது பாராளு மன்றம் முழுவதுமே செய்த செயலுக் கொப்பானதாக, மீண்டுமொருமுறை மேற்கூறிய தீர்ப்பு மாற்றப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டில், பொதுமக்கள் மன்றத்தின் தலைவர், (Speaker of the House of Commons) அரசரிடத்தில், எப்பொருளைப்பற்றிப் பொது மக்கள் மன்றம்கூடி ஆய்தல் செய்கிறதோ, அப்பொருளை

அது ஆய்தல்செய்து முடிவுகட்டு முன்னரே, அப்பொருளைப்பற்றித் தங்களுடைய கருத்துக்களைச்சில மன்ற உறுப்பினர்கள் அவரிடத்து (அரசரிடத்து) அறிக்கையிட்டு விடும் வழக்கமுடையவரா யிருக்கின்றனரென்றும், அதனால் அரசர் மன்றஉறுப்பினர் சிலர் மீதோ அல்லது பலர் மீதோ சீற்றங்கொள்ள வழி ஏற்படுகிறதென்றும் எடுத்துரைத்தார்; மேலும் இத்தகைய அறிக்கைகளை அரசர் கவனிக்கவேண்டுவதில்லை எனவும் கேட்டுக் கொண்டார்; இவ்வாறே தாம் கவனிப்பதில்லை என அரசரும்இணங்கி வாக்குறுதிஅளித்தார். "பெருமக்கள், இந்தப் பாராளு மன்றத்திலாயினும், இதையடுத்து வரும் காலத்திலும், அரசரில்லாதபோது, தாமே கூடுதலும், நாட்டின் குறைகளை ஆய்தல் செய்தலும், அக்குறைகளைப் போக்கும் சீர்திருத்தங்களைக் கூறுதலும் சட்டத்திற்குப் பொறுத்தமானவையே. இதே வகையில், பொதுமக்களும் தங்களைப் பொறுத்த வரையில் ஒன்று கூடுதலும், நாட்டின் நிலைகளை ஆய்ந்து, சீர்திருத்தங்களைக் கூறுதலும் சட்டத்திற்குப் பொருத்தமானவையே" என்பதாக 1407-ல் முறையாக ஒரு அறிக்கையானது அரசரால் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையே சொற்போரில் கூறப்பட்டது என்ன என்பதைப்பற்றி அரசர் ஒன்றும் அறியார்' என்ற சொற்போரிடும் சலுகைக்குக் கொள்கை விதியை அடிப்படையாக நிறுவியது. இவ்விதியின் அரசியலமைப்பு வடிவமாக இவ்வறிக்கை 1512-ஆம் ஆண்டில் ஸ்ட்ரோடின் (Strode) வழக்கு தோன்றும் வரை இருந்தது, கார்ன்வாலிலுள்ள தகரச் சுரங்கத் தொழிலாளரைப்பற்றிச் சில சட்டங்களைப் பாராளு மன்றத்தில் ஸ்டிரோட் (Strode) என்பவர் கொண்டுவந்தார்; இதனால் அவர் வழக்கிற்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். இதன்மேல் பாராளுமன்றமானது அவருக்களிக்கப்பட்ட தண்டனை செல்லுபடியாகாதெனக் கூறும் சட்டம் ஒன்றைச்செய்து, அச்சட்டத்தின் மூலமாகவே வருங்காலத்தில் பொதுமக்கள் மன்ற உறுப்பினருக்கெதிராக இத்தகைய நடவடிக்கைஎல்லாம் எடுக்கப்படுதல் கூடாதெனத் தடைசெய்தது. வெளியதிகாரிகளின் தலையிடுதலினின்றும் விடுதலை என்பதே இதற்குப் பொருளன்றி, இது சொற்போரிடும் உரிமையைக்காட்டும்கொள்கையாகாது; ஆனால் சொற்போரிடும் உரிமை என்பது அரசரால் ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், இவ்வுரிமை எப்பொழுதும் மதிக்கப்படும் என்பது உறுதியாக வில்லை; எவ்வாறெனில், ஓர் உறுதியான, தன் விருப்பப்படி நடக்கும் இயல்புள்ள அரசாங்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கருதும் மனப்போக்கு உள்ள காலங்களில், குறிப்பிட்ட இவ்வுரிமையானது ஏதாவது ஒரு (மிகவும் சுருங்கிய) வடிவில் வரையறுக்கப்பட்டே இருக்கும்.

குறிக்கப்பட்ட இக்காலத்தில் கிடைத்ததும், மிகவும் பழைய காலத்தில்தான் முக்கியமாக இருந்ததும், தற்காலத்தில் முக்கிய மல்லாததும் ஆகிய மற்றொருஉரிமை, பாராளுமன்றத்தின் அமர்வுக் காலத்திலும் (Session), அதற்குச் செல்லுகையிலும், அதனின்று மீளுகையிலும், பாராளுமன்ற உறுப்பினருக்குச் சிறைப்பிடிப்பி னின்றும் விடுபட்டிருக்கும் உரிமையேயாம். Privilege of Members of Parliament to Freedom arrest). இச் சலுகையானது பழைய சாக்சனிய மன்ற நாளிலேயே இருந்த ஒன்றாகும். மற்ற டியூட்டானியர் நிறுவிய மன்றங்களைப்போல, சாக்சன் மன்றமும் இவ்வுரிமையைப் பெற்றிருந்தது; ஆயினும் இவ்வுரிமையானது 1403-ல் நான்காம் ஹென்றியினால் முறையாக ஒப்புக்கொள்ளப் பட்டது. இது ஆறும் ஹென்றியின் ஆட்சியில் எழுதப்பட்ட சட்டம் ஒன்றினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, பெரிய அளவில் விரிவாகவும் செய்யப்பட்டது. உரிமை வழக்கில் முறைமன்றம் இடும் கட்டளைப் படி (Civil process) மன்ற உறுப்பினரைச் சிறைபிடிப்பதென்பது மிகுதியாக இருக்கும்போது, இவ்வுரிமையும் அது பற்றிய சட்டங் களும் பொதுமக்களுக்குப் பயன் உள்ளவையாக இருக்கும்; குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளில் (Criminal Charges) சிறைபிடித்த லுக்கு இவ்வுரிமை பொருந்துமாறு விரிவாக்கப்படவில்லை. அரசர் கட்டுப்பாட்டை மீறும் காலங்களில் இவ்வுரிமையானது மிகவும் தேவைப்படும்; அப்பொழுது அரசரிடமிருந்து காத்துக் கொள்ளு தற்கு இவ்வுரிமை பயன்படுமென்பது கடினமே.

பதினான்காம் நூற்றாண்டில் பழைய காலத்திலிருந்த, ஒவ் வொரு வகுப்பாரும் தனித்தனியே தன்வகையாட்களின் மூலம் கூடி அந்தந்த வகுப்பாருக்குத் தனியே வரிவிதிப்பது என்ற வரி விதிப்பு முறையானது, சமய நிலையத்தவர் நீங்கலாக, மற்றவரால் கைவிடப்பட்டது; மேலும் வரிப்பொருள் உதவி அளிப்பதென்ப தும், ஒரு பாராளுமன்றச் சட்டத்தின் தன்மையை ஒட்டி அமைந்து வரலாயிற்று. நாம் அறிகிற வரையில், இத்தகைய மாறுதலானது 1395-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட வரிப்பொருள் உதவியின் அமைப்பில் வெளிப்படையாகக் காணப்பட்டது. அவ்வாண்டி லுள்ள பொருள் உதவி அளிப்பானது, பொது மக்கள் மன்றத்தின ரால், பெருமக்களுடைய ஆலோசனையின்மீதும் உடன்பாட்டின் மீதும் அளிக்கப்பட்ட தென்பதாகக் கூறப்பட்டது; இத்தகைய சொற்களினமைப்பானது "வரிப்பொருளுதவி அளிக்கும் அலுவ லைத் தொடங்கிச்செய்வது பொதுமக்கள் மன்றமே" என்பதை வலி யுறுத்தும் நோக்கத்தோடு தான் இவ்வாறு ஆக்கப்பட்டதெனத் தெரிகிறது. முன்பே குறிப்பிட்டபடி நான்காம் ஹென்றியின் அறிக்கையிலும் 1407-ல் இவ்வகையான சொல்லமைப்பு கையா

ளப் பட்டது. "பொது மக்கள் மன்றத்தினரால் அளிக்கப்பட்டுப் பெருமக்கள் மன்றத்தினரால் ஒப்புக்கொள்ளப்பட்ட வரிப்பொருளுதவியைப்பற்றிய அறிக்கை எதுவும், இதுவரை பழக்கத்திலுள்ள அமைப்பையும் முறையையும் ஒட்டியே, அதாவது பொதுமக்கள் மன்றத்தலைவரது வாய்மொழி மூலமாக அரசருக்குத் தெரிவிக்கப் படுதல்கூடாது" என்ற இக்கட்டுப்பாட்டை அரசர் ஒப்புக்கொண்டார். கொடுக்கப்பட்ட இக்குறிப்புக்கள் அரசியலமைப்பு உரிமை எதுவும் சட்டவடிவத்தில் வகுக்கப்பட்டமையைக் காட்டவில்லை. இவை ஒரு வழக்கம் எழுந்தமையைத்தான் காட்டுகின்றன. பொது மக்கள் மன்றத்தினுடைய உரிமையானது பதினேழாம் நூற்றுண்டு வரையில் ஒரு வழக்கத்திற்குட்பட்ட உரிமையாகவே இருந்தது; ஆயினும் பழம்பெரு மன்றமாகிய மூத்தோர் அவையானது அவ்வப்போது கூடுதற்கு அழைக்கப்படும்வரை, இரண்டாவது வகுப்பாகிய பெருமக்கள் மட்டுமே தனியாகக் கொடுக்கக்கூடிய வரிப்பொருளை அவர்கள் அளிக்கும் உரிமை இருந்துவந்தது. இத்தகைய முன்நிகழ்வுகளின் பொருளையும் கட்டுப்படுத்தும் திறத்தையும்-மிகைப்படுத்திக்கூறுதல் எளிது; பதினேழாம் நூற்றுண்டினர், ஸ்டுவர்ட் அரசர்களோடு போராட்டம் நடத்தும்போது, அவர்கள் இவற்றை மிகைப்படுத்தியே கூறினர். இந்த முன்நிகழ்வுகள், ஒரு போக்கைத் தோற்றுவித்தன என்ற முறையில், அவைகளின் மீது பிற்காலத்திலெழுந்த முடிவுக்குச் சட்டவடிவில் ஓர் அடிப்படையை அமைத்தனவாயின; இந்த முடிவும் ஒரு வரலாற்று உண்மையன்று; அது இந்த முன்நிகழ்வினின்றும் முறையாக வந்த ஒன்று ஆகும் எனினும் இந்த முன்நிகழ்வுகளைப் பொதுமக்கள் மன்றத்தினரால் கேட்கப்பட்ட உரிமைகளாகக் கருதுவோமாயின், அவை பொது மக்கள் மன்றத்திற்கு பதினன்காம் நூற்றுண்டில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்த அதனுடைய அதிகார உணர்வையும் நிலைமை உணர்வையும் காட்டுகின்றன.

கோட்டங்களின் வகையாட்களைப் பொறுத்தவரையில் மட்டுமே பாராளுமன்றம் முதன் முதலாகப் பொது மக்கள் மன்ற உறுப்பினருக்குரிய தகுதிகளை வரையறை செய்தது. நகரவாசிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றியோ உறுப்பினராவதற்கு அவர்களுடைய தகுதி பற்றியோ, யாதொன்றும் இடைக் காலத்தில் வரையறுக்கப்படவில்லை. ஆயினும் கோட்டங்களிலிருந்து வரும் உறுப்பினர், "கோட்டத்தின் படைமானிய வீரர்" (Knights of the Shire) என்பவராகவே இருந்தனர். பாராளுமன்றம் தோன்றிய காலத்திலும், பொதுமக்கள் மன்றத்தின் உறுப்பினர் நிலை என்பது கவர்ச்சியுள்ளதாக வராத காலத்திலும்,

படைமானிய முறையினுடைய தர வேறுபாடுகள் மறையலா யின; அப்பொழுது உறுப்பினர் தகுதிகளைப் பாராளுமன்றம் வரையறுத்துக் கட்டுப்பாடு செய்து அது பற்றிச் சில முன் நிகழ்வு களை ஏற்படுத்திற்று; இந்த முன் நிகழ்வுகளின் நோக்கம் பொதுக் குடி ஆளினின்றும் (common freeman) வேருகக் கோட்டங் களின் வகையாட்களுக்கு ஒரு தனி மதிப்பான தரத்தை உண்டாக் குவதே. இதனை ஏற்படுத்துவது அரசருக்குப் பதினைன்காவது நூற் ருண்டில் கடினமாக இருந்தது; 1445-ல் இதனை ஒரு பாராளு மன்றச் சட்டத்தின் மூலம் உண்டாக்குவதற்கு முயற்சி செய்யப் பட்டது; இச்சட்டமானது தேர்ந்தெடுக்கப்பட்டவர் உயர்குடிப் பிறந்தவராயிருத்தல் வேண்டுமெனக் கூறிற்று இச்சட்டம் உடனடியாக எப்பயனையும் உண்டாக்கவில்லை; ஆயினும் பாராளு மன்றத்தின் அதிகாரம் கூடுதலாகி வரவும், உறுப்பினர் நிலையும் கவர்ச்சியுள்ளதாக அமைய, அதனுல் பாராளுமன்றம் விரும்பிய, மேற்சொன்ன பயன் கிட்டிற்று. எந்த உள்நாட்டுத் தொகுதி களின் வகையாட்களாக உறுப்பினர்கள் இருக்கிருர்களோ, அத் தொகுதிகளில்தான் அவர்கள் தங்கி வாழவேண்டுமென்பதாக் 1413 – ல் செய்யப்பட்ட ஒரு சட்டம் கூறிற்று; இது 1430 - லும் 1445 – லும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது; ஆயினும் இச் சட்டம் ஒருவேளை உறுப்பினர்களுடைய தகுதிகளை வரையறுப்ப தற்காகச் செய்யப்படாமல், தங்களுக்கு வேண்டியவர்களை உறுப் பினராகப் பெருவாரியாக அனுப்புதலினின்றும் தேர்தல் அலுவ லாளராக இருந்த கொத்தவால்களைத் தடுப்பதற்காகவே செய் யப்பட்டதாகவும் இருத்தல் கூடும்.

கோட்டங்களில் வாக்களர்களாக இருப்பது யாவர் என் பதைத் தீர்மானிக்கும் முதல் சட்டமும் இக்காலத்திற்கே உரியது. இது பற்றிய முதற் சட்டம் 1430-ல் செய்யப்பட்டது; அச்சட் டத்தோடு சில புதிய பகுதிகள் 1432-ல் சேர்க்கப்பட்டன. இச் சட்டமே 1832-ம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டம் செய்யப்படும் வரையிலும் நானூறு ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருந்து வந்தது; இதன்படி கோட்ட உறுப்பினர் தேர்தலில் வாக்களிக் கும் உரிமையானது, பலரும் அறிந்துள்ளபடி, ஆண்டொன்றுக்கு நாற்பது ஷில்லிங்கு வருமானத்தை அளிக்கின்ற, அரசருக்குமட் டுமே வரி செலுத்தப்படுகின்ற, நிலத்தையுடைய வகுப்பாருக்கே (forty shilling free holder class) உண்டு எனச் சுருங்கியதாக வரையறை செய்யப்பட்டது; அதாவது, இத்தேர்தலில் வாக் காளராயிருப்பவர், “ எல்லாச் செலவுகளும் போக ஆண்டொன் றுக்கு நாற்பது ஷில்லிங் மதிப்புடைய வருமானத்தைத்தருகின்ற

நிலத்தை (Free Land) உடையவராயிருத்தல் வேண்டும்" என்பதாகும். இச்சட்டமானது வாக்காளர் உரிமையைத் தரமறுக்கும் சட்டமென்பதாக அழைக்கப்பட்டது; ஆயினும் இது செய்யப்படும் காரணத்தைக் கூறும் முன்னுரையில் (preamble), "தேர்தல்களின்போது கட்டுக்கடங்காத பல மக்கள் கூடிக் கலகமும், அமைதியின்மையையும் உண்டாக்குதலால் இச்சட்டம் செய்யப்படுகிறது" எனக் காணப்படுவதால், இது செய்யப்பட்டகாரணம் தெளிவாகத் தெரிகிறது; இக்காரணத்தை எவரும் மறுக்கமுடியாது. ஆயினும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களின் தன்மையைப் பொறுத்தவரை இது யாதொரும் மாறுதலும் செய்யவில்லை எனத் தெரிகிறது; எனவே 1445-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சட்டம் இன்றியமையாததெனக் கருதப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் பாராளுமன்றமானது பேரூர்களின் (Boroughs) வாக்காளர் உரிமையை ஒழுங்குபடுத்தியதில்லை; இதனால் ஒவ்வொரு பேரூரும் இவ்வுரிமையைத் தானே தனது உள்ளூர்த்தேர்தல் வழக்கங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்திக் கொள்ளும்படி விடப்பட்டது.

அரசாங்கச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதிலும், கொடுக்கப்பட்ட பணத்தைக் குறிப்பிட்ட செலவுகளுக்கு ஒதுக்குதலிலும், பாராளுமன்றமானது முந்திய நூற்றாண்டின் முன் நிகழ்வுகளை விரிவாகக் கையாண்டது; அரசியலமைப்பின் வளர்ச்சி நிலையாகத் தொடர்ந்து, லங்காஸ்டிரியர் ஆட்சிக் காலத்தை ஒட்டி நடைபெற்றிருக்குமானால், தற்காலத்திலுள்ள செயல் முறைகளெல்லாம் அப்பொழுதே மிகச் சுருக்கமான காலத்திலேயே நிறுவப்பட்டிருத்தல் கூடும். அரசருக்கு அளிக்கப் பட்ட பொதுவான வரிப்பொருள் உதவியெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்காக எனவும், இப்பொழுதிலிருந்து அரசரது வாழ்நாள் முழுதற்கும் அளிக்கப்பட்ட பவுண்டுக்கட்டணமும் (poundage), டன் எடை வரி (Tunnage)யும் கடற்படைச் செலவுக்காக எனவும், கம்பளியின் மீது வாங்கப்படும் சுங்கத்திர்வையில் ஒரு பகுதி கலேபட்டணத்தைக் (calais) காப்பாற்றி வருவதற்காக எனவும், அரசரது நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படிகள் அவரது மனைச் செலவுக்காக எனவும் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுத் திட்டஞ் செய்யப்பட்டன. இவ்வாறு தொடங்கப்பட்ட செயல்முறை நல்ல நிலையை நோக்கியே இருந்தது; எவ்வாறெனில், ஒவ்வொரு நாளும் அரசாங்கத்தை நடத்துகையில், பொருளுதவிகளைத் (Supplies) தரமறுக்கும் அதிகாரத்தைவிடச் செலவுகளை வரையறை செய்வதில்தான் நிருவாகத்தைத் (Executive) தாங்கள் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய மிகவும் பயனுள்ள ஒரு கருவி இருப்பதைத் தற்காலத்திய பாராளு

மன்றங்கள் கண்டுகொண்டன; ஆயினும் வலிமிக்க முடியரசை நோக்கி ஓர் எழுச்சி லங்காஸ்டிரியரது காலத்தையடுத்த காலத்தில் தோன்றவும் இந்த நற்பயனைப் பாராளுமன்றம் இழந்து விட்டது; அது பதினேழாம் நூற்றுண்டில் பாராளுமன்றத்தினுல் தான் மீண்டும் பெறப்பட்டது; அல்லது இன்னும் சரியாகச் சொன்னுல், புதிய ஒரு நற்பயனுக அடையப்பட்டது.

சட்டம் இயற்றும் செய்முறையை சீராக்குவதில் ஏற்பட்ட முக்கியமான மாறுதல்என்னவெனில், பாராளுமன்றத்தின் விண்ணப்பத்தை ஒட்டிச் செய்யப்படும் சட்டமானது, அவர்கள் வேண்டியவாறு அல்லாமல் வேறுபட்ட ஒரு சட்டமாக ஆகிவிடும் இடரைப் பாராளுமன்றம் கடைசியில் நீக்கியதேயாகும். 1414-ஆம் ஆண்டில், "பாராளுமன்றத்தால் கொடுக்கப்படும் விண்ணப்பங்களில் குறிக்கப்பட்டிருப்பனவற்றுக்கும் மேலாக வேறு ஒன்றும் விண்ணப்பங்களில் சேர்க்கப்படுதல் கூடாது" என்பதாகத் திட்டவட்டமான வாக்குறுதி ஒன்று அரசர் ஐந்தாம் ஹென்றியிடமிருந்து வாங்கப்பட்டது. இதில் கொடுக்கப்படும் விண்ணப்பங்களையும், விண்ணப்பங்களின் பகுதிகளையும் மறுப்பதற்கு அரசர் தமக்கு ஓர் உரிமையை வைத்துக்கொண்டார். இதே வகையில் ஆரும் ஹென்றியின் ஆட்சியில், இன்னும் முடிவான ஒரு சிறு முன்னேற்றம் உண்டாயிற்று; விண்ணப்பங்களுக்கு ஈடாக மசோதாக்களைக் (பில்ஸ்-Bills) கொண்டுவருதலே அந்த முன்னேற்றம் ஆகும் (Substitution of bills for petitions) பாராளுமன்றம் விரும்புகிற ஒரு சட்டம் எந்த வடிவத்தில் செய்யப்படுதல் வேண்டுமோ அவ்வடிவத்திலேயே மசோதா அமைக்கப்பட்டிருந்தது; இதனுல் சட்டம் செய்யப்படுகையில் அதில் மாற்றங்களை உண்டாக்குதற்குரிய வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது. இத்தகைய வடிவத்தில் சட்டம் இயற்றும் முறையானது, அரசரே மசோதாக்களைக் கொண்டு வரும்போது, அவரது வசதிக்காகவே முதன்முதலில் கையாளப் பட்டாலும்கூட, இம்முறையைப் பயன்படுத்திக் கொள்ளத் தனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டபோது, அதைப் பொதுமக்கள் மன்றம் பயன்படுத்தத் தயங்கவில்லை. தான் அப்பொழுது செயலில் இவ்வாறு செய்யாவிட்டாலும், இம் முறையிலேயே அரசருக்கொத்த நிலையில் தானும் சட்டம் இயற்றக்கூடிய நிலையில் பொது மக்கள் மன்றம் தன்னை ஆக்கிக்கொண்டது. எனினும் விண்ணப்ப முறையில் சட்டமியற்றுவதை நினைவூட்டுவனவாக அதனுடைய சில சின்னங்கள், சில பாராளுமன்றச் சட்டங்களின் அமைப்புக்களில் நெடுங்காலம்வரை நீடித்து இருந்தன; இச் சின்னங்கள் இப்பொழுதும் பொருள்பற்றிய சட்டத்திலும் காணப்படுகின்றன. எலிசபெத்தின் ஆட்சியிலுள்ள சட்டம் ஒன்று பின்வருமாறு

தொடங்குகிறது: "மிகவும் மாட்சிமை தங்கிய அரசியர்கிய உங்களுடைய நம்பிக்கைக்குரிய, பணிவுள்ள குடிமக்கள் இப்பொழுதைய பாராளுமன்றத்தில் கூடி, அரசியாகிய உங்களுடைய உதவியினாலும், இசைவினாலும் இச்சட்டம் செய்யப்படுதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். தற்காலத்திய பண மசோதாவின் முன்னுரையில் (Money Bill) காணப்படுவதாவது: "மாட்சிமை தங்கிய அரசராகிய உங்களுடைய கடமையுணர்வும், பற்றுறுதியும் மிக்க, ஐக்கிய அரசின் பொது மக்கள், வரிப்பொருளுதவியைக் கொடுப்பதென்று தாமாகவே முடிவுசெய்துள்ளனர். .... எனவே அவர்கள் இச்சட்டம் செய்யப்படுமாறு மாட்சி மிக்க அரசராகிய தங்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகின்றார்." ஆயினும் இத்தகைய சட்டவடிவங்களெல்லாம் நெடுங்காலமாகத் தங்களுக்கு நடைமுறையில் உள்ள பொருளை இழந்து விட்டன.

ஒரு குறிப்பிட்ட இனத்தில் பதினான்காம் நூற்றாண்டினர் செய்தவேலையில் இப்பொழுது மிகுதியாக ஒருமாற்றம் செய்யப்பட்டது. இம்மாற்றமானது இது செய்யப்பட்ட காலத்தின் தன்மையைக் காட்டுவதோடு அம்மாற்றம் உண்டாக்கப்பட்ட வேலைக்கு அக்காலத்திலிருந்த வேறொரு காரணத்தையும் காட்டுகிறது. பெருங் குற்றச்சாட்டு முறையானது (Impeachment) இப்பொழுது வழக்கொழிந்து போய்விட்டது; அதனுடைய இடத்தில் உரிமை நீக்கும் மசோதா (பில்-ஆப் அட்டெயிண்டர்-(Bill of attainder) என்பது கையாளப்படலாயிற்று. "ஒரு குறிப்பிட்ட ஆள் ஒரு குறிப்பிட்ட குற்றத்தைச் செய்த பழிக்கு உரியவராவர்; எனவே அவருக்குக் குறிப்பிட்ட தனியான தண்டனை கொடுக்கப்படுதல்வேண்டும்" என்று உறுதியாக அறிவிப்பதே ஓர் உரிமை நீக்கும் மசோதா ஆகும். இந்த மசோதா மன்றத்தில் நிறைவேறினால் அது எழுதப்பட்ட சட்டமாக ஆகும்; எனவே எழுதப்பட்ட சட்டத்தின்படி குறிப்பிட்ட ஆள் குற்றவாளியாகிறார்; சட்டத்தின்படி அவர் தண்டிக்கவும் படுகிறார். பெருங் குற்றச்சாட்டு முறையைவிட உரிமை நீக்கமானது நேரடியான விரைவான செயல்முறையாக இருப்பதோடு பெருங் குற்றச்சாட்டிலுள்ள முறைவரது ஆய்வுவேலையின் தொல்லைகள் சிலவற்றை நீக்குகிறது; எனினும் குற்றம் சாட்டப்பட்டவர் தாம் குற்றவாளி அல்லரெனக் காப்பாகக் கூறும் கருத்தையும் சில சமயங்களில் பாராளுமன்றம் கேட்டது. அரசியலமைப்பின் வழியாக இம்மாற்றத்தை நாம் நோக்கினால், அது பெருங்குற்றச்சாட்டை விட மிகவும் முக்கியமான ஒரு மாற்றமாகும். பெருங்குற்றச்சாட்டு முறையின் ஒரு நோக்கம் என்னவெனில் அது அரசரைக்

கட்டாயப்படுத்துதலே ஆகும்; அம்முறை, அரசருக்கும், பாராளுமன்றத்துக்கும் மிகவும் கடுமையான போராட்டம் நிகழும்போது தான், பாராளுமன்றத்தால் கையாளப்பட வேண்டியதாக இருக்கும். உரிமை நீக்கமோ எனில், அது அரசரும் பாராளுமன்றமும் மாறுபாடில்லாத வகையில் ஒற்றுமையாயிருக்கும் நிலையையே காட்டுவதாகும்; ஏனெனில் இந்த மசோதாவில் கையெழுத்திட்டே ஆகவேண்டும்; பதினேழாம் நூற்றாண்டுவரையில் இவ்வுரிமை நீக்கமானது (attainder), அதனுடைய பயனைப் பொறுத்தவரையில், பாராளுமன்றம், அரசருடைய கட்டுப்பாட்டில் இருந்து, அவர் ஏவியவற்றைச் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறது என்ற ஒரு நிலையைப் பொதுவாகக் காட்டும் அறிகுறியாக இருந்தது. கொள்கையளவில் பார்க்கும்போது உரிமை நீக்கமானது பெருங் குற்றச்சாட்டின் நோக்கத்தையே நிறைவேற்றுகிற ஒன்று ஆகும்; அதாவது அது அரசரது அமைச்சரைப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் வைத்தது; ஆனால் நடைமுறையளவில் நாம் அதைக் காணும்போது, அது எப்பொழுதும் தவறாகக் கையாளப்பட்ட ஒன்றேயாகும்; அமைச்சரவையைக் கட்டுப்படுத்துதற்குத் தற்காலத்திய புதிய முறையைப் பாராளுமன்றம் கையாளத் தொடங்கியதும், உரிமை நீக்க முறையும் மறைந்துவிட்டது. அமெரிக்கக் கூட்டரசில் (United States) இவ்வுரிமை நீக்க முறையானது குடியேற்ற நாடுகளில் ஒரு பொருத்தமான செயல் முறையாகக் கருதப்பட்டாலும், அது அந்நாட்டு அரசியலமைப்பில் தடை செய்யப்பட்டது.

இந்த நூற்றாண்டில் பாராளுமன்றம் நிறுவியவற்றை நாம் ஒப்பு நோக்கினால், அவை உரிமைகளாக அல்லாமல் சலுகைகளாகவும், அளவில் சிறிய சலுகைகளாகவும் காணப்படுகின்றன; ஆயினும் அக்காலத்திய முன்னேற்ற நிலையில் அவை முக்கியமானவையாகவே கருதப்பட்டன. பதினான்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட பெரிய முன்னேற்றங்களைப் போலவே இந்தச் சலுகைகளெல்லாம் ஒரே சமயத்தில் ஏற்படுத்தப்பட்டவையல்ல. அவற்றுள், சொற்போரிடும் உரிமை போன்றவை யெல்லாம், நெடுங்காலத்துக்கு ஒப்புக்கொள்ளப்படாமல் பல தடைகளுக்குள்ளாகி இருந்தன. ஆயினும் இந்த உரிமைகளெல்லாவற்றிற்கும் லங்காஸ்டிரியர் காலத்தில் ஒரு நல்ல தொடக்க நிலை உண்டாக்கப்பட்டது. இவற்றோடு ஒப்புநோக்குகையில், பாராளுமன்றம் ஆலோசனைக் குழுவின்மீது ஏற்படுத்திய கட்டுப்பாட்டை வெளிக் காட்டும் சில தனிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல எனத் தெரிகிறது; ஏனெனில் மேலாகப் பார்க்கும்போது இக் கட்டுப்பாடு இக்காலத்திய நிகழ்ச்சிகளுள் முக்கியமானதாகத்

தோன்றினாலும், உண்மையில் அவை முக்கியமான அரசியலமைப் பின் முன் நிகழ்வுகளாக அமையவில்லை. ஆலோசனைக் குழு, அதாவது நிருவாகம், ஆட்சித்துறை ஆகிய இந்த இரண்டும் சட்ட மன்றத்துக்குத்தான் பொறுப்பாக இருக்கவேண்டு மென்பது பிற்காலத்தில்தான், டியூடர் காலத்திய பிற்போக்கின் (Reaction) விளைவுகளையெல்லாம் நீக்கிய பிறகுதான், மீண்டும் நிலைநிறுத்தப் பட வேண்டுவதாயிற்று; அப்பொழுதும் அவை பாராளுமன்றத் துக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்பது வேறொரு தொடக்க நிலையில் வேறொரு வகையான வழியில் நிலைநிறுத்தப் பட்டது. ஆயினும் ஆலோசனைக் குழுவின் இக்காலத்திய வரலாறு மிகவும் சுவையாக இருக்கிறது; எவ்வாறெனில் அதன்மீது பாராளுமன்றத்துக்கு உள்ள கட்டுப்பாட்டை அது காட்டுகிறது; பதின்மூன்றும் நூற்றாண்டில் பெருமக்களின் எதிர்க்கட்சி கண்டு பிடித்த சில முறைகள் தொடர்ச்சியாகக் கையாளப்பட்டுவந்ததை யும் அது காட்டுகிறது: பிற்காலத்தில் அதில் ஏற்படக்கூடிய வளர்ச்சியை அது முன்னராகக் காட்டுகிறது.

பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு மாறுதல்களுக்கும், அதிகா ரக் குறைப்புக்களுக்கும் உள்ளான ஆலோசனைக் குழுவினுடைய (Council) வரலாற்றை நாம் சரிவரத் தெரிந்துகொள்ளுதற்குக் கீழே கூறப்படும் உண்மைகளைத் தெளிவாக மனத்திற் கொள்ள வேண்டும்; அது படைமானியக் காலத்திலிருந்த சிறிய குழுவி லிருந்து நேராகத் தோன்றியதாகும்; அதைத் தோற்றுவித்த பழைய நிறுவனத்தின் அதிகாரங்களையும், அலுவல்களையும் யாதொரு மாறுதலுமின்றி அது செய்வதன்மூலம், தற்காலத்தி லும் அக்குழு தொடர்ச்சியாக இருந்துவரும்படி செய்கிறது; பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலுமாவது, அது பழைய சிறு குழுவின் தொடர்ச்சி இருக்கும்படி செய்கிறது; எனி னும் ஒரொருகாலத்திலும் அது வற்புறுத்தப்பட்டது; அதனுடைய செயல்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. முன்னரே விளக்கப்பட்டுள்ளபடி நார்மானியர் காலத்தின் முற்பகுதியில் பெரிய ஆலோசனைக் குழுவினுடைய (Great Council) கூட்டங்களுக்கு இடைப்பட்ட காலங்களில், சிறிய குழுவானது தான் செலுத்திய அதிகாரங்களைப் பொறுத்த வரையிலும், செய்த அலுவல்களைப் பொறுத்தவரையிலும், நடை முறையில் பெரிய ஆலோசனைக் குழுவை ஒத்தே இருந்தது. ஒரு சில வேலைகளை இச் சிறுகுழு செய்ததேயில்லை; எடுத்துக்காட்டாக, பெருமக்களால் கொடுக்கப்பட வேண்டிய கூடுதலான வரிப் பொருள் உதவியைச் சிறுகுழு அரசருக்கு அளிக்க முடியாது;

ஆயினும், பெரிய ஆலோசனைக் குழு கூடியிராத காலத்தில், அரசாங்கத்தினுடைய சாதாரண அலுவல்களைச் செய்வதற்கு வேண்டிய மேலான அதிகாரங்களைச் சட்டம் இயற்றுதலிலும், முறைமை வழங்குதலிலும், ஆலோசனை அளிப்பதிலும், ஆட்சி செய்வதிலும் இச்சிறு ஆலோசனைக்குழு பெற்றிருந்தது. மேலும் இச்சிறு குழுவே, அரசருடைய தனிச் சிறப்புரிமை அதிகாரத்தைச் செயல்படுத்தும் தனி உறுப்பாகவும் இருந்தது ; அதாவது சட்டத்திற்கும் அப்பாற்பட்ட, கட்டுப்படுத்தப்படாத சில அதிகாரங்களை அரசர் கையாளுவது இந்தக் கருவியின் மூலமே. இந்த உண்மைகளெல்லாம் ஆலோசனைக் குழுவின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்ளுதற்குத் துணை செய்கின்றன; இவ்வாலோசனைக் குழு எத்தனை மாற்றங்களுக் குட்பட்டபோதிலும், மூலமாகிய ஆலோசனைக் குழுவின் அதிகாரங்களும், செயல்களும், இதனின்று தோன்றிய சிறு ஆலோசனைக் குழுவினால் அழிக்கப்படவில்லை; இவ்வுண்மைகளும் மேற்கூறிய உண்மைகளைப்போல நாம் ஆலோசனைக் குழுவின் வரலாற்றை அறியத் துணை செய்கின்றன. அறிந்து கொள்ளுதற்கு எளியதான இந்த உண்மைகளெல்லாம் ஆலோசனைக் குழுவின் வரலாற்றிலும், அதினின்றும் தோன்றிய நிறுவனங்களின் முந்திய வரலாற்றிலும் நாம் அறியக்கூடாத இடர்ப்பாடுகளை நீக்கித் தெளிவுறுத்துகின்றன.

பதினைந்தாம் நூற்றுண்டுக்கு மேற்பட்ட ஆங்கில வரலாற்றில், பெரிய ஆலோசனைக் குழுவினுடைய ஆட்சி அலுவலையும், முறைமை வழங்கும் அலுவலையும் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட மூன்று சிறப்பான நிறுவனங்களைப்பற்றிப் பார்த்தோம் ; அவையாவன கருவூலம் (Exchequer), சான்சரி என்ற தரும நியாய முறைமன்றம் (Chancery), அரசரது முறைவர்கள்மன்றம் என்பன ; மற்ற இரு அலுவல்களான ஆலோசனை கூறுதல், சட்டம் இயற்றுதல் ஆகியவற்றை வலியுறுத்துவதில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கருவூலத்தையும், தரும நியாய முறைமன்றத்தையும் பொறுத்தவரையில் தோன்றிய ஒரு தனிப்பட்ட கடும் நிலை என்னவெனில், ஆலோசனைக் குழுவின் செயல்கள் பாகுபடுத்தப்பட்ட பின்னும், அக்குழு தனது மூலமான செயலை (ஆலோசனை வழங்குதலை)த் தன்னிடமே வைத்துக்கொள்ளவில்லை; புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பின்னர், அப் புதிய குழு ஓர் ஆலோசனைக்குழு எனத் தோன்றும்படியாக, இடையீடிட்டுச்செய லாற்றும் ஒரு அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக்கொண்டது தான் அக்கடினமான நிலையாகும். இந்நிலையே அரசரது முறைவர்கள் மன்றத்திற்கும் பொருந்துவதாகும். இவற்றிலெல்லா

பொதுவாகக் காணப்படும் உண்மை, அலுவல் பாகுபாடு செய்யப்பட்ட முறையையும், அப்பாகுபாடு முழுவதும் உணராத நிலைமையிலேயே செய்யப்பட்ட தன்மையையும் காட்டுகிறது. இப்பாகுபாட்டில் ஆலோசனைக் குழுவினின்றும் தனியாகப் பிரிக்கப்பட்டு நிறுவப்பட்டது என்னவெனில், அது ஒரு நிறுவனம் அன்று; புதிதாக நிறுவப்படுவது ஆலோசனைக் குழு அலுவலின் ஒரு வகையே; இவ்வாறு கருவூலத்தில் பொருள்பற்றிய அலுவலும், தரும நியாய முறைமன்றத்தில் ஆட்சி அலுவலும், முறைமை அலுவலும், அரசரது முறைவர் மன்றத்தில் பொதுச் சட்டத்தில் எழும் வழக்குகளைத் தீர்க்கும் அலுவலும் பிரித்துவைக்கப்பட்டன. ஒவ்வொரு அலுவலிலும், முதலில் செயலாற்றுவது ஆலோசனைக் குழுவே. அலுவல்தான் தனித்தனியாகப் பாகுபாடு செய்யப்பட்டதேயன்றி நிறுவனம் பிரிக்கப்படவில்லை. அதனுடைய ஒரு அமர்வுக்காலத்தில் (session) அதனுடைய முக்கிய அலுவல் நிதிபற்றியதாக இருந்தாலும், அது ஆலோசனைக் குழுவாக இருப்பதால், அக்காலத்திலேயே அது சட்டத்தில் எழும் ஒரு வழக்கையும் தீர்த்தல் கூடும். ஆயினும் காலம் செல்லச் செல்ல இவ்வலுவல் பாகுபாடானது நிறுவனப் பாகுபாடாகவே ஆகிறது. காலப்போக்கில் ஒரு குறிப்பிட்டவகையான அலுவல் இவ்வாலோசனைக் குழுவுக்கு வருகையில், அக்குழுவில் அவ்வலுவலோடு செயல்துறையில் தொடர்பும் (official connection) அதுபற்றித் தனியான ஒரு தகுதியும் உடைய உறுப்பினர் கைக்கு வரும்; இத்தகையோர் கூடிய அமர்வுக்காலத்தில் குறிப்பிட்ட இத்தகைய அலுவல்களே செய்யப்படுவதாகின்றன. இவ்வாறு செய்யப்பட்ட பிரிவினை நடைமுறையில் முற்றுப்பெற்றாலும், நிறுவனப் பாகுபாடு தோன்றிவிட்டதென்பது இந்நிலையிலும் தெளிவாக அறியப்படவில்லை. கருவூல அலுவலானது ஆலோசனைக் குழுவினுடைய சாதாரண அலுவலினின்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியிலேயே தனியாகப் பிரித்துவைக்கப்பட்டது; ஆயினும் பதின்மூன்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் கருவூலமானது சிற்சில சமயங்களில் ஆலோசனைக் குழுவின் வேலைப் பாகுபாடுகளின் மூலமாக, இடைக்காலத்திலோ, தற்காலத்திலோ, ஒரு புதிய நிறுவனமாகத் தோற்றுவிக்கப்பட்டதென்பது மிகவும் மெள்ள மெள்ளத்தான் மக்களால் தெரிந்துகொள்ளப்பட்டது; எனவேதான் நெடுங்காலத்துக்கு ஒரு நிறுவனத்தின் அலுவலை மற்றொன்று கைப்பற்றித் தனதாக்கிக் கொள்ளுதலென்று (appropriation of the function) என நாம் இக்காலத்தில் கூறக்கூடிய ஒரு செயல் இயல்பாக நடைபெற்றுவந்தது; எனவே இதுபற்றிய செய்திகள் நமக்கு விளங்கவைக்க வேண்டியதிருக்க, அவை உண்மையில் நம்மைத் திகைக்கவைக்கின்றன.

ஆலோசனைக் குழுவினுடைய பதினைந்தாம் நூற்றாண்டின் வரலாற்றைப் பொறுத்தவரையில், நாம் கவனிக்கவேண்டுவது யாதெனில், அது நிறுவனங்களின் பாகுபாட்டைப்பற்றி அன்று. அது அவற்றுள் வற்புறுத்திப் பேசப்படுவது என்பதேயாம். இவ் வகையில் இரு முக்கியமான மாறுதல்கள் முன்பே நிகழ்ந்துள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மூன்றாம் ஹென்றியின் வயதுவாராப் பருவத்தில் ஆலோசனை கூறுதலும், அரசாங்கத்தின் கொள்கையைத் தீர்மானித்து, இயக்குவதில் உதவி செய்தலும் ஆலோசனைக் குழுவின் அலுவலாக, குழப்பம் மிகுந்த அக்காலத்தில் அதற்கு முன் இல்லாதவகையில் வற்புறுத்திப் பேசப்பட்டது. தெளிவாக இவ்வலுவலையே ஆலோசனைக்குழு செய்துவந்தமையால், ஆலோசனைக் குழுவின் வரலாற்றில் இதனால் ஒரு புதிய தொடக்கம் உண்டாயிற்று எனவும் கருதுவர். இக்கருத்து, குழுவின் அலுவலில் ஏற்பட்ட மாறுதலைப்பற்றி மிகைபடக் கூறப்பட்ட ஒன்று ஆகும்; ஆயினும் அக்காலத்திலிருந்து, ஆலோசனை வழங்கும் சிறப்பான அலுவலே குழுவில் யாவருக்கும் காணப்படக்கூடிய அலுவலாக இருந்தது என்பது உண்மையே. ஆலோசனை கூறும் குழுவாகவே இது சிறப்பாக இருந்தது; இதில் ஆட்கள் அமர்த்தப்படுகையில் இவ்வலுவலுக்காகவே அமர்த்தப்பட்டனர்; அவ்வாறு அமர்த்தப்பட்டவர்கள் தாம் இவ்வலுவலைப் பற்றுறுதியுடன் செய்வதாக ஓர் உறுதிமொழி எடுத்தனர். இக்குழுவில் இரண்டாவதாக ஏற்பட்ட இன்னொரு மாறுதலாவது நேர்மாறான முறையில் நடந்த ஒன்று; இது குழுவின் இன்னொரு அலுவலை மிகவும் குறைப்பதாக இருந்தது; பழைய பெருமன்றத்தினின்றும் (Great Council) புதிதாகத் தோன்றிய பாராளுமன்றமானது பதினான்காம் நூற்றாண்டில் அதனுடைய சட்டம் இயற்றும் அலுவலை மெள்ளமெள்ளத் தனக்கே உரிய அலுவலாக ஆக்கிக் கொண்டது. அரசர்களும், ஆலோசனைக் குழுவில் சிறியதும் அல்லது பெரியதுமாகவிடுக்கும் தனி ஆணைகள் (ordinances) சில காலத்துக்கு நடைமுறையிலிருந்தன; இந்த அலுவல் மிகக் குறைந்த அளவில்தான் தற்காலம் வரையிலும் குழுவில் தொடர்ச்சியாக இருந்துவருகிறது; ஆயினும் அதன் அலுவலில் பதினான்காம் நூற்றாண்டில் சிறப்பாகச் செய்யப்பட்ட மாற்றமானது முடிவான மாற்றமாகவே இருந்தது.

ஆலோசனைக் குழுவில் ஏற்பட்ட இதேபோன்ற மூன்றாவது மாறுதலை நாம் கூறின் அதனுடைய வரலாறு முற்றுப்பெறுகிறது; ஆயினும் இதுவரையில் இம்மாறுதல்கள் வெளிப்பட்ட வடிவங்களைப்பற்றியோ, இவை தோன்றிய காலத்தைப்பற்றியோ நாம் ஒன்றும் திட்டமாகக் கூற இயலவில்லை. ஆலோசனைக் குழுவி

னுடைய ஆட்சி அலுவலானது மிகவும் சிறப்பாகப் பெருகி வந்ததே இம்மாறுதலாகும். ஆலோசனைக் குழுவானது இதற்கு முன் எப்பொழுதும் அரசாங்கத்தினுடைய ஒரு மேலான ஆட்சியுறுப்பாகவே இருந்துவந்துள்ளது: பண்டைக் காலங்களி லிருந்தே அதனுடைய ஆட்சி அலுவல்களில் பெரும் பங்கானது அதனின்றும் பிரிக்கப்பட்டுப் புதிதாக உண்டாக்கப்பட்ட நிறுவ னங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சுற்றும் முறைவர் மன்றம், கருவூலம், தரும நியாய முறை என்ற இப்புதிய நிறுவனங்களுக் குரிய அலுவலாக அது இருந்தது. எனினும் இதனால் ஆலோச னைக் குழுவினுடைய இந்தகைய அலுவல்கள் குறைந்துவிடவில்லை; அவை பெருகியேவந்தன. இவ்வாறு ஏற்பட்ட மாறுதல்—எடுத் துக்காட்டாக, ஆலோசனை வழங்கும் அலுவலைப்பற்றிய மாறுதல் —மூன்றும் ஹென்றியின் வயதுவாராப் பருவம்போன்ற சூழ் நிலையை ஒட்டித்தான் தோன்றியது எனவும் கூற இயலாது: பொது வாழ்விலும், தனி வாழ்விலும் பல செயல்கள் சிக்கல் நிறைந்ததாக மாறி மக்கள் தொகை பெருகியதும், வாணிகமும் வளமும் பெருகியதும், அரசாங்கத்தின் அலுவல்கள் பெருகியதும், அதனால் அது செலவு செய்யவேண்டிய தொகைகள் பெருகியதும் ஆகிய காரணங்களே இம்மாறுதலை உண்டாக்கின.

ஆலோசனைக் குழுவின் பதினைந்தாம் நூற்றுண்டின் வரலாற் றில் நமக்குச் சுவையாயிருப்பது எது என்றால் உண்மையில் அது அக்குழுவின் நிலையான வளர்ச்சியைக் கூறும் பகுதி அன்று. அது அக்குழுவுக்கு அரசியலமைப்பில் தோன்றிய ஒரு நிலைமையாகும்; இவ்வளர்ச்சியும் நிலையான தொன்றன்று; கூடுதலாகச் சொன்னால் அவ்வளர்ச்சியானது, ஆலோசனைக் குழுவுக்கு வேறொரு வழியில், பிந்திய ஒரு காலத்தில் ஏற்படப்போகிற ஒரு நிலையைச் செயலறிவு ஏற்படாத இப்பருவத்திலேயே முன்னறிவிப்புச் செய்வதாக இருந்தது. உண்மையில் இக்காலத்தில் ஆலோசனைக் குழுவானது ஓர் அரசியலமைப்பு நிலைமையில் வளரவில்லை; மாறாக, அது ஒன்றுக்கொன்று முரணான இருவகைப்பட்ட நிலைமைகளில், வெவ் வேறு காலங்களில் வளர்ச்சியடைந்தது. ஒரு சமயத்தில் ஆலோ சனைக்குழு முற்றிலும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலடங்கி இருப்பதைப்போலத் தோன்றுகிறது: இந்நிலையில் அது பாராளு மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட கொள்கையை நிறைவேற்றுகிற ஒரு கீழ்த்தர நிறுவனமாக இருக்கிறது; அல்லது நடைமுறையில் அது தற்கால அமைச்சரவையினின்றும் வேறுபட்டிருக்கவில்லை. நான்காவது, ஐந்தாவது ஹென்றிகளின் ஆட்சிக் காலங்களிலும், ஆறும் ஹென்றியின் இளமைப் பருவத்திலும், ஆலோசனைக்குழு வின் நிலை பெரும்பாலும் இத்தகையதாகவே இருந்தது. இதற்கு

மாருக, உண்மையில் பாராளுமன்றத்தைவிட மிகுதியான அதிகாரங்களை உடையதாகவும் அது காணப்படுகிறது; இந்நிலைமையில் அதுவே வலிமிக்க ஓர் அரசருடைய இடத்தில், செயலாற்றிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் ஓர் உறுப்பாகக் காணப்படுகிறது. இந்நிலைமையில்தான் அது ஆரும் ஹென்றியின் இளமைப் பருவத்திற்குப் பிந்திய காலத்திலும், நான்காம் எட்வர்டின் ஆட்சியிலும் இருந்தது; அடுத்த நூற்ருண்டில் டியூடர் மன்னர்கள் அரசாங்கத்தை மரபு உரிமையாகக் கைப்பற்றியபோது, குறிப்பிட்ட இந்நிலைமையில்தான் ஆலோசனைக்குழு இருந்தது. லங்காஸ்டிரியரது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் அரசாங்கத்தின்மீது பாராளுமன்றம் செலுத்திய கட்டுப்பாடானது, தற்காலத்தில் செய்யப்படுவதைப் போன்று நேரான முறையில் செலுத்தப்படவில்லை; ஆயினும் அது பதின்மூன்ரும், பதினன்காம் நூற்ருண்டுகளில் பெருமக்களுடைய எதிர்க்கட்சியானது அரசாங்கத்தின்மீது செலுத்த முயன்ற நேர்வழிக் கட்டுப்பாட்டைப் போன்ற ஒரு கட்டுப்பாட்டை அரசாங்கத்தின்மீது செலுத்திற்று. ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களைப் பெயர் குறித்துப் பாராளுமன்றமே அமர்த்திற்று; அல்லது அரசர் எவரை அமர்த்த விரும்புகின்ருரோ, அவர்களது பெயர்களைப் பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென அது வற்புறுத்திற்று; இவ்வாறு அரசர் செய்தால், அவரது கருத்தை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்துக்குத் தள்ளுரிமை (வீட்டோ - veto, வெட்டதிகாரம், நீக்கும் உரிமை) உண்டாயிற்று; ஆலோசனைக் குழுவினர் தமது ஊதியங்களுக்காகத் தன்னைச் சார்ந்திருக்கும்படியாகப் பாராளுமன்றம் வழி செய்துகொண்டது; அவர்கள் எடுக்கவேண்டிய உறுதிமொழியையும் அதுவே வரையறை செய்தது. ஆலோசனைக் குழுவினது அலுவலைப்பற்றிய ஒழுங்குகளையும் அதுவே தீர்மானித்தது. உண்மையில் பாராளுமன்றத்துக்கும் ஆலோசனைக் குழுவுக்குமிடையேயுள்ள இத்தகைய தொடர்பினுல் அரசியலமைப்பு உருவாவதற்கு யாதொரு நிலையான உதவியும் ஏற்படவில்லை; எனினும் பாராளுமன்றம் இந்தக் குறிப்பிட்ட காலத்தில் அடைந்த அதிகாரத்தைத் தெற்றென எடுத்துக்காட்டுவதாக இத்தொடர்பு அமைந்திருக்கிறது.

ஆலோசனைக் குழுவினுடைய நேர்மை அதிகாரத்தை அல்லது தனிச் சிறப்புரிமை அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட தரும நியாய முறை மன்றத்தின் (chancery) தனிப்பட்ட முறைமை அதிகார எல்லையானது, பதினைந்தாம் நூற்ருண்டில் விரிவாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. இதற்கு முந்திய நூற்ருண்டிலேயே அது விரிவுபடுத்தப்பட்டமையால், அம்முறை

மன்ற நீதிபதிக்கே (சான்சலர்) நேராக விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன; மேலும், நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவே, அவருடைய தனிப்பட்ட முறைமை அதிகாரமானது (Independent Jurisdiction) சட்டத்திலும், அலுவலகப் பிடிபாடுகளிலும் மிகுதியாக ஒப்புக்கொள்ளப்படலாயிற்று. பொதுச் சட்டத்தை ஒட்டி வழக்குகள் ஆய்வு செய்யப்படுகையில், பிடிபாட்டிற் (Document) காணப்படுபவற்றையும், வழக்காளி கொண்டுவரக்கூடிய நேரான சான்றுகளையும் மட்டிலும் வைத்து ஆய்வதனால், பொதுச் சட்டம் செல்லுபடியாகக் கூடிய சுருங்கிய அளவைக்கொண்டு, ஒரு முடிவுக்குவந்து அதை நிலைநிறுத்துதல் என்பது இயலாது; எனவே இவ்வாறு தீர்ப்புக்கூற வழி இல்லாத நிலையில் வழக்கைப்பற்றி மனச்சான்றின் முடிவுகளைத் தீர்ப்பாக நிலைநிறுத்துவதற்குத் தரும நியாய முறைமன்றத் தலைவருக்கு உரிமை இருந்தது; இவ்வுரிமையே பதினைந்தாம் நூற்றாண்டில் இம்முறைமன்றத்தினுடைய வளர்ச்சிக்குரிய ஆதாரங்களில் முக்கியமானதாக இருந்தது. இந்த உரிமையானது தரும நியாய முறைமன்றத்திற்கு மிகவும் கூடுதலான அலுவலைக் கொண்டு வந்தது; பயிரிடுதலுக்காக நிலங்களைக் கூடுதலாகக் கொடுக்கும் பழக்கம் மிகுதியாக வரவர, இம்முறைமன்றத்தின் அலுவலும் கூடிற்று. பொறுப்பு முறை (Trusteeship) யாருடைய நலனுக்காக நிறைவேற்றப்பட்டதோ. அவருடைய நலன்களைப் பாதுகாக்கும் உரிமையைப் பொதுச்சட்ட முறைமன்றங்கள் கைவிட்டு விட்டன; இது ஏனெனில், பொறுப்பாளிக்கு உடைமையானது மாற்றப்படுதல் வேண்டுமென்பது இம்முறையிலேயே தெளிவாக விளங்குகிறது; எனவே இத்தகைய அலுவலானது தரும நியாய முறைமன்றத்துக்கு வந்து சேர்ந்தது.

அரசருடைய தனிச் சிறப்புரிமைக்கு (ப்ரிராகெடிவ் - prerogative) இக்காலத்தில் ஓர் இலக்கணம் (வரையறை, டெபனிஷன்-definition) கூறப்பட்டது. இதுவே பிற்காலத்தில் சட்ட விலக்கு அதிகாரம் என்னும் (டிஸ்பென்சிங்பவர் – dispensing power) ஒரு கடுமையான இடரை அரசியலமைப்பில் உண்டாக்கிற்று. சட்டம் இயற்றும் உரிமையைப்பற்றிப் பாராளுமன்றத்துக்கும் ஆலோசனைக் குழுவுக்கும் இடையே தோன்றிய போராட்டமானது, உண்மையில் அரசருக்குமட்டுமே சட்டம் இயற்றும் உரிமை உண்டு எனப்படும் தனிச் சிறப்புரிமையைப்பற்றி எழுந்த போராட்டமாகும். இத்தனிச் சிறப்புரிமையைப் படைமானியக் காலத்திலுள்ள அரசு ஒப்புக்கொண்டது; இவ்வுரிமையானது தற்காலத்திலும்கூட அதனுடைய மூலவடிவத்தைப் போன்ற ஒரு

வடிவமாகிய 'அரசரது முழுத் தள்ளுரிமை' (Royal absolute veto) என்பதில் நிலைத்திருக்கத் தலைப்பட்டுவிட்டது. ஆனால் அரசர் மட்டுமே சட்டத்தைச் செய்ய முடியுமெனில், அச்சட்டத்தை நீக்கவும் அல்லது ஒரு குறிப்பிட்ட நிலையில் அச்சட்டத்தாலளிக்கப்படும் தண்டனைகளை நீக்கவும் தருக்க முறைப்படி அவரால் முடியுமென்றும் ஆகிறது. குற்றவாளியெனத் தீர்ப்புக் கூறப்பட்டவர் பிற்பாடு குற்றமற்றவர் எனத் தெரிந்தால், அப்பொழுது செயலில் நற்பயனை அளிக்கவல்லதும், ஒழுக்கத்திற்குத் தேவையானதுமாக இருப்பது இந்தத் தனிச் சிறப்புரிமையாகும்; எனவே இதன் ஒரு பகுதியானது இன்றளவும் தடையில்லாமல் செயல்பட்டுவருகிறது. மேலே குறிப்பிட்ட வழக்கில் இத்தகைய தனிச் சிறப்புரிமை அதிகாரம் விரும்பத்தக்க தொன்றாக இருப்பினும், அதைக் கையாளுவதற்கு ஏதேனும் தருக்க முறையில் வரம்பு உண்டா? இவ்வதிகாரத்தின் மூலமாக ஓர் அரசர் சட்டத்துக்கெதிராக நடப்பவருக்கு முன்னதாக ஒரு மன்னிப்பையோ, இணக்கத்தையோ வழங்கமாட்டாரா? அல்லது உரிமை, குற்றச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலினின்றும் எவருக்கும் அரசர் விலக்கு அளிக்க இயலாதா? அல்லது ஒரு சட்டமானது செயல்படுதலையே அவர் இவ்வதிகாரத்தின் மூலம் நிறுத்திவைக்க முடியாதா? சட்டம் இயற்றுதலில் தனக்குப் பங்கு வேண்டுமெனத் தான் கேட்ட உரிமையில் பொதிந்துள்ள உண்மையினைப் பாராளுமன்றமானது வாங்கிக்கொண்டதும் தான் பொருத்தமானதென்று கருதும் வரம்புகளுக்குள்ளாக - தனிச் சிறப்புரிமை அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி வைப்பதற்காகப் பாராளுமன்றமானது தடுப்புரை செய்யத் (Remonstrate) தொடங்கிற்று. இந்த முயற்சியானது பதினான்காம் நூற்றாண்டில் 'சட்டத்தைச் செய்வதிலும், அதைக் கையாளுவதிலும் தனிச் சிறப்புரிமையானது பல வரம்புகளுக்குக் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்' என்பதற்காகப் பாராளுமன்றத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும்; முந்திய மேற்கோள்களை அடிப்படையாகக் கொள்ளாத முற்றிலும் புதிய ஆணைகளை விடுப்பதற்குத் தரும நியாய முறைமன்றத்திற்கு இருக்கும் உரிமையை வரம்புக்குள் வைக்கவும் இப்போராட்டம் நடைபெற்றது; இத்தகைய முயற்சி பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாராளுமன்றம் தோன்றுவதற்கு முன்பே எதிர்க்கட்சியினால் செய்யப்பட்டது; குற்ற வழக்குகளைத் தீர்ப்பதில், ஆலோசனைக் குழுவுக்கு உள்ள தனியான, தன் போக்கான முறைமை அதிகாரத்தை வரம்புக்குள் கட்டுப்படுத்தவும், இப்போராட்டம் நடைபெற்றது. குற்ற வழக்குகளில் மனம்போனபடி தீர்ப்பளிக்கும் முறைமை அதிகாரமானது

மாபெரும் பட்டயத்தின் 39-வது பிரிவிற்கு முரணானதாகுமென எதிர்க்கட்சியினர் உறுதியாகக் கூறினர்; ஆயினும் இத்தகைய முறைமை அதிகாரத்தை ஒழுங்குபடுத்துதல் மிகவும் கடினமாகும்; தனிச் சிறப்புரிமைபற்றி எழுந்த இந்த முறைமை அதிகாரமே இதற்கடுத்த காலத்தில் நட்சத்திர முறைமன்றம் (கோர்ட் ஆப் ஸ்டார் சேம்பர் - court of star chamber) என்பதனுடைய இடர் விளக்கும் முறைமை அதிகாரத்துக்கு அடிப்படையாயிற்று.

மூன்றும் எட்வர்டின் காலத்தில் போப்புக்கெதிராக இயற்றப் பட்ட சட்டங்களான புரொவைசர்ஸ் (provisors), பிரெமுனிர் (praemunire) என்பவை சட்ட விலக்கு அதிகாரமானது மிகவும் விரிவுபடுத்தப்பட்டதைக் காட்டுகின்றன; முந்திய காலத்தில் மார்ட்டுமெயின் சட்டத்திலேயே சட்ட மூலமாக இவ்வதிகாரத்துக்கு உரிமை இணக்கம் (Sanction) கொடுக்கப்பட்டதென நாம் கூறலாம். இச்சட்டங்களினின்றும் அளிக்கப்படும் விலக்குகளுக்கு இயல்பாகவே சமய நிலையத்தின் வலிமிக்க செல்வாக்கும் ஆதரவும் இருந்தன. இத்தகைய விலக்குகள் மிகவும் இடையூறு விளைக்கத்தக்க முன் நிகழ்வுகளாயின. இத்தகைய தனிச் சிறப்புரிமைக்கு வரம்புகள் அமைப்பதில் செயல் முறையில் பயனுள்ளவற்றிற்கும், இடர் விளக்கத்தக்கவற்றிற்கும் பாகுபாடு செய்து, பிறகு வரம்புகள் அமைப்பது மிகவும் கடினம் என்பதைப் பாராளுமன்றம் கண்டுகொண்டது. இந்தக் காலத்திலும் சட்டத்தில் குற்றமெனக் கருதப்பட்ட ஒன்றுக்கு அரசர் சட்ட விலக்குகளை அளிக்கக்கூடிய உரிமைகளைச் சட்ட முறைமன்றங்களால் ஒப்புக்கொள்ள இயலவில்லை; தண்டனைகள் அளிக்கப்படாவிடில் அரசருக்குமட்டுமே இடையூறு ஏற்படக்கூடிய வழக்குகளில் அவர் விலக்குகளை அளிக்கக்கூடிய உரிமைகளையும் சட்ட முறைமன்றங்கள் ஒப்புக்கொள்ளவில்லை; தெய்வத்தன்மைச் சட்டப்படிக் (Divine Law) குற்றம் எனப்படும் வழக்கில் விலக்கு அளிக்க அவர் மறுப்பதையும், அவரது விலக்கும் செயலினால் மற்றவருக்கு இடையூறு உண்டாகக் கூடிய வழக்குகளில் அவர் விலக்கு அளிப்பதையும் சட்ட முறை மன்றங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே இந்தச் சட்ட விலக்கு அளிக்கும் உரிமையானது பதினாறாவது பதினேழாவது நூற்றாண்டுகளிலும் தொடர்ந்துவந்தது; அது ஒரு கொள்கை என்ற அளவில் தெளிவாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது; சில நிலைகளுக்குப் பொருந்தக் கையாளப்பட்டபோது அதைப் பாராளுமன்றமும், முறைமன்றமும் கடுமையாக எதிர்த்தன; ஆயினும் இவ்வுரிமைக்குச் சட்டத்திலோ, மேற்கோளிலோ தெளிவான வரம்புகள் ஏற்படுத்தப்படவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டு முடிவடைவதன் முன்னமேயே அரசியலமைப்புக்குட்பட்ட லங்காஸ்டிரியரது முடியாட்சிக்குப் (Lancastrian constitutional monarchy) பிற்போக்கான எதிர்ப்பு தோன்றிற்று. ரோஜாக்கள் சண்டை (wars of the Roses) என்பவை வலியற்ற அரசருடைய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முதலில் எழுந்த கட்சிச் சண்டைகளா யிருந்து பின்னால் இரு குடும்பத்தாரிடையே ஏற்பட்ட உள்நாட்டுப் போராக விளைந்தன; பின்னால் ஏற்படக்கூடிய ஒருவிதமான ஆதிக்கத்தை இவை முன்பே அறிவிப்பனவாக இருந்தன. யார்க்குக் குடும்பத்தவரான நான்காம் எட்வர்டும், மூன்றும் ரிச்சர்டும் அரசியல் திறனும் உறுதியான போக்கும் உடையவர். வரம்புக்குட்பட்ட முடியாட்சியில் இவ்விருவருக்கும் ஒப்பாக எதிர்க்கட்சியில் ஓர் ஈடுபாடும், அரசியலமைப்பின் கொள்கை களைப்பற்றிய அறிவும் உள்ள தலைவர் எவரும் கிடையாது. ஆணவமான முடியாட்சிக்கு உண்டாகக்கூடிய ஓர் இடர்ப்பா டான சூழ்நிலையைப்பற்றி அறியக்கூடிய முன்னுணர்வு இரண் டாம் ரிச்சர்டுக்கு இருந்ததைப்போல; குறிப்பிட்ட இக்கால அரசர்களுக்கு யாதொரு முன்னுணர்வும் இல்லை. அரசியலமைப் பில் ஏற்பட்ட வளர்ச்சியினால் தமக்கு ஏற்படக்கூடிய இடர்ப்பாடு களைவிட, உள்நாட்டில் தோன்றும் கலகங்களினால் தமக்கு உண்டாகக்கூடிய இடர்ப்பாடுகளினால்தான் அரசர்கள் நாட்டில் தமது நிலைமையை வலிமிக்க ஒரு பேராற்றலாக ஆக்குவதற்குத் தீர்மானித்தனர். நடைமுறையில் ஒரு வரம்பற்ற ஆட்சியை நிறுவக்கூடிய சில வழிகளை அவர்கள் கையாளத் தொடங்கினர்; இவ்வழிகளே பிற்காலத்தில் டியூடர்களால் தொடர்ந்து கையாளப் பட்டன. அவர்கள் தங்களைச் சார்ந்தவர்களையே மிகுதியாகப் பொதுமக்கள் மன்றத்தில் நிரப்பினர்; பதினான்காம் நூற்றாண் டில் பாராளுமன்றம் அடிக்கடி கூடியதற்கு மாறாக, இவ்வரசர் களது ஆட்சியில் அது இவர்களால் வெகு நீண்ட இடைவெளிக் காலங்களில்தான் கூட்டப்பட்டது; பாராளுமன்றத்தாலளிக்கப் படாத, தனிப்பட்ட பொருளை அவர்கள் தமக்கெனத் தேடிக் கொண்டனர்; அது அவர்களுடைய தேவைகளுக்கு மட்டுமாவது போதுமானதாயிருந்தது; இப்பொருளை அவர்கள் கட்டாயக் கடன்கள் (Forced loans), கட்டாய நன்கொடைகள் (Forced gifts or benevolences) என்பவற்றின் மூலமாகத் தேடிக்கொண் டனர். ஆயினும் இவையெல்லாவற்றையும்விட இக்காலத்தில் பாராளுமன்றத்தின் மேலான அதிகாரத்தைக் கடுமையாகத் தாக் கியது எது எனில், அதனுடைய சட்டத்தின் மூலமாக வேறொரு குடும்பத்தாருக்கு அளிக்கப்பட்ட மரபு உரிமை வழிக்கு மாறாக,

கண்டிப்பான நேர்வழித் தாய முறையின் உரிமையை (Right of strict hereditary Succession) வலியுறுத்தி, யார்க்குக் குடும்பத்தினர் அரியணை ஏறியதேயாகும்.

பதினேந்தாம் நூற்றுண்டினிறுதியில் தனியாளை அரசாங்கத்தினுடைய மனம்போன நடவடிக்கையினின்றும் காத்த சில சமூக உரிமைகளைப்பற்றிய கொள்கைகள் (Principles of civil liberty) இருந்தன. இங்கிலாந்தில் இச்சமூக உரிமைக் கொள்கைகள் பொதுச் சட்டத்தில் நிறுவப்பட்டன. அதாவது அவை தனி மனிதருக்குரிய சட்டத்திலல்லாமல், பொதுமக்களுக்குரிய சட்டத்தில் இருந்தன; ஆனால் அமெரிக்காவில் நாம் இக்கொள்கைகளை நாட்டு அரசியலமைப்பின் பகுதிகளாகவே ஆக்கியிருக்கிறோம். ஆங்கில அரசியலமைப்பில் குறிப்பிட்ட இக்காலம்வரை தோன்றிய விளைவுகளையெல்லாம் தொகுத்துரைக்கும் ஆசிரியர் ஹாலம் தமது "இங்கிலாந்தின் அரசியலமைப்பு வரலாறு" (Constitutional History of England) என்னும் நூலின் முற்பகுதியில் இவ்விளைவுகளைப்பற்றி நமக்குப் பின்வருமாறு கூறுகிறார்: "ஓர் ஆள் செய்த குற்றத்தைக் குறிப்பிடும் சட்டப்படியான பிடி ஆணை (legal warrant) இல்லாமல் அவர் சிறைப்படுத்தப்படக் கூடாது; மேலும், அரசியலமைப்பின் உரிமையைப்போன்ற ஒரு வழக்கத்தின்படி அவர் சிறையினின்றும் ஆய்வு செய்யப்படுதற்காக முறை மன்றம் கூடுங் காலங்களில் வெளிக் கொணரப்படுதல் வேண்டும்; குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளியா, குற்ற மற்றவரா என்ற உண்மை ஒரு பொது முறைமன்றத்தில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; குற்றம் கோட்டத்தில் செய்யப்பட்ட ஒன்றுகயிருந்தால், பன்னிரண்டுபேர் அடங்கிய தீர்ப்புச் சான்றுளர் குழுவின் மூலமாக வழக்கு ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்; அவர்களுடைய தீர்ப்புக் கெதிராக முறையிட்டுக் கொள்ளுதல் இயலாது. ஒரு குறிப்பிட்ட செயலினுடைய கேள்விகளைப்பற்றிய சமூக உரிமைகளும் இவ்வாறான முறையில் தீர்மானிக்கப்பட்டன. குடிமக்களுடைய ஆள் உரிமையையோ (Personal Liberty) வேறெந்த உரிமையையோ மீறுகிற அரச அலுவலர்களின் மீதும், ஊழியர்களின்மீதும் அவர்களது செயலுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டு அதற்காக அவர்கள் கொடுக்கவேண்டிய இழப்பு ஈட்டுத் தொகையானது (damages) தீர்ப்புச் சான்றுளர் குழுவினால் தீர்மானிக்கப்படலாம்; அல்லது வேறு சில வழக்குகளில் குற்றவழக்கு ஆய்வு முறைக்கு அவர்கள் உட்படுத்தப்படலாம்; அவர்களது செயலைச் சரியெனக் காட்டுதற்காக அவர்கள் யாதொரு பிடி ஆணையும், அல்லது ஆணையும் கொடுக்கும்படியாக

முறைமன்றத்தை அவர்கள் கேட்கக்கூடாது ; அவர்கள் அரசரது நேர் ஆணையையும்கூடக் கேட்கக்கூடாது.''

மேலே கூறப்பட்ட கருத்துக்களோடு, பிஷப் ஸ்டப்ஸ் (Bishop Stubbs) என்பவர் லங்காஸ்டிரிய அரசரது ஆட்சிக் காலத்தின் அரசியலமைப்புச் சூழ்நிலையைப்பற்றிக் கூறிய சுருக்கத்தைச் சேர்த்து நாம் பொதுவானதோர் முடிபுரையைக் கொடுக்கலாம் ; ஏனெனில் இக்காலம்வரையில் அரசியலமைப்பை ஆக்குவதில் நிறைவேற்றப்பட்ட செயல்களே டியூடர் காலத்திலும் தொடர்ச்சியாக இருந்து நிலைபெறுவனவாயின. யார்க்கு அரசர்கள் நடைமுறையில் ஒரு வரம்பற்ற ஆட்சியை நிறுவியது உண்மையே ; எனினும் அவர்கள் இரண்டாம் ரிச்சர்டு நிறுவமுயன்றதும், கொள்கையினடிப்படையிலும், நிறுவனத்தினடிப்படையிலுமமைந்ததுமான வரம்பற்ற ஆட்சியை நிறுவவில்லை. அவர்கள் தங்களைச் சேர்ந்தோரைப் பாராளுமன்றத்தில் நிரப்புவதன் மூலமாகவும், தங்களுடைய படைவலிமையின் மூலமாகவும் பாராளுமன்றத்தைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர் ; ஆயினும் அவர்கள் பாராளுமன்றத்தின் அலுவல்களைத் தாங்களே ஏற்றுக்கொள்ளவில்லை. பாராளுமன்றத்தால் அளிக்கப்படாத பொருளை அவர்கள் பெருவாரியாகத் திரட்டினர் ; ஆயினும் அப்பொருளை அவர்கள் வரிமுறை என்ற பெயரில் திரட்டாமல், கடன்களின் வடிவாகவும், நன்கொடைகள் வடிவாகவும் திரட்டினர். எனவே அவர்கள் இவ்வாறாக டியூடர்களது அதிகாரத்துக்கு மட்டுமன்றி, அவர்களது செயல் முறைக்கும் அடிப்படைகளமைத்தனர் ; அரசியலமைப்பின் புறவடிவங்களைமட்டும் வைத்துக்கொண்டும் (the forms of the constitution), தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற பாராளுமன்றத்தின் உதவியை வைத்துக்கொண்டும் அரசருடைய விருப்பத்திற்கிணங்க ஆட்சி செய்வது என்ற டியூடர் காலத்திய செயல்முறைக்கு யார்க்கு அரசர்கள் அடிப்படை அமைத்தனர்.

பிஷப் ஸ்டப்ஸ் கூறுவதாவது : ''ஆங்கில அரசியலமைப்பின் செயல் முறையைப்பற்றிய குறிப்புக்களுக்கும், தெளிவான கொள்கைகளுக்குமுரிய விளக்கங்களை நாம் நான்காம் ஹென்றியினுடைய தெளிவற்ற வாக்குறுதிகளிலோ, சர் ஜான் பார்ட்டஸ்க்யுவின் பாராட்டுரைகளிலோ காண இயலாது. ஆயினும் இக்காலத்தில் அரசியலமைப்புக்கு இலக்கணங்கள் வேண்டுவதில்லை ; அரசியலமைப்பில் பதினைந்காம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒழுங்குமுறையானது, புரட்சி என்ற ஒரு புகழ்பெற்ற பாடத்தில் முடிவடைந்தது ; இப்பாடமானது நாட்டினர் தங்களுடைய

சரியான உரிமைகளையும், தங்களுடைய தவறுகளையும் அறியும் படி செய்தது. ஆங்கில மக்களுடைய நினைவுகளிலும், வாழ்க்கைகளிலும், அவர்களுடைய நெஞ்சங்களிலும் எழுதப்பட்டிருந்தது வழக்கம் என்ற ஒரு பெரிய சட்டமாகும். பாராளுமன்றத்தின் உரிமையையும், மக்களுடைய உரிமைகளையும் நிறுவும் நோக்கத்துடன், இதுவரை மக்கள் அடைந்துள்ள பருப்பொருளான உரிமைகளையும், நிறுவனங்களையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் அளவுக்கு மேற்கூறிய வழக்கமென்னும் பெரிய சட்டமானது விரிவாக வளர்ச்சியடைந்தது. 'அரசரானவர் மனம்போனபடி ஆளுகின்ற ஒரு வல்லாட்சியாளர் (despot) அல்லர்; அவர் உறுதிமொழிகள், சட்டங்கள், கொள்கைகள், தேவைகள் ஆகியவைகளால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு தலையாய அதிகாரியே; இந்தக் கட்டுப்பாடுகளின்மீதும் நாட்டினருக்கு ஓரளவு கட்டுப்பாடு உண்டு' என்பதாக நாட்டினர் அறிந்துகொண்டனர். அரசரானவர், கடவுளுடைய பழியுரைக்கு (Curse) ஆளாகாமல், தாம் எடுத்த உறுதிமொழியை மீறமுடியாதென்பதையும், தங்களால் கோட்ட மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுடைய வகையாட்களின் மூலம் தெரிவிக்கப்பட்ட இணக்கத்தினாலல்லாமல் அரசர் எச்சட்டங்களையும் மாற்றவோ, எந்த வரியையும் விதிக்கவோ இயலாது என்பதையும் நாட்டினர் அறிந்திருந்தனர். இத்தகைய மன்றங்கள் எவ்வாறு, எப்பொழுது, எங்கே கூட்டப்படுகின்றன என்பதையும், நாட்டின் மக்கள் யாவருக்கும் இக்கூட்டங்களிற் கலந்துகொள்ளுதற்கு உரிமையும் சலுகையும் உண்டு என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்; மேலும் தாங்கள் தேர்தல்களில் ஈடுபட்டிருக்கும்போது அவற்றில் அரசர் தலையிடாத வண்ணம் தடுப்பதற்கும் அவர்கள் பேராவல் கொண்டு விழிப்புடன் இருந்தனர். இந்த நிலவரையிலும் அரசியலமைப்பின் நடைமுறையைப்பற்றி ஒரு சிக்கலும் தோன்றவில்லை; பெருமக்களுக்கும், பொது மக்களுக்குமிடையே எந்தவிதமான மாறுபாடும் இடரும் கிடையாது; உறுப்பினர்களுடைய சலுகைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன; அவற்றை அவர்கள் உறுதியாக எடுத்துக் கையாளப்படுதல்தான் இனிச் செய்யப்பட வேண்டியதாயிருந்தது; பொது மக்கள் மன்றம் தனது குறைகளையெல்லாம் எடுத்துக் கூறுதலில் யாதொரு தடையும் கிடையாது; அரசாங்கத்தின்மீது தீய செல்வாக்கைக் கையாளுவதாக ஐயுறவுக்கிடமான அமைச்சர்களையோ, மற்றவர்களையோ பெருங் குற்றச்சாட்டுக்கு உட்படுத்துவதிலும் யாதொரு தடையும் கிடையாது. மக்களுடைய உரிமைகளைத் தான் காப்பதாக அரசர் கொடுக்கும் வாக்குறுதியின் பொருள் என்ன என்பதை மக்கள் அறிந்திருந்தனர்; எனவே அவர் எவ்வாறு

தனது வாக்குறுதியை நிறைவேற்றுகிரு ரென்பதையும் அவர்கள் கவனிக்கலாயினர். பழைய காலத்திலிருந்த தவறுகளெல்லாம் மறைந்தமையையும் அவர்கள் அறிந்தனர்; பாராளுமன்றத்தி னுடைய இசைவு இல்லாமலே பணம் திரட்டப்படுவதாக இனி மேல் குறைகள் கூறப்படவில்லே; ஆணையாளர்களே அணியணியாக அனுப்பிச் சட்டத்திற்குப் புறம்பாகப் பணம் வாங்குவதாகவும் குறைகள் கூறப்படவில்லே; உணவுப்பொருள் தேவைகளே மற்ற எவரையும்விட முதலில் அரசரே பெறும் தனிச் சிறப்புரிமை யானது (right of purveyance) தவருகக் கையாளப்பட்டால், அதை நீக்குதற் பொருட்டும், அதைச் செய்தோர் தண்டிக்கப் படும் பொருட்டும், அத்தவறு எடுத்துச் சொல்லப்பட்டது; சட் டப்படி கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கள் நிறைவேற்றப்படாமலிருந் தால் அது நிறைவேற்றப்படுதற்குரிய அதிகாரம் இன்மையால் தான் அவ்வாறிருந்தது; அதை நிறைவேற்றுதற்குரிய மனவிருப் பம் இல்லாமலில்லே.''

இயல் பத்து

டியூடர்கள் நிறுவிய உறுதியான முடியாட்சி[1]

யார்க்கு அரசர்களுள் கடைசியானவராகிய மூன்றும் ரிச் சர்டை நீக்கி, ஏழாம் ஹென்றியின் மூலமாக டியூடர் குடும்பத் தாரை அரியணையில் ஏறச் செய்த புரட்சியானது, நாட்டினரது சடுபாட்டைப் பெரிதும் கவரவில்லே. இப்புரட்சியானது, அரசிய லமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த 1399-ஆம் ஆண்டின் புரட்சி யைப் போன்றதன்று. அக்காலத்தில் ரோஜாக்கள் சண்டையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளேப் போலவே, இவ்வாறு ஒரு புதிய குடும்பம் அரசுரிமை ஏற்ற நிகழ்ச்சியும் நிலேமாறுதலுக்குட்பட்ட நிகழ்ச்சி யாக ஆகிவிடுமோ, எனப் பலர் எண்ணினர்; மேலும் இந்த உள் நாட்டுப் போரில் நாட்டினர் அனைவரும் கலந்து கொள்ளவில்லே. ஆட்சியை ஒருவரிடமிருந்து மற்ருெரு குடும்பத்தாருக்கு மாற்றிய இந்தப் புரட்சியானது ஆதரித்த ஓர் அரசியலமைப்புக் கொள்கை என்னவெனில், ஆட்சியின் வழிமுறை உரிமையை இளேய பிள்ளே வழியினருக்குப் பாராளுமன்றம் அளிக்கும் உரிமையே. பாராளு மன்றம் மூத்த பிள்ளேயின் வழியினருக்குரிய உரிமையை விடுத்து, ஓர் ஆணையின் மூலமாக இளேய பிள்ளேயின் வழியினருக்கு இவ் வாட்சியை மாற்றிற்று. ஆயினும் இக்கொள்கையானது 1399-ஆம்

1. The Tudor Strong Monarchy.

ஆண்டில் தெளிவாக வலியுறுத்தப்பட்ட அளவுக்கு இப்பொழுது வலியுறுத்தப் படவில்லை; பின்னல் ஏழாம் ஹென்றி, யார்க்கு அரசர் நான்காம் எட்வர்டின் மரபினளான (Heiress) எலிசபெத்தைத் திருமணம் செய்து கொண்டதனுலும் இக்கொள்கை உறுதி பெறவில்லை. பாராளுமன்றத்தினுடைய அதிகாரங்களை மதிப்ப தென்ற ஒரு மறைவான உறுதிமொழியைக் காப்பாற்றுவதற்காகவோ, அரசியலமைப்பைக் காப்பாற்றுவதற்காக நாடு முழுவதிலும் தோன்றிய ஏதேனுமொரு கிளர்ச்சியின் விளைவாகவோ, டியூடர்கள் ஆட்சிக்கு வரவில்லை.

அப்பொழுது இருந்த பொதுவான சூழ்நிலையும் ஒரு அரசியலமைப்புக்குட்பட்ட ஆட்சி முறைக்கு ஏற்றதாக இல்லை. ஐரோப்பா முழுவதையும் நெருங்கிக் கொண்டிருந்த அந்தக் காலம் ஒரு புதிய, புரட்சி மிக்க காலமாகும்; அக்காலம் அரசியல் வரலாற்றில் இடைக் காலத்திலிருந்து (Medieval times) தற்காலத்திற்கு மாறிய ஒரு காலமாகும். தற்காலத்தில் காணப்படுகிற ஓின நாட்டினர் கூட்டங்கள் (Nations) இக்காலத்தில் தான் தமது முழு வடிவத்தை அடைந்தன. பிரான்சு நாடானது தனக்குக் கிழக்கெல்லையை முடிவாக அமைக்கா விட்டாலும், அதனுடைய பொதுவான நில அமைப்பின் எல்லையை அமைத்துக் கொண்டது; அந்நாட்டில் முன்பிருந்தே தனி உரிமையாக இருந்து வந்த பெரிய பிரபுக்களின் பண்ணைகள் இப்பொழுது அரசாங்கத்தால் அடக்கப்பட்டு இணைக்கப்பட்டு விட்டன; நாட்டின் அரசாங்கமெல்லாம் தலையாய அதிகாரியான அரசரிடமே, ஒன்ருகக் குவிக்கப்பட்டது; இப்பொழுது நடைபெற்ற அரசாங்க அதிகாரக் குவிப்பானது பதினேழாம் நூற்றுண்டில் ஏற்பட்டதைப் போல ஒவ்வொரு செயலிலும் முழுமையாக இருக்கும்படி செய்யப்படவில்லை; ஆயினும் அரசாங்கத்திற்கு எதிரான தனி ஆட்சியாளர்கள் இல்லாத அளவுக்கு அரசாங்கமானது அரசரிடம் ஒன்று சேர்க்கப்பட்டது. ஸ்பானிய தீபகற்பத்தில் நெடுங்காலமாக மூர்களை வெளியே தள்ளிக் கொண்டிருந்த பெரிய நாடுகளெல்லாம் இப்பொழுது பெர்டினண்டுக்கும் (Ferdinand) இசபெல்லாவுக்கும் (Isabella) நடந்த திருமணத்தின் மூலமாக ஒரே ஆட்சியின்கீழ்வந்தன; மேலும் இந்நாட்டில் பிரான்சில் கையாளப்பட்டதைவிட வலிமிக்கதும், விரைவானதுமான ஒரு முறை கையாளப்பட்டு வரம்பில்லாத அரசாங்கமானது நிறுவப்பட்டது; ஆயினும் செயல் முறையில் இது பிரஞ்சியருடைய வரம்பில்லா ஆட்சி முறையை ஒத்திருந்தது. ஒரு காலத்தில் பேராவல் கொண்ட பர்கண்டியப் பெருமக்களால் ஒட்டுமானமாக (patch work) உருவாக்கப்பட்டரைன் மாகாணங்களின் இணைப்பை ஆஸ்டிரிய அரச குடும்பத்

தினர் இப்பொழுது தங்களுடைய தென் கிழக்கு மாகாணங்களுடன் சேர்த்துக்கொண்டனர்; இத்தகைய ஆஸ்டிரியா இப்பொழுது தனது வரலாற்றிலேயே ஒரு பெருங் காலத்தை அணுகிக் கொண்டிருந்தது.

இப்புதிய நாடுகளிடத்து இப்பொழுது புதிய பெரு நோக்கங்கள் வளர்ந்து வரலாயின; தற்கால அரசியற் சூழ்ச்சியின்படி (அரசியற் சூழ்வலி—டிப்ளோமசி—diplomacy) இப்புதிய நாடுகளே கூடிய விரைவில் முதல் வல்லரசுகளாக வர இருந்தன; அரசியற் சூழ்ச்சி என்பது இக்காலத்தில்தான் புதிதாகத் தோன்றலாயிற்று. இடைக் காலச் சூழ்நிலைகள் மறைந்து விட்டன. இதை அடுத்த முந்திய நூற்றுண்டுகளில் ஒவ்வொரு அரசாங்கத்தாலும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஆய்வினு (problem) என்னவெனில், நாட்டை ஒன்ருக இணைத்து உறுதிப் படுத்துவதும் அரசாங்கத்தினிடம் அதிகாரங்களைக் குவிப்பதுமே ஆகும் (National consolidation and centralization). இடைக் காலத்தின் பிற்பகுதியில் எந்த அரசராவது வேறு பல நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்திக் கொள்ள முயன்ருல், இத்தகைய முயற்சிகளுள் பெரும்பாலானவற்றில் அவருடைய நோக்கம், தனது நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் புதிய நாடுகளைத் தான் ஏற்படுத்தி ஆளுவது என்பது அல்ல; தனது நாட்டின் எல்லைகளுக்குள்ளேயே இருக்கும் பல இக்கட்டுகளை வெளி நாட்டவரது உதவியினுல் நீக்கிக் கொள்ளுதலே அவருடைய நோக்கமாகும். பெரிய வல்லரசுகளாகத் தோன்றிய நாடுகளிலெல்லாம் அவற்றின் அரசர்கள் பல்வேறு செயல்களில் ஈடுபாடு உள்ளவராக இருக்கும் அளவுக்கு அவற்றிலுள்ள இக்கட்டுகளெல்லாம் நீக்கப்பட்டு விட்டன. இதன் பின்னரே பேரரசைப் (Empire) பற்றிய ஒரு புதிய கருத்துத் தோன்றலாயிற்று; இக்கருத்திலுள்ள பேரரசானது இடைக் காலத்தவர் பேரரசைப் பற்றிக் கொண்டிருந்த புனித ரோமானியப் பேரரசைப் போன்றதன்று; புனித ரோமானியப் பேரரசு என்பது (Holy Roman Empire) கிறிஸ்தவ நாடுகளடங்கியதாகவும், மக்களினத்தவரது வரலாற்றில் இறைவனுடைய திட்டப்படி ஏற்படுத்தப்பட்டதாகவும் கருதப்பட்ட ஒன்று ஆகும். பேரரசு என்பதைப்பற்றிய இக்கருத்தானது பதினைந்தாம் நூற்றுண்டின் திட்டங்களிலேயே சேர்ந்ததன்று; 'பேரரசு' என்ற சொல்லுக்கே இப்பொழுது புதுப் பொருள் உண்டாயிற்று. ஒரு நாட்டுக்கு அதன் எல்லைக் கோடுகளுக்கு வெளியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆட்சியையும் அதிகாரத்தையுமே 'பேரரசு' என்ற சொல்லானது இக்காலத்திலிருந்து சுட்டத் தொடங்கியது; ஒரு சில நிலைமைகளில், வேறுநாடுகளையோ அவற்றின் பகுதிகளையோ சேர்த்துக்

கொள்ளுதல் என்பதான பொருளும் இச்சொல்லில் அடங்கும். ஆயினும் ஐரோப்பா முழுவதிலும் ஒரே அரசானது (State) முதன்மையாயிருந்து ஆதிக்கஞ் செலுத்தும் நிலையை அடைதற்காகத் தொடங்கிய போராட்டத்தைப்பற்றிய ஒரு கருத்தையும் இச்சொல் குறித்தது. இப்பொருளையுடைய கருத்துத்தான் பிற்காலத்தில் உலக ஆதிக்கம் (World domination) என்ற ஒரு கருத்தாக விரிவடையலாயிற்று; 'உலக ஆதிக்கம்' என்ற கருத்துத்தான் இது தோன்றிய இக்காலத்திலிருந்து ஐரோப்பிய வரலாற்றில் பெரும் போர்களையெல்லாம் உருவாக்கிற்று; 1914-ம் ஆண்டின் உலகப் பெரும் போரில் மேற்படிக் கருத்தின் கடைசி நிலையை நாம் கண்டுவிட்டோமென்பதாக மட்டிலுமே நாம் எண்ணிக் கொள்ளலாம்.

தற்கால உலக நாடுகளிடையே உள்ள இப்போட்டியின் முதல் நிலையில், பெரிய போட்டியாளர்களாக இருந்தவை பிரான்சும், ஸ்பெயினுமே. இவை இரண்டுக்குமிடையே வல்லரசு சமநிலையை (பாலன்ஸ் ஆப் பவர்-Balance of power) ஏற்படுத்துவதற்குப் போதிய வலியற்ற ஒரு சிறிய நாடாக இங்கிலாந்து இருந்தது; எனினும் தனது அளவின் விகிதத்துக்கும் கூடுதலாகவே அது மூலவளங்கள் (Resources) சிலவற்றைப் பெற்றிருந்தது; மேலும், அதனுடைய நில இயல் அமைப்பானது, அதனுடைய வரலாற்றில் எப்பொழுதும் உள்ளதைப் போல் அப்பொழுதும் அதற்கு ஒரு தனிப்பட்ட பாதுகாப்பைக் கொடுத்தது. எனினும் சிறியதான நாடு எதற்கும், இடர்ப்பாடு மிகுதியான காலம் அக்காலமாகும். ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளிலுள்ள பெரிய வல்லரசுகளெல்லாம் இங்கிலாந்தைத் தத்தம் நோக்கங்களுக்கியையப் பயன்படுத்துவதற்கு ஆவல் கொண்டிருந்தன; எனவே இவ்வல்லரசுகளில் ஏதேனும் ஒன்றுடனோ அல்லது மற்றொன்றுடனோ நட்புறவு கொண்டு, அதில் தனது செல்வங்களையும், எதிர்காலத்தையும் சிக்காமல் விலக்கிக் கொள்ளுதல் என்பது இங்கிலாந்துக்குத் தனது திறம் மிக்க செயலாட்சியின் மூலம் தான் (Skilful management) இயலுமென்றாயிற்று. இவ்விடர், பதினாறும் நூற்றாண்டில் ஏற்பட்ட சமயப் புரட்சியானது நிலைமையைச் சிக்கலுள்ளதாக ஆக்கியதும், மிகுவதாயிற்று; சமயப்புரட்சியானது அனைத்துலக நாடுகளின் போட்டியைத் தீவிர நிலைக்குத் தள்ளி, வெறியும் வெறுப்புமாகிய புதிய கூறுகளையும் அரசியல் வாழ்வில் புகுத்திற்று. இவ்வாறான நிலைமையில், இங்கிலாந்துக்கு வந்த இடர் என்னவெனில், அது வெளி நாட்டவருடைய சிக்கல் நிறைந்த போட்டிமட்டுமன்று, அது இங்கிலாந்தில் தோன்றிய உள்நாட்டுப் போரும் புரட்சியும் சேர்ந்து தோற்றுவித்த இடராகவும் இருந்தது.

இத்தகைய ஒரு காலத்தில், நாட்டினரது மறைமுகமான இணக்கத்தோடு, அரசியலமைப்பு, அதாவது வரம்புக்குட்பட்ட முடியாட்சியானது, நடைமுறையில் அவர்களால் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப்பட்டதில் வியப்பு இல்லை. அதிலுள்ள வியப்பு என்னவென்ருல், அவ்வரசியலமைப்பு அழிக்கப்படாமற் போனதுதான். இங்கிலாந்து அப்பொழுதுதான் உள்நாட்டுப் போரின் அஞ்சத்தக்க விளைவுகளெல்லாம் தனக்குத் தெளிவாக உணர்த்தப்பட்ட ஒரு காலத்தினின்றும் மீண்டு வந்திருந்தது; எனவே ஒரு வலிமிக்க முடியாட்சியே இவற்றினின்று தம்மை விடுவிக்குமென்பதும் மக்களால் அக்காலத்தில் தெளியப் பட்டிருந்தது. ஐரோப்பாவில் வரம்பற்ற ஆட்சி முறையே பொதுவான சூழ்நிலையாக அமைந்த ஒரு காலத்தில், உள்நாட்டு வெளி நாட்டு ஆய்விஞக்களை நாட்டினரனைவரும் அறியும் வண்ணம் அவர்களுடைய மனவுறுதியை ஒன்ருகக் கூட்டி, நாட்டின் கொள்கைகளையும், மூல வளங்களையும் ஒரு முகப்பட்ட கட்டுப்பாட்டுக்குள் (Single control) வைத்திருக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்ட ஒரு காலத்திற்கும் இங்கிலாந்து இப்பொழுது வந்துவிட்டது. இந்நிலையில் நாட்டின் பொதுவான ஆதரவோடு நடைமுறையில் ஒரு வரம்பில்லா ஆட்சி முறை திரும்பவும் அமைக்கப்படுதலே சரி என்பதைத் தெளிவான எதிர்கால உணர்வுடைய அரசியலறிவு எடுத்துக் காட்டும்.

அரசியலமைப்பின் வளர்ச்சியானது சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டுப், பிற்போக்கான வரம்பற்ற ஆட்சிமுறையானது தடையின்றி நடைபெற்ற காலமே பதினேரும் நூற்ருண்டு என்பதாக நாம் எண்ணினுல், நமது கருத்து தவருன ஒன்ருகவே இருக்கும். இரண்டுவகையான காரணங்களினுல், அக்காலமானது மேற்குறித்த நிலையினின்றும் முற்றிலும் வேறுபட்டிருந்த காலமாகும். நாம் பின்னர் கூறுவதுபோல, வலிமிக்க டியூடர் அரசர்கள், தாம் பாராளுமன்றத்தைக் கைவிட்டுவிடுவதைவிட, அரசியலமைப்பின் உதவிகொண்டும், பாராளுமன்றத்தின் உதவிகொண்டும் தாம் விரும்பியவைகள் செய்யப்படுமாறும், நிறுவன வடிவில் வரம்பில்லா ஆட்சி ஒன்று நிறுவப்படுமாறும் பார்த்துக்கொள்ளுவது எளிது என்பதைக் கண்டுகொண்டனர். இக்காலத்தில் சில சமயத்தில் அரசர் எதைச் செய்தல் வேண்டுமென விரும்பினுரோ, அதையே நாட்டினரும் விரும்பினரென்பதும் உண்மையே; சில சமயங்களில் நாட்டினரில் பெரும்பான்மையோரால் உரிமை இணக்கம் (sanction) கொடுக்கப்படாதவற்றையும் செய்யும்படியாகப் பாராளுமன்றத்தை அரசர் கட்டுப்படுத்தித் தூண்டினுரென்பதும் உண்மையே; வேறு சில சமயங்களில், சிறப்பாக

இக்காலத்தின் தொடக்கத்தில், பாராளுமன்றமானது பின்னணிக்குத் தள்ளப்பட்டது; மூன்றும் எட்வர்டின் ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து பெரும்பகுதியான காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இக்காலத்தில் கூடிய பாராளுமன்றத்தின் அமர்வுக் காலங்களிடையே (sessions) வெகு நீண்ட இடைவெளிகள் காணப்பட்டன; இதற்கு நேர் எதிரான போக்கில் அவ்வப்போது பாராளுமன்றமானது தான் அரசரது தலைமைக்கு உட்பட்டிருக்க மறுத்தது; ஆயினும் மிகப் பெரிய செயல்களில் அது அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. ஆயினும் இத்தகைய மாறுபட்ட பல்வேறு சூழ்நிலைகளிலும் பாராளுமன்றமானது பயன்படுத்தப்பட்டது. அதுவே சட்டம் இயற்றும் கருவியாகவும், அதிகாரம் கொடுக்கும் கருவியாகவும், செயலை உண்டாக்கும் கருவியாகவும் இருந்தது. இக்காலத்தில் அரசியலமைப்பு பயன்படுத்தப்பட்ட முறை எவ்வாறெனில், அதில், அரசியலமைப்பின் வடிவங்களே அல்லது தோற்றங்களே (forms) பின்பற்றப்பட்டன; அவ்வடிவங்களின் உட்பொருள் பின்பற்றப்படவில்லை; இதில் ஐயமில்லை. எனினும் அரசியலமைப்பின் வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை நாம் வலியுறுத்துதல் வேண்டும். அரசியலமைப்பானது, பாராளுமன்றத்தின் அதிகாரங்களையும், செயல்களையும் பொறுத்தவரையிலாவது நடைமுறையில் இயங்கிக்கொண்டிருந்தது. இதுவரையிலும் அடையப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் இழந்துவிடப்படவோ மறந்துவிடப்படவோ இல்லை. நாட்டிற்கு எந்த இடரும் வராதமுறையில் தேவையானால் அரசருடன் போராட்டம் நடத்துதற்குத் தக்கவாறு சூழ்நிலைகள் உண்டாகும்போது, அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சியின் உண்மையான உட்பொருளை நிறுவுவதற்கு ஏற்றவாறு அரசியலமைப்பின் நிலை வைக்கப்பட்டிருந்தது

இவ்வாறு அரசருடைய மனவிருப்பத்தை நிறைவேற்றுதற்கு அரசியலமைப்பின் வடிவங்களைக் கையாளுதல் என்ற காரணமே, டியூடர் காலமானது ஒரு பிற்போக்கான காலம் அல்ல என்பதற்குரிய இரண்டாவது காரணத்தையும், அதன் தன்மையையும் காட்டுகிறது. சுருக்கமாகவும், பொதுவான முறையிலும், இதன் உண்மையைப் பின்வருமாறு கூறலாம்: பதினாறும் நூற்றாண்டில் முடியாட்சியின்மீது எந்த அளவுக்குப் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டதோ, அதே அளவுக்கு நாட்டின் சமய நிலையத்தின்மீதும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது; இச்செயல் பதினாறும் நூற்றாண்டில் செய்யப்பட்ட மிக முக்கியமான ஐயத்துக்கிடமில்லாத வேலையாகும். நாம் எந்தத் தற்காலச் சமயநிலையத்தினுடைய நிலைமையையும் வைத்துப் பார்த்தாலும், அதைவிட இடைக்காலத்திய சமய நிலையமானது

சமுதாயத்தினுடைய பொது வாழ்க்கையின் பெரும் பங்கை நாட்டின் அரசாங்கத்தினிடமிருந்து பிரித்துத் தனது ஆட்சி எல்லைக் குள்ளேயே வைத்திருந்தது என்பது விளங்குகிறது. சட்டத் தொடர்புள்ள பல துறைகள், இறுதி விருப்பப் பத்திரங்கள், தாயமுறை, திருமணம், மணவிலக்கு (Divorce) ஆகியவை யெல்லாம் சமயநிலையத்தின் அதிகார எல்லைக்குள்ளேயே அமைந் தவைதாம். தற்கால அரசில் உள்ள வறியவர்களைப் பேணுதல் போன்ற சில ஆட்சிச்செயல்கள் அப்பொழுது சமய நிலையத்தி னிடம் இருந்தன. போப்பின் ஆட்சி என்பது (Papacy) ஓர் அனைத்துலக நாட்டு அரசாக, ஓர் அரசியல் அரசாங்கத்திற்குரிய உள்ளமைப்பும், இயந்திரமும் கொண்டு அமைந்திருந்தது. அத னுடைய தலைநகரத்துக்கு எல்லா ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் அவ்வப்போது அறிக்கைகளும், முறையீடுகளும், வரிப் பணங்களும் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வந்தன; அவற்றைப்போலவே மேலிருந்து கீழ்நோக்கி ஆணைகளும், ஆணைக் குழுக்களும், (commissions) முறைமைத் தீர்ப்புக்களும் (judicial decisions) வந்துகொண்டிருந்தன. இன்னும் சிலவகைகளில் போப்பின் ஆட்சியானது ஓர் அனைத்துலக அரசைவிடப் (International State) பெரியதாயிருந்தது; எவ்வாறெனில் இறைவனது அரசாங்கத் திற்கு நேரடியாகப் போப்பின் ஆட்சியே வகையாளாக இருக்கும் அதிகாரத்தை அது ஏற்றுக்கொண்டது; அந்நிலையில் வெறும் அரசியலமைப்பான எதனையும்விட ஒரு மேலான அதிகாரத்துடன் பேசும் உரிமையையும் மேற்கொண்டது. ஒரு சில அலுவல் களைப் பொறுத்தமட்டில் இங்கிலாந்தானது அக்காலத்திய பல நாடுகளைவிட ஓரளவு தன்னுரிமை பெற்ற நிலையில் இருந்தது; ஆயினும் பொது வாழ்க்கையின் பெரும்பகுதியானது அதனுடைய சொந்த அரசாங்கத்தைச் சார்ந்திராமல் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தைச் சார்ந்தே இருந்தது.

இவ்வாறாக வெளிநாட்டு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கும் நிலைமைதான் பதினாறும் நூற்றாண்டில் தகர்த்தெறியப்பட்டவை களுள் முதலாவதாகும். அப்பொழுது முந்திய சமயநிலையத்தோ டிருந்த தொடர்பானது துண்டிக்கப்படுதல் வேண்டுமென ஒரு வரும் எண்ணவில்லை. முன்னர் போப்பின் ஆட்சிக்குட்பட்டிருந்த பொதுநலன்க ளெல்லாவற்றையும் அரசே தனது முழுக்கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொண்டது; இவ்வகையாக அது சமயநிலை யத்தின்மீதும் அரசாங்கக் கட்டுப்பாட்டை நிறுவிற்று. இதுவே ஒரு புரட்சியாகும். இது முறையாக தன் போக்கில் ஒரு பெரிய புரட்சியைக் கொண்டுவந்துவிட்டது; இதுவே சமயப் புரட்சியாகும்; இப்புரட்சியை நாம் இங்குக் கவனிக்கவேண்டுவ

தில்லை. மேலும் எட்டாம் ஹென்றிக்குக் காதரைன் ஆப் அரகனிட மிருந்து மணவிலக்குப் பெறுதல் வேண்டுமென்ற தனது சொந்த நோக்கங்களும், ஐயுறவுப்பாடாக இருந்த மரபுவழி யுரிமையைத் தீர்ப்பதற்காகத் தோன்றிய அரசியல் முன்னுணர்வும் எவ்வாறு இச் சமயப் புரட்சியைக் கொண்டுவருதற்குக் காரணமாக இருந்தன என்பதும் நமக்குத் தெரிந்துகொள்ளுவதற்கு இங்கு அவ்வளவு முக்கியமல்ல. இங்கு நமக்கு முக்கியமான பொருள் என்னவென்றால், இப்பெரும் அரசியல் மாற்றமானது அல்லது புரட்சியானது, பாராளுமன்றத்தின் நடவடிக்கையினாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதே. 1529-ஆம் ஆண்டில் நிகழ்ந்த அடுத்தடுத்துவந்த பாராளுமன்ற அமர்வுக் கூட்டங்களில் வரிசையாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன; இப்பாராளுமன்றம் ஏழு ஆண்டுகளாக இருந்தது; இச்சட்டங்களின் மூலமாக இங்கிலாந்தைப் போப்பினது அரசாங்கத்தோடு பிணைத்திருந்த பிணைப்புக்களெல்லாம் ஒன்றன்பின்னொன்றாகத் தகர்த்தெறியப்பட்டன. இவ்வளவிலேயே இச்சட்டங்களை நாம் கருதினாலும், இவைகள் பாராளுமன்றத்தின் அதிகாரத்தைக் கூடுதலாகச் செலுத்தியதைக் காட்டுவனவாக இருக்கின்றன; ஆயினும் அவற்றுக்கு இதனினும் மிக்க ஆற்றல் உண்டு. இவற்றின் மூலமாகத்தான் எதிர்காலத்தில் சமயநிலைய அலுவல்களையெல்லாம் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்கு அடிப்படை நிறுவப்பட்டது; இம்முறையில் பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு கடந்த நூறு ஆண்டுகளாக இருந்தே வந்தது; பழைய காலத்திலிருந்த இக்கட்டுப்பாட்டு முறையானது, பதினாறும் நூற்றாண்டிலிருந்த புரட்சியாளர்களுக்குக்கூட மிகத் தீவிரமானதாகக் காணப்பட்டது. இதைவிடவும் மிகுதியானதொன்றாக அது இருந்தது. அரசரானவர் தமது மனம் விரும்பிய மாறுதல்கள் செய்யப்படுதற்காகப் பாராளுமன்றத்தினுடைய உரிமை இணக்கத்தைப் பெற்று, அதனுடைய அதிகாரத்தையும் கேட்டுப் பெற்றனரென்ற உண்மையே பாராளுமன்றத்தின் நிலைமையைத் தெற்றென அவர்கள் ஒப்புக்கொண்டதைக் காட்டுகிறது; அவ்வுண்மை நிகழ்ச்சி எதிர்காலத்துக்கு ஆக்கத்துறையில் மதிப்பு உள்ள ஒரு முன் நிகழ்வாகவும் (A precedent of creative value for the future) அமைந்தது.

நாட்டினரின் பொதுச் செயல்களெல்லாவற்றையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் இச்சமயப் புரட்சியானது முன்னேறிச் சென்ற ஒரு பெரும் கிளர்ச்சியாகும்; அதனை நாம் எடுத்து ஆராயும்போது, "பதினாறும் நூற்றாண்டினது அரசியலமைப்பு சிறிது காலத்துக்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த

ஒரு காலமாகும்'' என்று நம்மால் கூற இயலாது. மேற்கூறிய வாறு எல்லாப் பொதுச் செயல்களையும் அரசாங்கத்தின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரும் முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நிருவாக இயந்திரத்திலும், ஆட்சி இயந்திரத்தில் சிறு திருத்தங்கள் ஏற்பட்டமையும், இக்காலத்தில் பாராளுமன் றத்தின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல், அரசருடைய நேர்வகை யாளாக இருந்த ஆலோசனைக்குழுவின் செயலில் சில நிலைமைகள் தோன்றியமையும் தெரியவரும்; அவையாவன; பாராளுமன்றம் தனது வளர்ச்சியில் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாகத் தன்னிடம் திரட்டிக்கொண்ட அதிகாரங்களெல்லாம் கைவிட்டு விடப்படவில்லை, அவை எல்லாம் அதனிடமே இருக்குமாறு உறுதி யாக்கப்பட்டும், விரிவாக்கப்பட்டும், அரசில் அம்மன்றத்தினுடைய செயலாக வரையறுக்கப்பட்டும், பாதுகாப்பாக வைக்கப்பட்டும் இருந்தன. அரசர் தமது அரசைப் புரட்சியான முறையில் ஒழுங்குபடுத்தும் வேலையில், பாராளுமன்றமே அவ்வேலைக்குரிய அதிகாரத்தையும், உரிமை இணக்கத்தையும் கொடுக்கவல்ல மூலா தாரமாக இருந்ததுபோல அதை மதித்து அதனைச் சார்ந்து நின்றார். எனவே இத்தகைய நிலைமையில் வெகுவான முக்கியத் துவம் வாய்ந்த பல புதிய முன் நிகழ்வுகளெல்லாம் நிறுவப்பட லாயின; இவற்றைவிடச் சாதகமான சூழ்நிலைமைகளோடு, இதற்கு முன்பிருந்ததைவிடப் பரந்த உறுதியான அடித்தளத் தின்மீது ஓர் அரசியலமைப்புக்கொத்த வரையறுக்கப்பட்ட முடியாட்சியை அமைப்பதற்கு வேண்டிய எல்லாம், முன்னேற்பா டாக இருந்தது. இதே நிலைமையை நாம் வேறுவகையாகக் கூறுவோமாயின் பின்வருமாறு அமையும். ''பதினாறும் நூற்றாண்டி லுள்ள அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை, நாம் அக்காலத்தை மட்டிலுமே ஆராய்தலின் மூலமாகவோ அல்லது ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெற்றுவந்த அரசாங்கத்தின் தன்மையையும் முறைகளையும் மட்டிலுமே மதிப்பிடுதலின் மூலமாகவோ, ஆய்ந்து சீர்தூக்கிப் பார்க்க முடியாது; ஆயினும் அதற்காக நாம் இதை யடுத்த காலத்தில் காணப்படுகிற விளைவுகளையே எடுத்து ஆராய் தல் வேண்டும். அவ்விளைவுகள் டியூடர்களுடைய கொள்கையின் உடனடியான விளைவுகள் மட்டுமன்றி உண்மையான விளைவுகளு மாகும்; ஆயினும் இவ்விளைவின் தன்மை இரண்டு காலத்திலும் வேறானது.''

இவ்வளவு சொன்னபோதிலும், அது ஆங்கில வரலாற்றில் பதினாறும் நூற்றாண்டினுடைய அரசியலமைப்பின் உட்பொருள் முழுவதையும் சொன்னதாக ஆகாது. அதன் அரசியலமைப்பின் வளர்ச்சியைக் கூறும் வரலாற்றாசிரியரால் ஆராய்ச்சிக்கு எடுத்துக்

கொள்ளப்படவேண்டிய ஒரு சில சூழ்நிலைகளைப் பொருளியல் சமுதாயம் ஆகியவற்றின் வரலாற்றுசிரியர் சுட்டிக் காட்டுவர். ஒருவகையாகப் பார்த்தால், பதினைந்தாம் நூற்றுண்டின் அரசியலமைப்பு இயந்திரமானது தகுதிபெறுத நிலையிலுள்ளதென்பது விளங்கும்; எவ்வாறெனில் அப்பொழுது, 1295-ம் ஆண்டில் பாராளுமன்றம் கூடிய நாளிலிருந்து, விரைவாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பு இயந்திரத்தைத் தனது நலன்களுக்காகக் கையாளக்கூடிய அளவுக்கு மக்களிடையே அரசியல் துறைப் பயிற்சியும், சமூக முன்னேற்றமும் தோன்றித் தற்காலப் பொருளில் நாடு என்பதை உண்டாக்கவில்லை. ஆறும் ஹென்றியினுடைய நீண்ட ஆட்சிக் காலத்தில் ஆங்கில அரசியல் வாழ்க்கையில் எதனையும் கட்டுப்படுத்தவல்ல ஆற்றலாக விளங்கியது பெருமக்களுடைய வகுப்பே; பதினைந்தாம் நூற்றுண்டிலுள்ள பெருமக்கள் வகுப்போ, தனது சொந்தக் கட்சியின் நோக்கங்களில்தான் ஈடுபாடு உடையதாயிருந்ததேயன்றி, பாராளுமன்றத்திலோ, நாட்டினமைப்பிலோ, ஈடுபாடுடையதாக இல்லை. ஆங்கில வரலாற்றில் 1455-ம் ஆண்டிலிருந்து 1485-ம் ஆண்டுவரையிலுள்ள பெரிய நிகழ்ச்சி என்னவென மேலெழுந்தவாறுகப் பார்த்தால் அது ரோஜாக்கள் சண்டை என்ற உள்நாட்டுச் சண்டையாக இருக்கிறது; ஆயினும் அது பெருமக்கள் வகுப்புக்குள் எழுந்த சண்டையேயன்றி, பொது மக்களுடைய சண்டை ஆகாது; மேலும் தொடர்ச்சியாக உள் நாட்டுப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதிலும், நாட்டினுடைய பொருளியல், சமுதாய வளர்ச்சி பெரிய அளவில் விரைவாக முன்னேறிக்கொண்டிருந்தது. எனவே பெருமக்களையும், அவர்களுடைய சொந்தப் படைகளையும் சட்டத்துக்கு உட்படுத்தி, ஒழுங்கான முறையில் நாட்டுப் பொதுமக்களின் வாழ்க்கையை நிறுவுவதற்கு டியூடர்களுடைய உறுதியான வரம்பில்லாத முடியாட்சி தேவையாயிருந்தது.

நாட்டின் நடு அரசாங்கத்தினுடைய அதிகாரத்தையும், செயல் திறத்தையும் திரும்பவும் அமைப்பதென்ற இந்தப் பெரிய வேலையானது முதலாவது டியூடர் அரசராகிய ஏழாம் ஹென்றிக்கு வந்து சேர்ந்தது. 'இது எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும், அதற்கு எத்தகைய கருவிகள் கையாளப்படுதல் வேண்டும்' என்று தீர்மானிப்பதும், தேவையான அளவுக்கு நிறுவனங்களில் செய்யப்படவேண்டிய மாறுதல்களைத் தீர்மானிப்பதும், இவ்வேலையோடு சேர்ந்த வேலையாகும். அரசாங்கத்தின் நோக்கம், தனி அடையாளம் ஆகிய அரசியலமைப்பு வகையைப் பொறுத்தவரையிலும், அரசாங்கம் இயங்குவதற்குரிய இயந்திரமான நிறுவனவகையைப் பொறுத்தவரையிலும், டியூடர் காலத்திய தனித் தன்மையானது

பெரும்பாலும் ஏழாம் ஹென்றியினுல்தான் தீர்மானிக்கப்பட்டது. டியூடர் காலத்தில் அரசாங்கத்தின் அடிப்படைகளைப் பொறுத்த வரையில் ஒரு சிறிதே மாற்றங்கள் செய்யப்பட்டாலும், அது முதலாம் எட்வர்டின் காலத்தைப் போலவும், மூன்றும் எட்வர்டின் காலத்தைப் போலவும், தனது குறிப்பிட்ட போக்கில், ஆக்கவேலைக் காலமாக இருந்தது. உண்மையில் பார்க்கப்போனுல் அரசருடைய ஆலோசனைக் குழுவைப் பயன்படுத்துதல், பாராளு மன்றத்துக்குச் சிறப்புக் கொடுக்காமல் அதை ஒதுக்குதல், பழைய வலிமிக்க வகுப்பினராகிய பெருமக்களை ஒடுக்குதல், பொருளியலும், வாணிகமும் வளர அவைகளுக்கு ஊக்கம் கொடுத்தல், இன்னும், நிதி பற்றிய சில சட்டங்களின் நுட்பங்களை வகுத்தல் ஆகிய இவற்றிலெல்லாம் நான்காம் எட்வர்டு பின்னுல் வருபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். ஆயினும் டியூடர்கள் செய்ததைப்போல, எந்த யார்க்கு அரசரும், தமது அரசியற் கொள்கையை அதன் முழு அளவுக்கும் கையாண்டு, அதனுடைய முடிவான வெற்றியை வெளிக்காட்டவோ தனது நடவடிக்கைகளை யெல்லாம் ஒன்ருக இணையும்படி ஒன்று திரட்டவோ செய்யவில்லை. ஏழாம் ஹென்றி யார்க்கு அரசர்களது செயலை முன்மாதிரியாகக்கொண்டு அதை ஒட்டித் தான் செய்தனவாகக் கூறப்படுபவற்றில் கூட, அவர் அச்செயலுக்கு முன்னேர்கள் செய்த அதே செயலைவிட ஒரு நிலையான தன்மையையும், அரசியலமைப்பு வடிவத்தையும் கொடுத்தார்; அவர் ஒரு சில வகைகளில் வேறெந்த அரசரும் செய்யாத அளவில், வரம்பில்லாத முடியாட்சி முறைக்கு ஓர் அரசியலமைப்பு வடிவத்தையே கொடுக்கும் நிலைமைக்கு வெகு அருகில் இருந்தார்.

உள்நாட்டு ஆட்சியில் ஹென்றி தீர்த்துவைக்க வேண்டிய முதற்கேள்வியாக இருந்தது எது எனில், அது ஒழுங்கின்மையை ஒடுக்குதல், குற்றத்தைத் தண்டித்தல், நாட்டின் முறைமன்றங்களின் அதிகாரத்தை அவைகளுக்கு மீட்டுக்கொடுத்தல் ஆகியவையே. ரோஜாக்களின் சண்டையின்போது சில சமயங்களில், தனியார்களுக்குள் பெரும் போர் என்பது தங்குதடையின்றி நடைபெற்ற செயலாக இருந்தது. ஏதாவதொரு பெருமகனது குடும்பத்தவர், தங்களுடைய ஊழியருடைய சின்னத்தை (லிவரி - livery) ஒரு படைவீரர் உடையாக வைத்துக்கொண்டு, கருவிகளையுடைய சொந்தப் படைகளை அமைப்பதும், இந்த உரிமை ஏவலாளர்களுடைய (ரிட்டெயினர்ஸ் - Retainers) சட்டத்துக்குப் புறம்பான செயல்களை நாட்டின் முறைமன்றங்கள் தண்டிக்க முற்படும் போது அவைகளை மேற்கூறிய தனியார் படைகளைக் (Private armies) கொண்டு அச்சுறுத்துவதும் ஆகிய செயல்கள் நடை

பெற்றுவந்தன ; இதற்கு வில்லைச் சேவகச் செயல்முறை (Practice of Livery and Maintenance - பிராக்டிஸ் ஆப் லிவரி அன்ட் மெயின்ட்டனன்ஸ்) என்று பெயர் ; கடந்த நூற்றுண்டுகளில் இன்னல் மிக்க இச் செயல்முறையை ஒரு குறையாகப் பாராளு மன்றம் எடுத்துக்கூறி, அவசரச் சட்டம் (தனி ஆணை-ஆர்டினன்ஸ்-Ordinance) செய்வதன்மூலம் சட்டத்தினுல் தடுத்தது; இத் தகைய குற்றவாளிகளை ஆய்வு செய்வதற்கு ஆலோசனைக் குழு வுக்குத் தனி அதிகாரம்கூடக் கொடுக்கப்பட்டது. இப்போது, டியூடர் ஆட்சியில் உள்நாட்டு நடவடிக்கைகளில் முதலாவதாக இக்குறையானது முடிவு செய்யப்படுதற்குரிய உறுதியோடு எடுத் துக்கொள்ளப்பட்டது. வரலாற்றில் நட்சத்திர முறைமன்றம் (Court of Star Chamber) என அழைக்கப்படுவதும், ஆலோசனைக் குழுவின் ஒரு தனிக் குழு அல்லது கமிட்டியுமான மன்றம் 1487-ம் ஆண்டில் பாராளுமன்றத்தின் சட்டத்தினுல் அமைக் கப்பட்டது. மேற்கூறப்பட்ட வழக்குகளையும், அவைபோன்றதும் சாதாரண முறைமன்றங்களைவிட வலிமிக்க குற்றவாளிகளைப் பற்றியதுமான வழக்குகளையும் தீர்ப்பதே இம்முறைமன்றத் தின் வேலையாகும். இவ்வாறு கையாளப்பட்ட இத்தகைய நட வடிக்கைகள் புதியன அல்ல ; ஆயினும் இந்நடவடிக்கைகள் நிறை வேற்றப்பட்ட வலிமிக்க மன எழுச்சி புதியதானது.

நாம் முன்பே பார்த்தவாறு, ஆலோசனைக் குழுவில் மாறுதல் களும், அதற்கு ஆய்வுரை வழங்கும் செயலும், பொதுவான ஆட்சியை மேற்பார்வையிடும் அதிகாரத்தில் பெருக்கமும், பொதுச் சட்ட முறைமன்றங்களையும், தரும நியாய முறைமன் றங்களையும், முறைமன்றங்களாகவும், கருவூலத்தையும், பதிவேட கத்தையும், ஆட்சிக் குழுக்களாகவும் பிரித்த பாகுபாட்டு முறையும் ஆகிய இவை எல்லாம் ஏற்பட்டன ; எனினும், ஆலோ சனைக்குழு அரசருடைய தனிச் சிறப்புரிமையால் நீதி வழங்கு தற்குரிய கருவி என்றநிலையும், அதனுடைய தலையாய முறைமை அதிகாரமும் குறைந்துவிடவில்லை. அத்தகைய அதிகாரம் கையாளப்பட்ட வகையைப்பற்றிக் குறைகள் கூறப்பட்டன ; அதற்குரிய தலையாய அதிகாரமானது சில சமயங்களில் கையாளப் படவில்லை ; ஆயினும் அதற்குரிய அதிகாரம் ஒருபொழுதும் குறைக்கப்படவில்லை. ஆலோசனைக் குழுவினுடைய இவ்வதிகாரம் குற்றவழக்குகளில் கையாளப்படுதல் வேண்டுமென்ற தனியான நோக்கத்திற்காகத்தான் மேலே குறிப்பிட்ட புதிய குழு, அல்லது கமிட்டி அமர்த்தப்பட்டது. அதை அமர்த்திய சட்டத்தில், ஆலோசனைக் குழுவினுடைய அதிகார எல்லை (Jurisdiction) விரிவுபடுத்தப் பட்டதாகவோ, ஆலோசனைக்குழுவே விரிவாக்கப்

பட்டதாகவோ கூறப்படவில்லை; எனினும் இரண்டு தலைமை முறைவர்கள் இக்குழுவில் புதிதாகச் சேர்க்கப்பட்டனர்; பதினாறும் நூற்றாண்டில் பல சமயங்களில், நடைமுறையில் ஒரு தனிப்பட்ட முறையில் செயலாற்றும் ஆலோசனைக் குழுவாகவே இந்த நட்சத்திர முறைமன்றம் இருந்துவந்தது. உண்மையை நோக்கினால், குற்றவழக்குகளை ஆய்வு செய்யக்கூடிய ஆலோசனைக் குழுவினுடைய முறைமை அதிகாரமானது, அதனின்றும் வேறொரு புதிய முறைமன்றத்துக்கு மாற்றப்பட்ட தென்பதும், முற்காலங்களிலேற்பட்ட பாகுபாடுகளிலிருந்து இப்பொழுது தோன்றிய இப் பாகுபாடு வேறுபட்டது எனவும் தெரியவருகிறது; பிந்திய பாகுபாடானது ஒரு பாராளுமன்றச் சட்டத்தால் ஏற்பட்டது; அது முந்திய பாகுபாடுகளைப்போல அவ்வளவு முற்றுப்பெறச் செய்யப் படவில்லை.

வலிமிக்கவர்களால் உண்டாகும் கலகங்களை அடக்குவதில் பயன்படுத்தப்பட்டு, அதனால் மக்களால் நெடுங்காலமாக விரும்பப்பட்ட இந்த நட்சத்திர முறை மன்றத்தினுடைய தனிப்பண்பு என்னவெனில், அது தனிச் சிறப்புரிமையால் முறைமை வழங்கும் முறை மன்றம் (Court of prerogative justice) ஆகும். இந்தத் தனிப் பண்பினால்தான் அது பொதுச் சட்ட வாக்கிலுள்ள செயல் முறையை ஒரு போதும் பின்பற்றியதில்லை; மேலும் ஆய்வு செய்யப்படும் குற்றவாளியை முறை கேடான செயலினின்றும் காப்பதற்காகப் பொதுச் சட்டமானது அளிக்க முயன்று கொண்டிருந்த பாதுகாப்புக்களை இத்தனிச் சிறப்புரிமை முறைமன்றமானது நிலை நிறுத்தி அளிப்பதற்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை. இம்முறை மன்றத்தில் தீர்ப்புச் சான்றாளர் குழு கிடையாது; அது குற்றஞ் சாட்டப்பட்டவரை உறுதிமொழியின் மூலமாக ஆணையிட்டுச் சான்று கூறும்படி கட்டாயப் படுத்தலாம்; ஆய்வு முறையில் அது சித்திரவதையைக் கையாள முடியும். அக்காரணம் பற்றியே இது குற்ற வழக்குத் தரும நியாய முறை மன்றம் (Court of criminal equity) என அழைக்கப்பட்டது; இப்பெயர் பொருத்தமானதே. அக்காலத்திலாவது அது வேறெவ்வகையிலும் நிலை நிறுத்த இயலாத ஒழுங்கு முறையை நிலைநிறுத்திற்று; சாதாரண முறை மன்றங்களுக்குக் கீழ்படியாதவரை அடக்குவதற்காக அதற்குக் கொடுக்கப்பட்ட அரசருடைய தனிச்சிறப்புரிமை அதிகாரத்தை, அது நேரடியாகவே கையாண்டது என்ற காரணத்தினால்தான், அது மேற்கூறியவாறு ஒழுங்கை நிலைநிறுத்த முடிந்தது. அரசரை எதிர்ப்பதென்பது மிகவும் கடுமையான ஒரு செயலாகும். எனினும், ஓர் ஆணவமான கொடுங்கோலாட்சியினுடைய திறமிக்க ஒரு கருவியாக இம் முறை மன்றமானது ஆகக்கூடுமென்பதும்

இதிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது; கடைசியில் அது இவ்வாறான ஒரு நிலைக்கு அருகில் வரத்தான் செய்தது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு அது ஒரு பயனுள்ள நோக்கத்திற்காகச் செயலாற்றியது; டியூடர் காலத்துக்குப் பிந்திய வேறொரு காலத்தில், திட்டமிடப்பட்ட கட்டுப்பாடற்ற ஆட்சி தோன்றிய போது, பொதுச் சட்ட முறைமன்றங்களைத் தமது வரம்பற்ற அதிகாரத்தின் கருவிகளாக அரசர் மாற்றுதபடி, அச்சோதனையினின்றும் அவரை இம்முறை மன்றமானது காத்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் சில காலம் தன் உரிமை குறைவாக இருந்த ஆலோசனைக் குழுவானது, டியூடர் காலத்தில், அதற்குமுன் எக்காலத்திலும் இராத அளவுக்கு, அன்றாட அரசாங்க அலுவலில் அதிகாரமும் ஆற்றலும் உடையதாக இருந்தது. குறிப்பிட்ட இப்பொருளில் டியூடர் காலமானது ஆலோசனைக் குழுவினுடைய அலுவலின் பெருங்காலமாக இருந்தது; இக்காலத்தில் அதனுடைய நிலைமையானது, பெரிய அலுவல்களாகிய கொள்கையை வகுப்பது என்பதில் காணப்படவில்லை; அது அரசாங்க அலுவல்களைக் கண்காணிக்கும் அதனுடைய மேலாண்மை உரிமையில் காணப்படுகிறது. அதனுடைய இந்தநிலைமையானது, அதனின்றும் பிறந்த இளையபிள்ளை போன்றிருக்கிற தற்காலத்திய காபினெட் அமைச்சவையின் நிலைமையினின்றும் வேறுபட்ட ஒன்று அன்று. நெடுங்காலமாக அவ்வப்போது வழக்கத்திலிருந்து வந்ததும், பெரும்பாலும் ஓர் இழிவான தன்மையை உணர்த்தியதுமாகிய 'பிரிவி கௌன்சில்' (Privy Council) என்ற பெயரானது இப்பொழுது முறையான பட்டமாக ஒப்புக் கொள்ளப்பட்டது; இப்பட்டத்தை, இக்காலத்தின் இடைவரையில் அரசரை ஒழுங்காகச் சார்ந்திருந்து, முறைமை அலுவல்களை விடுத்து, அரசாங்க அலுவல்களைச் செய்து வந்த ஆலோசனைக்குழு ஏற்றுக்கொண்டது. முறைமை அலுவலானது நட்சத்திர முறை மன்றத்தில் அமைந்திருந்த ஆலோசனைக் குழுவுக்கு வந்தது. எனினும் இந்த இருவகைப்பட்ட ஆலோசனைக் குழுவின் வடிவங்களுக்குமுள்ள வேறுபாடு, அவைகளில் மிக முக்கியமான செயல்களில்தான் காணப்பட்டதேயன்றி, அவை இரண்டின் அதிகாரத்துக்கும் இடையே அமைந்த திட்டவட்டமான எல்லைக்கோட்டினால் உண்டாகவில்லை; இதுவே இப்பொழுது ஆலோசனைக் குழுவில் தோன்றிக்கொண்டிருந்த பாகுபாடானது, இயல்பாக நடைபெற்ற ஒன்று என்பதை, ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாகக் காட்டுகின்ற அறிகுறியாகும். பிரிவி கௌன்சிலானது பழைய சிறு ஆலோசனைக்குழுவினுடைய எல்லாச் சிறப்புக் கூறுகளையும் உடையதாகும்; ஆனால் நட்சத்திர முறை மன்றமானது ஒரு தனிப்பட்ட

குழுவுக்கு மெதுவாக ஒதுக்கப்பட்ட, ஒரு தனிப்பட்ட செயலைச் செய்யும் மன்றமாகும்.

கடந்த காலத்தில் ஆலோசனைக்குழுவானது தனது வேலையின் பெரும்பகுதியைக் குழுக்கள் மூலமாகவும் (Committees), ஆணைக் (Commissions) சழகங்கள் மூலமாகவும் செய்துவந்தது; டியூடர் காலத்தில் புதிதாக உண்டாக்கப்பட்டது, அல்லது திரும்பவும் நிறுவப்பட்டது நட்சத்திர முறைமன்றம் ஒன்றுமட்டுமன்று. வேண்டுகோள் முறை மன்றம் (the Court of Requests) என்ற ஒரு புதிய முறைமன்றமானது ஏழைகளுடைய வழக்குகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்டது; ரோமானிய கிறிஸ்தவ சமயத் தலைமையானது நீக்கப்பட்ட பொழுது, புதிய முறை மன்றங்களான மிகை வருமான முறை மன்றம் (Court of Augmentation), முதலாவது, பத்தாவது வருமானங்களின் முறைமன்றம் (Court of first fruits and tenths) முதலியவை அமைக்கப்பட்டன; இவை சமயநிலையத்தினின்றும் அரசருக்கு மாற்றப்பட்ட நிலங்களையும், வருமானங்களையும் பற்றிக் கவனிப்பதற்காக நிறுவப்பட்டன; வேறொரு குழுவாகிய வர்ர்டு நிருவாக மன்றம் (court of wards) என்பது அரசருடைய பொறுப்புரிமைபற்றிய படைமானியவழக்குகளை யெல்லாம் ஆய்ந்தது; வேல்ஸ் குழு அல்லது முறைமன்றம் (Council of Wales), வடநீதி மன்றம் (Council of North) என்பவை அரசருடைய ஆணைகளை நாட்டின் எல்லைப் புறங்களில் செலுத்தி, அவ்விடங்களில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டின; ஆலோசனைக் குழுவின் வேறு கிளைகள் அயர்லாந்திலும், கலேயிலும் நிறுவப்பட்டன. உயர் ஆணை நீதிமன்றம் (court of high commission) எனபதைப் பற்றிப் பின்னர் விரிவாகக் கூறப்படும். இந்த முறைமன்றங்களெல்லாம் ஆலோசனைக் குழுவினின்றும் தோன்றியவைகளே; அவை அதனுடைய நேரான மேற்பார்வையிலிருந்தன; மேலும், இவை போன்ற இன்னும் பல தற்காலிக ஆணைக்குழுக்களை ஆலோசனைக்குழு எந்தக் கோட்டத்திற்கும் அனுப்பவோ அல்லது எந்த நிகழ்ச்சியையும் ஆய்வு செய்யவோ இயலும். பலதடவைகளில் மிக முக்கியமான வழக்குகளில் அரசர் தனது ஆலோசனைக்குழுவை முறையாகக் கலந்து கொள்ளாமலே நடவடிக்கை எடுத்ததாகத் தெரிகிறது; ஆயினும் ஆலோசனைக் குழுவினரால் எல்லா அலுவலும் கவனிக்கப்படுதற்கு உரியதே.

ஆலோசனைக் குழுவுக்கும், அரசருடைய மனை அலுவலருக்கும் (King's official household) முற்காலத்திலிருந்த பழைய தொடர்பு தொடர்ந்து இருந்தாலும், இக்காலத்தில், தற்கால

முறையில் ஒரு புதிய அலுவல் தொடர்பு ஏற்பட்டது. சில பழைய அலுவலகங்கள் தற்கால முறைக்கு ஒப்பப் புதுப்பிக்கப்பட்டன; கூடுதலாக வளர்ந்து வரும் அலுவலைச் செய்வதற்காகச் சில புதிய அலுவலகங்களும் உண்டாக்கப்பட்டன. நீதித் தலைவர் பெருமகன் (Lord Chancellor) ஆலோசனைக் குழுவில் தரத்தில் மிக உயர்ந்தவராகவே மதிக்கப்பட்டார்; ஆனால் இக்காலத்தில் முன்னைப்போல அவர் அரசருடைய அரசாங்க அமைச்சராக இல்லை; அவர் நீதித்துறை அலுவலராகவே ஆயினர். அரசாங்க முத்திரை அதிகாரியான பெருமகன் (Lord Keeper of the great seal) நீதித் தலைவர் பெருமகனுடைய அலுவலைச் சில சமயம் செய்தார்; அவருடைய அதிகாரங்களும், முறைமை வரம்பும், எலிசபெத் காலத்திய சட்டம் ஒன்றினால் நீதித் தலைவருடையனவற்றுக்கு ஒத்தனவாக ஆக்கப்பட்டன. நாட்டின் நிதித்துறையின் தலைவராகப் பொருளாளர் பெருமகன் (Lord Treasurer) இருந்தார். பிரிவி கௌன்சிலின் தலைவர் பெருமகன் என்ற அலுவல் புதியதான ஒன்று; அது எப்பொழுதும் நிரப்பப்படவில்லை. பிரிவி முத்திரையாளரான பெருமகன் (Lord Privy Seal) இக்கருவியின் பொறுப்பாளராக இருந்தார்; இப்பொழுது அரசாங்க அலுவலில் பெரிய முத்திரையைப் போல அது முக்கியமானதாக இருந்தது. இவை எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது அரசரது செயலாளர் (King's Secretary) என்ற புதிய அலுவலாகும்; அதுவே பிற்காலத்தில் அரசாங்கச் செயலாளர் (Secretary of State) என அழைக்கப்பட்டது. இவ்வலுவலானது பண்டைக் காலத்தில் பதின்மூன்றும் நூற்றாண்டில் அரசரது எழுத்தலுவலர் அலுவலிலிருந்து தோன்றிய ஒன்றாகும்; ஆயினும் அது பதினைந்தாம் நூற்றாண்டில் தான் மிக முக்கியமான ஒன்றாக ஆயிற்று; பதினாறும் நூற்றாண்டில், இது இதன் பெயரைத் தாங்கிய தற்கால அலுவல்கள் தோன்றுவதற்குரிய மூலாதாரமாயிற்று. பெரும்பாலும் செயலாளராக இருப்பவர், தாமஸ் கிராம்வெல் (Thomas Cromwell), பெருமகன் பர்லே (Lord Burghley) ஆகியோரைப் போன்று செல்வாக்கும் திறமும் உடையவராக இருப்பர்; அவர் அரசருக் கருகிலேயே இருந்து, அரசருக்கும் மற்ற அலுவலாளருக்கும் இடையேயும், அரசருக்கும் வெளி நாடுகளுக்கும் இடையேயும் செய்தித் தொடர்பை உண்டாக்கும் போக்கு வழியாக (Channel of Communication) வேலை செய்தார்; அவரே அரசருக்கு வகையாளாகப் பாராளுமன்றத்தின் ஏதாவதொரு அவையில் இருந்தார்; அவர் பல்வேறு திறப்பட்ட செயல் நலன்களை மேற்பார்வையிட்டுவந்தார்; இது, பதினாறும் நூற்றாண்டில் செயலாளர் அலுவலானது தற்காலத்திலுள்ளதைப் போல ஐந்து அலுவல்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது என்பதனால் நமக்கு உணர்த்தப்படுகிறது.

பெரும்பாலும் இதிலுள்ள அலுவல் கூடுதலாக ஆகிவிடுவதால், இரண்டு செயலாளர்கள் அமர்த்தப்பட்டனர்.

டியூடர் காலத்தில் ஒரு திட்டவட்டமான காபினெட் அமைச்சவை இல்லை ; எல்லாக் கொள்கைகளையும் வகுப்பதற்காக அரசர் வெளியாரது தூண்டுதலில்லாமல், எவரைக் கலந்தாலோசித்தல் வேண்டும் என்பதைத் தாமே தீர்மானித்தார் ; இதில் அவரது முடிவு, ஆலோசிக்கப்படவேண்டிய செயலின் தன்மையைப் பொறுத்தும், காலத்தைப் பொறுத்தும், அவருடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்தும் அமைந்தது; ஆயினும் எல்லா அரசாங்கச் செயல் முறைகளும் சிறிது சிறிதாகத் தற்காலத்தில் காணப்படும் கூறுகளிலுள்ளதைப்போல அமைந்தன. எனவே அரசாங்கம் ஆலோசனைக் குழுவுக்கும் பாராளு மன்றத்துக்குமிடையே ஒரு தொடர்பை உண்டாக்கிற்று. ஆலோசனைக் குழுவில் உறுப்பினரை அமர்த்துதலிலும், அதனுடைய கொள்கையை வகுப்பதிலும், பாராளுமன்றத்துக்கு எந்த வகையான செல்வாக்கும் கிடையாது. அவ்வாறு செய்வதற்கு அதற்கிடம யாதொரு வழியும் இல்லை. ஆயினும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் பாராளு மன்றத்திலுள்ள ஏதாவதொரு அவையில் உறுப்பினராக இருந்தனர்; எனவே அவர்கள் பாராளுமன்றத்தின் தீர்மானங்களைக் கட்டுப்படுத்தவல்ல செல்வாக்கும் உடையவராயிருந்தனர்; இத் தீர்மானங்களை அவர்கள் சில குறிப்பிட்ட காலங்களில் மிகவும் கருத்துடன் கவனித்தனர்.

பாராளுமன்றத்துக்கும் ஆலோசனைக் குழுவுக்குமுள்ள தொடர்பை, நாம் அயர்லாந்தின் அரசியலமைப்பு வரலாற்றில் காணப்படுகிற ஒரு மிக முக்கியமான சட்டத்தின் மூலம் விளக்கலாம்; இச்சட்டமானது அண்மையில் காணப்பட்ட கருத்து மாறுபாட்டோடு மிக்க தொடர்புடையது. 1495–ஆம் ஆண்டில் ஐரிஷ் பாராளுமன்றம் ஒரு சட்டம் செய்தது ; அதிலுள்ள ஒரு பிரிவின் படி, இங்கிலாந்தின் அரசரும் அவரது ஆலோசனைக் குழுவும் சேர்ந்து, ஐரிஷ் பாராளுமன்றம் கூடுவதையும், அது நிறைவேற்றக் கருதுகிற சட்டங்களையும் ஒப்புக்கொண்டாலல்லாமல், அயர்லாந்தில் யாதொரு பாராளுமன்றமும் கூட முடியாது. பாய்னிங்ஸ் சட்டம் (Poyning's Law) என்றழைக்கப்பட்ட இச்சட்டமானது பிற்காலத்தில் ஐரிஷ் பாராளுமன்றத்தினுடைய உரிமைகளில் மிகவும் கடுமையாகக் குறுக்கிட்டது; ஆயினும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டகாலத்தில், இங்கிலாந்தில் காணப்படாத நிலைமை எதனையும் அது அயர்லாந்துக்குச் சட்டமாக ஆக்கவில்லை. இங்கிலாந்திலும், அரசரும் அவருடைய ஆலோசனைக் குழுவும் இசைவு கொடுத்தாலல்லாமல், ஆங்கிலப் பாராளுமன்றம் கூடுதல்

இயலாது; அது கூடும்போதும், அதற்கு டியூடர் காலம் முடியும் முன்னுல், தன் முயற்சியினுல் ஒன்றும் செய்ய முடியாமலிருந்தது; அது, நாம் தற்காலத்தில் அரசாங்க மசோதாக்கள் (Government Bills) எனக் குறிப்பிடுபவற்றைத்தான் நிறைவேற்றிற்று.

ஆலோசனைக் குழுவுக்குத் தொடக்கத்திலிருந்தே வந்துள்ள சட்டமியற்றும் உரிமையானது பதினுரும் நூற்ருண்டில் மிகவும் விரிவுபடுத்தப்பட்டது; சட்டம் இயற்றும் கொள்கையிலல்லாமல், விளம்பரங்களை வெளியிடுதலில் இவ்விரிவு காணப்பட்டது. டியூடர் காலத் தொடக்கத்தில் காணப்பட்ட கலகங்களை அடக்குவது சிறிது கடினமாக இருந்ததனுலும், சமயச் சீர்திருத்தச்சட்டங்கள் செய்யப்பட்டபோது தோன்றிய புதிய குற்றங்களை வகைப்படுத்தி வரையறை செய்து, அவற்றைத் தண்டிப்பதற்கு வகை செய்ய வேண்டியிருந்ததனுலும், விரைவாக, எண்ணிய உடனே விதிகளையும், ஒழுங்குகளையும் செய்யும் முறையைப் பின்பற்றி, அவ்விதிகளையும், ஒழுங்குகளையும் ஆலோசனைக் குழு சுருக்கமாக, நடைமுறை வகைகளிலல்லாமல் (Summarily) நிறைவேற்ற வேண்டியிருந்தது. "அரசரால் வெளியிடப்படுகின்ற விளம்பர ஆணைகள் (Royal Proclamations) எந்தச் சட்டத்திற்காயினும், பொதுச் சட்டங்களுக்காயினும் அல்லது நாட்டில் சட்டமாக இருக்கிற வழக்கங்களுக்காயினும் நேர்மாருக இல்லாவிட்டால், அவற்றைப் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களாகக் கருதி, யாவரும் அவற்றுக்குக் கீழ்ப்படிந்து, அவற்றைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்" என்பதாக 1539-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் செய்த சட்டம் கூறிற்று. இத்தகைய விளம்பர ஆணைகளை மீறியவர்களை ஆய்ந்து தண்டிப்பதற்காக மேற்கூறிய இச்சட்டம் ஒரு ஆலோசனைக் குழு முறை மன்றத்தையும் (Council Court) உண்டாக்கிற்று. இச்சட்டம் ஒன்றை அறிவிப்பதாக இருக்கிறதே யொழியப் புதிதாக ஒன்றை உண்டாக்குவதாக இல்லை. இதனுல் விளம்பர ஆணைகளின் பொருளிலோ தன்மையிலோ யாதொரு மாறுதலும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை; எனவே இது 1547-ல் தள்ளுபடி செய்யப்பட்டது. டியூடர்கள் காலத்தில் ஏற்பட்ட பல செயல்களைப் போலவே, ஆலோசனைக் குழுவினுடைய சட்டமியற்றும் உரிமைப் புதுப்பிப்பும் (Revival of Council Legislation) அரசரது அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டதைக் காட்டுவதுபோலத் தோன்றுகிறது; இதற்குப் பொதுவாக நாட்டில் உடன்பாடு இருந்ததுபோலவும் தோன்றுகிறது; ஆயினும் இவ்வகையில் நிறுவப்பட்ட முன் நிகழ்வுகளுக்கெல்லாம் (மேற்கோள்கள்-Precedents) பிறிதொரு காலத்தில் முற்றிலும் வேருன பொருள் இருந்தது.

பதினைும் நூற்றுண்டில் ஆலோசனைக் குழுவானது இவ்வாறு அரசாங்கத்தின் கருவியாகச் சிறப்புற்றிருந்ததற்குரிய காரணங்களை நாம் எளிதில் கண்டுகொள்ளலாம். ஆனல் இக்காலத்திய நிகழ்ச்சிகளினல், பாராளுமன்றத்தினுடைய நிலைமை திருத்தமடைந்து, உறுதியாக்கப்பட்டதென்பதை நாம் கண்டுகொள்வது அவ்வளவு எளிதல்ல. தனக்கு அடிமைபோல உதவுகிற ஒரு பாராளுமன்றமே இருக்கவேண்டுமென்பதற்காக, உறுதியான முயற்சிகளை (அரசருடைய) அரசாங்கம் கையாண்டதென்பதை நமக்குச் சில சான்றுகள் காட்டுகின்றன. எனவே இச்சான்றுகள் மிகமிக உதவியாக ஓர் அடிமைபோல நடந்துவந்த பாராளுமன்றத்தினுடைய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை நாம் காண இயலாதபடி மறைத்துவிடுகின்றன. இதிலிருந்து, அரசாங்கத்தால் இவ்வாறு கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சட்ட மன்றமானது, கடைசியில் நிருவாகம் ஏவியவற்றைச் செய்யும் ஒரு கருவியாக அமைந்து விடுதலைத் தவிர வேறொன்ருகவும் இருக்க முடியாது என நமக்குத் தோன்றுகிறது. எனவே இந்தத் தோற்றமானது ஒரு சிக்கலான புதிரை உண்டாக்குகிறது; பாராளுமன்றத்தின் மீது கட்டுப்பாட்டை நிறுவிய அரசருடைய நோக்கத்தையும், அவர் நிறைவேற்றக்கருதிய நோக்கங்களின் தன்மையையும் நாம் தெரிந்துகொண்டால், இப்புதிர் விடுபடும்; மேற்கூறிய நிலைமையின் உண்மைப் பொருள் தெளிவாக விளங்கும்.

பதினன்காம் நூற்றுண்டில் இருந்ததுபோல், டியூடர் காலத்தில் பாராளுமன்றமானது அடிக்கடி கூடவில்லை. ஏழாம் ஹென்றி தமது இருபத்து நான்கு ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஏழே பாராளுமன்றங்கள்தாம் கூட்டினர், இவற்றில் ஒன்றே ஒன்றுதான் அவரது ஆட்சியின் பிற்பகுதியில் கூட்டப்பட்டதாகும்; எலிசபெத் அரசி தமது நாற்பத்தைந்து ஆண்டு ஆட்சியில் பத்துப்பாராளுமன்றங்களைக் கூட்டினள். ஆயினும் 'பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருந்ததனல்தான், டியூடர்கள் மனம் விரும்பியே அதை மிகுதியாகக் கூட்டவில்லை' என்பதாக நாம் சொல்ல இயலாது. பாராளு மன்றத்தை ஒரு தொந்தரையான கருவியாகவே அவர்கள் எண்ணி, இயன்றவரை அது இல்லாமலே செயலாற்றுதற்கு விரும்பினர். ஆயினும் அவர்களுடைய கொள்கையைப் பொறுத்தவரையில் அது அவர்களுக்கு இன்றியமையாத ஒன்ருக இருந்தது; அது அவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருந்த பொழுது, அவர்கள், தமக்கு இணக்கமாக இருக்கத்தக்க பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குச் சிறிது முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

பொது மக்கள் மன்றத்தோடு ஒப்பிடுகையில் தனக்கு இருந்த சிறப்பை ஓரளவு பதினைந்காம் நூற்றாண்டில் பெருமக்கள் மன்றம் இழந்துவிட்டது. அது அச்சிறப்பை மீண்டும் அடையவில்லை; எனினும்அதிகாரத்தில் அது பொதுமக்கள் மன்றத்திற்குத் தாழ்ந்த நிலைமையிலில்லை ; மேலும் கீழ் அவையின் உறுப்பினர்களிடத்து அது செலுத்திய சமுதாயச்செல்வாக்கும், நேரடியான தொடர்பும் புறக்கணிக்கத்தக்கது அல்ல. மரபாகவந்த உறுப்பினர்களையுடைய மன்றம் அது, என்ற முறைப்படி பார்த்தால், கொள்கையின்படி, அந்த மன்றம் அரசரினின்றும் விடுபட்டுத் தனித்த ஒன்றாகவே இருத்தல்வேண்டும் ; ஆயினும் உண்மையில் அது அவ்வாறு இல்லை; அதற்குரிய காரணங்களையும் நாம் அறிதல் எளிது. 1529-ஆம் ஆண்டில் சீர்திருத்தப் பாராளு மன்றம் கூடும் வரையிலுள்ள காலத்தின் பெரும்பகுதியில், அம்மன்றத்தில் சமய நிலையத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அதாவது மேற்றிராணியார்கள், மடத்துத் தலைவர்கள் ஆகியோர்—பெரும்பான்மையினராக இருந்தனர். அவர்கள் தங்களுடைய அலுவல் நிலைகளுக்கும், அலுவல் உயர்வு களுக்கும், மற்ற உதவிகளுக்கும் அரசரையே சார்ந்து நின்று, அவருக்குக் கட்டுப்பட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் எட்டாம் ஹென்றி போப்பின் அதிகாரத்துக்கு எதிராகச் செய்த சட்டங்களை ஒப்புக்கொண்டு, தங்கள் வாக்குகளை அளித்தனர். இலௌகிகப் பெரு மக்களான உறுப்பினர்கள், (lay peers) ரோஜாக்கள் சண்டையினால் வலியிழந்திருந்தனர் ; ஆயினும், சில சமயங்களில் கூறப்படுவது போல இவர்கள் முழுவதும் அழிக்கப்பட்டு விடவில்லை. ஏழாம் ஹென்றியின் முதற் பாராளு மன்றத்தில் இருபத்தொன்பது இலௌகிகப் பெருமக்கள் (lay peers) இருந்தனர் ; இவ்வெண்ணிக்கையானது அந்த நூற்றாண்டில் இருந்த அத்தகைய உறுப்பினரது சராசரி எண்ணிக்கைக்கு மிகவும் குறைந்ததன்று; இவ்வெண்ணிக்கை ஆறாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் இருபத்து மூன்றாகக் குறைந்திருந்தது ; அது ஒரு போதும் ஐம்பதுக்குக் கூடுதலாகப் போனது கிடையாது ; பதினாறாம் நூற்றாண்டில் அவ்வெண்ணிக்கை ஒரே ஒரு தடவைதான் அறுபதாக உயர்ந்திருந்தது. இக்காலத்தில் பல புதிய குடும்பங்களுக்குப் பெருமக்கள் பட்டயங்கள் வழங்கப் பட்டாலும், பெருமக்கள் வகுப்பானது வெகுவிரைவாக ரோஜாக்கள் சண்டைக் காலத்திலிருந்ததைப் போலக் குறைந்துகொண்டேவந்தது. பழைய பெருமக்கள் குடும்பங்களைச் சார்ந்திராமல், பல புதிய குடும்பங்களைச் சமுதாயத் தரத்தில் பெருமக்களாக உயர்த்தி, அவற்றையே பெரும்பாலும் தாம் உதவிக்காகச் சார்ந்திருப்பது என்பது, பொதுவாக டியூடர்களுடைய கொள்கையாக இருந்தது. பிற்கால வரலாற்றில்

மிகவும் புகழோடு விளங்கிய பெருமக்கள் குடும்பங்களான கவன்டிஷ் (Cavendish), செசில் (Cecil), பாகட் (Paget), ரஸ்ஸல் (Russel) சிமோர் (Seymour), ஸ்பென்சர் (Spencer) முதலியவை யெல்லாம் தங்களுடைய வளர்ச்சியின் முதல் நிலையை டியூடர் காலத்தில்தான் அடைந்தன. எனவே இதையடுத்த எந்தக் காலத்திலும், அரசருக்குப் பழைய மரபின்படி அமைந்த எதிர்க் கட்சியைப் போன்றதொரு தலைமையைப், பெருமக்கள் மன்றம் தோற்றுவிக்கவில்லை.

பொது மக்கள் மன்றத்தைப் பொறுத்த வரையில் கூட நாம் கவனிக்கவேண்டுவது என்னவெனில், அதனுடைய உறுப்பினர்கள் எந்த வகுப்புக்கு வகையாட்களாக இருந்தார்களோ, அந்த வகுப்பானது இன்னும் அளவில் சிறியதாகவே இருந்தது என்பதே; நாம் உயர்தர நடு வகுப்பாரெனக் குறிப்பிடும் நிலைக்குக் கீழே அது ஒரு போதும் வரவில்லை. பேரூர்கள் தங்களுடைய வகையாட்களாகப் படைமானிய வீரர்களையும், தனி நில உடைமையாளரையும், நகர வாசிகளைப்போல அடிக்கடி தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தது. உறுப்பினர்களுடைய நிலைமையின் தன்மையைப் பொறுத்த வரையிலோ, அல்லது அவர்களுடைய முக்கியமான நலன்களைப் பொறுத்தவரையிலோ, பேரூர்களுக்கும், கோட்டங்களுக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை. உண்மையில் உறுப்பினர்களுடைய முக்கியநலன்களே பொதுமக்கள் மன்றத்தினுடைய கொள்கையை உருவாக்கிற்றே தவிர, அரசருடைய தனி விருப்பங்கள் அதைத் தீர்மானிக்கவில்லை என்பது ஈண்டுக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று ஆகும். ஆயினும், இவ்விரு திறத்தாருடைய நலன்களும் ஒரேமாதிரியாக (ஒன்றையொன்று) ஒத்திருந்தன என்பதும், அவை பெரும்பாலும் ஒத்திருப்பதாகத் தோன்றும்படி ஆக்கப் பட்டன என்பதும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டியவையே.

டியூடர் காலமானது பெரிய அளவில் பொருளியல் முன்னேற்றம் ஏற்பட்ட ஒரு காலமாகும்; மக்களுக்குப் பொருளியல் துறையிலுள்ள தனிநலன்தான் பொதுமக்கள் மன்றத்தில் அவர்கள் உறுப்பினராதற்குச் சிறப்பான ஒரு ஈடுபாட்டை உண்டாக்கிற்று. பயிர்த் தொழிலில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது; இது கம்பளி மயிரைப் பெருக உண்டாக்குவதால் கிடைக்கும் பெரும் ஊதியத்தினால் உண்டாயிற்று; எனவே இது வேளாண்மைக்குரிய நிலங்களை மேய்ச்சல் நிலமாக மாற்றிற்று; இதனால் பொதுமக்கள் மன்றத்தில் எந்த வகுப்பினருக்கு வகையாட்கள் இருந்தனரோ, அவ்வகுப்பு மிகவும் மாறுதலுக்குட்பட்டது. வகையாட்களை

அனுப்பக்கூடிய வகுப்பினர் இம்மாறுதலால் தமக்கு உண்டாகும் நன்மையை உணர்ந்திருந்தனர்; இதனால் தொழிலாளர் வகுப்பினருக்கு உண்டாக்கக்கூடிய தீங்குகள் விளைந்தன. வெளிநாட்டு வாணிகமானது வெகு விரைவாக வளர்ச்சியடைந்தது; இதுவே வாணிகப் பட்டணங்களுடைய கவனத்தை மிகுதியாக ஈர்த்தது. துணிந்து செயலாற்றக் கூடிய வணிகர்களால் பெரும் வாணிகச் சங்கங்கள் இக்காலத்தில் தோன்றலாயின: வாணிகத்துக்குத் தடையாயிருந்தவையெல்லாம் வாணிக உடன்படிக்கைகளினால் தகர்ந்து போய்க் கொண்டிருந்தன. கப்பல் போக்கு வரத்துச் சட்டங்களின் (நாவாய்ச் சட்டம்-நாவிகேஷன் ஆக்ட்—Navigation Act) மூலமாக கப்பல் போக்கு வரத்துக்கும், கப்பல்கட்டும் தொழிலுக்கும் வளர்ச்சி ஏற்பட்டது; நாட்டின் தொழில்களுக்கு அரசாங்க உதவிகளினாலும் (Bounties), தனி உரிமைகளினாலும் (Monopolies), பொருட்காவல் வரிகளினாலும் (Tariffs) ஊக்கம் அளிக்கப்பட்டது; புதிய வாணிக வழிகளைக் கண்டு பிடிப்பதில் மக்களுக்கு ஈடுபாடு பெருகி வரலாயிற்று; இக்காலம் முடிவடையுமுன்னரேயே, தனது வாணிக வளர்ச்சியின் பொருட்டாகவாயினும் இங்கிலாந்து நாடானது குடியேற்ற நாடுகளை நிறுவும் நோக்கத்தோடு எதிர்காலத்தைப் பார்த்தது; இதனால் திட்டமாகக் கடல் வழியாகத்தான் தனக்கு எதிர்காலத்தில் பெருமை உண்டாகுமென்ற கருத்து அதற்கு வளர்ந்து வரலாயிற்று. நடுத்தர வகுப்பாருடைய உண்மையான ஈடுபாடு இவற்றில்தான் காணப்பட்டது; மேலும் அரசியலமைப்பை இயக்குவதில் இத்தகைய ஈடுபாட்டுக்கு இருந்த தொடர்பு இங்கு வற்புறுத்தப் படவேண்டும். "தமக்கு வாணிகத்துறையில் பாதுகாப்பளிக்கும் அரசாங்கம் எவ்வகையதாயினும் சரி, அதனை ஆங்கிலோ-சாக்சனியர் மனநிறைவோடு தாங்கிக் கொள்ளுவார்" என்ற வசை மொழியானது, வேறெக்காலத்திலுமல்லாமல் இக்காலத்தில்தான் மெய்ப்பிக்கப் படுமளவுக்கு வந்தது.

வலிமிக்க ஓர் அரசாங்கத்துக்குக் காட்டப்பட்ட இந்த ஆதரவுக்கு இன்னொரு காரணமும் கூறப்படுதல் வேண்டும். அழிவைத் தந்த உள்நாட்டுப் போராகிய ரோஜாக்கள் சண்டையைப்பற்றிய நினைவானது, இக்காலத்தில் முதற்பகுதியில் மக்களுடைய மனத்தில் பசுமையாக இருந்தது. இதைப்போல யாதொன்றையும் நாட்டினர் விரும்பவில்லை. பூசலை விளைவிக்கும் வழியுரிமையின் இடர்களும், வலியற்ற அரசாங்கத்தினால் விளையும் இடர்களும் விலக்கப்படுதல் வேண்டும். இதற்கு முந்திய நூற்றாண்டின் கடைசிப்பாதியில், வெளிநாட்டுப் படையெடுப்பினாலும், சமய மாறுபாடுகளினால் விளைந்த கலகங்களினாலும் தோன்றிய இடர்

கள் மிகவும் பெரியவை. நாட்டின் அரசாங்கக் கொள்கை என்னவாக இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் பங்கு பெற்றிருந்தனர் ஒரு சில வகுப்பார் ; பாதுகாப்பு ஏற்படுத்தப் படுதல் வேண்டுமென்று விரும்பினர் சில வகுப்பார் ; ஒரு வலிமிக்க அரசாங்கத்துக்கு இவ்விரு வகுப்பாரது ஆதரவையும் ஒருங்கே திரட்ட முடியுமென்பது உறுதியே. வெளி நாட்டில் வாணிகத்தையும், உள்நாட்டில் ஒழுங்கையும், தன்னாட்சியையும் காப்பாற்றக் கூடிய வலிமை ஒரு அரசாங்கத்துக்கு இருக்குமானல், தான் விரும்பியவற்றை அது செய்ய இயலும்; அது செய்யவும் செய்யும். ஆயினும் அது பெரும்பாலும்தான் அவ்வாறு செய்யுமேயன்றி, எப்போதும் அவ்வாறு செய்யாது. ஒவ்வொரு செயலிலும் டியூடர் அரசர்களுக்கு அவர் விரும்பியவாறே செய்ய வழி இருந்ததென நாம் எண்ணுதல் கூடாது. சில சமயங்களில் அவர்களால் அடக்கியாள முடியாத எதிர்ப்பையும் அவர்கள் ஏற்க வேண்டியிருந்தது ; இவ்வெதிர்ப்புக்களின் காரணமாக, அவர்கள், தாம் நிறைவேற்ற விரும்பிய சட்டங்களை விட்டுவிடவோ, மாற்றியமைக்கவோ வேண்டியிருந்தது. ஆயினும் கொள்கைகளை வகுக்கின்ற பெரிய சட்டங்களைப் பொறுத்தவரையில் தம் விருப்பம் போல் நடக்க அவர்களுக்கு வழி இருந்தது ; ஏறக்குறைய இத்தகைய சட்டங்களெல்லாவற்றிலும் பாராளுமன்றமானது அரசரை வெளிப்படையாக ஆதரித்தது; ஏனெனில் பாராளுமன்றத்தில் கூடியிருந்த வகுப்பினர் அரசர் விரும்பிய கொள்கையை நிறைவேற்றத் தாமும் விரும்பினர் ; அல்லது அவர்கள் அதற்கு இணங்கியேனும் இருந்தனர்.

அரசருடைய கொள்கைகளோ அல்லது அவருடைய அமைச்சர்களுடைய கொள்கைகளோ ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப் படுதல் வேண்டுமென்பதற்காக, எட்டாம் ஹென்றி, ஆறும் எட்வர்டு, மேரி அரசி முதலியோர் காலத்தில், ஆதரவாக இருக்கக்கூடிய ஒரு பொதுமக்கள் மன்றத்தைக் கூட்டுவதற்கு மனமொப்பிய முயற்சிகள் செய்யப்பட்டன. இம்முயற்சி இருவகையாலும் செய்யப்பட்டது ; ஒன்று, பதினைந்தாம் நூற்றாண்டில் செய்ததுபோல, கொத்தவால்களின் மூலமாக, அரசர் தனது செல்வாக்கைத் தனிப்பட்ட தொகுதிகளிலும், தனிப்பட்ட உறுப்பினர்களிடமும் கையாளுதல் ; இன்னொன்று புதிய பேரூர்த் தொகுதிகளை உண்டாக்குதல் ; இந்த முறையானது பொது மக்கள் மன்றத்தின் தன்மையிலும், அதன் உறுப்பினர் அமைப்பிலும் ஒரு நிலையான பயனை உண்டாக்கிற்று. குறுகிய காலத்திற்கு ஆண்ட ஆறும் எட்வர்டின் காலத்தில் நாற்பத்தெட்டு உறுப்பினர்கள் புதிதாகப் பொது மக்கள் மன்றத்தில் சேர்க்கப்

பட்டனர் ; இதில் ஒரே ஒரு தேர்தலில் மட்டும் இருபத்திரண்டு உறுப்பினர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டனர்; மேரி அரசியின் காலத்தில் இருபத்தொரு உறுப்பினரும், எலிசபெத் அரசியின் ஆட்சியில் அறுபது அல்லது அதற்கு மேற்பட்ட்வரும் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். புதிதாக உண்டாக்கப்பட்ட பேரூர்த் தொகுதிகள் பெரும்பாலும் கார்ன்வாலில் (Cornwall) அரசருக்குச் சொந்தமானவையாக இருந்தன ; பிற்காலத்தில் இவற்றில் பல, சீர்திருத்தமடையாத பொதுமக்கள் மன்றத்தில், கைவசத் தொகுதிகளாகவும் (பாக்கெட்பரோ —pocket borough), சிதைந்த தொகுதிகளாகவும் (ராட்டன் பரோ-Rotten borough) இடம் பெற்றிருந்தன. எனினும், இவ்வகையான முறையினாலும் பொதுமக்கள் மன்றத்தின்மீது ஓர் உறுதியான, நிலையான கட்டுப்பாடு அடைதல் என்பது எளிதன்று. இதற்கு அடுத்த நூற்றாண்டில் சர்ஜான் எலியட் (Sir John Eliot), ஜான் ஹாம்ப்டன் (John Hampden) ஆகியோர் கார்னிஷ் தொகுதிகளுக்கு வகையாட்களாக இருந்தவர் ; பெருமக்கள் மன்றத்தில் ரஸ்ஸல் குடும்பத்தார் முற்போக்கு முறையான தலைமை பூண்டு விளங்கினர்.

டியூடர் அரசர்கள் செய்த பெரிய சட்டங்களுள், எட்டாம் ஹென்றி செய்த இரு சட்டங்கள் தாம் பாராளுமன்றத்தின் நிலைமையை விளக்குவதாகவும், அதை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கின்றன. இச்சட்டங்கள் பட்டத்துக்குரிமை வழி முறையை ஒழுங்கு செய்தன; கதோலிக்கச் சமயநிலையத்தோடு இங்கிலாந்துக்குள்ள உறவை நிறுத்திக் கொண்டன. பூசலுக்குட்பட்ட வழியுரிமை முறை என்பது பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசிப் பாதியின் தனிப்பட்ட தன்மையாகும் ; இக்காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய வழி முறையைத் தீர்மானிக்கும்படியாகப் பல தடவை பாராளுமன்றம் அழைக்கப்பட்டது ; ஆயினும் எட்டாம் ஹென்றியினுடைய நிலைமையானது ஆட்சியிலும், நாட்டிலும் மிக உறுதியாகவும், பாதுகாப்பாகவும் இருந்ததால், எதிர் காலத்தில் வழி முறை உரிமை பற்றிப் பூசலும் இடரும் ஏற்படுமென்ற கேள்வியே எழவில்லை ; அவர், தாம் ஏற்படுத்திக்கொண்ட மண உறவுகளின் சிக்கலின் விளைவாகத்தான் இத்தகைய கேள்விகள் எழுந்தன. “ வழி முறை உரிமையைத் தீர்மானிப்பதற்கு வேண்டிய தலைமையான அதிகாரம் பாராளு மன்றத்துக்கு உண்டு ” என்பதை யாவரும் காரண காரியத் தொடர்பினால் உய்த்துணர்ந்து ஒப்புக்கொள்ளுதல் வேண்டுமென்ற நிலைமை, எட்டாம் ஹென்றியினுடைய ஆட்சி முடிவடைவதன் முன்னரேயே தோன்றிவிட்டது; இவ்வாறு ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், எழுதப்பட்ட சட்டத்தின் மூலமாக அல்லாமல், ஒரே சமயத்தில் மேரியும், எலிசபெத்-

தும் சட்ட முறைப்படி பிறந்த பிள்ளைகளாக இருத்தலென்பது இயலாது.

முதலில் மேரி முறைப்படியான பிள்ளையல்ல என்பதாகப் பாராளுமன்றம் கூறி, வழி முறை உரிமையை எலிசபெத்துக்கு அளித்தது ; பிறகு எலிசபெத் முறையான பிள்ளையல்ல என்பதாகக் கூறப்பட்டு, முடியானது ஹென்றிக்கும் ஜேன்சிமுருக்கும் பிறந்த பிள்ளைக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு கூறிய இச்சட்டத்திலேயே, எவரொருவரையும் விலக்குதற்குரியராகக் குறிப்பிடாமல், அரசர் தமக்குப் பின்னால் தமக்கு விருப்பமானவருக்கு, ஓர் இறுதி விருப்பத்தின் மூலமாக, வழிமுறை உரிமையை வழங்குதற்கு அதிகாரமும் ஹென்றிக்குக் கொடுக்கப்பட்டது ; தெளிவாக, இச்செயலானது பாராளுமன்றம் தனக்குக் கொடுத்தாலல்லாமல், வேறு எவ்வகையிலும் தமது உடைமையாகாதென அரசர் கருதிய அதிகாரத்தைப் பாராளுமன்றயானது அரசருக்கு ஆட்பேர் உரிமையாகக் கொடுத்த (delegation) ஒரு செயல் ஆகும். இத்தகைய அதிகாரம் கொடுக்கப்பட்டதால்தான் எட்டாம் ஹென்றியினுடைய பின் மரபினருக்கெல்லாம் (descendants) அடுத்தபடியாக மேரியும் எலிசபெத்தும் வழிமுறை உரிமை மீண்டும் அளிக்கப் பெற்றனர் ; இவர்களுக்குப் பிறகு, எட்டாம் ஹென்றியின் தமைக்கையும், ஸ்காட்லாந்தின் அரசருக்கு மணம் செய்விக்கப்பட்டவளுமான மார்கரெட்டின் வழியினரை விட்டுவிட்டு, அவருடைய தங்கை மேரியின் வழியினருக்கே வழி உரிமை கொடுக்கப்பட்டது ; இத்தகைய ஏற்பாட்டிற்கும் பாராளுமன்றத்தினுடைய உரிமை இணக்கம் (Sanction) கொடுக்கப் பட்டபின் கூறப்பட்ட இந்த ஏற்பாடு எலிசபெத்தின் இறப்புக்குப் பிறகு நடை முறையில் நிறைவேற்றப்படவில்லை; இந்த உண்மையானது, எழுதப்பட்ட சட்டம், நாம் முன்பே குறிப்பிட்டதும், தலையாய அதிகாரம் உடையதுமான பொதுமக்கள் கருத்தைவிட வலிமை குறைந்த ஒன்று என்பதைக் காட்டுகிறது.

ரோமன் கத்தோலிக்கச் சமய நிலையத்தோடு இங்கிலாந்துக்கு உள்ள உறவு விட்டுப் போயிற்று என்ற நிகழ்ச்சியும், பாராளுமன்றத்தினுடைய மேலாண்மை அதிகாரம் ஒப்புக் கொள்ளப்பட்டதென்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது ; இவ்வுறவு முறிவு முழுமையாக இல்லாவிட்டாலும், அது தெளிவாகவும், உடனடியாகவும் உணரப்பட்டது ; எவ்வாறெனில், இதனால் அக்காலம் வரை குறிப்பிட்ட போக்கிலமைந்து சென்று கொண்டிருந்த ஆங்கில வரலாறானது, திடீரென முறிவுபட்டு, வேறு வழியில், பொதுமக்கள் யாவருக்கும் உடனடியாக உள்ள நலன்களைப் பற்றிக் கூறும் வரலாறாக ஆயிற்று. இவ்வளவு முறிவுபற்றிய நட

வடிக்கைகளேயும், அதன் காரணங்களேயும் ஆராய்தலும்; அவற்றிற்குக் காரணம் காட்டி விளக்குதலும் ஈண்டு நாம் செய்ய வேண்டிய வேலேகள் அல்ல. தக்க காரணங்களின்றியே இவை செய்யப்பட்டன என நாம் நம்பினுல், இவற்றைப் பற்றிய சட்டங்களே நிறைவேற்றுவதில் பாராளுமன்றத்துக்குரிய அதிகாரத்தை நாம் முழுவதும் ஒப்புக் கொண்டவர்களாவோம்.

காதரைஞேடு தமக்குள்ள திருமண உறவை முறித்துக் கொள்ள ஹென்றி தமது சொந்தக் காரணங்களுக்காகக் கருதினுலும் சரி, அவருடைய விருப்பத்திற்கு இணங்க போப்பு மறுத்த போது, நிலேமை வெகு விரைவாக மாறுதலடையவே, எவ்வாறேனும் தமது விருப்பத்துக்கியையவே நடந்து கொள்ளுவதாக ஹென்றி தீர்மானித்துவிட்டார். இத்தீர்மானத்தின் விளேவானது ஆங்கிலச்சட்டத்துக்கு மாருகப் போகாத வகையில் நிறைவேற்றப் படுதல் வேண்டுமாயின், மூன்று செயல்கள் கவனிக்கப்பட வேண்டும். ஆங்கிலச் சமய நிலேயத்தின் மீது போப்புக்கு உள்ள அதிகாரத்தை நீக்கி விட்டு, அவ்விடத்தில் அரசருடைய அதிகாரத்தை நிறுவுதல் வேண்டும்; ஆங்கில முறை மன்றங்களிலிருந்து போப்புக்கு முறையீடாக வழக்குகளே எடுத்துச் செல்லுதல் சட்டத்துக்கு மாருனதென ஆக்கப்படல் வேண்டும்; இதன் விளேவுகளே ஒப்புக் கொள்ளுவதாக எல்லாக் குடிமக்களும் வாக்குறுதியின் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இச்சட்டங்களெல்லாம், படிப்படியாக, மேற் குறித்த வரிசையிலல்லாமல் உண்டாக்கப்பட்டன; இவற்றைச் செய்த பாராளுமன்றம் முதலில் 1529-ஆம் ஆண்டு நவம்பரில் கூடி, ஏழு அமர்வுக் காலங்கள் நடத்தி, 1536-ஆம் ஆண்டு ஏப்பிரல் வரை இருந்தது. இந்தச் சட்டங்களுக்குத் தேவையானவையாக வேறு பல சட்டங்களும் பின்னுல் செய்யப்பட்டன; அவற்றுள் பல பொருள் தொடர்பானவையாக இருந்தன; இவையெல்லாம் சேர்ந்து ஆங்கிலச் சட்ட முறையிலும், நடை முறை அரசாங்கத்திலும் ஒரு மாறுதலேயும், முறையான அரசியலமைப்பில் ஒரு புரட்சிக்கு ஒப்பான மாறுதலேயும் உண்டாக்கின; அவற்றின் நோக்கம் என்னவெனில், பாராளுமன்றத்தின் முழு அதிகாரத்தையும், அரசியலமைப்பின் மீதும், சமய நிலேயத்தினுடைய அரசாங்கத்தின் மீதும் ஏற்படுத்தி நிறுவுதலேயாம். மற்ற எந்த சட்டத்தையும் விட போப்புக்குச் சமய நிலேயத்தின்மீது இருந்த தலேமை முழுவதையும் அரசருக்கு அளித்தது முதன்மைச் சட்டம் (Act of Supremacy) என்ற சட்டம் ஆகும். இம் முதன்மைச் சட்டம் செய்யப்பட்டதன் மூலமாகப் பாராளுமன்றத்தினுடைய தலேயாய முதன்மை அதிகாரமானது விளக்கமாகக் காட்டப்படுகிறது.

இச்சட்டத்தின் மூலமாகத் தற்செயலாக ஒரு முக்கியமான விளைவு தோன்றிற்று. எட்டாம் ஹென்றி சமயத்திலோ, அல்லது அதன் கோட்பாடுகளிலோ மாறுதல்கள் செய்ய விரும்பவில்லை; ஆயினும் தமது செயல்களினால் ஆங்கிலச் சமய நிலையத்தை அது ஒரு நிலையாக இல்லாத நிலைமையில் அவர் வைத்திருந்தார். அடுத்த அரசரது ஆட்சியில் பிராடஸ்டண்டு சமயத்தை நோக்கிய போக்கு வலிமை பெற்றது; எனவே புதிய சமயக்கோட்பாடும், புதிய வழிபாட்டு நூலும் இயற்றப்பட்டன; இவை எல்லாச் சமய வழிபாட்டிலும் கட்டாயமாகக் கையாளப் படுதல் வேண்டுமென்பதாக ஒரு வழிபாட்டுச் சட்டமானது (ஆக்ட் ஆப் யூனிபார்மிட்டி-Act of Uniformity) வற்புறுத்திற்று; இச்சட்டம் எலிசபெத் அரசியினால் 1559-ஆம் ஆண்டில், அவள் மேரி அரசி கதோலிக்கச் சமய மீட்புக்காகச் செய்த ஏற்பாடுகளை நீக்கும் போது, புதுப்பிக்கப்பட்டது. ஆயினும் ஒரு பக்கத்தில் இங்கிலாந்தில் பாதிக்குக் குறைவானவர்—பிராடஸ்டெண்டுகளாக இருந்தனர். மறு பக்கத்தில் பெரும்பாலோர் பிராடஸ்டெண்டு சமயப் பாதையில் பாராளுமன்றம் செல்லக் கூடிய அளவைவிட மிகுதியாகத் தீவிரமாகச் செல்லுதல் வேண்டுமென விரும்பினர். சமய நம்பிக்கையிலும், வழிபாட்டிலும் ஒருமைப் பாடான தன்மையை நிலைநிறுத்த வேண்டுமானால், அது தண்டனைகளை அளிப்பதன் மூலமாகவேதான் இயலும்; எனவே இச்சட்டங்களை வலுக்கட்டாயமாக நிறைவேற்றுதற்காக உயர் ஆணைச் சமய நீதி மன்றம் (எக்ளிசியாஸ்டிகல் கோர்ட் ஆப்ஹை கமிஷன்-Ecclesiastical Court of High Commission) என்பது நிறுவப்பட்டது; வரலாற்றில் இதற்குரிய உருவமும், அதிகாரமும் எலிசபெத்தினால் இதற்குக் கொடுக்கப்பட்டன. இதனுடைய செயல்களைப் பார்க்கும் போது, இம்முறை மன்றம் ஆலோசனைக் குழுவினின்றும் கிளைத்தெழுந்த ஒன்றாகவே இருக்கிறது; ஆயினும் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக அல்லாத பலர் அதில் உறுப்பினராக இருந்தனர்; மேலும் ஆலோசனைக் குழுவிலுள்ளதைப் போலவே, இதிலும் ஆய்வு செய்யும் முறையானது பொதுச் சட்டத்திலுள்ள வரையறைகளைக் கொள்ளாமல், கடுமையானதாக இருந்தது; ஆயினும் இது சித்திரவதை, சாவுத் தண்டனை முதலிய வற்றைக் கையாளமுடியாது. ஆலோசனைக் குழுவைப் போலவே, இதுவும், சமயநிலையத்தின் தலைவரென்ற முறையில் அரசருடைய மேலாண்மையை (authority-அதிகாரம்) நிறைவேற்றி வைக்கிற, தனிச் சிறப்புரிமை அதிகாரங்களையுடைய ஒரு முறை மன்றம் ஆகும். மக்களின் உரிமையை அழிக்கவல்ல ஆணவமான அரசாங்கத்திற்கு ஒரு கருவியாக இம்முறைமன்றம் இருந்த வரலாறு

பெரும்பாலும் டியூடர்களுடைய காலத்திற்கு அடுத்த நூற்றாண்டில் தான் காணப்படும்.

பொருள்பற்றிய செயல்களில், டியூடர் அரசர்கள் யாதொரு எதிர்ப்புமின்றியே சில சமயங்களில் அரசியலமைப்பினுல் ஏற்படுத்தப்பட்ட பொருத்தமான வரம்புகளை மீறினர். பதினைந்தாம் நூற்றாண்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நன்கொடை முறை என்பது, (Benevolence) கொள்கையளவிலும், வடிவத்திலும் ஒருவர் தாமாகவே அரசாங்கத்துக்கு அளிக்கும் கொடைப் பொருள் எனக் கருதப்பட்டது ; ஆயினும் நடைமுறையில் கொடைப் பொருள் தரும்படியாக ஒரு குறிப்பு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படவே, அவ்வாறு கேட்கப்பட்டவர்தான் அதை ஏற்றுக் கொள்ளுவதே சிறந்ததெனப் பொதுவாகஎண்ணினர். இத்தகைய கொடைப் பொருள்கள் மூன்ரும் ரிச்சர்டின் காலத்தில் பாராளு மன்றத்தினுல் தடை செய்யப் பட்டிருந்தன ; ஆயினும் இவை ஏழாம் ஹென்றியினுலும், எட்டாம் ஹென்றியினுலும் வற்புறுத்தி வாங்கப்பட்டன. இவ்வரசர்கள் கட்டாயக் கடன்களையும் வாங்கினர் ; இவற்றுக்கு எதிராகக் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக எழுத்துமூலம் உறுதி கூறும் பிரிவி முத்திரைகள் (privy seals) கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன; இப்பத்திரங்களில் அம்முத்திரை பதிப்பிக்கப்பட்டதால் அவைகளுக்கு அப் பெயர் உண்டாயிற்று. சில சமயங்களில் இவ்வழிகளில் பொருள் திரட்டுவதென்பது, சொத்துமதிப்பினடிப்படையில்விதிக்கப்பட்ட ஓர் ஒழுங்கான வரிமுறையாக ஆகிவிடுமோ என அஞ்சத்தக்க நிலை ஏற்பட்டது. 1525-ஆம் ஆண்டில் எட்டாம் ஹென்றி முன்னதாகவே பாராளுமன்றத்தின் உரிமை இணக்கத்தைப் பெருமல் சமய நிலையத்தார்களிடமிருந்து வருமானத்தில் பத்திலொருபங்கையும் இலௌகிகரிடமிருந்து வருமானத்தில் ஆறிலொரு பங்கையும் வரியாகவிதித்து வாங்க முயன்ருர். ஆயினும் இதற்கு எதிர்ப்பு வலுவாக இருக்கவே, இம்முயற்சி கைவிடப்பட வேண்டுவதாயிற்று. கொள்கையளவில் வரி விதிப்பைத் தீர்மானித்து முடிவு செய்வதற்குப் பாராளுமன்றத்திற்கு உரிய உரிமையானது ஒப்புக் கொள்ளப்பட்டது; சட்டத்தால் விதிக்கப்பட்டதற்கும் கூடுதலாக வரி விதிப்பதென்பது ஏதாவது ஒரு மறைவான வழியில் நடைபெற்றது.

உள்நாட்டு ஆட்சியைப் பொறுத்த வரையில், டியூடர்கள் காலமானது இடைக் கால முறைகளிலிருந்து தற்கால முறைகளுக்கு ஏற்பட்டமாறுதல்கள் முற்றுப்பெற்ற ஒரு காலம்என நாம் குறிப்பிடலாம். அரசருடைய பொதுச்சட்ட முறை மன்றங்கள்

உள் நாட்டிலுள்ள தனியார் முறை மன்றங்களுக்கெதிராக உறுதியாகவும், தொடர்ச்சியாகவும், வளர்ந்து கொண்டிருந்தன; ஆயினும் அவை பெரும்பாலும் சட்டமுறை மன்றங்களாகவே ஆகிக்கொண்டு வந்தன; அவைகளும், சுற்றிவரும் முறைமன்றங்களும் கூட ஆட்சி அலுவல்களையெல்லாம் வேறு நிறுவனங்களுக்கு விட்டு விட்டன. கோட்ட முறை மன்றங்கள், நூறு முறை மன்றங்கள், தனியார் முறை மன்றங்கள் ஆகியவையெல்லாம் ஒருசில வழக்குகளில் சிற்சில சமயங்களில் பத்தொன்பதாம் நூற்றுண்டு வரையிலும் தொடர்ந்து இருந்துவந்த போதிலும், உண்மையில் அவை சிறப்பிழந்துவிட்டன. 1278–ஆம் ஆண்டின் கிளாஸ்ட்டர் சட்டத்திலுள்ள ஒரு பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு விளக்கத்தின்படி, நாற்பது ஷில்லிங்கும் அதற்குக் கூடுதலாகவும் மதிப்புள்ள வழக்குகளை ஆய்வு செய்யும் முறைமை அதிகாரமானது கோட்ட முறை மன்றங்களினின்றும் எடுக்கப்பட்டு விட்டது; மேலும் குற்ற வழக்குகள் தனியார் முறை மன்றங்களில் முறையிட்டுக்குரியனவாக இப்பொழுது ஒப்புக்கொள்ளப் படவில்லை; அவை அரசரால் தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளாகவே மதிக்கப்பட்டன. கோட்ட மன்றமானது முன்னைப் போலச் சுற்றும் முறைவர்களைக் கலந்து கொள்ளுவதற்காகக் கூட்டப் படவில்லை; கோட்டத்தில் பெருந் தீர்ப்புச் சான்றுளர் குழு ஒன்று மட்டுமே இருந்தது. நூறு என்பது இன்னும் நாட்டுப் பிரிவுகளில் ஒன்ருக இருந்தது; ஆயினும் ஆட்சித் துறையில், முறைமை வழங்குதலில் அது ஒரு கூறு என்ற நிலைமையில் நீடித்திருக்கவில்லை; அது சிற்சில இடங்களில் பண்ணைப் பதிவேட்டு முறைமன்றமாக (Court-leet) பெருமகனின் கீழ் அமைந்திருந்தது. இக்கூறுஅவ்வளவு முக்கியமானதாக இல்லாததால் தான், இம்முறையில் கூறுபடுத்துதல் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலெல்லாம் கையாளப்பட்டாலும், அக்கூறு டிலாவெர் மாகாணம் (Delaware) ஒன்றில் தான் நிலையாகத் தொடர்ந்து இருந்தது. தனியார் முறைமை அதிகாரம் இன்னும் செயலில் கையாளப்படக் கூடிய ஒன்ருக இருந்தாலும், அது சில பதிவேட்டு முறை மன்றங்களிலும், ஊழியர் நிலங்களை மாற்றுதலிலும், பதிவு உரிமையாளரைப் பற்றிய செயல்களிலும் (Copyhold) மட்டுமே கையாளப் பட்டது; கடைசியாகச் சொல்லப்பட்ட நிலையானது முறை மன்றத்தின் மூலமாக நடைபெற வேண்டிய ஒன்று அன்று; இதில், முறைமன்றப் பதிவேட்டில் நில உடைமை உரிமை மாற்றப் பட்டதைக் குறித்து வைத்தனர்; இவ்வாறு குறித்து வைப்பது நில உரிமை மாற்றலைக் காட்டும் அமெரிக்கரது பதிவுப் பத்திரத்தைப் போல முறையாகச் செய்யப் பட்ட ஒரு வேலை ஆகும்.

எதிர்காலத்தில் உள்நாட்டு ஆட்சியில் பெரும்பங்கை ஏற்றுக் கொள்ள இருந்த ஒரு முக்கியமான அலுவலாகிய அமைதிக் காவலர் (ஜஸ்டிஸஸ் ஆப் தி பீஸ்–ஜேபீஸ்–Justices of the peace) என்னும் அலுவல் பதின்மூன்றும் நூற்றுண்டிலிருந்தே நிலையாக ஒரு சிறப்பை அடைந்து வந்தது. அரசரால் தீர்க்கப்படவேண்டிய வழக்குகளைக் கவனித்து, அவைகளெல்லாம் அவற்றுக்குரிய அமைப்பில் முறைவர்களிடத்தே ஆய்தலுக்கும், தீர்ப்புக்கும் அனுப்பப்படுமாறு பார்த்துக் கொள்ளுவதற்காக நம்பகமான உள்ளூர் அலுவலாளரை அமர்த்தும் பொருட்டுப் பலசோதனை கள் பன்னிரண்டாம் நூற்றுண்டினிறுதியில் தொடங்கப்பட்டன ; இவற்றின் விளைவாகத் தோன்றியதே இந்த அலுவலாகும். இவ் வகையில் முதலாவதாகச் செய்யப்பட்ட சோதனை வெற்றியளிக்க வில்லை ; ஆயினும் இப்பொழுது உள்ளதைப் போன்ற அலுவல் களைச் செய்யும் பிண ஆராய்ச்சியாளர் (Coroner) அலுவல் தோன்றியது. இதை அடுத்தாற்போல் செய்யப்பட்ட சோதனை யின் விளைவாக அமைதி காப்போர் (conservators of the peace or keepers of the peace) என்ற அலுவலாளர் அமர்த்தப் பட்டனர். இவ்வலுவலருக்குரிய அதிகாரங்கள் மூன்றும் எட்வர் டின் காலத்தில் மிகவும் விரிவு படுத்தப்பட்டன. 1360-ஆம் ஆண் டில் அவர்களுக்குக் கொடுங்குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சிறைப்படுத்துதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது ; இதை அடுத்த சில காலத்திலேயே இவ்வலுவலர்கள் அமைதிக் காவலரென அழைக்கப்பட்டனர். 1388-ஆம் ஆண்டில் அவர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் நான்கு தடவைகளில் தங்கள் முறைமன்ற அமர்வுக் காலங்களை நடத்துமாறு கட்டளையிடப்பட்டனர் ; இதுவே பிற் காலத்தில் இருந்த " குவார்ட்டர் செஷன்ஸ் " (Quarter Sessions) என்று அழைக்கப்பட்டதும், ஆண்டுக்கு நான்கு முறை அமைதிக் காவலரால் நடத்தப் படுவதுமாகிய குற்றவழக்கு முறைமன்றத்தின் தோற்றமாகும். படிப்படியாக அவர்களுடைய அலுவல்கள் விரிவாக்கப்பட்டு, ஆட்சி அலுவலும், முறைமை செய்தலும் அவற்றில் அடங்குமாறு செய்யப்பட்டன ; கலகங்களை அடக்குதல், தொழிலாளருக்குரிய சம்பளங்களை ஒழுங்குபடுத்து தல், நிறைகளையும் படிகளையும் சரிபார்த்தல், வாணிக வேலை கள், தொழில்கள், பெருவழிகள் ஆகியவற்றையும், தொழிற் பயிற்சி பெறுவோர் (apprentices), வறியவர் (paupers) ஆகியோரையும் மேற்பார்வை செய்தல் முதலியவை அவர் களுடைய அலுவல்களாக ஆயின. அவர்களுக்குக் காவல் படை யினரது முறைமை அதிகாரமும் கொடுக்கப்பட்டது ; இவ்வாறு அவர்கள் செய்ய வேண்டிய அலுவல்கள் பலப்பலவாக இருந்தமை யால், அவர்கள் " எல்லா வேலைகளும் செய்யும் டியூடர் பணிப்

பெண்" ("the Tudor maid of all work") என அழைக்கப் பட்டனர். எல்லா உள்நாட்டுப் பகுதிகளிலும் அவர்கள் நடு அரசாங்கத்தின் ஒரு கருவியாக விளங்கினமையால், அவர்கள் கொத்தவர்ல்களினுடைய நிலையில் இருந்து, முன்பு அவர்கள் செய்து வந்த அலுவல்களைத் தாம் செய்வாராயினர்; ஏன் இவ் வாறான ஒரு மாறுதல் ஏற்பட்டதென்றால், கொத்தவால் இப் பொழுது முறைமன்றங்களின் நிருவாக அலுவலரர்க ஆகிவிட் டார்; இதே நிலைமையில்தான் இவர் இன்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருந்து வருகிறார். இடைக் காலத்திய உள்நாட்டு அர சாங்க அமைப்புக்கு அமைதிக்காவலர் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தனர்; எனவே அவர்கள் முன்பு பட்டண மன்றங்களும், உரிமையினால் முறைமை வழங்கிய தனியார் முறை மன்றங்களும், பண்ணை முறைமன்றங்களும், சாதாரண நூறு முறை மன்றமும் செய்து வந்த பல அலுவல்களுக்கு வழி உரிமையாளராகி, அவற்றையெல்லாம் தாமே செய்யலாயினர். மேலும், அவர்கள் சுற்றும் முறைவர்கள் செய்து வந்த உள்ளூர் அலுவல்களில் பெரும் பகுதியைத் தாமே செய்தனர். அவர்கள் கோவில் வட்டாரங் களில் (parishes) உள்ள அலுவலர்களையும் கண்காணித்துத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

ஆயினும் டியூடர் காலம் தொடங்குவதற்குச் சிறிது முன்பாக உள்நாட்டு அரசாங்கத்தில் வேறொரு புதிய கூறு அல்லது காரணி (factor) தோன்றி வேலை செய்யலாயிற்று; அல்லது பழைமையாக வும் வழக்கற்றும்போன ஒரு நிறுவனமானது புத்துயிர்பெற்றெழுந் தது என நாம் இதைக் குறிப்பிடுதல் வேண்டும்—இதுவே கோவில் வட்டார மக்களுடைய கூட்டம் (parish meeting) ஆகும். முன்னைய சாக்சன் காலத்தில் இருந்த பட்டண மன்றமானது படைமானியக் காலத்தில் பண்ணை முறைமன்றத்தோடு இணைந்து விடும் இயல்புடையதாயிருந்தது; ஆயினும் பட்டண மன்றத்தின் அலுவலானது பண்ணை அலுவல்களை எப்பொழுதும் ஒத்து இருந்த தில்லை. மேலும் இடைக்காலத்தின் பிற்பகுதியில் பொருளியல் நிலைமைகளில் ஏற்பட்ட மாறுதல்களும், புதிய வேளாண்மை முறையின் தோற்றமும், மேய்ச்சல் தொழிலும், வேலி அடைப் புப் பயிர் முறையும் பண்ணை முறையின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டன; எனவே உள்நாட்டு அரசாங்கத்தினால் கண் காணிக்கப்பட வேண்டிய நிலையான நலன்களெல்லாம், இப் பொழுது பழைய பட்டண மன்றத்தைப்போல ஏதாவ தொன்றை மீண்டும் புத்துயிர் கொடுத்து அமைக்கத் தூண்டுதலா யிருந்தன. ஆயினும், பட்டணத்துக்கு அது உண்மையான அரசி யல் முக்கியத்துவமுடைய ஒரு கூறு என்பதாக முன்பு இருந்த நிலை

இப்பொழுது மறைந்து விட்டது; ஆகவே தற்சமயத்தில் மிகவும் ஊக்கமாக இருந்து வந்ததும், பட்டணத்தின் பரப்பளவைப் பெரும்பாலும் ஒத்திருந்ததுமாகிய உள்நாட்டுக் கூறு, கோவில் வட்டாரம் அல்லது பங்கு (parish) என்பதாக இருந்தது; எனவே வட்டார மன்றமானது பட்டண மன்றத்தின் இடத்தை அடைந்து உள்நாட்டு ஆட்சியில் அதனுடைய செயல்களையெல்லாம் தாய முறை உரிமையின்படி பெற்றது. உள்நாட்டுப் பிரிவின் தலைவராக வும், வழிகாட்டியாகவும் இருந்த சமய நிலையக்குரு, மேற்கூறிய இந்த மாறுதல் நடைபெற்ற போது, அதிலுண்டாகும் இடையூறு களை நீக்க உதவி செய்தல் வேண்டுமென இயல்பாகவே எதிர் பார்க்கப்பட்டார்; எனவே வட்டாரமன்றம் பட்டணமன்றத்தின் அலுவல்களை வழிமுறையாகப் பெறுவதற்கு அவர் மிகவும் உதவி செய்தார். எவ்வாறுயினும் வட்டாரக் கூட்டம் அல்லது வட் டாரத்தினருடைய மன்றமானது உள்ளூர் ஆட்சிக்குழுவாக அமைந்தது; இது பழைய பட்டணத் தொகுதியின் மன்றத்தைப் போலவே சமுதாயத்தினருடைய சமய நலன்களையும், சமயச்சார் பற்ற உலகியல் நலன்களையும் கண்காணித்தது. எலிசபெத் அரசி யினுடைய ஆட்சியின் கடைசிக் காலத்தில், இடைக்காலச் சமய நிலையம் ஏழைகளைக் காப்பாற்றிய கடமையானது, நாட்டின் அரசாங்கத்தாலேயே செய்யப்படும்படியாக அதனை வந்தடைந் தது. இந்நிலையில் அப்பொழுது நிறைவேற்றப்பட்ட வறியவர் சட்டங்களை (Poor Laws) ஆட்சியில் நிறைவேற்றுவதற்குக் கோவில் வட்டாரத்தையே ஒரு கூறு ஆக அரசாங்கம் ஏற்றுக் கொண்டது; எனவே இவ்வாறுக அரசாங்கம் கோவில் வட்டாரத் துக்கு ஓர் இசைவும், நாட்டில் நிலையான ஓர் இடமும் கொடுத் தது. அந்த நாளிலிருந்து தற்காலம் வரையிலும், கோவில் வட் டாரமும், அதனுடைய 'வெஸ்ட்ரி' (Vestry) என்றழைக்கப் படும் வட்டார மன்றமும் சேர்ந்து, அமெரிக்க நகர மக்கள் கூட்டத்தைப் போல உள்நாட்டு ஆட்சியை நடத்துவதில் பெரும் பங்கு கொண்டுள்ளன; ஆயினும் இந்த வட்டாரமன்றங்கள் ஒரு சில செயல்களைப் பொறுத்தமட்டில் அமைதிக் காவலரது மேற் பார்வையிலிருந்து வந்தன; அமைதிக் காவலரைப் போன்ற அலு வலர் அமெரிக்காவில் இல்லை.

டியூடர் காலத்திற்கு ஒரு தனித்தன்மையை அளித்த நிலைமை களெல்லாம் எலிசபெத்தின் இறப்புக்கு முன்னரேயே மாறுதலடை யத் தொடங்கின. மேரி ஸ்டுவர்ட்டுக்கு (Mary Stuart) கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டது, ஸ்பெயினின் அச்சுறுத்தல்களை யெல்லாம் வெற்றியுடன் தடுத்துத் தற்காத்துக்கொண்டது ஆகிய செயல்களெல்லாம், நாட்டிற்கு வெளியிலிருந்தும், உள்ளிருந்தும்

வரக்கூடிய இடர்களைத்தடுத்து ஒரு பாதுகாப்பை அளித்தன; ஆயி னும் இவ்விருதுறைகளிலும் எத்தகைய ஒருபெரும் மாற்றம் நடை பெற்றுள்ள தென்பதை நாடு முற்றிலும் உணரவில்லை. ஆயினும் இந்த நூற்றாண்டினிறுதியில் பாராளுமன்றமானது சிறிது அமைதி யற்ற நிலையில் காணப்பட்டது. மிகுதியான ஒரு தன்னுரிமை உணர்ச்சியுள்ள இயல்பும், அரசரது செயல்களில் குறைகூறும் இயல்பும் அதனிடத்துக் காணப்பட்டன. இதிலிருந்து தற்காலக் கட்சியைப்போல ஒன்று கூடிச் செயலாற்றும் ஒரு கூட்டமான மக்களும், ஒழுங்காக அமைக்கப்பட்ட எதிர்க்கட்சியும் இந்நிலையில் நாம் காணக் கூடுமெனத் தோன்றுகிறது; இக்கூட்டத்தினர் அரசரது ஆலோசனைக்குழுவினால் முன்பே ஒப்புதல் கொடுக்கப் படாததும் செய்யப்படவேண்டிய சட்டங்களடங்கியதுமான ஒரு திட்டத்தை வைத்திருந்தனரெனவும் தோன்றுகிறது. எனினும் ஏதேனும் ஒரு கொள்கையைப் பொறுத்த அளவில் இக்கூட்டத் தார் எலிசபெத்தின் செயலில் குறுக்கிடவில்லை. அப்போது இருந்த நிலைமை எதைக் காட்டிற்று என்றால், எல்லாச் சூழ்நிலையும் ஒரு புதிய காலத்தைத் தோற்றுவிக்க ஆயத்தமாக இருந்தது என் பதையே. எலிசபெத் அரசியே தனது அரசியல் திறமைகளையெல் லாம் கையாண்டு மேலும் ஓர் இருபது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஆண்டிருந்தால், அவள் இப்பொழுது உருவாகிக் கொண்டிருந்த இந்த எதிர்க்கட்சியை அடக்கி ஒடுக்கியிருத்தல் கூடுமென நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. நடைமுறையில் வரலாறு அமைந்தபடி, ஆங்கில வரலாற்றிலே முதல் தடவையாக இருவகையான முடியாட்சி முறைகளுக்கும், இருவகையான அரசியலமைப்புக்களுக்குமிடையே ஒரு பெரும் போராட்டத்தைத் தொடங்கி வைப்பதென்பது, வேறொரு புதிய அரசமரபினருக்கே ஒதுக்கி விடப்பட்ட செயலாயிற்று.

அப்புதிய காலத்தில் எழுந்த ஆய்வினாக்களை (பிரச்சினை) முடி வாகத் தீர்ப்பதற்காகக், கடந்த காலத்தை அடிப்படையாக வைத் துக் கொண்டு, பதினாறும் நூற்றாண்டு விட்டுச் சென்ற உதவி என்னவெனில், அது, பாரர்ளுமன்றமும், அரசில் அப்பாராளு மன்றத்துக்கு ஓர் இடமுமே ஆகும். பாராளுமன்றத்தின் நிலைமை யைப் பற்றி அக்காலத்தவர் ஒருவர் கொடுக்கும் மதிப்புரையாக இருக்கும் ஒரு பகுதியானது சர் தாமஸ்ஸ்மித் (Sir Thomas Smith) என்பவர் எழுதிய "இங்கிலாந்தின் பொது அரசு" (Common-wealth of England) என்ற நூலில் காணப்படுகிறது. பேராசிரி யர் மெயிட்லண்டினால் (Professor Maitland) எடுத்துச் சுட்டிக் காட்டப்படும் இம்மதிப்புரைப் பகுதியை, மேற்கூறிய நூலிலிருந்து நாம் மேற்கோளாகக் காட்டலாகும்: "இங்கிலாந்து நாட்டில்

அதனுடைய மிகவும் மேலான, வரம்பற்ற அதிகாரம் பாராளு மன்றத்தில்தான் காணப்படும்........பாராளுமன்றத்தினுடைய உடன்பாட்டின் மீது செய்யப்படுவது எதுவோ, அதுவே நிலேயான தாகவும், உறுதியானதாகவும், புனிதமானதாகவும் கொள்ளப் பட்டுச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பாராளுமன்றமே பழைய சட்டங்களை நீக்குகிறது; புதிய சட்டங்களைச் செய்கிறது; கடந்த காலத்தில் செய்யப்படும் செயல்களில் பின்பற்றப்பட்ட ஆணைகளையும், எதிர்காலத்தில் பின்பற்றப்பட வேண்டியவற்றை யும் கொடுப்பது அதுவே; அது தனியாட்களின் உடைமைகளை யும், உரிமைகளையும் மாற்ற வல்லது; முறைதவறிப் பிறந்தவரை அது சட்டப்படி பிறந்த முறையான பிள்ளைகளாக ஒப்புக்கொள்ளு கிறது; அது புதிய சமய வடிவங்களை நிறுவுகிறது; நிறை களையும், படிகளையும் மாற்றுகிறது; அரச முடி உரிமையானது அடையப்பட வேண்டிய வழிமுறை உரிமையின் வடிவங்களை அது அமைக்கிறது; சட்டத்தில் ஒன்றும் சொல்லப்படாத ஐயப் பாட்டுக்குரிய உரிமைகளையும் அது திட்டமாக்கி வரையறுக்கிறது; அது உதவிப் பொருள்களையும், சொத்து வரிகளையும், வேறு வரி களையும் தீர்மானித்து ஏற்படுத்துகிறது; குற்றங்களுக்கு மன்னிப் பும், அவற்றினின்றும் விடுதலையும் அது வழங்குகிறது; அரசரால் குற்ற ஆய்வு செய்யப்படுபவரை அது உயிருடன் உரிமையோடு மீட்கவோ, அல்லது தண்டனைக்கு உட்படுத்தவோ, விடுதலே அளிக்கவோ வல்ல உயர்தர நீதி மன்றமாக இருக்கிறது. சுருங்கச் சொல்லில், பண்டைக் காலத்தில் ரோமானிய மக்கள் தங்க ளுடைய செஞ்சூரியாட்டா (Centuriata), டிரிபியூட்டா (Tributa) முதலிய மக்கள் மன்றங்களில் (comitias) என்ன வெல்லாம் செய்தனரோ, அவற்றையெல்லாம், நாட்டின் அடி முதல் முடிவரை அதற்கு வகையாளாக இருந்து, அதனுடைய முழு அதிகாரத்தையும் பெற்ற இங்கிலாந்தின் பாராளுமன்ற மானது செய்ய முடியும். அரசராயினும், அரசியாயினும், இங்கி லாந்திலேயே மிகவும் தாழ்ந்தவராயினும், எத்தகைய சிறப்பு, தரம், மதிப்பு, பண்பு ஆகியவைகளை உடையவராயினும், ஒவ்வொரு ஆங்கிலேயரும் தானே நேரிலாவது, தனக்காக இன்னொருவர் மூலமாகவாவது, ஆட்பேர் (attorney) மூலமாகவாவது, பாராளு மன்றத்தில் வந்து இருப்பதற்கு உரிமை உண்டு. மேலும் பாராளு மன்றம் தரும் உடன்பாடானது நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் கொடுக்கும் உடன்பாட்டுக்கு ஈடாகக் கொள்ளப்படுகிறது.''

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	2	முறையும்	— முறையையும்
2	8	கட்டுப்பாடு	— கடப்பாடு
2	23	போலல்லாமல்	— போல
7	11	தம்முன்	— தம்முள்
15	27	எண்ணலில்லை	— எண்ணவில்லை
29	33	அவரது	— அவரவரது
31	23	முலம்	— மூலம்
54	15	மிருந்ததால்	— மிருந்தால்
61	33	மாறுல்தகளை	— மாறுதல்களை
70	37	முடியரசின்	— முடியரசின்
76	2	அறிந்திருத்தன	— அறிந்திருந்தன
111	17	மள்ரத்தைக்	— மன்றத்தைக்
125	28	Justician	— Justiciar
174	40	baronical	— baronial
175	10	Chancary	— Chancery
179	23	Substantue	— Substantive
187	36	Dedoris	— Dedonis
194	18	Conditionallbus	— Conditionalibus
225	21	சர்ர்பிலும்	— சார்பிலும்
270	34	membres	— members
281	38	இவற்றிலெல்லா	— இவற்றிலெல்லாம்
282	36	கொன்ளுதலென்று	— கொள்ளுதலென்று

கலைச்சொற்கள் ஆங்கிலம்—தமிழ் :

A

Absolutism - வரம்பில்லா ஆட்சி
Absolute - தனிஆட்சி, வல்லாட்சி
Alderman - மன்றத் தலைவர், ஆல்டர்மன்
Assize - சட்டம்
Assembly court - பேரவை முறை மன்றம், சட்ட மன்ற முறை மன்றம்

B

Baron - பெருமகன், நிலப்பிரபு, படைமானியப் பிரபு
Bot - அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கழுவாய்ப் பணம்
Borough - பேரூர், நகரவட்டம்
Baronial court - பெருமகனது முறைமன்றம்
Bishop - சமய வட்டத் தலைவர், மேற்றிராணியார்
Benefit of the clergy - சமய நிலையத்தாருக்குரிய சலுகை அல்லது நலன்

C

Constitutional life - அரசியலமைப்பு வாழ்க்கை
Colony - குடியேற்ற நாடு
Cabinet - காபினெட்
Custom - வழக்காறு, வழக்கம்
Court - முறை மன்றம், நீதி மன்றம்
Codes of law - சட்டத் தொகுதிகள், அல்லது தொகுப்புக்கள்
Common government - பொது அரசு
Council court - அறிவுரை முறை மன்றம்
Central government - நடு அரசு, நடு அரசாங்கம்
Common law - பொதுச் சட்டம்
Criminal trial - குற்ற வழக்கு ஆய்வு
Civil trial - உரிமை வழக்கு அல்லது சிவில் வழக்கு ஆய்வு
Common freemen - பொதுக்குடி மக்கள்
Church - சமய நிலையம்
Circuits - சுற்று வட்டங்கள்
Court of common pleas - பொது வழக்கு முறை மன்றம்

D

Democracy - குடியாட்சி, மக்களாட்சி
delegates - பேர் ஆட்கள்
defendant - எதிர் வழக்காளி, பிரதிவாதி
Damages - இழப்பீடு, ஈட்டுத் தொகை

E

Executive - செயல் குழு, நிருவாகத் துறை
Emperor - பேரரசர்
Empire - பேரரசு
Equity law - நேர்மைச் சட்டம், தரும நியாயச் சட்டம். (சட்ட நூலில் 'equity' என்பது பொதுச் சட்டமும் (common law) இயற்கையான முறைமை உணர்வும் (natural justice) சேர்ந்தது எனக் கூறப் படும்)
Exchequer - கருவூல மன்றம், கருவூலம்
Equity jurisprudence - தரும நியாயச் சட்ட முறைமை
Entails - மரபு உரிமையில் உடைமைக்கு உரிய கட்டுப் பாடுகள்

F

Feudalism - படைமானிய அல்லது நிலமானிய முறை
Fyrd - பொதுத் தனியாட்கள் படை, குடிப்படை
Free tenants - தனி உரிமைக் குத்தகையாளர்

G

Government - அரசாங்கம், ஆட்சி (சில இடங்களில் அரசு என்ற சொல்லும்)
Gesith - சாக்சனியர் காலத்தில் தொண்டினால் படைத்துறையில் பெருமக்கள் நிலைக்கு உயர்ந்தவர்.

H

Hundred - நூறு. இது ஆங்கிலோ-சாக்சனியரால் ஏற்படுத்தப்பட்ட உள்நாட்டு ஆட்சி முறையிலுள்ள ஒரு பிரிவு; கோட்டம் என்ற பெரிய பிரிவுக்கும், பட்டணம் என்ற சிறிய பிரிவுக்கும் இடைப்பட்டது; இப்பிரிவுக்கு இப்பெயர், இதிலுள்ள சிறு உட்பிரிவுகளின் எண்ணிக்கையை வைத்து அளிக்கப்பட்டிருக்கலாம்.
Hundred court in private hands or franchisal court - தனியார் கையிலுள்ள நூற்றின் முறைமன்றம்
Heirs - மரபுரிமையாளர், வழிமுறை உரிமையாளர், தாயத்தார்.

I

Independence - தனித்த நிலை, விடுதலை, சுதந்திரம்
Itinerant justices - சுற்றிவரும் முறைவர்கள்
Impeachment - பெருங் குற்றச்சாட்டு, துரோகக் குற்றச்சாட்டு.

J

Jury - தீர்ப்புச் சான்றுளர் குழு [வழக்கு நடைபெறுகையில் இருந்து கவனித்துத் தீர்ப்பு வழங்குதலில் உதவி செய்யும் இச் சான்றுளர், உறுதிமொழி (Oath) எடுத்தவர்களாக இருப்பார்கள்]

K

King's Bench - அரசரது முறைவர்களடங்கிய முறைமன்றம்

L

Legislature - சட்டமன்றம்
Limitations - வரம்புகள், எல்லைகள்
Law - சட்டம்
Legal - சட்டத் தொடர்பான
Law, substantive - பொருள் முறைச் சட்டம் அல்லது பொருள் பற்றிய சட்டம்
Law, procedural - செயல் முறை, அல்லது செய் முறை அல்லது வழிமுறைச் சட்டம்
Local government - உள்நாட்டு ஆட்சி, உள்ளூர் அரசாங்கம்
Local law - உள்நாட்டு அல்லது உள்ளூர்ச் சட்டம்
Lordships - நிலப்பிரபுக்கள்
Local self-government - உள்ளூர்த் தனியாட்சி முறை

M

Machinery - ஆட்சி இயந்திரம்
Manor - (படைமானியப்) பண்ணை
Manorial system - படைமானியப் பண்ணைமுறை, பண்ணைமுறை வேளாண்மை
Manor court - பண்ணை முறைமன்றம்
Ministerial responsibility - அமைச்சரவைப் பொறுப்பு

N

Nation - நாடு
Nationals - நாட்டு இனத்தவர், ஒரே நாட்டு இனமக்கள்
Nobles - பெருமக்கள்

O

Office - அலுவல், பதவி, வேலை

P

Precedent - மேற்கோள், முன் நிகழ்வு, மேற்சான்று
Parliament - பாராளுமன்றம்
Police jurisdiction - காவல்துறையின் ஆட்சி
Partially freemen - ஓரளவு உரிமையுள்ள மக்கள்
plaintiff - வழக்காடி, வழக்காளி, (வழக்குத் தொடுப்பவர், வாதி)
Personal liberty - ஆள் உரிமை

R

Result - விளைவு, பயன்
Republic - குடியரசு
Referendum - குடியொப்பம்
Record - பதிவேடு.

S

Sovereignty - கோன்மை, தலைமையான முழு அதிகாரம்
Shires - கோட்டங்கள்
Sheriff - கொத்தவால், ஷெரிப்
Successors - பின்வழியினர்
Servile tenants - ஊழியக் குத்தகையாளர்
Sub - infeudation - உட்பிரிவுப் படைமானியம்

T

Tribe - உறவுடைய குடும்பங்கள் சேர்ந்த கூட்டம்
Thegns - சாக்சனியர் காலத்தில் அரசருக்கு அறிவுரை கூறியும், வேறு பல அலுவல்களைச் செய்தும் பெருமக்கள் வகுப்புக்கு உயர்ந்தவர்.
Tenure - நிலவாரம், நிலவுரிமைக் கட்டுப்பாடு
Tenants-in-chief - மேல் குத்தகையாளர்
Tithe - வருமானத்தில் பத்திலொரு பங்கு

V

Veto – தள்ளுரிமை (absolute : தடையற்ற, limited : வரம்புக் குட்பட்ட)

W

Will - மட்டய உறுதிப் பத்திரம், இறுதி விருப்பப் பத்திரம்
Witnesses - சான்றுரையாளர்கள்
Wite - தண்டப்பணம்
Wergeld - தனியாளுக்குரிய மதிப்புப் பணம்
Writ - ஆணை
Writ of habeas corpus – ஆள் உரிமைக் காப்பு ஆணை

கலைச்சொற்கள் - தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு

அரசியலமைப்பு - constitution
அரசியலமைப்பு வரலாறு - constitutional history
அதிகாரி – authority
அதிகாரம் - power
அமைச்சர் - minister
அமைச்சரவை - ministry
அரசியல் நிறுவனங்கள் - political institutions
அடுத்தடுத்த நிலை - successive stages
சிறப்பியல்பு, - feature.
அரசியல் நிலைமை - political condition
அறிவுரைக் குழு - privy council
அரசவை - king's council
அதிகாரக் குவிப்பு- centralisation
ஆணை - writ; சில இடங்களில் 'measure' என்பதையும் குறிக்கும்
ஆதரவு - sanction
ஆக்கப்படுதல், மாற்றப்படுதல் - affected
ஆதிக்கம் (செல்வாக்கு) - influence
ஆவணம் - document
ஆட்சிப் பண்ணை - domain manor
ஆட்சி நிலம் - domain land
இணைப்பு - union
இசைவு - approval, assent
ஊகம் - conjecture
எழுதப்பட்ட அரசியல் சட்டம் - written constitution
எழுதப்படாத அரசியல் சட்டம் - unwritten constitution
எளிய, சுருக்கமான - simple
ஒற்றி - Mortgage
கருத்து - idea, will
கட்டுப்படுத்து - control
கட்டுப்பாடு limit
கடனாகக் கொடுக்கப்பட்ட நிலம் - laen land or loan land
குவிப்பு (அதிகாரம்) - centralization, concentration
கொடிவழி - genealogy, line
சமயம் - religion
சமய நிலையம், திருச்சபை - church
சமய நிலையத்தார் - churchmen, clergymen
தனியரசு, தனியாட்சி - absolute government
தனிச் சமுதாயச் சிற்றூர் - free communal village
தருக்க அளவை - logically
துறைகள்-(ஆட்சி அல்லது அரசாங்க) - departments of government
தேர்தல் - election
தேர்வாளர் - candidate
நடு அரசாங்கம் - national or central government
நிறுவனம், நிலையம் - institution
நிறுவன அமைப்பின் மூலமாக - institutional
நிலைபெறுன போர்த்தலைமை - permanent war leadership
நீதி ஆட்சி - administration of justice
படைவெற்றி - military conquests
பிடிபாடு, ஆவணம், தஸ்தாவேஜு - document
பெரும்பான்மை, பெரும்பான்மை நிலை - majority
பெரும்பான்மைக் கட்சி–majority party
பெருமக்கள் - lords (பிரபுக்கள்)
பெருமக்கள் மன்றம் - House of Lords
பொதுமக்கள் மன்றம் - House of Commons
பொதுமக்கள் தீர்ப்பு - popular decision
மாகாணம் - province
மூலாதாரம் - material sources
முறை - system
மீட்சிப் பணம் - ransom
வகையாள் - representative (பிரதிநிதி)
விரப்பட்டம் - knighthood
வகையாளாட்சி - representative government

நூலாசிரியரால் மேற்கோள்களாகக் குறிப்பிடப்படும் நூல்கள்

இயல் 1 :

H. M. Chadwick, Anglo-Saxon Institutions, 1905.
L. M. Larson, The King's Household Before the Norman conquest, 1904.
F. W. Maitland, Domesday Book and Beyond, 1897.
,, Township and Borough, 1898.
W. H. Morris, The office of Sheriff in the Anglo-Saxon Period, 1916.
F. Seebohm, The Village Community, 1890.
Sir P. Vinogradoff, Villainage in England, 1892.
,, The growth of the Manor, 1911.

இயல் 2:

G. B. Adams, Local King's Courts in the Reign of William I, Yale Law Journal, XXIII, 90, 1914.
American Historical Review, (XXIII, 596, 1918), Private Jurisdiction in England.
C. M. Andrews, The Old English Manor, 1892.
C. H. Haskins, Norman Institutions, 1918.
W. A. Morris, The Frankpledge System, 1910.
J. H. Round, Feudal England, 1895.
F. M. Stenton, William the Conqueror, 1908.
Sir P. Vinogradaff, English Society in the Eleventh Century, 1908.

இயல் 3 :

The Abacus and the King's Curia, English Historical Review XXVII, 101, 1912.
W. A. Morris, The Office of the Sheriff in the Early Norman Period, E. H. R. XXXIII, 145, 1918.
R. L. Poole, The Exchequer in the Twelfth Century, 1912.
J. H. Round, The Commune of London, 1899.
,, The King's Sergeants and Officers of State, 1911.
T. F. Tout, The Administrative History of Mediaeval England, 2 Vols, 1920.

இயல் 4 :

G. B. Adams, The Origin of the English Constitution, 1920.
,, The Origin of English Equity, Columbia Law Review, XVI, 87, 1916.
M. M. Bigelow, The History of Procedure, 1880.
H. Hall, Court Life under the Plantagenets, 1890.
R. L. Poole, The Exchequer in the Twelfth Century 1912.
F. M. Powicke, The Loss of Normandy, 1913.
J. B. Thayer, Evidence at the Common Law, Pt. 1, 1896.

இயல் 5 :

L. W. Vernon Harcourt, His Grace the Steward and Trial of Peers, 1907.
W. S. Mckechnie, Magna Carta, 1914.
Magna Carta Commemoration Essays, 1917.

S. K. Mitchell, Taxation under John and Henry III, 1914.
K Norgate, John Lackland, 1902.

இயல் 6 :

J. F. Baldwin, The King's Council, 1913.
C. Bemont, Simon de Montfort, 1884.
F. J. C. Hearnshaw, Leet Jurisdiction in England, 1908.
C. L. Kingsford, The Song of Lewes, 1890.
K. Norgate, The Minority of Henry III, 1912.
G. W. Prothero, Simon de Montfort, 1877.
T. F. Tout, Edward I, 1893.

இயல் 7 :

E. Barker, The Dominican Order and Convocation, 1913.
N. S. B. Gras, The Early English Customs System, 1918.
L. O. Pike, Constitutional History of the House of Lords 1894.
A. F. Pollard, The Evolution of Parliament, 1920.
A. B. White, The Concentration of Representatives, A. H. R., XIX. 735, 1914.

இயல் 8 :

J. C. Davies, The Baronial Opposition to Edward II, 1918.
G. Lapsley, The Commons and the Statute of York, E. H. R., XXVIII 124, 1913.
Knights of the Shire in the Parliaments of Edward II, E.H.R. 1919
C. H. McIlwain, The High Court of Parliament, 1920.
T. F. Tout, The Place of Edward II in English History, 1914.

இயல் 9 :

A. V. Dicey, The Privy Council, 1860.
G. Gairdner, Life and Reign of Richard III, 1898.
C. L. Kingsford, Henry V, 1901.
T. F. T. Plucknett, The Place of the Council in the Fifteenth Century.
K. H. Vickers, Humphrey Duck of Gloucester 1907.

இயல் 10 :

C. A. Beard, The Justice of the Peace in England, 1904.
W. Busch, England under the Tudors, Vol. I, King Henry VII, 1895.
E. P. Cheyney, England from the Armada to the Death of Elizabeth, 1914.
J. N. Figgis, The Theory of Divine Right of Kings 1914.
R. B. Merriman, The Life and Letters of Thomas Cromwell, 1902.
Lord Eustace Percy, The Privy Council under the Tudors, 1907.
A. F. Pollard, The Reign of Henry VII from Contemporary Sources 1914.
R. G. Usher, Rise and Fall of the High Commission, 1913.

பொருள் வரிசைக் குறிப்புரை (Index)